

2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட
மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான

தேர்தல்கள் ஆணையாளரின் அறிக்கை

முன்னுரை

1988 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் அவ்வாண்டு தொடக்கம் இதுவரை தனித்தனியாக அல்லது கட்டம் கட்டமாக நடாத்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மீளாய்வு செய்யப்படுகின்ற மாகாண சபைத் தேர்தல் முன்னர் குறிப்பிட்டவாறு, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் 4 கட்டங்களாக நடாத்தப்பட்ட மாகாண சபைகள் தேர்தல்களுக்குரியதாகும். அதாவது, 2012.09.08 ஆம் திகதி கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்காகவும், 2013.09.21 ஆம் திகதி மத்திய, வடமேல் மற்றும் வடமாகாண சபைகளுக்காகவும் இறுதியாக 2014.09.26 ஆம் திகதி ஊவா மாகாண சபைக்காகவும் தேர்தல்கள் நடாத்தப்பட்டன.

ஆதலால் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் நடாத்தப்பட்ட பின்னர் அவற்றுக்குரிய அனைத்து அறிக்கைகள் மற்றும் தகவல்களை சேகரித்து ஆராய்ந்து பார்த்த பின்னர் இந்த அறிக்கையை வெளியிடுவதற்கு நேரிட்டதோடு, அது மிகவும் சிரமமாக மற்றும் சலிப்புமிக்க ஒரு பணியாக அமைந்தது. பொதுவாக தேர்தல் ஒன்றின் அறிக்கையை வெளியிடுவதற்கு தேர்தல் நிறைவடைந்து இரண்டு வருடங்கள் வரையான காலமொன்று செலவாகும். இந்தத் தேர்தலுக்குரிய அறிக்கையை வெளியிடுவதற்கு அதனை விடவும் கூடுதலான காலமொன்று கடந்துள்ளது. ஒவ்வொரு கட்டத்திற்குடையதாக தோன்றியுள்ள நீதிமன்ற செயற்பாடுகள் நிறைவு பெறாமை, பத்தொன்பதாவது அரசியல் யாப்பு திருத்தத்திற்கமைய தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்பட்டமை மற்றும் அதனோடு தொடர்புடைய நிருவாக ரீதியான மற்றும் நிறுவன ரீதியான பணிகளை மேற்கொள்வதற்கு கணிசமானளவு காலமொன்று செலவாகியமை மற்றும் அப் பணிகள் நிறைவடைந்து அறிக்கை தயாரிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் புதிய தேர்தல் முறைமைக்கமைய உள்ளூர் அதிகார சபை தேர்தல்களை நடாத்த நேரிட்டமை காரணமாக அலுவலர்களின் வேலைப்பளு அதிகரித்தமையால் இவ்வறிக்கையை வெளியிடுவதில் கால தாமதம் ஏற்பட்டதென்பதை குறிப்பிடுதல் வேண்டும்.

தேர்தலை நடாத்துவதற்குரிய பணிகளை ஒழுங்கு செய்தல் மற்றும் வழிநடாத்துதல் பொறுப்பு தேர்தல்கள் ஆணையாளருக்கு கையளிக்கப்பட்ட போதிலும், அது உண்மையில் ஒரு கூட்டுச் செயற்பாடாகும். அதை போன்று கூட்டுச் செயற்பாடொன்றான அவ்வறிக்கையை தயாரிக்கும் போது மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளராகவும், தேர்தல்கள் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றிய திரு.யூ.அமரதாச, மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளராகவும், தேர்தல்கள் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றிய திரு.ஆர்.எம். எல் ரத்நாயக்க, மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர்களாகக் கடமையாற்றிய திரு. எம்.ஏ.பி.சி பெரேரா, திரு.எம்.எம்.மொஹமட், திரு.சமன் ஸ்ரீ ரத்நாயக்க உள்ளிட்ட தேர்தல்கள் செயலகத்தின் அனைத்துப் பணியாட் குழுவினரும் எனக்கு வழங்கிய ஒத்துழைப்பையும், அர்ப்பணிப்பையும் பெரிதும் மெச்சுகின்றேன்.

இலங்கையில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலும் மாணவ மாணவிகள், கல்வியியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் இலங்கையில் தேர்தல்கள் செயற்பாடுகள் மற்றும் அதன் பரம்பலை தமது கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு தலைப்பாக பயன்படுத்தியுள்ளனர். தேர்தல் ஒன்றின் நிறைவின் போது வெளியிடப்படுகின்ற இவ்வாறான அறிக்கைகள் அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பெரிதும் பயனுள்ளதாக அமைந்துள்ளதென்பது எமக்கு கிடைக்கப்பெறுகின்ற குறிகளிலிருந்து தென்படுகின்றது. தேர்தலொன்றுக்குரிய அடிப்படை அம்சங்களான தேர்தலின் வரலாறு, அரசியலமைப்பு மற்றும் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள், தேர்தல் செயற்பாடுகள், சட்டதிட்டங்கள் மற்றும் அவற்றை செயல்வலுவாக்கம் செய்தல், வழிகாட்டி நெறிகள், மற்றும் ஒழுக்க நெறிகளை வெளியிடல், பெறுபேறுகள் மற்றும் புள்ளிவிபரக் குறிப்புக்கள் போன்ற தகவல்களை உள்ளடக்கியுள்ள இவ்வறிக்கை அது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற அனைத்து தரப்புக்களுக்கும் பயனுள்ளதாக அமையுமென எண்ணுகின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்,
(2011.03.25 தொடக்கம் 2015.04.30 வரை)

தேர்தல்கள் திணைக்களம்,
இராஜகிரிய.
2018.07.11ஆம் திகதி

உள்ளடக்கம்

I ஆம் பகுதி 01

அறிமுகம் 01

அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் 01

மாகாண சபைகளைத் தாபித்தல். 02

மாகாண சபைகள் நிருவாகப் பிரிவு 02

மாகாண சபைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 03

மாகாண சபையொன்றில் உறுப்பினர்களுக்கான தகைமைகள் 05

தேர்தல் பணிக்களுக்காக அங்கரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 06

மாகாண சபைத் தேர்தலுக்காக செல்லுபடியான தேருநர் இடாப்பு 06

தேர்தலை நிருவகித்தல் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் 06

II ஆம் பகுதி 07

தேர்தலோடு தொடர்புடைய பூர்வாங்க அலுவல்கள் 07

தேர்தலுக்கான செல்லுபடியான தேருநர் இடாப்பு 08

வட மாகாணத்திற்கான குறைநிரப்பி தேருநர் இடாப்பொன்றைத் தயார் செய்தல் 09

வாக்கெடுப்பு நிலையங்கள் 10

இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 125அ
பிரிவுக்கமைய வேறு வாக்கெடுப்பு நிலையங்களில் வசதி செய்து கொடுத்தல். 13

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 15

III ஆம் பகுதி 16

வேட்புமனுக் கையேற்றல 16

கிழக்கு, வட மத்திய மற்றும் சப்பிரகமுவ ஆகிய மாகாண சபைகள் 16

மத்திய, வடக்கு மற்றும் மேல் ஆகிய மாகாண சபைகள் 17

மேல் மற்றும் தென் மாகாண சபைகள் 17

ஊவா மாகாண சபை 18

வாக்குச் சீட்டுக்கள் 21

IV ஆம் பகுதி 23

தேர்தலுக்கான முன் தேவைப்பாடுகள் 23

அஞ்சல் மூல வாக்களிப்பு 23

அஞ்சல் வாக்காளர் இடாப்பு 24

தேர்தல் தொடர்பான அறிவித்தல் 26

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் 27

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிடல் 27

மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டதின் 28 (1) ஆம் பிரிவின் கீழ் வாக்கெடுப்பு
நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட வேண்டிய அறிவித்தல்கள். 28

துடைத்தழிக்க முடியாத மை 30

உத்தியோகபூர்வ முத்திரையை வாக்குச் சீட்டில் பொறித்தல் 30

உடல் வலிமையிழப்பிற்குட்பட்டுள்ள நபர்களுக்கான விசேட போக்குவரத்து வசதிகள். 31

உடல் வலிமையிழப்பிற்குட்பட்ட வாக்காளரொருவருக்கு வாக்களிக்கும் போது
உதவுவதற்காக நபரொருவரை வாக்களிப்பு நிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்கு
இடமளித்தல் 31

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கினை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல் 32

வாக்காளர்களின் ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்ளல்..... 33
தேர்தல்கள் திணைக்களத்தினால் தற்காலிக அடையாள அட்டைகளை விநியோகித்தல்..... 34

V ஆம் பகுதி.....36
அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களுடன் கலந்துரையாடல்..... 36
அரசியல் கட்சிகள், சுயேச்சைக்குழுக்கள் மற்றும் அவற்றின் வேட்பாளர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவையொன்றை வெளியிடுதல்..... 39
இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல்கள் வழிகாட்டு நெறிகள்..... 40

VI ஆம் பகுதி.....41
பணியாட் குழுவினர் மற்றும் போக்குவரத்து அலுவல்கள்..... 41
பணிக்குழுவை ஈடுபடுத்துதல்..... 41
அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல்..... 44
போக்குவரத்து ஒழுங்குகள்..... 46

VII ஆம் பகுதி.....48
தேர்தல்கள் சட்டங்கள் மீறப்படுவதைக் கட்டுப்படுத்தல்..... 48
தேர்தல்கள் காலப்பகுதியினுள் அரச ஆதனங்களின் துஷ்பிரயோகத்ததைத் தடுத்தல்..... 49
அரசியல் யாப்பின் 104 ஆ (1) (5) ஆம் பந்திற்கு அமைய வானொலி அல்லது தொலைக்காட்சி சேவைகள் மற்றும் செய்திப்பத்திரிகைகளின் உரிமையாளர்கள்/ வெளியீட்டாளர்கள் ஆகியோருக்கு வழிகாட்டு நெறிகளை வெளியிடுதல்..... 51
அரசியல் யாப்பின் 104 ஆ (1) (4அ) (ஆ) ஆம் உறுப்புரைகளுக்கமைய அரச சேவையுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் அறிவுறுத்தல்களை வெளியிடுதல்..... 52
அரசியல் யாப்பின் 104 இ (1) ஆம் உறுப்புரைக்கு அமைய தேர்தல்கள் திணைக்களம் தேர்தல் காலப்பகுதியினுள் இலங்கைப் பொலிசாருடன் இணைந்து செயற்படுதல்..... 52
தேர்தல் கடமைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை பொலிசாருக்கு வெளியிடுதல்..... 53
அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் என்பவற்றின் முகவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களுக்கு பொலிசாரின் ஒத்துழைப்பு..... 53
தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளைக் கையேற்றல் மற்றும் பொலிசாரின் ஒத்துழைப்புடன் முறைப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்..... 54
தேர்தல் செயலகத்தில் மற்றும் மாவட்ட செயலகங்களில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் முறைப்பாடுகள் ஏற்கும் நிலையங்கள்..... 55
மாவட்ட ரீதியாக மற்றும் பிரதேச ரீதியாக அமைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் ஏற்கும் நிலையங்கள்..... 55
முறைப்பாடுகள் சமர்ப்பித்துள்ள நபர்கள் மற்றும் அமைப்புக்கள்..... 56
தேர்தல் ஆணையாளரால் விசேட விசாரணையாளர்களை ஈடுபடுத்தி முறைப்பாடுகள் தொடர்பாக ஆராய்தல்..... 56
தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் தன்மை..... 57
தேர்தல் சட்டங்களை மீறல் மற்றும், சட்டவிரோத தேர்தல் அறிவித்தல்களை காட்சிப்படுத்தல்..... 57
தேர்தல் சட்டங்களை மீறல்: சட்டவிரோத கூட்டங்களை நடாத்துல் மற்றும் அனுமதியற்ற ஊர்வலங்கள் நடைபவனிகள் என்பனவற்றை நடாத்துதல்..... 58
தேர்தல் சட்டங்களை மீறல் : சட்டவிரோத அலுவலகங்களை தாபித்தல்..... 61
தேர்தல் சட்டங்களை மீறல் : வாக்காளர்களுக்கு அழுத்தம் கொடுத்தல்..... 61

அரச ஆதனங்களின் முறையற்ற பாவனை: அரச வாகனங்களை தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் 62
அரச ஆதனங்களைத் துஷ்பிரயோகம் செய்தல் - அரச கட்டிடங்களை தேர்தற் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் 63
அரச ஆதனங்களின் முறையற்ற பாவனை: பாராளுமன்ற உறுப்பினர்கள் அஞ்சல் முத்திரைகளை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் 63
அரச ஆதனங்களின் முறையற்ற பாவனை: அரச வைபவங்களை நடாத்துவதன் மூலம் வேட்பாளர்களுக்கு நன்மை பெற்றுக் கொடுத்தல் 64
தேர்தல் செயலகத்தின் முறைப்பாடுகள் ஏற்கும் நிலையத்திற்கும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கும் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் 64
கிழக்கு மாகாணம் 65
மட்டக்களப்பு மாவட்டம் 65
அம்பாறை மாவட்டம் 66
திருகோணமலை மாவட்டம் 68
வடமத்திய மாகாணம் 69
அநுராதபுர மாவட்டம் 69
பொலன்னறுவை மாவட்டம் 70
சப்ரகமுவ மாகாணம் 71
இரத்தினபுரி மாவட்டம் 71
கேகாலை மாவட்டம் 72
மத்திய மாகாணம் 73
கண்டி மாவட்டம் 73
நுவரெலியா மாவட்டம் 74
மாத்தளை மாவட்டம் 75
வட மாகாணம் 76
யாழ்ப்பாண மாவட்டம் 76
வடமேல் மாகாணம் 78
புத்தளம் மாவட்டம் 78
குருநாகல் மாவட்டம் 79
மேல் மாகாணம் 81
கொழும்பு மாவட்டம் 81
களுத்துறை மாவட்டம் 83
கம்பஹா மாவட்டம் 84
தென் மாகாணம் 85
காலி மாவட்டம் 85
மாத்தறை மாவட்டம் 86
அம்பாந்தோட்டை மாவட்டம் 87
ஊவா மாகாணம் 88
மொணராகலை மாவட்டம் 88
பதுளை மாவட்டம் 89
ஊவா மாகாண சபைத் தேர்தல் காலப்பகுதியில் வாழ்வின் எழுச்சி திணைக்களம், கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் கீழ் பணியாற்றிய அலுவலர்கள் களக் கணக்கெடுப்பொன்றில் ஈடுபடுத்தப்படல் 91
மொணராகலை மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு உதவித் தொகை தேர்தல் காலப்பகுதியின் போது வழங்குதல் 92

VIII ஆம் பகுதி 97
வட மாகாண தேர்தல் பணிகள் ஒழுங்கமைப்பு 97

வாக்காளர் கணக்கெடுப்பு மற்றும் வாக்காளர் இடாப்புக்கள் தயாரித்தல் 98
2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வீடு வீடாகச் சென்று வாக்காளர் கணக்கெடுப்பினை மேற்கொள்ளாது பதிவு செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்ட வாக்கெடுப்பு மாவட்டங்கள் மற்றும் வாக்காளர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம்..... 99
வடமாகாணத்தின் வருடாந்த தேருநர் இடாப்பை நிகழ்நிலைப்படுத்துவதற்கும் மற்றும் தேர்தல் அலுவல்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட விசேட வழிமுறைகள் 100

IX ஆம் பகுதி 103
வாக்கெடுப்பு 103
வாக்கெடுப்புத் திகதிக்கு அண்மித்த தினங்களில் மாவட்டங்களில் ஆற்றப்பட்ட பணிகள் 103
வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினப் பணிகள் வாக்கெடுப்பு நிலையங்களை ஒழுங்குபடுத்தல் 106
சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வாக்குச் சீட்டுக்கள், வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட வாக்கெடுப்புக்குத் தேவையான பொருட்களை விநியோகித்தல் 106
வாக்கெடுப்பு நிலையப் பணியாகுழுவினரை வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல் 107
வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள்..... 107
பாதுகாப்பு அலுவல்கள் 108
வாக்கெடுப்புத் தினம் 108
வாக்கெடுப்பை கண்காணிப்புச் செய்தல்..... 109
வட மாகாண சபைத் தேர்தலுக்காக வெளிநாட்டு கண்காணிப்பு குழுக்களை ஈடுபடுத்தல்..... 110

X ஆம் பகுதி..... 112
வாக்குகள் மற்றும் விருப்பு வாக்கெண்ணல்..... 112
வாக்கெண்ணல் தொடர்பான அறிவித்தல் 112
வாக்கெண்ணல் முகவர்கள்..... 113
வாக்கெடுப்பின் பின்னர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களிடமிருந்து வாக்குப் பெட்டிகள், பொருட்கள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றை மீளக் கையேற்றல்..... 113
வாக்கெண்ணலுக்கு பொறுப்பான அலுவலர்கள் மற்றும் உதவி பணியாட் குழுவினர்..... 114
வாக்கெண்ணும் மண்டபங்களை தாபித்தல்..... 114
வாக்குகள் மற்றும் விருப்பு வாக்குகள் எண்ணப்படும் விதம்..... 115
I ஆம் கட்டம்..... 115
II ஆம் கட்டம்..... 116
III ஆம் கட்டம் 117

XI ஆம் பகுதி..... 120
பெறுபேறுகளை வெளியிடுதல்..... 120
பெறுபேறுகளை வெளியிடுதல் மற்றும் தொடர்புடைய அறிவித்தல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடப்படுகின்ற இடத்தில் பிரதிநிதித்துவம் செய்தல் 120
பெறுபேறுகளைத் தயாரிக்கும் இடங்களை ஒழுங்கமைத்தலும் அதற்கான பணியாட் குழுவினரை நியமனம் செய்தலும்..... 120
பெறுபேற்று ஆவணங்களை கையேற்றல்..... 121
பெறுபேறுகளைத் தயாரித்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடும் சந்தர்ப்பங்கள்..... 121

XII ஆம் பகுதி 122
தேர்தலுக்கான செலவுகள்..... 122

XIII ஆம் பகுதி

அவதானிப்புக்கள் 125
தேர்தலுக்கான திகதியைக் குறித்தல் 125
வேட்புமனுப் படிவத்தில் வேட்பாளர்களின் பெயர்களை உட்சேர்த்தல் 127
மாகாண சபைத் தேர்தலில் வேட்பாளர்களாகப் போட்டியிடவிருக்கும் உள்;ராதிகார சபைகளின் . 128
வேட்பாளர்களின் பாதுகாப்பு 128
அஞ்சல் வாக்களிப்பு 129
தேர்தல் பிரச்சார அலுவல்கள் 131
அரச ஆதனங்களை அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துதல் 132
தேர்தல் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்தல் 134
அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகப் பாவனை 136
தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பங்கேற்பு 137
தேர்தல் கடமைகள், அரச அலுவலர்களின் அரசியல் உரிமைகள் 140
வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்படுதல் மற்றும் விருப்பு வாக்குகள் செல்லுபடியற்றதாகுதல் 142
தேர்தல் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரின் அறிக்கையை பரீட்சித்தல் மற்றும் அதனோடு தொடர்புடையதாக பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளல் 144

XIV ஆம் பகுதி 145

மதிப்பீடு செய்தல் 145

XV ஆம் பகுதி 149

முடிவு 149

உப அட்டவணை

1. கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு அம்மாகாண சபை ஆளுநரால் வெளியிடப்பட்ட 2012.06.27 ஆம் திகதிய 1764/06 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் 153

2. வடமத்திய மாகாண சபை கலைக்கப்பட்டு அம்மாகாண சபை ஆளுநரால் வெளியிடப்பட்ட 2012.06.27 ஆம் திகதிய 1764/07 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் 153

3. சப்ரகமுவ மாகாண சபை கலைக்கப்பட்டு அம்மாகாண சபை ஆளுநரால் வெளியிடப்பட்ட 2012.06.27 ஆம் திகதிய 1764/08 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் 153

4. மத்திய மாகாண சபை கலைக்கப்பட்டு அம்மாகாண சபை ஆளுநரால் வெளியிடப்பட்ட 2013.07.05 ஆம் திகதிய 1817/38 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் 154

5. வடமேல் மாகாண சபை கலைக்கப்பட்டு அம்மாகாண சபை ஆளுநரால் வெளியிடப்பட்ட 2013.07.05 ஆம் திகதிய 1817/39 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் 154

6. மேல் மாகாண சபை கலைக்கப்பட்டு அம்மாகாண சபை ஆளுநரால் வெளியிடப்பட்ட 2014.01.12 ஆம் திகதிய 1844/75 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் 154

7. தென் மாகாண சபை கலைக்கப்பட்டு அம்மாகாண சபை ஆளுநரால் வெளியிடப்பட்ட 2014.01.12 ஆம் திகதிய 1844/76 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் 155

8. ஊவா மாகாண சபை கலைக்கப்பட்டு அம்மாகாண சபை ஆளுநரால் வெளியிடப்பட்ட 2014.07.11 ஆம் திகதிய 1870/64 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்..... 155

9. தேர்தல் ஆணையாளரால் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் வெளியிடப்பட்ட கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளின் வேட்புமனுக்களுக்கான 2012.06.28 ஆந் திகதிய 1764.׃15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்..... 156

10. தேர்தல் ஆணையாளரால் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் வெளியிடப்பட்ட மத்திய, வடமேல், வட மாகாண சபைகளின் வேட்புமனுக்களுக்கான 2013.07.11 ஆந் திகதிய 1818.׃21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்..... 160

11. தேர்தல் ஆணையாளரால் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் வெளியிடப்பட்ட மேல், தென் மாகாண சபைகளின் வேட்புமனுக்களுக்கான 2014.01.16 ஆந் திகதிய 1845/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.... 164

12. தேர்தல் ஆணையாளரால் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் வெளியிடப்பட்ட ஊவா மாகாண சபையின் வேட்புமனுக்களுக்கான 2014.07.16 ஆந் திகதிய 1871/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்..... 167

13. கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாணங்களுக்கான தேர்தல் - 2012 அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்ப்பட்டியல்..... 169

14. மத்திய, வட, வடமேல் மாகாணங்களுக்கான தேர்தல் - 2013 அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்ப்பட்டியல்..... 170

15. மேல், தென் மாகாணங்களுக்கான தேர்தல் - 2014 அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்ப்பட்டியல்..... 171

16. ஊவா மாகாணத்துக்கான தேர்தல் - 2014 அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்ப்பட்டியல்..... 172

17. மாகாண சபைத் தேர்தல் - 2012/2014 நிருவாக மாவட்டங்களின் கீழ் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள்..... 173

18. மாகாண சபைத் தேர்தல் - 2012/2014 வேட்பு மனுக்கள் ஏற்கும் செயற்பாடுகள்..... 175
கிழக்கு மாகாண சபைத் தேர்தல்..... 175
வட மத்திய மாகாண சபைத் தேர்தல்..... 181
சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்..... 183
மத்திய மாகாண சபைத் தேர்தல்..... 187
வட மாகாண சபைத் தேர்தல்..... 193
வடமேல் மாகாண சபைத் தேர்தல்..... 201
மேல் மாகாண சபைத் தேர்தல்..... 205
தென் மாகாண சபைத் தேர்தல்..... 219
ஊவா மாகாண சபைத் தேர்தல்..... 223

19. அஞ்சல் மூல வாக்களிப்பு வசதிகள் தொடர்பாக தேர்தல் ஆணையாளரால் ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது வெளியிடப்பட்ட 2014.08.03 ஆந் திகதிய ஊடக அறிவித்தல்..... 226

20. உடல் வலுவிழப்பிற்குட்பட்ட வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டினை அடையாளமிடுவதற்கு உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்வதற்காக அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்குரிய சட்ட ஏற்பாடுகள் பற்றி தேர்தல் ஆணையாளரால் ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது வெளியிடப்பட்ட 2014.08.28 ஆந் திகதிய ஊடக அறிவித்தல்..... 227

21. உடல் வலுவிழப்பிற்குட்பட்ட வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்வதற்குரிய போக்குவரத்து வசதிகளுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் பற்றி தேர்தல் ஆணையாளரால் ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது வெளியிடப்பட்ட 2014.08.13 ஆந் திகதிய ஊடக அறிவித்தல்..... 229

22. வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் தொடர்பாக தேர்தல் ஆணையாளரால் ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது வெளியிடப்பட்ட 2014.08.18 ஆந் திகதிய ஊடக அறிவித்தல்..... 230

23. வாக்காளர்கள் வாக்களித்தல் மற்றும் விருப்பு வாக்கு அளித்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளரால் ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது வெளியிடப்பட்ட 2014.08.17 ஆந் திகதிய ஊடக அறிவித்தல்..... 231

24. ஊழியர்களுக்கு வாக்களிக்கச் செல்வதற்காக லீவு வழங்குதல் தொடர்பாக வேலை கொள்வோருக்கான அறிவுறுத்தல்கள் தொடர்பாக தேர்தல் ஆணையாளரால் ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது வெளியிடப்பட்ட 2014.08.25 ஆந் திகதிய ஊடக அறிவித்தல்..... 232

25. அஞ்சல் மூல வாக்காளர்கள் மற்றும் அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள், அஞ்சல் வாக்கு அடையாளமிடுதல் போன்றவை தொடர்பாக தேர்தல் ஆணையாளரால் ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது வெளியிடப்பட்ட 2014.08.21 ஆந் திகதிய ஊடக அறிவித்தல்..... 234

26. 2014.07.28 ஆந் திகதி வெளியிடப்பட்ட ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள், வேட்பாளர்கள் ஆகியோருக்கான ஒழுக்கநெறிக் கோவை..... 235

27. 2014.08.09 ஆந் திகதி வெளியிடப்பட்ட ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான கண்காணிப்பு அமைப்புக்கள், கண்காணிப்பாளர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை..... 240

28. ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான கண்காணிப்பு அமைப்புக்கள், கண்காணிப்பாளர்களுக்கான உறுதியுரை..... 242

29. 2014.07.16 ஆந் திகதி தேர்தல் ஆணையாளரால் வெளியிடப்பட்ட ஊவா மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அரச, அரச கூட்டுத்தாபன, நியதிச் சட்டசபை ஆகியவற்றிற்குரிய சொத்துக்களை தேர்தற் காலப்பகுதியில் முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான அறிவுறுத்தல்கள்..... 243

30. 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 61அ(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு மாகாண சபைக்கும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல்..... 248

31. மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக இடம்பெற்ற வழக்கு விசாரணைகள் பற்றிய சுருக்கம்... 249

32. 2013.07.13 ஆந் திகதி தேர்தல் ஆணையாளரால் வெளியிடப்பட்ட வடக்கு, வடமேல் மாகாண சபைத் தேர்தலுக்கான இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை..... 254

புள்ளிவிபரக் குறிப்புக்கள்

1. மாகாண சபைகள் கலைக்கப்பட்ட திகதி, தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்ட திகதி மற்றும் தேர்தல் திகதி (மாகாண சபைத் தேர்தல் - 2012/2014) 259

2. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை (மாகாண சபைத் தேர்தல் - 2012/2014) 260

3. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர் எண்ணிக்கை, வாக்கெடுப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை, வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை (மாகாண சபைத் தேர்தல் - 2012/2014) 261

4. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழும் போட்டியிட்ட அரசியற் கட்சிகளின் எண்ணிக்கை, சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை, அவை சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை (மாகாண சபைத் தேர்தல் - 2012/2014) 262

5. 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாணங்களுக்கான தேர்தலில் நிருவாக மாவட்டத்தில் போட்டியிடும் அரசியற் கட்சிகள் 263

6. 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற மத்திய, வடக்கு, வடமேல் மாகாணங்களுக்கான தேர்தலில் நிருவாக மாவட்டத்தில் போட்டியிடும் அரசியற் கட்சிகள் 264

7. 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற மேல், தென் மாகாணங்களுக்கான தேர்தலில் நிருவாக மாவட்டத்தில் போட்டியிடும் அரசியற் கட்சிகள் 265

8. 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற ஊவா மாகாணத்துக்கான தேர்தலில் நிருவாக மாவட்டத்தில் போட்டியிடும் அரசியற் கட்சிகள் 266

9. போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் அவற்றிற்கு அனுமதிக்கப்பட்டுள்ள சின்னங்கள் மற்றும் வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இலக்கங்கள் உட்பட தயாரிக்கப்பட்ட வீடுகளுக்கு தபாலில் வழங்கப்படவிருக்கும் அறிவித்தல்களின் எண்ணிக்கை. (மாகாண சபைத் தேர்தல் - 2012/2014) 267

10. அஞ்சல் மூல வாக்குகளின் விண்ணப்பப் பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை (நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களின்படி) (மாகாண சபைத் தேர்தல் - 2012/2014) 268

11. வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள கட்டிட வகைகளின் பிரகாரம் வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை (மாகாண சபைத் தேர்தல் - 2012/2014) 269

12. வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை, பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின்படி வகைப்படுத்தல். (கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் - 2012) 12(1) வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை, பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின்படி வகைப்படுத்தல். (மத்திய, வடக்கு, வடமேல், மேல், தென் மாகாண சபைத் தேர்தல் - 2013/2014) 270

13. தேர்தற் கடமைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை. (மாகாண சபைத் தேர்தல் - 2012/2014) 272

14. தேர்தற் கடமைகளுக்கான பணிக்குழுவினர் (மாகாண சபைத் தேர்தல் - 2012/2014) 273

15. வாக்கெண்ணல் கடமைகளுக்கான பணிக்குழுவினர் (மாகாண சபைத் தேர்தல் - 2012/2014).... 274

16. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழும் அமைக்கப்பட்டுள்ள வாக்கெண்ணல் நிலையங்களின் எண்ணிக்கை (மாகாண சபைத் தேர்தல் - 2012/2014) 275

17. விநியோகிக்கப்பட்ட அஞ்சல் மூல வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை, வாக்கெண்ணலுக்கான அஞ்சல் வாக்குச்சீட்டுக்களின் எண்ணிக்கை, கட்சி மற்றும் குழுக்களின் பிரகாரம் எண்ணப்பட்டபோது நிராகரிக்கப்பட்ட எண்ணிக்கை..... 276

18. ஒவ்வொரு மாவட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் பெற்றுள்ள வாக்குகளின் எண்ணிக்கை, அவற்றின் நூற்று வீதம், பெற்றுக் கொண்டுள்ள ஆசனங்களின் எண்ணிக்கை (மாகாண சபைத் தேர்தல் - 2012/2014)..... 277

19. அரசியற் கட்சிகள் போட்டியிட்டுள்ள மாகாணங்களின் எண்ணிக்கை, நிருவாக மாவட்டங்களின் எண்ணிக்கை, பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் பெற்றுக் கொண்ட ஆசனங்களின் எண்ணிக்கை (மாகாண சபைத் தேர்தல் - 2012/2014) 283

20. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழும் போட்டியிட்ட அரசியற் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை, கட்சிகள் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை, நூற்றுவீதம், பெற்றுக் கொண்ட உறுப்பினர் எண்ணிக்கை என்பனவும், பெறப்பட்ட வாக்குகளின் நூற்றுக்கு 1% வீதத்திற்கும் குறைவாக வாக்குகள் பெற்றுக் கொண்டுள்ள கட்சிகள், சுயேச்சைக்குழுக்களின் எண்ணிக்கையும் 284

21. மாகாண சபைகளின் உறுப்பினர் பதவிகள் அரசியற் கட்சிகளிடையே பிரிக்கப்பட்டுள்ள விதம் .286

22. மாகாண சபைகளின் உறுப்பினர் பதவிகள் பெற்றுக் கொண்ட அரசியற் கட்சிகள், மாகாண ரீதியாகப் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகள், நூற்று வீதம், பெற்றுக் கொண்டுள்ள உறுப்பினர் எண்ணிக்கை 287

23. ஒவ்வொரு மாகாண சபைக்குரிய ஒவ்வொரு மாவட்டங்களிலும் போட்டியிட்ட அரசியற் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் வாக்கெடுப்புப் பிரிவுகளின் பிரகாரம் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை, அளிக்கப்பட்ட வாக்குகளின் நூற்றுவீதம், நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை..... 288

24. தேர்தலின் போது உறுப்பினர் பதவி கிடைக்கப் பெற்ற அரசியற் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை 315

25. மாகாண சபைத் தேர்தலின் போது தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் பிரகாரம் பொலிஸ் திணைக்களம், தபாற் திணைக்களம், அச்சகத் திணைக்களம் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள்..... 446

I ஆம் பகுதி

அறிமுகம்

01. 1978 சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கு, பதின்மூன்றாம் அரசியலமைப்புத் திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்நாட்டில் மாகாண சபை முறை தாபிக்கப்பட்டது. அதற்காக அரசியலமைப்பில் புதிதாக உட்சேர்க்கப்பட்ட XVII அ அத்தியாயத்தின் ஏற்பாடுகள் 1988 சனவரி மாதம் 26 ஆம் திகதியிலிருந்து நடைமுறையிலுள்ளது.

02. அரசியலமைப்பில் 154 ஆ (8) (ஆ) ஆம் பந்திக்கமைய மாகாண சபையொன்றைக் காலாவதியாக்குவதற்கு ஆளுநருக்குள்ள தத்துவத்திற்கமைய மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவிற்கமைய தேர்தல்கள் ஆணையாளர் தேர்தலொன்றை நடாத்தும் தனது விருப்பை வெளிப்படுத்தல் வேண்டும். கிழக்கு, வடமத்திய மற்றும் சப்பிரகமுவ ஆகிய மாகாண சபைகள் 2012.06.27 ஆம் திகதியும் மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகள் 2013.07.02 ஆம் திகதியும் அவற்றின் ஆளுநர்களால் கலைக்கப்பட்டன. வட மாகாண சபைக்கான தேர்தலொன்றை நடாத்துமாறு சனாதிபதி அவர்கள் 2013.07.05 ஆம் திகதி அரசியலமைப்பின் 154 அ (2) உறுப்புரைக்கமைய மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10(1) பிரிவின் கீழ் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கட்டளையிட்டார். மேல் மற்றும் தென் மாகாண சபைகள் 2014.01.13 ஆம் திகதியும் ஊவா மாகாண சபை 2014.07.11 ஆம் திகதியும் கலைக்கப்பட்டன. இவ்வாறு கலைக்கப்பட்ட 8 மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடாத்துமாறு சனாதிபதி அவர்களின் கட்டளை கிடைக்கப்பெற்ற வட மாகாண சபை என்பவற்றுக்காக கலைக்கப்பட்ட மற்றும் குறித்த கட்டளை பிறப்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வாரத்தினுள் தேர்தலை நடாத்தும் தனது விருப்பத்தை தேர்தல்கள் ஆணையாளரால் அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டது. அதற்கமைய கிழக்கு, வடமத்திய, சப்பிரகமுவ ஆகிய மாகாண சபைகளுக்காக 2012.06.08 ஆம் திகதியும் மத்திய, வடக்கு, வடமேல் மாகாண சபைகளுக்காக 2013.07.11 ஆம் திகதியும் மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்காக 2014.01.16 ஆம் திகதியும், ஊவா மாகாண சபைக்காக 2014.07.16 ஆம் திகதியும் அவ்வறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. ஒவ்வொரு மாகாண சபையும் கலைக்கப்பட்டு ஆளுநர்களால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் இவ்வறிக்கையின் 1 தொடக்கம் 8 வரையான அட்டவணைகளில் உட்சேர்க்கப்பட்டுள்ளன. இம் மாகாண சபைகளுக்காக தேர்தல்களை நடாத்துவதற்காகப் பெயர் குறித்த நியமனங்கள் கையேற்கப்பட்ட பின்னர், தேர்தல் அறிவித்தல் வெளியிடப்பட்டு வாக்கெடுப்புத் திகதிகளும் குறிக்கப்பட்டன. இது தொடர்பான விபரங்கள் 01 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகள்

03. அரசியலமைப்பின் 08 ஆம் அட்டவணையில் மேல், வடமேல், ஊவா, சப்பிரகமுவ, மத்திய, கிழக்கு, தெற்கு, வடமத்திய மற்றும் வடக்கு என்று காட்டப்பட்டுள்ள மாகாணங்களின் எண்ணிக்கை 09 ஆகும். அரசியலமைப்பின் 154 அ (2) ஆம் உறுப்புரைக்கமைய மாகாண சபைகளுக்காக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து, மாகாண சபை தாபிக்கப்படும். பதின்மூன்றாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் 1 ஆம் பிரிவுக்கு அமைய அத்திருத்தம் நடைமுறைக்கு வரும் தினமாக சனாதிபதி அவர்களால் 1988 சனவரி மாதம் 26 ஆம் திகதி விதிக்கப்பட்டது. இவ்வாறு தாபிக்கப்பட்ட மாகாண சபைகளில் பின்பற்ற வேண்டிய செயலொழுங்குகள் மற்றும் மாகாண அரச சேவை தொடர்பான விடயங்கள் தொடர்பில் ஏற்பாடுகளைச் செய்வதற்கு கொண்டுவரப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டம் 1988.02.01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. மாகாண சபைகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியொழுங்கு மற்றும் அதனோடிணைந்த விடயங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகக் கொண்டு வரப்பட்ட 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் 1988 பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி முதல் நடைமுறையிலுள்ளது. அரசியலமைப்பின் பதின்மூன்றாம் திருத்தம் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் ஆகிய சட்டங்கள் மாகாண சபைத் தேர்தலுக்குரிய

சட்ட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படை ஆவணங்களாகும். அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் 1988 ஆம் ஆண்டின் 35, 1988 இன் 55, 1990 இன் 29, 1993 இன் 7, 2004 இன் 5, 2004 இன் 14, 2011 இன் 28 ஆகிய திருத்தச் சட்டங்களின் ஊடாகவும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இம்மாகாண சபைத் தேர்தலுக்குரிய முதன்மை சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் இச்சந்தர்ப்பத்தில் கவனம் செலுத்துவது பொருத்தமாகும்.

மாகாண சபைகளைத் தாபித்தல்

04. 1987 நவம்பர் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட பதின் மூன்றாம் அரசியலமைப்புத் திருத்தம் 1988 சனவரி 26 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திருத்தத்தின் XVII அ அத்தியாயம் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, 154 தொடக்கம் அ தொடக்கம் 154 ந வரையான உறுப்புரைகளை அது உள்ளடக்கியுள்ளது. அரசியலமைப்பின் 08 ஆம் அட்டவணையில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள மாகாணங்களுக்காக மாகாண சபை தாபிக்கப்படுவதாக 154 அ (1) ல் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, 154 அ (2) மற்றும் மாகாண சபைத் தேர்தல் சட்டத்திற்கு அமைய இச்சபைகளுக்காக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து, அரசியல் அமைப்பின் 154 அ உறுப்புரையில் குறிப்பிடப்பட்டு உள்ள 8 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டு உள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் மாகாண சபைகள் தாபிக்கப்படல் வேண்டும்.

மாகாண சபை நிர்வாகக் கூறு

05. பதின்மூன்றாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அமைய மாகாணத்திற்குட்பட்ட நிருவாக மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டு மாகாண சபை நிருவாகப் பிரிவொன்று தோற்றம் பெறுகின்றது. இந்நிருவாகப் பிரிவு ஆளுநரொருவர், முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையை உள்ளடக்கியது. அரசியலமைப்பின் 154 அ (3) ஆம் உறுப்புரைக்கமைய இவ்வாறான நிருவாக அலகொன்றை, ஒன்றுகொன்று அண்மித்த இரண்டு அல்லது மூன்று மாகாணங்களை ஒன்றிணைத்து தாபித்துக் கொள்வதற்கும் அவகாசம் காணப்படுகின்றது. அவ்வாறு பல மாகாணங்களை ஒன்றிணைத்து மாகாண சபையொன்றைத் தாபிப்பதற்கு நிர்ணயித்துக் கொள்ள வேண்டிய முறை தொடர்பாக சட்டங்களை வகுக்கும் பொறுப்பு பாராளுமன்றத்திற்குரியதாகும் என்பதோடு 1987 ஆம் ஆண்டின் 42 இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 32 ஆம் பிரிவில், இவ்வாறான பல மாகாணங்களை ஒன்றிணைத்து மாகாண சபையொன்றை தாபித்துக் கொள்ளும் முறை குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு குறித்த இரண்டு அல்லது மூன்று மாகாணங்களுக்கு ஏற்புடைய விதத்தில் ஒரு மாகாண சபையைத் தாபிக்கும் தத்துவம் 37(1)அ பிரிவிற்கமைய சனாதிபதி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

06. மேலும் வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களுக்கு, மாகாண சபைகள் சட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு மாகாண சபைக்குரிய சட்ட ஏற்பாடுகள் செயல்வலுவில் காணப்படுகின்றதென்ற சனாதிபதி அவர்களின் வெளிப்படுத்துகை 1988 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 07 ஆம் திகதி வெளியிடப்பட்டது. (1988 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 08 ஆம் திகதிய 522/9 ஆம் இலக்க வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது) இவ்வாறு பல மாகாணங்களுக்காக ஒரு நிருவாகப் பிரிவு ஏற்படுத்தப்பட்ட சந்தர்ப்பமொன்றில் அவ்வாறான மாகாண சபைக்காக ஒரு மாகாண சபை தொடர்ந்து செயற்பட வேண்டுமா? அல்லது அந்தந்த மாகாணங்களுக்காகத் தனித்தனியான மாகாண சபைகள் காணப்பட வேண்டுமா? எனத் தீர்மானிக்கப்படுகின்ற தேர்தலொன்று இரண்டு மாகாணங்களில் அல்லது உரிய மாகாணங்களில் நடாத்தப்பட வேண்டுமா? என்பன சனாதிபதி அவர்களால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

07. 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 37(1)(அ) பிரிவிற்கமைய சனாதிபதி அவர்களால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக ஒரு நிருவாக அலகைக் கொண்ட மாகாண சபையொன்று தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் அச்சட்டத்தின் 37(2)(அ) பிரிவிற்கமைய அவ்வாறான நிருவாக அலகொன்று அதே விதத்தில் காணப்பட வேண்டுமா? அல்லது அம்மாகாணத்திற்காக வெவ்வேறு மாகாண சபைகள் தாபிக்கப்பட வேண்டுமா? என்ற தீர்மானத்தை மேற்கொள்வதற்கான தேர்தலொன்று 1988 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு பிற்படாத தினமொன்றில் நடாத்தப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

08. இவ்வாறான தேர்தல் திகதி அல்லது திகதிகள் சனாதிபதி அவர்களின் தற்றுணிபுக்கமைய செய்யப்படுகின்ற கட்டளை மூலம் காலத்துக்கு காலம் பிற்போடப்பட முடியுமென அச்சட்டத்தின் 32 (2) (ஆ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய இம்மக்கள் விருப்பம் கோடல் தொடர்ந்து சனாதிபதி அவர்களால் பிற்போடப்பட்டதோடு, 1990 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க மாகாண சபைகள் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை காரணமாக வட கிழக்கு மாகாண சபையை கலைத்து விட நேரிட்டது. இது தொடர்பாக 1990 ஆம் ஆண்டுக்குரிய தேர்தல்கள் ஆணையாளரின் வருடாந்த அறிக்கையில் 6.1 பந்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"1990 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தின் 5(3) ஆம் பிரிவின் கீழ் உறுப்பினரொருவர் அரசியலமைப்பிற்கு கட்டுப்படுவதை நிராகரித்துள்ளதாக அல்லது தெளிவாக அவ்வாறு நிராகரித்துள்ளதாக ஆளுநரால் ஏதேனும் மாகாண சபையொன்றின் தவிசாளருக்கு அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பமொன்றில் அவ்வாறு அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து அவ்வுறுப்பினர் தகைமையற்றவராக மாறுவதோடு, 5 அ பிரிவின் கீழ் இவ்வடிப்படைக்கமைய மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் அவ்வாறு தகைமையற்றவராக்கப்பட்ட சந்தர்ப்பமொன்றில் அத்தகைமையீனங்கள் சனாதிபதி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர், அம்மாகாண சபை தானாகவே இல்லாதொழிந்துவிடும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மாகாண சபை தொடர்பில் அவ்வாறான அறிவித்தலொன்று ஆளுநரால் செய்யப்பட்ட பின்னர் மாகாண சபை கலைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்டது. 1990 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான அவ்வாறான கலைப்புக் காரணமாக வேட்புமனுக்களைக் கோரல் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கையளிக்கப்படுகின்றது. அதற்கமைய 1990 யூலை மாதம் 11 ஆம் திகதிய 618/10 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் வடகிழக்கு மாகாணங்களின் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டன. அவசரகால கட்டளையின் கீழ் சனாதிபதி அவர்களால் வெளியிடப்பட்ட 618/18 ஆம் இலக்க 1990 யூலை மாதம் 12 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்குறித்த அறிவித்தல் இரத்து செய்யப்பட்டது."

09. மேற்படி மாகாண சபையை ஒன்றிணைத்தல் தொடர்பில் அவ்விரு மாகாணங்களின் வாக்காளர்களுக்கு தீர்மானமெடுப்பதற்கான மக்கள் விருப்பம் கோடலொன்றை நடாத்துதல் தொடர்ந்தும் பிற்போடப்பட்டமையினால் இம்மாகாணங்களை ஒன்றிணைத்தல் காரணமாக தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து 2006 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை நிருவாக மாவட்டத்தின் மூன்று நபர்களால் உயர்நீதிமன்றத்தில் மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. (FR243/6, FR244/6 மற்றும் FR 245/6) இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை ஆராய்ந்து பார்த்த கௌரவ நீதிமன்றம், விண்ணப்பதாரர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த நிவாரணங்களை வழங்கியது. இதன் காரணமாக கிழக்கு மாகாணத்திற்காக தனியான மாகாண சபையொன்றைத் தாபிப்பதற்கு சந்தர்ப்பம் கிட்டியது. இதற்கமைய சனாதிபதி அவர்கள் கிழக்கு மாகாண சபைக்காகத் தேர்தலொன்றை நடாத்துமாறு 1988 ஆம் ஆண்டின் 2 இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவு மற்றும் அரசியலமைப்பின் 154(அ) (2) உறுப்புரைக்கமைய 2008.03.07 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளருக்கு வழிகாட்டல் வழங்கப்பட்டமையினால் கிழக்கு மாகாணத்திற்காக தனியான மாகாண சபையொன்றை தாபிப்பதற்கான தேர்தல் 2008.05.10 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

மாகாண சபைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை

10. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்திற்கமைய மாகாணத்தின் அனைத்து நிருவாக மாவட்டங்களும் தேர்தல் பணிகளுக்கான வாக்கெடுப்பு அதிகாரப் பிரதேசங்களாகும். மாகாண சபைக்கு அதற்குரிய நிருவாக மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை நிருவாக மாவட்டத்தில் வதிந்திருக்கின்றவர்களின் எண்ணிக்கை மற்றும் இடப்பரப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படல் வேண்டும். நிருவாக மாவட்டத்தில் வதிந்துள்ளோரில் 40,000 பேருக்கு ஒர் உறுப்பினர் என்றவாறு அமைதல் வேண்டுமென்பதோடு, அதற்கு மேலதிகமாக மாவட்டத்தின் ஒவ்வொரு 1000 கிலோ மீற்றருக்கும் ஒர் உறுப்பினர்

பிரதிநிதித்துவம் செய்கின்ற விதத்தில் உறுப்பினர் எண்ணிக்கை தீர்மானிக்கப்படல் வேண்டும். சனத்தொகை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்ற தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை தீர்மானித்துக் கொள்வதற்கு இறுதியாக மேற்கொள்ளப்பட்ட மக்கள் கணக்கெடுப்பில் வெளியிடப்பட்ட மக்கள் தொகையாகும். இப்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தேர்தல்கள் ஆணையாளரால் தீர்மானிக்கப்பட வேண்டுமென மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தில் 3(4) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மாகாண சபைகள் தாபிக்கப்பட்ட ஆரம்பகால சந்தர்ப்பத்தின் போது இவ்வாறு ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 1988.02.05 ஆம் திகதிய 419/17 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்காகவும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 02 ஆம் இலக்க குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

11. இதற்கமைய நிருவாக மாவட்டங்களின் இடப்பரப்பு நிலையாக காணப்படும் காலம் வரை அதனை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்து எடுக்கப்படுகின்ற உறுப்பினர் எண்ணிக்கையில் மாற்றம் ஒன்று ஏற்படாத போதிலும், சனத்தொகையின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை சனத்தொகை கணக்கெடுப்புக் காரணமாக மாற்றங்களுக்குட்பட முடியும். இவ்விடயம் மாகாண சபையொன்று கொண்டிருக்க வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பதற்கும் காரணமாக அமைய முடியும். இருப்பினும், 2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் இந்நிலைமை மாற்றமடைந்தது. அதன் மூலம் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களால் ஒவ்வொரு மாகாண சபையின் கீழும் வாக்கெடுப்பை நடாத்தி தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை எவ்வித மாற்றமின்றி ஒவ்வொரு மாகாண சபைத் தேர்தலின் போதும் தேர்ந்தெடுக்க தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும், பொதுக் கணக்கெடுப்பொன்றின் பின்னர், முதலாவது தடவையாக நடாத்தப்படுகின்ற மாகாண சபைத் தேர்தலொன்றின் போது குறித்த மாகாண சபைக்குட்படுகின்ற வாக்கெடுப்பு அதிகார பிரதேசமான நிருவாக மாவட்டங்களின் கீழ் 2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் 3(3)(அ) மற்றும் (ஆ) ஆகிய பிரிவுகளுக்கமைய தேர்தல்கள் ஆணையாளரினால் மாவட்டத்தில் வதிந்திருக்கின்ற நபர்களின் மொத்த எண்ணிக்கையையும் அதன் இடப்பரப்பையும் கருத்தில் கொண்டு மாவட்டத்திற்கமைய தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டும். அவ்வெண்ணிக்கை குறித்த மாகாண சபைக்காக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் 02 ஆம் பிரிவின் கீழ் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 61(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்ந்தெடுக்கப்படவுள்ள மொத்த உறுப்பினர் எண்ணிக்கைக்கு உட்படுகின்ற மிகையாசனங்கள் இரண்டு தவிர்ந்த எஞ்சிய எண்ணிக்கைக்கு நேரொத்ததாகவிருத்தல் வேண்டும். வேறு முறையில் குறிப்பிடுவதாயின், நிருவாக மாவட்டங்களின் காணியின் அளவு மாறுபடாத வரை 10 வருடங்களுக்கு ஒரு முறை நடாத்தப்படுகின்ற சனத்தொகை கணக்கெடுப்பில், மாகாணத்தினுள் அமையப் பெற்றுள்ள மாவட்டத்தில் வாழ்கின்ற சனத்தொகை மாற்றங்களுக்கு நேரொத்ததாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை இத்திருத்தம் காரணமாக மாற்றங்களுக்குட்படும். இருப்பினும், மொத்த மாகாண சபையை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை மாற்றமடையாது காணப்படும்.

12. இம்முறை ஊவா மாகாண சபைத் தேர்தலுக்குரியதாக தேர்தல்கள் ஆணையாளரினால் 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 2014 யூலை மாதம் 16 ஆம் திகதி 1871/32 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அவ்வறிவித்தலில் பதுளை மற்றும் மொணராகலை நிருவாக மாவட்டங்களுக்காக முறையே 23 மற்றும் 17 வேட்பாளர்களின் பெயர்கள் வேட்புமனுப் பத்திரத்தில் உட்சேர்க்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது (உப அட்டவணை 12). இதற்கு முன்னர் 2004 மற்றும் 2009 ஆம் வருடங்களில் அம்மாகாண சபைக்காக நடாத்தப்பட்ட தேர்தல்களின் போது மொணராகலை மாவட்டத்திற்காக பெயர் குறிக்க வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை 11

ஆகக் காணப்பட்டதோடு, பதுளை மாவட்டத்தில் அவ்வெண்ணிக்கை 21 ஆக மாற்றமின்றி காணப்பட்டது. இம்முறை மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தின் போது 2011 ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தமையினால் இம்மாகாண சபையின் நிருவாக மாவட்டங்களுக்காக பெயர் குறிக்க வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கமைய சனத்தொகை மற்றும் இடப்பரப்பு அடிப்படையில் மீள் கணக்கிட தேர்தல்கள் ஆணையாளருக்கு நேரிட்டது.

அதற்கமைய இப்பந்தியில் மேலே குறிப்பிடப்பட்ட மொணராகலை மாவட்டத்திற்காக அரசியல் கட்சியொன்று அல்லது சுயேச்சைக் குழுவொன்று சார்பாக போட்டியிட வேண்டியிட வேட்பாளர்களின் எண்ணிக்கை முன்னர் அம்மாகாண சபைக்காக நடாத்தப்பட்ட தேர்தல்களின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த வேட்பாளர் எண்ணிக்கையை விட அதிகரித்தது. அவ்வெண்ணிக்கை 17 ஆகும். இவ்வேட்பாளர் எண்ணிக்கை மாற்றத்திற்கு எதிராக பதுளை மாவட்டத்தின் திரு. ஹரின் பிரனாந்து மற்றும் திரு. எச்.டப்ளிவ்.டீ. மஹீமல் முணசிங்க ஆகியோர் கௌரவ உயர் நீதிமன்றத்தில் 2014.07.21 ஆம் திகதி மனுவொன்றை (SE/FR/219/2014) சமர்ப்பித்து இது தொடர்பான விடயங்களை முன்வைத்தனர். 2004 ஆம் ஆண்டில் தேர்தல்கள் ஆணையாளரினால் மாகாண சபைத் தேர்தல்கள் சந்தர்ப்பத்தின் போது நிருவாக மாவட்டங்களுக்காக வேட்பாளர் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அவ்வெண்ணிக்கையை பாராளுமன்றத்தினால் மாத்திரமே மாற்ற முடியமென்பது மனுதாரர்கள் முன்வைத்த பிரதான வாதமாகக் காணப்பட்டது.

13. மாகாண சபைக்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரினால் வர்த்தமானியில் அறிவித்தல் வேண்டுமென்ற உத்தரவு சட்டத்தில் குறிப்பிடப்பட வில்லை என்பதால், மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான வேட்புமனுக் கோரும் அறிவித்தலில் அவ்வெண்ணிக்கை உட்சேர்ப்பது போதுமானதெனவும், குறித்த வேட்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பாக தீர்மானித்தல் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தேர்தல்கள் ஆணையாளருக்குக் கையளிக்கப்பட்டுள்ள ஒரு பணியெனவும் தேர்தல்கள் ஆணையாளரினால் நீதிமன்றத்திற்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டு தெரிவிக்கப்பட்டது. இறுதியாக இடம்பெற்ற சனத்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் ஊவா மாகாண சபைக்குரிய இரண்டு மாவட்டங்களின் இடப்பரப்பு என்பவற்றை கருத்தில் கொண்டு மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் மற்றும் 2004 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தின் விதிகளுக்கமைய தேர்தல்கள் ஆணையாளரினால் குறித்த நிருவாக மாவட்டங்களுக்காக அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு சார்பாக இம்முறை மாகாண சபைத் தேர்தல்களுக்காக குறிக்கப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை சரியானதென நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

14. இவ்வாறு மாகாண சபையொன்றின் நிருவாக மாவட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 31அ பிரிவின் கீழ் மாகாண சபை அதிகார பிரதேசத்தின் தேர்தல் சந்தர்ப்பமொன்றில் அனைத்து நிருவாக மாவட்டங்களிலிருந்தும் கூடுதலான மொத்த வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு இரண்டு மிகை ஆசனங்கள் கிடைக்கப்பெறுவதால் வாக்கெடுப்பொன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக இரண்டு மிகை ஆசனங்கள் மாகாணத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையோடு சேர்க்கப்படும். அவ்விருவரும் குறித்த மிகை ஆசனத்திற்குரித்துடைய அரசியல் கட்சியிலிருந்து மாகாண சபைக்குப் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்படாத வேட்பாளர்களிலிருந்து கட்சியின் செயலாளரினால் பெயர் குறிக்க வேண்டுமென மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 61அ(2) ஆம் பிரிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபையொன்றில் உறுப்பினர்களுக்கான தகைமைகள்

15. மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கமைய, 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தில் 3 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள தகைமையீனங்களுக்கு உட்பட்ட ஒருவர் மாகாண சபையொன்றுக்காக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகைமையற்றவராவார். அதற்கமைய உள்ளூரதிகார சபைத் தேர்தலுக்காக

போட்டியிடுவதற்கு தகைமையற்ற ஒருவர் போன்றே பாராளுமன்ற உறுப்பினர் பதவி வகித்துக் கொண்டிருக்கும் ஒருவருக்கும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட முடியாது. அதன் காரணமாக உள்ளூராதிகார சபை உறுப்பினர் பதவியொன்றை வகித்துக் கொண்டிருக்கும் ஒருவருக்கு அப்பதவியை வகித்துக் கொண்டு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு சட்ட ரீதியான தடையொன்றில்லை. அதேபோன்று ஒரு வேட்பாளருக்குத் தேர்தலொன்றின் போது ஒரு மாகாண சபைக்காக மாத்திரமே போட்டியிட முடியும். அதற்கு மேலதிகமாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 3(அ) பிரிவிற்கமைய, அரசியலமைப்பின் 91(1) ஆம் உப உறுப்புரையின் (ஆ),(இ),(ஈ),(உ),(ஊ) மற்றும்(எ) பந்திகளில் காட்டப்பட்டுள்ள எவையேனும் தகைமையீனமொன்றுக்கு உட்படுமொருவருக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட முடியாது.

தேர்தல் பணிக்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள்

16. மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 8(1) பிரிவுக்கமைய 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றாகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடைய அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அவ்வங்கீகாரம் காணப்படும் வரை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட முடியும்.

மாகாண சபைத் தேர்தலுக்காக செல்லுபடியான தேருநர் இடாப்பு

17. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 05 ஆம் பிரிவுக்கமைய மாகாண சபைத் தேர்தலுக்குரிய வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது நடைமுறையிலுள்ள 1980 ஆம் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிதல் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட தேருநர் இடாப்பு குறித்த மாகாண சபைத் தேர்தலுக்காக செல்லுபடியாகும்.

தேர்தலை நிருவகித்தல் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்கள்

18. 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தில் 126 ஆம் பிரிவுக்கமைய அச்சட்டத்தின் கீழ் தேர்தலை நடாத்தல், நிருவகித்தல் மற்றும் வழிநடாத்தல், மேற்பார்வை செய்தல் என்பன தேர்தல்கள் ஆணையாளருக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சட்டத்தின் ஏற்பாடுகளைச் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்காக ஏனைய உரிய அலுவலர்கள் மற்றும் தேர்தல்கள் பணியாட் குழுவினர், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஆகியோருக்கு தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் தேர்தல்கள் ஆணையாளரால் மேற்கொள்ளப்படும். மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவுக்கமைய தேர்தல்கள் ஆணையாளரினால் ஒவ்வொரு மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராக காலத்துக்கு காலம் எவரேனும் ஒரு நபர் பெயர் குறித்து அல்லது பதவி அடிப்படையில் நியமனம் செய்யப்படல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர்களின் பணிகளை ஆற்றுவதற்கு அவர்களுக்கு உதவுவதற்காக தேவையான நபர்களையும் பெயர் குறித்து அல்லது பதவியின் அடிப்படையில் நியமனம் செய்வதற்குத் தேர்தல்கள் ஆணையாளருக்கு முடியும். மாகாண சபைத் தேர்தல் முதற் தடவையாக நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தின் போது 1988 ஆம் ஆண்டு அப்போது நாட்டின் அமைய பெற்றிருந்த அனைத்து நிருவாக மாவட்டங்கள் சார்பாகவும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களாக அரசாங்க அதிபர்கள் பதவிப் பெயரில் நியமனம் செய்யப்பட்டதோடு, ஒவ்வொரு மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது அத்தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு உதவுவதற்காக ஏனைய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் பதவி அடிப்படையில் மற்றும் பெயர் குறித்து நியமனம் செய்யப்படுகிறார்கள்.

19. அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையின் கீழ் மூவரைக் கொண்ட தேர்தல் ஆணைக்குழுவின் தத்துவங்கள் பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் 27 ஆம் பிரிவுக்கமைய தேர்தல் ஆணைக்குழு நியமனம் செய்யப்படும் வரை தேர்தல்கள் ஆணையாளரால் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அதற்கமைய பதினெட்டாம் அரசியலமைப்பு திருத்தத்திற்குட்பட்டதாக பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களையும் தேர்தல்கள் ஆணையாளர் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

II ஆம் பகுதி

தேர்தலோடு தொடர்புடைய பூர்வாங்க பணிகள்

20. மாகாண சபைகளின் ஆளுநர்கள் மாகாண சபைகளை கலைத்ததன் பின்னர் தேர்தல்கள் ஆணையாளர் தேர்தலை நடாத்துவதற்காக வெளிப்படுத்தப்பட வேண்டிய அறிவித்தலை வெளியிட்டதைத் தொடர்ந்து குறித்த மாவட்டங்களில் தேர்தலுக்கான பூர்வாங்க அலுவல்களை ஒழுங்கு செய்வதற்கு அம்மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குத் தேர்தல்கள் ஆணையாளரால் அறிவுறுத்தல் வழங்கப்படும்.

21. மாகாண சபைகள் தேர்தலொன்றுக்காக வேட்புமனு கோரும் அறிவித்தல் வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து தேர்தல் நடாத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும் வரையான தேர்தல் செயன்முறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு பெருந்தொகையான அரச ஊழியர்களை பல்வேறு கடமைகளில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டியேற்படும். அதேபோன்று தேர்தல் அலுவல்களின் ஒழுங்கமைப்புக்கு தேவையான போக்குவரத்து வசதிகள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் பிரதானமாக அரச பிரிவுகளின் வாகனங்களைக் கொண்டு ஒழுங்கு செய்து கொள்ளப்படும். இதன் காரணமாக வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்டவுடன் தேர்தலுக்கான பல்வேறு மட்டத்திலான கடமைகளை கையளிக்க நேரிடுகின்ற பணியாட் குழுவினருக்கான அரச அலுவலர்களைத் தெரிவு செய்து கொள்வதற்கும் தேர்தல் கடமைகளுக்காக பெற்றுக் கொள்ள கூடிய அரச வாகனங்கள் தொடர்பாகவும் அறிந்து கொள்வதற்கும் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அரச நிறுவனங்களின் தலைவர்களிடமிருந்து தகவல்கள் கோரப்படும்.

22. மாகாண சபைத் தேர்தலுக்காக வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து அஞ்சல் வாக்களிப்புக்கான கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கும் காலம் ஆரம்பமாவதால், அஞ்சல் வாக்கு வசதிகளைக் கோருகின்றவர்களுக்கு விண்ணப்பங்களை வழங்குவதற்கும் மற்றும் அவற்றை பூரணப்படுத்துவதற்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கும் தேருநர் இடாப்பு காட்சிப்படுத்தலுக்குத் தேவையான அலுவல்களை மேற்கொள்ளுமாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இத்தேருநர் இடாப்பு காட்சிப்படுத்தல் தேர்தல் நடாத்தப்பட்ட மாவட்டங்களில் பிரதேச செயலகங்களிலும், இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களிலும் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு மேலதிகமாக பாதுகாப்புப் பிரிவு, பொலிஸ் மற்றும் அரச நிறுவனங்களின் கோரிக்கைக்கமைய இறுவட்டுக்களாகத் தயாரிக்கப்பட்ட தேருநர் இடாப்பின் பிரதிகள் பணியாட் குழுவினருக்குரிய பதிவுத் தகவல்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு விநியோகிக்கப்பட்டது.

23. தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்களுக்கு அண்மித்த தேர்தல் அலுவல்கள் தொடர்பான அனுபவம் கொண்ட அரச அலுவலகங்களில் பணியாற்றுகின்ற பதவிநிலை மட்ட அலுவலர்களின் சேவை, தேர்தல் ஒழுங்கமைப்புக்காக கட்டாயம் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் போன்றே மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கும் தேவையாகும். இம்முறை தேர்தலுடன் தொடர்புடைய அவ்வாறான அலுவலர்கள் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக பதவிப் பெயரில் நியமனம் செய்வதற்காக, தேவையான விபரங்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு அவர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இவ்வாறான அலுவலர்களை அனைத்து மாவட்டங்களுக்கும் பணிக்காக அழைப்பதற்கு முடிந்தமை தேர்தல்கள் திணைக்களத்திற்குப் போன்றே மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் பேருதவியாக விளங்கியது. மேலும் இவ்வாறான தேர்தல் பூர்வாங்க ஒழுங்கமைப்புக்களுக்காக தேர்தல் திணைக்களத்தின் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்குப் பொறுப்பாக அலுவல்களை மேற்கொண்டு பின்னர், திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற பதவிநிலை அலுவலர்களின் சேவையையும் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியம் கிடைக்கப்பெற்றது. இம்முறை தேர்தல் ஒழுங்கமைப்பு அலுவல்களுக்காக மேற்குறித்த இரண்டு முறைகளிலும் அலுவலர்களின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது.

24. தேர்தலின் ஆரம்ப சந்தர்ப்பத்திலிருந்தே தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவித்தல் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தேர்தலுக்குத் தேவையான எழுத்தாவணங்கள், படிவங்கள் அச்சிடப்பட்ட அறிவுறுத்தல்கள் என்பவற்றை உரிய நேரத்தில் அச்சிடுவதற்காக தேவையான பூர்வாங்க அலுவல்களை ஒழுங்கு செய்வதற்கும் குறிப்பாக வேட்புமனு கையேற்றல் காலத்தின் பின்னர் அச்சிடப்பட வேண்டிய வெவ்வேறு அறிவித்தல்கள் வாக்குச் சீட்டுக்கள் போன்றவற்றை அச்சிடுவதற்கான அலுவல்களை ஒழுங்கு செய்வதற்கும் அவசியமென்பதால், இவ்விடயங்கள் தொடர்பான பூர்வாங்க ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டுமென்பதால், இவ்விடயங்கள் தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல்கள் ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னரும் அரசாங்க அச்சக அழுத்தகரோடு தேர்தல்கள் ஆணையாளரால் நடாத்தப்பட்டது. இத்தேர்தல் தொடர்பான அச்சிடல் அலுவல்கள் தேவையான நிதி ஒதுக்கீடு தொடர்பான மதிப்பீடு சமர்ப்பிப்பதற்கும் தேர்தல்கள் ஆணையாளரினால் அரசாங்க அச்சக அழுத்தகருக்கு ஒவ்வொரு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னரும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

25. வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து மாவட்ட செயலகம், வேட்புமனுக்களைக் கையேற்றல் மற்றும் வேட்புமனுக்களுக்கான வைப்புப் பணத் தொகையை கையேற்றல் நிலையங்களாக செயற்படுகின்றமையினால் அந்நிலையங்களுக்குத் தேவையான பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. அது தொடர்பாக பிரதேச மட்டத்தில் சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்காக தேர்தல்கள் ஆணையாளர் பூர்வாங்க கலந்துரையாடல்களை, பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் (தேர்தல் மற்றும் நிருவாகம்) ஆகியோரோடு நடாத்தி எஞ்சிய தேர்தல் அலுவல்களுக்காக பொலிஸ் திணைக்களத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டையும் பொலிஸ்மா அதிபருக்கு வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

26. அஞ்சல் வாக்களிப்புக்கான கோரிக்கைகளுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் காலம் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து அஞ்சல் வாக்கு அலுவல்கள் உள்ளிட்ட தேர்தல்களுக்கு உரியதாக அஞ்சல் திணைக்களத்திற்குக் கையளிக்கப்படும் கடமைகளை தெளிவுபடுத்துவதற்கும் அதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் அவ் அலுவல்களுக்காக தேவைப்படும் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கும் தேர்தல்கள் ஆணையாளர் அஞ்சல் மா அதிபருடன் கலந்துரையாடினார். இங்கு குறித்த பணிகளுக்காக அஞ்சல் திணைக்களத்தின் அலுவல்களை ஒழுங்கு செய்வதற்குத் தேர்தல்கள் ஆணையாளரால் அஞ்சல் மா அதிபருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

27. தேர்தலோடு தொடர்புடைய பூர்வாங்க பணிகளை ஒழுங்கு செய்வதற்குத் தேவையான வழிகாட்டல்கள், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் மற்றும் மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் அவர்களை அவ்வப்போது கூட்டங்களுக்கு அழைத்து அறிவுறுத்தல்களை வழங்குவதற்குத் தேர்தல்கள் ஆணையாளர் நடவடிக்கையெடுத்தார்.

தேர்தலுக்கான செல்லுபடியான தேருநர் இடாப்பு

28. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் மாகாண சபையொன்றுக்கான தேர்தலுக்கான வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்தில் நடைமுறையில் காணப்பட்ட தேருநர் இடாப்பு தேர்தலுக்காக பயன்படுத்த வேண்டிய தேருநர் இடாப்பென அச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தேருநர் இடாப்புக்கமைய தேர்தலொன்றின் போது எவரேனுமொருவர் வாக்களிப்பதற்கு உரித்துப் பெறுகின்றாரா? இல்லையா? என்பது தீர்மானிக்கப்படும். கிழக்கு, வடமத்திய மற்றும் சப்பிரகமுவ ஆகிய மாகாண சபை தேர்தலுக்காக வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட 2012.06.08 ஆம் திகதியன்று செல்லுபடியான தேருநர் இடாப்பாக 2011 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு காணப்பட்டது. அத்தேருநர் இடாப்புக்கமைய கிழக்கு மாகாணத்தில் 1,033,749 வாக்காளர்களும், வடமத்திய மாகாணத்தில் 900,873 வாக்காளர்களும், சப்ரகமுவ மாகாணத்தில் 1,401,794 வாக்காளர்களும்

பதிவு செய்யப்பட்டிருந்தனர். மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தலுக்காக 2013.07.11 ஆம் திகதி வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட போது 2012 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு செல்லுபடியான தேருநர் இடாப்பாகக் காணப்பட்டது. அத்தேருநர் இடாப்புக்கமைய மத்திய மாகாணத்தில் 1,889,602 வாக்காளர்களும் வடமாகாணத்தில் 719,477 வாக்காளர்களும் வடமேல் மாகாணத்தில் 1,754,218 வாக்காளர்களும் பதிவு செய்யப்பட்டிருந்தனர். வட மாகாணத்துக்காக தயாரிக்கப்பட்ட குறைநிரப்பி தேருநர் இடாப்பில் 4989 மேலதிக வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்காக 2014.01.16 ஆம் திகதியும் ஊவா மாகாண சபைக்காக 2014.07.16 ஆம் திகதியும் வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தின் போது, அம்மாகாணங்களின் தேர்தலுக்காக 2013 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு செல்லுபடியானதாகக் காணப்பட்டது. அத்தேருநர் இடாப்புக்கமைய மேல் மாகாணத்தில் 4,024,624 வாக்காளர்களும், தென் மாகாணத்தில் 1,873,804 வாக்காளர்களும், ஊவா மாகாணத்தில் 942,734 வாக்காளர்களும் பதிவு செய்யப்பட்டிருந்தனர். நிருவாக மாவட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை, வாக்கெடுப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை போன்ற தகவல்கள் மூன்றாம் இலக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

வட மாகாணத்திற்கான குறைநிரப்பு தேருநர் இடாப்பொன்றைத் தயார் செய்தல்

29. வட மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலுக்காக 2012 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு பயன்படுத்தப்படவிருந்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற பயங்கரவாத செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்தமை காரணமாக 2012 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள முடியாமற்போன வாக்குரிமை உரித்துடைய தரப்பினருக்கு, அதற்கான வசதிகளை வழங்க 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தேருநர் பதிவு (விஷேட ஏற்பாடுகள்) சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் 2013 யூன் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒன்றாகும். அரச இராணுவம் LTTE அமைப்புடன் நடாத்திய ஆயுதப் போர் 2009 ஆம் ஆண்டில் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போதும் அதுவரை 30 வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்று சிவில் நிருவாக அலுவல்கள் பாதிப்புக்குள்ளானமை காரணமாக நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிக பிரதேசங்களில் தேருநர்களை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்கெடுப்பது அசௌகரியமாக அமைந்தது. இதன் காரணமாக அப்பிரதேசங்களில் 18 வயது பூர்த்தியடைந்த தரப்பினருக்கு தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்கான வாய்ப்பு கிட்டவில்லை. யுத்த சூழ்நிலைக் காரணமாக 2009 ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் எந்தவொரு தேர்தல் மாவட்டத்திலும் வாக்காளர்களாகப் பதிவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெறாதவர்களாகிய தேருநராவதற்கு தகைமையுடையவர்களுக்கு இச்சட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்த்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

30. 2012.06.01 ஆம் திகதிக்கு 18 வயது பூர்த்தியடைந்து 2009 ஆம் ஆண்டின் பின்னர், நாட்டின் எந்தவொரு தேருநர் இடாப்பிலும் தமது பெயர்களைப் பதிவு செய்யாதுள்ள, தேருநராவதற்குரிய ஏனைய அனைத்து தகைமைகளையும் உள்ளவர்களை 2013.06.22 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் அவர்கள் வதிந்துள்ள மாவட்டத்தின் பதிவு அலுவலருக்குப் பதிவுக்காக கோரிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. அதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்கள் உரியவர்களால் பெற்றுக் கொள்ளப்படுவதற்காக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் வைக்கப்பட்டன. இடம் பெயர்ந்து உள்ளமையை அத்தாட்சிப் படுத்துவதற்காக வதிவைக் கொண்டிருக்கின்ற கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரின் சான்றிதழொன்றையும் இடம்பெயரும் போது 18 வயதிற்கு மேற்படாதிருந்திருப்பின், தமது பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றையும் சமர்ப்பிக்குமாறு குறித்தவர்களுக்கு உத்தரவிடப்பட்டது. இது தொடர்பாக வாக்காளர்களை அறிவுறுத்துவதற்காக 2013.06.21 ஆம் திகதிய 1815/18 ஆம் இலக்க வர்த்தமானியில் தேர்தல் ஆணையாளரினால் அறிவித்தலொன்று வெளியிடப்பட்டது. பதிவு அலுவலருக்குக் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் பரிசீலித்து பார்க்கப்பட்டதன் பின்னர், தயாரிக்கப்பட்ட தற்காலிக தேருநர் இடாப்பை

2013.06.29 ஆம் திகதி தொடக்கம் 2013.07.05 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் காட்சிப்படுத்துவதற்கும் மேன்முறையீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் மாவட்ட பதிவு அலுவலர்களால் நடவடிக்கையெடுக்கப்பட்டது. அவ்வாறு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் மேன்முறையீடு என்பவற்றின் எண்ணிக்கை, குறைநிரப்பு தேருநர் இடாப்புக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை, ஏற்றுக் கொள்ளப்படாத விண்ணப்பங்கள் மற்றும் மேன்முறையீடுகளின் எண்ணிக்கை என்பன கீழே காட்டப்பட்டுள்ளது.

நிருவாக மாவட்டம் (1)	கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் மேன்முறையீடுகளின் எண்ணிக்கை (2)	அங்கீகரிக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை (3)	அங்கீகரிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் மேன்முறையீடுகளின் எண்ணிக்கை (4)
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி	170	121	49
மன்னார்	7,041	3,317	3,724
வவுனியா	1,126	1,277	849
முல்லைத்தீவு	1,906	274	632
மொத்தம்	10,243	4,989	5,254

31. மேலே அட்டவணையின் 02 ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எண்ணிக்கைக்கு மேலதிகமாக மேலும் 1412 நபர்களின் கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு குறித்த மாவட்டங்களின் பதிவு அலுவலருக்கு முடியவில்லை. அவற்றில் 67 பேர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை கோரிக்கைகளை சமர்ப்பித்திருந்ததோடு, மேலும் 11,345 பேர் ஏற்கனவே 2012 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் தேருநர்களாகப் பதிவு செய்யப்பட்டவர்கள் என்பதால் இக்கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்படவில்லை. இக்குறைநிரப்பு தேருநர் இடாப்புப் பிரதிகள் இறுவட்டுக்களில் தயாரிக்கப்பட்டு 1500.00 ரூபா விலைக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

32. தேர்தலோடு தொடர்புடையதாக 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் தேர்தல்கள் ஆணையாளரினால் வர்த்ததமானியில் வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தில் நடைமுறையில் காணப்பட்ட தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த வாக்காளர்களின் பெயர்களின் எண்ணிக்கை மற்றும் தேர்தலுக்குரியதாக விற்பனை செய்யப்பட்ட தேருநர் இடாப்புப் பிரதிகளின் எண்ணிக்கை என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

மாகாணம்	நிருவாக மாவட்டம்	தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பின் வருடம்	பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை	இறுவட்டுக்களாக தயாரிக்கப்பட்ட தேருநர் இடாப்பொன்றின் விலை ரூபா.	கட்சி குழு கொள்வனவு செய்த கட்சி அல்லது குழு கொள்வனவு செய்த இறுவெட்டுக்களின் எண்ணிக்கைகூ	கிடைக்கப்பெற்ற தொகை ரூபா
கிழக்கு	மட்டக்களப்பு	2011	347,099	3,000.00	18	54,000.00
	அம்பாறை		441,287	5,000.00	8	40,000.00
	திருகோணமலை		245,363	3,000.00	25	75,000.00
வடக்கு மத்திய	அநுராதபுரம்	2011	606,508	7,500.00	5	37,500.00
	பொலன்னறுவை		294,365	3,000.00	8	24,000.00
சப்பிரகமுவ	இரத்தினபுரி	2011	769,813	7,500.00	5	37,500.00
	கேகாலை		631,981	8,000.00	7	56,000.00
மத்திய	கண்டி	2012	1,015,315	15,000.00	4	22,000.00
	மாத்தளை		366,549	5,000.00	6	25,000.00
	நுவரெலியா		507,693	7,500.00	9	48,500.00
வடக்கு	யாழ்ப்பாணம்	2012	426,813	10,000.00	4	31,000.00
	கிளிநொச்சி		68,600	2,000.00	5	10,000.00
	மன்னார்		75,737	2,000.00	5	10,000.00
	வவுனியா		94,644	2,000.00	11	22,000.00
	முல்லைத்தீவு		53,683	2,000.00	11	22,000.00
வடமேல்	குருநாகல்	2012	1,227,810	15,000.00	36	101,000.00
	புத்தளம்		526,408	22,000.00	14	73,500.00
மேல்	கொழும்பு	2013	1,552,734	15,000.00	23	249,000.00
	கம்பஹா		1,590,076	15,000.00	04	25,500.00
	களுத்துறை		881,814	10,000.00	09	48,000.00
தெற்கு	காலி	2013	809,822	10,000.00	03	14,000.00
	மாத்தறை		608,524	7,500.00	02	9,500.00
	அம்பாந்தோட்டை		455,398	7,500.00	07	3,000.00
ஊவா	பதுளை	2013	609,966	10,000.00	07	46,000.00
	மொணராகலை		332,764	5,000.00	04	20,000.00

*குறிப்பு : தேருநர் இடாப்புக்கள் வாக்கெடுப்புப் பிரிவுக்கமைய கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

33. தேருநர் இடாப்புக்கள் புத்தகங்களாக மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையொன்று தயாரிக்கப்பட்டதோடு, இம்முறை தேர்தலின் போது அரசியல் கட்சிகளுக்குத் தேவையான தேருநர் இடாப்புக்களை இறுவட்டுக்களாகத் தயாரித்து விற்பனை செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

வாக்கெடுப்பு நிலையங்கள்

34. 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தில் 4(1) பிரிவுக்கமைய 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க

தேருநர்களைப் பதிதல் சட்டத்தின் கீழ் தற்போது செயல்வலுவில் காணப்படுகின்ற ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டமும் இச்சட்டத்தில் பணிகளுக்கு செல்லுபடியானதாகும். வாக்காளர்களைப் பதிதல் சட்டத்தின் 9(2) பிரிவுக்கமைய வாக்கெடுப்பு மாவட்டங்களை தாபிக்கும் போது மற்றும் அவற்றை மீள வேறுபிரிக்கும் போதும் ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்திற்கும் 1500 வாக்காளர்களுக்கு மேற்படாதவாறு வாக்கெடுப்பு மாவட்டங்களைத் தாபித்தல் வேண்டும். இவ்வாறு தாபிக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை, கிழக்கு மாகாணத்தில் 1163, வடமத்திய மாகாணத்தில் 895, சப்பிரமுவ மாகாணத்தில் 1185 ஆகக் காணப்பட்டது. மத்திய மாகாணத்தில் 1571, வட மாகாணத்தில் 832, மேல் மாகாணத்தில் 1309 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன. இவ்வெண்ணிக்கை மேல் மாகாணத்தின் 2689 மற்றும் தென்மாகாணத்தில் 1564 ஆகும். ஊவா மாகாணத்தில் தாபிக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை 834 ஆகும். இது தொடர்பான விபரங்கள் குறிப்பு 03ல் காட்டப்பட்டுள்ளன.

35. வாக்கெடுப்பு மாவட்டங்களை வேறு பிரிக்கும் போது பிரதேசத்தின் அமைவிடம் மற்றும் பூகோள வேறுபாடு, வாக்காளர் வதிந்துள்ள பிரதேசம் மற்றும் பிரதேசத்தினுள் உள்ள பயணப் பாதைகளின் அமைவிடம் போன்ற விடயங்களையும் கருத்தில் கொள்ளல் வேண்டும். வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்திற்கு பயணிக்க வேண்டிய தூரத்தை முடிந்தளவு குறைக்கக் கூடியவாறு பொருத்தமான கட்டிடங்களில் வாக்கெடுப்பு நிலையங்கள் அமையப் பெறல் வேண்டும். எவ்வாறாயினும், வாக்கெடுப்புப் மாவட்டங்களை அமைக்கும் போதும் வாக்கெடுப்பு நிலையங்களைத் தேர்ந்தெடுக்கும் போதும் வாக்கெடுப்பு மாவட்டத்தில் வதிந்துள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் அனைத்து விதங்களிலும் இலகுவான வாக்கெடுப்பு நிலையங்களை தேர்ந்தெடுத்துக் கொள்வது அசௌகரியமாகும். அதேபோன்று பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 1500 மேற்பட்ட ஏதேனும் வாக்கெடுப்புப் மாவட்டத்திற்கும் வாக்கெடுப்பு நிலையமொன்று வீதம் தாபிப்பதற்கும் நேரிட்டது. இத்தேர்தலின் போது தாபிக்கப்பட்ட மொத்த வாக்கெடுப்பு நிலையங்கள், பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கைக்கமைய வகையீடு செய்யப்பட்டு 12 மற்றும் 12-I ஆம் இலக்க குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ளது. வாக்கெடுப்புப் பிரிவொன்றில் வாக்காளர்களின் எண்ணிக்கை 1500 என்ற எல்லைக்குள் அலுவல்களை மேற்கொள்வது அசௌகரிமான சந்தர்ப்பங்களின் போது மாற்று நிலையங்களுக்காக பொருத்தமான இடங்கள் குறித்த சட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். வாக்கெடுப்புப் பிரிவினுள் வாக்கெடுப்பு நிலையங்களுக்காக பொருத்தமான நிலையான கட்டிடமொன்று இல்லாத போது தற்காலிக கொட்டில்களையும் வாக்கெடுப்பு நிலையமொன்றாகப் பயன்படுத்த முடியும். வாக்கெடுப்புப் மாவட்டமொன்றின் வாக்காளர்களின் எண்ணிக்கை மிக உயர்ந்த மட்டமொன்றில் காணப்படுமாயின், அது வாக்கெடுப்புக்கு தடையொன்றாக அமையாதிருப்பதற்காக வாக்காளர்களுக்காக வாக்கெடுப்பு நிலையத்தின் வரிசைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் தேர்தல் சந்தர்ப்பங்களின் போது நடவடிக்கையெடுக்கப்படும். அதற்கு மேலதிகமாக பெண் வாக்காளர்களுக்காக தனியான விஷேட வாக்கெடுப்பு நிலையங்களைத் தாபிப்பதற்கும் அனைத்து தேர்தல் சட்டங்களிலும் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வசதி மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 22(1)(இ) பிரிவின் மூலம் மாகாண சபைத் தேர்தல்களுக்காகச் செய்யப்பட்டுள்ளது. மேலும் விஷேட தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு வாக்கெடுப்பு மாவட்டமொன்று தாபிக்கப்பட்ட போதிலும் வாக்கெடுப்பு நிலையமொன்றை தாபிப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலருக்கு மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 22(4) ஆம் பிரிவின் கீழ் சாத்தியம் காணப்படுகின்றது.

36. 2012 ஆம் ஆண்டிலிருந்து தேர்தல்கள் திணைக்களத்தினால் நாட்டின் அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்குமுரிய தேருநர் இடாப்பு கணினி மயப்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்தமையால், இத்தேர்தலுக்காகப் பொதுவான விதத்தில் புத்தகங்களாகத் தயாரிக்கப்படுகின்ற தேருநர் இடாப்புப் பிரதிகளின் எண்ணிக்கை பெரும் எண்ணிக்கையில் குறைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக தேருநர் இடாப்புக்களின் பிரதிகளையெடுப்பதற்கான செலவுகள் வெகுவாகக் குறைவடைந்து காணப்பட்டன. அதற்கமைய தயாரிக்கப்பட்ட குறிப்பிட்டளவு தேருநர் இடாப்புக்களின் எண்ணிக்கையை இத்தேர்தலின் போது வாக்கெடுப்பு நிலையங்களில் பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. தேர்தலுக்குத் தேவையான ஆகக்குறைந்த தேருநர்

இடாப்பு பிரதிகளை மாத்திரம் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வழங்கி அதிலிருந்து கூடிய பயனைப் பெற்றுக் கொள்வதற்கும் இதுவரை காலமும் காணப்பட்ட ஆண்/ பெண் என்ற வாக்கெடுப்பு நிலைய வேறுபிரித்தலுக்குப் பதிலாக தேருநர் இடாப்பின் தொடர் இலக்க ஒழுங்குக்கமைய வரிசைகளை வேறு பிரிப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. இதன் காரணமாக வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்ற தேருநர் இடாப்புக்களை வரிசைகளுக்கு அமைவாக தனித்தனியாகத் தயாரித்து அனுப்பி வைப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

37. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ள தேர்தல் தொடர்பான அறிவித்தல், நிருவாக மாவட்டத்தின் ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவுக்குமான வாக்கெடுப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களின் அமைவிடம் என்பவற்றைக் காட்டுகின்ற விபரங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். வேட்புமனுக் கையேற்றல் காலப்பகுதியின் பின்னர், தாமதமின்றி வெளியிடப்பட வேண்டிய இவ்வறிவித்தலுக்கு தேவையான வாக்கெடுப்பு நிலையங்களின் விபரங்கள் நன்றாக ஆராய்ந்து பார்க்கப்பட்டு முன்கூட்டியே அவற்றை தயார் செய்து கொள்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இவ் வாக்கெடுப்பு நிலைய பெயர்ப்பட்டியலை வெளியிடுவதற்கு முன்னர் அவற்றை தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கட்டிடங்களைப் பரீட்சித்துப் பார்த்து வாக்கெடுப்பை நடாத்துவதற்கு பொருத்தமானதாவென்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்பதோடு, அவற்றை உரிய அலுவலர்களைக் கொண்டு தேர்தல்களுக்காக ஒழுங்கு செய்வதும் தெரிவத்தாட்சி அலுவலர்களின் பொறுப்பாகும்.

38. வாக்கெடுப்பு நிலையங்களை ஒழுங்கு செய்வதற்கு பிரதானமாக பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் கிராம அலுவலர்களின் உதவி பெற்றுக் கொள்ளப்படும். வாக்கெடுப்பு நிலையங்களைத் தயார் செய்து கொள்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் தேர்தல்கள் ஆணையாளரின் வழிகாட்டலுக்கமைய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் குறித்த அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

39. அனைத்து மாகாண சபைகளுக்காகவும் தாபிக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களுக்காக பயன்படுத்தப்பட்ட கட்டிடங்களை வகைப்படுத்தி அது தொடர்பான விபரங்கள் 13 ஆம் இலக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. இத்தேர்தல் நடாத்தப்படவிருந்த தினம் சனிக்கிழமை தினமொன்றென்பதால், அதற்கு முந்திய தினம் வெள்ளிக் கிழமை தினத்தன்று அக்கட்டிடங்களை தேர்தல் அலுவல்களுக்காக கையேற்றுக் கொள்வதற்கும் அவ்விடங்களை ஒழுங்கு செய்வதற்கும் குறித்த பாடசாலை கட்டிடங்களின் பொறுப்பு அதிபர்களின் ஒத்துழைப்பு முன்கூட்டியே பெற்றுக் கொள்ள வேண்டிய முறை தொடர்பில் கிராம அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

40. வாக்கெடுப்புக்கு முந்திய தினம் இரவு பணியாட் குழுவின் அங்கத்தவர்கள் (பெண் அலுவலர்கள் தவிர்ந்த) அனைவரும் வாக்கெடுப்பு நிலையத்தில் தங்கியிருத்தல் வேண்டும். அன்றைய தினம் பணியாட் குழுவினருக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் தங்குவதற்கு ஏற்றவாறு அவ்விடங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினம் பிற்பகலிருந்து வாக்கெடுப்புத் தினம் அலுவல்கள் நிறைவடைந்து பணியாட் குழுவினர் வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் வரையான காலப்பகுதியினுள் அவ்வலுவலர்களுக்குத் தேவையான உணவு மற்றும் பானங்களை வழங்குதல் தொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் விநியோகிக்கப்பட்டதோடு, குறித்த அலுவல்கள் கிராம அலுவலர்களினால் ஆற்றப்பட்டன. இது தொடர்பில் பிரச்சினை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது வாக்கெடுப்பு நிலையம் அமையப் பெற்றுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளின் பிரதேச செயலாளர்களின் உதவி அவ்வலுவலர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

41. வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழுவினருக்கு உணவு மற்றும் பானங்களை விநியோகிக்கும் போது நியாயமான விலையில் சுத்தமான உணவுகளை வழங்குவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் அதற்காக பணியாட் குழுவினர்களிடமிருந்து அறிவிடக்கூடிய தொகை தொடர்பில் அந்தந்த மாவட்டங்களில் நிலவும் நிலைமைகளுக்கமைய பொதுவான வழிமுறையொன்றைப் பின்பற்றுவதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஊடாக குறித்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

42. வாக்கெடுப்பு அலுவல்களின் நிறைவில் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலர்களுக்கு மிக நீண்ட தூரத்தில் அமையப்பெற்றுள்ள வாக்கெடுப்பு நிலையங்களிலிருந்து சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய வாக்குப் பெட்டி மற்றும் ஏனைய பொருட்களுடன் பிரயாணம் செய்ய நேரிடுமாயின், அவ்வாறான வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழுவினர் மற்றும் அவற்றின் பொருட்களை போக்குவரத்து செய்வதற்காக விஷேட பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு சிரேட்ட பொலிஸ் அலுவலர்களின் உதவியோடு, தெரிவத்தாட்சி அலுவலர்களால் நடவடிக்கையெடுக்கப்பட்டிருந்தது.

43. அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களதும் பாதுகாப்புக்காக இரண்டு பொலிஸ் அலுவலர்களையேனும் ஈடுபடுத்துவதற்குத் தேவையான அறிவுறுத்தல் பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருந்ததோடு, சில அரசியல் கட்சிகளினால் விஷேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பாகவும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 125அ பிரிவுக்கமைய வேறு வாக்கெடுப்பு நிலையங்களில் வசதி செய்து கொடுத்தல்.

44. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 30 வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்று இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக அக்காலப்பகுதியினுள் அம்மாகாணங்களில் சிவில் நிருவாக அலுவல்களும் மற்றும் சாதாரண மக்கள் வாழ்க்கையும் தடைப்பட்டன. அரச இராணுவம் 2009 ஆம் ஆண்டில் அப்பிரதேசங்களில் பயங்கரவாத யுத்தத்தை ஒழித்த போதும் அப்பிரதேசங்களில் சிவில் நிருவாகத்தை உறுதி செய்வதற்கும் இடம்பெயர்ந்த நபர்களை மீண்டும் அவர்களின் ஆரம்ப கிராமங்களில் வதியச் செய்வதற்கும் நீண்ட காலமெடுத்தது. தமது ஆரம்ப வதிவிடங்களில் பல்வேறு காரணங்களால் வதிவதற்குச் செல்லாத தரப்பினர் தற்காலிகமாக வேறு இடங்களில் தற்போது வதிந்து வருகின்றனர். சிவில் நிருவாகம் வீழ்ச்சியடைந்திருந்த பிரதேசங்களில் நிலக் கண்ணி வெடிகள் அகற்றப்படுதல் நிறைவடையாமை காரணமாகவும் காணப்பட்ட பாதுகாப்பற்ற நிலைமைகளாலும் மேலும் வேறு விஷேட காரணங்களின் அடிப்படையிலும் இவ்வாறான இடம்பெயர்ந்த வாக்காளர்களின் பெயர்களை அவர்களின் ஆரம்ப வதிவிடத்தின் கீழ் தேருநர் இடாப்புக்களில் முன்னர் பதிவு செய்யப்பட்டிருந்த விதத்தில் மீளாய்வு செய்யப்படுகின்ற தேருநர் இடாப்புக்களில் உட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான நிலைமைகள் காரணமாக தமது ஆரம்ப வதிவு பிரதேசங்களுக்கு வெளியில் தற்காலிகமாக வதிந்திருப்பதற்கு நேரிட்ட வாக்காளர்களுக்கும் தமது வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாது போகுமென்ற நியாயமான அச்சமொன்றைக் கொண்டுள்ள வாக்காளர்களுக்கும் தமது விருப்பத்தின் அடிப்படையில் தனது தற்காலிக வதிவுப் பிரதேசத்தின் வேறு வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்காக வடமாகாணத்தில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலின் போது தேவையான வசதிகள் மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 125அ பிரிவின் கீழ் செய்து கொடுக்கப்பட்டது.

45. வட மாகாணத்தில் இவ்வாறான வாக்காளர்களின் விண்ணப்பங்கள் 2013.07.11 ஆம் திகதி தொடக்கம் 2013.08.12 ஆம் திகதி வரை தேர்தல்கள் ஆணையாளரால் கையேற்கப்பட்டதோடு, அது தொடர்பாக குறித்த பிரதேசங்களின் வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. குறித்த மாவட்டங்களுக்கமைய கிடைக்கப்பெற்ற மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளன.

மாவட்டம்	2012 தேருநர் இடாப்பில் பதிவு மாவட்டத்திற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை	இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வதிந்துள்ள மாவட்டத்திற்கமைய ஏற்றுக் கொள்ளப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை		
		புத்தளம்	அநுராதபுரம்	யாழ்ப்பாணம்
மன்னார்	11221	10949	272	-
வவுனியா	802	-	799	03
முல்லைத்தீவு	1250	1250	-	-
மொத்தம்	13273	12199	1071	03

46. இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்காக புத்தளம், அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வாக்கெடுப்பு

நிலையங்கள் தாபிக்கப்பட்டன. இவ்வாறான 19 வாக்கெடுப்பு நிலையங்கள் புத்தளம் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டிருந்ததோடு, அதில் 17 நிலையங்கள் மன்னார் மாவட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த 10,949 வாக்காளர்களுக்காகவாகும். புத்தளம் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டிருந்த இரண்டு வாக்கெடுப்பு நிலையங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் 1250 வாக்காளர்களுக்காக குறித்தொதுக்கப்பட்டிருந்தது. அநுராதபுரம் மாவட்டத்தினுள் இவ்வாக்காளர்களுக்காக தாபிக்கப்பட்ட இரண்டு வாக்கெடுப்பு நிலையங்களில் ஒன்று வவுனியா மாவட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த 799 வாக்காளர்களுக்காகவும் மற்றைய வாக்கெடுப்பு நிலையம் மன்னார் மாவட்டத்தின் 272 வாக்காளர்களுக்காகவும் தாபிக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தாபிக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையம் வவுனியா மாவட்டத்தின் மூன்று வாக்காளர்களுக்காக தாபிக்கப்பட்டது.

47. இதற்கு மேலதிகமாக சிவில் அமைப்புக்கள் அரசியல் கட்சிகள் வட மாகாணத்தின் மாவட்டங்களில் பல நலனோம்பல் முகாம்களிலும் மற்றும் சில கிராமங்களிலிருந்து தூர பிரதேசங்களில் அமையப் பெற்றுள்ள வாக்கெடுப்பு நிலையங்களுக்கு பயணிப்பதில் வாக்காளருக்குள்ள அசௌகரியங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்தமையால், அது தொடர்பான பொதுப் போக்குவரத்து வசதிகளை முறையாக மேற்கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு வட மாகாணத்தின் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு 2013.08.24 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

48. இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதற்காக அவர்களின் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தல் மற்றும் அவற்றை கிராம அலுவலர்களைக் கொண்டு பரிந்துரைத்தல் போன்றே உரிய வாக்காளர்கள் வதிந்துள்ள பிரதேசங்களில் அந்நபர்களுக்கு விண்ணப்பங்களைப் பகிர்ந்தளித்தல் போன்ற அலுவல்களுக்கு சில அரசியல் கட்சிகள் ஆர்வம் காட்டியமை தெளிவான ஒரு விடயமாகும். இவ்வாறு தேர்தல்களில் போட்டியிடுகின்ற பிரிவுகள் ஆர்வத்தோடு இப்பணிகளை மேற்கொள்கின்ற போது விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பும் போது சில தவறான செயற்பாடுகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிந்தது.

49. இவ் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய நபர்களின் ஆளடையாளம் மற்றும் அவர்கள் இடம்பெயர்வதற்கான காரணங்களை உறுதி செய்து கொள்ளும் பொறுப்பு கிராம அலுவலர்களுக்குக் கையளிக்கப்பட்டது. அதே போன்று விண்ணப்பதாரிகளால் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின் பிழையற்ற தன்மையை உறுதி செய்து கொள்வதும் அவ் அலுவலர்களின் கடமையொன்றாகக் காணப்பட்டது. தேருநர் இடாப்பில் விபரங்களை பரீட்சித்துப் பார்த்து விண்ணப்பதாரிகளுக்காக வேறு நபர்களினால் விண்ணப்பங்களை பூரணப்படுத்தல், விண்ணப்பதாரிகளின் விபரங்களை ஆராய்ந்து பார்க்காது பெரும்பாலான கிராம அலுவலர்கள் விண்ணப்பங்களை பரிந்துரைத்தமை காரணமாக அவற்றோடு தொடர்புடைய பல்வேறுபட்ட தவறுகள் விண்ணப்பங்களை பரீட்சிக்கும் போது தெரிய வந்தன. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரிகளால் கையெழுத்திடப்படாத சந்தர்ப்பங்கள் மற்றும் அவர்களின் வதிவு தொடர்பான விபரங்கள் பிழையாகக் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. விண்ணப்பதாரிகளால் கையெழுத்திடப்படாத 150 மேற்பட்ட விண்ணபப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்தன. சில விண்ணப்பதாரிகளுக்காக பல விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இம்முறை மாகாண சபைத் தேர்தலின் போது அஞ்சல் வாக்காளர்களாக அங்கீகரிக்கப்பட்டிருந்த அரச அலுவலர்களுக்காகவும் இவ்வாறான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பமாகக் காணப்பட்டது. அவ்வாறான 164 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக மரணமடைந்திருந்த 34 நபர்களுக்காகவும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. சில விண்ணப்பதாரிகளுக்கு இவ் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரித்து கூட காணப்படவில்லை. இதன் காரணமாக குறித்த வசதிகளை பெற்றுக் கொள்ள வேண்டிய உரிய விணப்பதாரிகளின் தகைமைகளைப் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் விண்ணப்பங்களின் பிழையற்ற தன்மையை பரீட்சித்துப் பார்த்தல் என்பவற்றுக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு நேரிட்டது. இவ்வசதிகளுக்கு உரித்துடைய வாக்காளர்களின் வாக்கினை பெற்றுக் கொள்வதற்கு ஆர்வம் காட்டிய அரசியல் பிரிவுகளுக்குரிய இந் நபர்களின்

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் நடைமுறைக்கு தலையிட்ட காரணத்தால் மேற்குறித்தவாறான குறைபாடுகள் பாரியளவில் இடம்பெறுகின்றதென குறிப்பிட முடியும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள்

50. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 08 ஆம் பிரிவுக்கமைய 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சிகளும் மாகாண சபைத் தேர்தல் அலுவல்களுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக கருத்தில் கொள்ளப்படும். இத் தேர்தலுடன் தொடர்புடைய மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் தேர்தல்கள் ஆணையாளரால் பிரகடனப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 64 ஆகும்.

51. அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியல் கட்சியொன்றின் உரிமை தொடர்பில் எதிர் குழுவொன்று உரித்து கோரியமை காரணமாக தேர்தல் சந்தர்ப்பமொன்றின் போது சிரமங்கள் ஏற்பட்டுள்ளனவென தேர்தல்கள் ஆணையாளர் நம்புவராயின், அச்சிரமங்களை போக்குவதற்கு அவ்வாறான கட்சிகள் தொடர்பான அவதானிப்பொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு அவருக்கு நேரிடும். குறித்த தரப்புக்கள் முன்வைக்கின்ற விடயங்களை ஆராய்ந்து வேட்புமனு காலப்பகுதி கடப்பதற்கு முன்னர் அவ்வாறான அரசியல் கட்சி சார்பாக உரித்துக் கோரிய ஏதேனும் குழுவொன்று அக்கட்சியாக ஏற்றுக் கொள்ளப்படுமாவென்பதை தேர்தல்கள் ஆணையாளருக்குத் தீர்மானிக்க முடியும். அதேபோன்று அவ்வெந்தவொரு குழுவையும் குறித்த கட்சியாக அடிப்படையில் அத்தேர்தலுக்குரியதாக ஏற்றுக் கொள்ளாதிருப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு தீர்மானம் எடுக்க முடியும்.

52. 2012 தொடக்கம் 2014 வரையில் நடாத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல் 4 சந்தர்ப்பங்களில் நடாத்தப்பட்டதோடு, அந்தந்த மாகாண சபைத் தேர்தல்கள் சந்தர்ப்பங்களின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த அரசியல் கட்சிகளின் பெயர்கள் உப அட்டவணையில் 13, 14., 15, 16 மற்றும் 17 என்ற வகையில் இவ் உப அட்டவணையில் உட்சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வனைத்து தேருநர் இடாப்புக்களிலும் அங்கீகரிக்கப்பட்டிருந்த அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 64 என குறிப்பிடப்பட்டுள்ள போதும் அவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகள் ஒரு சிலவற்றின் பெயர்களில் சில வேறுபாடுகளைக் காணமுடியும்.

III ஆம் பகுதி

வேட்புமனுக் கையேற்றல்

53. மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவுக்கமைய மாகாண சபையொன்று கலைக்கப்பட்ட பின்னர், ஒரு வார காலத்தினுள் அச்சபைக்கான தேர்தலை நடாத்துவதற்கான தமது விருப்பம் தொடர்பான அறிவித்தலொன்று தேர்தல்கள் ஆணையாளரால் வெளியிடப்படல் வேண்டும். அம்மாகாணத்தின் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் தெரிவத்தாட்சி அலுவலரினால் வேட்புமனு கையேற்கப்படுகின்ற இடம் மற்றும் நேரம், வேட்புமனு படிவத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை, வேட்புமனு சார்பில் கட்டுப்பணம் வைப்புச் செய்யக் கூடிய முறை என்பன அவ்வறிவித்தலில் குறிப்பிடப்படுதல் வேண்டும். சட்டத்தின் 10(2) ஆம் பிரிவுக்கமைய வேட்புமனுக் காலப்பகுதி மேற்குறித்த விதத்திலான அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்தின் பின்னர் வருகின்ற 14 ஆம் தினத்தில் ஆரம்பமாகி 21 ஆம் தினம் நண்பகல் 12.00 மணிக்கு முடிவுறுதல் வேண்டும். மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவுக்கமைய வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட தினம் மற்றும் வேட்புமனுக் கையளிக்கும் இறுதித் தினத்திற்கு முன்னைய தினம் நண்பகல் 12.00 மணி வரையான காலப்பகுதியினுள் சுயேச்சைக் குழுக்களால் ஒவ்வொரு வேட்பாளருக்காகவும் இரண்டாயிரம் ரூபா வீதத்தில் கட்டுப்பணத் தொகையை குறித்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் வைப்புச் செய்தல் வேண்டும்.

54. ஒவ்வொரு மாகாண சபையும் கலைக்கப்பட்ட திகதி, வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி, நிருவாக மாவட்டங்களுக்காக ஒரு கட்சி அல்லது ஒரு சுயேச்சைக் குழு வேட்புமனு செய்ய வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்காகவும் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை, மாவட்டங்களுக்கமைய அங்கீகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத வேட்புமனுக்களின் எண்ணிக்கை, போட்டியிடவுள்ள மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை என்பன கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாகாண சபைக்காகவும் வேட்புமனுக் கோரி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் 9, 10, 11 மற்றும் 12 ஆம் இலக்க உபஅட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளன.

கிழக்கு, வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகள்

I. மாகாண சபைகள் கலைக்கப்பட்ட திகதி - 2012.06.27
II. வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி - 2012.06.28
III. வேட்புமனுக்களைக் கையேற்றல் காலம் - 2012.07.12 - 2012.07.19 வரை
IV. வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட தினம் - 2012.09.08

மாகாணம்	மாகாணத்துக்குரிய நிருவாக மாவட்டங்கள்	கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்களினால் வேட்புமனுவில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை	மாவட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை	அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் கையளிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை	வேட்புமனுக் கையளித்த சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை	நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை (அரசியல் கட்சிகளினால் கையளிப்பட்ட)	நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை (சுயேச்சைக் குழுக்களால் கையளிப்பட்ட)	போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை
கிழக்கு	மட்டக்களப்பு	14	11	13	21	-	-	476
	அம்பாறை	17	14	16	19	-	01	578
	திருகோணமலை	13	10	17	16	01	-	416
மொத்தம்		**44**	**35**	**46**	**56**	**01**	**01**	**1,470**
வடமத்திய	அநுராதபுரம்	24	21	09	05	-	-	336
	பொலன்னறுவை	13	10	09	07	-	-	208
மொத்தம்		**37**	**31**	**18**	**12**			**544**
சப்பிரகமுவ	இரத்தினபுரி	27	24	14	06	01	-	513
	கேகாலை	21	18	13	14	-	01	546
மொத்தம்		**48**	**42**	**27**	**20**	**01**	**01**	**1,059**
முழு மொத்தம்		**129**	**108**	**91**	**88**	**02**	**02**	**3,063**

மத்திய, வடக்கு மற்றும் மேல் மாகாண சபைகள்

I. மத்திய மற்றும் மேல் மாகாண சபைகள் கலைக்கப்பட்ட திகதி - 2013.07.05
(வட மாகாணத்திற்கான மாகாண சபைத் தேர்தல் அரசியல் யாப்பின் 154 அ (2) ஆம் உறுப்புரைக்கமைய சனாதிபதி அவர்களால் வெளியிடப்பட்ட கட்டளையின் அடிப்படையில் நடாத்தப்பட்டது)

II. வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி - 2013.07.11

III. வேட்புமனுக்களைக் கையேற்றல் காலம் - 2013.07.25 - 2013.08.01 வரை

IV. வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட தினம் - 2013.09.21

மாகாணம்	மாகாணத்துக்குரிய நிருவாக மாவட்டங்கள்	கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்களினால் வேட்புமனுவில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை	மாவட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை	அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் கையளிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை	வேட்புமனுக் கையளித்த சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை	நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை (அரசியல் கட்சிகளினால் கையளிப்பட்ட)	நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை (சுயேச்சைக் குழுக்களால் கையளிப்பட்ட)	போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை
மத்திய	கண்டி	32	29	17	08	-	-	800
	மாத்தளை	14	11	13	07	-	-	280
	நுவரெலியா	19	16	14	10	-	01	437
மொத்தம்		**65**	**56**	**44**	**25**		**01**	**1,517**
வடக்கு	யாழ்ப்பாணம்	19	16	13	10	02	01	380
	கிளிநொச்சி	07	04	11	03	-	01	91
	மன்னார்	08	05	12	08	-	-	160
	வவுனியா	09	06	12	08	-	01	171
	முல்லைத்தீவு	08	05	11	02	-	-	104
மொத்தம்		**51**	**36**	**59**	**31**	**02**	**03**	**906**
வடமேல்	குருநாகல்	37	34	15	12	02	-	925
	புத்தளம்	19	16	13	11	01	-	437
மொத்தம்		**56**	**50**	**28**	**23**	**03**		**1,362**
முழு மொத்தம்		**172**	**142**	**131**	**79**	**05**	**04**	**4,785**

மேல் மற்றும் தென் மாகாண சபைகள்

I. மாகாண சபைகள் கலைக்கப்பட்ட திகதி - 2014.01.12

II. வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி - 2014.01.16

III. வேட்புமனுக்களைக் கையேற்றல் காலம் - 2014.01.30 - 2014.02.06 வரை

IV. வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட தினம் - 2014.03.29

மாகாணம்	மாகாணத்துக்குரிய நிருவாக மாவட்டங்கள்	கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்களினால் வேட்புமனுவில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை	மாவட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை	அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் கையளிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை	வேட்புமனுக் கையளித்த சுயேச்சைக் குழுக்களின் எணணிக்கை	நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை (அரசியல் கட்சிகளினால் கையளிப்பட்ட)	நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை (சுயேச்சைக் குழுக்களால் கையளிப்பட்ட)	போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை
மேல்	கொழும்பு	43	40	18	15	-	04	1,247
	கம்பஹா	43	40	13	09	-	-	946
	களுத்துறை	25	22	14	10	01	01	550
மொத்தம்		**111**	**102**	**45**	**34**	**01**	**05**	**2,743**
தெற்கு	காலி	25	22	14	04	-	-	450
	மாத்தறை	20	17	14	05	-	-	380
	அம்பாந்தோட்டை	17	14	09	04	-	-	221
மொத்தம்		**62**	**53**	**37**	**13**	**-**	**-**	**1,051**
முழு மொத்தம்		173	155	82	47	01	05	3ஜ794

ஊவா மாகாண சபை

I. மாகாண சபை கலைக்கப்பட்ட திகதி - 2014.07.11

II. வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி - 2014.07.16

III. வேட்புமனுக்களைக் கையேற்றல் காலம் - 2014.07.30 - 2014.08.06 வரை

IV. வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட தினம் - 2014.09.20

மாகாணம்	மாகாணத்துக்குரிய நிருவாக மாவட்டங்கள்	கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்களினால் வேட்புமனுவில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை	மாவட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை	அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் கையளிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை	வேட்புமனுக் கையளித்த சுயேச்சைக் குழுக்களின் எணணிக்கை	நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை (அரசியல் கட்சிகளினால் கையளிப்பட்ட)	நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை (சுயேச்சைக் குழுக்களால் கையளிப்பட்ட)	போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை
ஊவா	பதுளை	21	18	10	04	-	-	294
	மொணராகலை	17	14	12	07	-	-	323
மொத்தம்		**38**	**32**	**22**	**11**	**-**	**-**	**617**

55. வேட்புமனுக்களைக் கையேற்றல் ஒழுங்கமைப்பு அலுவல்களுக்கு உரியதாக, தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் குறித்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு பாரியளவு அலுவல்களை ஆற்ற வேண்டியிருந்தது. வேட்புமனுக்களை கையளிப்பதற்கு தகைமை உடையவர்களுக்கு தடையின்றி கட்டுப்பணத்தை வைப்புச் செய்வதற்கும் மற்றும் வேட்புமனுக் கையளித்தல் வசதிகளை செய்து கொடுத்தல் தொடர்பாகவும் உரிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கல் அந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக உரிய தரப்பினருக்கும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் அறிவுறுத்துதல் தேர்தல்கள் ஆணையாளரின் ஒரு பொறுப்பாகும். அவ்வலுவல்களை மாவட்ட மட்டத்தில் ஒழுங்கு செய்வதற்காக சிரேட்ட அலுவலர்களை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும் மற்றும் வேட்புமனுக் கையேற்கும் இடங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாகவும் உரிய மாவட்டங்களின் சிரேட்ட பொலிஸ் அலுவலர்களுடன் அலுவல்களை மேற்கொள்வதற்கும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. வேட்புமனுக்களைக் கையேற்றல் மற்றும் தொடர்புடைய அலுவல்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஆற்றிக் கொள்ளக்கூடிய பொருத்தமான சிரேட்ட அலுவலர்கள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு உதவுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டனர். குறிப்பாக வேட்புமனுக் கையேற்கும் இறுதித் தினத்தில் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளுக்கு இடையூறற்ற விதத்தில் அவ்வலுவலர்களின் அலுவலக வளாகத்தில் போன்றே அவ்வலுவலகத்தை சூழவும் அமைதியான சூழலொன்றைப் பேணிச் செல்வது பிரதேச மட்டத்தில் பொலிஸ் அலுவலர்களின் ஒரு பொறுப்பாகும். அப்பணிப் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரதேச மட்டத்தில் சிரேட்ட பொலிஸ் அலுவலர்களை அறிவுறுத்துவதற்காக பொலிஸ் மா அதிபரை தனது அலுவலகத்திற்கு அழைத்து அறிவுறுத்தல் வழங்குவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதேபோன்று தேர்தல் நடாத்தப்படுகின்ற மாவட்டங்களின் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களும் மாவட்ட பிரதி, உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களும் வேட்புமனுக் கையேற்றல் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக மாகாண சபைகளை கலைத்தல் தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டவுடன் அறிவுறுத்தப்பட்டனர்.

56. வேட்புமனுக்கள் தொடர்பாக கட்டுப்பணங்களை வைப்புச் செய்வதற்கு மற்றும் வேட்புமனுக் கையளிப்பதற்காக வருகை தருகின்ற அனைவருக்கும் குறித்த அலுவல்கள் தொடர்பில் அறிவுறுத்துவதற்குத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. வேட்புமனு படிவங்களை பெற்றுக் கொள்வதற்கு வருகை தருகின்ற அனைவருக்கும் வேட்பு மனுக்களைக் கையளிப்பதற்குரிய விடயங்களை எழுத்து மூலம் வழங்குவதற்கும் தெரிவத்தாட்சி அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இச்செயன்முறை காரணமாக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கு இருந்த வாய்ப்புக்களை பெருமளவில் குறைத்துக் கொள்வதற்கான சாத்தியம் கிடைக்கப்பெற்றதென நம்ப முடியும்.

57. வேட்புமனுக் கையேற்றல் காலப்பகுதியினுள் குறித்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் கையேற்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பான விபரம் 4 ஆம் இலக்க குறிப்பில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழ் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர் பட்டியல் 5, 6, 7 மற்றும் 8 ஆம் இலக்க குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ளன.

58. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் குறித்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வேட்புமனுக்களை கையளித்துள்ள காலப்பகுதியை நோக்கும் போது இம்முறை வேட்புமனுக்களைக் கையேற்பதற்காக வழங்கப்பட்டிருந்த ஒரு வார காலத்தினுள் இறுதி இரண்டு தினங்களில் அதிகமான வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்டுள்ளமை தெளிவான ஓர் விடயமாகும் (வேட்புமனு செயன்முறை தொடர்பான விபரங்களுக்கு 18(1) ல் இருந்து 18(9) வரையிலான உப அட்டவணைகளைப் பார்க்கவும்). அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் இருந்து வேட்புமனுக் கோரி முன் வருகின்றவர்கள் அதிகரித்தமை காரணமாக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் போட்டியொன்று காணப்பட்டமை, அவ்வாறான கட்சிகள் மிக உயர் வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்பில் தமது வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு ஆர்வம் காட்டியமை போன்ற விடயங்கள் பிரதான அரசியல் கட்சிகளுக்கு வேட்புமனுக்களை கையளித்தல் தாமதமடைவதற்கு காரணமாக அமைந்திருக்க முடியும். இருப்பினும், ஏனைய கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் வேட்புமனுக் கையளித்தல் தாமதமடைவதற்கு பெரும்பாலும் அவற்றின் திட்டமிடலின்மை போன்ற காரணங்கள் தாக்கம் செலுத்தியிருக்க முடியமெனக் கருதமுடியும். நிருவாக மாவட்டங்களின் கீழ் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை 04 ஆம் இலக்க குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

59. வேட்புமனுக் கையேற்றல் அலுவல்கள் நிறைவடைந்த தினம், அவ்வலுவல்களின் நிறைவில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களுக்கு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களுக்கு வருகை தருகின்ற நபர்களை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரினால் பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

60. வேட்புமனு சமர்ப்பிக்க கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் ஆதரவாளர்கள் அதிக எண்ணிக்கையானோர் வேட்புமனுக் காலப்பகுதியின் இறுதித் தினம், தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்களை சூழ ஒன்று கூடுகின்றமையினால், அதனை சூழவுள்ள பிரதேசங்களை அமைதியான சூழலொன்றைப் பேணிச் செல்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் பொலிஸாருக்கும் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. குறிப்பாக இத்தினங்களில் வேட்புமனுக் கையளிக்கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தமது ஆட்பலத்தை காண்பிப்பதற்காக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகம் வரை பெரும் எண்ணிக்கையான மக்களை அழைத்துவரல் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் போன்றே வாகனங்களையும் பயன்படுத்தி ஊர்வலங்களை நடாத்துதல் பொதுவான பழக்கமொன்றாக காணப்படுவதால், அவ்வாறான சட்ட முரணான ஊர்வலங்களை நிறுத்துவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் தேர்தல்கள் ஆணையாளரால் பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான ஊர்வலங்களை நிறுத்துவதற்கு பொலிசார் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்த சந்தர்ப்பங்களில் அவ்வாறான சட்ட முரணான ஊர்வலங்களை நடாத்தியவர்கள் தொடர்பில் சில சந்தர்ப்பங்களில் பொலிஸாரால் சட்ட நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

61. வேட்புமனுக் கையேற்றல் நிறைவடைந்த பின்னர் மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 17 ஆம் பிரிவுக்கமைய வேட்புமனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, அது தொடர்பான முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர், போட்டிக்காக எஞ்சியுள்ள வேட்புமனுக்கள் தொடர்பில் குறித்த சட்டத்தின் 20(1) ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகள் தெரிவத்தாட்சி அலுவலர்களால் எடுக்கப்பட்டதோடு, அனைத்து மாவட்டங்களிலும் தேர்தல் போட்டியுள்ள தேர்தலாக இருந்தமையினால் தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டது. அதன் பின்னர் போட்டியிடவுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு அவற்றின் அனுமதிக்கப்பட்ட சின்னங்களும்

சுயேச்சைக் குழுக்களுக்கு அனுமதிக்கப்பட்ட சின்னங்களும் மற்றும் அவற்றை வேறு பிரித்தறியும் இலக்கங்களும் குறித்தொதுக்கப்பட்டதன் பின்னர் வேட்பாளர்களின் தொடர் இலக்கங்கள் மாவட்டத்தினுள் தாபிக்கப்படுகின்ற வாக்கெடுப்பு நிலையங்களின் அமைவிடம், வாக்கெடுப்புத் தினம் மற்றும் காலம் என்பவற்றை உள்ளடக்கிய தேர்தல் தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடுவதற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களால் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் போது அது தொடர்பாக குறித்த தரப்புக்களுக்கு தெரிவத்தாட்சி அலுவலர்களினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது.

62. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றினால் கம்பஹா மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு 2014.02.06 ஆம் திகதி கையளிக்கப்பட்ட வேட்புமனுப் படிவமொன்றைப் பரீட்சித்துப் பார்க்கும் போது ஏற்பட்ட பிரச்சினையான நிலைமையொன்று காரணமாக அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை இலக்கங்களைக் கொண்ட சில வேட்பாளர்களின் ஆளடையாளத்துடன் தொடர்புடைய விடயங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலருக்கு நேரிட்டது. அவ்விடயங்களை ஆராயும் போது அவ்வேட்புமனுப் படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில வேட்பாளர்களின் பெயர்கள் அவர்களின் அனுமதியின்றி அதில் உட்சேர்க்கப்பட்டுள்ளதென தெரியவந்தது. அதற்கமைய அவ் ஆவணங்களின் வேட்பாளர்கள் வேட்புமனு தொடர்பில் தமது விருப்பத்தை தெரிவித்து இட்டுள்ள கையொப்பங்களும் போலியாக இடப்பட்டவையென்ற சந்தேகம் ஏற்பட்டது. மாகாண சபைகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கமைய அவ்வேட்புமனுப் படிவம் தேர்தலுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள போலியானவையென உணரப்பட்ட விடயங்கள் காரணமாக கம்பஹா மாவட்டத்தின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் அவ்வேட்புமனுப் படிவத்தைச் சமர்ப்பித்தமை தொடர்பில் குறித்த அரசியல் கட்சிக்கெதிராக முறைப்பாடொன்றை கம்பஹா பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பித்தார்.

63. கொழும்பு மாவட்டம் சார்பாக கையளிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்குரிய வேட்பு மனுப் படிவம் ஒன்றில் பெயர் உட்சேர்க்கப்பட்டிருந்த வேட்பாளரொருவர் அவரது பெயரின் ஆரம்பத்தில் “அ” எழுத்தை நான்கு தடவைகள் அசாதாரணமான விதத்தில் உட்சேர்த்திருந்தமை காரணமாக அது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரால் விடயங்கள் ஆராய்ந்து பார்க்கப்பட்டன. அவ்வேட்பாளர் அவரின் பெயரை அவ்வாறு கொழும்பு வெள்ளவத்தை பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பிரிவிலிருந்து விநியோகிக்கப்பட்டிருந்த பிறப்புச் சான்றிதழிலும் தேசிய அடையாள அட்டையிலும் உட்சேர்த்திருந்தமை தெரியவந்தது. பிறப்புச் சான்றிதழில் 13 ஆம் நிரலின் கீழ் இவ்வாறு குறித்த பெயர் புதிதாக பிறப்புச் சான்றிதழில் உட்சேர்க்கப்பட்டு இருந்தமை தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் 2014.02.10 ஆம் திகதி பதிவாளர் நாயகத்திற்கு அறிவித்தார். கம்பஹா மாவட்டத்திற்காகப் போட்டியிட்ட ஓர் வேட்பாளரும் கந்தானை பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள அவரது பிறப்புச் சான்றிதழில் பெயருக்கு எதிரில் அ மற்றும் ஆ என்ற சிங்கள எழுத்துக்களை உட்சேர்த்து திருத்தம் செய்து கொண்டு அதற்கமைய வேட்புமனுப் படிவத்திலும் பெயரை உட்சேர்த்துள்ளதாகத் தெரியவந்தது. இது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரால் 2014.02.13 ஆம் திகதி பதிவாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டது.

64. இவ்வாறு வேட்பாளர்கள் வேட்புமனுப் படிவத்தில் தமது பெயர்களுக்கு முன்னால் அவர்களின் முதல் எழுத்துக்களுடன் தொடர்புபடாத விதத்தில் சிங்கள மொழி எழுத்து அகர வரிசையிலுள்ள முதல் எழுத்துக்களை பயன்படுத்துவதற்கு முயற்சித்திருப்பது, தேர்தல் சட்டத்திற்கமைய வேட்பாளர்களை வேறு பிரித்தறியும் தொடர் இலக்கங்களை வழங்குவதற்காக அவர்களின் பெயரின் முதல் சிங்கள எழுத்துக்களை அரிச்சுவடி எழுத்து தொடரொழுங்கில் வேட்பாளர்களின் பெயர்களை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை காரணமாகவே என்பது தெளிவான ஓர் விடயமாகும். பதிவாளர் நாயகம் தேர்தல்கள் ஆணையாளரின் 2014.02.10 ஆம் திகதிய கடிதத்திற்கு பதிலொன்றை அனுப்பி, கொழும்பு மாவட்டத்தில் குறித்த பெயரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கையெடுத்துள்ள மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகத்தின் அக்கடமை செயலொழுங்கு தொடர்பாக பூர்வாங்க விசாரணையொன்றை மேற்கொண்டு அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கையெடுக்கப்படுமென 2014.02.12 ஆம் திகதி அறிவித்துள்ளார். மேலும் இந்நிலைமை காரணமாக பிறப்புச் சான்றிதழ் ஆவணங்களில் பெயர்களை மாற்றம் செய்தல் மற்றும் அவ்வாவணங்களில் புதிதாக பெயர்களை உட்சேர்த்தல் தொடர்பாக 2014.02.18 ஆம்

திகதி அனைத்து பிரதேச செயலாளர்கள், மாவட்ட பதிவாளர்கள் மற்றும் மேலதிக மாவட்ட பதிவாளர்களுக்கு புதிய அறிவுறுத்தல் தொகுதியொன்று வெளியிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது. அவ்வறிவுறுத்தல்களுக்கமைய உச்சரிக்க முடியாத மற்றும் சத்தமிட்டு பெயரொன்றாக பயன்படுத்த முடியாத சில எழுத்துக்களை திருத்தமொன்றாக பெயர்களோடு குறித்துக் கொள்வதற்கு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் கோரியுள்ள போது அக்கோரிக்கைகளை ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே நிராகரித்தல் வேண்டும்.

65. அம்பாந்தோட்டை மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் 2014.02.03 ஆம் திகதி கையளிக்கப்பட்ட வேட்புமனுப் படிவமொன்றில் பெயர் உட்சேர்க்கப்பட்டிருந்த ஒரு ஆண் வேட்பாளரின் மற்றும் பெண் வேட்பாளரின் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன வேறு அரசியல் கட்சியொன்றின் வேட்புமனுப் படிவமொன்றில் உட்சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தாம் வேறு வேட்புமனுப் படிவமொன்றில் பெயர்களை உட்சேர்க்கவில்லையெனவும் அறிவித்து குறித்த வேட்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய அம்பாந்தோட்டை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய இது தொடர்பாக 2014.02.22 ஆம் திகதி தங்காலை விஷேட குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

வாக்குச் சீட்டுக்கள்

66. வேட்புமனுக் காலப்பகுதி நிறைவடைந்த பின்னர் தனது மாவட்டங்களில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள், வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 30(1) ஆம் பிரிவு மற்றும் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் 'இ' படிவத்திற்கு இசைவாக அச்சிடப்பட வேண்டிய வாக்குச் சீட்டின் ஒரு மாதிரி ஒவ்வொரு தெரிவத்தாட்சி அலுவலர்களினாலும் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு கையளிக்கப்படுவதோடு, அதன் பிழையற்ற தன்மை பரீட்சித்துப் பார்க்கப்பட்டதன் பின்னர், வாக்குச் சீட்டு அச்சிடுவதற்கான கட்டளை தேர்தல்கள் ஆணையாளரால் அரசாங்க அழுத்தகருக்கு கையளிக்கப்படும். அது தவிர வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்ட பின்னர், மேலும் பல முக்கியமான ஆவணங்கள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கையளிக்கப்படவுள்ளன.

67. வாக்குச் சீட்டின் மேல் பகுதியில் குறித்த மாவட்டத்திற்காகப் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்கள் சிங்கள அகர வரிசை ஒழுங்கில் குறிப்பிடப்படும். அதன் பின்னர் போட்டியிடுகின்ற சுயேச்சைக் குழுக்களின் பெயர்களும் அதில் உட்சேர்க்கப்படும். மாவட்டமொன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுமாயின், அவற்றை வேறு பிரித்து அறிந்து கொள்வதற்காக 1,2 என்றவாறு தொடரொழுங்கில் அவற்றுக்கு இலக்கங்கள் வழங்கப்படும். அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பெயர்களுக்கு எதிரில் தேர்தல் சின்னமும் வாக்கை அடையாளமிடுவதற்காக கட்சி அல்லது சுயேச்சைக் குழுவுக்கு ஒரு வெற்றுக்கூடு வீதம் வாக்குச் சீட்டில் அச்சிடப்படும். கட்சிகள் அல்லது குழுக்களின் பெயர்களைத் தொடர்ந்து, வாக்குச் சீட்டின் கீழ் பகுதியில் மாவட்டத்திற்காக ஒரு கட்சி அல்லது ஒரு குழுவை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையில் அவர்களை வேறு பிரித்து அறிந்து கொள்வதற்காக குறித்தொதுக்கி வழங்கப்பட்ட இலக்கங்கள் தொடரொழுங்கில் கூடுகளில் தனித்தனியாக அச்சிடப்படும். அவ்வாறான இலக்கம் ஒன்றுடன் கூடிய சதுரக் கூடொன்றை புள்ளடியிட்டு வேட்பாளரொருவருக்காக வாக்காளருக்கு விருப்பு வாக்கை அளிக்க முடியும். அனைத்து மாகாண சபை தேர்தல்களுக்குரியதாகவும் வாக்களித்தல் மற்றும் விருப்புக்களை அடையாமிடுதல் தொடர்பாக தெளிவுபடுத்தும் பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. வாக்குச் சீட்டொன்றின் மாதிரி உள்ளடக்கப்பட்ட ஊவா மாகாண சபைத் தேர்தலுக்குரிய பத்திரிகைகளின் வெளியிடப்பட்ட அவ்வாறான அறிவித்தலொன்று 23 ஆம் இலக்க அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

68. அரச அழுத்தகரினால் விஷேட பாதுகாப்பின் கீழ் வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்ட பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பாதுகாப்பாக குறித்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் மற்றும் தேர்தல்கள் ஆணையாளரின் எழுத்து மூல அனுமதியளிக்கப்பட்ட அலுவலர்கள் ஊடாக

தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வாக்குச் சீட்டொன்றின் சாதாரண அகலம் 4 அங்குலமாக இருந்தபோதிலும் மாவட்டங்களுக்காகப் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கைக்கு அமைய அவற்றின் நீளம் மாறுபடும். இம்முறை தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் அதிக எண்ணிக்கையாக இருந்தமையால், மாவட்டங்களில் வாக்குச் சீட்டுக்கள் 20 அங்குலத்திற்கு மேற்பட்ட நீளம் கொண்டவையாகக் காணப்பட்டன.

IV ஆம் பகுதி

தேர்தலுக்கான முன் தேவைப்பாடுகள்

அஞ்சல் வாக்களிப்பு

69. 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 24(3) ஆம் பிரிவிற்கமைய அஞ்சலில் வாக்களிப்பதற்காக செய்யப்படுகின்ற ஒரு கோரிக்கை, சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் வேட்புமனுக் கையேற்றல் தொடர்பான அறிவித்தல் தேர்தல்கள் ஆணையாளரால் வெளியிடப்பட்ட தினத்தின் பின்னரான பத்து நாட்களுக்குள் கிடைக்கக் கூடியவாறு தெரிவத்தாட்சி அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இருப்பினும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் விண்ணப்பதாரர்களுக்குள்ள அசௌகரியங்கள் மற்றும் அஞ்சலில் ஏற்படுகின்ற தாமதம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இக்காலப்பகுதி இவ்வனைத்து தேர்தல் சந்தர்ப்பங்களைப் போன்று மேலும் ஒரு வாரம் வரையான காலம் காலநீடிப்புச் செய்வதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு நேரிட்டது.

70. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு தகைமை பெறும் தரப்பினர் யாரென்பது மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. முப்படைகளின் உறுப்பினர்கள் பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் அலுவலர்கள், புகையிரத, அஞ்சல் மற்றும் தொலைதொடர்பு ஆகிய திணைக்களங்களின் பணியாட் குழுவினருக்கும் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் பணியாட் குழுவினருக்கும், தேர்தல் கடமைகள் கையளிக்கப்படுகின்ற அரச அலுவலர்கள் மற்றும் வதிவு மாவட்டம் தவிர்ந்த வேறு நிருவாக மாவட்டமொன்றுக்காக தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் ஆகியோர் இவ்வசதியைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்ப வேண்டிய விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு தமது பதிவு விபரங்களை தேருநர் இடாப்பில் பரீட்சித்து பெற்றுக் கொள்ளல் வேண்டும். தேர்தல் நடாத்தப்படுகின்ற மாவட்டங்களுக்குரிய தேருநர் இடாப்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர் பிரிவுகளுக்குரிய கிராம அலுவலர் அலுவலகங்களில் அவ்வாவணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. பாதுகாப்புப் பிரிவுகளின் அங்கத்தவர்கள் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் நாடு பூராகவும் அமையப்பெற்றுள்ள கடமை நிலையங்களில் பணியாற்றுகின்றமையினால் இராணுவத்தினரும், பொலிஸாரும் அவர்களின் கடமை நிலையங்களில் அஞ்சல் வாக்கு விண்ணப்பிப்பதற்கான பதிவு தகவல்களை பரீட்சித்துப் பார்ப்பதற்கு இறுவட்டுக்களாகத் தயாரிக்கப்பட்ட தேருநர் இடாப்புக்களின் பிரதிகள் தேர்தல்கள் செயலகத்திலிருந்து அந்நிலையங்களுக்குப் பெற்றுக் கொள்வதற்கு வசதியளிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக தேர்தல்கள் செயலகத்தில் இத்தகவல்களை வழங்குவதற்காக தாபிக்கப்பட்டிருந்த விஷேட தொலைபேசி இலக்கங்களினூடாகவும், அரச தகவல் மையத்தினூடாகவும் குறித்தவர்களுக்கு தேருநர் இடாப்பில் தமது பதிவு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டது. அஞ்சல் வாக்கு வசதியைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிப்போர் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் கீழ் தமது கடமை நிலையத்திலிருந்து விடுமுறை பெற்றுக் கொண்டு வாக்களிப்பதற்காகச் செல்கின்றவர்களை அறிவுறுத்துவதற்கு பத்திரிகை அறிவித்தலொன்றும் வெளியிடப்பட்டது. இவ்வறிவித்தல் கிழக்கு, வட மத்தி, சப்பிரகமுவ ஆகிய மாகாண சபை தேர்தல்களுக்காக 2012.07.06 ஆம் திகதியும், மத்திய, வடக்கு மற்றும் வட மேல் மாகாண சபைகளுக்காக 2013.07.12 ஆம் திகதியும், மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்காக 2014.01.21 ஆம் திகதியும் ஊவா மாகாண சபைக்காக 2014.08.03 ஆம் திகதியும் இவ்வறிவித்தல் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. ஊவா மாகாண சபைத் தேர்தலுக்காக அவ்வாறு வெளியிடப்பட்ட அறிவித்தல் உபஅட்டவணை 19 இல் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

71. செல்லுபடியான தேருநர் இடாப்பின் பிரதிகள் எல்லா சந்தர்ப்பங்களிலும் அந்தந்த கிராம பிரிவுகளுக்கு ஏற்புடையவாறு கிராம அலுவலர்களுக்குக் கையளிக்கப்படு கின்றமையினால் அவற்றில் இருந்தும் குறித்த வாக்காளர்களுக்கு தமது பதிவு தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக வாக்காளர் கணக்கெடுப்பு சந்தர்ப்பத்தின் போது வீட்டுத் தலைவர்களுக்கு குறித்த படிவத்தோடு ஒவ்வொரு வீடுகளின் கீழும் நடைமுறை தேருநர் இடாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள வாக்காளர்களின்

பெயர்கள் தொடர்பாக கையளிக்கப்படுகின்ற பற்றுச் சீட்டிலுள்ள விபரங்கள் ஊடாகவும் அஞ்சல் வாக்கு வசதிகளை கோருகின்றவர்களுக்கு தமது பதிவு தொடர்பான விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

72. சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் சில படையினர் பாதுகாப்பு சேவையல்லாத வேறு விவசாய, கட்டிடப் பொருள் உற்பத்தி மற்றும் புனித பூமி பிரதேசங்களை சுத்தப்படுத்தல் போன்ற பணிகளிலீடுபடுத்தப்பட்டுள்ளமையால் அவ்வாறானவர்களுக்கு அஞ்சல் வாக்கு வசதிகளை வழங்க முடியாதெனவும் அவ்வாறானவர்கள் வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க வேண்டுமெனவும், அப்படை பிரிவினரில் அதிகமானோர் பணியாற்றுகின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேர்தல்களின் போது சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு தேர்தல்கள் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டது.

73. அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் கடமைகள் தொடர்பாக அவர்களை அறிவுறுத்துவதற்கு தேவையான அச்சிடப்பட்ட அறிவுறுத்தல்களை அவ்வலுவலர்களுக்கு அனுப்பி வைப்பதற்கும் அதற்கு மேலதிகமாக அவர்களை அழைத்து அறிவுறுத்தல் வழங்குவதற்கும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. குறிப்பாக வட மாகாணத்தில் அமையப் பெற்றிருந்த பாதுகாப்பு சேவை நிலையங்களில் அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களால் செயற்படுகின்றவர்களை அறிவுறுத்துவதற்கும் வேறு மாவட்டங்களின் அனுபவமிக்க பதவி நிலை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அம் மாகாணத்தின் அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை அறிவுறுத்துவதற்கான அறிவுறுத்தல் வகுப்புக்களை சிங்களம் போன்றே தமிழ் மொழியிலும் நடாத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

74. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் தொடர்பான தெரிவத்தாட்சி அலுவலர்களின் தீர்மானங்கள் வாக்காளர்களின் பிரதிகள் சகிதம் அவர்களின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டன. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. தெரிவத்தாட்சி அலுவலருக்கு விண்ணப்பங்கள் உரிய காலத்தினுள் கிடைக்கப்பெறாமை விண்ணப்பப் படிவத்தில் வாக்காளரின் விபரங்கள் பிழையாக அல்லது முழுமையற்றதாக குறிப்பிடப்பட்டிருத்தல் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அல்லது விண்ணப்பதாரி கையொப்பமிடப்படாதிருத்தல் போன்ற விடயங்கள் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய பிரதான காரணங்களாகும். தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் அவற்றில் நிராகரிக்கப்பட்ட முறை தொடர்பான விபரங்கள் 10 ஆம் இலக்க குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

அஞ்சல் வாக்காளர் இடாப்பு

75. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் காட்டப்பட்டுள்ள 1988 அஞ்சல் வாக்காளர்கள் தொடர்பான (மாகாண சபைத் தேர்தல்கள்) கட்டளைத் தொகுப்பின் 4(1) ஆம் கட்டளைக்கமைய அஞ்சல் வாக்காளர்கள் தொடர்பான பட்டியலைத் தயாரிப்பதற்காக அஞ்சல் வாக்காளர்களுக்குரிய தேருநர் இடாப்பின் பதிவு தொடர்பான விபரங்கள் மற்றும் அவர்களின் அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் பெயர், பதவி மற்றும் அலுவலக முகவரி என்பன அவசியமாகும். வாக்காளர்களின் பதிவு தொடர்பான விபரங்களை கணினி தரவு முறைமையிலிருந்து உபயோகப்படுத்தி, அஞ்சல் வாக்காளர்களின் தேருநர் இடாப்புக்காக பெற்றுக் கொள்வது வசதியாக அமைந்தது. அத்தகவல்களுக்கு மேலதிகமாக அந்த இடாப்புக்களில் அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் விபரங்களை மாத்திரமே உட்சேர்க்க வேண்டியிருந்தது. அவ்வாறு இறுவட்டுக்களில் அஞ்சல் வாக்காளர்களின் தேருநர் இடாப்புத் தயாரிக்கப்பட்டதோடு, அவை பிரதி செய்யப்பட்டு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

76. மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் 2 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அஞ்சல் வாக்காளர்கள் தொடர்பான கட்டளைத் தொகுப்பின் 10(1) கட்டளைக்கமைய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்களில் அஞ்சல் வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டுக்களை விநியோகித்தல், கிழக்கு, வட மத்திய மற்றும் சப்பிரகமுவ ஆகிய மாகாண சபைத் தேர்தலுக்காக 2012.08.20 ஆம் திகதியும் மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்காக 2013.08.22

ஆம் திகதியும் மேல், தென் மாகாணங்களுக்கான மாகாண சபைத் தேர்தலுக்காக 2014.02.28 ஆம் திகதியும் ஊவா மாகாண சபைக்காக 2014.08.25 ஆம் திகதியும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்களில் தெரிவத்தாட்சி அலுவலர்களின் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கமைய மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு மேற்கொள்ளப்படுவதாகவும் மற்றும் அதற்காக நியமனம் செய்ய முடியுமான முகவர்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் போட்டியிட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு தெரிவத்தாட்சி அலுவலரினால் அறிவிக்கப்பட்டது.

77. அஞ்சல் வாக்காளர்களுக்கு அஞ்சல் வாக்குகளை அடையாளமிடுவதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டிய இரண்டு தினங்கள் தீர்மானிக்கப்பட்டு அது தொடர்பாக அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் மற்றும் அஞ்சல் வாக்காளர்களை அறிவுறுத்துதல் தேர்தல்கள் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு அஞ்சல் வாக்குகளை அடையாளமிடல் கிழக்கு, வடமத்திய மற்றும் சப்பிரகமுவ ஆகிய மாகாணங்களுக்காக 2012.08.27 மற்றும் 28 ஆம் திகதிகளிலும் மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்காக 2013.09.09 மற்றும் 10 ஆகிய தினங்களிலும் மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்காக 2014.03.13 மற்றும் 14 ஆகிய தினங்களிலும் மேற்கொள்வதற்காக தேர்தல்கள் ஆணையாளரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஊவா மாகாண சபைக்கான தேர்தலில் அஞ்சல் வாக்காளர்களுக்கு அஞ்சல் வாக்களிப்பதற்காக 2014.09.04 மற்றும் 05 ஆகிய தினங்கள் குறித்தொதுக்கி வழங்கப்பட்டன. இது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரினால் ஊவா மாகாணத்திற்காக வெளியிடப்பட்ட அறிவித்தல் 25 ஆம் இலக்க உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

78. இம்முறை நடாத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தலின் போது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படவுள்ள தினங்களில், அப்பணிகள் தேர்தல்கள் ஆணையாளரினதும் மற்றும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினதும் அறிவுறுத்தல்களுக்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றதாவென்பதை ஆராய்ந்து பார்ப்பதற்காக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பொதுவாக 40 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான அஞ்சல் வாக்காளர்கள், அஞ்சல் வாக்குகள் அடையாளமிடவுள்ள அத்தாட்சிப்படும் அலுவலர்களின் அலுவலகங்களுக்கு இவ்வாறான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மேற்பார்வை பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டனர்.

79. குறித்த இரண்டு தினங்களினுள் வாக்களிக்க முடியாது போன அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச் சீட்டுக்களடங்கிய உறைகள் தொடர்பாக விஷேட நிகழ்ச்சித் திட்டமொன்று இம்முறை தேர்தலின் போது மேற்கொள்ளப்பட்டது. முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களின் போது இவ்வாறான உறைகள் அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களினால் தேர்தல் தினத்திற்கு பின்னர் காலதாமதமின்றி தழுவல் கடிதமொன்று சகிதம் காப்புறுதி அஞ்சலில் அவற்றை விநியோகித்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தின் போது அவ்வாறான உறைகள் தொடர்பில் அதைவிடவும் மாறுபட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தேர்தல்கள் ஆணையாளரால் எடுக்கப்பட்ட அத்தீர்மானங்கள் அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

அ. அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் விதிக்கப்பட்ட இரண்டு நாட்களினுள் அஞ்சல் வாக்காளர்களினால் வாக்களிக்காமை காரணமாக எஞ்சிய வாக்குகளை உள்ளடக்கிய அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை உள்ளடக்கிய உறைகள் காலதாமதமின்றி அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் அல்லது வேறு பொறுப்பு கூற வேண்டிய அலுவலரொருவர் மூலம் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்கள் அமையப் பெற்றுள்ள மாவட்டத்தின் தேர்தல் அலுவலகங்களில் கையேற்கப்பட்டு பற்றுச் சீட்டொன்றை விநியோகம் செய்தல்.

ஆ. அதன் பின்னர் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் குறித்துரைக்கப்பட்ட எதிர்வரும் தினமொன்றில் மாவட்டத் தெரிவத்தாட்சி

அலுவலர் அலுவலகங்களில் அவ்வஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் உள்ளடக்கப்பட்ட உறைகளுக்குரிய அஞ்சல் வாக்காளர்களுக்கு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்களிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற்கொள்ளல்.

இதன் பின்னரான சந்தர்ப்பங்களின் போது அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படுகின்ற தினங்களில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களின் சார்பாக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்குச் சென்று குறித்த அலுவல்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். இறுதியாக விதிக்கப்பட் தினங்களின் போது வாக்களிப்பதற்கு வருகை தராத பல்வேறு அத்தாட்சிப்படுத்தல் அலுவலர்களது அலுவலகங்களுக்குச் சென்று குறித்த அலுவல்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். இறுதியாக உத்தரவிடப்பட்டிருந்த தினங்களின் போது அஞ்சல் வாக்களிப்பிற்கு வருகை தராத அஞ்சல் வாக்காளர்களின் பக்கெற்றுக்கள் தேர்தல் முடிவடைந்த பின்னர் காப்புறுதி அஞ்சலில் உரிய மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் பதவிநிலை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

தேர்தல் தொடர்பான அறிவித்தல்

80. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரங்களுக்கு அமைய மாவட்டத்தினுள் தேர்தலுக்கான போட்டியொன்று காணப்படுமாயின் அதற்கமைய மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழான தேர்தலுக்கான அறிவித்தல்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கைகையெடுத்தல் வேண்டும்.

81. அத்தேர்தல் தொடர்பான அறிவித்தலில் பிரதானமாக கீழே காட்டப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் பெயர்கள் சிங்கள அகர வரிசை ஒழுங்கிலும், போட்டியிடுகின்ற சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கையை ஒன்றை விட அதிகமெனில், அவற்றுக்கான வேறு பிரித்தறியும் இலக்கங்கள், அவ்வாறான குழுக்களின் மற்றும் கட்சிகளின் சின்னங்களும் அதில் உள்ளடக்கப்படல் வேண்டும். ஒரு மாவட்டத்தில் சுயேச்சைக் குழுக்கள் ஒன்றுக்கு மேற்பட்டு போட்டியிடுவதாயின், அவற்றை வேறு பிரித்து அறிவதற்காக பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை கையேற்கும் இறுதி தினத்தில் வேறு பிரித்தறியும் இலக்கங்கள் தெரிவத்தாட்சி அலுவலரினால் வழங்கப்படும். பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்கும் அலுவல்களின் பின்னர் மற்றும் கட்சிகள் மற்றும் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களதும் பெயர்கள் அவர்களை வேறுபிரித்து அறிவதற்காகக் குறித்தொதுக்கப்பட்ட இலக்கங்கள் என்பன இவ்வறித்தலில் உட்சேர்க்கப்படுவது முக்கியமான ஒரு தகவலாகும். நிருவாக மாவட்டத்தினுள் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்காகவும் தாபிக்கப்படுகின்ற வாக்கெடுப்பு நிலையங்களின் அமைவிடம் மற்றும் பெண் வாக்காளர்களுக்காக குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் காணப்படுமாயின், அவை தொடர்பான விபரங்களையும் இவ்வறிவித்தலில் உள்ளடக்குதல் வேண்டும்.

82. தேர்தல் தொடர்பான அறிவித்தலில் வாக்கெடுப்புத் தினம் மற்றும் வாக்கெடுப்பு நடாத்தப்படும் காலப்பகுதி தொடர்பான விபரங்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். 2004 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 22(1)(இ) பந்தியின் கீழ் அத்திகதி, தேர்தல் தொடர்பான அறிவித்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து 05 வாரங்களுக்கு குறையாத அல்லது 08 வாரங்களுக்கு மேற்படாத தினமொன்றான சனிக்கிழமை தினமாகவிருத்தல் வேண்டும். மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுக்கமைய வாக்கெடுப்பு மு.ப 7.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதோடு, அன்றைய தினம் பி.ப 4.00 மணிக்கு முடிவுறுத்தப்படல் வேண்டும். கிழக்கு, வட மத்திய மற்றும் சப்பிரகமுவ ஆகிய மாகாண சபைகளுக்கான தேர்தல் அறிவித்தல் 2012.07.25 ஆம் திகதியும் மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் அறிவித்தல் 2013.08.06 ஆம் திகதியும் அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்குரிய தேர்தல் அறிவித்தல் 2014.02.10 ஆம் திகதியும் மற்றும் ஊவா மாகாண சபைக்குரிய அறிவித்தல் 2014.08.13 ஆம் திகதியும் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள்

83. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 25(2) ஆம் பிரிவுக்கமைய தேர்தலின் போது வாக்களிப்பதற்குத் தகைமை பெற்றுள்ள வாக்காளர்களுக்கு வாக்கெப்புத் தினத்திற்கு 07 நாட்களுக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள், தெரிவத்தாட்சி அலுவலரினால் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அந்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் தேருநர் இடாப்பில் வாக்காளர் பதியப்பட்டுள்ள விபரங்கள், வாக்காளருக்காக குறித்தொதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையம் மற்றும் வாக்கெடுப்பு தினம், நேரம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். இவ்வாறான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்று இல்லாத போதும் வாக்காளர் இடாப்பில் அவரின் பெயர் பதியப்பட்டுள்ள வாக்காளரொருவருக்கு வாக்களிப்பதற்கு முடியும். இருப்பினும், இவ்வாறானதொன்று வாக்காளரிடம் காணப்படுவது தேர்தல் பணியாட் குழுவினருக்கும் மற்றும் வாக்காளர்களுக்கும் வசதிமிக்கதாகும்.

84. இத்தேர்தலின் போது மாகாணங்களின் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களுக்காக உத்தியோகப்பூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிட்டு அஞ்சல் மூலம் விநியோகிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டதோடு, அது தொடர்பான புள்ளிவிபர தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

மாகாணம்	நிருவாக மாவட்டம்	விநியோகிக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் எண்ணிக்கை	வாக்காளர் இடாப்புக்கமைய வீடுகளின் எண்ணிக்கை	உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் பரிசிலனைக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூபா. சதம்	உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் அனுப்புவதற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூபா. சதம்
கிழக்கு	மட்டக்களப்பு	347099	159188	69419.80	7200.00
	அம்பாறை	441287	197000	87257.40	8750.00
	திருகோணமலை	245363	131186	49072.60	-
வடமத்திய	அநுராதபுரம்	606508	241798	121301.60	-
	பொலன்னறுவை	294365	114182	58873.00	-
சப்ரகமுவ	இரத்தினபுரி	769813	301000	153962.80	26502.80
	கேகாலை	631981	228733	126396.20	20500.00
மத்திய	கண்டி	1015315	366375	225962.50	-
	மாத்தளை	366549	144445	தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை	தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை
	நுவரெலியா	507693	177155	113038.60*	-
வடக்கு	யாழ்ப்பாணம்	4267813	164369	92840.00	-
	கிளிநொச்சி	68600	27127		
	மன்னார்	75737	25027	அறிக்கை இடப்பட இல்லை	அறிக்கை இடப்பட இல்லை
	வவுனியா	94644	37500	23740.00	-
	முல்லைத்தீவு	53683	31461	அறிக்கை இடப்பட இல்லை	அறிக்கை இடப்பட இல்லை
வடமேல்	குருநாகல்	1227810	476527	198350.00	116000.00
	புத்தளம்	526408	203717	105281.60	13250.00
மேல்	கொழும்பு	1552734	502326	அறிக்கை இடப்பட இல்லை	அறிக்கை இடப்பட இல்லை
	கம்பஹா	1590076	558872	அறிக்கை இடப்பட இல்லை	அறிக்கை இடப்பட இல்லை
	களுத்துறை	881814	321837	அறிக்கை இடப்பட இல்லை	அறிக்கை இடப்பட இல்லை
தென்	காலி	809882	294912	அறிக்கை இடப்பட இல்லை	அறிக்கை இடப்பட இல்லை
	மாத்தறை	608524	251000	அறிக்கை இடப்பட இல்லை	அறிக்கை இடப்பட இல்லை
	அம்பாந் தோட்டை	455398	178249	அறிக்கை இடப்பட இல்லை	அறிக்கை இடப்பட இல்லை
ஊவா	பதுளை	609966	234630	அறிக்கை இடப்பட இல்லை	அறிக்கை இடப்பட இல்லை
	மொணராகலை	332768	134498	அறிக்கை இடப்பட இல்லை	அறிக்கை இடப்பட இல்லை
மொத்தம்		5503114	-	-	

*மொத்தச் செலவு

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிடல்

85. 2008 ஆம் ஆண்டு மாகாண சபைகள் தேர்தலுக்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களின்

போது, அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் மூலம் அச்சிட்டுக்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில், தேர்தலின் பெயர், வாக்காளர்களுக்கான அறிவுறுத்தல்கள், வாக்காளரின் பெயர், தேர்தல் மாவட்டம், வாக்களிப்பு பிரிவு, வாக்கெடுப்பு மாவட்டம் மற்றும் வாக்காளரின் தொடர் இலக்கம் போன்ற தகவல்களை உள்ளடக்குவதற்கு இடைவெளிவிட்டு, உரிய தலைப்புக்கள் மாத்திரம் அச்சிடப்பட்டதுடன், அறிவிக்கப்பட வேண்டிய அனைத்து விபரங்களும் தேர்தல்கள் திணைக்கள உத்தியோகத்தர்களால் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் கையால் எழுதி பூர்த்தி செய்து, அந்தந்த குடும்பங்களுக்கமைய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை ஒன்றாக இணைத்து தபாலில் அனுப்புவதற்காக அஞ்சல் அலுவலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டன.

86. எனினும் 2008 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட மாகாண சபை தேர்தல்கள் சந்தர்ப்பம் தொடக்கம், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை தயாரிப்பு முறை மாற்றமடைந்துள்ளது. தற்போது நாட்டில் சகல தேருநர் இடாப்புக்களும் கணினிமயப்படுத்தி தயாரிக்கப்படுகின்றமையினால் அதற்காக பயன்படுத்தப்படுகின்ற கணினித் தரவு முறைமை மூலம் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் உட்சேர்க்க வேண்டிய வாக்காளரின் பதிவு விபரங்கள் பெற்றுக் கொண்டு வாக்களிப்பு நிலையம் பற்றிய விபரங்களையும் புதிதாக உள்ளடக்கி, உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை தனியார் பிரிவினால் அச்சிட்டுக்கொள்கின்ற சாத்தியம் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, முன்னர் தேர்தல் சந்தர்ப்பங்களில் போன்று உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் வாக்காளருக்கு தபால் மூலம் அனுப்புவதற்காக அவை அலுவலர்களாக எழுதிப் பூர்த்தி செய்யும் தேவைப்பாடு தற்போது இல்லை. இதனால் ஏற்பட்ட விசேட வசதிகள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

I. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் அடங்கிய அனைத்து விபரங்களையும் அச்சிட்டு தெளிவாக வாக்காளருக்கு அறிவிக்க முடிந்தமை.
II. கணினி தரவு முறைமையைப் பயன்படுத்தி உரிய விவரங்கள், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் உள்ளடக்கிய அந்தத் தகவல்களை பிழையற்ற தன்மையை உயர்மட்டத்தில் வைத்துக் கொள்ள முடிந்தமை.
III. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள், உரிய வாக்காளர்கள் எண்ணிக்கைக்கு அச்சிடப்படுவதால் மற்றும் அவற்றைக் கையால் எழுதி தயார் செய்யப்படுவதில்லை என்பதால் அச்சிடப்பட்டு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் வீண்விரயம் ஏற்படமாட்டாது.
IV. வாக்காளர்கள் பாவிக்கின்ற மொழிக்கு ஏற்ப சிங்களம் அல்லது தமிழ் ஆகிய ஒரு மொழியில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை இலகுவாக அச்சிட்டுக் கொள்ள முடியும். (இதற்கு முன்னர் அவ்வாறு மொழிக்கமைய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை எழுதுவதற்காக மேற்படி மொழிகளில் எழுதக்கூடிய இயலுமையுள்ள அதிகாரிகளின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு நேரிட்டது.

87. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வாக்களிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்வதால் ஏற்படும் வசதிகள் பற்றியும், வாக்கெடுப்புத் திகதி வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லும் போது தேசிய அடையாள அட்டை அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட ஆளடையாள ஆவணத்தை எடுத்துச் செல்வது அவசியமென்பது அந்த வாக்காளர் அட்டை மூலம் வாக்காளர் மேலும் அறிவுறுத்தப்பட்டனர்.

88. பதிவு செய்யப்பட்ட வாக்காளரொருவர் தனது வாக்குச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக வாக்களிப்பு நிலையத்தில் தேசிய அடையாள அட்டை அல்லது வேறு அதற்காக தேர்தல் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த தேவைப்பாடு 2004 இல் சட்டமாக்கப்பட்டது. அதற்கு முன் வாக்காளர் வாக்களிப்பு நிலையத்தில் எடுத்து வரும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் விபரங்கள் மற்றும் தேருநர் தமது ஆளடையாளம் தொடர்பாக வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பு நிலைய பதவியணிகளுக்கு தெரிவிக்கின்ற தகவல் அடிப்படையில், பதவியணியினர் திருப்தியடைந்ததால் மற்றும், வாக்களிப்பு நிலையப் பிரதிநிதிகளின் ஆட்சேபனையொன்று இல்லாதவிடத்து, யாராவது எழுத்து மூலம் வெளிப்படுத்துகையை வழங்காமல் வாக்களிப்பதற்கு வாக்காளருக்கு வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும். இதன் போது காலஞ்சென்றவருக்கு மற்றும் வெளிநாட்டில் உள்ளவருக்கும் உரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையின் ஏதேனும் சட்ட முரணான பயனைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இருப்பதாக சிலர் நம்பியதால் அதனை தவிர்க்கும் நடவடிக்கையாக

பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

I. வாக்களிப்புக்கு மிக அண்மித்த காலம் வரை, தேருநர் இடாப்பில் பெயர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள நபர்கள், மரணமடைந்துள்ள மற்றும் வெளிநாடுகளில் வசிக்கின்றவர்கள் விபரங்களை கிராம அலுவலர் மூலமாக பெற்றுக் கொள்ளல்.

II. வாக்களிப்பு நிலையத்தின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட தேருநர் இடாப்புப் பிரதிகளில், அத்தகைய பெயர்களை அடையாளங் காண்பதற்குரிய பெயருக்கு எதிரில் பொருத்தமான குறியீடொன்றை இடுதல்.

III. கிராம அலுவலர்கள் அறிக்கையிடப்பட்டுள்ள காலஞ்சென்ற மற்றும் வெளிநாடு சென்றுள்ள வாக்காளர்கள் பற்றிய விபரங்கள், ஒவ்வொரு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு அந்தந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு ஏற்ப எழுத்து மூலம் அறிவித்தல்.

IV. எதிர்பாராதவிதமாக அந்த அறிக்கையில் தவறொன்றின் காரணமாக இறந்தவர் அல்லது வெளிநாடு சென்றுள்ளவர் என அறிக்கையிடப்பட்டுள்ள ஒருவர் வாக்களிப்பதற்கு வருகை தந்து அதற்கான சந்தர்ப்பத்தைக் கோரினால் அத்தகைய வாக்காளரின் ஆளடையாளம் மற்றும் ஏனைய உரிய விடயங்களின் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டு, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களை அறிவூட்டல்.

V. கிராம அலுவலர்களின் அறிக்கைகளுக்கமைய மரணமடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ள வாக்காளர்கள் தொடர்பாக "மரணமடைந்த ஒருவர் என அறிக்கையிடப்பட்டுள்ளது," மற்றும் வெளிநாடு சென்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டு உள்ள நபர்கள் தொடர்பாக, "வெளிநாடு சென்றுள்ளாரென அறிக்கையிடப்பட்டுள்ளது," என உரியவாறு வாக்காளர் அட்டைகளில் இலச்சினை பொறித்து, அந்தந்த வீடுகளுக்குரிய எஞ்சிய ஏனைய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் சகிதம் அவற்றை தபாலில் சேர்க்க நடவடிக்கை எடுத்தல்.

VI. அஞ்சல் வாக்காளர்களுக்கு உரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அஞ்சல் வாக்காளரொருவராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள வாக்குச் சீட்டொன்றென முத்திரை பொறித்து அவற்றினையும் வீட்டிற்குரிய ஏனைய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை சகிதம் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டது. அஞ்சல் வாக்காளர்களுக்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை இவ்வாறு அனுப்புவதற்கு விசேட காரணமுண்டு. ஏதேனும் வாக்கெடுப்பு மாவட்டத்தில் சமமான பெயர்கள் இரண்டு அல்லது பல உள்ள போது, அதில் ஒருவர் தனது பெயருக்கு சமமான வேறு ஒருவரின் பெயர் தொடர்பாக அஞ்சல் வாக்களிப்பு வசதிகளுக்காக விண்ணப்பப் படிவமொன்றை சமர்ப்பித்து சான்றுப்படுத்தும் உத்தியோகத்தர் மூலம் வாக்குச் சீட்டொன்றை அல்லது அவ்வாறான ஒன்றை அடையாமிடுவதற்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலரிடம் பெற்றுக் கொள்ள உரிய வாக்காளருக்கு வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிப்பதற்கு வசதியைப் பெற்றுக் கொடுக்க, பெரும்பாலும் வாய்ப்புப் பெற்றுக் கொள்வதற்கு இந்த செயற்பாடு காரணமாக முடியும்.

89. தற்போது வாக்களிப்பு நிலையத்தில் வாக்காளர் ஒருவருக்கு வாக்குச் சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது வேறு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆளடையாள ஆவணத்தை சமர்ப்பித்தல் கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வாக்களிப்பு நிலையங்களுக்கு வழங்கப்படுகின்ற தகவல்களினால் வாக்களிப்பு நிலையங்களும் அவ்வளவு பிரயோசனமில்லை என ஒருவர் எண்ணமுடியும். வருடாந்த தேருநர் இடாப்புக்களை பரிசீலிக்கும் போது இன்னும் 20% இற்கு கிட்டிய வாக்காளர்கள் எண்ணிக்கையினருக்கு தேசிய அடையாள அட்டை இலக்கம், தேருநர் இடாப்பில் உள்ளடக்கப்படவில்லையென்பது தெளிவான விடயமாகும். இவ்வாறான நபர்கள் தேர்தல்கள் ஆணையாளரிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆளடையாள ஆவணமொன்றை அல்லது தேர்தல் திணைக்களத்தினால் தேர்தல்கள் சந்தர்ப்பத்தில் வழங்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டையை வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச்சீட்டொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பித்தல் வேண்டும் அவ்வாறானவர்கள் இன்றும் இருக்கின்றமையால் மேற்குறித்தவாறு விபரங்களை வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வழங்குவது பொருத்தமான செயற்பாடொன்றெனக் குறிப்பிட முடியும்.

மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 28 (1) ஆம் பிரிவின் கீழ் வாக்கெடுப்பு நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட வேண்டிய அறிவித்தல்கள்.

90. இப் பிரிவின் கீழ் உரிய தேர்தல்கள் சட்டத்தின் 3 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள, வாக்களர்களுக்கான வழிகாட்டல் தொடர்பான விளம்பரம், வாக்களிப்பு நிலையத்திற்கு வெளியில் மறைவான இடங்களாக உள்ள பகுதிகளிலும் காட்சிப்படுத்த வேண்டும். அதற்கு மேலதிகமாக மாவட்டம் சார்பாக போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் பெயர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள், அவற்றின் சின்னங்கள், போட்டியிடுகின்ற சகல வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கம் உள்ளடக்கப்பட்ட அறிவித்தல் வாக்களிப்பு நிலையத்திற்கு வெளியில் காட்சிப்படுத்த வேண்டும். வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இவ்வாறான இலக்கங்கள் தொடர்பாகவும் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் மூலம் பத்திரிகையில் வெளியிட வேண்டிய ஏனைய அறிவித்தல்கள் தொடர்பாகவும் இந்தத் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லையெனினும், தற்போதைய விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கமைய தேர்தல்கள் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் இவ்வாறான விபரங்கள் அடங்கிய அறிவித்தல் வாக்காளர்களுக்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையுடன் அனுப்புவதற்கு ஒவ்வொரு தேர்தலின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இம்முறை நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலின் போதும் வாக்காளர்களை அறிவூட்டுவதற்காக ஒவ்வொரு வீட்டுக்குமுரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளுடன் இந்த அறிவித்தலின் பிரதியொன்றை தபாலில் அனுப்புவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

91. தேர்தல்களின் போது ஒவ்வொரு வாக்காளருக்கும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் அஞ்சலில் அனுப்பப்படும் சந்தர்ப்பத்தில் மாவட்டம் சார்பாக போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள், வேட்பாளர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள வேறுபிரித்தறியும் இலக்கம் போன்ற விபரங்கள் அடங்கிய வீட்டு அறிவித்தல் வீடுகளுக்கு உரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளுடன் இணைத்து தபால் மூலம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இம்முறை மாகாண சபைத் தேர்தல்கள் சார்பாக 11269 வேட்பாளர்கள் போட்டியிட்டதுடன் அதிக எண்ணிக்கையாக 1247 வேட்பாளர்கள். கொழும்பு மாவட்டத்திற்காகப் போட்டியிட்டனர். மேற்படி வேட்பாளர்கள் 18 அரசியல் கட்சிகள் மற்றும் 11 சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்திப் போட்டியிட்டனர். அதிக எண்ணிக்கையான 558872 வீட்டு அறிவித்தல்கள் கம்பஹா மாவட்டத்திற்குரியதாகும். இந்த அறிவித்தல்கள் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் ஒரே கடதாசியில் இரு பக்கங்களில் அச்சிடப்பட்டன. போட்டியிட்ட கட்சிகள் மற்றும் குழுக்கள் எண்ணிக்கை அடிப்படையில் அச்சிடப்பட்ட இந்த அறிவித்தல்களின் அளவுகள் வேறுபட்டுக்காணப்பட்டன. இவ்வாறு அச்சிட்டு விநியோகிக்கப்பட்ட வீட்டு அறிவித்தல்களின் எண்ணிக்கை 10 ஆம் இலக்க குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

துடைத்தழிக்க முடியாத மை

92. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின், 36(1) ஆம் உட்பிரிவிற்கமைய வாக்காளருக்கு வாக்குச் சீட்டை வழங்க முன்னர் தோதான குறியீட்டினால் (துடைத்தழிக்க முடியாத மையொன்றினால்) அவர்களை அடையாளமிடுதல் வேண்டும். வேறு தேர்தல்களைப் போன்றே இம்முறையும் இதற்காக வாக்காளர்களுக்கு சிரமங்கள் ஏற்படாதவாறு பொருத்தமான துடைத்தழிக்க முடியாத மை வழங்க தேர்தல்கள் ஆணையாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. வாக்காளர்களை இவ்வாறு அடையாளமிடல் கட்டாயமாகச் செய்ய வேண்டிய பணியொன்று என்பதால், ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திற்கும் அவை பொறியிடப்பட்ட உறைகளில் இடப்பட்டு பாதுகாப்பாக தேவையானளவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் இத் துடைத்தழிக்க முடியாத மையினால் அடையாளமிடுவது தொடர்ந்தும் மேற்கொள்ளப்படல் வேண்டுமா என்பது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

உத்தியோகபூர்வ முத்திரையை வாக்குச் சீட்டில் பொறித்தல்

93. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 35 ஆம் பிரிவில், வாக்குச் சீட்டுக்களை வாக்காளர்களுக்கு விநியோகிக்க வேண்டிய

விதம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பிரிவின் (இ) பந்தியின் படி, வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டு ஒன்றை வழங்குவதற்கு முன்னர் உத்தியோகபூர்வ இலச்சினையைப் பொறித்தல் வேண்டும். அல்லது உத்தியோகபூர்வ இலச்சினையை அதில் அழுத்த அல்லது துளையிட சட்டத்தின் படி முடியும். பொதுவாக தேர்தலொன்றின் போது பயன்படுத்துவதற்கு அவ்வாறான இலச்சினையொன்றைத் தெரிவு செய்யும் போது இறுதியாக நடைபெற்ற தேர்தலின் போது பயன்படுத்தப்படாத இலச்சினையொன்றை ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திற்காகவும் தெரிவு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

94. வாக்குச் சீட்டுக்களை இலச்சினை பொறிப்பதற்காகப் பாவிக்கப்படுகின்ற இந்த இலச்சினைகள், வாக்கெடுப்புத் தினத்திற்கு அண்மித்த தினம் ஒன்றில் பாதுகாப்பாக தேர்தல்கள் ஆணையாளரால் மாவட்டத் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு வாக்களிப்பு நிலையத்தில் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த உத்தியோகபூர்வ இலச்சினைகள் பற்றிய தகவல்கள் வாக்களிப்பு நிலைய பணியாளர்கள் கூட வாக்கெடுப்பு தினம் வரை அறிந்து கொள்ள முடியாத வகையில் அவற்றின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் வகையில் விநியோகம் செய்யப்படுவதோடு, பொறியிடப்பட்ட உறையினுள் வைத்து, அவை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள் மூலம் கையளிக்கப்படும். இவ்வாறு ஒன்றுக்கொன்று வேறுபட்ட இலச்சினைகள் குறிப்பிட்ட தொகையொன்று ஒவ்வொரு வாக்களிப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வழங்கப்படுவதோடு அத்தகைய இலச்சினைகளில் ஒன்று வாக்கெடுப்புத் தினம் அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் பதவி அணியினர் முன்னிலையில் எழுமாறாகத் தெரிவு செய்து பயன்படுத்தப்படல் வேண்டும். இது வாக்களிப்பு நிலையத்தில் பாவிக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ இலச்சினையைத் தெரிவு செய்வதன் வெளிப்படையான தன்மையை அதிகரிப்பதற்காகச் செய்யப்படுகின்றது.

உடல் வலிமையிழப்பிற்கு உட்பட்டுள்ள நபர்களுக்கான விசேட போக்குவரத்து வசதிகள்.

95. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 84 (1) (அ) பிரிவில், வாக்கெடுப்புத் தினம் வாக்காளர்கள் வாக்களிப்பு நடைபெறும் இடத்திற்கு அல்லது அந்த இடத்திலிருந்து, போக்குவரத்துச் செய்வதற்காக கொடுப்பனவு செய்யக் கூடாதென்பதையும், அவ்வாறு கொடுப்பனவுக்கான ஒப்பந்தங்களைச் செய்யக் கூடாதெனவும், குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் மக்கள் போக்குவரத்துச் சேவையை வழங்கும், போக்குவரத்துச் சபை அல்லது புகையிரத சேவை மூலம், வாக்காளர்கள் செலவு செய்து வாக்களிப்பு நிலையத்திற்கு சென்று வருதல் சட்டமுரணானதல்ல என மேற்படி சட்டத்தின் 84 (4) (இ) பிரிவில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

96. ஏதேனும் உடல் வலிமையிழப்புக் காரணமாக வாக்களிப்பு நிலையத்திற்கு கால் நடையாக பயணம் செய்ய முடியாத ஒருவருக்கு, அதற்காக உபயோகிக்க எழுத்து மூலமான ஓர் அதிகாரத்தை தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்வது தொடர்பாக மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 84 (4) (ஈ) பிரிவின் பிரகாரம் சாத்தியமுண்டு. இவ்வாறான வசதியொன்றை பயன்படுத்திக் கொள்வதற்கு அத்தகைய நபரொருவருக்கு அல்லது அவர் சார்பாக தேர்தல் வேட்பாளர் அல்லாத வேறு ஒருவருக்கு, வாக்கெடுப்புத் தினத்திற்கு 7 நாட்களுக்கு முன்னர் தமது மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கோர முடியும். தேர்தல்கள் ஆணையாளரால் இது தொடர்பாக வாக்காளர்களை விழிப்புணர்வூட்டுவற்காக சகல மாகாண சபைத் தேர்தல்களின் போதும் இது தொடர்பான விளம்பரம் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டன. கிழக்கு, வடமத்திய மற்றும் சப்பிரகமுவ ஆகிய மாகாணங்களின் தேர்தல்கள் சந்தர்ப்பத்தில் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட அறிவித்தல் 21 ஆம் இலக்க உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. இந்த வசதிகள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் கோருகின்ற நபர்களுக்கு, பொது வாகனமொன்றில் அல்லது கால் நடையாக வாக்களிப்பு நிலையத்திற்கு சென்று மீண்டும் அங்கிருந்து பிரயாணம் செய்ய முடியாதுள்ளதாக உறுதிப்படுத்துகின்ற, மேலைத்தேய அல்லது தேசிய பதிவு வைத்தியரொருவரின் வைத்திய அறிக்கையை

உரிய விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உடல் வலிமையிழப்பிற்கு உட்பட்ட வாக்காளரொருவருக்கு வாக்களிக்கும் போது உதவுவதற்காக நபரொருவரை வாக்களிப்பு நிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்கு இடமளித்தல்.

97. 2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் ஏதேனும் வலிமையிழப்பிற்குட்பட்ட நபரொருவருக்கு, தனது வாக்குச் சீட்டை வாக்காளர் குறித்துரைக்கப்பட்டவாறு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் பணியாட்குழுவின் வேறோர் உறுப்பினர் முன்னிலையில் அடையாளமிட்டு வாக்குப் பெட்டியில் இடுவதற்காக எவரேனும் நபரொருவரை வாக்களிப்பு நிலையத்திற்கு உடனழைத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு உடனழைத்துச் செல்லும் நபர் 18 வயதிற்குக் மேற்பட்ட, தேர்தலில் வேட்பாளராக போட்டியிடாத அல்லது வாக்களிப்பு நிலைய முகவரொருவராக கடமையாற்றாத ஒருவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் அந்த நபர் எந்தவொரு வலிமையிழப்புக்கும் உட்படாதவராகவும் இருத்தல் வேண்டும். இந்த உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 4 ஆம் அட்டணையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படுத்துகை மற்றும் கிராம அலுவலரிடமிருந்தும் மற்றும் அரச மருத்துவ அலுவலரிடமிருந்தும் பெற்றுக்கொண்ட சான்றிதழ்களை உரிய நபர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இம்முறை மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்ற சந்தர்ப்பத்தின் போது இது தொடர்பாக வாக்காளர்களை விழிப்புணர்வூட்டுவற்கான தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. ஊவா மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் 20 இலக்க உப அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கினை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல்

98. இந்த நாட்டினது தேர்தல்களின் போது அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகள், பாதுகாப்புப் பிரிவுகளுக்கும், தேர்தல்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ள அல்லது தேர்தல்கள் பணிகளுக்காக ஒரு சில கட்டாய சேவைகளை வழங்குகின்ற அரச அல்லது பகுதியளவு அரச நிறுவனங்கள் சிலவற்றின் பணியாள் குழுவினர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. எனினும் வேறு கட்டாய சேவைகளில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களின் பணியாட்குழுவினருக்கும் இந்த வசதிகள் அவசியமென அறிவித்து, தேர்தல் நடாத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது தேர்தல்கள் திணைக்களத்திற்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், இதுவரை அத்தகைய பிரிவுகளுக்கு அஞ்சல் வாக்களிப்பு வசதிகளை வழங்குவதற்கு சட்டம் வகுக்கப்படவில்லை. ஆதலால், வாக்கெடுப்புத் தினத்தில் தனது கடமைகளில் ஈடுபடுவதற்கு நேரிடுகின்ற எவரெனுமொரு நபர் இருப்பின் அவ்வாறானவர்களுக்கு தேர்தல் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொழில் வழங்குனர்களிடமிருந்து விடுமுறை பெற்றுக்கொண்டு வாக்களிப்பதற்காக வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லுதல் வேண்டும்.

99. மாகாண சபை தேர்தல்கள் சட்டத்தின் 123 ஆம் பிரிவிற்கமைய, எவரேனும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு நேரடியாக வாக்களிப்பதற்கு வசதியாக அந்நபர் போதுமானதென கருதுகின்ற தொடர்ச்சியான லீவொன்றை சம்பளக் குறைப்பின்றி தொழில் வழங்குனர் வழங்குதல் வேண்டும். இந்தக் காலம் ஆகக் குறைந்தது 4 மணித்தியாலங்களாக இருத்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டை மீறுகின்ற அல்லது அதற்கமைய செயற்படுவதை புறக்கணிக்கின்ற ஒருவருக்கு வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாக்கப்படுமிடத்து சட்டத்திற்கமைய தண்டனைகள் வழங்க முடியும். இந்த விடயங்கள் தொடர்பாக உரிய வாக்காளர்கள் மற்றும் தொழில் வழங்குனர்களை விழிப்புணர்வூட்டுவற்காக ஒவ்வொரு தேர்தல்களின் போதும் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலான அறிவித்தல்கள் பத்திரிகைகள் சிலவற்றில் வெளியிடப்பட்டன. ஊவா மாகாண சபை தேர்தலுக்காக தொழில் வழங்குனர்களை அறிவுறுத்துவதற்காக வெளியிடப்பட்ட அறிவித்தல் 24 ஆம் இலக்க உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

100. சப்ரகமுவ மாகாணத்தின் தேர்தலுடன் தொடர்புடையதாக இரத்தினபுரி, கேகாலை ஆகிய

மாவட்டங்களிலும், மத்திய மற்றும் ஊவா மாகாண சபை தேர்தல்களின் போதும் அம் மாகாணங்களில் அமையப்பெற்றுள்ள தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் வதிந்துள்ள வாக்காளர்களுக்கு அவர்களின் நிருவாக அதிகாரப் பிரிவினால் வாக்களிப்பதற்கு செல்வதற்கு விடுமுறை பெற்றுக் கொள்ளும் போது தோன்றியுள்ள சிரமங்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிக்கையிடப்பட்டமையினால் அம் மாவட்டங்களில் அமையப்பெற்றுள்ள தோட்டங்களுக்குரிய பெருந்தோட்ட கம்பனிகளின் தலைவர்களுக்கும், பொது முகாமையாளர்களுக்கும் மற்றும் தலைமை நிறைவேற்று அலுவலர்களுக்கும் குறித்த தரப்பினருக்கு 04 மணித்தியாலங்கள் வரை வாக்களிக்கச் செல்வதற்கு சம்பளத்துடனான விடுமுறை வழங்கல் கட்டாயமாக வழங்க வேண்டுமென அறிவிக்கப்பட்டது. இது தொடர்பான தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக குறித்த தோட்ட நிருவாக அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்ற பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, அரச வளங்கள் மற்றும் தொழில் விருத்தி அமைச்சு மற்றும் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

வாக்காளர்களின் ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்ளல்.

101. 2014 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் 2004.11.18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதோடு இதன் மூலம் இலங்கையில் நடாத்தப்படுகின்ற ஒவ்வொரு தேர்தல்களிலும் வாக்கெடுப்பு நிலையத்தை வாக்காளருக்கு வாக்குச் சீட்டொன்றை வழங்குவதற்கு முன்னர் வாக்காளரின் செல்லுபடியான ஆள் அடையாள ஆவணம் ஒன்றை பரீட்சித்துப் பார்த்து அவரின் பெயர் மற்றும் ஆள் அடையாளத்தை உறுதி செய்து கொள்ளல் வேண்டும். வாக்காளரின் செல்லுபடியான ஆள் அடையாள ஆவணத்தை வாக்கெடுப்பு நிலையத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவருக்கு பரீட்சித்துப் பார்ப்பதற்கு வாக்காளர் இடமளிக்கவில்லை எனில், அல்லது வாக்காளரின் ஆளடையாளம் தொடர்பாக திருப்த்தியடைய முடியாது என பரிசீலனையின் போது தெரியவரின் அவ்வாறான வாக்காளரொருவருக்கு எவ்விதமான வாக்குச்சீட்டொன்றையும் விநியோகிக்கக்கூடாதென மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின 36 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் காரணமாக வாக்குச் சீட்டொன்று விநியோகிக்கப்படாத வாக்களர்களின் விபரங்கள் தேர்தல் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள "ஈ" படிவத்தின் மூலம் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

102. வாக்காளரிடம் இருக்க வேண்டிய ஆளடையாள ஆவணம் இலங்கை அரசினால் விநியோகிக்கப்பட்ட ஆளடையாள ஆவணமொன்றாக இருக்க வேண்டுமென சட்டத்தின் 4.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் நிறைவேற்றப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருடம் நிறைவடைந்த பின்னர் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென சட்டத்தின் முதலாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வாக்களிப்பதற்கு உரித்துக்கொண்டுள்ள அனைத்து நபர்களும் அடையாள அட்டையொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் இச்சட்ட ஏற்பாடுகள் காரணமாக வாக்காளர்களின் வாக்களித்தல் தவிர்க்கப்படாமை ஆகிய விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் கீழே காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

(அ) 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிதல் சட்டத்தில் 14 ஆம் பிரிவின் கீழ் அடையாள அட்டை விநியோகித்தல் தொடர்பில் அனைத்து நிருவாக அலுவல்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு/ தேர்தல்கள் ஆணையாளர் திருப்தியடைதல் வேண்டும். அந்த விடயங்களை உறுதிபடுத்தி அச்சான்றிதழை வர்த்தமானியில் வெளியிடப்படல் வேண்டும்.

(ஆ) அச்சான்றிதழை பகிரங்கப்படுத்துவதற்கு முன்னர் அடையாள அட்டை விநியோகிக்கப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள நிருவாக நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசியல் கட்சிகளின் முகவர்களின் கருத்துக்களுக்குத் தேர்தல்கள் ஆணையாளர் கவனம் செலுத்துதல் வேண்டும்.

(இ) தேர்தல்கள் ஆணையாளரின் சான்றிதழை விநியோகிப்பதற்கு முன்னர் அவரால் ஆட்பதிவு

ஆணையாளரின் சான்றிதழ் அனைத்து தேர்தல் மாவட்டங்கள் தொடர்பிலும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

103. மேலே கூறப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்காக தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் ஆட்பதிவு ஆணையாளருக்கு "மென்டாமூஸ்" கட்டளையொன்றின் மூலம் அறிவிக்குமாறு நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (பெபரல்) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் சீஏ (ரீட்)356/2008 ஆம் இலக்க விண்ணப்பமொன்றின் மூலம் கோரப்பட்டது. குறிப்பாக அச்சந்தர்ப்பத்தில் எதிர்காலத்தில் நடாத்தப்படவிருந்த கிழக்கு மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலுக்குரியதாக மேற்குறித்த சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அலுவலர்களை அறிவுறுத்துமாறும் முறைப்பாட்டாளர்களால் கோரப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் இதனையொத்த மனுவொன்றைச் சமர்ப்பித்திருந்த பெபரல் அமைப்பின் CA writ 1 / 2006 ஆம் இலக்க மனு தொடர்பான விசாரணையின் போது தேசிய அடையாள அட்டை இல்லாமை வாக்காளர்களின் ஆளடையாளத்தைப் பரீட்சிப்பதற்காக மாற்று ஆளடையாள ஆவணமொன்றை ஏற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டமையால், அச்சந்தர்ப்பத்தில் அமுல்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த குறித்த மனு முறைப்பாட்டாளரால் கேட்டு விலக்கிக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர் நடாத்தப்பட்ட அனைத்து தேர்தல்களிலும் அவ்வாறான ஆளடையாள ஆவணத்தை ஏற்றுக் கொண்டு உரிய அலுவல்களை மேற்கொள்வதற்கு தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கையெடுத்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் விடயங்களை முன்வைத்தார்.

104. அதற்கமைய, இந்த மாகாண சபைத் தேர்தலின் போது தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக கீழே காட்டப்பட்டுள்ள ஆளடையாள ஆவணமொன்று வாக்குச் சீட்டை விநியோகிப்பதற்கு முன்னர் வாக்காளர்களுக்குரியதாக பரீட்சித்துப் பார்த்து வாக்குச் சீட்டொன்றை விநியோகிப்பதற்கு குறித்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

1. செல்லுபடியான கடவுச் சீட்டு
2. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
3. அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை
4. முதியோர் அடையாள அட்டை
5. ஆட்பதிவு திணைக்களத்தினால் விநியோகம் செய்யப்படுகின்ற மத குருமார்களுக்கான அடையாள அட்டை

105. தேசிய அடையாள அட்டை அல்லது மேற்குறித்த மாற்று அடையாள அட்டையொன்றைச் சமர்ப்பிக்க முடியாத வாக்காளர்களுக்கு தேர்தல் நடாத்தப்படுகின்ற மாவட்டங்களின் மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் மூலம் தற்காலிக அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

தேர்தல்கள் திணைக்களத்தினால் தற்காலிக அடையாள அட்டைகளை விநியோகித்தல்

106. தேசிய அடையாள அட்டை அல்லது மேற்குறிக்கப்பட்டுள்ள செல்லுபடியான அடையாள அட்டையொன்றில்லாத வாக்காளர்களுக்கு கிராம அலுவலர்களினாலும் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் பணியாற்றுகின்ற அத்தோட்டங்களில் வதிந்துள்ளவர்களுக்காக தோட்ட அத்தியட்சகர் மூலமும் தற்காலிக அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் தேர்தல்கள் ஆணையாளரால் குறித்த மாவட்டங்களின் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. தேயிலை மற்றும் இறப்பர் போன்ற பயிர்களைக் கொண்ட தோட்டங்களில் வதிந்திருந்து பணியாற்றுகின்ற தோட்ட ஊழியர்களுக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் இவ்வாறான அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்குத் தேவையான விபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்தல் அவர்கள் வதிந்துள்ள தோட்டங்களில் தோட்ட அத்தியட்சகரினால் மேற்கொள்வது அவசியமாகும். தேர்தல்கள் திணைக்களத்தினால் இந்த தற்காலிக அடையாள அட்டைகளை விநியோகிக்கும் போது குறிப்பாக இந்த தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள தேருநர் இடாப்பில் தேசிய அடையாள அட்டை குறிப்பிடப்படாதுள்ள வாக்காளர்களுக்கு முக்கியத்துவம் வழங்குமாறு குறித்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

107. அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காகத் தேவையான விண்ணப்பங்கள் கிராம அலுவலர் அலுவலகங்கள் மற்றும் தோட்ட அத்தியட்சகர் அலுவலகங்களில் வைக்கப்பட்டன. அவற்றை பூரணப்படுத்தி 1¼x1 அளவுடைய தனது இரண்டு புகைப்படங்களைக் குறித்த கிராம அலுவலரின் அல்லது தோட்ட அத்தியட்சகரின் சான்றுப்படுத்தல் சகிதம் அவ்வலுவலர்கள் ஊடாக

தேர்தல்கள் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்குக் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் சார்பாக புகைப்படத்தைப் பயன்படுத்தி தற்காலிக அடையாள அட்டைகள் தயாரிக்கப்பட்டு தேர்தலுக்கு முன்னர் குறித்த வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக கிராம அலுவலர் அலுவலகங்களுக்கும் மற்றும் தோட்ட அத்தியட்சகர் அலுவலகங்களுக்கும் கையளித்தல் மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் பொறுப்பொன்றாகும். இந்த அடையாள அட்டைகளை விநியோகிக்கும் போது ஏற்படக்கூடிய தாமதத்தைத் தவிர்ப்பதற்காக பெரும்பாலும் வேறு மாவட்டங்களின் உதவி/ சிரேட்ட உதவி/ பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்கள் தேர்தல் நடாத்தப்பட்ட மாவட்டங்களின் தேர்தல் அலுவலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டனர். வாக்குச் சீட்டொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு வாக்காளர் வாக்கெடுப்பு நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டிய ஆளடையாள ஆவணம் மற்றும் அவ்வாறானதொன்று இல்லாதவர்கள் தற்காலிக அடையாள அட்டையொன்றை தேர்தல்கள் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய முறை தொடர்பாக பத்திரிகை விளம்பரங்கள் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டன. அவ்வாறு 2012.09.08 ஆம் திகதி கிழக்கு, வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகள் தேர்தல்களுக்கான அறிவித்தலொன்று வெளியிடப்பட்டது. அதேபோன்ற அறிவித்தலொன்று மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்காக 2013.08.08 ஆம் திகதியும் மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்காக 2014.02.28 ஆம் திகதியும் ஊவா மாகாண சபைக்காக 2014.08.18 ஆம் திகதியும் பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. ஊவா மாகாண சபைத் தேர்தலுக்காக வெளியிடப்பட்ட அந்த விளம்பரம் 22 ஆம் இலக்க உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

V ஆம் பகுதி

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் முகவர்கள், அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுடன் கலந்துரையாடல்.

108. முழுமையான தேர்தல் செயற்பாடுகளை நோக்கும் போது தேர்தல் ஒன்றில் போட்டியிடுவதற்காக முன்வருகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தேர்தல் செயற்பாடொன்றின் போது மிக முக்கியமான ஒரு தரப்பாகும். தேர்தல் சட்டங்களை நடைமுறையில் செயற்படுத்துவதற்கான பொறுப்பு கையளிக்கப்படுகின்ற தரப்புக்களும் தேர்தல் நிருவாகத்திற்காக செயற்படுகின்ற தரப்பினரும் மேற்கொள்கின்ற முயற்சிகள் வெற்றியடைவதற்காக தமது வேட்பாளர்களை போட்டியிட வைத்துள்ள அரசியல் கட்சிகளினால் வழங்கப்படுகின்ற ஒத்துழைப்பு முழுமையான தேர்தலையும் வெற்றிகரமாக நடாத்துவதற்கு பெரிதும் பங்களிப்பு செய்கின்றதென்பதை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இந்த நிலைமையை நோக்கும் போது தேர்தலொன்று தொடர்பாக வேட்புமனு கையேற்ற பின்னர், போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுடன் பிரதான அடிப்படையில் தேர்தல்கள் ஆணையாளர் கலந்துரையாடுதல் தேர்தல் நடாத்தப்படுகின்ற மாவட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுடன் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் நடாத்தப்படுகின்ற கலந்துரையாடல்கள் என்பவற்றைத் தேர்தலொன்றின் முக்கியமான கட்டங்களாக குறிப்பிட முடியும். 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கிழக்கு, வடமத்திய மற்றும் சப்பிரகமுவ ஆகிய மாகாண சபைத் தேர்தல்கள் சந்தர்ப்பம் தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதியாக நடாத்தப்பட்ட ஊவா மாகாண சபைத் தேர்தல்கள் வரை நடாத்தப்பட்ட அனைத்து மாகாண சபைத் தேர்தல்களிலும் ஒவ்வொரு தேர்தலுக்குரியதாகவும் இவ்வாறான கூட்டங்கள் ஆகக் குறைந்தது 4 அல்லது 5 வீதம் நடாத்தப்பட்டுள்ளன. வேட்புமனுக் கையேற்றல் காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் முகவர்களுடன் நடாத்தப்படுகின்ற இவ்வாறான கலந்துரையாடல்கள் வேட்புமனுக் கையேற்கப்பட்ட பின்னர் தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும். இக்கூட்டங்களின் போது போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தேர்தல் சட்டங்களுக்கமைய அறிவுறுத்துவதற்கும் குறித்த கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிடமிருந்து தேர்தல் செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற ஒத்துழைப்புத் தொடர்பாகவும் முகவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

109. வேட்புமனுக் கையளிக்கப்பட்ட பின்னர் தேர்தல் அலுவல்கள் மற்றும் வாக்கெண்ணல் பணிகளுக்குரியதாக கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் முகவர்களை கலந்து கொள்ளச் செய்வதன் முக்கியத்துவம் தொடர்பாக குறித்த தரப்புக்கள் அறிவுறுத்தப்பட்டதோடு, தேர்தல் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்தல் மற்றும் தேர்தல் செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தல் தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத்தினால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக இக்கூட்டங்களின் போது தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் தெளிவுபடுத்தப்பட்டன.

110. இந்த கூட்டங்களில் கலந்து கொண்ட பொலிஸ் மா அதிபரிடம் அல்லது பிரதி பொலிஸ் மா அதிபரிடம் கட்சி முகவர்களுக்கு தேர்தலுடன் தொடர்புடையதாக பொலிஸாரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய அறிவுறுத்தல்களை அறிந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றதோடு, அவர்களால் பொலிஸாருக்கு அறிவிப்பதற்கிருந்த விடயங்களையும் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. பிரதேச மட்டத்தில் பொலிஸ் அலுவலர்களின் சேவைகள் எதிர்பார்த்த மட்டத்தில் இடம்பெறாத போது அது தொடர்பாக உயர்மட்ட பொலிஸ் அலுவலர்களுக்கு அறிவித்து தேவையான உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு இக்கூட்டங்கள் மூலம் கட்சி முகவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

111. இவ்வாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் தலைமையில் மாவட்டங்களில் நடாத்தப்பட்ட அரசியல் கட்சி முகவர்களின் கூட்டங்களின் போது சமர்ப்பிக்கப்பட்ட சில விடயங்கள் அரசியல் கட்சி செயலாளர்களின் அவதானத்திற்கு கொண்டு செல்வதற்காக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. அதேபோன்று தேர்தல்கள் ஆணையாளரால்

அரசியல் கட்சிகளின் முகவர்களோடு நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் போது எடுக்கப்பட்ட சில முடிவுகள் தேவைப்பாடுகளுக்கமைய தெரிவத்தாட்சி அலுவலர்கள் மூலம் மாவட்ட முகவர்களுக்கு அறிவிக்கப்பட்டன. இந்த கலந்துரையாடலின் போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பான அறிக்கை எழுத்து மூலம் பேணப்படுவதால், அவ்வறிக்கைகள் எதிர்காலத்தில் முன்னைய தேர்தல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கு மிகவும் பயனுடையதாகும். இக்கூட்டங்களின் போது தேர்தல்கள் ஆணையாளர் குறித்த பிரச்சினை தொடர்பாக தெரிவித்துள்ள பதில்கள் தேர்தல்கள் திணைக்களம் போன்றே மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்பான புரிந்துணர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும், குறித்த கட்சிகள் முகங்கொடுத்த பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்கும் இவ்வறிக்கை மூலம் சாத்தியம் கிடைக்கும். இக் கலந்துரையாடல்களில் பொலிஸ் மா அதிபர் அல்லது பிரதி பொலிஸ் மா அதிபரொருவர் பொலிஸாரை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்ததோடு, மாவட்ட மட்டத்தில் கூட்டங்களுக்கு பிரதேச மட்ட பிரதான பொலிஸ் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

112. இக்கூட்டங்களில் கட்சி செயலாளர்களுக்கு கலந்து கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் அவர்கள் சார்பாக கட்சியின் பொறுப்புமிக்க அலுவலர்களை கலந்துகொள்ளச் செய்வதற்கு அவர்கள் நடவடிக்கையெடுத்தனர். இவ்வாறான கூட்டங்களில் கட்சியொன்றின் ஒரே முகவர் தொடர்ச்சியாகக் கலந்து கொள்வதில் சிரமங்கள் உள்ள காரணத்தால் ஒவ்வொரு கூட்டங்களிலும் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் மற்றும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் கட்சிகள் அறிந்து கொள்வதற்காக கூட்டத்தில் கட்சியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஒன்றுக்கு மேற்பட்ட முகவர்கள் கலந்து கொண்ட சந்தர்ப்பங்களையும் காண முடிந்தது.

113. வேட்புமனுக் கையளித்தல் முறை மற்றும் அவை கையேற்கப்படுகின்ற முறைகள் அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகள் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், அஞ்சல் வாக்கு விநியோகம் அடையாளமிடும் சந்தர்ப்பங்களுக்கு நியமனம் செய்யப்படுகின்ற முகவர்கள் வாக்கெடுப்பு நிலைய அலுவல்கள் மற்றும் தேர்தல் செயற்பாடுகள் போன்றே வாக்கெண்ணல் நிகழ்ச்சித் திட்டம், அவ்வாறான சந்தர்ப்பங்களுக்கு முகவர்களை நியமனம் செய்தல் போன்ற அலுவல்கள் மேற்கொள்ள வேண்டிய முறை தொடர்பாகவும் இக்கூட்டங்களின் போது விஷேடமாக அரசியல் கட்சிகள் முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழு தலைவர்கள் ஆகியோரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

114. தேர்தல்கள் ஆணையாளரின் தலைமையில் தேர்தல்கள் செயலகத்தில் நடாத்தப்பட்ட இக்கூட்டங்களுக்கு எல்லா சந்தர்ப்பங்களிலும் தேர்தல் அலுவல்களோடு தொடர்புடைய பிரதி பொலிஸ் மா அதிபர் கலந்து கொண்டதோடு, சில சந்தர்ப்பங்களில் பொலிஸ் மா அதிபரும் கலந்து கொண்டார். அதற்கு மேலதிகமாக சில கூட்டங்களில் சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் போன்ற அலுவலர்களும் கலந்து கொண்டதோடு, இவ்வலுவலர்களின் பங்கேற்பு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழு முகவர்களுக்கு தமது தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக பயனுள்ளதாக அமைந்ததென்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். தேர்தல் பிரச்சார கூட்டங்களுக்கு அனுமதிப் பெற்றுக்கொள்ளல் கூட்டங்களின் போது ஒலிபெருக்கி இயந்திரப் பாவனைக்கான அனுமதிப் பெற்றுக் கொள்ளல். தேர்தல் பிரச்சார அலுவல்களுக்காக தாபிக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் தொடர்பாக அறிவிப்பதற்கும் மற்றும் வேறு தேர்தல் பிரச்சாரங்களோடு தொடர்புடைய செயற்பாடுகள் தொடர்பாக அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள், வேட்பாளர்கள் ஆகியோர் தேர்தல் சட்டங்களின் கீழ் செயற்பட வேண்டிய முறை தொடர்பில் இக்கூட்டங்களின் போது அறிவுறுத்துவதற்கு பொலிஸாரினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

115. பிரதேச மட்டத்தில் தமது பிரச்சார அலுவல்களுக்காக தமது பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள பொலிஸ் நிலையங்களில் இருந்து ஏதேனும் தடையொன்று ஏற்பட்டதெனில் அல்லது நியாயமற்ற முறையில் பொலிஸார் கடமைகளை மேற்கொண்டிருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாக நேரடியான பொலிஸ் மா அதிபருக்கு விடயங்களைச் சமர்ப்பித்து ஏதேனும் உதவியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு கட்சி முகவர்களுக்கு இக்கூட்டங்களின் போது அவகாசம் கிடைக்கப்பெற்றது.

116. தேர்தல் செயற்பாடுகளின் போது போட்டியிடுகின்ற சில அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் சில தேர்தல் ஒழுங்கமைப்பு அலுவல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுக்க தேர்தல்கள் ஆணையாளருக்கு சாத்தியம் கிடைத்தது. மாகாண சபைகளுக்காக போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் உள்ளூர் அதிகார சபை உறுப்பினர் பதவிகளை வகித்துக் கொண்டு தமது தேர்தல் பிரச்சார அலுவல்களில் ஈடுபடுதல் பிரச்சினைக்குரிய ஒரு விடயமாகக் காணப்பட்டது. மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்திற்கமைய அவ்வாறானவர்கள் அவரின் உள்ளூர் அதிகார சபையில் வகிக்கின்ற பதவியிலிருந்து கேட்டுவிலகும் தேவைப்பாடொன்று அல்லது அவர் வகிக்கின்ற அந்த அலுவல்களிலிருந்து விடுமுறை பெற்றிருத்தல் தேவையற்றது. இருப்பினும், குறிப்பாக அரச ஆதனங்களைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தமது தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுதல் பிரச்சினைக்குரிய ஒன்று என்பதால், அவ்வாறான வேட்பாளர்களை தேர்தலில் போட்டியிட நிறுத்தியிருந்த அரசியல் கட்சிகளின் செயலாளர்களிடம் கோரிக்கை முன்வைப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் நடவடிக்கையெடுக்கப்பட்டது. மாகாண சபைத் தேர்தலுக்காகப் போட்டியிட்ட உள்ளூர் அதிகார சபை முகவர்களுக்கு அந்த உள்ளூர் அதிகார சபையூடாக விடுமுறை பெற்றுக் கொண்டு மாகாண சபைக்காக போட்டியிடுவதற்கு அறிவுறுத்தல் வழங்குமாறு அரசியல் கட்சிகளின் செயலாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை தேர்தல் கண்காணிப்பு அலுவல்களிலீடுபடுத்தல் தொடர்பில் அரசியல் கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்து பார்த்து வட மாகாண சபைத் தேர்தலின் போது அதற்காக வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை இந்நாட்டிற்கு அழைப்பதற்குத் தேர்தல்கள் ஆணையாளர் தனது இணக்கத்தை, இவ்வாறு கட்சி முகவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது காணப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் தெரிவித்தார். இதற்கமைய, இக்கட்சி முகவர்களின் கூட்டம் தேர்தல் சந்தர்ப்பத்தில் சில இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் உதவியாக அமைகின்றதென்பதை சுட்டிக்காட்ட முடியும்.

117. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்களுக்காக மாவட்ட மட்டத்தில் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடுகின்ற சில வேட்பாளர்களின் செயற்பாடுகள் காரணமாக தேர்தல் சட்டங்களை செயல்வலுப்படுத்தும் போது சிக்கலான நிலைமையொன்று ஏற்படுகின்றது. சில வேட்பாளர்கள் தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கின்ற பொலிஸ் அலுவலர்களுடன் மோதல்களை ஏற்படுத்திக் கொண்ட சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. தேர்தல் காலப்பகுதியொன்றின் போது ஏற்படுகின்ற மோதல் முழுமையான தேர்தல் காலப்பகுதியினுள்ளும் காணப்படுமாயின், அது தேர்தல் சட்டங்களின் செயல்வலுவாக்கம் வீழ்ச்சியடைவதற்கும் பிரதேச மட்டத்தில் சட்டமும் ஒழுங்கும் வீழ்ச்சியடைவதற்கும் காரணமாக அமையும். இதன் காரணமாக இக்கூட்டங்களில் கலந்து கொண்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் ஏனைய பொலிஸ் அலுவலர்களால் பிரதேச மட்டத்தில் அரசியல்வாதிகள் பொலிஸ் அலுவலர்களுடன் ஏற்படுத்திக் கொள்கின்ற இவ்வாறான மோதல்கள் தொடர்பில் இக்கூட்டங்களின் போது தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் முகவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தேர்தல்கள் திணைக்களத்திற்கு மற்றும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தேர்தல் சட்டங்கள் மீறப்படுகின்றமை தொடர்பாக மாவட்டங்களிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் மற்றும் அறிக்கைகளின் அடிப்படையில் ஒவ்வொரு கட்சிகளின் வேட்பாளர்கள் அதில் தொடர்புபட்டுள்ள முறையையும் கருத்தில் கொண்டு கட்சி செயலாளர்களுக்கு அந்நிலைமைகளை அறிவிப்பதற்குத் தேர்தல்கள் ஆணையாளருக்கு இக்கூட்டங்களின் போது வாய்ப்புக் கிட்டியது. இதன் காரணமாக பொலிஸார் மற்றும் தேர்தல்கள் ஆணையாளருக்கு ஒரு சில வேட்பாளர்களின் பிரச்சினைக்குரிய அலுவல்கள் தொடர்பில் நேரடியாகக் கட்சி செயலாளர்களுக்கு அறிவித்து தேர்தல் செயற்பாடுகளில் ஏற்படக்கூடிய இடையூறுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு பெரும்பாலும் வாய்ப்புக் கிடைத்ததென்பதை குறிப்பிட முடியும்.

118. சில அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் பிரச்சார கூட்டங்களை நடாத்துவதற்காக இடங்களை குறித்தொதுக்குவதற்கு கோரப்பட்ட சந்தர்ப்பங்களில் சில உள்ளூர் அதிகார சபைகளினால் நியாயமற்ற முடிவுகள் வழங்கப்பட்டுள்ளது என்பது போன்ற விடயங்களும் இக்கூட்டங்களில் முன்வைக்கப்பட்டன. சில சந்தர்ப்பங்களில்

கூட்டங்களை நடாத்துவதற்காக இடங்களை ஒதுக்கிக் கொள்வதற்கு முன்கூட்டியே செய்யப்பட்ட கோரிக்கைகள் கூட எவ்வித நியாயமான காரணங்களுமின்றி ஏற்றுக் கொள்ளப்படாத உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அசாதாரணத்திற்குட்படுத்தப்பட்ட கட்சிகளுக்கு தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்க தேர்தல்கள் ஆணையாளரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

119. அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் தேர்தல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தல் தொடர்பில் சில அரசியல் கட்சிகளுக்கும் மற்றும் வேட்பாளர்களுக்கும் எதிராக தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அவ்வாறான முறைப்பாடுகளில் உண்மைத்தன்மை காணப்படுவதாக விடயங்கள் தெரியவந்த சந்தர்ப்பங்களில் குறிப்பாக அரச வாகனங்கள் பிரச்சார அலுவல்களிலீடுபடுதல் போன்ற சந்தர்ப்பங்களில் உண்மை தகவல்களை வழங்க அல்லது முறைப்பாட்டின் உண்மை தன்மையை ஏற்றுக் கொள்ள அரசியல் கட்சிகள் விருப்பம் காட்டவில்லையென்பது தெரியவந்த ஒரு விடயமாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் திணைக்கள அலுவலர்களின் அல்லது பொலிஸாரின் ஒத்துழைப்புடன் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய சம்பவங்களோடு தொடர்புடைய முறைப்பாடுகள் பற்றிய சரியான தகவல்கள் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு அறிவுறுத்துவதற்கு இவ்வாறான கூட்டங்களின் போது தேர்தல்கள் ஆணையாளருக்கு வாய்ப்பு கிடைக்கப்பெற்றது.

120. அரசியல் கட்சிகளுடன் மேற்கொள்ளப்பட்டு உள்ள இவ்வாறான கலந்துரையாடல்கள் இலங்கை பொலிஸ் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட தேர்தல் நிருவாக தரப்பினரும் தேர்தல் ஒழுங்கமைப்புக்குரிய அலுவல்களை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு உதவியாக அமைந்தார்களென்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் அவற்றின் வேட்பாளர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை ஒன்றை வெளியிடுதல்

121. 1981 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தொடர்பாக பல ஏற்பாடுகள் 2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டன. அத் திருத்தங்களுக்கமைய பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் 8 ஆம் பிரிவின் கீழ் தேர்தல் சட்டத்தின் போது தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகளுக்கு மற்றும் வேட்பாளர்களுக்குரிய ஒழுக்க நெறிக் கோவையொன்றை வெளியிடுவதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. இந்த அதிகாரத்திற்கமைய தேர்தல் ஒன்றின் போது தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் முதற் தடவையாக இவ்வாறான ஒழுக்க நெறிக் கோவையொன்று 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளுக்காக நடாத்தப்பட்ட தேர்தலின் போது வெளியிடப்பட்டது. அதன் பின்னர் நடாத்தப்பட்ட ஒவ்வொரு மாகாண சபைத் தேர்தல்களின் போதும் இவ்வாறான ஒழுக்க நெறிக் கோவை வெளியிடப்பட்டது.

122. இவ்வாறான ஒழுக்க நெறிக் கோவையின் மூலம் அரசியல் கட்சியொன்றினால் அல்லது வேட்பாளர்களால் தேர்தல் செயற்பாடுகளின் போது தேர்தல் சட்டங்களை மீறப்படுவதை முழுமையாக நிறுத்துவதற்கான சாத்தியப்பாடொன்று காணப்படாத போதிலும் குறித்த தேர்தல் சட்டங்களை பாதுகாப்பதற்கு அவர்களுக்குள்ள பொறுப்புத் தொடர்பாக அவர்களுக்கும் மற்றும் வாக்காளர்கள் உள்ளிட்ட ஏனைய தரப்பினர்களுக்கும் அதன் மூலம் புரிந்துணர்வொன்று ஏற்படும்.

123. இந்த ஒழுக்க நெறிக் கோவைக்கு இந் நாட்டில் காணப்படுகின்ற தேர்தல் சட்டங்களடங்கலாக ஏனைய சட்டங்கள் அனைத்தும் பாதுகாக்கப்படும் விதத்திலும் மற்றும் தேர்தல் காலப்பகுதியினுள் சட்டம் மற்றும் ஒழுங்கு பாதுகாக்கப்படும் விதத்திலும் செயற்படுதல் ஒழுக்கமாக தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுதல், ஏனைய எதிர்த் தரப்பினரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில் செயற்படுதல், சட்ட ரீதியாக தேர்தல் பிரச்சார அலுவல்களில் ஈடுபடுதல் வாக்கெடுப்புத் தினம் மற்றும் வாக்கெண்ணல் அலுவல்களின் போது சட்ட ரீதியாக அப் பணிகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற விடயங்களோடு தொடர்புடைய பல அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வாறான ஒழுக்க நெறிக்கோவை 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களின் போதும் தேர்தல்கள்

ஆணையாளர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இறுதியாக நடாத்தப்பட்ட ஊவா மாகாண சபைத் தேர்தலுக்குரியதாக அவ்வாறு வெளியிடப்பட்ட ஒழுக்க நெறிக் கோவை உப அட்டவணை 26 இல் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் வழிகாட்டு நெறிகள்

124. மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்ட போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் முகவர்களோடு தேர்தல்கள் ஆணையாளர் 2014.03.04 ஆம் திகதி நடாத்திய கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட பல அங்கத்தவர்களும் அவ் ஆணைக்குழுவின் அலுவலர்கள் சிலரும் கலந்து கொண்டு அரசியல் கட்சிகளுக்காக தேர்தல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஒழுக்க நெறிக் கோவை அதற்கு மேலதிகமாக தேர்தல் கடமைகளில் தொடர்புபடுகின்ற அலுவலர்களுக்காக அவ் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டு நெறி உள்ளடக்கப்பட்ட நூல் ஒன்று கூட்டத்தில் கலந்து கொண்டு முகவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்ற அரச அலுவலர்களுக்காக வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டு நெறி 28 ஆம் இலக்க உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

125. தேர்தல் வழிகாட்டல்களாக மேற்படி ஆவணத்தில் உட்சேர்க்கப்பட்ட விடயங்கள் சுருக்கமாக கீழே காட்டப்பட்டுள்ளது.

I. தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளைக் கையேற்றல் மற்றும் விசாரித்தல் அரசியலமைப்பின் 12 ஆம் உறுப்புரையின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டுமெனவும் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு கிடைக்கப்பெறுவதற்கு உரிமையுண்டெனவும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
II. முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் பக்கச்சார்பு இல்லாமல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
III. தேர்தல் வன்முறை செயற்பாடுகள் தொடர்பான சட்டங்கள் நியாயமாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்பதோடு, எவரொருவரும் அரசியல் கருத்துக்கள் காரணமாக நியாயமற்ற முறையில் கணிக்கப்படுவதற்கோ அல்லது பாகுபாடு காட்டப்படுவதற்கோ ஆளாக்கப்படல் கூடாது.
IV. தேர்தல் பிரச்சார கூட்டங்களுக்கு அனுமதி வழங்கல் சட்டத்திற்கமைய மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதோடு, ஊர்வலங்களுக்காக சட்டத்திற்கமைய செயற்படுதல் வேண்டும்.
V. தேர்தல் பிரச்சார அலுவல்கள் சட்டங்கள் மீறப்படும் விதத்தில் நடாத்துவதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும்.
VI. வாக்குரிமையை மீறுகின்ற நபர்களுக்கெதிராக கடுமையாக நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.
VII. வாக்கெடுப்பு நிலையங்களுக்கு தேவையானளவு பாதுகாப்பை வழங்கி நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.
VIII. தேர்தல் சட்டங்களை மீறி அரச ஆதனங்களை துஷ்பிரயோகம் செய்கின்றவர்களுக்கெதிராக கடுமையான விதத்தில் சட்டங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
IX. தேர்தலுக்கு பின்னரான துன்புறுத்தல்களைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.
X. எந்தவொரு அலுவலரும் வேறு தரப்புக்களை சித்திரவதை அல்லது தண்டனைக்குட்படுத்துவதில் கலந்து கொள்ளாதிருத்தல் வேண்டும்.

VI ஆம் பகுதி

பணியாட் குழுவினர் மற்றும் போக்குவரத்து அலுவல்கள்

பணிக்குழுவை ஈடுபடுத்துதல்

126. இந்த மாகாண சபைத் தேர்தலுக்கு அவசியமான பணிக்குழுவினரைத் தேர்ந்தெடுப்பதற்கு, அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை ஊழியர்களதும், ஆசிரிய சேவையின் ஆசிரியர்களதும் கல்வி நிருவாக சேவையிலுள்ளவர்களதும் விபரங்களை குறித்த மாவட்டங்களின் மாவட்ட பிரதி/ சிரேஷ்ட உதவி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்குத் தாமதமின்றி அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, குறித்த மாகாண சபைகள் கலைக்கப்பட்டவுடன், தேர்தல்கள் ஆணையாளரால் குறித்த மாகாண சபைகளின் பிரதான செயலாளர்களுக்கும், மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

127. தேர்தல் நடாத்தப்படுகின்ற தினத்திலும், அதற்கு முன்னைய தினத்திலும் பொதுமக்கள் தேர்தல் நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டுவர். அரச அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலர்களது சேவை, தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதனால், குறித்த இரண்டு தினங்களிலும் அரச அலுவலகங்களில் பொதுமக்களின் வருகை வெகுவாகக் குறைவடைகின்றது. ஆகையால் அத்தியாவசிய தேவைகளுக்காக வருகை தருகின்ற சிறு தொகையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக குறைந்த அளவிலான பணிக்குழுவினர் மாத்திரம் அலுவலகங்களில் இருத்தல் போதுமானதெனக் கருதப்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு அலுவலகக் கடமைகளுக்காக அத்தியாவசியப் பணிக்குழுவினர் சிலரை அலுவலகங்களில் வைத்துக் கொள்வதற்கும், ஏனைய சகல அலுவலர்களையும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கும் ஏற்ற வகையில் குறித்த அலுவலர்கள் தமது சுய விபரங்கள் அடங்கிய தரவுப் பத்திரங்களை தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளரால் அரச நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

128. அரச நிறுவனத் தலைவர்கள் தமது ஊழியர்களின் தகவல்களை தேர்தல்கள் திணைக்களத்திற்கோ அல்லது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கோ சமர்ப்பித்த பின்னர், ஒரு சில அலுவலர்கள் பல்வேறு காரணங்களை முன் வைத்து தேர்தல் கடமைகளிலிருந்து தங்களை விடுவிக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். ஆகையால் அலுவலர்களின் தகவல்கள் அடங்கிய தரவுப் பத்திரங்கள் மற்றும் சகல ஊழியர்களது விபரங்களும் உட்படுத்திய பின்னர், அத்தியாவசியக் கடமைகள் நிமித்தம் அல்லது சுகயீனம் காரணமாக ஒரு சில அலுவலர்களைத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்த முடியாத பட்சத்தில், குறித்த அலுவலர்களின் தரவுப் பத்திரங்களுடன் அவர்களது வேண்டுகோள் இணைக்கப்பட்டு நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன் மற்றுமொரு கடிதம் ஒன்றின் மூலம் விடுவிப்புக்கான வேண்டுகோள் சமர்ப்பிக்கப்படும் போது நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

129. ஏதேனும் தேர்தலொன்றில் இதற்கு முன்னர் ஒரு வேட்பாளராக போட்டியிட்டிருந்தால், அல்லது இம்முறை தேர்தலுக்கான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு உத்தேசித்துள்ள அலுவலர்களாக இருந்தால், ஊனமுற்றவர்களாகவோ, சுகயீனம் காரணமாகவோ தூரப் பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தால், எதிர்வரும் மூன்று மாதங்களில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுவதாக இருந்தால், தற்காலிக, அமய, ஓய்வூதியம் பெறும் ஒருவர் மீண்டும் சேவையிலீடுபடுத்தப்பட்ட அலுவலர்களாக இருந்தால் அவர்களது விபரங்களையோ, தரவுப் பத்திரங்களையோ சமர்ப்பித்தலாகாது என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

130. இதற்கு முன்னர் இடம்பெற்ற தேர்தல்களின் போது நிறுவனத் தலைவர்கள் தமது பணிக்குழுவினர் அனைவரினதும் பெயர் மற்றும் விபரங்களை நிறுவனத்திற்குரிய தரவுப் பத்திரங்களில் உட்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்கின்ற தவறான பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்துள்ளனர். இதன் காரணமாக ஒரு சில அரச ஊழியர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் வாய்ப்புக்களை இழந்துள்ளனர். இவ்வாறான நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களது ஆலோசனையின் பிரகாரம், அனைத்து

ஊழியர்களதும் தகவல்கள் தரவுப் பத்திரங்களில் உட்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படல் வேண்டுமென சனாதிபதி செயலாளர் மூலம் அரச நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

131. தேர்தல் கடமைகளுக்கான அலுவலர்கள் கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், தேர்தல் நடாத்தப்பட்டு முடிவடையும் வரையான காலப்பகுதியினுள் அரச அலுவலர்கள், அரச பாடசாலைகளில் கடமையாற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரது இடமாற்றங்கள் இடம்பெறுவதனால் தேர்தல் கடமைகளுக்கும், அஞ்சல் வாக்கு நடவடிக்கைகளுக்கும் இடையூறுகள் ஏற்பட இடமுண்டு. இதன் காரணமாக தேர்தல் நடைபெறும் நிருவாக மாவட்டங்களில் கடமையாற்றும் அரச அலுவலர்களின் இடமாற்றங்கள் தேர்தல் காலத்தில் தற்காலிகமாக இடைநிறுத்தப்படல் வேண்டுமென அரச நிறுவனத் தலைவர்களுக்கும், மாகாண ஆளுநர் செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்குமாறு கடந்த மாகாண சபைத் தேர்தல்களின் போது தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் சனாதிபதிச் செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதன் பிரகாரம் குறித்த அறிவுறுத்தல்கள் சனாதிபதிச் செயலாளர் அவர்களால் அரச நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

132. தேர்தல் கடமைகள் மற்றும் ஏனைய கடமைகளுக்காக அலுவலர்கள் நியமிக்கப்படுவது தொடர்பான அறிவுறுத்தல்கள் தேர்தல்கள் ஆணையாளரால் தேர்தல் நடைபெறும் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு குறித்த வாக்களிப்பு நிலையத்திற்கான பணிக்குழுவை அலுவலர் பிரிவுகளின்படி நியமிக்கப்படுவதற்கும், வாக்கெண்ணல் நிலையங்கள் அமைக்கப்படும் கட்டிடங்களின் இடவசதிகளைக் கருத்திற் கொண்டு, அண்ணளவாக 8000 தொடக்கம் 10,000 வரை எண்ணிக்கையான வாக்காளர்கள் அடங்குகின்ற வகையில் வாக்கெண்ணல் நிலையங்களை அமைப்பதற்கும். அவ்வாறான நிலையங்களுக்கான அலுவலர்களை நியமிப்பதற்கும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

133. வாக்களிப்பு நிலையங்களுக்கும், வாக்கெண்ணல் நிலையங்களுக்கும் பணிக்குழுவினர் நியமிக்கப்படும் போது கீழ்க்கண்ட எண்ணிக்கையின் பிரகாரம் நியமிக்கப்படல் வேண்டும்.

வாக்கெடுப்பு நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழுவினர் ஈடுபடுத்தப்பட்ட விதம்

அலுவலர் வகை	பதிவு செய்யப்-பட்டுள்ள வாக்காள-ர்கள் 800 இற்கு குறைவு	பதிவு செய்யப்-பட்டுள்ள வாக்கா-ளர்கள் 801-1200	பதிவு செய்யப்-பட்டுள்ள வாக்க-ாளர்கள் 1201-1500	பதிவு செய்யப்-பட்டுள்ள வாக்க-ாளர்கள் 1500 விற்கு அதிகம்
சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்	1	1	1	1
கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர	1	1	2	2
மேலதிக தலைமை தாங்கும் அலுவலர்	1	1	2	2
எழுதுவிளைஞர்கள	4	4	8	8
மேலதிக எழுதுவிளைஞர்	-	1	2	3
அலுவலக பணியாள் ஊழியர்கள்	1	1	1	1
மொத்த எண்ணிக்கை	**8**	**9**	**16**	**17**

வாக்கெண்ணல் மண்டபமொன்றின் பணியாட்குழுவிற்காக ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை

அலுவலர் வகை	சாதாரண வாக்கெண்ணல் மண்டபம்	அஞ்சல் வாக்கெண்ணல் மண்டபம்
வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான அலுவலர்	01	01
உதவுவதற்காக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள்	08	02
சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள்	10	04
கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் எழுதுவிளைஞர்கள்	20	06
அலுவலக பணியாள் ஊழியர்கள்	02	02
மொத்த எண்ணிக்கை	**41**	**15**

134. வாக்களிப்பு நிலையங்களுக்கான பணிக்குழு மற்றும் வாக்கெண்ணல் நிலையங்களுக்கான பணிக்குழு என்பவற்றிற்கு அலுவலர்களை நியமிக்கும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு தேர்தல்கள் ஆணையாளரால் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு விஷேடமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

I. வாக்களிப்பு நிலையத்திற்கு அல்லது வாக்கு எண்ணல் நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் அந்த நிலையத்தின் கடமையாற்றும் பிரதானமான அலுவலராகவும், உயர்தர

நிலையிலுள்ள அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

II. தேர்தலுக்கு முன்னர் தேர்தல்களில் ஒரு சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலராகக் கடமையில் ஈடுபட்டிராத ஒருவர் தேர்தல் கடமைகளுக்காக இம்முறை தெரிவு செய்யப்பட்டிருப்பின் அவர் குறைந்தபட்சம் தேர்தல்களில் நான்கு தடவைகளாவது கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலராகக் கடமையாற்றியிருத்தல் வேண்டும்.

III. ஒரே அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் இருவரையோ அல்லது அதற்கு மேற்பட்டோரோ ஒரே வாக்களிப்பு நிலையத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தலாகாது.

IV. அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஒருவரது உறவினர்களாக அரச அலுவலர்கள் இருந்தால் (அவ்வாறான ஊழியர்களின் தகவல்கள் அலுவலர்களின் தரவுப்படிவத்தில் பெற்றுக் கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது) அவ்வாறான அலுவலர்களையும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தலாகாது.

V. ஏற்கனவே நடைபெற்ற தேர்தல்களில் அலுவலர்கள் எவரேனும் தேர்தல் கடமைகளைச் சரிவரச் செய்யாதிருந்தால், அல்லது ஏதேனும் குற்றங்கள் இழைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தால் அவ்வாறானவர்களைத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தலாகாது.

VI. தேர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அலுவலர் கணக்கெடுப்பின் போது அனைத்து நிறுவனங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட அரச அலுவலர்களின் தகவல்களின் அடிப்படையில் அவர்களைத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

VII. வாக்களிப்பு நிலையமொன்றின் தேர்தல் கடமைகளுக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் தேர்தல் தினத்திற்கு முன்னைய தினம் வாக்களிப்பு நிலையத்தில் சேவைக்கான தமது வரவை அறிக்கையிடுதல் வேண்டும். அன்றைய தினம் வாக்களிப்பு நிலையத்தில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரால் தேர்தல் தின கடமைகள் தொடர்பான ஒத்திகை நடாத்தப்படும். அதற்குச் சமுகமளித்த பின்னர் அலுவலர்கள் தமது வதிவிடத்திற்கு அல்லது தற்காலிக தங்குமிடத்திற்குச் செல்ல முடியும். தங்கியிருக்கும் இடத்திலிருந்து மீண்டும் தேர்தல் தினத்தன்று காலை தேர்தல் கடமைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் குறித்த நேரத்திற்கு வாக்களிப்பு நிலையத்திற்குச் சமுகமளித்தல் வேண்டும். ஆகவே தேர்தல் கடமைகளுக்கு பெண் அலுவலர்களை நியமிக்கும் போது அவர்களது தங்குமிட வசதி அல்லது வதிவிடம் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். எனினும் தேர்தல் கடமைகளுக்கு அலுவலர்களை நியமிக்கும் போது அலுவலர்களின் தரவுப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலரின் சொந்த முகவரி அமைந்துள்ள பிரதேசத்தின் வாக்களிப்பு நிலையத்திற்கு எந்தவொரு அலுவலரையும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தலாகாது என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். அரச அலுவலர் எண்ணிக்கையின் விகிதப்படி அரச சேவையிலுள்ள பெண் அலுவலர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பதன் காரணமாக அவர்களது சேவையைப் பெற்றுக் கொள்ளாது தேர்தல்கள் நடாத்துவதற்கு இயலாத நிலை உருவாகியுள்ளது. ஆகவே அவ்வாறான பெண் அலுவலர்களைத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தும் போது மேற்குறிப்பிட்ட வசதிகளைச் செய்ய வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

VIII. சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் தேர்தல் தினத்திற்கு முந்திய தினம் கட்டாயமாகத் தனக்குரிய வாக்களிப்பு நிலையத்தில் இரவைக் கழிப்பதற்காகத் தங்கியிருத்தல் வேண்டுமென்பதுடன், அவருடன் தங்கியிருப்பதற்கு மேலும் ஒன்றோ அல்லது இரண்டோ ஆண் அலுவலர்களும் அந்த வாக்களிப்பு நிலையத்தில் தங்கியிருக்க வேண்டும். இவ்வாறான விடயங்களைக் கருத்திற் கொண்டு வாக்களிப்பு நிலையத்திற்குத் தேவையான எண்ணிக்கையில் அலுவலர்களை நியமித்தல் வேண்டும்.

135. தேர்தல் கடமைகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளையும், அதன் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக மாவட்டத்தினுள் உள்ள அரச அலுவலகங்களிலிருந்து அவ்வாறான கடமைகளில் அனுபவம் மிகுந்த அலுவலர்களை ஈடுபடுபடுத்துவதற்கு உரிய வகையில் குறித்த நிறுவனத் தலைவர்களின் அங்கீகாரத்துடன் அலுவலர்களை ஈடுபடுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

136. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் தத்தமது மாவட்டங்களுக்கான தேர்தல்

கடமைகள் மற்றும் வாக்கெண்ணல் கடமைகள் தொடர்பாக அலுவலர்களை நியமிப்பதற்கு அரச நிறுவனங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் மற்றும் அரச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் ஆகியோரை அவரவர்களது பதவித் தரம் மற்றும் அனுபவம் ஆகிய விடயங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுவர். சகல மாவட்டங்களுக்கும் அவசியமான அலுவலர்களை குறித்த மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்தும், கொழும்பு மேலதிகக் குழுவிலிருந்தும் அலுவலர்களை நியமித்து அனுப்பப்படுவர். விஷேடமாக வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாக கடமையாற்றுவதற்கென அனுபவம் மிகுந்த சிரேஷ்ட தரத்திலான ஆண் அலுவலர்களையும், வாக்கெண்ணல் கடமைகளை மேற்கொள்வதற்கென சிரேஷ்ட பதவிநிலை அலுவலர்களையும் நியமிப்பதற்குத் தேவைப்படும் அலுவலர்களை வெளி மாவட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு உள்ளது. சகல மாவட்டங்களுக்கும் வாக்கு எண்ணல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கான மேலதிகமான அலுவலர்களை கொழும்பு மாவட்டத்திலுள்ள அரச நிறுவனங்களில் இருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுவர். தேர்தற் பணிக்குழுவிற்கு அலுவலர்களை நியமிப்பது தொடர்பான தகவல்களும், எண்ணிக்கைகளும் குறிப்பு 14 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல்

137. தேர்தல் ஒன்றிற்காக வேட்புமனுக்கள் கையேற்பது தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்ட நாட் தொடக்கம், தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் நாள் வரையான காலப் பகுதியில் தேர்தல் திணைக்களத்திற்கும், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் உரிய கடமைகள் யாவற்றையும் பயிற்சி பெற்ற பணிக்குழுவினரிடம் கையளித்தல் மிகவும் இன்றியமையாத விடயமாகும். அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை என்பவற்றிலுள்ள பல்வேறு தரங்களிலும் கடமையாற்றுகின்ற பெரும் எண்ணிக்கையான அரச அலுவலர்கள் தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படுவர். அத்துடன் தேர்தல் ஒழுங்கு முறைகள், தேர்தல் கடமைகள் தொடர்பான மிகவும் அனுபவம் பெற்ற அலுவலர்கள் இருந்த போதும், தேர்தல் சட்டதிட்டங்கள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றில் அடிக்கடி மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதனால் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படும் சகல அலுவலர்களுக்கும் தேர்தல்களின் போது விஷேட பயிற்சிகள் வழங்கப்படுவது இன்றியமையாததாகும். இதனடிப்படையில் இம்முறை தேர்தலின் போதும் விஷேடமாக அஞ்சல் மூல வாக்களிப்பு, தேர்தல் நடவடிக்கைகள், வாக்கெண்ணல் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிகள் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன.

138. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளைக் கோரி அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பங்களைப் பரிசீலித்தல், தகைமை உள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளுதல், தகைமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுதல், அவை தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்து வைத்தல், விண்ணப்பம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் அஞ்சல் மூல விண்ணப்பதாரிகளுக்கும், அஞ்சல் வாக்காளர்களை உறுதிப்படுத்தும் அலுவலர்களுக்கும் அனுப்பி வைத்தல் போன்ற பல கடமைகளையும் அனுபவம்மிக்க அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியது இன்றியமையாதது ஆகும். இக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அனுபவம் மிகுந்த பதவிநிலை அலுவலர்களை தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகத்திற்குச் சமீபமாக உள்ள அலுவலகங்களில் இருந்து தேர்ந்தெடுக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு உள்ளது. விஷேடமாக இக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள பதவிநிலை அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் இந் நடவடிக்கை இடம்பெற வேண்டியதுடன், இவை தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டியும் உள்ளது. இது பற்றி மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர்களுக்கும், உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அஞ்சல் மூல வாக்காளர் விண்ணப்பங்களில் அடங்கியுள்ள தகவல்கள் பிழையாகக் காணப்படுவதனால் நிராகரிக்கப்படுகின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு தேர்தல்களின் போதும் அதிகரிக்கின்ற சந்தர்ப்பங்கள் உருவாகுகின்றன. ஆகையால் இவற்றைப் பரிசீலிக்கும் அலுவலர்களுக்கு விஷேட பயிற்சிகள் வழங்க வேண்டியுள்ளது.

139. அஞ்சல் மூல வாக்குச் சீட்டுக்களின் விநியோகம், தேர்தலில் போட்டியிடும் அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள்

ஆகியவற்றின் முகவர்கள் முன்னிலையில் இடம்பெற வேண்டும் என்பதுடன், தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மிக முக்கியமான நடவடிக்கையாகும். இந்தக் கடமைகளுக்கென ஈடுபடுத்தப்படும் பணிக் குழுவினருக்கு, தேர்தல் ஆணையாளரால் விஷேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், அக்கடமைகளுக்கான அனுபவமுள்ள சிரேஷ்ட அலுவலர்களை ஈடுபடுத்துமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அஞ்சல் மூல வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்படும் தினத்திலேயே அஞ்சல் வாக்காளருக்குரிய அனைத்து ஆவணங்கள் அடங்கிய உறைகளும் விநியோகிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படும் வகையில், குறிப்பிட்ட எண்ணிக்கையான அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கும் நிலையங்கள் அமைக்குமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

140. அஞ்சல் மூல வாக்கு உறுதிப்படுத்தும் அலுவலர்களுக்கு, அஞ்சல் வாக்கு தொடர்பான நடவடிக்கைகளின் போதான கடமைகள் மிகவும் பொறுப்பு வாய்ந்த கடமையாக அமைந்துள்ளன. அவர்கள் தமது கடமைகளை குறித்த நேரத்திற்கு ஒழுங்காக நிறைவேற்றத் தவறுமிடத்து, அஞ்சல் மூல வாக்காளரது விண்ணப்பம் மாத்திரமன்றி, அவ்வாக்காளரது வாக்குச் சீட்டும் நிராகரிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகும். ஆகவே அஞ்சல் மூல வாக்கு உறுதிப்படுத்தும் அலுவலர்களாகக் கடமையிலீடுபடும் சகல அரச அலுவலர்களுக்கும் வகுப்புக்கள் நடாத்தி குறித்த பயிற்சிகளை வழங்குவதற்கு, மாவட்ட பிரதி மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த கடமைகளுக்கான அலுவலர்களின் பற்றாக்குறை காணப்படுமிடத்து, தேர்தல்கள் திணைக்களத்தில் பதவிநிலை அலுவலர்களாகக் கடமையாற்றி தற்போது வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள அலுவலர்களை இக்கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்ற இருக்கும் அலுவலர்களுக்குத் தேவைப்படும் மொழியில் வகுப்பு நடாத்தப்படுவதற்கும், அவர்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய ஆளடையாளப் பத்திரங்கள் மற்றும் பேணப்பட வேண்டிய குறிப்பேடுகள் உட்பட அனைத்து ஆவணங்கள் தொடர்பாகவும், விஷேடமாக அஞ்சல் வாக்காளரின் வசதிகளுக்கான அனைத்து கடமைகளும் பற்றி அவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

141. ஒரு வாக்களிப்பு நிலையத்திற்குப் பொறுப்பான முக்கிய அலுவலராக விளங்கும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், ஏனைய தேர்தற் பணிக்குழுவினர் ஆகியோருக்கும் பயிற்சிகள் வழங்கப்படுவதற்காக தேர்தல் நடைபெறும் மாவட்டங்களிலும், கொழும்பிலும் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. இவ்வாறான பயிற்சி வகுப்புக்கள் நடாத்துவதற்கு அநேகமாக தேர்தல் திணைக்களத்தின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்களும், உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவ்வாறான அலுவலர்களின் பற்றாக்குறை ஏற்படுமிடத்து, தேர்தல்கள் திணைக்களத்தில் பதவிநிலை அலுவலர்களாகக் கடமையாற்றி தற்போது வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள அலுவலர்களின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படும். தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படும் அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும் போது தேர்தல் கடமைகள் தொடர்பான சகல விடயங்களிலும் கவனம் செலுத்தும் வகையில் சகல மாவட்டங்களதும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு ஒரே விதமான பரிபூரணமான பயிற்சிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், அவர்களுக்கான கைநூல் ஒன்றும் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

142. தேர்தல் தினத்திற்கு முன்னைய தினத்திலும், தேர்தல் நடைபெறும் தினத்திலும் மிக முக்கியமான வெளிக்களக் கடமையாக விளங்குகின்ற வாக்களிப்பு நிலையங்களை மேற்பார்வை செய்யும் கடமைகளுக்கென நியமிக்கப்படும் வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும் நடவடிக்கைகள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் தலைமையின் கீழ் குறித்த மாவட்டங்களில் நடாத்தப்படும். விஷேடமாக இந்த அலுவலர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளின் போது, வாக்களிப்பு நிலையத்தில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரால் நிறைவேற்றப்பட வேண்டிய அனைத்துக் கடமைகள் தொடர்பாக அவர்களுக்குத் தெளிவூட்டல்களை வழங்குதலும், வாக்களிப்பு நிலையத்தில் இடம்பெறக்கூடிய எதிர்பாராத அசம்பாவிதங்களால் வாக்களிப்பிற்குப் பங்கம் ஏற்படும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

143. இந்த வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களால் பேணப்பட வேண்டிய மிக முக்கியமான ஆவணமாக அலுவலர் குறிப்பேடு விளங்குகின்றது. சில சட்ட நடவடிக்கைகளின் போது குறிப்பிட்ட பேரேடுகளைச் சமர்ப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படும். ஆகவே இந்தக் குறிப்பேடுகளை ஒழுங்காக, சரியாகத் தயாரித்தலும், அதனைப் பேணுதலும் மிகவும் இன்றியமையாததாகும். ஒரு வாக்களிப்பு நிலையத்தில் இடம்பெறும் வாக்களிக்கும் நடவடிக்கைகளை இல்லாதொழிப்பதற்கு அல்லது தடைசெய்வதற்குக் காரணமாக அமைந்த சம்பவங்கள் பற்றி இந்தக் குறிப்பேட்டிலேயே உள்ளடக்கப்படுகின்றது. அத்துடன் இவ்விடயங்கள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கும், தேர்தல்கள் ஆணையாளருக்கும் மிக முக்கியமானதாகக் கருதப்படுவதனால் குறித்த குறிப்பேட்டினை முறையாகப் பேணுதல் பற்றி கவனம் செலுத்தப்பட வேண்டுமென தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

144. வாக்குகள் மற்றும் விருப்பு வாக்குகள் எண்ணப்படும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தலைமை வாக்கெண்ணல் அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல்கள் ஆணையாளரால் அரச நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அலுவலர்களின் தரவுப் பத்திரங்களின் அடிப்படையில் வாக்கெண்ணல் அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தெரிவத்தாட்சி அலுவலரால் பிரேரிக்கப்படும் அலுவலர்கள் தொடர்பாகவும், அவர்கள் தகைமையுடையவர்களா என்பது பற்றியும் ஆராயப்பட்டு அவர்களுள் அவசியப்படும் சிலரைத் தேர்தல்கள் ஆணையாளர் தேர்ந்தெடுப்பார். வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான கடமைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட சகல உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களும் கொழும்பில், இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்தில் மற்றும் அதனை அண்மித்த வேறு அரச அலுவலகத்தில் பயிற்சிகளை வழங்குவதோடு தேர்தல்கள் ஆணையாளரால் மற்றும் மேலதிக/ பிரதித் தேர்தல்கள் ஆணையாளரால் நடவடிக்கைகளெடுக்கப்பட்டன.

போக்குவரத்து ஒழுங்குகள்

145. தேர்தல் கடமைகளுக்காகத் தேவைப்படும் அரச அலுவலகங்களுக்கு உரிய வாகனங்கள் தொடர்பான கணக்கெடுப்பு தேர்தல் இடம் பெற்ற மாகாணங்களில் அமைந்து உள்ள மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் தேர்தல்கள் ஆணையாளரால் கொழும்பு மாவட்டத்தினுள் அமைந்திருக்கும் அரச அலுவலகங்களிலிருந்தும் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அத்துடன் தேர்தல் இடம்பெறும் மாவட்டங்களை அண்மித்த மாவட்டங்களிலிருந்தும் தேர்தல் கடமைகளுக்காக வாகனங்கள் அவசியப்படலாமென மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு அம்மாவட்டங்களின் வாகனங்கள் தொடர்பான தகவல்களும் சேகரிக்கப்பட்டன.

146. தேர்தல் கடமைகளுக்கான போக்குவரத்து வசதிகளை ஒழுங்குபடுத்தும் போது மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாக அமைந்திருப்பது, தேர்தல் தினத்திற்கு முந்திய தினத்தில் வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டிய ஆவணங்கள், சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் ஏனைய பணிக்குழுவினர் ஆகியோரது போக்குவரத்து வசதிகள் தொடர்பாக முக்கியத்துவம் வழங்குதலாகும். சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருடன் அவரது பொறுப்பிலிருக்கும் வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டுகள், வாக்களிப்பு நிலையத்திற்குரிய ஆவணங்கள், ஏனைய பொருட்கள் என்பவற்றையும் எடுத்துச் செல்வது இன்றியமையாத விடயமாகும். அத்துடன் பாதுகாப்புக்கான பொலிஸ் அலுவலர்களும் உடன் செல்ல வேண்டும். வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லும் பாதை வசதிகளைக் கருத்திற்கொள்ள வேண்டியது முக்கியமானதாகக் கருதப்படுவதுடன், முடிந்த வரை சகல வாக்களிப்பு நிலையங்களுக்கும் தனியான வாகனத்தைப் பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்தப்பட்டு போக்குவரத்து வசதிகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

147. கடந்த பல தேர்தல்களிலும் நடைபெற்றதைப் போன்று, இம்முறை தேர்தலிலும் தேர்தல் பணிக்குழுவினருள் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் தவிர்ந்த ஏனைய பணிக்குழுவினருக்கு தாம் கடமையாற்ற வேண்டிய வாக்களிப்பு நிலையம் பற்றி ஏற்கெனவே அறிவிக்கப்படும். அதன் பிரகாரம் தேர்தல் தினத்திற்கு முன்னைய தினம் பிற்பகல் வேளையில் அவ்வலுவலர்கள் தமது சொந்த போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்தி வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று அறிக்கையிடுமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களால்

தேர்தல் பணிக்குழுவினருக்கு அறிவிக்கப்படுகின்றது. ஒரே பாதையில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லவிருக்கும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் ஏனைய தேர்தல் அலுவலர்கள் பலர் இருப்பின் அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் கருதி இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் தயார்படுத்தப்படுவது வழக்கமாக இடம்பெறும் நடவடிக்கையாகும். பேருந்துகளில் பயணம் செய்ய முடியாத கஷ்டமான பாதைகள் அமைந்திருக்கும் பிரதேசங்களிலுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்காக ஜீப் போன்ற சிறிய வாகனங்களைப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

148. தேர்தற் கடமைகளுக்காக அரச அலுவலகங்களில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய வாகனங்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படும் போது, அவ்வாகனங்களின் சாரதிகள் மற்றும் உதவியாளர்களுக்கும் அஞ்சல் மூலமான வாக்களிக்கும் வசதிகள் வழங்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

149. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிப்பதற்கும், அந் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்குமான வெளிக்கள நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அஞ்சல் திணைக்களத்திற்கு மேலதிக வாகனங்கள் தேவைப்படுமிடத்து, மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை களில் ஈடுபடுவதற்கு பொலிஸ் திணைக்களத்திற்கு மேலதிக வாகனங்கள் தேவைப்படுமிடத்து அதற்காக போதியளவு வாகனங்களைப் பெற்றுக் கொடுக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

150. அமைச்சுக்கள், திணைக்களங்கள் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய வாகனங்கள் போதியதாக இல்லாதவிடத்து, இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் நிறுவன பேருந்துகள் போன்றவற்றையும் பயன்படுத்துவதற்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அவ்வாறான வாகனங்களின் எண்ணிக்கைகளும் போதாதவிடத்து, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமனம் பெற்றவர்களும், வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமனம் பெற்றவர்களும் தனியார் வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மற்றும் தனியார் நிறுவனங்களின் பேருந்துகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளும்போது சகல மாவட்டங்களுக்கும் ஒரே கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளர் குறித்த நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதுடன். அதற்கான ஆலோசனைகளும் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

151. தேர்தல் தினத்திலும், அதற்கு முன்னைய தினத்திலும் வாக்களிப்பு நிலையப் பணிக்குழுவினர், வாக்களிப்பு நிலையங்கள் என்பன தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸ் அலுவலர்களுக்கு அவசியமான வாகனங்கள் போதியளவு இல்லாதவிடத்து, அதற்காக தனியார் நிறுவனங்களுக்குரிய வாகனங்களை விஷேட கட்டணத்தின் அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு பொலிஸ் மா அதிபருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

152. இந்த தேர்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் 13 ஆம் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

VII ஆம் பகுதி

தேர்தல்கள் சட்டங்கள் மீறப்படுவதைக் கட்டுப்படுத்தல்

153. இலங்கை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள 17 ஆம் அரசியல் யாப்புத் திருத்தச் சட்டம் 2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதி உறுதி செய்து அங்கீகரிக்கப்பட்டது. அத்திருத்தச் சட்டத்தின் 9 ஆம் மற்றும் 27 ஆம் பிரிவுகளின் கீழ் உள்ள விடயங்கள் தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் திணைக்களம், தெரிவத்தாட்சி அலுவலர்கள், தேர்தல்கள் ஆணையாளரின் அதிகாரங்கள் என்பவற்றுடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டுள்ளது. இத்திருத்தச் சட்டத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் மற்றும் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்களை நியமித்தல், அரச ஊடக நிறுவனங்களுக்கு ஊடகச் சட்டங்கள் விதித்தல், ஊடகச் சட்டங்கள் மீறும் சந்தர்ப்பத்தில் முறையான அதிகாரியினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல், தேர்தல்களின் போது தேர்தல்கள் ஆணையாளருக்கு அவற்றில் தலையீடு செய்வதற்கான சந்தர்ப்பங்கள், தேர்தல் ஆணைக்குழு நிறுவும் வரையான காலப்பகுதியில் தேர்தல்கள் ஆணையாளரின் பதவிக்குரிய உள்ளக சட்டவிதிகள் ஆகிய விடயங்களுக்குரிய விதிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகள் என்பன 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட 18 ஆம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மீண்டும் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. தற்போது அரசியல் யாப்பின் 17 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு 12 வருடங்கள் கழிந்துள்ளன. இதன் மூலம் தேர்தல்கள் ஆணையாளரின் ஒரு சில அதிகாரங்கள் அரசியல் யாப்பின் 18 ஆம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் அரசியற் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் என்பன தேர்தல்களின் போது 17 ஆம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் விதிமுறைகளைச் செயற்படுத்துமாறு அரச நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுக்கும் நிலையை அவதானித்தால் குறித்த சட்டத்தின் பிரகாரம் தேர்தல் செயற்பாடுகள் மேற்கொள்வதனை இன்றைய சமூகத்தினர் ஏற்றுக்கொள்கின்றனர் என்பதாகும்.

154. தற்போதைய சட்டங்களின் பிரகாரம், தேர்தல்கள் ஆணையாளருக்கு அரசியல் யாப்பின் 17 ஆம் மற்றும் 18 ஆம் திருத்தச் சட்டங்களின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படும் வரை அதன் அதிகாரங்கள் திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு செயற்படுத்தும் அதிகாரங்கள் உள்ளன.

155. மக்கள் தீர்ப்பு மற்றும் ஏனைய தேர்தல்கள் நடாத்துவது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கு உள்ள அதிகாரங்கள் மற்றும் தேர்தல் முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றி மேற்குறிப்பிட்ட இரண்டு அரசியலமைப்புத் திருத்தங்களில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்கள் மற்றும் மக்கள் தீர்ப்பு ஆகியவற்றை நடாத்துதல் தேர்தல் ஆணைக்குழுவின் முக்கிய நோக்கமாக இருத்தல் வேண்டும்.

(ஆ) ஏதேனுமொரு தேர்தல் அல்லது மக்கள் தீர்ப்பு ஒன்றை நடாத்துவதற்கு உரிய அனைத்து சட்டங்களை அதிகாரபூர்வமாக்குவதும், அவற்றைப் பாதுகாப்பதும் ஆணைக்குழுவின் முக்கிய செயற்பாடாகும்.

(இ) அவ்வாறான சட்டங்களை அதிகார பூர்வமாக்குதல் மற்றும் அவற்றைப் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பாக சட்டங்களை அதிகார பூர்வமாக்குவதற்குப் பொறுப்பாகவுள்ள சகல அலுவலர்களதும் பொறுப்பாகும்.

(ஈ) தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கு தேவைப்படும் வசதிகள் மற்றும் பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை போன்ற விடயங்கள் தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு தேர்தல்கள் ஆணையாளரால் அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர், அதற்கென நியமிக்கப்படும் அலுவலர்களின் விபரங்களை பொலிஸ்மா அதிபர் வழங்குதல் வேண்டும். சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்களை நடாத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள திட்டத்திற்கு அமைவாக நியமிக்கப்படும் குறித்த அலுவலர்களை ஈடுபடுத்துதல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

(உ) ஆணைக்குழுவுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல பொலிஸ் அலுவலர்களும் தேர்தல் இடம்பெறும் காலப்பகுதியில் ஆணைக்குழுவிற்குப் பொறுப்புக் கூறுபவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள், நிருவாகம் என்பவற்றிற்குக் கீழ்ப்படிதலும் வேண்டும்.

ஊ) தேர்தல் இடம்பெறும் காலத்தினுள், அரசுக்கு அல்லது அரச கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அசைவற்ற, அசைவுள்ள சொத்துக்களை அரசியற் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் ஆகியவற்றுக்கும் அவற்றின் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கும் அல்லது அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கும் சட்ட ஏற்பாடுகள் மூலம் தடை செய்வதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அல்லது தேர்தல்கள் ஆணையாளருக்கு உள்ளது.

எ) தொலைக்காட்சிச் சேவைகள், ஒலிபரப்புச் சேவைகள் மற்றும் செய்தித் தாள்கள் போன்றவற்றிற்கும் தடைகள் விதிக்கப்படலாம்.

ஏ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினதும், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினதும் செயற்பாடுகளுக்கு உரித்தல்லாத அரச சேவையில் உள்ளவர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள், பதவியுயர்வுகள் என்பன தேர்தல் நடவடிக்கைகளுக்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தேர்தல் காலப்பகுதியில் இடம்பெறுவதாக இருந்தால் குறித்த நிறுவனங்களுக்கான வழிகாட்டல்கள் வழங்கப்படலாம்.

ஐ) நடைபெறுகின்ற தேர்தல்களில் போட்டியிடும் அரசியற் கட்சிகளுக்கும், வேட்பாளர்களுக்கும் ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட ஒழுக்கவிதிக் கோவையின் பிரகாரம் சட்டங்கள் விதிக்கப்படும்.

156. குறிப்பிட்ட திருத்தங்கள் செயல்முறைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் நடைபெற்ற தேர்தல்களின் போது குறித்த சட்டத் திருத்தங்களின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் தேர்தல் ஆணையாளரால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மாகாண சபைத் தேர்தலின் போது மேற்கொள்ளப்பட்ட அவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கங்கள் தரப்படுகின்றன.

தேர்தல் காலப் பகுதியினுள் அரச ஆதனங்களின் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல்

157. இலங்கை அரசியலமைப்பின் 17 ஆம் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர் தேர்தல்கள் இடம்பெறுகின்ற வேளையில் தேர்தல்கள் ஆணையாளரால் தேர்தல் இடம்பெறும் கால எல்லைக்குள் அரச உடைமைகளைத் துஷ்பிரயோகம் செய்வதனைத் தடுப்பதற்கான அறிவித்தல்கள் அரச நிறுவனங்களின் தாபனத் தலைவர்களுக்கு அனுப்பப்படும். ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலின் போது அவ்வாறு அனுப்பப்பட்ட அறிவித்தல் கடிதம் இவ்வறிக்கையின் 29 ஆம் உப அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

158. இம்முறை நடாத்தப்பட்ட தேர்தலின் போது பல சந்தர்ப்பங்களிலும் தேர்தல்கள் ஆணையாளரால் அரச நிறுவனங்களுக்கு ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன. கலைக்கப்பட்டிருந்த மாகாண சபைகள் சார்பாக போட்டியிடும் அபேட்சகர்கள், உள்ளூர் அதிகார சபைகளின் தவிசாளர்கள், உப தவிசாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் தமது பதவிகளில் இருந்தவாறே தாம் கடமையாற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய அரச வாகனங்கள், உடைமைகள் மற்றும் அவரவருக்குரிய பதவிச் சலுகைகள் என்பவற்றை தேர்தற் காலங்களில் தமது தேர்தல் வெற்றியை நோக்கமாகக் கொண்டு அவற்றைப் பயன்படுத்துவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. தேர்தலில் போட்டியிடும் அரசியற் கட்சிகளின் செயலாளர்கள், முகவர்கள் ஆகியோருடன் நடாத்தப்படும் கலந்தாலோசனைகளின் போது இவ்விடயம் பற்றி தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் யாவரதும் இணக்கப்பாட்டின் பிரகாரம், குறித்த வேட்பாளர்களுக்கு அவரவர் கடமையாற்றும் உள்ளூர் அதிகார சபையிலிருந்து விலகுமாறு அல்லது விடுமுறை பெற்றுக் கொள்ளுமாறு கட்சிச் செயலாளர்களால் அவர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் எழுத்து மூல அறிவித்தல்களை வழங்கியுள்ளார்.

159. தேர்தல் ஆணையாளரால் சகல அமைச்சுச் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள

அறிவித்தல்களின் பிரகாரம், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பணிக்குழு அங்கத்தவர்கள், அரச கூட்டுத்தாபன மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள், பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், செயற்பாட்டுப் பணிப்பாளர்கள் ஆகியோர் இந்த மாகாண சபைத் தேர்தலில் வேட்பாளர்களாக முன்னிற்கின்றனரா எனவும், அவ்வாறு முன்னிற்பதாக இருந்தால் அவர்கள் தமது பதவியிலிருந்து விலகியுள்ளார்களா எனவும், அவர்கள் மாகாண சபைத் தேர்தற் காலத்தின் போது குறித்த நிறுவனங்களிலிருந்து விடுமுறை பெற்றுக்கொண்டுள்ளார்களா எனவும் விசாரிக்கப்பட்டது. இவ்விசாரணைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பதில்களிலிருந்து, தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் சட்டப்படி விடுமுறை பெற்றுக் கொண்டு தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என அறியக் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் திருப்தியடைந்துள்ளார். மேலும் மாகாண சபைகளில் இருந்த முன்னாள் அமைச்சர்கள், அவர்களது பணிக்குழுவினர் ஆகியோர் தேர்தற் பிரச்சார நடவடிக்கைகளுக்காக மாகாண சபைகளுக்குரிய வாகனங்களைப் பயன்படுத்துவதாகக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின்படி, அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட வாகனங்களை தேர்தற் பிரச்சாரங்களுக்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்கின்ற பொறுப்பினை குறித்த நிறுவனத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளரால் தேர்தற் காலங்களின் போது மாகாண சபைச் செயலாளர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. விஷேடமாக அரச நிறுவனங்களில் உள்ள வாகனங்களை அரசியற் கட்சிகள் தேர்தற் பிரச்சாரங்களுக்காக பயன்படுத்துவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக தனியான பணிக்குழுவினரின் ஒத்துழைப்புத் தேவைப்பட்டது. ஆகவே அரச நிறுவனங்களில் வாகனப் பாவனை தொடர்பாகவும், கடமைகளுக்கான வாகனங்களை ஒதுக்குதல் போன்ற நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காகவும் பொறுப்புள்ள அலுவலர்கள் பற்றிய விபரங்களை அமைச்சுக்கள், திணைக்களங்களிலிருந்து பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

160. தேர்தல் நடைபெறும் மாகாண சபைப் பிரதேசங்களில் அரச வைபவங்கள் நடாத்துவதைச் சாட்டாக வைத்து அரசியற் கட்சிகளினதும் மற்றும் வேட்பாளர்களினதும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. அதற்கான அறிவுறுத்தல்கள் தேர்தல்கள் ஆணையாளரால் சகல அமைச்சுச் செயலாளர்களுக்கும், மாகாண சபை அமைச்சர்களுக்கும், தேர்தல் நடக்கும் மாவட்டச் செயலாளர்களுக்கும், மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றின் தாபனத் தலைவர்களுக்கும் அரச வங்கி மற்றும் மேலாண்மை நிறுவனங்களுக்கு மற்றும் குறித்த மாகாணங்களின் உள்ளூராட்சிமன்ற தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ,அரச வைபவங்கள்/ அரச கருத்திட்டங்கள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்ளும் போது அரசியற் கட்சிகளை மற்றும் வேட்பாளர்களை ஊக்குவித்தல் அல்லது ஏனைய அரசியற் கட்சிகளுக்கு அல்லது வேட்பாளர்களுக்கு தீங்கு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடல், என்னும் தலைப்பில் கிழக்கு, வட மத்திய, சப்ரகமுவ ஆகிய மாகாண சபைத் தேர்தல்களின் போது 2012.07.13 ஆம் திகதி தாபனத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தின் இரண்டாம் பந்தியில் உள்ள விடயத்தின் பிரித்தெடுப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

“தேர்தல் இடம்பெறும் பிரதேசங்களில் நடாத்தப்படுகின்ற அரச வைபவங்கள் தொடர்பாக செயற்படுகின்ற அரசியற் கட்சித் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் என்போர் அவற்றைத் தமது ஆதிக்கத்தின் படி, குறித்த கருத்திட்டங்களுக்கென கிடைக்கப் பெற்றுள்ள நிதி ஒதுக்கீடுகளை தமது சொந்த செலவில் நடாத்துவதைப் போன்று பாசாங்கு செய்த வண்ணம் கட்சியின்/ வேட்பாளரின் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர் எனவும், உடையணிகள், உணவுப் பொதிகள், சைக்கிள், சக்கர நாற்காலி, கட்டிட நிர்மாணப் பொருட்கள், வீட்டுபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், பாடசாலைப் புத்தகங்கள், பாடசலைப் பைகள், வீடு அல்லது காணி உறுதிகள் ஆகியவற்றை விநியோகிக்கும் வைபவங்கள் நடாத்தப்படுவதும், கருத்தரங்குகள், சிரமதானங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தி அதனூடாக அரசியல் இலாபம் ஈட்டுவதற்கு முயற்சிப்பதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறான செயல்கள்

தொடர்பாக சகல தேர்தல் சட்டங்களிலும் குறிப்பிட்டுள்ளவாறு, ஊழல்கள் சார்ந்த குற்றச் செயல்கள் எனக் கணிக்கப்படுவதுடன், சமூக விரோதச் செயல் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதனை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். தேர்தல் இடம்பெறும் காலத்தில் அடிக்கல் நாட்டு விழா, மக்கள் மயப்படுத்துதல் விழா, திறப்பு விழா போன்ற அரச வைபவங்கள் இடம்பெறும் போது அரசு சம்பந்தப்படும் வேளைகளில் கருத்திட்டம் அல்லது நலன்புரி நடவடிக்கைகள் ஆகியவற்றில் எந்தவொரு கட்சியும், வேட்பாளரும் தமது அரசியல் இலாபம் கருதியோ அல்லது ஏனைய கட்சிகள், வேட்பாளர்கள் ஆகியோருக்கு நட்டத்தை ஏற்படுத்தும் வகையிலான செயல்களில் ஈடுபடல் அல்லது உரை நிகழ்த்துதல் போன்ற செயல்கள் செய்தலாகாது என தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்".

161. அரசியற் கட்சிகளின் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் ஒரு சில அலுவலர்கள் தமது பதவி அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆசிரியர்களைக் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றனர் என தேர்தல் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மாகாண சபைகள் நிறுவப்பட்ட பின்னர், குறித்த மாகாணங்களின் கீழ் கடமையாற்றும் பாடசாலை அதிபர்கள் (தேசியப் பாடசாலை பணிக்குழுவினர் தவிர்ந்த) மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் மாகாண சபைக்குரிய அரச சேவையாளர்கள் ஆவர். தேர்தல் இடம்பெறும் மாவட்டங்களின் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை அதே மாவட்டத்திற்குரிய மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் உயர் மட்ட அலுவலர்களின் ஒத்துழைப்புடன், தேர்தலில் போட்டியிடும் அரசியற் கட்சிகளினால் நடாத்தப்படும் கூட்டங்களுக்குச் சமுகமளிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர் எனவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. கட்சிகளின் வெற்றிக்காகவும், வேட்பாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும், இவ்வாறான வைபவங்கள் நடாத்துவதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறு குறித்த சந்தர்ப்பங்களில் மாகாண சபைச் செயலாளர்களுக்கும், மாகாண சபை கல்விச் செயலாளர்களுக்கும், மாகாண சபைப் பணிப்பாளர்களுக்கும், வலயக் கல்வி, கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், அதிபர்களுக்கும் தேர்தல்கள் ஆணையாளரால் எழுத்து மூலமான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் யாப்பின் 104 ஆ (1) (5) ஆம் பந்திற்கு அமைய வானொலி அல்லது தொலைக்காட்சி சேவைகள் மற்றும் செய்திப்பத்திரிகைகளின் உரிமையாளர்கள்/ வெளியீட்டாளர்கள் ஆகியோருக்கு வழிகாட்டு நெறிகளை வெளியிடுதல்

162. அரச ஊடக நிறுவனங்களுக்கான சட்டவிதிகள் வெளியிடுவதற்கும், அச்சட்டவிதிகளை ஏற்றுக் கொள்ளாது செயற்படுகின்ற சந்தர்ப்பங்கள் தொடர்பாக, 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் பிரகாரமும் அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரமும் செயற்படக்கூடிய பொறுப்புள்ள அலுவலரை நியமிப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு/ தேர்தல் ஆணையாளருக்கு உள்ளது. எனினும் 18 ஆம் அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் குறித்த சட்டவிதிகள் அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் வெளியிடப்பட்ட போதும், திருத்தச் சட்டத்தின் பிரகாரம் சட்டவிதிகளை ஏற்றுக் கொள்ளாது செயற்படுகின்ற சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட பிரிவுகள் தொடர்பாக பொறுப்புள்ள அலுவலர் மூலமாக செயற்படுவதற்குரிய சந்தர்ப்பங்கள் அகற்றப்பட்டுள்ளன. புதிய சட்டங்களின் அடிப்படையில் இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளரால் விடுக்கப்படும் ஊடகச் சட்டவிதிகளைப் பின்பற்றுதல் அவற்றைப் பின்பற்றுவதனை உறுதிப்படுத்துதல் போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் ஊடக நிறுவனங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

163. இவ்வாறாக, இம்முறை ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலின் போது தேர்தல்கள் ஆணையாளரால் சகல ஊடகங்களுக்கும் விடுக்கப்பட்டுள்ள சட்டவிதிகள் பற்றி 32 ஆம் இலக்க உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய மாகாண சபைத் தேர்தல்களின் போதும், இதே முறையிலான சட்டவிதிகள் ஊடகங்களுக்கு விடுக்கப்பட்டது.

அரசியல் யாப்பின் 104 ஆ (1) (4அ) (ஆ) ஆம் உறுப்புரைகளுக்கமைய அரச சேவையுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் அறிவுறுத்தல்களை வெளியிடுதல்.

164. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மற்றும் நீதிச் சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் நேரடி நிருவாகத்திற்கு உட்படாத ஏனைய அரச அலுவலகங்களுக்கு அரச சேவையாளர்களை உட்சேர்த்தல், பதவியுயர்வு, இடமாற்றங்கள் ஆகிய நடவடிக்கைகள் தேர்தல் இடம் பெறுகின்ற காலப்பகுதியில் மேற்கொள்ளப்படலாகாது என குறித்த தாபனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

165. மேலும், தேர்தல் இடம் பெறும் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரின் இடமாற்றங்கள் தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்கள் செல்லும் வரை பிற்போடப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாகவோ அல்லது அலுவலர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவோ அல்லது கருணையின் நிமித்தமாகவோ வழங்கப்படும் இடமாற்றங்கள் வழங்குகையில் அவற்றிற்கு அரசியல் ரீதியான காரணங்கள் அற்றதாக இருக்க வேண்டுமென்பதுடன், அதற்காகத் தனது அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென இம்முறை இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல்களின் போது குறித்த தாபனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

166. இந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம், அரச சேவையாளர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் போன்றவற்றின் தேவைப்பாடுகள் மற்றும் அவற்றினை ஒழுங்குவிதிப்படி செயற்படுத்தப்படுவதற்கான அனுமதியை வழங்குமாறும், அதற்கான ஆலோசனைகள் வழங்குமாறும் தாபனத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட்ட ஏராளமான வேண்டுகோள்கள் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப்பெற்றன.

167. அவ்வாறான வேண்டுகோள்களுக்கான அங்கீகாரமும், அறிவுறுத்தல்களும் குறித்த தாபனத் தலைவர்களுக்கு தேர்தல்கள் ஆணையாளரால் அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கான அங்கீகாரம் வழங்குவதற்கு முன்பாக குறித்த நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் ஆகியவை நியமிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக நடைபெற்றுள்ளனவா எனவும், தேவைப்பாடுகளின் பிரகாரம் அவற்றைத் தாமதப்படுத்துவதற்கான சாத்தியங்கள் உண்டா எனவும் ஆராயப்பட்டது. குறித்த நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் என்பன அரச நியதிப்படி மேற்கொள்ளப்பட்டனவா எனவும், இல்லையேல் தேர்தற் காலப்பகுதியில் அரசியல் இலாபம் கருதி வழங்கப்படுகின்றனவா எனவும் ஆராயப்பட்டு அதன் பிரகாரம் தேர்தல்கள் ஆணையாளரால் தீர்மானிக்கப்பட்டு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

168. இவ்வாறான விடயங்கள் தொடர்பான அறிவுறுத்தல் பட்டியல் ஒன்று ஏற்கெனவே அரச நிறுவனங்களுக்கு தேர்தல்கள் ஆணையாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதனை அறிந்த சில அமைப்புக்களால் அரச நிறுவனங்களிலும், அரச கூட்டுத்தாபனங்களிலும், சபைகளிலும் இடம்பெற்ற நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை தேர்தல்கள் ஆணையாளரிடம் முன் வைத்திருந்தனர். அம்முறைப்பாடுகள் பற்றி குறித்த அமைப்புக்களிடமிருந்து தீர விசாரிக்கப்பட்டு குறித்த நிறுவனங்களுக்கு அதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

அரசியல் யாப்பின் 104 இ (1) ஆம் உறுப்புரைக்கு அமைய தேர்தல்கள் திணைக்களம் தேர்தல் காலப்பகுதியினுள் இலங்கைப் பொலிசாருடன் இணைந்து செயற்படுதல்.

169. அரசியலமைப்பின் 103 (2) ஆம் பிரிவிற்கு இணங்க, சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்கள் மற்றும் மக்கள் தீர்ப்பு என்பவற்றை நடாத்துதலே தேர்தல் ஆணைக்குழுவின்/ திணைக்களத்தின் முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது.

170. தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில், தேர்தல் ஆணைக்குழுவுக்கு / தேர்தல் ஆணையாளருக்கு தேர்தலுக்கான வசதிகளை வழங்குதலும், பொலிஸ் அலுவலர்களைப் பெற்றுக் கொடுத்தலும் பொலிஸ் மா அதிபரால் நிறைவேற்றப்படுதல் வேண்டுமென அரசியலமைப்பின் 104இ(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் இடம்பெறும் காலத்தில் குறித்த பொலிஸ் அலுவலர்கள்

தேர்தல் ஆணைக்குழுவிற்குப் பொறுப்புக் கூறல் வேண்டுமெனவும், ஆணைக்குழுவின் விதிமுறைகள் மற்றும் நிருவாகத்தின் கீழ் அவர்கள் செயற்படல் வேண்டும் எனவும் அந்த அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தலை சுதந்திரமானது ஆகவும், நியாயமானது ஆகவும் நடாத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் திட்டமிடப்பட்டவாறு பொலிஸ் அலுவலர்களை வழிநடாத்துதல் வேண்டும்.

தேர்தல் கடமைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை பொலிசாருக்கு வெளியிடுதல்

171. மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் போது, வாக்காளர்கள் சுதந்திரமானது ஆகவும், நியாயமானது ஆகவும் செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவது, தேர்தல் சம்பந்தமான கடமைகளைப் பொறுப்பேற்று உள்ள சகல ஊழியர்களதும் கடமை ஆகும். தேர்தல் இடம்பெறும் காலப்பகுதியில் நாட்டின் சட்டம் மற்றும் அமைதியைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் என்பவற்றிற்கான ஆலோசனைகளை பொலிஸ் மா அதிபரால் பொலிசாருக்கு வழங்குதல் வேண்டும். அத்துடன், சகல பொலிஸ் அலுவலர்களுக்கும் குறித்த நடவடிக்கைகள் தொடர்பான மேலதிக விளக்கங்களையும், விஷேட விடயங்களையும் அறிவிப்பதற்கான விஷேட அறிவுறுத்தல் அட்டவணை ஒன்று தேர்தல்கள் ஆணையாளரால் தேர்தல் காலத்தில் தயாரித்து வழங்கப்படுகின்றது. அதில் உள்ளடக்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் கீழ்க்காணும் வகையில் அமைந்துள்ளன.

I. தேர்தல் சட்டத்திற்கமைவாக, குறித்த அறிவுறுத்தல்களை சரியாகவும், பக்கச் சார்பற்ற முறையிலும் செயற்படுத்துவதன் அவசியம்.
II. தேர்தல் நடவடிக்கைகள் சம்பந்தமான முறைப்பாடுகள் தொடர்பாக தாமதமின்றி செயற்படுதல்.
III. தேர்தலில் போட்டியிடும் அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஆகியவற்றின் வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சார அலுவலகங்களை நடாத்திச் செல்லல்
IV. மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் 73 ஆம் பிரிவின் கீழ் உள்ள விடயங்கள்
V. தேர்தல் குற்றங்கள் மற்றும் தேர்தல் மோசடிச் செயல்கள்
VI. தேர்தற் தினத்தில் தேர்தல் கடமைகளுக்கு இடையூறான விடயங்களை அகற்றுதல்
VII. அஞ்சல் மூல வாக்குச் சீட்டுக்களை உறுதிப்படுத்தும் அலுவலர்கள் ஆகக் கடமை ஆற்றும் பொலிஸ் அலுவலர்களுக்கு உரிய முக்கியமான விடயங்கள்.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் என்பவற்றின் முகவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களுக்கு பொலிசாரின் ஒத்துழைப்பு

172. தேர்தலில் போட்டியிடும் அரசியற் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் முகவர்கள் ஆகியோருடன் நடாத்தப்படும் கலந்துரையாடல்கள் தேர்தல்கள் ஆணையாளரின் தலைமையின் கீழ் தேர்தல்கள் செயலகத்தில் நடாத்தப்படுகின்றன. மாவட்ட ரீதியாக நடாத்தப்பட வேண்டிய இவ்வாறான கலந்துரையாடல்கள் அந்தந்த மாவட்டங்களின் மாவட்டத் தெரிவித்தாட்சி அலுவலரால் அவர்களது மாவட்ட அலுவலகங்களில் நடாத்தப்படுகின்றன. அரசியற் கட்சிகளின் அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கும் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும் அக்கலந்துரையாடல்களின் போது சமுகமளிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. தேர்தல் செயலகத்தில் நடைபெறுகின்ற கலந்துரையாடலின் போது பொலிஸ் மா அதிபர் அல்லது அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (தேர்தல்கள்/ நிருவாகம்) பங்குபற்றினார். மாவட்ட ரீதியாக நடைபெறும் இவ்வாறான கலந்துரையாடல்களில் குறித்த மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், உதவிப் பொலிஸ் அதிகாரிகள் பங்குபற்றுவர் என்பதுடன், சில சந்தர்ப்பங்களில் கீழ் மட்ட பொலிஸ் அலுவலர்களும் பங்குபற்றினார்கள்.

173. இக்கலந்துரையாடல்களில் இடம்பெறும் விடயங்கள் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் கடமைகள் என்பன முக்கியமான பல பிரிவுகளுக்குள் அடங்குகின்றன. கீழ்க் காணும் விடயங்கள் பற்றி அச்சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்படுகின்றது.

I. தேர்தல் சட்டத்திற்கிணங்க, அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஆகியவற்றின் முகவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள்.

II. தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் நடாத்துவதற்கான பாதுகாப்பு வழங்குதலும் ஒலிபெருக்கிப் பாவனை ஆகியவற்றுக்கான அனுமதி வழங்குதலும்

III. போட்டியிடும் அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் நடாத்தப்படும் தேர்தல் பிரச்சாரங்களுக்கான அலுவலகங்களை அமைத்தல்

IV. தேர்தற் பிரச்சார நடவடிக்கைகளின் போது கட்சிகளுக்கும், குழுக்களுக்கும் அவற்றின் வேட்பாளர்களுக்கும் ஏற்படகூடிய இடையூறுகள்.

V. விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வேட்பாளர்களின் பாதுகாப்பு

VI. வாக்களிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்த பின்னர் வாக்குப் பெட்டிகளை வாக்கெண்ணல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள்

VII. பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளுதலும், அவற்றிற்கான விசாரணைகளை மேற்கொள்ளுதலும்.

VIII. வாக்களிப்பு நிலையங்களுக்கும், வாக்கு எண்ணல் நிலையங்களுக்கும் பாதுகாப்பு வழங்குதல்.

IX. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரச உடைமைகள் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்

X. சட்ட விரோதமான பிரச்சார அறிவித்தல்கள் வெளியிடுவதை தவிர்ப்பதும், வெளியிடப்பட்டு உள்ள அறிவித்தல்களை அகற்றுதலும்.

XI. கட்சிகள் மற்றும் குழுக்களின் ஆதரவாளர்களைக் கொண்டு வாகன ஊர்வலங்கள் நடாத்துதல்

174. இக்கலந்துரையாடல்களின் போது கட்சிகள் மற்றும் குழுக்கள் முன்வைக்கும் விடயங்கள் மூலம், பொலிஸ் அதிகாரிகளுக்கு பொலிஸ் பிரிவு மட்டத்தில் தேர்தல் சட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய தெளிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். தேர்தல் திணைக்களத்திற்கு தேர்தல் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பான தீர்வுகளைக் காண்பதற்கும் குறித்த கலந்துரையாடல்கள் உதவக்கூடும். அத்துடன் தேர்தற் காலப்பகுதியில் பொலிஸ் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகளில் குறைபாடுகள் இருப்பின் அவற்றை மாவட்டப் பொலிஸ் அதிகாரிகளிடம் கையளிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை பொலிஸ் மா அதிபர் அல்லது சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரால் (தேர்தல்/ நிருவாகம்) மேற்கொள்ளப்படும். அத்துடன் கலந்துரையாடல்களில் பங்குபற்றுகின்ற முகவர்களுக்கும் இது பற்றி அறிவிக்கப்படும்.

தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளைக் கையேற்றல் மற்றும் பொலிசாரின் ஒத்துழைப்புடன் முறைப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்

175. தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கையேற்கும் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் தேர்தல் தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்படுகின்றன. அம்முறைப்பாடுகளை எழுத்து மூலமாகக் கையேற்கப்பட்ட பின்னர் அவை தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏற்ற வகையில் தேர்தல்கள் செயலகத்திலும், மாவட்ட தேர்தல் அலுவலகங்களிலும் முறைப்பாட்டுப் பிரிவுகள் அமைக்கப்படுகின்றன. இது தொடர்பாக தேர்தலில் போட்டியிடும் தரப்பினர், தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகிய சகலரும் அறிந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இச் செயற்திட்டம் தொடர்பாக பொதுமக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு செய்தித்தாள்களில் அறிவித்தல்கள் பிரசுரிக்கப்படுகின்றன. தேர்தல்கள் செயலகத்தில் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்கான தொலைபேசி வசதிகளுடன், முறைப்பாடுகள் கையேற்கும் பிரிவில் பதவிநிலை அலுவலர்களும், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் உள்ளடங்கிய பணிக்குழுவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பர். மாவட்டங்களின் முறைப்பாடுகளை குறித்த மாவட்டப் பொலிஸ் நிலையங்களில் விசாரிக்கப்பட்டு, அதன் அறிக்கைகளை தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கும் கடமைகளை மேற்படி பொலிஸ் அலுவலர்கள் செயற்படுத்துவர்.

176. இவ்வாறு முறைப்பாடுகளைக் கையேற்கும் செயற்றிட்டம் மூலம் தேர்தலை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு கீழ்க் காணும் வகையிலான காரணங்கள் அமைந்ததெனக் கூறலாம்.

I. தேர்தல் இடம்பெறும் காலப்பகுதியில் அல்லது தேர்தற் தினத்தில் சம்பவிக்கும் ஏதேனுமொரு

காரணத்தின் நிமித்தம் அல்லது ஒருவர் நேரடியாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கோ தேர்தல்கள் ஆணையாளருக்கோ தேர்தல் தொடர்பாக தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறைப்பாடு எனக் கருதப்படக்கூடிய ஏதேனுமொரு காரணத்தின் நிமித்தம் முறைப்பாடுகளை இந்தச் செயற்திட்டத்தின் கீழ் இயங்கும் முறைப்பாட்டு நிலையத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த அலுவலர்கள் தாமதமின்றிச் செயற்படுவர்.

II. தேர்தல் சட்டங்கள் மீறப்படுதல் அல்லது கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்கள் போன்ற விடயங்களில் ஏதேனும் நியாயமற்ற செயல்கள் இடம்பெற்றிருந்தால் அவ்விடயங்கள் பற்றி முறைப்பாடுகள் செய்திருப்பின், குறித்த முறைப்பாட்டுப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலர்கள் அல்லது தேர்தல்கள் திணைக்கள அலுவலர்கள் அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

III. முறைப்பாடுகளின் தன்மையைக் கருத்திற் கொண்டு, அவற்றிற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய ஆலோசனைகளைப் பெறுவதற்காக, தேர்தல்கள் ஆணையாளருக்கோ அல்லது பொலிஸ் மா அதிபருக்கோ குறித்த முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்குமாறு முறைப்பாட்டு நிலையத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், முறைப்பாடுகள் தொடர்பாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அல்லது பிரதேச பொலிஸ் அதிகாரிக்கு கட்டளை பிறப்பிப்பதற்குரிய அவகாசம் தேர்தல்கள் ஆணையாளருக்கு அல்லது பொலிஸ் மா அதிபருக்கு கிடைக்கப் பெறுகின்றது.

IV. முறைப்பாடுகளைச் சமர்ப்பித்த தரப்பினருக்கு தாமதமின்றி அவற்றிற்கான தீர்வுகளை எட்டுவதற்கும், தேர்தல் நடவடிக்கைகளில் ஏற்படும் குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெறுகின்றன.

V. தேர்தல் தினத்தில், கிடைக்கப் பெற்றுள்ள தேர்தல் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், குறித்த பிரதேச பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டு, குறித்த சம்பவங்கள் பற்றிய அறிக்கையைப் பெற்றுக் கொள்வதன் மூலம், குறித்த வாக்களிப்பு நிலையத்தின் வாக்கெடுப்பினை இல்லாதொழிப்பதற்கான தீர்மானத்தை தேர்தல் ஆணையாளரால் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் அமைகின்றது.

தேர்தல்கள் செயலகம் மற்றும் மாவட்டச் செயலகங்களில் தாபிக்கப்பட்ட தேர்தல்கள் முறைப்பாடுகளை கையேற்கும் நிலையங்கள்.

177. தேர்தல்கள் ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் முறைப்பாட்டு நிலையங்களின் நடவடிக்கைகள் கீழ்வருமாறு மேற்கொள்ளப்படுகின்றன.

I. தொலைபேசிச் செய்திகள், தொலைநகல் செய்திகள் அல்லது எழுத்து மூலமான முறைப்பாடுகள் கையேற்கப்பட்டு அவற்றை ஆவணப்படுத்தல் மற்றும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக அவற்றை குறித்த அலுவலர்களிடம் சமர்ப்பித்து அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல்

II. குறித்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்ட பிரதி/ உதவித் தெரிவத்தாட்சி அலுவலர், பொலிஸ் மா அதிபர் அல்லது அரச நிறுவனத் தலைவர் ஊடாக முறைப்பாடு பற்றிய அறிக்கையைப் பெற்ற பின்னர் அம்முறைப்பாடுகள் தொடர்பான உண்மை நிலையை அறிந்து, மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரால் தாமதமின்றி உரியவர்களுக்கு அறிவிக்கப்படும்.

III. மாவட்டங்களில் அமைந்துள்ள தேர்தல் முறைப்பாட்டு நிலையங்களில் அல்லது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு, மாவட்ட பிரதி/ உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் தேர்தல்கள் ஆணையாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும் போது தேர்தல்கள் ஆணையாளரால் குறித்த ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

மாவட்டங்கள் மற்றும் பிரதேச மட்டங்களில் தாபிக்கப்பட்ட முறைப்பாடுகளை கையேற்கும் நிலையங்கள்

178. இத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை கையேற்கும் நிலையங்கள் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகங்களிலும். பிரதேச ரீதியாக பிரதேச செயலகங்களிலும்

அமைக்கப்பட்டுள்ளன. இதற்கான வழிகாட்டல் உடன், அதற்கான பணிக்குழுவினரை நியமிப்பதற்கான ஆலோசனைகளும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த மாவட்ட அல்லது பிரதேச முறைப்பாட்டு நிலையங்களுக்கான பணிக்குழுவினரை நியமிக்கும் போது ஒரு பதவிநிலை அலுவலருடன் கூடிய ஒரு பணிக்குழுவினரும், பொலிஸ் அலுவலர்களும் நியமிக்கப்படல் வேண்டும்.

முறைப்பாடுகளைச் சமர்ப்பித்த நபர்கள் மற்றும் அமைப்புக்கள்

179. முறைப்பாடுகளைக் கையேற்கும் நிலையங்களில் பின்வரும் நபர்கள் மற்றும் அமைப்புக்கள் ஆகியவற்றால் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(1) தேர்தலில் போட்டியிடும் அரசியற் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள்
(2) தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள்
(3) ஏனைய சமூக அமைப்புக்கள்
(4) வாக்காளர்கள் மற்றும் ஏனைய நபர்கள்

180. இத்தேர்தலில் கீழ்க் காணும் கண்காணிப்புக் குழுக்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தெளிவானதாக அமைந்திருந்தன.

I. சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL)
இல. 12/3, றொபட் டெரஸ், றொபட் குணவர்தன மாவத்தை, கொழும்பு 06.
II. சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலுக்கான அமைப்பு (CaFFE)
இல. 100/19 ஏ, வெலிகடவத்த வீதி, இராஜகிரிய.
III. தேர்தல் கண்காணிப்பு வலயம்,
327/2 டீ, விஜயபா பிளேஸ், கஜபா மாவத்தை, மாகொல வடக்கு.
IV. தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் (NPOC)
195, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.
V. தேர்தல் வன்செயல்கள் கண்காணிப்பு நிலையம் (CMEV)
24/2, 28 ஆம் ஒழுங்கை, மல் வீதி அருகில், கொழும்பு 07

181. இவற்றைத் தவிர, மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், மாவட்டத் தேர்தல்கள் அலுவலக பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அவ்வமைப்புக்களால் அவற்றை தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. மேலும் இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் போன்ற தொழிற் சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஆகியனவும் தேர்தல் முறைப்பாடுகளைச் சமர்ப்பித்திருந்தனர். ஒரு சிலர் அனாமதேய முறையிலும் தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடுகளை சமர்ப்பித்து உள்ளனர்.

தேர்தல்கள் ஆணையார் அவர்களால் விசேட விசாரணை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு முறைப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல்

182. இத் தேர்தல்களின் போது, தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் அவரது நேரடி ஈடுபாட்டுடன் விஷேட விசாரணை அலுவலர்களைக் கொண்டு குறித்த முறைப்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

(அ) ஒரு சில பிரதேசங்களில் அனுமதி அற்ற தேர்தல் பிரச்சார அறிவிப்புகள், வேட்பாளர்களின் பெரிய அளவிலான புகைப்படங்களைக் காட்சிப்படுத்தல் போன்ற முறைப்பாடுகளின் பிரகாரம், அவற்றை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிசாருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதும் தொடர்ச்சியாக அவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதனால் அம் முறைப்பாடுகளின் உண்மைத் தன்மை பற்றி ஆராய்ந்து செயற்படுமாறு பொலிசாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதன் பிரகாரம் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளனவா என ஆராய்ந்த போது.

(ஆ) முறைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகளை அனுப்பி வைக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் அலுவலர்களுக்கு அறிவித்த பின்னர் கிடைக்கப்பெற்ற அவ்வறிக்கைகளில் உள்ளவற்றின் உண்மைத் தன்மையை ஆராய்ந்த போது.

(இ) மிகக் கடுமையாக தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள போது.

தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் தன்மை

183. தேர்தல்கள் செயலகத்தில் முறைப்பாடுகள் கையேற்கும் நிலையத்திற்கும், மாவட்ட முறைப்பாட்டு நிலையங்களுக்கும் தேர்தலுக்கு முன்னர் கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளின் தன்மையின் அடிப்படையில் பின்வருமாறு வகுக்கப்படலாம்.

தேர்தல் சட்டங்களை மீறல் மற்றும், சட்டவிரோத தேர்தல் அறிவித்தல்களை காட்சிப்படுத்தல்

184. மாகாண சபைத் தேர்தல் சட்டங்களின் பிரகாரம், வேட்புமனுத் தாக்கலின் பின்னரும், தேர்தலுக்கு 48 மணித்தியாலங்கள் முன்னருமான இடைப்பட்ட காலப்பகுதியில் தேர்தல் பிரச்சார அறிவிப்புக்கள் காட்சிப்படுத்தலாம். சட்ட ரீதியாக இடம்பெறும் தேர்தலுக்கான பிரச்சாரக் கூட்டம் இடம்பெறுகின்ற இடத்தினுள் குறித்த கூட்டம் நடைபெறும் காலவேளையில் மாத்திரமே தேர்தல் பிரச்சார அறிவிப்புக்கள் காட்சிப்படுத்தலாம். இது தவிர, தேர்தல் சட்டத்திற்கமைவாக நிறுவப்பட்டுள்ள கட்சி அலுவலகங்களில் அரசியற் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் என்னும் விடயங்களின் கீழான பிரச்சார அறிவிப்புக்கள் காட்சிப்படுத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரொருவர் பயணிக்கின்ற வாகனத்தினுள் அல்லது வாகனத்தின் மீது அறிவிப்புக்கள் அல்லது புகைப்படங்கள் அல்லது இலச்சினைகள் காட்சிப்படுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

185. எவ்வாறாயினும், மேற்கூறப்பட்ட சட்டபூர்வமற்ற அறிவிப்புக்களைத் தேர்தல் காலத்தில் காட்சிப்படுத்தும் நடவடிக்கைகளானது, தற்போதைய தேர்தல் நடவடிக்கைகளில் வெளிப்படையாகவே மேற்கொள்ளப்படும் தேர்தல் சட்ட மீறல்கள் எனக் கருதப்பட முடியும். இம்முறை மாகாண சபைத் தேர்தல்களில் கீழ்க் காணும் சட்ட விரோதமான அறிவிப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டதாக அறியப்பட்டுள்ளன.

- அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்ட கூட்ட வளவிற்கு வெளியே கூட்டம் நடைபெறாத காலத்தில் பொதுமக்கள் நடமாடும் பிரதான பாதைகளின் இருமருங்கிலும் அறிவிப்புக்களை விளம்பரப்படுத்துதல்.
- வேட்பாளர் பயணிக்காத வாகனங்களில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அவ் வாகனங்களில் வேட்பாளரின் புகைப்படங்கள், அறிவிப்புக்கள் காட்சிப்படுத்துதல்.
- பொது மோட்டார் வாகனச் சட்டங்களையும் மீறும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற வாகனத்தின் கண்ணாடிகள் மூடப்படும் விதத்தில் அறிவிப்புக்கள் காட்சிப்படுத்துதல்.
- அரச மற்றும் தனியார் பஸ் வண்டிகளில் பிரச்சார அறிவிப்புக்கள் காட்சிப்படுத்துதல்.
- அரச காணிகளிலோ, அரச கட்டிடங்களிலோ பிரச்சார அறிவிப்புக்கள் காட்சிப்படுத்துதல்.
- வாகனத்தைச் செலுத்தும் சாரதியின் அவதானிப்புக்கு இடையூறாக பிரதான பாதையின் மீது சாயப் பூச்சுகளால் அறிவிப்புக்கள் எழுதப்பட்டு காட்சிப்படுத்துதல்.
- பிரதான பாதைகளுக்குக் குறுக்காக கொடிகள் கட்டப்படுதல்

186. இவ்வாறான சட்ட விரோதமான அறிவிப்புக்களை குறித்த இடங்களில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளரால் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டு உள்ளதுடன், அதற்கான ஊழியர்களைப் பெற்றுக்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. அத்துடன் தேர்தல் நடவடிக்கைகள் பற்றி தேர்தல் ஆணையாளரால் அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஆகியவற்றுடன் நடாத்தப்பட்ட கலந்தாலோசனைகளின் போது, மேற்குறிப்பிட்ட சட்ட விரோதமான அறிவிப்புக்களை அகற்றுவதன் அவசியம் பற்றியும், அவற்றை அகற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் செலவுகள் மற்றும் சிரமங்கள் தொடர்பாகவும் கட்சி முகவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

187. ஒரு சில பிரதேசங்களில் சட்ட விரோதமான தேர்தல் அறிவிப்புக்களை அகற்றும் நடவடிக்கைகள் மந்தகதியில் இடம்பெறுவதாகக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக, தேர்தல்கள் ஆணையாளரால் குறித்த மாவட்டத்தின் பொலிஸ் அலுவலர்களுடன், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அடங்கிய குழுக்கள் அப்பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பஸ் வண்டிகளில் அல்லது ஏனைய வாகனங்களில் ஒட்டப்பட்டு உள்ள

அறிவிப்புக்களை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களின் போது பொலிஸ் அலுவலர்களுக்கும், அரச அலுவலர்களுக்கும் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதாக தேர்தல்கள் ஆணையாளருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

188. அரசியற் கட்சிகள், தேர்தல்கள் கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் போன்றவற்றினால் மேற் குறிப்பிட்ட சட்ட விரோதமான பிரச்சார அறிவிப்புக்கள் தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்ட போது, அவற்றை அகற்றுமாறு குறித்த மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு தேர்தல்கள் ஆணையாளரால் கட்டளை பிறப்பிப்பதற்கும், அகற்றிய பின்னர் அது பற்றிய அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்குமான நடவடிக்கைகள் தொடர்பாக தேர்தல் செயலக முறைப்பாட்டு நிலையம் செயற்பட்டு வந்துள்ளதுடன், இந்தச் செயற்பாடுகளின் முன்னேற்ற அறிக்கைகளை உடனுக்கு உடன் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

தேர்தல் சட்டங்களை மீறல்: சட்டவிரோத கூட்டங்களை நடாத்துல் மற்றும் அனுமதியற்ற ஊர்வலங்கள் நடைபவனிகள் என்பனவற்றை நடாத்துதல்

189. தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் தமது கட்சி/ குழுவையும் வேட்பாளர்களையும் வெற்றியின் பால் இட்டுச் செல்வதற்கு பகிரங்க கூட்டங்கள் நடாத்துவது இன்றியமையாததோடு அதனை மாகாண சபை தேர்தல்கள் கூட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கொள்ள வேண்டும். மாகாண சபை தேர்தல்கள் சட்டத்தின் 70 ஆம் பிரிவிற்கிணங்க தேர்தல் தினத்திற்கு 48 மணித்தியாலங்களிற்கு முன் ஆரம்பித்து தெரிவத்தாட்சி அலுவலரினால் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு ஒரு வாரத்தின் பின்னர் முடிவடையக் கூடிய கால எல்லைக்குள் உரிய நிருவாக மாவட்டத்திற்குள் எந்தவோர் பகிரங்க கூட்டத்தினையும் நடாத்த முடியாது.

190. வேட்பு மனு கால எல்லை முடிவடைந்த பின்னர் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தமது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக சட்ட ரீதியான பொதுக்கூட்டங்களை நடாத்துவதற்கு பொது இடங்களை அல்லது தனியார் இடங்களை, அதன் உரிமையாளர்களின் சம்மதத்துடன் பெற்றுக்கொள்வதுடன், கூட்டங்களுக்கான ஒலிபெருக்கிகள் பாவனைக்காக பிரதேச பொலிஸ் நிலையங்கள் மூலம் அனுமதியையும் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறான கூட்டங்கள் நடைபெறுகின்ற இடங்களுக்கான பாதுகாப்பு வழங்குதல் பிரதேச பொலிஸ் நிலையங்களுக்கு உரிய பொறுப்பாகும்.

191. மேற்குறிப்பிட்ட ஒழுங்கில் இடம்பெறாத கூட்டங்கள் தொடர்பாக, அதாவது அரசியல் உரிமைகள் இல்லாத அரச நிறுவனங்களின் மற்றும் கூட்டுத்தாபனங்களின் பதவிநிலை அலுவலர்கள் மற்றும் சமாதான நீதவான்கள் என்ற பிரிவிற்குள் உள்ளடங்கும். கிராம அலுவலர்கள் ஆகியோரை அரசியல் நோக்கங்களுடன் கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தமை, மற்றும் அரச அலுவலர்களை அவர்களது கடமை நேரத்தில் அவ்வாறான கூட்டங்களுக்குச் சமுகமளிக்குமாறு அழைப்பு விடுத்தமை அல்லது அதற்கான முயற்சிகளை மேற்கொண்டமை போன்ற முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அவ்வாறான செயல்களும் சட்ட விரோதமானவையாகக் கருதப்படுகின்றன. அத்துடன், கலைக்கப்பட்டிருக்கும் ஒரு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர்கள், உறுப்பினர்கள் மீண்டும் வேட்பாளர்களாகத் தேர்தலில் போட்டியிடுவதற்கு உள்ளவர்கள், மாகாண சபைகளில் கடமையாற்றும் உயர் அதிகாரிகளின் நட்புறவுடன், மக்களதும், அரச அலுவலர்களதும் உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கங்களுடன் கூட்டங்களை நடாத்துவதற்கு முயற்சித்தமை பற்றியும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறான கூட்டங்களும் பல வழிகளில் சட்ட விரோதச் செயல்களாகவும், அரச சட்டதிட்டங்களை மீறும் செயல்களாகவும் கருதப்படுகின்றன.

192. மத்திய அரசாங்கத்தில் ஆட்சியிலிருக்கும் அரசியற் கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் மாகாண சபைத் தேர்தலுக்கென போட்டியிடவிருக்கும் தமது கட்சி வேட்பாளர்களது வெற்றியை இலக்காகக் கொண்டு தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பங்களில் தமது பதவிச் செல்வாக்கைப் பிரயோகித்து தமது பிரதேசத்திலுள்ள அரச அலுவலர்களைக் கடமைகளுக்காக அழைக்கும் பாவனையில் கூட்டங்களுக்குச் சமுகமளிக்குமாறு

அழைப்பு விடுக்கின்றனர். மேலும் அவர்களைத் தமது கட்சிக்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர். இவ்வாறான அரசியல்வாதிகளது அறிவித்தல்களின் பிரகாரம், பிரதேச அரச அலுவலர்கள் தமது கடமை நேரத்தில் கூட்டங்களுக்குச் சமுகமளிக்குமாறு அழைக்கப்பட்டு தமது கட்சி அபேட்சகர்களின் வெற்றிக்காக அவர்களது ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் மற்றும் அவ்வலுவலர்களது கடமைகளினூடாக வாக்காளர்களை வலியுறுத்தும் வகையிலான முயற்சிகள் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களும் இடம்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளருக்கு அறியக் கிடைத்துள்ளது.

193. மாகாண சபை தேர்தல்கள் சட்டத்தின் 69 ஆம் பிரிவிற்கு அமைய வேறு தேர்தல்கள் போன்றே தேர்தல் காலப்பகுதிக்குள் அதாவது வேட்புமனு காலப்பகுதிக்குள் முதலாம் நாளிலிருந்து பெறுபேறுகளை வெளியிடப்பட்டு ஒரு வாரம் செல்லும் வரை மே தினத்தில் நடாத்துகின்ற மே தின ஊர்வலமொன்று அல்லது சமய / சமூக நோக்கங்களுக்காக நடாத்தப்படுகின்ற ஏதேனும் ஊர்வலமொன்று தவிர்ந்த ஊர்வலம் எதனையும் நடாத்துதல், ஏற்படுத்துதல், பங்குபற்றுதல் என்பன தண்டணைக்குரிய குற்றமாகும்.

194. எனினும் இத் தேர்தலின் போது வேட்புமனு கையேற்றல் இறுதி நாளன்று சில மாவட்டங்களில் வாகன ஊர்வலங்கள் மற்றும் பொதுமக்கள் ஊர்வலங்கள் நடாத்தப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

195. வேட்புமனு கையளிக்க வருகை தருகின்ற போது வாகன ஊர்வலமாக வருகை தருகின்றமை எல்லா மாவட்டங்களிலும் அறிக்கையிடப்பட்ட போதிலும் வேட்புமனு கையளிக்கப்பட்டதை தொடர்ந்து கண்டி, கண்டி, குருநாகல், கிளிநொச்சி, கொழும்பு, கம்பஹா, மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களின் முன்னால் அல்லது பிரதான நகரத்திற்கு பொது மக்கள் இன்றேல் வாகன ஊர்வலங்கள் நடாத்தப்பட்டமை தொடர்பாக அறிக்கையிடப்பட்டமையை விசேடமாக குறிப்பிடல் வேண்டும். அம் மாவட்டங்களின் வேறு பிரதேசங்களிலும் இச் சட்டரீதியற்ற செயற்பாடுகள் அறிக்கையிடப்பட்டதோடு கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு வடக்கு, இரத்மலானை, கடுவெலை, ஹோமாகம, கெஸ்பேவ ஆகிய பிரதேசங்களிலும் கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு, மினுவாங்கொடை, திவுலப்பிட்டிய, அத்தனகல்ல பிரதேசங்களிலும் காலி மாவட்டத்தில் காலி, பத்தேகம மற்றும் ஹினிதும பிரதேசங்களிலும் பொதுமக்கள் மற்றும் வாகன ஊர்வலங்கள் நடாத்தப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. வேட்புமனு கையேற்ற அல்லது அதற்கு அடுத்த தினத்திற்கு அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, மருதமுனை பிரதேசங்களிலும், பொலன்னறுவை மாவட்டத்தின் கதுறுவெலை பிரதேசத்திலும், அநுராதபுரம் மாவட்டத்தின் ஹொரவப்பொத்தானை பிரதேசத்திலும், இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மதுல்லை பிரதேசத்திலும் மற்றும் கேகாலை மாவட்டத்தின் றம்புக்கனை பிரதேசத்திலும், நுவரெலியா மாவட்டத்தின் ஹட்டன், கொட்டகலை பிரதேசங்களிலும், புத்தளம் மாவட்டத்தின் சிலாபம் பிரதேசத்திலும், களுத்துறை மாவட்டத்தின் பயாகலை, பேருவளை, அளுத்கம, மத்துகம பிரதேசங்களிலும், மாத்தறை மாவட்டத்தின் கம்புறுபிட்டிய, தெனியாய பிரதேசங்களிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மிரிஜ்ஜவெல, தங்காலை பிரதேசங்களிலும் வேட்புமனு தினத்தன்று பொதுமக்கள் மற்றும் வாகன ஊர்வலங்கள் நடாத்தப்பட்டதாக அறியக் கிடைத்துள்ளது.

196. வேட்புமனு கையேற்பின் பின் இறுதித் தினத்தன்று கொழும்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகத்திற்கு முன்னால் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஊர்வலமொன்றை நடாத்தியமை தொடர்பாக விசாரிக்கப்பட்ட போது அவ் ஊர்வலத்தை நடாத்திய அரசியல்வாதிகள் அது ஒரு தவறல்ல என பகிரங்கமாக வெளிப்படுத்தியமை ஆச்சரியத்திற்குரிய விடயமாகும். அது போல் கொழும்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகத்திற்கு முன்னால் சட்டத்திற்கு முரணான நடத்தைகள் போன்ற கொண்டாட்டங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கையெடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கும், கொழும்பு நகரத்திற்கு பொறுப்பான சிரேட்ட பொலிஸ் மா அதிபருக்கும், அரசியல்வாதிகளுக்கெதிராக துரித பயன்தரு நடவடிக்கைகள் மேற்கொள்ளமுடியாமல் போனமை கவலைக்குரிய விடயமாகும். எவ்வாறாயினும் கம்பஹா மாவட்டத்தில் அனுமதியற்ற ஊர்வலமொன்றை நடாத்த நடவடிக்கை எடுத்த அரசியல்வாதிகளுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கையெடுக்க முயற்சி மேற்கொண்டமை தொடர்பாக உரிய பொலிஸ் அலுவலர்களுக்கு

தேர்தல்கள் திணைக்களத்தின் பாராட்டுக்கள் உரித்தாக வேண்டும். எவ்வாறிருந்த போதிலும் அன்றைய தினத்தின் பின்னர் இத்தகைய சட்டமுரணான நடவடிக்கைகள் மேற்கொள்வதை தடுப்பதற்கு பொலிஸ் மாஅதிபரும் தேர்தல் விடயத்திற்கு பொறுப்பான சிரேட்ட பொலிஸ் மா அதிபரும் களத்திலுள்ள அலுவலர்களுக்கும் அவர்களின் மேற்பார்வை அலுவலர்களுக்கும் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியதை தொடர்ந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தது.

197. வடமத்திய மாகாணத்தின் மாகாண சபை தேர்தல் நடாத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டின் தேர்தல் காலப்பகுதிக்குள் கா.பொ.த (உ/த) பரீட்சை நடாத்தப்பட்டு கொண்டிருக்கையில் அநுராதபுர நகரத்தில் பரீட்சை நிலையங்கள் அமையப்பெற்றிருந்த பாடசாலைகள் காணப்பட்ட பிரதேசத்தினூடாக பொதுமக்கள் ஊர்வலமொன்றினூடாக பிரச்சார கூட்ட வளவிற்குள் தமது ஆதரவாளர்களை அழைத்துச் செல்ல அம்மாவட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் உள்ளிட்ட வேட்பாளர்கள் பலர் நடவடிக்கையெடுத்திருந்தனர். கண்டி மாவட்டத்தில் வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்ட தினத்தன்று அரசாங்கத்தில் உயர்பதவியை வகித்த அரசியல்வாதியொருவரின் பாதுகாப்புடன் வாகன ஊர்வலமொன்று கண்டி நகரத்தில் நடாத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

198. பொலன்னறுவை மாவட்டத்தில் அரலகங்வில பிரதேசத்திலிருந்து பொலன்னறுவை - மட்டக்களப்பு பிரதான வீதிக்கு டிரக்டர் வண்டிகள், உந்துருளிகள் மற்றும் மிதிவண்டிகளுடாகவும், நடைபவனியாகவும் ஒரு பாரிய ஊர்வலம் வருகை தருவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதென கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து அவ் ஊர்வலத்தை தடுக்க பொலிஸ் அலுவலர்களுக்கும் தேர்தல்கள் அதிகாரிகளுக்கும் அதிகம் சிரமம்பட வேண்டியிருந்தது. இதற்காக பொலன்னறுவை உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு ஸ்தலத்திற்கு செல்ல வேண்டியிருந்ததோடு இந் நிலைமை தொடர்பாக உரிய கட்சியின் தலைமைத்துவத்திற்கும் அறிக்கையிட வேண்டியிருந்தது. அதே போன்று நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா நகர சந்தையில் வாக்குகளை இரந்து கேட்கும் பணியில் ஈடுபட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் ஆதரவாளர்களும் வேட்பாளர்களும் அமைச்சர் ஒருவரின் வழிநடத்தலில் நகரில் ஊர்வலமொன்றை நடாத்தியுள்ளனர். அதேபோன்று மொனராகலை மாவட்டத்திலும் பதுளை மாவட்டத்திலும் டிபென்டர் ஜீப் வண்டிகள் மற்றும் அத்தகைய அதிவிசேட வாகனங்களுடன் கூடிய வாகன ஊர்வலங்கள் அம் மாவட்டங்களின் நகரங்கள், கிராமங்கள், குக்கிராமங்கள், என்பனவற்றில் உலாவருதல் ஒரு சாதாரண காட்சியாக காணப்பட்டது.

199. குருநாகல் மாவட்டத்தில் மற்றுமோர் அரசாங்க கட்சியின் தலைவர் கலந்து கொண்ட இறுதி பிரச்சார கூட்டத்தில் அரசின் பலத்தை வெளிக்காட்டத்தக்கவிதத்திலான பொதுமக்களை ஊர்வலமாக பொதுக் கூட்டக் காணிகளுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்கள்.

200. இது தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர்களுக்கு அறிவூட்டி தேர்தல்கள் காலப்பகுதிக்குள் ஊர்வலங்கள், பவனிகள், நடாத்துவதை மட்டுப்படுத்தும் சட்டவிதிக்கமைய செயற்பட வேண்டிய தேவைப்பாடு சுட்டிக்காட்டப்பட்டது. முக்கியமாக கட்சித்தலைவர்கள் கலந்து கொள்ளும் இறுதி பிரச்சார கூட்டங்களுக்கு பொதுமக்களை ஊர்வலமாக அழைத்து வரும் கலாச்சாரத்தை மாற்றியமைக்கும் தேவைப்பாடு தொடர்பாக வலியுறுத்தப்பட்டது.

201. எவ்வாறான போதிலும் பிரதேச மற்றும் மாகாண மட்டத்திலான அரசியல் அதிகாரங்கள் தத்தமது பலத்தை காட்டுவதற்காக நடாத்துகின்ற இத்தகைய ஊர்வலங்களை முழுமையாக கட்டுபடுத்த முடியாமற் போனது.

202. இந்நிலைமையை கட்டுபடுத்த முடியாமற் போனமைக்கான காரணம் யாதெனில் இத்தகைய சட்டத்திற்கு முரணான நடத்தைகள் தொடர்பாக நீதிமன்ற செயன்முறையை மேற்கொள்ள சட்ட மா அதிபரின் அங்கீகாரம் தேவைப்படுவதாலும், சட்ட மா அதிபரின் அறிவுறுத்தல்களை பெற்றுக் கொள்வதற்கு கணிசமானளவு காலம் தேவைப்படுவதால் அது தொடர்பாகவுள்ள ஆர்வம் குறைந்து போய்விடும்.

203. மேலும் சட்டத்தை செயற்படுத்துவதனூடாகவோ அல்லது பொலிசாரின் கடுமையான நிருவாகத்தின் ஊடாகவோ மாத்திரம் இச் சட்டமுரணான

நடத்தைகளை தடுப்பது இயலாத காரியமாகும். அதற்கு அரசியற் கட்சித் தலைவர்களினதும் முன்னணி அலுவலர்களின் செயற்பாட்டாளர்களினதும், கட்சி ஆதரவாளர்களினதும் ஒத்துழைப்பு இன்றியமையாதது ஆகும். அதே போன்று இத்தகைய செயல்கள் சட்டமுரணானவை என பொறுப்பாளர்களுக்கு அறிவூட்டுவதற்காக இறுதி வேலைத்திட்டமொன்றையும் செயற்படுத்துவது அவசியமாகும்.

தேர்தல் சட்டங்களை மீறல் : சட்டவிரோத அலுவலகங்களை தாபித்தல்

204. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 73 ஆம் பிரிவில், ஒரு நிருவாக மாவட்டத்தில் நடைபெறும் தேர்தலின்போது அதிகாரம் பெற்ற முகவர் ஒருவருக்கு, அல்லது சுயேச்சைக் குழுத் தலைவருக்கு அல்லது அவர்களது முகவர் ஒருவருக்கு தேர்தலுக்கு அடுத்த நாள் வரை நடாத்தக்கூடிய வகையிலும், தமது பிரச்சாரங்களை மேற்கொள்வதற்காகவும் தமது அலுவலகத்தை அமைத்துக் கொள்வது பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான அலுவலகங்களை அமைப்பதற்கு உரித்துடையவர்கள் அலுவலகத்தை அமைத்த பின்பு அவ்விடயம் பற்றி மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கும், அலுவலகம் அமைக்கப்பட்ட பிரதேச பொலிஸ் நிலைய அதிகாரிக்கும் அறிவித்தல் வேண்டும்.

205. இவ் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு அவற்றை நடாத்திச் செல்லும் முறைகள் பற்றி விஷேட சட்ட ஏற்பாடுகள் எதுவும் தேர்தல் சட்டத்தில் இடம் பெறாத காரணத்தினால், குறித்த தரப்பினருக்கும். சில வேளைகளில் பொலிஸ் அலுவலர்களுக்கும் பல சிக்கல்களை எதிர் நோக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களத்திற்கும், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் எழுத்து மூலமான விஷேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டியிருந்ததுடன், அலுவலகங்களை அமைத்துக் கொள்வதற்கு உரிய படிவங்களும் தேர்தல்கள் ஆணையாளரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக பொலிஸ் அலுவலர்களுக்கான தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட தேர்தல்கள் பற்றிய அறிவுறுத்தல் தொகுதியில் இவ்விடயம் பற்றி தெளிவுபடுத்தல்களும் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

206. எவ்வாறாயினும் சில சந்தர்ப்பங்களில் குறித்த பொலிஸ் நிலையத்திற்கும், தெரிவத்தாட்சி அலுவலருக்கும் அறிவிக்காமல் தேர்தல் பிரச்சார அலுவலகம் நடாத்திச் செல்வது பற்றியும், அரச கட்டிடங்களில் அல்லது அரச காணிகளில் ஆட்சியிலிருக்கும் அரசியற் கட்சி வேட்பாளர்களுக்கான அலுவலகங்களை அமைத்துள்ளமை பற்றியும் தேர்தல்கள் ஆணையாளருக்கும், தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அறியக் கிடைத்துள்ளது. அவ்வாறான முறைப்பாடுகள் பற்றி தொடர்ச்சியாக செயற்பட வேண்டிய அவசியத்தைக் கருத்திற் கொண்டு சட்டபூர்வமற்ற நடவடிக்கைகளுக்கு உரிய செயற்பாடுகள் தேர்தல்கள் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டது.

தேர்தல் சட்டங்களை மீறல் : வாக்காளர்களுக்கு அழுத்தம் கொடுத்தல்

207. மாகாண சபைத் தேர்தல்களின் போது ஒருவரை வாக்களிப்பதற்காகவோ அல்லது வாக்களிப்பதைத் தவிர்ப்பதற்காகவோ அவரைத் தூண்டுதல் அல்லது வற்புறுத்துதல் அல்லது பலவந்தப்படுத்தல் போன்ற செயல்கள் தண்டனைக்குரிய குற்றங்களென தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான தூண்டுதல்கள் நிமித்தம் நேரடியாகவோ அல்லது வேறு விதத்திலோ பெறுமதி மிக்க பொருள் வழங்குதல், கடன் வழங்குதல், பதவிகள் வழங்குதல், வேலை வாய்ப்பு வழங்குதல் செயல்கள் இலஞ்சக் குற்றமாகக் கருதப்படுகின்றது.

208. இந்த முறை நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலின் போது தேர்தல் ஆணையாளருக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளைப் பரிசீலித்த வேளையில், தேர்தலில் போட்டியிடுகின்ற ஒரு சில கட்சிகளது பாராளுமன்ற உறுப்பினர்களால் வாக்காளர்களுக்குப் பலவந்தப்படுத்திய சந்தர்ப்பங்கள் பற்றி அறியக் கிடைத்துள்ளது. மாகாண சபைகள் கலைக்கப்பட்டிருந்த போதும், மாகாண சபைகளில் கடமை ஆற்றிய சிரேஷ்ட அலுவலர்களின் ஒத்துழைப்பு உடன் நலன் உதவிகள் வழங்கும் திட்டங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி வேட்பாளர்களின் வேட்பாண்மையை ஊக்குவிப்பதற்கு என பொது மக்களுக்கு விநியோகிப்பதற்காகத் தருவிக்கப்பட்டிருந்த பொருட்கள் தேர்தல் காலப்பகுதியில் குறித்த வாக்காளர்களுக்கு வழங்கும் முயற்சிகள் தொடர்பான முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றன.

209. மத்திய அரசாங்கத்திலும் மாகாண சபைகளிலும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் சமூகத்தில் வறுமை ஒழிப்பு மற்றும் சுயதொழில்களை ஊக்குவித்தல் போன்ற சமூக நலன்புரி நடவடிக்கைகளுக்கு உதவுதொகை வழங்குதல் போன்ற சமூகத் தொண்டுகளை மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அவ்வாறான கருத்திட்டங்களுக்கு வருடாந்தம் தகைமை பெற்ற சேவையாளர்களை இனங்கண்டு குறித்த உதவுதொகைகள் வழங்கப்படுதல் வேண்டும். எனினும் மாகாண சபைகள் கலைக்கப்பட்ட பின்னர் மேற்குறித்த கருத்திட்டங்களுக்காக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பொருட்களை வாக்காளர்களைப் பலவந்தப்படுத்தும் நோக்கிலும், வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்காகவும் தேர்தல் காலப்பகுதியில் பயன்படுத்துதல் தேர்தல் சட்டங்களை மீறும் குற்றச் செயலாகும்.

அரச ஆதனங்களின் முறையற்ற பாவனை: அரச வாகனங்களை தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்

210. இலங்கை அரசியலமைப்பின் 17 ஆம் திருத்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய உறுப்புரைகளுக்கமைய, தேர்தலில் போட்டியிடும் அரசியற் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் தேர்தற் காலப்பகுதியில் அரச சொத்துக்களை ஏதேனுமொரு கட்சிக்கு அல்லது வேட்பாளருக்கு நன்மை பயக்கும் வகையிலோ அல்லது தீமை விளைவிக்கும் வகையிலோ பயன்படுத்துவதனைத் தடை செய்யும் அதிகாரம் தேர்தல்கள் ஆணையாளருக்கு உள்ளது.

211. அரச சொத்துக்களின் உரிமையாளர்கள் என்ற வகையில் நிருவகிக்கும் பொறுப்புக்களையும், அதிகாரத்தையும் கொண்டுள்ள அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனத் தலைவர்களும், அரச நிறுவனத் தலைவர்களும் தம்வசமுள்ள அரச சொத்துக்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்களாவர். அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு உரித்தான அரச சொத்துக்களை நிருவகிக்கும் பொறுப்பு அவர்களது கடமைகளில் ஒன்றாகும். அமைச்சுச் செயலாளருக்கும் மேலாக அவரது அமைச்சர் அவற்றிற்குப் பொறுப்பானவர் ஆவார். மத்திய அரசாங்கத்தின் கீழும், மாகாண சபையின் கீழும் உள்ள அமைச்சர்கள் மேற்படி கடமைகளில் ஈடுபடுகின்றனர். பாராளுமன்றத்தின் அதிகாரத்தைக் கொண்டுள்ள மக்கள் பிரதிநிதிகளால் தங்களது அரசியற் கட்சி சார்பாக மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் நலன் கருதி அரச வாகனங்கள், கட்டிடங்கள் போன்றவற்றை பயன்படுத்துதல் தற்போதைய தேர்தல் சட்டங்களின் பிரகாரம் சட்டங்களை மீறும் குற்றச் செயல்களாகும். பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களுக்கு தேர்தலில் போட்டியிடுகின்ற தமது கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களின் வெற்றியை இலக்காகக் கொண்டும், கட்சித் தலைவரின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காகவும், கட்சியினுள் தமது நிலையைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் இவ்வாறான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி தமது பொறுப்பிலுள்ள அரச சொத்துக்களை தேர்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துகின்றதாக தேர்தல்கள் ஆணையாளருக்கும், தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் மற்றும் ஊடகங்கள் மூலமாக வெளிப்படுத்தப்படும் செய்திகள் என்பவற்றிலிருந்து தெரியவந்துள்ளது. மாகாண சபைத் தேர்தல்களில் அமைச்சர்களின் உறவினர்கள் போட்டியிடும் சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிட்ட குற்றச் செயல்கள் அதிகமாக இடம்பெறுகின்றன. அரச கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த ஒரு அலுவலர் தேர்தலில் போட்டியிடும் போது அவர் கடமையாற்றிய கூட்டுத்தாபனத்துக்கு உரிய வாகனங்கள் மற்றும் சலுகைகள் என்பவற்றை தனது தேர்தல் வெற்றிக்காகப் பயன்படுத்துவதுண்டு. தவறான பதிவு இலக்கங்களுடன் அல்லது பதிவு செய்யப்படாமல் பயன்படுத்தும் வாகனங்களை தேர்தல் பிரச்சாரங்களுக்குப் பயன்படுத்துகின்ற போது, பொலிஸ் அலுவலர்களின் ஒத்துழைப்பு இன்றி பொது சிவில் அதிகாரிகளுக்கு அவ்வாறான வாகனங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருக்கும். தேர்தல் காலத்தில் திட்டமிடப்பட்டு நடாத்தப்படும் இவ்வாறான குற்றச் செயல்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சில பொலிஸ் அதிகாரிகள் இவ்வாறான குற்றச் செயல்களைத் தவிர்ப்பதற்கு முன்வராமை தொடர்பாக பெரியளவிலான விசனம் தேர்தல் காலப்பகுதிக்குள் பல்வேறு அரசியற் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் என்பனவற்றால் முன் வைக்கப்பட்டன.

அரச ஆதனங்களின் முறையற்ற பாவனை: அரச கட்டிடங்களை தேர்தல் பிரச்சார அலுவல்களுக்கு பயன்படுத்தல்

212. தேர்தலுக்காக மாகாண சபைகளைக் கலைத்த பின்னர் அச்சபையின் முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் தத்தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை குறித்த சபைக்கு சட்டபூர்வமாகக் கையளித்தல் வேண்டும். எனினும் இம்முறை மாகாண சபைகளுக்கான தேர்தல் நடவடிக்கைகள் ஆரம்பித்ததும் இவ்வுறுப்பினர்கள் தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலம், உத்தியோகபூர்வ வாகனம் ஆகியவற்றை அவர்களது கட்சி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு குறித்த சபைகளுக்குக் கையளிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளரால் வேட்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அவ்வாறு அறிவித்த பின்னரே அரச சொத்துக்களுக்குப் பொறுப்பாக உள்ள மாகாண சபை அமைச்சுச் செயலாளர்கள் குறித்த அறிவித்தலைச் சமர்ப்பித்து, இவ்விடயம் தொடர்பாக பதவியிலிருந்த முதலமைச்சர்களுக்கும், அமைச்சர்களுக்கும் நினைவூட்டற் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தேர்தல் ஆணையாளரின் நினைவூட்டல் கிடைக்கப்பெறும் வரை குறித்த அலுவலர்கள் மௌனம் சாதித்தமை இதன் மூலம் தெளிவாகின்றது.

213. மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்களுக்குரிய ஓய்வு விடுதிகள், சுற்றுலா பங்களாக்கள் என்பவற்றை தேர்தற் காலப்பகுதியில் அரசியற் கட்சி நடவடிக்கைகளுக்காக அமைச்சர்கள் அவற்றை ஒதுக்கிக் கொள்வது தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஒரு அமைச்சுக்குரிய அவ்வாறான விடுதியை அவ்வமைச்சருக்காக ஒதுக்கி வைப்பதில் முன்னுரிமை வழங்கும் நடவடிக்கையானது சகஜமாக நிகழக்கூடியது எனினும், அவ்வப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக கட்சியின் முக்கிய அரசியல்வாதி ஒருவருக்கு நீண்ட கால அடிப்படையில் அவ்வாறு விடுதிகளை ஒதுக்கி வைப்பது முறையற்ற செயலாகும். அவ்வாறு ஒரு பங்களாவை உத்தியோகபூர்வமாக அமைச்சர் ஒருவருக்கு ஒதுக்கி வைக்கும் போது அதற்கான செலவு அறவிடப்படுவதில்லை. இதன் பிரகாரம் அரசியல் நடவடிக்கைகளுக்காக அரசியல்வாதி ஒருவருக்கு இலவசமாக விடுதியொன்றை ஒதுக்கி வைக்கும் செயலானது, ஏனைய தரப்பினருக்கு கிடைக்காத சலுகைகள் வழங்கப்படுவதாகக் கருதப்படுவதுடன், நியாயமான தேர்தலை நடாத்துவதற்கு உரிய தடைகளாகவும் கருதப்படுகின்றது.

214. இம் மாகாண சபைத் தேர்தல்களின் போது உள்ளூர் அதிகார சபைகளுக்கு அல்லது ஏனைய அரச நிறுவனங்களுக்குரிய பாவனையில் இல்லாத கட்டிடங்களை எவரேனும் அரசியல்வாதிகள் தமது பயன்பாட்டிற்கென கட்டணம் எதுவும் இன்றி பெற்றுக் கொண்டுள்ளதாக, எதிர்த்தரப்பு அரசியற் கட்சி வேட்பாளர்கள் அக்கட்சிகளின் ஏனைய உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருந்த முறைப்பாடுகள் மூலம் தெரியவந்துள்ளது. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக மேற்குறிப்பிட்டவாறான கட்டிடங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக தேர்தல்கள் ஆணையாளர் தலையிட்டு இக் கட்டிடங்களை பயன்படுத்திய சந்தர்ப்பங்களில் உரிய அதிகாரிகளிடமிருந்து அவற்றை தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளிலிருந்து விலக்கிக் கொள்வதற்கு தேர்தல் ஆணையாளர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

அரச ஆதனங்களின் முறையற்ற பாவனை: பாராளுமன்ற உறுப்பினர்கள் அஞ்சல் முத்திரைகளை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்

215. பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து உறுப்பினர்களும் மாதாந்தம் குறிப்பிட்ட தொகை பெறுமதியுடைய தபால் முத்திரைகளை கடிதங்கள் அனுப்புவதற்கென தபால் திணைக்களத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்கின்றனர். இம்முறை மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரச்சார ஆவணங்களை வாக்காளர்களுக்கு அனுப்பி வைப்பதற்காக இச்சலுகைகளைப் பயன்படுத்துகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. இத்தேர்தல்களில் அஞ்சல் மூலம் வாக்களிக்கும் அரச அலுவலர்களுக்கு மாகாண சபைகளுக்காகப் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரச்சார ஆவணங்களை மேற்குறித்த சலுகைகளைப்

பயன்படுத்தி அனுப்பி வைத்துள்ளதாக குறித்த அரச அலுவலர்களும், தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களும் தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்துள்ளனர். மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இச்சலுகைகளைப் பயன்படுத்தி தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதன் மூலம் ஒரு வேட்பாளர் ஏனைய வேட்பாளர்களுக்கு இழைக்கப்படும் நியாயமற்ற செயல்களாகக் கருதப்படுவதுடன், நியாயமான தேர்தலுக்கு தடைகளாகவும் கருதப்படுகின்றது.

அரச ஆதனங்களின் முறையற்ற பாவனை: அரச வைபவங்களை நடாத்துவதன் மூலம் வேட்பாளர்களுக்கு நன்மை பெற்றுக் கொடுத்தல்

216. மாகாண சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் கையேற்கப்பட்ட பின்னர் இரண்டு மாத காலங்கள் வரையான தேர்தற் காலத்தினுள் தேர்தல் இடம்பெறும் மாவட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் அமைச்சுக்களில் பல வகையான தேசிய வைபவங்கள், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் நடைபெறும் வைபவங்கள் ஆகியவற்றில் அரசாட்சியில் உள்ள கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரச்சாரத்தினை ஊக்குவிக்கும் நோக்கில் நடாத்தப்படுவதாக தெரிய வந்துள்ளது.

217. மத்திய அரசாங்கத்தின் அமைச்சுக்களால் நாட்டின் எந்தவொரு மாவட்டத்திலும் நிதி ஒதுக்கீடு செய்து செயற்படுத்தக்கூடிய வகையில் விஷேடமான மக்களை இலக்காகக் கொண்டு நலனுதவிகள் விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கேற்ற வகையில் குறித்த பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். இவ்வாறான நலனுதவிகளை வழங்கும் நடவடிக்கைகள் மத்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட போதும், மாவட்ட ரீதியாக மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆட்சியிலிருக்கும் கட்சி வேட்பாளர்களின் தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறான சம்பவங்கள் பற்றி அரசியற் கட்சிகள், வேட்பாளர்கள், சிவில் அமைப்புக்கள் ஆகியவை மூலம் தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில், அவற்றின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து, குறித்த வைபவங்களுக்கு மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் பங்குபற்றுவதைத் தவிர்க்கும் வகையிலும், தேர்தல் பிரச்சார நடவடிக்கையாக அமைவதைத் தவிர்க்கும் வகையிலும் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

218. இவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பாக அல்லது அவ்வாறான நோக்கங்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கூட்டங்கள் தொடர்பாக மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்களிடமிருந்தும் மற்றும் திணைக்களத் தலைவர்களிடமிருந்தும் அறிந்து கொள்ள முடியும். அவ்வாறான தகவல்கள் விசாரிக்கப்பட்ட போதும் பெரும்பாலான சந்தர்பங்களில் அவ் அலுவலர்களிடமிருந்து சரியான தகவல்கள் கிடைக்கப்பெறாமை, அவ்வாறான கூட்டங்கள் தொடர்பான பொலீஸ் அறிக்கை கிடைக்கப்பெறுகின்ற சந்தர்ப்பத்தின் போது குறித்த கூட்டம் நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளமை போன்ற காரணங்களால் பெரும்பாலான இது போன்ற முறைப்பாடுகள் தொடர்பில் திருப்திகரமான நடவடிக்கைகளை தேர்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ள முடியவில்லை. இருப்பினும் சில சந்தர்ப்பங்களின் போது இவ்வாறான பண்டங்களை பகிரும் சந்தர்ப்பங்கள் தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய வாக்கெடுப்பின் பின்னர் பகிர்வதற்கு சில நிறுவனங்களின் தலைவர்கள் இணங்கிய சந்தரப்பங்களுமுண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாகவும் குறைந்த வருமானம் பெறுவோரின் நலனோம்பலுக்காகவும் மேற்கொள்ளப்படுகின்ற சில நிகழ்ச்சித் திட்டங்களை தேர்தல் காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்த முடியாது போனமை குறித்த இலக்கை அடைந்து கொள்வதற்கு தடையாகுமென சில அமைச்சுக்களின் அலுவலர்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேர்தல்கள் செயலகத்தின் முறைபாடுகளைக் கையேற்கும் நிலையத்திற்கும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்.

219. தேர்தல் நடாத்தப்பட்ட மாவட்டங்களிலிருந்து தேர்தல்கள் செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் உரிய பிரிவுகளிலிருந்து தகவல்களைப் பெற்றுக்

கொண்டு முறைப்பாடுகள் தொடர்பான எஞ்சிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்கள் அல்லது பொலிஸ் அலுவலர்களை ஈடுபடுத்தி முறைப்பாடுகளை அதன் உண்மைத் தன்மையை உறுதிசெய்து கொண்ட பின்னர், எஞ்சிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட அரச சொத்துக்களின் துஷ்பிரயோகம் மற்றும் தேர்தல் சட்டமீறல்கள் மற்றும் தேர்தலோடு தொடர்புடைய வன்முறை நிகழ்வுகள் தொடர்பான சில சம்பவங்கள் ஒவ்வொரு நிருவாக மாவட்டங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

220. இம் முறைப்பாடுகளில் பெரும்பாலானவை தொடர்பாக ஆய்ந்தறிந்து உடனடி தீர்வுகாண வேண்டியிருந்த சந்தர்ப்பங்களில் தேர்தல் அலுவலர்கள், பொலிசாரின் ஒத்துழைப்போடு (உரிய சந்தர்ப்பங்களில் அந்தந்த கட்சிகளின் முகவர்களை அறிவூட்டி) பிணக்குகள் தீர்க்கப்பட்டுள்ளதோடு சில பாரதூரமான சம்பவங்களின் போது பொலிசார் ஊடாக நீதிமன்ற செயன்முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணம்
மட்டக்களப்பு மாவட்டம்

221. இம் மாவட்டத்திற்காக அரசியல் கட்சியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட ஒரு வேட்பாளர் 2012.07.17 ஆம் திகதி தனது வீட்டிலிருக்கும் போது அவரது வாயிற்கதவுகளுக்கு சங்கிலி மற்றும் பூட்டையிட்டு அவரை வீட்டிலிருந்து வெளியே செல்ல முடியாதவாறு குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்த அச்சுறுத்தல் மிக்க செயற்பாடு காரணமாக அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு அக்கட்சியினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. இவரது பாதுகாப்புத் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கையெடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் அவர்கள் பொலிஸ் மா அதிபர் அவர்களுக்கு அறிவித்ததற்கமைய அவ் வேட்பாளரின் வீட்டுக்கருகில் பொலிஸ் வீதித் தடையொன்றையிட்டு பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

222. மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் மாகாண சபை அமைச்சரொருவர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளரொருவர் ஏறாவூர் அஞ்சல் அலுவலகம் அமையப்பெற்றுள்ள கட்டிடத்தின் முதலாம் மாடியில் சட்டவிரோத தேர்தல் அலுவலகமொன்றைப் பேணிச் செல்வதாக நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு 2012.07.28 ஆம் திகதி அறிவித்ததன் காரணமாக அவ்வலுவலகக் கட்டிடத்தை 2012.07.31 ஆம் திகதிக்கு முன்னர் அந்த அஞ்சல் நிலைய பொறுப்பதிகாரிக்கு அல்லது பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கையளிக்க வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளரால் அவ்வேட்பாளருக்கு அறிவிக்கப்பட்டது. அந்த முன்னாள் அமைச்சரின் பொதுமக்கள் ஒருங்கிணைப்பு அலுவலரொருவரினால் வேட்பாளர் பயன்படுத்திய கட்டிடத்தின் திறப்பு 2012.07.31 ஆம் திகதி ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கையளிக்கப்பட்ட பின்னர் அவரினால் 2012.08.03 ஆம் திகதி மட்டக்களப்பு பிராந்திய அஞ்சல் அத்தியட்சகருக்குக் கையளிக்கப்பட்டது.

223. மட்டக்களப்பு மாவட்டத்தின் சுயேச்சைக் குழுவொன்றின் வேட்பாளரொருவரினால் 2012.08.02 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் பாராளுமன்ற உறுப்பினரொருவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரின் வேட்பாண்மையை ஊக்குவிப்பதற்கான சந்தர்ப்பங்கள், குறித்த அரசியல் கட்சியினால் குடிநீர் விநியோகத் திட்டங்கள் மற்றும் வேறு திறப்பு விழாக்களை மேற்கொள்ளும் போது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த விடயங்களை உறுதிபடுத்துவதற்காக முறைப்பாட்டாளரினால் அவ்வாறான வைப்பவங்களுக்குரிய விபரங்களும் புகைப்படங்களும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் குறித்த பிரதி அமைச்சருக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளரினால் குறித்த கட்சியின் செயலாளருக்கும் அது தொடர்பாக தேசிய நீர்வழங்கல் மற்றும் நீர்விநியோக சபையின் தலைவருக்கு 2012.08.10 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

224. மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதான வீதியில் அமையப் பெற்றுள்ள ஏறாவூர் நகர சபைக்குரிய இரண்டு மாடி கட்டிடத்தில்

(தாரூஸ்ஸலாம்) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் இம்முறை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவருக்கு எவ்வித வாடகை கட்டணமும் அக்கட்டிடம் சார்பாக செலுத்தப்படாமல் அரசியல் அலுவல்களுக்கு அது பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய அக்கட்டிடம் அவ்வாறு பயன்படுத்தப்பட்டிருப்பின் அதனை உடனடியாக தடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் ஏறாவூர் நகர சபையின் செயலாளருக்கு 2012.08.02 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

225. மட்டக்களப்பு மாவட்டத்திற்கு போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் வேட்பாளர்களினால் தனது விருப்பு இலக்கம் அச்சிடப்பட்ட பொலித்தீன் உறைகளில் உயர்ந்த ரக அரிசி மற்றும் ஏனைய உறை வகையறாக்கள் பொதியிடப்பட்டு வாக்காளர்கள் இடையே பகிர்ந்தளிக்கப்படுவதான முறைப்பாடுகள் பல கிடைக்கப் பெற்றதோடு தேர்தல்கள் அதிகாரிகளினால் அதுபற்றி தேடிப் பார்க்கப்பட்டு பொலிஸ் அலுவலர்களின் ஒத்துழைப்போடு மேலும் அத்தகைய பகிர்ந்தளிப்பை மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்பட்டன.

அம்பாறை மாவட்டம்

226. 2013 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள, தேசத்திற்கு மகுடம், நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாணத்திற்குரிய, மாவட்டங்கள் மற்றும் பொலொன்னறுவை மாவட்டத்தினுள் பல்வேறு கருத்திட்டங்களை ஆரம்பித்து, வாக்காளர்களுக்கு அரசியல் அமைப்புக்கள் ஊடாக அரச நிதியை பயன்படுத்தி நன்மைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றைப் பிரதிநிதித்துவம் செய்த, கிழக்கு மாகாண குழுத்தலைவர் ஒருவர் மூலம் 2012.07.20 திகதி செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டின் அடிப்படையில், அது தொடர்பான விடயங்கள் தேர்தல் ஆணையாளர் மூலம் தேசத்திற்கு மகுடம் பிரதம இணைப்பு உத்தியோகத்தர், தகவல் தொடர்பாடல் தொலைத் தொடர்புகள், அமைச்சின் செயலாளரிடம் வினவப்பட்டது. விசேடமாக தென்னை மரக்கன்று வழங்கல், கூரை ஓடு வழங்குதல், காணி உரித்து வழங்கல், வீட்டுக் கடன் மற்றும் வீட்டு உதவி நிதி வழங்குவதற்காக விண்ணப்பம் கோரல் போன்ற நடவடிக்கை, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது பற்றி கவனம் செலுத்துமாறு 2012.07.28 திகதி அந்தச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சிகளுடன் சம்பந்தப்பட்ட கருத்திட்ட துவக்க விழா, கூட்டம் அல்லது நடமாடும் கூட்டம் சார்பாக இம்முறை தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களை அழைத்து அவர்களின் வேட்பாண்மையை மேம்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு குறித்த செயலாளருக்கு தேர்தல்கள் ஆணையாளர் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

227. கிழக்கு மாகாணத்தில் மாவட்டங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சிவில் பாதுகாப்பு படையணிகளின் சில நடவடிக்கைகள், அம் மாகாணத்தின் மாகாணசபைக்காக போட்டியிட்ட அரசியற் கட்சியின் வேட்பாளர்களின் வெற்றிக்காகவும் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் அநீதி இழைக்கப்படதக்க விதத்தில் நிகழ்வதாக குறிப்பிடுகின்ற கணிசமானளவு முறைப்பாடுகள் தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களாலும் அரசியற் கட்சிகளாலும் தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. கடந்த தேர்தல்களின் போது சிவில் பாதுகாப்பு படையணியின் முகாம்களில் காவலர்கள் தமது அஞ்சல் வாக்கினை பயன்படுத்துகின்ற போது அப்படையணியின் உயர் அதிகாரிகளினால் அழுத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக தெரியவந்துள்ளமையால் இம்முறை அந்நிலையங்களில் தபால் வாக்குகள் அடையாளமிடும் நடவடிக்கைகளில் அம்முகாம்களுக்கு வெளியேயுள்ள வேறு பொருத்தமான இடங்களில் (பிரதேச செயலகங்கள் போன்ற) மேற்கொள்ளுமாறு அரசியற் கட்சியொன்றினால் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடப்பட்டிருந்தமை முக்கியமாக இதற்கு காரணமாக காட்டப்பட்டிருந்தது. கடந்த மாகாண சபை தேர்தலிலும் போட்டியிட்ட சிவில் பாதுகாப்பு சேவையில் முன்னாள் கட்டளைத் தளபதி, இம்முறையில் கிழக்கு மாகாண சபை தேர்தலுக்கான போட்டியிடுகின்றமை ஆகும். இது தொடர்பாக பொருத்தமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு முறைப்பாட்டு தரப்பினருக்கு அறிவித்த ஆணையாளர், அஞ்சல் வாக்குச் சீட்டுக்களுடன் அடையாளமிடப்படவுள்ள திகதிகளில் அத்தாட்சிபடுத்தும் அலுவலர்களினால் கட்டாயமாக நியமனம் செய்யப்படுகின்ற உதவித் தெரிவத்தாட்சி

அலுவலர்களின் விசேட கவனம் இது தொடர்பாக ஈர்க்கப்பட வேண்டுமென உரிய மாகாணத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

228. 2012.08.05 திகதி பிற்பகல், உஹன மாலிகாதென்ன விகாரைக்கு சிவில் பாதுகாப்புக் படையினருக்கு சிவில் உடையில் அணிந்து வருகை தருமாறு அப்படையினரின் ஒரு வலயத்தின் கட்டளை அலுவலரினால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்விடத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் வேட்பாளர்கள் வருகைதந்து தமது வேட்பாண்மையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடுமென முறைப்பாடு ஒன்று மூலம் அறிவித்திருந்தனர். இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கைகளெடுக்கப்பட்டு அந்த கூட்டத்தை இரத்துச் செய்வதற்கு தேர்தல் ஆணையாளர் உரிய நடவடிக்கை எடுத்தார்.

229. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் பிரதிநிதித்துவப்படுத்திய பாராளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதியொருவரின் அக்கரைப்பற்றில் அமையப்பெற்றுள்ள தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபையின் சுற்றுலா விடுதியில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதாக 2012.08.23 ஆம் திகதி சுதந்திரமானதும் நீதியானதும் தேர்தலுக்கான அமைப்பு (CaFFE) தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்ததன் பின்னர் அவ்விடுதி ஒதுக்கப்பட்ட விதம் குறித்து அச்சபையிடமிருந்தும் தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபையிடமிருந்தும் எழுத்துமூலமான விடய முன்வைப்புக்கள் கோரப்பட்டன. இதற்கு மேலதிகமாக அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரும் உரிய மக்கள் பிரதிநிதிகளையும் சந்தித்து இது தொடர்பாக விடயங்கள் பெற்றுக் கொள்ள நடவடிக்கையெடுத்தனர். இச்சுற்றுலா விடுதி நீண்டகாலமாக அவ் அரசியல்வாதியினால் பயன்படுத்தப்பட்டவொன்றென தெரியவந்ததோடு உரிய கட்டிடத்தை தேர்தல் முறைப்பாடு விசாரணை பணியகத்தை நிறுவுவதற்காக பெற்றுக் கொள்வதன் தேவைப்பாடு உரிய சபைக்கும் மக்கள் பிரதிநிதிக்கும் அறிவிக்கப்பட்டது. கட்டிடத்தை 2012.09.01 ஆம் திகதிக்கு முதல் அம்பாறை மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு உரிய கடமைக்கு கோரப்பட்ட போதிலும் தேர்தல் தினத்திற்கு முந்தைய தினத்திலிருந்து தேர்தல் தினத்திற்கு பிந்தைய தினத்திற்கு மாத்திரம் சுற்றுலா விடுதியில் மக்கள் பிரதிநிதியில் பொருட்கள் வைக்கப்பட்ட அறைகள் தவிர்ந்த ஏனைய அறைகளை வழங்க முடியுமென அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் உடனடியாக தலையிட்டதை தொடர்ந்து உரிய அரசியல்வாதியினால் அச்சுற்றுலா விடுதி அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டது. பின்னர் இக்கட்டிடத்தில் தேர்தல் முறைப்பாட்டு விசாரணைப்பிரிவு நிறுவப்பட்டதோடு அங்கு நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் தேர்தல் ஆணையாளரும் கலந்து கொண்டார்.

230. அம்பாறை நகர சபைக்கு , தேசத்திற்கு மகுடம், நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் தேவையான கடமை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாவட்ட செயலாளரால் தற்காலிகமாக வழங்கியிருந்த EP PA 3828 என்ற கெப் வண்டியை அம்பாறை நகர சபையின் தவிசாளர் தனது மாகாண சபை தேர்தல் நடவடிக்கை ஊக்குவிப்பிற்காக பயன்படுத்துகின்றார் என ஒரு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது. அதனை மீள கையளிக்கப்பட வேண்டுமென மாவட்ட செயலாளரினால் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து 2012.08.30 அன்று அவ்வாகனத்தை மீள கையேற்று கொண்டதாக தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது.

231. அம்பாறை மாவட்டத்திற்கு போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் இரண்டின் முன்னணி செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் இரண்டு அணிகளாக பிரிந்து ரமழான் நோன்பு காலப்பகுதிக்குள் பிரதான பாதையில் பாரதூரமான சச்சரவொன்று உருவாகும் நிலைமை தோன்றியதை அடுத்து கல்வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றது. இந் நிகழ்வின் போது பிரதேசத்தின் சிரேட்ட பொலிஸ் அலுவலரொருவர் ஒரு பிரிவினர் சார்பாக நடப்பதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் தாக்குதல் நிகழ்வதை தவிர்ப்பதற்காக அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரும் அவருக்கு உதவி செய்வதற்காக இணைக்கப்பட்டிருந்த வேறு மாவட்டங்களின் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளரும் உரிய பிரதேசத்திற்கு சென்று இருதரப்பினருக்கும் விடயங்களை தெளிவுபடுத்தியதோடு அதனூடாக பல உயிர்கள் சாவு கொடுக்கப்படவேண்டியிருந்த ஒரு சண்டை உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ள முடிந்தது.

திருகோணமலை மாவட்டம்.

232. கிழக்கு மாகாண சபை 2012.06.27 ஆம் திகதி கலைக்கப்பட்டது. அந்த மாகாண சபையின் உறுப்பினரொருவர் இம்முறை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளரொருவராக போட்டியிட்ட ஒருவரின் வதிவுக்காக திருகோணமலை மாவட்டத்தின் அரசாங்க அதிபருக்குரிய உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவர் அந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை மீண்டும் கையளிக்காது அதில் தரித்திருந்து இம்முறை மாகாண சபைத் தேர்தலுக்காக தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அம்முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த மாகாண சபைகளில் உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்துள்ளமையினால் உத்தியோகபூர்வ விடுதியை மீளக் கையேற்பதற்கு தேர்தல்கள் ஆணையாளரினால் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டது. அதற்கமைய முன்னாள் மாகாண சபை உறுப்பினருக்கு உத்தியோகபூர்வ விடுதியை மீளக் கையளிப்பதற்காக அரசாங்க அதிபர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அவர் அதற்காக 2012.07.18 ஆம் திகதி வரையும் தாமதமடைந்திருந்தார்.

233. 2012.08.09 ஆம் திகதி கோமரன்கடவல பொலிஸ் நிலையத்தில் சிவில் பாதுகாப்பு படையணியின் அலுவலர்களுக்கு பதக்கம் அணிவிக்கும் வைபவமொன்று இம்முறை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பங்கேற்போடு நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பெயரல் அமைப்பினால் தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த வைபவத்திற்காக வேட்பாளர்களை கலந்து கொள்ளச் செய்யாமலிருப்பதற்கு அல்லது அந்த வைபவத்தை தேர்தலின் பின் நடாத்துவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் திருகோணமலை கட்டளையிடும் அலுவலருக்கு தேர்தல்கள் ஆணையாளரால் 2012.08.09 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. குறித்த வைபவத்தை வேட்பாளர்களின் பங்கேற்பின்றி நடாத்துவதற்கு நடவடிக்கையெடுப்பதாக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஜெனரால் மற்றும் திருகோணமலை கட்டளையிடும் அலுவலரினால் 2012.08.13 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது.

234. பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பிரதான அரசியல் கட்சியொன்றின் மக்கள் பிரதிநிதியொருவரால் 2012.08.16 ஆம் திகதி பதுளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அத்தியட்சகர் அலுவலகத்தின் களஞ்சியசாலையிலுள்ள கூரைத் தகடுகள் ஒரு தொகுதி திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் தேர்தல் செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு திருகோணமலை மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை களஞ்சியசாலைக்கு மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியை நிறுத்துவதற்காக அறிவிப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. இது தேர்தல் சட்டங்களை மீறுவதற்கான முயற்சியொன்றென அவரால் அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் 2012.08.17 ஆம் திகதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளருக்கு தேர்தல்கள் ஆணையாளரால் கடிதமொன்று அனுப்பப்பட்டு அம்முயற்சி இடைநிறுத்தப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் வீடுகளுக்கான கூரை தகடுகளைப் பகிர்ந்தளித்தல் வீட்டுக்கடன் விண்ணப்பங்களைப் பகிர்ந்தளித்து பூரணப்படுத்திப் பெற்றுக் கொள்ளல் போன்ற தேர்தல் காலப்பகுதியினுள் செய்யக்கூடாத தேர்தல் சட்டமீறல்கள் இடமபெறுவதாக கண்காணிப்பு அமைப்புக்களாலும் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அலுவல்களை தேர்தலின் பின்னர் மேற்கொள்ளுமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அவ்வதிகார சபை உட்படும் அமைச்சின் செயலாளருக்கும் அறிவித்து இவ்வாறான அலுவல்கள் எதிர்காலத்தில் இடம்பெற்றால் அவற்றை இடைநிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளையெடுப்பதற்கு திருகோணமலை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவிக்கப்பட்டது.

235. 2012.08.22 ஆம் திகதி திருகோணமலை கச்சேரியில் பட்டதாரி பயிலுநர்கள், சமுர்தி அலுவலர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் இரண்டு அமைச்சர்களால் அழைக்கப்பட்டு நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்று தொடர்பில் கண்காணிப்பு அமைப்புக்களால் செய்யப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய அக்கூட்டத்தை

பின்போட நடவடிக்கையெடுக்குமாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது.

236. கந்தளாய் அக்ரபோதி சமய பாடசாலையில் திருகோணமலை மாவட்ட சமய பாடசாலைகளுக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வீதம் பகிர்ந்தளிக்கும் வைபமொன்று தேர்தல் பிரச்சார அலுவலொன்றாக மேற்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக 2012.09.01 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைத்த முறைப்பாட்டிற்கமைய அக்கூட்டத்தை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

237. திருகோணமலை மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளராக போட்டியிடுகின்ற ஒருவர் கட்டிட நிருமாண அமைச்சுக்குரிய பெகோ இயந்திரங்களைப் பயன்படுத்தி தேர்தல் பிரச்சார பணியொன்றென்ற அடிப்படையில் திருகோணமலை அக்போபுர - கொலணி வீதியை புனரமைப்புச் செய்தல் தொடர்பான முறைப்பாடுகள் பல தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப்பெற்றிருந்தது. இது தொடர்பில் கட்டிட நிருமாண அமைச்சின் செயலாளருக்கு அறிவித்து குறித்த செயற்பாடுகளை திருகோணமலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரூடாக அச்சந்தர்ப்பத்தில் இடைநிறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

வடமத்திய மாகாணம்
அநுராதபுர மாவட்டம்

238. இந்த மாவட்டத்தினுள் சட்ட விரோத அறிவித்தல்களை காட்சிப்படுத்தல் தொடர்பாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதோடு, அது தொடர்பான அறிவித்தல்கள் உடனடியாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கும், வடமத்திய மாகாண சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் அனுப்பி அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் வேறு அரச கூட்டுத்தாபனங்கள் என்பவற்றுக்கு சொந்தமான வாகனங்கள் தேர்தல் சட்டங்களை மீறி இம்முறை தேர்தல் பிரச்சார அலுவல்களில் ஈடுபடுத்தப்படுவதாக அறிவித்து வேட்பாளர்களுக்கு எதிராக கணிசமான அளவு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன. இவை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக முறைப்பாடு கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்திலேயே பொலிஸ் மா அதிபர், பிரதி பொலிஸ் மா (தேர்தல்) ஆகியோருக்கு மற்றும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் அனுப்பப்பட்டு அவ்வாறான வாகனங்களை தேர்தல் பிரச்சார அலுவல்களில் இருந்து அகற்றுவதற்கு விஷேட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான பணிகளுக்கு பிரதேச மட்டத்தில் உயர் பொலிஸ் அலுவலர்களின் ஒத்துழைப்பு கட்டாயமாகும். இருப்பினும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தேர்தல் பிரச்சார அலுவல்களிலீடுபட்ட வாகனங்கள் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட போதும் பொலிஸாரிடமிருந்து பொதுவான பதிலாக அமைந்து, அவ்வாறான தேர்தல் சட்டங்களை மீறி தேர்தல் பிரச்சார அலுவல்களிலீடுபட்ட வாகனங்களை தமக்கு தேடிக் கொள்ள முடியவில்லையென்பதாகும். இதன் காரணமாக அரச அலுவலர்கள் இவ்வாறான வாகனங்களை தேடிக் கொள்ள முயற்சித்த அதிகமான சந்தர்ப்பங்களில் அப்பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை.

239. முன்னாள் மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்களின் சில வாகனங்கள் 2012.06.07 ஆம் திகதி வடமத்திய மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னரும் குறித்த அமைச்சுக்களுக்கு மீளக் கையளிக்காமை தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அந்த மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் மற்றும் முன்னாள் மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்களுக்கும் இம்முறை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கும் இது தொடர்பாக நேரடியாக கடிதங்களை அனுப்புவதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு நேரிட்டது. சில சந்தர்ப்பங்களின் போது அடிக்கடி மீளக் கையளிக்கப்படாத இவ்வாறான வாகனங்களை கைப்பற்றுவதற்கு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கும் குறித்த மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அறிவிப்பதற்கு நேரிட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

240. மாகாண சபையின் சில அமைச்சுக்களுக்கு பல்வேறு கருத்திட்டங்களின் கீழ் மாவட்டத்தில் வதிந்துள்ள குடும்பங்களுக்கு அல்லது விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக அரசினால் கையளிக்கப்பட்டிருந்த உரங்கள், கூரைத்தகடுகள், விளையாட்டுப் பொருட்கள்,

மிதி வண்டிகள், மண்வெட்டிகள் உள்ளிட்ட விவசாய உபகரணங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் அவசர மின்விளக்குகள் போன்றவற்றை உரிய களஞ்சியசாலையிலிருந்து பெற்றுக் கொண்டு கலைக்கப்பட்ட மாகாண சபையின் முன்னாள் அமைச்சர்கள் சில சிரேட்ட அலுவலர்களின் ஒத்துழைப்போடு தேர்தல் பிரச்சார பணியொன்றாக தேர்தல் சட்டங்களை மீறி அவற்றை வீடுகளுக்கு பகிர்ந்தளித்த சந்தர்ப்பங்கள் தொடர்பாக கணிசமானளவு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. 2012.08.20 ஆம் திகதி பிரதான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்று சார்பாக தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரொருவரால் விளக்குகள் பகிர்ந்தளிக்கப்பட நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக செய்யப்பட்ட முறைப்பாடொன்று தொடர்பாக ஆராய்ந்து பார்த்த போது அம்முறைப்பாடு உண்மையானதென தெரியவந்தது. அந்த விளக்குகள் பெரும் எண்ணிக்கையில் பகிரப்பட்டதன் பின்னர், தேர்தல்கள் ஆணையாளரின் அலுவலர்களால் கண்டுபிடிக்கப்பட்ட மீதமாகவிருந்த விளக்குகளை குறித்த அலுவலர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

241. ஒரு சந்தர்ப்பத்தில் அனுராதபுர மாவட்டத்தில் வைத்தியசாலைகளிலிருந்து மருந்துகள் மற்றும் வில்லைகளை நோயாளர்களுக்கு விநியோகிக்கும் போது அவை விநியோகிக்கப்படுகின்ற சிறிய உறைகளில் இம்முறை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரின் வேட்பாண்மையை ஊக்குவிக்கக் கூடியவாறான குறிப்புக்கள் இடப்பட்டிருந்தமை தெரியவந்தது. இந்த முறைப்பாடு 2012.08.25 ஆம் திகதி பெபரல் அமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பாக உரிய அலுவலர்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்த போது அனுராதபுரம் சேனபுர வைத்தியசாலையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட அவ்வாறான ஒரு தொகுதி உறைகள் அலுவலர்களால் அழிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

242. 2012.08.24 ஆம் திகதி அனுராதபுர மாவட்டத்தில் அரச களஞ்சியசாலைகள் சிலவற்றில் பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் மற்றும் கமத்தொழில் சேவை அமைச்சிலிருந்தும் பொருத்தமான சேவை பெறுநர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களின் போது பகிர்ந்தளிப்பதற்காக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு விவசாய உபகரணங்கள் மற்றும் பண்டங்கள் இம்முறை தேர்தலுக்காக பிரதான அரசியல் கட்சியொன்றிலிருந்து போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வேட்பாண்மை ஊக்குவிப்புக்காக மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான ஏற்பாடொன்று உள்ளதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது. 2012.08.25 ஆம் திகதி குறித்த களஞ்சியசாலைகள் தேர்தல் திணைக்களத்தின் அலுவலர்களைக் கொண்டு முத்திரையிடப்பட்டதோடு, தேர்தலின் பின்னர் அவற்றை திறப்பதற்கு குறித்த அரச பிரிவுகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

243. 2012.08.31 ஆம் திகதி அனுராதபுர வைத்தியசாலையின் வைத்தியரொருவருக்கு அரசியல் கட்சியொன்றை சார்ந்த ஆதரவாளர்களால் அனுராதபுர பிரதேசத்தில் வைத்து தாக்குதல் நடாத்தப்பட்டமை காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்க நேரிட்டதாக கெபே (CaFFE) அமைப்பினால் அறிவிக்கப்பட்டது. அது தொடர்பில் குறித்த விசாரணை அலுவல்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர்கள் அவர்களால் விசாரித்த போது குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிந்தது.

பொலன்னறுவை மாவட்டம்.

244. 2012.08.16 ஆம் திகதி பொலன்னறுவை மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான கெப் வண்டியொன்று தேர்தல் பிரச்சார அலுவல்களுக்காக பயன்படுத்தப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடொன்றின் அடிப்படையில் அது தொடர்பாக அறிவித்து அவ்வாகனத்திற்குப் பொறுப்பான மாகாண அமைச்சின் செயலாளருக்கு அந்த சட்டவிரோத அலுவலை தடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்கமைய வடமத்திய மாகாண சபையினால் மாகாண சபை கலைக்கப்படுவதற்கு முன்னர் கையேற்றிருந்த முன்னாள் அமைச்சருக்கு அதனை மீண்டும் மாகாண சபைக்கு கையளிக்குமாறு அறிவித்த போதும் அவ்வாறான ஒரு வாகனம் தன்னிடமில்லையென பதிலொன்றின் மூலம் குறித்த செயலாளருக்கு அவரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதற்கமைய குறித்த வாகனம் 2012.08.17 ஆம் திகதி பொலன்னறுவை மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு

சொந்தமான வாகனங்கள் நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரினால் அறிக்கையிடப்பட்டுள்ளது.

245. 2012.08.21 ஆம் திகதி பொலன்னறுவை அரலகன்வில, மெதகம பிரதேசத்தில் மாகாண சபைத் தேர்தலில் இம்முறை போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் வாக்காளர்களுக்கு உணவுப் பொதிகளை பகிர்வதற்கு தயாராகவுள்ளதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடு தொடர்பாக ஆராய்ந்து பார்த்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அந்த உணவுப் பொதிகளை பகிர்ந்தளிப்பது இடை நிறுத்தப்பட்டதாக பொலன்னறுவை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் அறிக்கையிடப்பட்டுள்ளது.

246. 2012.09.06 ஆம் திகதி பொலன்னறுவை வைத்தியசாலை வளவினுள் இம்முறை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சியொன்றுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக தொழிற்சங்க ஒன்றினால் கூட்டமொன்று நடாத்தப்படுவதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் அடிப்படையில் அக் கூட்டத்தை நிறுத்துவதற்கு வைத்திய பணிப்பாளர் அவர்களால் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

247. பொலன்னறுவை மாவட்டத்தின் எகடபத்துவ பிரதேசத்தின் சமூர்த்தி உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோர் அலுவலக நேரத்தினுள் ஓர் அரசியற் கட்சியில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக அப் பிரதேச பிரதானிகளை அறிவூட்டுவதற்கு அத்தகைய செயற்பாடுகளை தவிர்க்க செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

248. பாடசாலை மாணவர்களுக்கும் முன்பள்ளி சிறார்களுக்கும் அரசியற் கட்சியொன்றின் சின்னமும், வேட்பாளர்களின் உருவம்/ இலக்கம் பொறிக்கப்பட்ட பாடசாலை புத்தக பைகள், அப்பியாச புத்தகங்கள் என்பன பெருந்தொகையில் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக கல்வி அதிகாரிகளின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படுவதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளையடுத்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் அச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த இடமளிக்கப்படவில்லை.

சப்ரகமுவ மாகாணம்
இரத்தினபுரி மாவட்டம்.

249. பல்வேறு நபர்களிடமிருந்தும் மற்றும் பெபரல் அமைப்பு போன்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களிடமிருந்து இம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டு உள்ள சட்ட விரோத தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்ததோடு, அவற்றை நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு குறித்த பொலிஸ் அலுவலர்களுக்கும் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் தேர்தல்கள் ஆணையாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

250. சப்ரகமுவ மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் அம்மாகாண சபைக்குரிய வாகனங்கள் அந்த அமைச்சுக்களால் மாகாண சபைகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாகுமென தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் செய்யப்பட்ட விசாரணைக்கமைய அவ்வாறான 12 வாகனங்கள் கையளிக்கப்படவில்லையென இரத்தினபுரி மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளரிடமிருந்து அறிய முடிந்துள்ளது. சட்டவிரோதமாக தரித்து வைக்கப்பட்டுள்ள இந்த வாகனங்களை கைப்பற்றுமாறு இரத்தினபுரி பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு குறித்த மாவட்டத்தின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் அவர்கள் அறிவித்ததன் பின்னர் அந்த வாகனங்கள் 2012.08.18 ஆம் திகதியாகும் போது கையளிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

251. சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளராக போட்டியிட்ட ஒருவர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வீட்டுக் கடன் திட்டத்தை தனது அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்தியுள்ளதாக 2012.08.07 ஆம் திகதி அரசியல் கட்சியொன்றினால் தேர்தல்கள் ஆணையாளருக்கு முறையிட்டதன் பின்னர் அவ்வாறான அலுவல்களை தடுக்குமாறு நிருமாணம், பொருளியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் செயலாளருக்கு மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார

சபையின் தலைவருக்கு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் 2018.08.13 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

252. பெல்மடுல்ல இறக்குவானை வீதியில் அமையப் பெற்றுள்ள அரச திணைக்களம் ஒன்றுக்கு சொந்தமான உத்தியோகபூர்வ விடுதி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் வேட்பாளரொருவரின் தேர்தல் பிரச்சார அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்படுவதாக 2012.08.08 ஆம் திகதி கிடைக்கப் பெற்ற முறைப்பாடு ஒன்றை ஆராய்ந்து பார்க்கப்பட்டதோடு அங்கு எவரும் வதிந்திருக்கவில்லை என அறிக்கையிடப்பட்டதோடு, அக்கட்டிடத்தை முத்திரையிடுவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் 2012.08.14 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

253. இரத்தினபுரி மாவட்டத்தின் கொடகம பிரதேச அலுவலகமொன்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்ற மக்கள் பிரதிநிதி ஒருவரால் பட்டதாரி பயிலுநர்களை அழைத்து கூட்டமொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக கண்காணிப்பு அமைப்பொன்றினால் 2012.08.23 ஆம் திகதி செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டிற்கமைய அதனை தடுப்பதற்கு பொது நிருவாக அமைச்சின் செயலாளருக்கு இரத்தினபுரி பிரதித் தேர்தல்கள் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது, அன்றைய தினம் அக்கூட்டம் நடாத்தப்படவில்லை.

254. மாகாண சபைத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளராக போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 11 ஊழியர்களை தனது தேர்தல் பிரச்சார அலுவல்களில் ஈடுபடுத்தியுள்ளதாகவும் அந்த அதிகார சபையின் தொலைநகல் இயந்திரமொன்றை அதற்காக அவர் பயன்படுத்துவதாகவும் அரசியல் கட்சியொன்றினால் தேர்தல்கள் ஆணையாளருக்கு 2012.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடொன்றிற்கமைய அந்த அலுவல்களை தடுப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு 2012.08.24 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

255. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றில் இருந்து சப்ரகமுவ மாகாண சபைக்காக போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரின் பங்கேற்புடன் 2012.09.06 ஆம் திகதி குருவிட்ட லெல்லோகம வீதியில் கொங்கிரீட் வீதி திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் அன்றைய தினம் கிடைப்பெற்ற முறைப்பாடொன்றின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டது.

கேகாலை மாவட்டம்.

256. சப்ரகமுவ மாகாண சபைக்காக போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளரொருவர் 2012.07.10 2012.07.12 மற்றும் 2012.07.15 ஆகிய தினங்களில் சில பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அலுவகங்களின் ஒரு சில அலுவலர்கள் ஆகியோரை குறித்த பாடசாலைகளின் கூட்டங்களுக்காக அழைத்து தமது தேர்தல் செயற்பாடுகளுக்கு ஆதரவு கோரியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் 2012.07.16 ஆம் திகதி முறைப்பாடு செய்த பின்னர் அக்கூட்டங்களை நடாத்துவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கையெடுக்குமாறும் எதிர்காலத்தில் இவ்வாறான கூட்டங்கள் நடாத்தப்படுவதை தடுக்குமாறும் சப்ரகமுவ மாகாண கல்விச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது.

257. மத்திய அரசின் இரண்டு அமைச்சுக்கள் மற்றும் ஒரு திணைக்களத்தின் வாகனங்கள் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வேட்பான்மையை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக அவ்வாறான செயற்பாடுகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் உரிய அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது.

258. அரசாங்க கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 02 வாகனங்கள் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் இருந்து போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவரின் வேட்பாண்மையை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்தப்படுவதாக அரசியல் கட்சியொன்றினால் செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றிற்கு அமைய அவ் அலுவல்களை தடை செய்யுமாறு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் 2012.08.28 ஆம் திகதி குறித்த கூட்டுத்தாபனத்தின் தவிசாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

259. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றிலிருந்து சப்ரகமுவ மாகாண சபைத்

தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் போலியான இலக்கத் தகடுகளைப் பொருத்திய வாகனமொன்றை தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்களால் 2012.08.31 ஆம் திகதி பரீட்சித்துப் பார்த்து வாகன அனுமதிப்பத்திரமற்ற அந்த வாகனத்தில் பயன்படுத்திய ஒலிபெருக்கி இயந்திரத்தை கைப்பற்றுவதற்கு பொலிஸாரால் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

260. தேர்தல் காலப்பகுதியினுள் கலாசார மற்றும் கலை விவகார அமைச்சுக்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நேர்முகத் தேர்வொன்று நடாத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்து பிரதான அரசியல் கட்சி ஒன்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற பொது மக்கள் முகவர் ஒருவரால் 2012.09.01 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளருக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அந்த ஆட்சேர்ப்புக்களை தேர்தல்கள் கால பகுதியினுள் மேற் கொள்ளப்படாமல் இருப்பதற்கு 2012.09.02 ஆம் திகதி அந்த அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதற்கு அமைய அந்த ஆட்சேர்ப்பு குறித்த காலப்பகுதியினுள் நடாத்தாமல் இருப்பதற்கு அவ் அமைச்சின் செயலாளருக்கு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதற்கமைய அந்த ஆட்சேர்ப்பு அன்றைய தினம் மேற்கொள்ளப்படமாட்டாதென அமைச்சின் செயலாளர் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

261. கேகாலை மாவட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றிலிருந்து போட்டியிட்டு மாகாண சபையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வேட்பாளரொருவர் சொகுசு பேரூந்துகள் இரண்டினை தமது பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக பிரச்சார நறுக்குகளில் (Stickers) முழுமையாக அலங்கரிக்கப்படுகின்றதென முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றதையடுத்து நடவடிக்கையெடுத்த தேர்தல் அலுவலர்கள் பொலிசாரின் உதவியோடு அப்பணிகளை தடுத்து நிறுத்தினர்.

மத்திய மாகாணம்
கண்டி மாவட்டம்.

262. கண்டி தனியார் நிறுவனமொன்றினால் கண்டி பேராதெனிய வீதியில் இம்முறை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் புகைப்படம் மற்றும் அவர்களின் சின்னங்களை உள்ளடக்கிய அறிவித்தலொன்றைக் காட்சிப்படுத்துவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய அது தொடர்பாக பரீட்சித்துப் பார்த்து அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் 2013.08.04 ஆம் திகதி பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. பொலீஸ் விசாரணையின் பின்னர் அந்த பிரச்சார அலுவல்களை குறித்த நிறுவனம் இடைநிறுத்தியுள்ளது.

263. கண்டி மாவட்டத்தின் உள்ளூர் அதிகார சபை நிறுவனங்களுக்கு சில அரசியல் கட்சிகளால் தேர்தல் கூட்டங்களை நடாத்துவதற்காக அந் நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளை குறித்தொதுக்கிக் கொள்வதற்காக செய்யப்படுகின்ற கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளருக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவ்வாறான முறைப்பாடுகள் கண்டி மாநகர சபை, நாவலப்பிட்டிய நகர சபை, உடுநுவர பிரதேச சபை ஆகிய நிறுவனங்களுடன் தொடர்புடையதாக கிடைக்கப் பெற்றுள்ளதோடு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் குறித்த உள்ளூர் அதிகார சபைகளிடம் அது பற்றிய விடயங்கள் விசாரிக்கப்பட்டதோடு, அச் சந்தர்ப்பத்திலேயே பொருத்தமான அறிவுறுத்தல்களை அந்த நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டன. குறிப்பாக அரசியல் கட்சிகளின் கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கையெடுக்கும் போது ஒவ்வொரு கட்சிக்கும் மற்றும் குழுவுக்கும் நியாயமானவாறு இவ் அலுவல்களை மேற்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

264. முன்னாள் மாகாண பிரதம அமைச்சர் ஒருவர் அம்மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னரும் தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தங்கியிருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த உத்தியோகபூர்வ இல்லத்தை அம்மாகாண சபைக்கு கையளிக்குமாறு 2013.08.17 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2013.08.22 ஆம் திகதி அது கையளிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபையினால் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

265. கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட அரசியற் கட்சியொன்றின் வேட்பாளரொருவர் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில் லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு சொந்தமான வாகனமொன்றில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கி இயந்திரங்களினூடாக நடமாடும் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடொன்றை விசாரணை செய்வதற்கு தேர்தல் அலுவலர்களும் பொலிசாரும் நடவடிக்கையெடுத்ததோடு வாகனம் கையகப்படுத்தப்பட முடியாமற் போன போதிலும் அந் நிகழ்வு உண்மையானதென நிரூபிக்கப்பட்டுள்ளது. தேர்தல் மற்றும் பொலிசாரின் மேற்பார்வை காரணமாக அச்சட்ட முரணான அங்கீகரிக்கப்படாத செயலை தவிர்க்கச் செய்ய முடிந்தது.

266. அதேபோன்று ஒரு வேட்பாளர் உள்ளிட்ட அரசியல்வாதியொருவரின் ஒத்துழைப்போடு தனது விருப்பு இலக்கத்துடன் கூடிய பிரச்சார பலகைகளை தலை உச்சிகளில் பொருத்தி அவ்விலக்கங்களை இரவு காலங்களில் மின்சார விளக்குகளுடாக ஒளியூட்டி காட்சிபடுத்துவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அத்தகைய இலக்கங்களின் காட்சிபடுத்தல்கள் சட்டமுரணான அல்லாததென்பதால் அத்தகைய பிரச்சார பலகைகளை அகற்ற முடியாதென்பது பிரதேச பொலிஸ் அலுவலர்களின் கருத்தாக இருந்த போதிலும் தேர்தல்கள் ஆணையாளரும் பொலிஸ் சட்டபிரிவிற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரும் சட்டவிளக்கங்களை தொடர்ந்து இப்பலகை காட்சிப்படுத்தல் தவிர்க்கப்பட்டது.

நுவரெலியா மாவட்டம்.

267. அம்பகமுவ பிரதேச செயலாளர் அலுவலகத்திற்குரிய நாவலப்பிட்டி வீதியில் அமையப்பெற்றுள்ள கேட்போர் கூடத்தில் (பழைய) பிரதேச செயலக இரண்டு மாடிக்கட்டிடம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் அழைப்பாளரொருவரால் மத்திய மாகாண சபைக்காக கண்டி மாவட்டத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவருக்கு கட்சி அலுவலகமொன்றைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடொன்று தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப்பெற்றது. அதன் உரிமை தொடர்பான தகவல்கள் கண்டறியப்பட்ட பின்னர், இத்தேர்தலுக்கு தேர்தல்கள் திணைக்களத்தின் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளும் இணைப்பு நிலையமொன்றை அங்கு தாபிப்பதற்காக அதனை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு அம்பகமுவ பிரதேச செயலாளருக்கு 2013.08.13 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

268. 2013.08.15 ஆம் திகதி கினிகத்தேன அம்பகமுவ கூட்டுறவு கட்டிடத்தில் தேர்தல் பிரச்சார அலுவல்களுக்காக அரசியல் கட்சியொன்றினால் பயன்படுத்தப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றது. அதேபோன்று ராகலை கூட்டுறவுக் கட்டிடத்தின் ஒரு பகுதியும் அவ்வாறு பயன்படுத்தப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளருக்கு 2013.08.30 ஆம் திகதி முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றது.

269. 2013.08.16 ஆம் திகதி நுவரெலியா முச்சக்கரவண்டி சங்கத்திற்குரிய நுவரெலியா உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் அரச அலுவலகமொன்றில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்று நடாத்தப்பட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மத்திய மாகாண சபைக்காக பிரதான அரசியல் கட்சியொன்றிலிருந்து போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் அக்கூட்டத்தின் தலைமைப் பொறுப்பை பலாத்காரமாகப் பெற்றுக் கொண்டு அக்கூட்டத்திற்கு இடையூறு விளைவித்து அதனை அரசியல் கூட்டமொன்றென்ற அடிப்படையில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக அரச அலுவலர்கள் அவ்விடத்திலிருந்து வெளியேறிச் சென்றதாக தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இச்சம்பவம் குறித்த கட்சியின் வேட்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்காக அக்கட்சியின் செயலாளருக்கு 2013.08.29 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டது.

270. நுவரெலியா மாவட்ட வாக்காளர்களுக்கு இலவசமாக மதுபானங்களை வழங்குவதனூடாக வாக்களிப்பதற்கு தூண்டும் நடைமுறையொன்று செயல்படுத்துவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒரு முக்கியமான முறைப்பாடாகும். இது தொடர்பாக மதுவரித் திணைக்களம், இலங்கை பொலிஸ், தோட்ட அத்தியட்சகர் ஆகியோர் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை

எடுத்ததன் மூலம் இந் நிலைமையை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர தேர்தல் அலுவலரால் முடிந்தது. வீடுகளுக்கு சென்று பகிர்ந்தளிப்பதற்கு பதிலாக மதுபான விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற சிறிய எழுத்து குறிப்புக்கள் அல்லது கைத்தொலைபேசி ஊடாக அனுப்பப்படும் குறுஞ்செய்தி ஊடாக இம் மதுபான பகிர்ந்தளிப்பை மேற்கொள்வதற்கென எடுக்கப்பட்ட முயற்சியை தடுப்பதில் தேர்தல்கள் அலுவலர்கள் வெற்றியடைந்தனர்.

மாத்தளை மாவட்டம்.

271. இந்த மாவட்டத்திலும் சட்டவிரோத தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய பொலிஸாரைக் கொண்டு அவ்வாறான அறிவித்தல்களை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரச வாகனங்கள் போன்றே சில சந்தர்ப்பங்களில் தற்காலிக வாகன திருத்த நிலைய இலக்கங்கள் பொருத்தப்பட்டு தேர்தல் பிரச்சார அலுவல்களிலீடுபட்ட வாகனங்கள் தொடர்பாகவும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் அந்தந்த சந்தர்ப்பங்களின் போது தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் உரிய பிரிவுகளுக்கு முறைப்பாடு செய்யப்பட்டு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

272. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அலுவலரொருவர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் தேர்தலில் போட்டியிடுகின்ற அவரின் சகோதரருக்காக தேர்தல் பிரச்சார அலுவல்களில் கலந்து கொள்வதாக கண்டி மாவட்டத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய உரிய பிரிவின் உயர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கி அவ்வலுவலர் பணியாற்றிய வில்கமுவ பிரதேச செயலகத்திலிருந்து அகற்றி வேறு இடமொன்றுக்கு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

273. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற இம்மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதியொருவர் அவருக்கு வழங்கப்படுகின்ற பாராளுமன்ற அஞ்சல் முத்திரையை வழங்கி இம்முறை மாகாண சபைத் தேர்தலுக்காக கண்டி மாவட்டத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரின் பிரச்சார அலுவல்களுக்கு உதவி வழங்குவதாகவும் தேர்தல் சட்டங்கள் மீறப்படுவதாகவும் பாராளுமன்றத்தின் மற்றுமொரு மக்கள் பிரதிநிதியொருவரால் 2013.08.23 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் அவர்களிடம் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

274. இம்முறை மாகாண சபைத் தேர்தலுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளராகப் போட்டியிடுகின்ற ரத்தொட பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதியொருவர், 2012.12.31 ஆம் திகதி வரையான அச்சபையின் நிதி வெளிப்படுத்துகைக் கூற்றை கணக்காய்வுக்காக வருகைதந்த மத்திய மாகாணத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள கணக்காய்வு அலுவலருக்கு அதற்காக இடமளியாது இடையூறு விளைவித்து பணியாட் குழுவினரை அழைத்து தேர்தல் பிரச்சார கூட்டமொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கையெடுத்தமை தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு குறித்த கட்சியின் வேட்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்காக வழிகாட்டலொன்று சகிதம் அக்கட்சியின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

275. கண்டி மாவட்டத்தின் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடுகளை குறித்தொதுக்குவதற்கான ஆய்வு அலுவல்களை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கி மாவட்டச் செயலாளர் அவர்களால் பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிவுறுத்தல் மற்றும் உரிய படிவத்தின் பிரதியொன்று கட்சியொன்றின் வேட்பாளரொருவரால் கண்டி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடொன்று சகிதம் 2013.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தை தேர்தலின் பின்னர் மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு 2013.09.11 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

276. சிறு ஏற்றுமதி விவசாயப் பயிர்களை பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு சலுகை வட்டி வங்கிக் கடன் வழங்கும் செயலமர்வொன்று 2013.09.18 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கண்டி மக்கள்

வங்கி பிரதேச அலுவலகத்தில் நடாத்தப்படுவதாக அறிக்கையிடப்பட்ட பின்னர், தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் அக்கூட்டத்தை தேர்தல் நிறைவடைந்த பின்னர் நடாத்துமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

277. கண்டி மாவட்டத்தில் நன்னீர் கைத்தொழிலை ஊக்குவிக்கும் பணிக்காக பயன்படுத்தியிருந்த கடற்றொழில் அமைச்சுக்கு சொந்தமான வாகனத்தையும் அவ்வமைச்சில் இணைப்பு அலுவலர் ஒருவர் பிரச்சார அலுவல்களில் ஈடுபடுத்துவதாக கிடைத்த முறைப்பாடு தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது அவ்வாகனத்தை உத்தியோகபூர்வமற்ற பணிகளில் ஈடுபடுத்துகின்றமை பொய்யானதல்லவென தெரிய வந்தமையால் அது தொடர்பாக அவ்வமைச்சினதும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் அறிவித்து அப்பணிகளை தடுத்து கடற்றொழில் அமைச்சுக்குரிய ஆதனங்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதை தடுக்க நடவடிக்கையெடுக்கப்பட்டது.

வட மாகாணம்
யாழ்ப்பாண மாவட்டம்.

278. வட மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலுக்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட வேட்பாளர்கள் சிலர் வதிந்துள்ள இடங்களுக்கு பாதுகாப்புப் பிரிவின் அலுவலர்கள் என கூறிக் கொண்டு வருகை தந்தவர்கள், தமது தனிப்பட்ட விபரங்களை வினவி குறித்துக் கொண்டு சென்றதாகவும் ஆதலால், அந்த வேட்பாளர் மற்றும் அவரின் வீட்டிலுள்ளவர்கள் அச்சத்தோடு இருப்பதாகவும் பல அரசியல் கட்சிகளினால் தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. குறிப்பாக வட மாகாணத்தில் செயற்பட்டு வருகின்ற அரசியல் கட்சிகள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் போதும் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆதலால், பாதுகாப்புப் பிரிவு மற்றும் அரச உளவுப் பிரிவு என்பவற்றால் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தொடர்பான விபரங்கள் ஆராய்ந்து பார்க்கப்படுகின்றனவாவென தேர்தல்கள் ஆணையாளர்கள் அவர்களால் ஆராய்ந்து பார்க்கப்பட்ட போதிலும் அப்பிரிவுகளால் அவ்வாறான தேடுதலொன்று மேற்கொள்ளப்படவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது.

279. வட மாகாணத்தின் தேர்தல் மாவட்டம் ஒன்றைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் யாழ்ப்பாண மாவட்டத்திற்காக அரசியல் கட்சியொன்றில் இருந்து போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் தேர்தல் பிரச்சார அலுவல்களுக்குரிய ஆவணங்களை வாக்காளர்களுக்கு அஞ்சலில் அனுப்புவதற்காக அவருக்கு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள அஞ்சல் வசதிகளை பயன்படுத்துவதற்கு இடமளித்துள்ளதாக அரசியல் கட்சியொன்றைப் பிரதிநித்துவப்படுத்திய யாழ்ப்பாணம் கொக்குவில் பிரதேசத்தின் வேட்பாளரொருவரினால் தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடொன்று கிடைக்கப் பெற்றிருந்தது. மேலும் கிடைக்கப் பெற்ற இவ்வாறான முறைப்பாடுகள் சகிதம் இந்த முறைப்பாடும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக கௌரவ சபாநாயகர் அவர்களுக்கு அறிவிப்பதற்காக தேர்தல்கள் ஆணையாளரால் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

280. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினரொருவரால் 2013.08.10 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு, கிளிநொச்சி மாவட்டத்தின் 30 இற்கு மேற்பட்ட கிராம அலுவலர்கள் மற்றும் மேலும் பல அரச அலுவலர்கள் கிளிநொச்சி உதய நகரில் அமையப் பெற்றுள்ள உணவகமொன்று 2013.08.07 ஆம் திகதி அழைக்கப்பட்டு அவர்களுக்கு பகற் போசன விருந்துபசாரமொன்று நடாத்தப்பட்டு அவர்களின் ஒத்துழைப்பை இத்தேர்தலின் போது ஓர் அரசியல் கட்சியினால் கோரப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. வடமாகாண தேர்தல் மாவட்டங்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற அக்கட்சியின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழமையான கடமை நேரத்தினுள் அரச அலுவலர்களை அழைத்து அரசியல் அலுவல்களுக்காக அவர்களின் உதவியைக் கோருதல் போன்றே குறிப்பாக சமாதான அலுவலர் குழுவொன்றான கிராம அலுவலர்களையும் அவ்வாறான சந்தர்ப்பங்களுக்கு அழைப்பது கட்சியொன்றினால் செய்யப்படக் கூடாத ஒரு விடயமென அறிவித்த தேர்தல்கள் ஆணையாளர் அவ்வாறான செயற்பாடுகளை தவிர்ப்பதற்கு உரிய கட்சி ஆதரவாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குமாறு அக்கட்சியின் செயலாளருக்கு 2013.08.10 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

281. கிளிநொச்சி மாவட்ட உள்ளூர் அதிகார சபை தலைவரொருவரால் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு, அந்த உள்ளூர்

அதிகார சபை அதிகார பிரதேசங்கள் சிலவற்றில் அம் மாவட்டத்திற்காகப் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற வேட்பாளர்களின் வெற்றிக்காக பாராளுமன்ற உறுப்பினர் சிலர் கூட்டக் காணிக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் தேர்தலுக்குரிய கூட்டங்களை நடாத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அது தொடர்பாக குறித்த கட்சியின் செயலாளருக்கு 2013.08.31 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

282. நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு என்ற தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பு, வட மாகாணத்தின் சிவில் பாதுகாப்புப் படையணியின் அங்கத்தவர்கள், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அரசியல் கட்சியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி வட மாகாண சபைக்காக போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வெற்றிக்காக பிரச்சார அலுவல்களிலீடுபடுவதாக 2013.09.05 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக அத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பின்னர் குறித்த அலுவலர்களுக்கு அது தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவ்வலுவலரினால் 2013.09.10 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

283. யாழ்ப்பாணம் அரியாலை கிழக்கு பிரதேசத்தில் தனியார் இடங்களிலிருந்து மணலை அகழ்ந்து யாழ்ப்பாண நகர்புற மக்களுக்கு அரசியல்வாதிகளின் அனுசரணையோடு நபர்களால் மணல் கொண்டு சென்று பகிரப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக பொலிஸாரினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறான மணலை ஏற்றிச் சென்ற வாகனங்கள் கைப்பற்றப்பட்டதாக தேர்தல்கள் ஆணையாளருக்குப் பொலிஸார் ஊடாக அறிந்து கொள்ள முடிந்தது.

284. யாழ்ப்பாண மாவட்டத்தின் தேர்தலுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வேட்பாளர்கள் சிலருக்கு இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்பு வழங்கப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடு பாரதூரமான முறைப்பாடாக கருதப்படல் வேண்டும். இவ் வேட்பாளர்கள் தமது அரசியற் பிரச்சார கூட்டங்களில் சட்டமுரணான பொருட்களாகியவற்றை, வீட்டு உபகரணங்கள், விவசாய உபகரணங்கள் பகிர்ந்தளிப்பதற்கு சில இராணுவ உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றதாகவும், சில இராணுவ காவலரண்களில் பாதுகாக்கப்பட்ட வீதிகளிலும் உரிய கட்சியின் சின்னங்களும் அவ் வேட்பாளர்களின் சின்னங்களும் வரையப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. அரசியற் கூட்டங்களின் போது பொருட்கள், உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதை தவிர்க்க தேர்தல்கள் அலுவலர்கள் நடவடிக்கையெடுத்த போதிலும் இராணுவ முகாம்களுக்கு முன்னால் வீதிகளில் தேர்தல் சின்னங்கள், வேட்பாளர்களின் இலக்கங்கள் என்பனவற்றுக்கு நிறம் தீட்டுவதை உயர் அரசியல் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளை அறிவூட்டியதன் மூலமே தவிர்க்க முடிந்தது.

285. சில காலத்திற்கு முன் காணப்பட்ட வன்முறைகள் காரணமாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம், அநுராதபுரம் மாவட்டங்களில் வதிகின்றவர்களும் வன்னி பிரதேசத்தில் வாக்காளர்களும் வன்னி பிரதேசத்தில் வாக்காளர்களுக்காக பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் வாக்குகளை வேறு நபர்கள் போலியாக பயன்படுத்துவதற்கான முயற்சிகள் காணப்படுவதாக முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் பற்றி அக்கறை காட்ட வேண்டியிருந்தது இங்கு இது தொடர்பாக ஊக்கம் காட்டிய அரசியல்வாதிகள், தேர்தல் அதிகாரிகள் மற்றும் ஆணையாளர் ஆகியோரிடையே பல்வேறு சந்தர்ப்பங்களிலும் காட்டமான வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்ததோடு போலியாக வாக்குகளை பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காக வாக்களிப்பு நிலையத்தில் வெளிப்படுத்துகை பத்திரங்களில் கையொப்பத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கையெடுத்ததன் காரணமாக அத்தகைய முயற்சிகளை தடுக்க முடியுமாயிற்று.

286. வாக்களிப்பு நிலையத்தில் வாக்காளர்கள் யாருக்கு வாக்களித்துள்ளார்கள் என்று வாக்களிக்கும் சந்தர்ப்பத்தில் காண முடியாமையினால் வேறேதும் விதத்தில் வாக்கினை பிரயோகிக்காது தமது

கட்சிக்கு வாக்கினை அளித்து விருப்பினை தமக்கு அடையாளமிடுமாறு சில அரசியல்வாதிகள்/ வேட்பாளர்களினால் பரப்பப்பட்ட பரப்புரை காரணமாக அஞ்சல் வாக்காளர்களிடமும், சாதாரண வாக்காளரிடையேயும் பீதியொன்று ஏற்பட்டுள்ளதென கிடைக்கப்பெற்ற முறைப்பாடு பற்றி ஆய்ந்தறியப்பட்ட போது அத்தகைய பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டமை நிரூபணம் ஆயிற்று. ஆதலால் இந் நிலைமையை தவிர்க்க மக்களை அறிவூட்டுவதற்கு விசேட வேலைத்திட்டமொன்று வட மாகாணத்தின் செய்யப்பட்டதோடு ஆளுங் கட்சியினதும் எதிர்க்கட்சியினதும் அனைத்து அரசியற் கட்சிகளினதும் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றமையால் அந்நிகழ்ச்சித் திட்டதின் ஊடாக மக்களின் பயத்தை நீக்கும் பணியை வெற்றிகரமாக ஆற்றிக் கொள்ள முடிந்தது. அத்துடன், வன்னி தேர்தல் மாவட்டத்தில் பெயர் பதிந்துள்ளவர்களாகவும், அநுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் வதிபவர்களுமாகிய ஒரு சில வாக்காளர்கள் தமது வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்களிக்கச் செல்வதற்காக, ஒரு சில அரசியல்வாதிகள் தமது போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு முயற்சி செய்த சம்பவத்தினைத் தடுப்பதற்கு தேர்தல் அலுவலர்கள் கடும் முயற்சியை மேற்கொண்டிருந்தனர். எவ்வாறாயினும் நடைமுறையிலுள்ள சட்டவிதிகளை மீறிச் செல்வதற்கு எத்தனித்த அரசியல்வாதிகளின் முயற்சிகளைத் தடுப்பதற்காக பெரும் சிரமத்தை மேற்கொள்ள வேண்டியிருந்ததென்பதைக் குறிப்பிடல் வேண்டும்.

287. வாக்கெண்ணலை தொடர்ந்து அந்தந்த வாக்கெண்ணும் நிலையத்தின் முடிவுகளுக்கமைய அந்தந்த வாக்காளர்கள் எவ்விதத்தில் வாக்களித்துள்ளார்கள் என தெரிந்து கொள்ளமுடியுமாதலால் வாக்கினை அளிக்க வேண்டியது ஏதேனும் குறித்த ஒரு கட்சிக்கு மாத்திரமேயென வாக்காளர்களை இனம்தெரியாத ஒரு குழுவினர் அச்சுறுத்துவதாக வன்னி பிரதேசத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும், யாழ்ப்பாண தீவுப் பிரதேசங்களிலும் பிரஜைகளிடமிருந்தும், போட்டியிட்ட அரசியற் கட்சிகளிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பொய்யானவையென புறந்தள்ள முடியாதென நிரூபணமாயிற்று. ஆதலால் இதுவரை ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திற்கும் தொடரிலக்கங்களுக்கமைய வாக்கெடுப்பு மாவட்டங்கள், வாக்கெண்ணும் நிலையங்களுக்காக குறித்தொதுக்கப்படுவதற்கு பதிலாக முழு வாக்கெடுப்பு பிரிவிலும் இலக்கங்களை எழுமாற்றாக தேர்ந்தெடுத்து வாக்கெடுப்பு மாவட்டங்கள்/ வாக்கெண்ணல் நிலையங்களுக்கு குறித்தொதுக்குவதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதற்கமைய தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டதை தொடர்ந்து முழு வாக்கெடுப்பு பிரிவும் தவிர்ந்த சிறுசிறு நிருவாக அலகுகளுக்கமைய வாக்குகள் பிரயோகிக்கப்படும் விதத்தை எவருக்கும் தெரிந்து கொள்ள முடியாமற் போயிற்று.

வடமேல் மாகாணம்
புத்தளம் மாவட்டம்

288. தேர்தல்கள் ஆணையாளர் அவர்கள், 2013.07.30 ஆம் திகதி அமைச்சுக்களின் அலுவலர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் தெயட்டகிருல தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டதோடு இணைந்ததாக குருநாகல், புத்தளம் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்ற மக்கள் உதவி நிகழ்ச்சித் திட்டங்களை எந்தவொரு அரசியல் கட்சிக்கும், குழுவுக்கும் அல்லது வேட்பாளருக்கும் ஆதரவு தெரிவிக்கின்ற விதத்தில் நடாத்த கூடாதென குறித்த அலுவலர்களுக்கு அந்த அமைச்சின் அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

289. 2013.08.19 ஆம் திகதி பெபரல் அமைப்பினால் புத்தளம் திரையரங்கொன்று கட்சி அலுவலகமொன்றாக பயன்படுத்தப்படுவதாகவும், அக் கட்டிடம் புத்தளம் பிரதேச செயலகத்திற்கு உரியது என்பதால், அதில் கட்சி அலுவலகம் ஒன்றைத் தாபிக்க கூடாது எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த கட்டிடம் ஒரு தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்த போதிலும் புத்தளம் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு அது தனி நபரொருவருக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக புத்தளம் மாவட்ட செயலாளர் அவர்களால் நடவடிக்கையெடுக்கப்பட்டு வருவதாக 2013.08.21 ஆம் திகதி அறியக் கிடைத்தது. இந்நிலைமையின் குறித்த கட்சி அலுவலகத்தை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

290. புத்தளம் பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்குரிய குட்செட் வீதியில் அமைந்துள்ள கட்டிடமொன்றில் மாகாண சபை வேட்பாளரொருவர் கட்சி அலுவலகமொன்றைப் பேணி வருவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அறிவிக்கப்பட்ட பின்னர், குறித்த கட்டிடத்தின் சாவி அத்தரப்பினரால் 2013.09.05 ஆம் திகதி பிரதேச பொறியியலாளருக்குக் கையளிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டது.

291. 2013.08.13 ஆம் திகதி வென்னப்புவ வங்கிக் கிளையொன்றின் வாகனமொன்று தேர்தல் பிரச்சார அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் அந்த வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலரிடம் உசாவியதன் பின்னர் அவர் அந்த வாகனம் தலைமை அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டதாக 2013.08.23 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு அறிவித்துள்ளார்.

292. புத்தளம் மாவட்டத்தின் சட்டமுரணான பிரச்சார அலுவல்கள் பேணப்படுகின்றமை தொடர்பாக ஈடுபட்டிருந்த தேர்தல் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் வென்னப்புவ பிரதேசத்தில் வேட்பாளரொருவர் சட்டமுரணான பிரச்சார அலுவலகமொன்றை அகற்றியதை தொடர்ந்து அவ்வேட்பாளர் தேர்தல் அலுவலர்கள் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் ஆகியோர் மது அருந்தியவர்கள் வந்து தமக்கு இடையூறு விளைவித்ததாக குற்றம் சாட்டினர். இக்குற்றச்சாட்டு தெளிவாகவே ஒரு பொய் குற்றச்சாட்டு ஆதலால் உடனடியாக செயற்பட்ட ஆணையாளர் அவ்வலுவலர்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தியதோடு அவர்கள் மது அருந்தியவர்களாக காணப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தியதோடு குறித்த குற்றச்சாட்டை சமர்ப்பித்த வேட்பாளரின் கட்சிச் செயலாளருக்கும் தேசிய அமைப்பாளருக்கும் வேட்பாளரின் முறைகேடான நடத்தை தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டது. இந் நிகழ்வு தொடர்பாக கடும் கவலை தெரிவிக்கப்பட்டதோடு உரிய வேட்பாளர்களுக்கு அறிவுத்தல்களை வழங்குவதாகவும் அப் பிரதேசத்தின் சட்டமுரணான அலுவல்கள் நடைபெறாமலிருக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவித்தனர். அதனை தொடர்ந்து அப்பிரதேசத்தில் இத்தகைய பிணக்குகள் ஏற்படவில்லை.

குருநாகல் மாவட்டம்.

293. வேட்புமனுக் கையேற்ற பின்னர் எந்தவொரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு ஊர்வலம் அல்லது கூட்டங்களை நடாத்தல் இடமளித்தல் கூடாதென தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் 2013.08.01 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக குருநாகல் பஸ் தரிப்பு நிலையத்தை அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் அரசியல்வாதிகள் சிலர் நடாத்திய கூட்டம், அதற்காக உபயோகப்படுத்தப்பட்ட ஒலிபெருக்கி இயந்திரத்திற்கான மின் விநியோகம் தடைசெய்யப்பட்ட பின்னர், நிறைவுசெய்வதற்கு பொலிஸ் அலுவலர்களுக்கு நேரிட்டதாக அறிக்கையிடப்பட்டது. வேட்புமனு கையளித்த பின்னர் கிளிநொச்சி, கண்டி, நுவரெலியா ஆகிய நகரங்களிலும் பிரதான அரசியல் கட்சியொன்றினால் இவ்வாறான சட்டவிரோதமான கூட்டங்கள் நடாத்தப்பட்டதாக அறிக்கையிடப்பட்டன.

294. 2013.08.05 ஆம் திகதி மேலும் பல விடயங்களை உள்ளடக்கியதாக கெபே அமைப்பினால், வடமேல் மாகாண சபையின் மத்திய பிரிவின் இரண்டு அலுவலர்கள் முன்னாள் மாகாண சபை முதலமைச்சர் வேட்புமனுக் கையளிப்பதற்காக மாகாண சபைக்கு வருகைதந்த சந்தர்ப்பத்தில் கடமை அலுவலொன்றாக அந்த அலுவல்களை புகைப்படமெடுக்க தயாராகவிருந்த முறைப்பாடு செய்யப்பட்டதன் பின்னர் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் இவ்விருவரும் அந்த உபகரணங்களை 2013.08.13 ஆம் திகதி மாகாண சபை களஞ்சியசாலையிலிருந்து பெற்றுக் கொண்டு அலுவலக சேவைக்காக அவர்கள் இணைப்புச் செய்யப்பட்டதாக 2013.08.16 ஆம் திகதி அந்த மாகாண சபையினால் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது.

295. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றினால் குருநாகல் மாவட்டத்திற்காக போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் பிங்கிரிய சரணங்கர தேசிய பாடசாலைக்கு அருகில் கட்சி அலுவலகமொன்றைப் பேணிச் செல்லல், அந்த பாடசாலையில் நடாத்தப்படுகின்ற உயர்தர பரீட்சை செயற்பாடுகளுக்கு இடையூறாகுமென அந்த பாடசாலையின் மாணவ மாணவியர்களின் பெற்றோர்களால் தேர்தல்கள் ஆணையாளருக்குச் செய்த முறைப்பாட்டிற்கமைய அவ்வலுவலகம்

2013.08.09 ஆம் திகதி அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு பொலிஸார் மூலம் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

296. குளியாப்பிட்டிய பிரதேச பாடசாலை பிள்ளைகளின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கூட்டமொன்றுக்காக அழைக்கப்பட்டு அக்கூட்டத்தின் இடையில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு வருகைதர இடமளித்து அவர்களை கொண்டு பெற்றோருக்கு வாக்களிப்பதற்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் உரை நிகழ்த்த இடமளிக்கப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் காரணமாக அந்த நிகழ்ச்சித் திட்டத்தை இடைநிறுத்துமாறு 2013.08.08 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் வடமேல் மாகாண கல்வி செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது.

297. மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அவர்களின் உத்தியோகபூர்வ விடுதி குறித்த மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னரும் மாகாண சபைக்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதனை அரச ஆதனமொன்றென்ற அடிப்படையில் மாகாண சபைக்குக் கையளிக்க வேண்டுமெனத் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் செய்யப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய முதலமைச்சரின் செயலாளர் அந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை மாகாண சபைக்கு 2013.08.23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கையளிக்க வேண்டுமென குறித்த தரப்பினருக்கு 2013.08.22 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

298. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் சேவைக்காக இலவச அஞ்சலை பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி, இந்த மாகாண சபைத் தேர்தலுக்காகப் போட்டியிடுகின்ற தமது கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற வேட்பாளர்களின் வேட்பாண்மையை ஊக்குவிப்பதற்காக அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற மக்கள் பிரதிநிதிகள் நடவடிக்கையெடுப்பதாக சாட்சிகள் சகிதம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அது தொடர்பாக கௌரவ சபாநாயகர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருமாறு 2013.09.13 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

299. குருநாகல் மாவட்டத்தில் சட்டவிரோத தேர்தல் பிரச்சார அறிவித்தல்களை ஒட்டுதல் மற்றும் தேர்தல் சட்டங்களுக்கமைய தெரிவத்தாட்சி அலுவலருக்கு மற்றும் உரிய பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்படாத தேர்தல்கள் அலுவலகங்கள், கட்சிகள் மற்றும் குழுக்களினாலும், வேட்பாளர்களினாலும் பேணிச் செல்லப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் காரணமாக அந்த அலுவல்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து பொருத்தமான நடவடிக்கைகளையெடுப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளரின், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் அறிவுறுத்தலுக்கமைய பொலிஸ் அலுவலர்களுடன் குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்ட அரச அலுவலர் குழுவொன்று 2013.09.05 ஆம் திகதி ஈடுபடுத்தப்பட்டனர். மாகோ தலதாகம பிரதேசத்தில் இவ்வாறு மின்கம்பங்களில் போடப்பட்டிருந்த சட்டவிரோத அறிவித்தல்கள் அலுவலர்களால் அகற்றுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்கருகில் காணப்பட்ட தேர்தல்கள் அலுவலகமொன்றும் அலுவலர்களால் பரீசீலனைக்குட்படுத்தப்பட்டது. தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய அவ்வலுவலகத்தில் குறித்த கட்சியினால் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தமது அலுவலகம் தொடர்பில் செய்துள்ள அறிவித்தலின் பிரதியொன்று காட்சிப்படுத்தப்படவில்லையென்பதால், அது தொடர்பாக விசாரித்த போது அதனை சமர்ப்பிப்பதற்கு அங்கிருந்தவர்களால் முடியவில்லை. இதன் காரணமாக அந்த அலுவலகம் சட்டவிரோதமான அலுவலகமொன்றாகக் கருதி குறித்த சோடனைகளை அகற்றுவதற்கு பொலிஸ் அலுவலர்களும், ஊழியர்களும் முயற்சித்த சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு இன்னும் சிலருடன் வருகைதந்த அங்கீகரிக்கபட்ட அரசியற் கட்சியின் வேட்பாளர் அலுவலர்களை அச்சுறுத்தி அவர்கள் வருகைதந்த வாகனத்தின் சாவியையும் எடுத்துக்கொண்டு அவர்களை தடுத்து வைத்துக் கொண்டார். இதன் காரணமாக அலுவலர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு மாகோ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அலுவலர்கள் அறிவித்துள்ளனர். அந்த அலுவலர்களின் கடும் முயற்சியின் அடிப்படையில் பொலிஸ் அலுவலர்கள் மற்றும் அரச அலுவலர்கள், அவர்களின் வாகனம் விடுவிக்கப்பட்டதோடு, இது தொடர்பாக பிற்பகல் 06.20 மணி அளவில் மாகோ பொலிஸில் குறித்த அலுவலர்களால் முறைப்பாடு ஒன்றும் செய்யப்பட்டது. அன்றைய தினம் குறித்த

வேட்பாளரும் தேர்தல்கள் அலுவலகத்தை சேதப்படுத்தியமை தொடர்பாக பிற்பகல் 11.35 மணியளவில் அந்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்ததோடு, அந்த இரண்டு முறைப்பாடுகளில் பொலிஸாரினால் முதலாவதாக விசாரிக்கப்பட்டிருப்பது தாமதமாகக் கிடைத்த முறைப்பாட்டை எனவும் அறிக்கையிடப்பட்டது. அதற்கமைய பொலிஸார் குறித்த அரச அலுவலர்களை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு வழக்கு தொடரவும் நடவடிக்கையெடுத்துள்ளனர். இங்கு பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பாக திருப்திகொள்ள முடியாது.

300. குருநாகல் மாவட்டடத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒன்றில் போட்டியிட்ட வேட்பாளர்கள் இடையே விருப்பு வாக்குகளுக்காக நிலவிய கடும் போட்டி காரணமாக சட்ட முரணானதும் அங்கீகரிக்கப்படாத முறையையும் பயன்படுத்தல் தொடர்பாக முறைப்பாடுகள் அடிக்கடி கிடைத்த வண்ணமிருந்தன. கட்சி/ வேட்பாளர்களினாலும் சின்னங்கள், இலக்கங்கள் குறிக்கப்பட்ட டீசேட்டுக்களையும் பகிர்ந்தளித்து மிதிவண்டி போட்டிகள் என்பன ஒழுங்கமைக்கப்பட்டதோடு பௌத்த மதகுருமார்கள், கிறிஸ்தவ பாதிரியார்கள், இஸ்லாமிய மதகுருமார்கள் ஆகியோரின் பங்குபற்றுதலோடு நடாத்தப்பட்ட சமய நிகழ்ச்சி திட்டங்கள் என்ற பெயரில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் பெரிய வாகனங்களில் பொருத்தப்பட்ட நடமாடும் மேடை பயன்படுத்தி அனுமதிபெறப்படாத கூட்டங்கள்/ சங்கீத கச்சேரிகளை நடாத்துதல் வாக்காளர்களை கூட்டமாக அழைத்துச் சென்று உணவு வகைகள் மற்றும் மதுபானங்களை இரவு உணவுகள் வழங்க நடவடிக்கையெடுத்தல் என்பன இவற்றுள் முக்கியமாகவிருந்தன. அதே போல் சுயேச்சைக் குழுக்களினதும் உண்மையாக போட்டியிடாத அரசியற் கட்சிகளில் வேட்பாளர்களினதும் தேர்தல் பிரச்சார அலுவலர்களினூடாக அச்சுயேச்சைக் குழுக்களுக்கும் அரசியற் கட்சிகளுக்கும் நிதிப்பங்களிப்பை வழங்கி கட்சி வேட்பாளர்களின் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், குருநாகல் மாவட்டத்தின் ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க கூடுதலாக இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது. குருநாகல் தெரிவத்தாட்சி அலுவலர், பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் ஏனைய உதவி அலுவலர்கள் பொலிஸ் அலுவலர்கள் ஆகியோர் இணைந்து இந்நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர கூடுதலாக முயற்சியை மேற்கொண்டதோடு இவற்றினூடாக பெரும்பாலும் இச்சட்டமுரணான நடத்தையை கட்டுப்படுத்த முடியாமற் போயிற்று.

மேல் மாகாணம்
கொழும்பு மாவட்டம்.

301. தேர்தல்கள் ஆணையாளருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடொன்று தொடர்பாக விசாரித்த போது 2014.02.07 ஆம் திகதி மொறட்டுவை பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்திருப்பதாவது, மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்திற்காக போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவரின் பிரத்தியேக செயலாளரென கூறிக்கொள்ளும் ஒருவர் மேல் மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொண்ட முச்சக்கர வண்டிகளுக்கு பொருத்தக்கூடிய 54 முச்சக்கர வண்டி மீற்றர்களை முச்சக்கர வண்டி ஓட்டுநர்களை ஒன்றுகூட்டி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

302. இத்தேர்தலின் போது தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு தமது பிரச்சார அலுவல்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற ஒரு வாகனத்தில் அவரின் அறிவித்தல் விளம்பரங்களையும் கொடிகளையும் காட்சிப்படுத்துவதற்கு தேர்தல் சட்டத்திற்கமைய இடமுள்ள போதிலும் அதனை பின்பற்றியொழுகாது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளரொருவர் தனது நான்கு பிரச்சார வாகனங்களிலும் புகைப்படங்கள், சின்னம் மற்றும் வேறுபிரித்தரியும் இலக்கத்தை காட்சிப்படுத்தல் தொடர்பாக 2014.02.25 ஆம் திகதி தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான கெபே அமைப்பிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய பொலீஸாருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அடிப்படையில் மேலதிகமாக 03 வானகங்களிலிருந்தும் குறித்த காட்சிப்படுத்தல் அறிவித்தல்கள் அகற்றப்பட்டதாக நுகேகொட பொலீஸ் அத்தியட்சகர் அவர்களால் 2014.03.07 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது.

303. கொழும்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கெதிரில் கொழும்பு மாவட்டத்திற்காக அரசியல் கட்சியொன்றிலிருந்து போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதற்காக 2014.03.07 ஆம் திகதி குறித்த அறிவித்தல் மற்றும் ஒலிபெருக்கி சாதனத்தை பயன்படுத்திக் கொண்டு

சட்ட விரோதமாக பயணித்த வாகனமொன்றை தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்களின் தலையீட்டின் அடிப்படையில் பொலிஸார் கைது செய்து பொலிஸ் விசாரணைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

304. கொழும்பு மாவட்டத்திற்காக அரசியல் கட்சியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் இரத்மலானை காலி வீதி புகையிரதத் திணைக்களத்திற்குரிய காணியில் சட்ட விரோதமாக முறையற்ற விதத்தில் பேணிச் செல்லப்பட்ட தேர்தல் பிரச்சார அலுவலகம் ஒன்று தொடர்பாக முறைப்பாடு கிடைக்கப்பெற்ற பின்னர் 2014.03.20 ஆம் திகதி பொலீஸாரைக் கொண்டு அவ்வலுவலகம் அகற்றப்பட்டது.

305. கொழும்பு வாழைத்தோட்டம் மற்றும் மாளிகாவத்தை ஆகிய பிரதேசங்களில் கொழும்பு மாவட்டத்திற்காக போட்டியிடுகின்ற சுயேச்சைக் குழு ஒன்றுக்காக தாபிக்கப்பட்டிருந்த அறிவித்தல் கொடுக்கப்பட்ட 07 தேர்தல் பிரச்சார அலுவலகங்கள் இத்தேர்தலுக்காக போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளர் ஒருவர் சார்பாக தாபிக்கப்பட்ட பிரச்சார அலுவலகங்களாக செயற்பட்டமை காரணமாக அது தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் அவ் அலுவலகங்களை பொலீஸாரைக் கொண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

306. வீட்டு கடன்களை நபர்களுக்கு வழங்குவதற்காக தகைமையானவர்களை தேர்ந்தெடுத்து அவ்வாறான நபர்களுக்கு கடன் வழங்கும் அலுவல்கள், தேர்தல் காலப்பகுதியினுள் மாகாண சபைக்காக போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வேட்பாண்மையை ஊக்குவிக்கும் நோக்காகக் கொண்டு 2014.03.20 ஆம் திகதி ஹோமாகம பிரதேசத்தில் பாடசாலையொன்றில் அதனை மேற்கொள்வதற்கு அந்த அரச பிரிவின் அலுவலர்கள் நடவடிக்கையெடுத்துள்ளதாக அரசியல் கட்சியொன்றை பிரதிநிதித்துவப்படுத்திய வேட்பாளரொருவரினால் முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றது. அதற்கமைய அப்பணிகளை தேர்தல் காலப்பகுதியினுள் மேற்கொள்ள வேண்டுமெனில், மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் வேட்பாளர்களுக்கு தேர்தல் செயற்பாடுகளுக்கு உதவியாக அமையாதவாறு அந்த வேட்பாளர்களின் பங்கேற்பின்றி மேற்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் குறித்த அலுவலர்கள் சார்ந்துள்ள அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது.

307. தனியார் போக்குவரத்து பஸ் வண்டிகள் போன்றே இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் வண்டிகளும் வேட்பார்களின் பிரச்சார அலுவல்களை வெளியிடுவதற்கு பயன்படுத்தப்படுதல் காணமுடிந்த தேர்தல் சட்டமீறலொன்றாகும். இவ்வாறான சட்ட முறையற்ற அறிவித்தல்கள் அரசியல் கட்சியொன்றை பிரதிநிதித்துவம் செய்த 02 வேட்பாளர்களுக்காக தலங்கம டிப்போவுக்கு சொந்தமான பஸ் வண்டிகளில் ஒட்டப்பட்டிருந்தமை தொடர்பாக அரசியல் கட்சியொன்றின் செயலாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடொன்றுக்கமைய அது தொடர்பாக 2014.03.21 ஆம் திகதி குறித்த டிப்போ அத்தியட்சகர் அறிவிறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

308. சர்வதேச பெண்கள் தினத்தை கொண்டாடும் தோரணையில் பிரதான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றை பிரநிதித்துவப்படுத்திய பாராளுமன்ற மக்கள் பிரதிநிதியொருவரின் தலைமையில் அரசியல் கூட்டமொன்று 2014.03.08 ஆம் திகதி பிலியந்தல பிரதேச செயலகத்தில் நடாத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடொன்றை விசாரிப்பதற்கு இன்னும் சில அலுவலர்கள் மற்றும் பொலீஸார் சகிதம் அந்த அலுவலகம் அமையப்பெற்றிருந்த முறைப்பாடுகளை கையேற்கும் நிலையத்தின் பொறுப்பு அலுவலர் அவ்விடத்திற்குச் சென்று அந்த வைபவத்தின் அலுவல்களை அவதானித்துள்ளார். அச்சந்தர்ப்பத்தில் அந்த விடயங்களை ஆராய்தல் தொடர்பாக கோபமடைந்த குறித்த மக்கள் பிரதிநிதி மிகவும் மோசமான விதத்தில் அலுவலர்களுக்கு ஏசியுள்ளார். இது தொடர்பில் அந்த பிரதிநிதி பிரதிநிதித்துவம் செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளருக்கு தேர்தல் ஆணையாளரால் இச் சம்பவம் தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

309. ஹோமாகம பிரதேசத்தின் அனுமதி பெறாத பிரச்சார பலகைகளின் காட்சிப்படுத்தல்களின் சட்டமுரணான பிரச்சார அலுவல்கள் பேணப்படுகின்றமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸ் அலுவலரொருவர் வெளிக்கள கடமைகளில் ஈடுபட்டிருந்த அலுவலர்களுக்கு முன்னால் மாகாண சபை உறுப்பினரொருவருக்குரித்தான அங்கீகரிக்கப்பட்ட

அரசியல் கட்சி ஒருவரின் வேட்பாளரும் அவரது ஆதரவாளரும் மேற்கொண்ட அச்சுறுத்தல்கள் தொடர்பாக விசாரிக்க சென்றபோது கொழும்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரினை, அவ் வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் அச்சுறுத்தியதையடுத்து அவ் வேட்பாளர்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் பற்றி தேர்தல் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அவ்வேட்பாளர்கள் தமது தவறினை ஏற்றுக் கொண்டு வருத்தம் தெரிவித்தனர்.

களுத்துறை மாவட்டம்

310. புகையிரதத் திணைக்களத்தின் சில அலுவலர்கள் மற்றும் நூறு பேர் வரையான ஊழியர்கள் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரின் தேர்தல் செயற்பாடுகளில் தொடர்புற்று செயற்படுவதாக, தேர்தல் சட்டங்கள் மீறப்படுதல் போன்றே நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு தடையொன்று என்பதால் அந்த அலுவல்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2014.03.19 ஆம் திகதி பெபரல் அமைப்பினால் தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரப்பட்டுள்ளது. அது தொடர்பான மற்றுமொரு முறைப்பாடு 2014.03.20 ஆம் திகதி கிடைக்கப்பெற்றது. இது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரால் விசாரிக்கப்பட்டதற்கமைய 2014.03.17 ஆம் திகதி புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளரால் பதில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஓர் அலுவலர் சுகயீனம் காரணமாக கடமைக்கு சமூகமளிக்காத காலப்பகுதிக்கு மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்காமை காரணமாக அவருக்கு 2014.03.01 ஆம் திகதி தொடக்கம் சேவையை விட்டுச் செல்லல் கடிதமொன்று அனுப்பபட்டுள்ளதாகவும் குறித்த கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பதிலீட்டு மற்றும் அமய தொழிலாளர்களுக்கு சம்பளம் மற்றும் மேலதிக வேலை நேரம் கொடுப்பனவு செய்வதற்கு தேவையான பரிந்துரை அமைச்சின் செயலாளரின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதாகும்.

311. களுத்துறை மாவட்டத்தின் பிரதேச சபை கட்டிடமொன்று அமையப்பெற்றுள்ள வளவிலுள்ள பொது வாசிகசாலைக்கு அருகிலுள்ள கட்டிடமொன்றில் களுத்துறை மாவட்டத்திற்காக அரசியல் கட்சியொன்றின் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரால் சட்ட விரோத தேர்தல் பிரச்சார அலுவலகமொன்று பேணப்பட்டு வருவதாக களுத்துறை மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய அது தொடர்பான விசாரணையின் போது அந்தக் கட்டிடத்தை குத்தகைக்கு பெறுவதற்கு ஒரு நபர் முன்வந்துள்ள போதும் அந்த குத்தகைக்கு வழங்கும் அலுவல்கள் பிரதேச சபையினால் நிறைவு செய்யப்பட்டவில்லையென்பது தெரியவந்தது. அந்த அறிக்கை கிடைக்கப்பெற்றதும் தேர்தல்கள் ஆணையாளர் குறித்த கட்டிடத்தில் சட்ட விரோத தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கு இடமளியாது அக்கட்டிடத்தின் பொறுப்பாளரான மதுகம பிரதேச சபையின் பொறுப்பில் அதனை பெற்றுக்கொள்ள வேண்டுமென குறித்த சபைக்கு அறிவிக்கப்பட்டது.

312. அரசியல் கட்சியொன்றினால் அகலவத்தை வாக்கெடுப்பு பிரிவின் குமிதுவ சந்தியில் பேணப்பட்டுவரும் தேர்தல் பிரச்சார அலுவலகமொன்று தொடர்பாக 2014.02.08 ஆம் திகதி கிடைப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது அதன் உண்மைத் தன்மை தெரியவந்த பின்னர் அதனை பொலீஸாரை கொண்டு நீக்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

313. தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பென்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்பும், அதன் பின்னர் சில அரசியல் கட்சிகளும் 2014.02.14 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்திருந்தது யாதெனில், 2014.02.13 ஆம் திகதி அமைச்சின் செயலாளரொருவர் மேல் மாகாண சபைகள் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியயொன்றின் வேட்பாளரொருவரின் வெற்றிக்காக நடாத்தப்பட்ட தேர்தல் பிரச்சார கூட்டமொன்றில் உறையாற்றியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் அரசியல் கட்சி முகவர்களுடன் தேர்தல்கள் ஆணையாளர் நடாத்திய கலந்துரையாடல்களின் போது கவனம் செலுத்தப்பட்டது. அரச சட்டத்திற்கமைய அரசியல் உரிமையற்ற இவ்வாறான அலுவலர்கள் தாம் கொண்டுள்ள அரசியல் கருத்துக்களுக்கமைய தேர்தல் ஒன்றில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கு பக்கச்சார்பாக செயற்படுவதன் காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி

தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் அவ்வேட்பாளர் சார்ந்துள்ள அரசியல் கட்சியின் செயலாளருக்கும், அக்கட்சியின் தேசிய அமைப்பாளருக்கும். அறிவிக்கப்பட்டது.

314. ஒரு வேட்பாளரின் விருப்பு இலக்கத்தை காட்சிப்படுத்த அரசியல்வாதியொருவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு வாழ்த்து தெரிவிக்கின்ற பிரச்சார பதாதைகள் காட்சிப்படுத்துவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் கருத்திற் கொண்டு அத்தகையை நல்வாழ்த்து பிரச்சார பலகைகளை உடனே அகற்ற நடவடிக்கையெடுத்ததோடு அது தொடர்பாக உரிய தரப்பினரும் ஆதரவாளர்களும் அதிருப்தியின்மைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்ட போதிலும் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்ட பின்னர் அப்பலகைகள் காட்சிப்படுத்தல்களை தடுப்பதற்கான தடயங்கள் ஏற்படவில்லை.

315. வேட்பாளரொருவரின் அனுசரனை பெற்று அவருக்கு பிரச்சாரம் மேற்கொள்ள ஒலிபெருக்கி இயந்திரங்களை பயன்படுத்தியும் விருப்பு இலக்கங்களுடன் ஆடைகள் தொப்பிகள் என்பனவற்றை வழங்கியும் கிரிக்கட், கரப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளை ஒழுங்கமைப்பதாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதோடு வேட்பாளர்களை ஊக்குவிக்க பாடசாலை பிள்ளைகளிடையே கிரிக்கட் ஆட்டங்கள் ஒழுங்கமைப்புக்களை தடுக்க தேர்தல் அலுவலர்கள் நடவடிக்கையெடுத்தனர். உரிய அதிபருக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையை தொடர்ந்து இவ் விளையாட்டு போட்டிகளை ஒழுங்கமைத்தலின் ஊடாக பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை முறியடிக்க முடிந்தது.

கம்பஹா மாவட்டம்.

316. கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் பாராளுமன்ற முகவர் ஒருவர் இம்முறை மாகாண சபைத் தேர்தலில் தனது அரசியல் கட்சியிலிருந்து அம்மாவட்டத்தில் போட்டியிடுகின்ற தனது சகோதரரின் வேட்பாண்மையை ஊக்குவிப்பதற்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் பெற்றோர்களை, அதிபர்களூடாக கூட்டங்களுக்கு அழைத்து அரச பாடசாலைகளுக்கு ஒதுக்கீடுகளை வழங்குவதாக தெரிவித்து வாக்காளர்களுக்கு அழுத்தம் கொடுப்பதாக அம்மாவட்டத்தின் கல்வி அதிகாரிகள் கம்பஹா மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு 2014.03.10 ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளனர்.

317. பாரியளவிலான பஸ் வண்டிகளில் முழுமையான அவ்வாகனத்தின் வெளிப் பிரதேசங்களும் உள்ளடங்கும் விதத்தில் வேட்பாளரின் பிரச்சார விளம்பரங்களை வெளியிடுவதற்குள்ள சாதகமான நிலைமை காரணமாக சில வேட்பாளர்கள் தமது உத்தியோகபூர்வ வாகனமாக பஸ் வண்டியை பயன்படுத்துவதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றது. இவ்வாறான பஸ் வண்டிகளை மக்கள் நடமாடும் பிரதான நகரங்களின் பகிரங்கமான இடங்களில் நிறுத்திவைப்பதும் வேட்பாளரின் மற்றுமொறு உபாயமாகும். கம்பஹா மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றை பிரதிநிதித்துவப்படுத்திய இவ்வாறான பஸ் வண்டியொன்றை பயன்படுத்துகின்ற வேட்பாளரொருவர் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சி முகவர்களின் கூட்டமொன்றின் போது கலந்துரையாடப்பட்டது. அந்த முகவர்களுக்கும் விடயங்களை தெளிவுபடுத்தி அவ்வாறான பஸ் வண்டிகளை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. கம்பஹா மாவட்டத்தின் குறித்த வேட்பாளருக்கும் அத்தீர்மானம் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் 2014.03.04 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

318. கம்பஹா மாவட்டத்திற்காக போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளரொருவர், அவரால் ஒலிப்பதிவு செய்யப்பட்ட தேர்தல் பிரச்சார அறிவித்தலொன்று ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி வலையமைப்புடன் தொடர்புபட்டுள்ள தொலைபேசிகளூடாக வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கப்பெறுவதற்கு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடொன்றின் அடிப்படையில் அந்த அறிவித்தலை இடைநிறுத்துமாறு தொலைத் தொடர்பு முகாமைத்துவ ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் 2014.03.24 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

319. நீர்கொழும்பு பிரதேசத்தில் கட்சி வேட்பாளர்கள் பிரச்சார நடவடிக்கைகளுக்காக

நீர்கொழும்பு மாநகர சபையின் அரசாங்க ஆதனங்களும் அலுவலர்களும் ஈடுபடுத்தப்படுகின்றார்கள் என்ற முறைப்பாடு தொடர்பாக தேர்தல் அலுவலர்களின் விசேட கவனம் ஈர்க்கப்படவேண்டி வந்ததோடு நீர்கொழும்பு பிரதேசத்தில் விசேட முறைப்பாட்டு பிரிவொன்று நிறுவப்பட்டதனூடாக இந்நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

320. மினுவாங்கொடை மற்றும் கம்பஹா பிரதேசங்களில் சமுர்த்தி அலுவலர்களும் விவசாய வெளிக்கள உத்தியோகத்தர்களும் கடமை நேரத்திற்குள் அரசியல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள் என கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக உரிய அலுவலர்கள் அறிவூட்டப்பட்டதாக அச்சட்ட முரணான செயலை குறைந்த மட்டத்தில் பேண முடிந்தது.

321. அரசாங்க நிறுவனங்களினால் வீட்டுக் கடன்களை வழங்குகின்ற படிவங்களை பகிர்ந்தளிக்கும் கருத்திட்டதினூடாக கட்சி/ வேட்பாளர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக அத்தகைய வீட்டுக்கடன் விநியோக கருத்திட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இது ஒரு மாவட்டத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்த முறைப்பாடு அல்ல என்பன ஈண்டு குறிப்பிட்டாதல் வேண்டும்.

தென் மாகாணம்
காலி மாவட்டம்.

322. தென் மாகாண சபையில் பிரதான பதவியொன்றை வகிக்கின்ற அலுவலரொருவரினால் அம்மாகாண சபைக்கு போட்டியிடுகின்ற ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி நிச்சயமாக வெற்றிபெறுமென 2014.02.11 குறிப்பிட்டு வெளியிடப்பட்ட பத்திரிகை கலந்துரையாடல் தொடர்பாக சில தரப்புக்களால் தேர்தல்கள் ஆணையாளருக்கு விடயங்கள் முன்வைக்கப்பட்டதோடு, தேர்தல் சந்தர்ப்பமொன்றில் அவ்வாறான கருத்துக்கள் மூலம் தேர்தல் செயற்பாடுகளில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாக 2014.02.22 ஆம் திகதி அவ்வலுவலருக்கு அறிவித்து தேர்தல்கள் ஆணையாளர் அது தொடர்பாக கடுமையாக எச்சரிக்கை செய்தார்.

323. 2014.01.30 ஆம் திகதி மௌபிம பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த ஓர் அறிக்கையில், இம்முறை மாகாண சபைத் தேர்தலில் தென் மாகாண சபைக்காக போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளரின் முன்னைய சேவைக் காலத்தினுள் மேற்கொண்டுள்ள சேவையை பாராட்டுவதற்கும் மற்றும் வேட்பாளரின் வேட்பாண்மையை ஊக்குவிப்பதற்கும் 2014.01.11 ஆம் திகதி நடாத்தப்பட்ட சந்திப்பொன்றின் போது அரச பதவிநிலைத்தரத்தின் அலுவலர் ஒருவரால் குறித்தவரின் வேட்பாண்மை ஊக்குவிக்கப்படுவதற்கு காரணமான கருத்தொன்றை வெளியிடுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் குறித்த அலுவலரிடம் விடயங்களை விசாரித்துப்பார்த்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொது நிருவாக அமைச்சின் செயலாளருக்கு அறிவிப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

324. பொது மக்களுக்கு திரையரங்குகளில் திரைப்படங்களை காட்சிப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதன் நடுவில் இத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வேட்பாண்மை ஊக்குவிக்கப்படுகின்ற விதத்திலான அறிவித்தல்கள் பிரச்சாரம் செய்யப்படுவதாக தேர்தல்கள் திணைக்களத்திற்கு அறியக் கிடைத்தது. இவ்வாறான விளம்பரங்கள் பணம் செலுத்தப்பட்டு அல்லது செலுத்தப்படாமல் திரையரங்குகளில் காட்சிப்படுத்தக் கூடாதென அனைத்து திரைப்பட சங்கங்களுக்கும், திரையரங்குகளின் உரிமையாளர்களுக்கும் அறிவிக்குமாறு தேசிய திரைப்படக் கூட்டுத்தானத்தின் தலைவருக்கு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் 2014.01.31 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது,

325. அதேபோன்று இம்முறை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வேட்பாண்மையை ஊக்குவிப்பதற்காக தேர்தல் விளம்பரங்கள், டிஜிட்டல் அறிவித்தல் பலகைகள் மூலம் பிரச்சாரம் செய்யப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அவ்வாறான டிஜிட்டல் அறிவித்தல் பலகைகள் மூலம் வேட்பாண்மை ஊக்குவிப்புக்கு உரிய விளம்பரங்களை வெளியிட வேண்டாமென பொலிசார் ஊடாக அந்த நிறுவனங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

326. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்கு, பாராளுமன்றத்தினால் வழங்கப்படுகின்ற இலவச அஞ்சல் வசதிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்காக பயன்படுத்தப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளருக்கு தெரிய வந்த பின்னர் அஞ்சல் மா அதிபருக்கு அது தொடர்பாக எடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள் 2014.02.21 ஆம் திகதி முன்மொழியப்பட்டது. உத்தியோகபூர்வ முத்திரையின்றி அவ்வாறான கடிதங்களை அஞ்சலுக்குக் கையேற்காமலிருத்தல், தேர்தல் காலப்பகுதியினுள் சட்டரீதியாக சமர்ப்பிக்கப்படுகின்ற கடிதங்களை மொத்தமாகக் கையேற்றல் பிரதான அஞ்சல் அலுவலகங்களில் மாத்திரம் மேற்கொள்ளல் மற்றும் அவ்வாறு கையேற்கப்படுகின்ற கடிதங்கள் தொடர்பாக குறித்த பாராளுமன்ற உறுப்பினருக்கு, அவரல்லாத போது அவரின் அதிகாரியொருவரிடம் கடிதங்களை அஞ்சலுக்காக கையேற்க நடவடிக்கையெடுத்தல் போன்ற முன்மொழிவுகள் தேர்தல்கள் ஆணையாளரின் முன்மொழிவுகளில் உள்ளடக்கப்பட்டது.

327. தோட்டத்துறை அரச அதிகாரம் ஒன்றினால் காணிகளின் மண் மற்றும் நீர் பாதுகாப்பு அலுவல்களுக்காக சிறிய தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற 5000 ரூபா படியை வழங்கல், இம்முறை தென் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவரின் வேட்பாண்மை ஊக்குவிக்கப்படும் விதத்தில் மேற்கொள்ளப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது. வேட்பாளர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றின்றி இந்த படியை வழங்க நடவடிக்கையெடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய காலி, களுத்துறை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களின் பிரதேச முகாமையாளர்களுக்கு குறித்த அதிகார சபையின் தலைவர் அவர்களால் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

மாத்தறை மாவட்டம்

328. மாத்தறை மாவட்டத்திற்காக இம் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளரொருவர் அவர் தவிசாளர் பதவி வகித்த உள்ளூர் அதிகார சபையின் டிரக் வண்டியொன்றை அவரின் அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் நிறுத்தி வைத்திருந்த போது பொலிஸ் அலுவலர்களால் அவ்வாகனம் சட்டவிரோதமான விதத்தில் தேர்தல் பிரச்சார அலுவல்களுக்கு ஈடுபடுத்தப்பட்டமை காரணமாக கைப்பற்றப்பட்டது.

329. மாத்தறை மாவட்டத்தினுள் அமையப் பெற்றுள்ள பிரதேச சபையொன்றினால் 2014.02.20 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளருக்கு அந்த மாகாண சபைக்குரிய இரண்டு கெப் வண்டிகள் அச் சபையின் தவிசாளரினால் இம்முறை மாகாண சபைத் தேர்தலில் அரசியல் கட்சியொன்றில் இருந்து போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றமையினால் அந்த வாகனங்களை தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவல்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, அவ் வாகனங்களை அவ்வாறு பயன்படுத்திக் கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் குறித்த அலுவலர்களுக்கு 2014.02.25 ஆம் திகதி அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

330. தேர்தல் கண்காணிப்பு நிறுவனமொன்றாக தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பினால் 2014.02.25 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு சமர்ப்பித்துள்ள முறைப்பாட்டில், மாத்தறை மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரால் அமைச்சுக்கு சொந்தமான ஜீப் வண்டியொன்று அவரின் தேர்தல் பிரச்சார அலுவல்களுக்காக பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த வேட்பாளரின் மாத்தறை நூப்பே அக்குரஸ்ஸ வீதியில் அமையப் பெற்றுள்ள அவரின் அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் வேட்பாளரின் பிரச்சார விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருந்த ஜீப் வண்டி தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்களால் 2014.03.01 ஆம் திகதி மு.ப. 11.40 மணிக்கு சாரதி சகிதம் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த ஜீப் வண்டி கொழும்பில் அமையப்பெற்றுள்ள விவசாய அலுவல்கள் தொடர்பான ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சொந்தமானதென்பதோடு, பொலிசாரால் அந்த ஜீப் வண்டி 2014.03.03 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

331. பிரதான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வேட்பாளரொருவரால் மாத்தறை கடற்கரை வீதியில் அவரின் அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு அருகில் சட்டவிரோதமான முறையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த குறித்த வேட்பாளரின் பாரிய அளவுடைய உருவப்படம் 2014.03.28 ஆம் திகதி தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்களால் அகற்றுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அக்கடமைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வேட்பாளரின் ஆதரவாளர்கள் சிலர் மாத்தறை உதவித் தேர்தல்கள் அலுவலர்களை அச்சுறுத்தி கடமைக்கு தடையேற்படுத்தியுள்ளனர். இந்நிலைமையின் கீழ் தேர்தலோடு தொடர்புடைய கடமைகளிலிருந்து தேர்தல் அலுவலர்கள் விலகியிருக்க வேண்டிவருமென தேர்தல் ஆணையாளர் கட்சிச் செயலாளருக்கு அறிவித்து போட்டியிடுகின்ற கட்சிகளின் வேட்பாளர்களுடன் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டதோடு தேர்தலை பிற்போடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாமென எதிர்க்கட்சிகளின் வேட்பாளர்களும் கருத்து தெரிவித்தனர். எவ்வாறாயினும் இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கையெடுப்பதாக தேர்தல் விடயத்திற்கு பொறுப்பான சிரேட்ட பொலிஸ் மா அதிபரும் அத்தாட்சிப்படுத்தியன் பின்னர் தேர்தல் கடமைகளிலிருந்து விலகியிருக்க அலுவலர்கள் எடுத்திருந்த தீர்மானத்திற்கு நீண்ட தெளிவுபடுத்தல்களை தொடர்ந்து மாற்றிக் கொள்ள வேண்டிவந்தது. தேர்தல் அலுவல்களுக்கு தடங்கல்களை ஏற்படுத்தி அச்சுறுத்திய இரண்டு நபர்கள் சட்டத்தரணிகளுடாக பொலிஸில் சரணடைந்ததை தொடர்ந்து 2014.03.30 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாக தேர்தல் ஆணையாளருக்கு அறிக்கையிடப்பட்டது.

332. கண்டி மாவட்டத்தில் தெனியாய நகரத்திலும் தெனியாய பல்லேகம வீதியிலும் ஒரு கட்சியின் பிரச்சார பலகைகள், கொடிகள், பதாதைகள், என்பன வரையறையின்றி காட்சிப்படுத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பாக விசாரித்தறிந்து அவ் அனுமதியற்ற பிரச்சாரங்களை அகற்ற சென்ற பொலிசாரும் தேர்தல் அலுவலர்களும் பிரதேசத்தின் அரசியல் ஆதரவாளரொருவர் அச்சுறுத்தி சட்டத்தை வலுவாக்கம் செய்வதை தடுத்திருக்கின்றார்கள். இதன் பின்னர் மேலதிக பொலிசார்பால் தருவிக்கப்பட்ட போதிலும் அரசியல் பலத்தைக் காட்டியவர்கள் அவ்வனுமதியற்ற பிரச்சார பலகை, கொடிகள், பதாதைகளை அகற்ற இடமளிக்காதிருந்தனர். அடுத்தநாள் தேர்தல் அலுவலகர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய கணிசமானளவிலான உயர் பொலிஸ் படையினை பயன்படுத்தி அப்பிரதேசம் முழுமையாக சுத்தம் செய்யப்பட்டதோடு அரசியல் அதிகாரத்திலும் பார்க்க சட்டவாட்சி வலுமிக்கது என்பது வலியுறுத்தப்பட்டது.

அம்பாந்தோட்டை மாவட்டம்.

333. அம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளர்கள் சிலரின் வேட்பாண்மையை ஊக்குவிப்பதற்காக, அரச பிரிவின் நியதிச்சட்ட அதிகார சபையொன்றினால் அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்தில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்துவதை தேர்தல் முடிவடையும் வரை இடைநிறுத்துமாறு அவ்வதிகார சபைக்குரித்தான பொறியியல் சேவை மற்றும் பொதுவசதிகள் அமைச்சின் செயலாளருக்கு தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார். இருந்தபோதிலும் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தலை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டது. இருப்பினும், அதன் செயலாளர் அவர்கள், வீடு தேவையுடையவர்களுக்காக அரசியல் நோக்கமொன்றில் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படுவதாக அறிவித்துள்ளார். பின்னர் மீண்டும் இது தொடர்பாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றமையால் உரிய நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதை இடைநிறுத்துமாறு கட்டளையிடவேண்டிவந்தது.

334. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் அவரின் வேட்பாளர் இலக்கத்தை பிரச்சாரம் செய்யும் நோக்கில் பணப் பரிசில் வழங்கும் அறிவுப் புதிர் போட்டி ஒன்றுக்கான வினாக்களை அம் மாவட்டத்தில் வாக்காளர்கள் இடத்தில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்த வினாத் தொகுப்பின் அனைத்து வினாக்களுக்கும் விடையாக குறித்த வேட்பாளரின் வேறு பிரித்தறியும் இலக்கத்தை விடையாகப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த பிரச்சாரத்தை நிறுத்துமாறு குறித்த வேட்பாளருக்கு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் 2014.03.21 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

335. தென் மாகாண சபைக்கு அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து போட்டியிடுகின்ற அம்மாகாண சபையில் இதற்கு முன்னர் உறுப்பினரொருவராகச் செயற்பட்ட வேட்பாளரொருவர் அச்சபைக்குரிய மூன்று வாகனங்களை அவரின் தேர்தல் பிரச்சார அலுவல்களுக்குப் பயன்படுத்தியுள்ளதாகவும், அவை அம்மாகாண சபை கலைக்கப்படும் சந்தர்ப்பத்தில் மீளக் கையளிக்கப்படவில்லை எனவும் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய தேர்தல்கள் ஆணையாளர் தென்மாகாண சபை செயலாளரிடமும் மற்றும் குறித்த வேட்பாளரிடமும் உசாவப்பட்டது. அதில் ஒரு வாகனம் மித்தெனிய பொலிஸாரினால் சட்டவிரோத பிரச்சார அலுவல்களிலீடுபட்டிருந்த போது கைப்பற்றப்பட்டதாகவும் எஞ்சிய வாகனத்தைக் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு 2014.03.20 ஆம் திகதி அறிக்கையிடப்பட்டுள்ளது.

336. அம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியிலிருந்து போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் பிரதேசத்தின் கிராம அலுவலர்களை தமது வேட்பாண்மையை ஊக்குவிப்பதற்காக 2014.02.15 ஆம் திகதிய கூட்டமொன்றுக்கு அழைத்துள்ளதாக பெபரல் அமைப்பினால் அறிவிக்கப்பட்டிருந்தது. திஸ்ஸ மஹாராம பிரதேச செயலாளருக்கும் அது தொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் வழங்கப்பட்டதோடு, அக்கூட்டத்திற்கு கிராம அலுவலர்கள் கலந்து கொள்ளல் இடைநிறுத்தப்பட்டதாகவும் குறித்த பிரதேச செயலாளர் அவர்களால் 2014.03.20 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது.

337. அரச அதிகார சபையொன்றினால் அம்பாந்தோட்டை மாவட்டத்தினுள் வருமான மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றினால் அம் மாவட்டத்திற்காக போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவரின் வேட்பாண்மையை ஊக்குவிக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் 2014.02.15 ஆம் திகதி அதிகார சபை உட்படுகின்ற அமைச்சின் செயலாளருக்கு அந்த முறைப்பாடு அனுப்பி வைக்கப்பட்டு அது தொடர்பான விபரங்கள் சகிதம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்கமைய அக்கருத்திட்ட பணிகளை அம்பாந்தோட்டை மாவட்டத்தினுள் தேர்தல் நிறைவடையும் வரை நடைமுறைப்படுத்தாதிருக்க குறித்த அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டது.

ஊவா மாகாணம்
மொணராகலை மாவட்டம்.

338. நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (பெபரல் அமைப்பு) தேர்தல்கள் ஆணையாளருக்கு 2014.07.29 ஆம் திகதி அறிவித்துள்ளதாவது, தேர்தலின் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளரின் வேறுப்பிரித்தறியும் இலக்கத்தை பயன்படுத்தி வாக்காளர்களுக்கு பொருட்களைப் பகிர்வதற்கு புத்தள பிரதேச செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த செயற்பாட்டை இடைநிறுத்துமாறும் அப்பண்டங்களில் பிளாஸ்டிக் நீர்தாங்கிகளில் வேட்பாளரின் இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள முறையை தெளிவுபடுத்துவதற்கு குறித்த முறைப்பாட்டுடன் புகைப்படங்களும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறான பண்டங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டாமென தேர்தல்கள் ஆணையாளரால் குறித்த கட்சிக்கு அறிவிக்கப்பட்டது.

339. வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி வழங்குவதற்காக அமைச்சரொருவரின் தலைமையில் விவசாயிகள், வெல்லவாய மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்திற்கு 2014.08.18 ஆம் திகதி மற்றும் 19 ஆம் திகதிகளில் அழைக்கப்பட்டுள்ளதாக நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாட்டின் மூலம் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு 2014.08.18 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி தனியார் கம்பனியில் தலைவரிடம் எழுத்து மூலம் விடயங்களை கோரியதன் அடிப்படையில் அவ்வலுவல்கள் குறித்த அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற போதிலும் அச்சந்தர்ப்பத்திற்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லையென அறியக் கிடைத்தது.

340. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளரின் தேர்தல் பிரச்சார அலுவலகமொன்று வெல்லவாய கங்காராம விகாரைக்கு அருகில் அரச திணைக்களத்தின் கட்டிடமொன்றில் பேணப்பட்டு

வருவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய அது தொடர்பான அறிக்கையொன்றை பதுளை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. மேலும் அந்த சட்டவிரோத பிரச்சார அலுவலகம் 2014.08.20 ஆம் திகதி அகற்றுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

341. அமைச்சரொருவர், தமது அரசியல் அலுவல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய மக்களுக்கு பாராட்டு தெரிவிப்பதற்காக கூட்டமொன்றுக்கு அழைத்துள்ளதாகவும் அது தொடர்பாக வெல்லவாய பிரதேச மக்களை அறிவுறுத்துவதற்காக அரச அலுவலர்கள் நபர்கள் வதிந்துள்ள வீடுகளுக்கு அனுப்ப நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடொன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்த முறைப்பாடு அரச அலுவலக சிலரால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந்த செயற்பாட்டிற்கு தேர்தல்கள் காலப்பகுதியினுள் குறித்த அலுவலர்களை ஈடுபடுத்துவது பொருத்தமற்றதென்பதால், குறித்த அலுவல்களை தவிர்த்துக் கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் 2014.08.19 ஆம் திகதி குறித்த அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது.

342. நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு தடையான முறையற்ற செயற்பாடுகளை தவிர்ப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் 2014.09.12 ஆம் திகதி பொலிஸ் மா அதிபர், சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (தேர்தல்), சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (ஊவா, சப்ரகமுவ), மொணராகலை மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஆகியோருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. தனமல்வில, புத்தள, ஹுலந்தாவ, படல்கும்புர, மெதகம மற்றும் சியம்பலாண்டுவ ஆகிய நகரங்களில் 24 மணித்தியாலமும் வீதி தடைகளையிட்டு வாகனங்களைப் பரீட்சிக்கும் திட்டமொன்று மொணராகலை மாவட்டத்திலிருந்து வெளியிலுள்ள பொலிஸ் அலுவலர்களையீடுபடுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு அறிவித்தல் வழங்கப்பட்டது. சட்ட ரீதியாக தாபிக்கப்பட்டுள்ள அரசியல் கட்சி அலுவலகங்களை அழித்தல் மற்றும் அவற்றை சேதப்படுத்தல் தொடர்பாக அரசியல் கட்சிகள் சிலவற்றினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை இனால் அவற்றோடு தொடர்புடைய நபர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கையெடுப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

பதுளை மாவட்டம்.

343. மகியங்கனை மற்றும் கிராந்துருக்கோட்டை ஆகிய நகரங்களில் பதுளை மாவட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் போட்டியிடுகின்ற வேட்பாளரின் வேட்பாண்மையை ஊக்குவிப்பதற்காக டிஜிட்டல் அறிவித்தல் பலகை பயன்படுத்தப்பட்டு பிரச்சார அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் அவர்களால் 2014.08.14, 16, 20 ஆகிய தினங்களில் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இவற்றை அகற்றுவதற்கு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்ட பின்னரும் அவை அகற்றப்படாது தொடர்ந்தும் காட்சிப்படுத்தப்பட்டு வருவதாக அறியக்கிடைத்தது. இது தொடர்பில் ஊவா மாகாணத்தின் மற்றும் பொலிஸ் தலைமையகத்தின் பொலிஸ் அலுவலர்களுக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்ட பின்னர், அக்காட்சிப்படுத்தல்களை இடைநிறுத்துவதற்கு அவகாசம் கிடைத்தது.

344. பதுளை மாவட்ட சிறிய தோட்ட உரிமையாளர் சங்க அங்கத்தவர்களை அழைத்து 2014.09.14 மற்றும் 15 ஆகிய தினங்களில் தேயிலை தோட்டங்களின் மண் பாதுகாப்புக்காக உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியினால் 2014.09.11 ஆம் திகதியும் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பினால் 2014.09.12 ஆம் திகதியும் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்தல்கள் ஆணையாளர் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் மற்றும் குறித்த அமைச்சின் செயலாளருக்கு 2014.09.13 ஆம் திகதி அந்த அலுவல்களை தேர்தல் நிறைவடையும் வரை பிற்போடுவதற்கு அல்லது தேர்தல் தினத்திற்கு முன்னர் அவ்வலுவல்களை மேற்கொள்வதாயின், தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகள் அல்லது வேட்பாளர்களுக்கு ஊக்குவிப்பொன்று ஏற்படாத வகையில் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

345. ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கு

முன்னர் அதாவது, 2014.09.19 ஆம் திகதி ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் செயற்குழுவின் விஷேட கூட்டமொன்றை அம்மாகாணத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுவதாக 2014.09.18 ஆம் திகதி பெரல் அமைப்பினாலும் அதற்கடுத்த தினம் ஐக்கிய தேசியக் கட்சியினாலும் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர், குறித்த தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கி அக்கூட்டத்தை நடாத்துவது தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் இடைநிறுத்தப்பட்டது.

346. பிரதேச சபை உறுப்பினரொருவர் மற்றும் மற்றுமொரு முஸ்லிம் பக்தரொருவரால் பதுளை மாவட்டத்தின் வெலிமட, போகஹகும்புர ஆகிய பிரதேசங்களின் அமையப் பெற்றுள்ள முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் காசோலைகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பெரல் அமைப்பினால் 2014.09.19 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் பதுளை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரால் அப்பணி இடைநிறுத்தப்பட்டது.

347. தமது தேர்தல் பிரச்சாரங்களுக்காக வாக்காளர்களுக்கு ஊவா மாகாணத்தின் அரச நிறுவனங்கள் ஊடாக அரசியல் கட்சியொன்றினால் அரச பொருட்களைப் பகிர்ந்தளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றது. அவ்வாறான அலுவல்களை ஒழுங்கு செய்வதிலிருந்தும் மற்றும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் கலந்து கொள்வதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுமாறு அவ்வமைச்சின் அலுவலர்களுக்கு அறிவுறுத்த நடவடிக்கையெடுக்குமாறு பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உள்ளூராட்சி மாகாண சபைகள் ஆகிய அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு 2014.07.31 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

348. அரச பிரிவின் அதிகார சபையொன்றின் ஊழியர்கள் அதிகார சபையின் தலைவரின் உத்தரவின் அடிப்படையில் ஊவா மாகாண தேர்தல் பிரச்சார அலுவல்களில் ஈடுபடுவதாக ஜாதிக்க சேவா சங்கம் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினால் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கமைய 2014.09.04 மற்றும் 11 ஆகிய தினங்களில் அது தொடர்பாக குறித்த தலைவரிடம் தேர்தல்கள் ஆணையாளரால் விசாரிக்கப்பட்டது. எனினும் அவ்வாறு ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவில்லையென தலைவர் அவர்களால் அறிக்கையிடப்பட்டுள்ளது.

349. பதுளை மற்றும் மொணராகலை மாவட்டங்களில் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சியொன்றின் ஆதரவாளர்கள் மற்றும் வேட்பாளர்கள் தமது கட்சிக்கு எதிரான கட்சி ஆதரவாளர்களை தாக்குதல், அக்கட்சிகளின் தேர்தல் பிரச்சார அலுவலகங்களை அழித்தல் போன்ற செயல்களை மேற்கொள்வதாக தேர்தலுக்கு முன்னரான இறுதி இருவாரங்களினுள் கணிசமான எண்ணிக்கை முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப் பெற்றன. அவ்வாறே இலக்கத்தகடுகளற்ற டிபென்டர் ஜீப் வண்டிகள் பல ஒரே தடவையில் பயணம் செய்து பிரதேசத்தில் அச்சத்தை ஏற்படுத்துகின்ற விதத்தில் செயற்படுகின்ற தரப்பொன்று தொடர்பாகவும் அறிக்கையிடப்பட்டது. இவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொலிஸ் மா அதிபருக்கும், சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (தேர்தல்கள்) மற்றும் சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (ஊவா, சப்பிரகமுவ) ஆகியோருக்கு அனுப்பப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இவ்வாறான தீய செயல்களை தடுப்பதற்கு வெளி பொலிஸ் நிலையங்களிலிருந்து பொலிஸ் அலுவலர்கள் அவசியமெனில், அவ்வாறான பொலிஸ் அலுவலர்களையும் விஷேட அதிரடிப்படையினரையும் அழைக்குமாறு அறிவிக்கப்பட்டது.

350. 2014.09.20 ஆம் திகதி பண்டரவளை பொலிஸ் நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையில் பிரச்சினையொன்று ஏற்பட்டுள்ளது. குறித்த தினம் பண்டரவளை பிரதேச சபையின் உறுப்பினரொருவர் தனக்கு பண்டாரவளை நகராதிபதி உள்ளிட்ட பலர் தாக்குதல் நடாத்தியதாக முறைப்பாடு செய்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அன்றைய தினம் பண்டாரவளை மாநகர சபையின் முதல்வர் மற்றும் சிலர் பொலிசிற்கு வருகைதந்து பிரதேச சபை உறுப்பினருக்கு மற்றும் அவரின் ஆதரவாளர்களுக்கு ஏசி அச்சுறுத்தி தாக்குதல் நடாத்தியதாக முறைப்பாடு செய்த சந்தர்ப்பத்தின் போது இந்த மோதல் ஏற்பட்டுள்ளது. இது

தொடர்பாக அறிக்கையிடப்பட்டவுடன் உரிய பரிசீலனைகளை நடாத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

351. இம் முறை ஊவா மாகாண சபைத் தேர்தல் காலப்பகுதியின் போது மற்றும் வேட்புமனு கையேற்றல் காலப்பகுதி நிறைவடையும் தினத்தில் கட்சிகளின் ஆதவாளர்கள் மற்றும் வாகனங்களைப் பயன்படுத்தி ஊர்வலம் செல்வதற்கு வேட்பாளர்களுக்கும் அரசியல் கட்சி முகவர்களுக்கும் இடமளிக்க வேண்டாமென தேர்தல்கள் ஆணையாளரால் பொலிஸாருக்கு கடுமையான அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. முக்கியமாக இக்காலப்பகுதிக்குள் கா.பொ.த உயர்தர பரீட்சை நடாத்தப்படவிருக்கின்றமையினால் இவ்விதிமுறையை கடுமையாக செயற்படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டது. இருப்பினும், 2014.08.06 ஆம் திகதி மஹியங்கனை பதுளை வீதியில் ஊவா மாகாணத்தின் முன்னாள் அமைச்சரொருவரும் அவரின் சகோதரரொருவரும் சுவரொட்டிகள் மற்றும் புகைப்படங்களால் அலங்கரிக்கப்பட்ட 150 இற்கு கிட்டிய வாகனங்கள் சகிதம் ஊர்வலமாக பதுளை நோக்கி வருகை தந்துள்ளனர். இந்த வாகன ஊர்வலத்தை இடைநிறுத்துவதற்கு போதுமானளவு பொலிஸ் அலுவலர்கள் பணியிலீடுப்படுத்தப்படவில்லை. இந்த வாகன ஊர்வலம் சென்று கொண்டிருக்கும் போது அது தவறானதெனத் தெரிவித்து அந்த வாகன ஊர்வலத்தை காணொளிப்படுத்த நடவடிக்கை எடுத்த குருநாகல் மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட அலுவலர்களுக்கு இச் சட்டமுரணான வாகன பவனியில் பங்கேற்ற குழுவினரோடு அதனை வழிநடத்திய முன்னணி அரசியல் செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தி கடுமையான முறையில் பீதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். அலுவலர்களுக்கான தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளது. ஓர் அலுவலரின் கையடக்க தொலைபேசியை கூட அபகரித்துள்ளனர். அவ்வேட்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி செயலாளரோடு இதுபற்றி அறிவித்து அவர்களின் ஆதரவாளர்களை கட்டுப்படுத்தி கொள்ளுமாறு ஆணையாளரினால் வலியுறுத்தப்பட்டது. தமது ஆதரவாளர்களின் இச்சட்ட முரணான செயலை வன்மையாக கண்டிப்பதாக அச்செயலாளர் அறிவித்ததோடு இதுபற்றி கட்சியின் வருத்தத்தையும் தெரிவித்திருந்தார். இந்நிகழ்வின் பெயரில் பொலிஸ் அதிகாரிகளின் அக்கறையின்மை தொடர்பாக பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அலுவலர்கள் அறிவூட்டப்பட்டதோடு இச்சம்பவத்திற்கு எதிரான நபர்கள் மீது சட்டம் செயற்படுத்தப்படுமென பொலிஸ் மா அதிபர் தனிப்பட்ட முறையில் வாக்குறுதியளித்தார். இது தொடர்பாக மகியங்கனை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

ஊவா மாகாண சபைத் தேர்தல் காலப்பகுதியில் வாழ்வின் எழுச்சி திணைக்களம், கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் கீழ் பணியாற்றிய அலுவலர்கள் களக் கணக்கெடுப்பொன்றில் ஈடுபடுத்தப்படல்.

352. 2014 ஆகஸ்ட் மாதம் நடுப்பகுதியிலிருந்து மாகாண சபைத் தேர்தல் தினமான 2014.09.20 ஆம் திகதிக்கு அண்மித்த தினம் வரையான காலப்பகுதியினுள் இம்முறை மாகாண சபைத் தேர்தல் சந்தர்ப்பங்களின் போது படிப்படியாக அதிகரித்து வந்த அரச ஊழியர்கள் மற்றும் அரச சொத்துக்கள் தேர்தல் நோக்கங்களுக்காக அரசியல் கட்சிகளால் ஈடுபடுத்தல் மேலும் உயர்ந்து செல்லும் நிலைமையொன்றைக் காண முடிந்தது.

353. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட அலுவலர்கள் ஊவா மாகாண மாகாண சபைத் தேர்தல் தினத்திற்கு அண்மித்த தினங்களில் அம் மாகாணத்தின் வீடுகளுக்கு அனுப்பப்பட்டு குறைந்த வருமானம் பெறுவோர் தொடர்பாக கணக்கெடுப்பொன்றைச் செய்வதற்கு அத்திணைக்களத்தின் மாவட்ட அலுவலர்கள் ஒழுங்கு செய்துள்ளதாகவும் இதற்காக வெளிக்கள அலுவலர்களுக்கு மாவட்ட அலுவலர்களால் வாய்மொழி மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாகவும் இச் செயற்பாட்டினால் வாக்காளர்களுக்கு அழுத்தமொன்று ஏற்படுவதாகவும் அறிவித்து பல முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணையாளருக்கு கிடைக்கப் பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய இரு கட்சிகளும் நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தல் ஒன்றுக்கான மக்கள் செயற்பாடு நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றுக்கான மக்கள் அமைப்பு மற்றும் கண்காணிப்பு வலையமைப்பு ஆகிய அமைப்புக்களும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களின் சங்கமும், பட்டதாரிகளின் சங்கம்

என்பனவும் இந்த முறைப்பாடுகளை சமர்ப்பித்திருந்த அமைப்புக்களாகும்.

354. சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களின் சங்கத்தினால் 2014.08.27 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளருக்கு இது தொடர்பாக நீண்ட முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளின் ஆதரவோடு வாழ்வின் எழுச்சி மாவட்ட இணைப்பு அலுவலர்கள் மற்றும் அரசை பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசியல் கட்சிகளின் பக்கச்சார்பற்ற தொழிற்சங்கமான அகில இலங்கை விவசாய ஆராய்ச்சி உதவியார்களின் சங்கத்தின் முகவர்களால் ஒழுங்கு செய்யப்படுகின்ற, குறைந்த வருமானம்பெறுவோர் தொடர்பாக கணக்கெடுப்புக்காக, 08 மாவட்டங்களின் அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு கணக்கெடுப்பு என்ற பெயரில் செய்யப்படுகின்ற அரசியல் பிரச்சார நிகழ்ச்சித் திட்டமொன்றென அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக உரிய அலுவர்களை அறிவுறுத்துவதற்காக கொழும்பு, கம்பஹா, காலி மாத்தறை, புத்தளம், நுவரெலிய மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்படவுள்ள 08 மாவட்டங்கள் தொடர்பான விபரங்கள் அம்முறைப்பாட்டில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தன. இந்தக் கூட்டங்களை கண்காணிப்பதற்காக தேர்தல் திணைக்களத்தினால் அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அந்த கணக்காணிப்புக்களின் போது கீழேயுள்ள விடயங்கள் தெரியவந்தன.

I. குறித்த கூட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அலுவலர்கள் மற்றும் அவ்வமைச்சின் மாவட்ட அலுவலர்களின் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டதாக
II. அந்த கூட்டங்களில் மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் கலந்து கொண்டதாக,
III. பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டோரை அறிவுறுத்தியுள்ளதாக,
IV. அரச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக மக்களை அறிவுறுத்துவதற்காக இந்நடவடிக்கையெடுக்கப்பட்டதாகவும் அதனை ஊவா மாகாணத்தின் பிரதேசங்களிலிருந்து ஆரம்பிக்கப்பட்டதாக கூட்டத்தை ஒழுங்கு செய்தோர் தெரிவித்ததாக,
V. இலகு வங்கி வட்டி வீத முறை, வங்கிக் கடன் முறை, வெளிக்கள அலுவலர்களுக்கு அரசினால் வழங்கப்படும் மோட்டார் சைக்கிள் என்பன தொடர்பாக அறிவித்து அப்பணிகளுக்காக விண்ணப்பப்படிவங்களை கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அலுவலர்களைக் கொண்டு பூரணப்படுத்திக் கொள்ளல்.
VI. இப்பணிகளில் கலந்து கொண்ட அலுவலர்கள் பதுளை மற்றும் மொணராகலை மாவட்டங்களுக்குரிய கடமைகளுக்காக செப்தெம்பர் 06, 07 மற்றும் 08 ஆம் திகதிகளில் செல்ல வேண்டுமெனவும் அதற்காக பிரயாண வசதிகள், தங்குமிட வசதிகள், உணவு என்பன வழங்கப்படுமென கலந்து கொள்வோருக்கு அறிவிக்கப்பட்டதென,

355. தேர்தல்கள் திணைக்களத்தினால் மேற்குறித்த கூட்டம் கண்காணிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்த விடயங்கள் பாரதூரமானவையென்பதால் முறைப்பாடுகளின் பிரதிகள் சகிதம் பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு 2014.08.20 ஆம் திகதி கடிதமொன்றின் மூலம் கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் தேர்தல்கள் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டது.

அ. கட்டாய வெளிக்கள கடமையொன்றிலெனில், குறித்த அலுவலர்கள் ஊவா மாகாண தேர்தல் நடாத்தப்படுகின்ற காலப்பகுதியினுள் வீட்டுரிமையாளர்களை சந்திப்பதற்குச் செல்வது பொருத்தமற்றதென அறிவித்து,
ஆ. நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரப்பட்டது.

தேர்தல்கள் ஆணையாளரின் மேற்குறித்த கடிதத்திற்கு 2014.08.28 ஆம் திகதி பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பதில் கடிதத்தில் கீழேயுள்ள விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அ. பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சினால் ஏற்கனவே நாட்டின் அனைத்து வீடுகளும் உள்ளடங்கும் விதத்தில் பல கணக்கெடுப்புக்கள் நடாத்தப்பட்டு தேவையான தரவுகளும் தகவல்களும் சேகரிக்கப்பட்டுள்ளமையினால்,

இச் சந்தர்ப்பத்தில் நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் கணக்கெடுப்பு ஒன்றை நடாத்துவதற்கு திட்டமிடப்படவில்லையென,

ஆ. ஊவா மாகாணத்தின் சமுர்த்தி கணக்கெடுப்பு பணிகளுக்காக வேறு மாவட்டங்களில் இருந்து அலுவலர்களை அனுப்புவதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நடவடிக்கையெடுக்கப்படவில்லையென,

இ. சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்கள் அரசியல் உரிமையுள்ள அலுவலர்கள் என்ற அடிப்படையில் தொழிற்சங்க அமைப்புக்களின் கீழ் கடமை அலுவலொன்றில் தொடர்புபடாது அலுவலக நேரத்தின் பின்னர், அரசியல் அலுவல்களில் ஈடுபடுகின்ற அமைச்சின் கடமை ரீதியான நிருவாகத்திற்கப்பாற்பட்ட அலுவலொன்றென,

ஈ. பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஒரு போதும் மேற்குறித்த அலுவலர்களை அரசியல் அலுவல்களுக்காக ஈடுபடுத்திக் கொள்வதில்லையென,

உ. ஊவா மாகாணத்தில் நீதியான தேர்தலொன்றை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக,

356. இந்த சம்பவ செயலொழுங்குகளை ஆராயும் போது குறித்த அலுவலர் குழு அரசியல் உரிமையுள்ள தரப்பொன்றாகவிருந்த போதிலும், ஊவா மாகாணத்தின் வெளிக்கள அலுவல்களுக்கு அல்லது கண்காணிப்பு அலுவல்களுக்கு சில அரச அலுவலர்களின் ஆதரவு மற்றும் வழிகாட்டல்களுக்கமைய கலந்து கொண்டுள்ளார்களென்பது தெளிவாகின்றது.

357. ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரினால் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு மனுக்கள் சார்பாக, வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி அலுவலர்களும், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி அலுவலர்களும் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களும் ஊவா மாகாண சபைத் தேர்தலுக்காக பிரச்சார அலுவல்களிலீடுபடுத்திக் கொள்ளல் தொடர்பான முறைப்பாடு 2014.09.04 ஆம் திகதி விசாரிக்கப்பட்டது. அந்த இரண்டு முறைப்பாடுகளிலும் பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணையாளர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலர்கள் சிலர் பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர். குறித்த விசாரணையின் பின்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கீழே காட்டப்பட்டுள்ள தீர்மானங்களை எடுத்திருந்தது.

அ. தற்போது தேர்தல்கள் ஆணையாளர்கள் அவர்களால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தை பகிரங்கப்படுவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஆ. பதவிநிலை அலுவலர்களால் அரசியல் அலுவல்களில் (வாக்களித்தல் தவிர்ந்த) நேரடியாக அல்லது மறைமுகமாக ஈடுபடுவது தவறொன்றென அவர்களுக்கு அறிவிக்குமாறு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்தல் வேண்டும்.

இ. பதவிநிலையல்லாத அலுவலர்கள் தேர்தல் பிரச்சார அலுவல்களில் ஈடுபடுவதாயின், அதற்காக எவ்விதத்திலும் அரச வளங்கள், ஆதனங்கள் அல்லது வேறு படிகள் எதனையும் அதன் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காது இருத்தல் வேண்டும். இது தொடர்பில் குறித்த பதவி நிலை அலுவலர்களால் மேற்பார்வை செய்ய வேண்டும் என்பதோடு, அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்று காணப்படுமாயின், பரீட்சித்துப் பார்த்து அது தொடர்பில் நடவடிக்கையெடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் அவர்கள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

ஈ. காணப்படுகின்ற சட்டங்கள் மற்றும் தேர்தல் சட்டங்கள் மீறப்படாதவாறு தொழிற்சங்க அலுவல்களிலீடுபடுவதற்கு தொழிற்சங்கங்களுக்குக் காணப்படுகின்ற உரிமை மேற்படி தீர்மானங்கள் மூலம் கட்டுப்படுத்தப்படுவதாகக் கருதப்படவில்லை.

மொணராகலை மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு உதவித் தொகை தேர்தல் காலப்பகுதியின் போது வழங்குதல்

358. 2014.09.09 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு மொணராகலை மாவட்டச் செயலகத்தில், நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை

நடாத்துவதற்காக அரசியல் கட்சிகள், அரச அலுவலர்கள், தேர்தல்கள் கண்காணிப்பு நிறுவனங்களின் முகவர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் முகவர்களை அழைத்து அத்தரப்புக்களின் பொறுப்புக்கள் தொடர்பாக அவர்களை அறிவுறுத்துவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் தேர்தல்கள் ஆணையாளர், பதுளை மற்றும் மொணராகலை மாவட்டச் செயலாளர்கள், மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர், பேராசிரியர் பிரதீபா மகாநாம ஹேவா மற்றும் சட்டச் செயலாளர் திரு. நிமல் புஞ்சிஹேவா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் அரசியல் கட்சிகள், கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் முகவர்கள் ஆகியோர் மொணராகலை மாவட்டத்தில் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தேர்தல் தினத்திற்கு முன்னர் 2500 ரூபா நிதியுதவியொன்றை வழங்குவதற்கு அரசினால் நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருவதாக முறைப்பாடு செய்யப்பட்டது.

359. இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசியர் திரு. பிரதீபா மகாநாமஹேவா அவர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் அத்தினமே பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் செயலாளரிடமிருந்து தொலைபேசியின் மூலம் உண்மைத்தன்மையை அறிய முற்பட்டார். அதற்கு மேலதிகமாக 2014.09.09 ஆம் தினம் இம்முறைப்பாடு தொடர்பாகவும் 2014.09.06,07,08 ஆம் திகதிகளில் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் அமைச்சின் சிரேட்ட அலுவலர்கள் பெரும் தொகையினர் மொனராகலை மாவட்டத்தில் வீடுவீடாக சென்று தொழிலாளர் அமைப்புக்கள் ஊடாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுக்கின்ற அவ்வரச ஊழியர்கள் அனைவரையும் உட்படுத்தி இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்ப்புக்கள் காணப்படுவதாகவும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். எனவே வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் மக்களுக்காக இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதையும், ஊவா மாகாணத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் தேர்தலிற்கு பின்னர் நடாத்தும்படியும் அறிவுறுத்தப்பட்டது. அக்கடித்திற்க பதிலளிக்கும் வகையில் 2014.09.10 ஆம் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் தேர்தல் ஆணையாளருக்கு மேற்படி நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

360. ஊவா மாகாண சபை தேர்தல் காலத்தில் சில மாதங்கள் முழுவதும் மொனராகலை மாவட்டத்தில் நடைபெற்ற, வறட்சி காரணமாக நிலப் பயிர்ச்செய்கை கைவிடப்பட்டு செல்லுதல் காரணமாக, மேற்படி அழிவு சம்பந்தமாக விவசாயிகளுக்கு உதவிப்பணம் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக சில அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் பல்வேறு கருத்துகளை வெளியீட்டின் காரணமாக அந்த நடவடிக்கைகளின் காரணமாக தமக்கு ஏற்பட்ட அநியாயம் தொடர்பாக வெல்லவாய பிரதேசத்தில் நான்கு நபர்கள் மூலம் நீதிமன்றத்திற்கு அடிப்படை உரிமைகள் மனுவொன்று 2014.09.19 ஆம் திகதி முன்வைக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் வரட்சி காரணமாக மொனராகலை மாவட்டத்தின் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தை முன்னிட்டு சலுகைக் வழங்க பொருளாதார அலுவல்கள் அமைச்சு நடவடிக்கையெடுக்காமை காரணமாக அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதி தொடர்பாக அதில் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது.

361. அது தொடர்பாக 2014.09.12 ஆம் திகதி கௌரவ நீதிமன்றத்தினால் குறிப்பிடப்பட்ட உரிய நிவாரண நிதி வழங்குதல் (ஒரு நபருக்கு ரூ. 2500.00 வீதம்) வேலைத்திட்டம் மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள் மூலம் அரசியல்வாதி அல்லது அரசியல் கட்சியின் முகவர்களின் வருகையின்றி மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாகும்.

362. நீதிமன்றத்தினால் அனுமதி வழங்கப்பட்ட விதத்தில் மொனராகலை மாவட்டத்தின் வறட்சி மானிய நிவாரண தொகையை பகிர்ந்தளிப்பதற்காக மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட போதிலும் அந்த நன்கொடைகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில் இம்முறை மொனராகலை மாவட்டத்திலிருந்து மாகாண சபை தேர்தலுக்கு போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் வெற்றியையும் அவற்றின் வேட்பாளர்களின் வேட்பாண்மையையும் ஊக்குவிக்கும் விதத்திலான நடவடிக்கைகள் அந்நிதி பகிர்ந்தளிக்கும் சந்தர்ப்பங்களில் நிகழுமென முறைப்பாடுகள் தேர்தல் ஆணையாளருக்கு முன்வைக்கப்பட்டன. 2014.09.15 ஆம் திகதி, தேர்தல் கண்காணிப்பு அமைப்பு,

என்ற கண்காணிப்பு அமைப்பின் மொனராகலை, செவணகலை, கிரிஒப்பன்ஆர இடது கரையில் சிறி பியரதனாராமய விகாரையில் வறட்சி நிவாரண உதவி பகிர்ந்தளிப்பிற்கு இணையாக இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் ஊக்குவிப்பும் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தன. இந் நிகழ்வு தொடர்பாக 2014.09.16 ஆம் திகதி சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் அமைப்பிலும் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. 2014.09.16 ஆம் திகதியன்று மொனராகலை மாவட்டத்தின் சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர் பிரிவிலே 31 ஆம் சந்தியின் சனசமூக நிலையம், சியம்பலாண்டுவ வியன்கொல்ல ஆரண்ய ஆச்சிரமத்திற்கருகிலும் வறட்சி நிவாரண உதவி வழங்கப்பட மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரச்சார பிரசுரங்களை நபர்களிடையே பகிர்ந்தளித்த வண்ணம் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் ஈடுபட்டதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளால் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந் நிவாரண உதவியை பகிர்ந்தளிப்பதற்காக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த சிரேட்ட அலுவலர்கள் குழுவினருக்கோ தேர்தல்கள் திணைக்களத்தினால் ஈடுபடுத்தப்பட்ட விசேட அலுவலர் குழாத்திற்கோ இத்தகைய அரசியற் தலையீடுகள் அவதானிக்கப்பட்டதாக அறியக்கிடைக்கவில்லை.

363. இவ்வறட்சி நிவாரணமாக 2500 ரூபா வீதம் வழங்கப்பட்ட நிதித்தொகையை மொனராகலை மாவட்டத்திற்கு மாத்திரம் வழங்கியமையும் ஆகக்குறைந்தது அதற்கு அடுத்தமைந்துள்ள ஒரு பிரதேச செயலாளர் பிரிவிற்கேனும் இவ்வுதவியை வழங்காமையும் முக்கியமாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். அதே போன்று ஏனைய மாவட்டங்களுக்கு வறட்சி நிவாரண உதவியாக வழங்கப்பட்ட 5KG உருளைக்கிழங்கு பொதிகள் மொனராகலை மாவட்டத்திற்கு பின்னர் வழங்கப்பட்டுள்ளதோடு மொனராகலை மாவட்டத்திற்கு இவ்விசேட கரிசனை காட்டப்பட காரணம் தேர்தலில் பொது மக்களை கட்சி சார்பாக ஈர்த்தெடுக்கவென சுட்டிக்காட்டி முன்வைக்கப்பட்ட விடய முன்வைப்புக்களை புறந்தள்ள முடியாது.

364. கடந்த 2012-2014 ஆண்டு வரையிலான மாகாண சபை தேர்தல்களின் போது தேர்தல்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய தெரியவந்த முக்கிய விடயம் யாதெனில் தேர்தலோடு தொடர்புடைய தரப்பினருக்கும் தேர்தல் சட்டங்களை வலுவாக்கம் செய்கின்ற முழுமையான பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள சில பொலிஸ் அலுவலர்களும் தேர்தல்கள் சட்ட மீறல்களை எளிதாக எடைபோடும் தன்மையை கொண்டிருப்பதாகும். விசேடமாக அரச பலம் உரித்தான அரசாங்க கட்சியின் தலைவர்களும் தேர்தல் சட்ட மீறல்களை மேற்கொள்கின்ற தமது ஆதரவாளர்கள் அல்லது வேட்பாளர்கள் அரசியல் ஒழுக்க விழுமியங்களின்பால் ஆற்றுப்படுத்தப்பட ஊக்கம் காட்டாமையும் முறைப்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள் உருவான பிரதான காரணமாகவும் அமைந்தது என்பன எடுத்துக்கூற முடியும். இந்நிலைமையின் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்களை எதிர்பார்த்து தேர்தல் ஆணையாளரினால் தமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையை குறிப்பிட்டாதல் வேண்டும்.

I. தேர்தல் சட்டத்தை வலுவாக்கம் செய்யும் பொறுப்பு கையளிக்கப்பட்ட நிறுவனங்களினதும் அலுவலர்களினதும் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் பால் அவர்களின் கவனத்தை ஈர்த்தல்.
II. தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் பற்றி தாமதமின்றி கண்டறிதல் பொறிமுறையொன்றை வாக்காளர்களுக்கும், வேட்பாளர்களுக்கும், அரசியற் கட்சிகளுக்கும், சிவில் அமைப்புக்களுக்கும் தேர்தல் செயன்முறை தொடர்பாக ஊக்குவிப்பு ஒன்றையும் நம்பிக்கையொன்றையும் ஏற்படுத்துவதனூ டாக நீதியான தேர்தலுக்கு தேவையான பின்புலத்தை உருவாக்கல்.
III. தேர்தல் சட்ட வலுவாக்கத்தின் ஊடாக தேர்தலின் போட்டியிட முன்வந்த அனைத்து அரசியற் கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கும் சட்ட உதவியை நியாயமான முறையில் வழங்குவதனூடாக தேர்தலொன்றில் குறித்த தரப்பினருக்கு சம பலத்துடன் போட்டியிட சந்தர்ப்பங்கள் வழங்கல்.

365. தேர்தல் காலமொன்று என்பது வேட்புமனு தாக்கல் செய்யும் சந்தர்ப்பத்திலிருந்து தேர்தல்கள் முடிவடையும் வரையிலான

முடியாது. இது தொடர்பாக தேர்தலின் போது அரசாங்க சொத்துக்களுக்கு பொறுப்பாகவுள்ள அனைத்து தரப்பினரையும் அறிவூட்ட தேர்தல்கள் ஆணையாளர் நடவடிக்கையெடுத்திருந்த போதிலும் அது தொடர்பாக அக்கறை காட்டாத பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட முரணான செயற்பாடுகள், உறுதிப்படுத்தப்பட்ட விதம் மேலே காட்டப்பட்டுள்ளது. இத்தகைய நடத்தைகளை மேற்கொள்ளாமை உரிய தரப்பினரின் பொறுப்பு என்பதோடு அவற்றை தடுத்தல், சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரிகளின் பொறுப்பாகும்.

பின்னர் உட்சேர்க்கப்பட்டது

270A. 2013 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்காக அமைச்சர் ஒருவரின் தலைமையில் பெருந்தொகையான ஆதரவாளர்கள் குழுவொன்று நுவரெலியா பொதுச்சந்தைக்கு கொடிகள், பதாகைகள் என்பவற்றை ஏந்தியவாறு வந்து கூக்குரலிட்ட வண்ணம் துண்டுப் பிரசுரங்களைப் பகிர்ந்தளித்தவாறு முறையற்ற விதத்தில் மக்களை ஒன்று கூட்டியும் தேர்தல் காலப்பகுதிக்குள் ஊர்வலங்கள் நடாத்தப்படுதலென்ற தவறை இழைத்தவாறு ஊர்வலமொன்றை நடாத்துகையில் களுத்துறை பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், நுவரெலியா உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோர் இச்செயற்பாட்டின் தவறினை சுட்டிக்காட்டி ஊர்வலத்தை நிறுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கிய பொழுது அவ்வலுவலர்களைத் தாக்க முற்பட்டுள்ளனர். இந்நிகழ்வு தேர்தல்கள் செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர், பொலிசாருக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக, நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்ததோடு, அன்றிரவு ஆணையாளர் உள்ளிட்ட ஒரு குழுவினர் நுவரெலியா தேர்தல் அலுவலகத்திற்குச் சென்று இத்தகைய நிகழ்வொன்றைத் தடுக்கும் பொறுப்பு பொலீசாரைச் சாருமெனவும், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாவிடில் மாவட்டத்தின் தேர்தலை ஒத்திவைக்க வேண்டி வருமெனவும், அவ்வாறு நிகழுமாயின் அதற்கான பொறுப்பை குறித்த அரசியல்வாதியும், பாதுகாப்பு பொலீஸ் அலுவலர்களும் வகிக்க வேண்டுமெனவும் பொலிஸாருக்கும், அரசியல் செயற்பாட்டாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நுவரெலியா மாவட்டத்தில் இத்தகைய நிலைமைகளை கணிசமானளவில் கட்டுப்படுத்த முடியுமாயிற்று

284A. 2013 ஆம் ஆண்டில் வடமாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதுடன் தொடர்புடைய தேர்தல் காலப்பகுதிக்குள் வடமாகாணத்தில் பாரியளவிலான பாதுகாப்பு நடைமுறையொன்று அமுல்படுத்தப்பட்டிருந்த போது எதிர்க் கட்சி வேட்பாளர்களுக்கு ஆயுதமேந்திய இனந்தெரியாத குழுவினர்களினால் அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் அறிக்கையிடப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்ட பெண் வேட்பாளர் ஒருவரின் வீட்டுக்கு இரவில் அத்துமீறிப் பிரவேசித்த இனந்தெரியாத ஆயுதக்குழுவொன்று வன்முறை ரீதியாக நடந்துகொண்டு அவரையும் அவரது குடும்பத்தினரையும் அச்சுறுத்தியமையை விஷேடமாக ஈண்டு குறிப்பிட்டாதல் வேண்டும். இந்நிகழ்வு அறிக்கையிடப்பட்டவுடன் வட மாகாணத்தின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் அவ்வீட்டிற்குச் சென்று அந்நிகழ்வு தொடர்பாக அவதானித்து, தேர்தல் ஆணையாளருக்கு அறிக்கையிட்டதைத் தொடர்ந்து, மீண்டும் இத்தகைய நிலைமையொன்று ஏற்படுமாயின் தேர்தலை ஒத்திவைக்க வேண்டி வருமென்ற அறிவித்தலொன்றை விடுக்குமாறு வடமாகாணத்தின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன, அதற்கமைய, அவ்வறிவித்தல் வெளியிடப்பட்டமை பெரிதும் பயனுறுதி வாய்ந்த ஒன்றாக விளங்கியதோடு, அதன் காரணமாக, அத்தகைய அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் அதன்பின்னர் நிகழவில்லை. இதுதொடர்பாக பொலிசாரினால் விசாரணை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் உரிய வன்முறைக் கும்பல் தொடர்பான தகவல்கள் வெளியானதாக தெரிந்து கொள்ள முடியவில்லை.

342A. 2014 ஆம் ஆண்டில் ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல் காலப்பகுதிக்குள் மொணராகலை மாவட்டத்தில் தேர்தல் சட்ட மீறல்கள், எதிர்க் கட்சி வேட்பாளர்களின் தேர்தல் அலுவலகங்களை சேதப்படுத்துதல் என்பன தொடர்பாக பெருமளவில் அறிக்கையிடப்பட்டதோடு, இந்நிலைமைகளைத் தடுப்பதற்காக தேர்தல்கள் ஆணையாளர், பொலிஸ்மா அதிபர் மற்றும் தேர்தல் விடயத்திற்குப் பொறுப்பான சிரேட்ட பொலிஸ்மா அதிபர் ஆகியோர் பல்வேறு சந்தர்ப்பங்களில் மொனராகலை மாவட்டத்தில் கண்காணிப்பு விஜயங்களை மேற்கொண்டு, நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர், இவ்வறிவுறுத்தல்களை இணைப்புச் செய்த மொணராகலை உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதேச அரசியல்வாதியொருவரின் கொலை அச்சுறுத்தல்களை எதிர்நோக்க வேண்டி வந்ததோடு, ஒரு பிரதேச அரசியல்வாதியும் அவரது சகாக்களும் உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் உத்தியோகபூர்வ விடுதிக்குச் சென்று உரிய சட்ட மீறல்களைத் தடுக்க முயலக் கூடாதென குடும்ப அங்கத்தினர்களுக்கு கொலைஅ ச்சுறுத்தலை விடுத்துள்ளனர். ஆதலால் அவருக்கும் இல்லத்திற்கும் பாதுகாப்பினைப் பலப்படுத்தும் விசேட செயற்றிட்டமொன்றை செயற்படுத்த வேண்டி நேரிட்டது.

VIII ஆம் பகுதி

வட மாகாண தேர்தல் பணிகள் ஒழுங்கமைப்பு

366. வட மாகாணத்தில் 2013.09.21 ஆம் திகதி நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல் அம் மாகாணத்தில் முதல் தடவையாக நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலாகும். 1988 ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு இணைப்பின் மூலமாக மாகாண சபைக்காக வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களினதும் பிரதிநிதிகளை தெரிவு செய்வதில் காணப்பட்ட சிக்கல் நிலைமை காரணமாக 1988 இல் வடமாகாண தேர்தல்கள் நடைபெறவில்லை. வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய நிருவாக மாவட்டங்கள் உள்ளடங்குகின்றன. தேர்தல் மாவட்டங்களாகக் கணிக்கும் போது, இலக்கம் 10 யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நிருவாக மாவட்டங்களும், இலக்கம் 11 வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய நிருவாக மாவட்டங்களும் உள்ளடக்கப்படுகின்றன. பாராளுமன்றத் தேர்தலின் போது யாழ்ப்பாணம் அரச அதிபரும், வவுனியா அரச அதிபரும் முறையே இலக்கம் 10, இலக்கம் 11 ஆகிய தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களாகக் கடமையாற்றினர். எனினும் கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது வேட்பு மனுத் தாக்கல் அறிவித்தலின் பிரகாரம், வட மாகாண சபைக்குரிய ஐந்து நிர்வாக மாவட்டங்களிலும் குறித்த அரச அதிபர்கள் / மாவட்டச் செயலாளர்கள் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர்களாகக் கடமையாற்றினர்.

367. கடந்த 30 வருட காலத்தின் பின்னர் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி நடாத்தப்பட்ட வட மாகாண சபைத் தேர்தலானது, வட மாகாண சபையின் அனைத்துத் தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடவிருந்த அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மிகவும் குறிப்பிட்டுக் கூறக் கூடிய தேர்தலாக அமைந்திருந்தது. விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் செயற்பாட்டில் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் (Liberation Tigers of Tamil Eelam - L.T.T.E.) மேற்கொள்ளப்பட்டிருந்த பயங்கரவாதச் செயல்களை 2009 ஆம் ஆண்டில் அரச இராணுவத்தினரால் முடிவுக்குக் கொண்டு வந்தமை காரணமாக, மாகாண ரீதியில் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் ஜனநாயகப் பாதைக்கு இட்டுச் செல்லப்பட்டனர். அம்மக்களது நம்பிக்கையையும், அபிலாஷை களையும் நிறைவேற்றும் வகையில் தேர்தல் ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக தேர்தல் திணைக்களத்திற்கும், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் மிகவும் சவால் மிக்கதொரு சந்தர்ப்பமாக அமைந்திருந்தது. எனவே குறித்த நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளிப்பது சிறந்ததெனக் கருதப்பட்டது.

368. 1980 ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் நடாத்தப்பட்ட விதத்தில் ஒரே நாளில் வட மாகாணத்தின் அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்குமான தேர்தல்களை நடாத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் வீணாகின. அம்மாகாணங்களில் இடம் பெற்ற பயங்கரவாதச் செயல்கள் காரணமாக சிவில் நிருவாகம் மற்றும் மக்களின் அன்றாட வாழ்வு பாதிக்கப்பட்டிருந்தமை இதற்குக் காரணமாக அமைந்திருந்தன. ஆகவே வட மாகாணத்தின் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களை ஏனைய மாகாணங்களில் தேர்தல்கள் நடாத்தப்படுகின்ற அதே நேரத்தில் நடாத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் மேற்குறிப்பிட்ட காரணங்களால் அவை பின்போடப்பட்டன. மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, உள்ளூர் அதிகார சபைகளின் பதவிக் காலத்தை நீடிப்பதற்காகவும், 2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38(3) ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த தேர்தலுக்கான தினத்தை உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களால் பின்போடப்பட்டன. அத்துடன் உள்ளூர் அதிகார சபைகள் சட்டத்தின் பிரகாரம், உள்ளூர் அதிகார சபைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களால் பதவிக் காலம் முடிவடைந்த உள்ளூர் அதிகார சபைகளின் பொறுப்புக்களை பிரதேச செயலாளர்களிடம் கையளித்தல் போன்ற நடவடிக்கைகள் காரணமாகவும் வட மாகாண உள்ளூர் அதிகார சபைகளுக்கான மக்கள் பிரதிநிதிளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல்கள் பின்போடப்பட்டன.

369. ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டின் 27 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்திய) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, தானாகவே இல்லாதொழிந்து போன மாகாண சபைகளாகிய வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் தேர்தலை நடாத்துவதற்கு உரிய தேர்தல் வேட்பு மனுக் கோரல்கள் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11 ஆந் திகதி கோரப்பட்ட போதும், 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி ஜனாதிபதி அவர்களால் விடுக்கப்பட்ட விசேட அறிவித்தல் காரணமாக குறித்த வேட்பு மனுக் கோரலுக்கான அறிவித்தல் ரத்துச் செய்யப்பட்டது. செயலிழந்த நிலையில் இருந்த மாகாண சபைகளை ஆரம்பத்தில் அமைக்கப்படவிருந்த சந்தர்ப்பத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளை ஒன்றிணைக்கும் தீர்மானங்கள் தொடர்பாக நடாத்தப்படவிருந்த மக்கள் தீர்ப்பு நடாத்தப்படாத காரணத்தினால், மனித உரிமை மீறல் இடம்பெற்றுள்ளதெனவும், குறித்த மாகாண சபைகளை ஒன்றிணைத்தல் சட்டபூர்வமற்றது எனவும் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், முறைப்பாட்டாளர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது என உயர்நீதி மன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன் பின்னர் 2008.05.10 ஆம் திகதி கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடாத்தப்பட்டதுடன், வட மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெறவில்லை. இவ்வாறு வட மாகாணத்திற்கான தேர்தல் நடாத்தப்படுவதன் மூலம் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புக்களை வட மாகாண மக்கள் வெகு காலமாக இழந்திருந்தனர்.

370. ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதாம் ஆண்டுகளின் பின்னர் இந்நாட்டில் பாராளுமன்றத் தேர்தல்கள், ஜனாதிபதித் தேர்தல்கள் ஆகியவை இடம்பெற்ற போதும் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கக்கூடிய தேர்தல் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் வாய்ப்புக்களையும், அதனைச் சுதந்திரமாக அனுபவிக்கும் உரிமைகளையும் வட மாகாண மக்கள் இழந்திருந்ததுடன், தமிழீழ விடுதலைப்புலிகளால் அதற்கான அனுமதியும் மறுக்கப்பட்ட நிலையில் இருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகள் காரணமாக தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட தேர்தல்களின் போது விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பயங்கரவாதச் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் விசேட வாக்களிப்பு நிலையங்களை அமைத்து பாதுகாப்புப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் தேர்தல்களை நடாத்துவதற்கு வட மாகாண நிருவாக மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். எனினும், வாக்களிப்பதற்காக வருகை தரும் வாக்காளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் அச்சுறுத்தல்கள் காரணமாகவும், அப்பிரதேசங்களின் பாதுகாப்பற்ற நிலைமையில் மக்கள் செயலற்றுப் போயிருந்தமையாலும் அரசியற் கட்சிகளுக்கு தமது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்பட்டன. தேசிய மட்டத்திலான சில தேர்தல்களின் போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுள் தற்காலிகமான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேச மக்கள் வாக்களிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதும் அவர்களுக்கு அதற்கான போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை. இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், வெளிநாட்டுப் பங்களிப்புக்களுடன் யுத்த நிறுத்தத்திற்கு உடன்பட்டிருந்த காலப்பகுதியில் அரச இராணுவத்தினரின் நிருவாகப் பிரதேசங்களுக்கும் விடுதலைப் புலிகளின் நிருவாகப் பிரதேசங்களுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு தேசிய ரீதியிலான தேர்தல்கள் நடாத்தப்பட்டன.

வாக்காளர் கணக்கெடுப்பு மற்றும் தேருநர் இடாப்புத் தயாரித்தல்

371. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த 30 வருட காலமாக இடம் பெற்ற யுத்த சூழ்நிலை மற்றும் பயங்கரவாதச் செயல்கள் காரணமாக அப்பிரதேசங்களில் சிவில் நிருவாகம் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அக்காலப் பகுதியில் வட மாகாணத்தின் நிருவாக மாவட்டங்களுக்குரிய அரச அதிபர்களதும் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற நிறுவனங்களதும் ஒத்துழைப்புடன் அவ்வாறான மக்களுக்கு அத்தியாவசிய உணவு மற்றும் தொடர்ச்சியான உதவிகள் ஆகியவற்றை வழங்குதல் போன்ற சிவில் நடவடிக்கைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான சூழ்நிலைகளில் தமது இருப்பிடங்களை விட்டு தற்காலிகமாக வேறிடங்களுக்குச் சென்று தங்கியிருக்க வேண்டிய நிலைமை அவர்களுக்கு

உருவாகியிருந்தது. இவ்வாறான நிலைமையில் வருடாந்தம் வீடு வீடாகச் சென்று நடாத்தப்படுகின்ற வாக்காளர் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிரமமாக இருந்துள்ளன. ஆகவே அவ்வாறான பிரதேசங்களில் வாழும் மக்களை அவர்களது முன்னைய வருட வாக்காளர் இடாப்பில் உள்ளவாறே அடுத்து வரும் வருடத்திற்காகவும் பதிவு செய்ய வேண்டியிருந்தமையால், அவ்வாறு வாக்காளர் இடாப்புக்கள் தயாரிக்கப்பட்டு தேர்தல் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்படும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. சிலவேளைகளில் வருடாந்த வாக்காளர் இடாப்புக்களை தற்காலப்படுத்தும் நடவடிக்கைகளின் போது நவம்பர்/டிசம்பர் மாதங்களில் சுமார் 28 நாட்களுக்குள் மிகச் சிறியளவில் கிடைக்கப் பெறும் உரிமை கோரல் விண்ணப்பங்கள் மூலம் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டு மேற்படி வாக்காளர் இடாப்பிற்கு உட்சேர்க்கப்பட்டன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட வாக்காளர் இடாப்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இறந்தவர்களின் பெயர்கள் மற்றும் வெளிநாடு சென்றவர்களின் பெயர்கள் ஆகியவையும் பட்டியலிலிருந்து நீக்கப்படாமல் உள்ளடக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருந்தன.

372. முப்படையினர் மற்றும் இலங்கை பொலிசார் ஆகியோர் இணைந்து பயங்கரவாதச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததன் காரணமாக படிப்படியாக இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் சாத்தியங்கள் காணப்பட்டன. இவற்றைக் கருத்திற் கொண்டு தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க, மாவட்டப் பதியும் அலுவலர்களால் வாக்காளர் இடாப்பினைப் பகுதி பகுதியாகவோ அல்லது வழமையான முறையிலோ தற்காலப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் இதுவரை இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் சில பிரதேசங்களில் வாக்காளர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளும், இடாப்புக்களைத் தற்காலப்படுத்தும் நடவடிக்கைகளும் இடம்பெறுவதில்லை. 2008 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளுக்குரிய வட மாகாணத்தின் வாக்காளர் இடாப்புக்களை நோக்குமிடத்து, இந்நிலைமையை அவதானிக்க முடியும். வட மாகாண யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதேசங்களில் வீடு வீடாகச் சென்று படிவங்கள் வழங்கப்பட்டு கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாது தயாரிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டிற்கான வாக்கெடுப்புப் பிரிவுகளுக்குரிய வாக்காளர் இடாப்புக்களில் (526) மேற்குறிப்பிட்ட நிலைமையை அவதானிக்கலாம். அதன் பின்னர் வருடந்தோறும் படிப்படியாக இந்நிலைமையில் முன்னேற்றங்கள் காணப்பட்டு 2013 ஆம் ஆண்டு வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டமையினால் 2013 ஆம் கணக்கெடுப்பில் தேர்தல் வட்டாரங்களின் எண்ணிக்கை 29 ஆல் குறைந்துள்ளது. கிழக்கு மாகாண திருகோணமலை மாவட்டத்தில் 2008 ஆம் ஆண்டில் 04 வாக்கெடுப்பு பிரிவுகளிலும், 2009 ஆம் ஆண்டில் 02 வாக்கெடுப்பு மாவட்டங்களிலும் வாக்காளர் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. சில வருடங்களுக்குப் பின்னர் குறித்த பிரதேசங்களில் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் முறைப்படி ஆரம்பிக்கப்பட்டன. வட மாகாணத்தில் 2008 ஆம் ஆண்டில் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் இன்றி பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 825,764 ஆக இருந்ததுடன், 2013 ஆம் ஆண்டில் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவ்வெண்ணிக்கை 39815 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுள் 38,865 பேர் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் வாழ்கின்ற மக்களாவர். இது பற்றிய அட்டவணை கீழே காட்டப்படுகின்றது.

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வீடு வீடாகச் சென்று வாக்காளர் கணக்கெடுப்பினை மேற்கொள்ளாது பதிவு செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்ட வாக்கெடுப்பு மாவட்டங்கள் மற்றும் வாக்காளர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம்.

நிருவாக மாவட்டம்	வருடம	மொத்த வாக்கெடுப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை	கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படாத வாக்கெடுப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை	கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படாது பதிவு செய்யப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை	ஒவ்வொரு வருடங்களிலும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படாது பதிவு செய்யப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை

யாழ்ப்பாணம்	2008	526	526	630548	827405
கிளிநொச்சி		95	95	90811	
மன்னார்		68	16	21044	
வவுனியா		91	15	15907	
முல்லைத்தீவு		51	50	67457	
திருகோணமலை*		278	04	1638	
நிருவாக மாவட்டம்	வருடம	மொத்த வாக்கெடுப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை கணக்கெடுப்பு	மேற்கொள்ளப்படாத வாக்கெடுப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை கணக்கெடுப்பு	மேற்கொள்ளப்படாது பதிவு செய்யப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை	ஒவ்வொரு வருடங்களிலும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படாது பதிவு செய்யப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை
யாழ்ப்பாணம்	2009	526	45	54977	261766
கிளிநொச்சி		95	95	90334	
மன்னார்		68	24	32433	
வவுனியா		91	15	15758	
முல்லைத்தீவு		50	49	67095	
திருகோணமலை*		278	02	1169	
யாழ்ப்பாணம்	2010	526	36	50448	85711
கிளிநொச்சி		95	07	2986	
மன்னார்		68	04	2073	
வவுனியா		91	02	3591	
முல்லைத்தீவு		50	17	26613	
யாழ்ப்பாணம்	2011	526	43	45518	59543
கிளிநொச்சி		95	03	1665	
மன்னார்		68	01	558	
முல்லைத்தீவு		50	10	11802	
யாழ்ப்பாணம்	2012	526	36	45766	50355
கிளிநொச்சி		95	3	1682	
மன்னார்		91	1	594	
முல்லைத்தீவு		50	3	2313	
யாழ்ப்பாணம்	2013	526	29	38865	39815
கிளிநொச்சி		95	1	477	
மன்னார்		70	1	473	

*கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட நிர்வாக மாவட்டம்

வடமாகாணத்தின் வருடாந்த தேருநர் இடாப்பை நிகழ்நிலைப்படுத்துவதற்கும் மற்றும் தேர்தல் அலுவல்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட விசேட வழிமுறைகள்

373. வட மாகாணத்தில் இரண்டாயிரத்தொன்பதாம் (2009) ஆம் ஆண்டில் இருந்து எந்தவொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள முடியாமற் போன, தகைமை பெற்ற வாக்காளர்களைப் பதிவு செய்வதற்காக 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க வாக்காளர் பதிவு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அத்தகைய வாக்காளர்களை உள்ளடக்கிய குறைநிரப்பு வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்பட்டது.

374. அரச முப்படைகள் மற்றும் இலங்கைப் பொலிசார் ஆகியோர் இணைந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம் பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக மேற்கொண்ட முயற்சிகளின் பின்னர், 2009 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இருந்து வட மாகாணத்தில் இடம் பெயர்ந்த மக்கள் தற்காலிக வசிப்பிடங்களிலும், வவுனியா மாவட்டத்தில் அரசினால் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களிலும் தங்கியிருந்தனர். வட மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அரச இராணுவத்தினர் ஆகியோருக்கிடையில் ஏற்பட்ட யுத்தங்கள் காரணமாக பல பிரதேசங்களிலும் புதைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், வட மாகாணத்தில் படிப்படியாக பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டன. அத்தோடு இடம் பெயர்ந்த மக்களும் படிப்படியாக தமது வசிப்பிடங்களுக்குச் செல்ல ஆரம்பித்தனர். அரசாங்கத்தின் ஆலோசனைகளின் பிரகாரம், அரச அதிபர்களால் மேற்குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நடவடிக்கைகளின் போது பாதுகாப்புப் பிரிவினருக்கு சிவில் நிர்வாக அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் ஆகியவை ஒத்துழைப்புக்களை வழங்கினர்.

375. வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது, முதலில் அவர்களை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அமைக்கப்பட்ட தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். பின்னர் படிப்படியாக அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வாறு இடம் பெயர்ந்து வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் 1980 ஆம் ஆண்டுகளிலிருந்து இடம் பெயர்ந்தவர்களாக இருந்தமையால், அவர்களுள் 18 வயதினைப் பூர்த்தி செய்தவர்கள் ஒருபோதும் வாக்காளர் இடாப்புக்களில் தமது பெயர்களைப் பதிவு செய்யாதவர்களாகவே இருந்தனர். ஆகவே இடம் பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தும் நடவடிக்கைகளைக் கண்காணித்தவாறு குறித்த பிரதேச நிருவாகப் பிரிவினருடன் இணைந்து வாக்காளர் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை கிராம அலுவலர்கள் மூலம் செய்து கொள்ள வேண்டியிருந்தது. ஆகவே யாழ்ப்பாண மாவட்ட பதவி நிலை அலுவலர் ஒருவரின் மேற்பார்வையின்

கீழ், கிளிநொச்சி மாவட்ட செயலக வளவில் தற்காலிகமான வடமேல் தேர்தல் அலுவலகமும், வவுனியா மாவட்டத் தேர்தல் அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு தேர்தல் அலுவலகமும் நிறுவப்பட்டு அவ்வலுவலகங்களுக்கான தற்காலிகப் பணியாட்களும் நியமிக்கப்பட்டனர். இவ்வாறு அமைக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் மூலம் 2009 ஆம் ஆண்டில் வாக்காளர் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு முன்னர் அப்பிரதேசங்களுக்கென ஒதுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் அமைந்திருக்கவில்லை.

376. வட மாகாண நிருவாக மாவட்டங்களில் இருந்த கிராம அலுவலர்கள் உட்பட அரச அலுவலர்கள் பலரும் யுத்த சூழ்நிலை காரணமாக மேற்குறித்தவாறு இடம் பெயர்ந்த மக்களாக இருந்தனர். மாவட்ட செயலகம் உட்பட பெரும்பாலான அரச அலுவலகங்கள் தற்காலிகமாக வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருந்த காரணத்தினால், வாக்காளர் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தன. சிவில் அமைப்புக்கள், பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோர் இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகளில் முக்கிய கவனம் செலுத்தியிருந்தமையே அவற்றிற்கு முக்கிய காரணங்களாக அமைந்திருந்தன. ஆகவே அவ்வாறான நடவடிக்கைகள் பூர்த்தியாகும் வரை வாக்காளர் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதில் சிக்கல்கள் காணப்பட்டன. வவுனியா நகரில் இடம் பெயர்ந்த மக்களின் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டிருந்த நலன்புரி நிலையத்திற்கு அருகாமையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான தற்காலிக மாவட்டச் செயலகங்கள் அமைக்கப்பட்டன. எனவே இந்த இரு மாவட்டங்களுக்கும் உரிய தேர்தல் அலுவலகங்கள் மற்றும் அம்மாவட்டங்களுக்குரிய மாவட்ட செயலகங்கள் யாவும் ஒரே இடத்தில் அமைக்கப்படும் வரை மேற்குறித்த கணக்கெடுப்பு நடவடிக்கைகளைத் தாமதப்படுத்த வேண்டியிருந்தன. இம்மாவட்டத்தில் உள்ள கிராம அலுவலர்களில் சிலர் வாக்காளர் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான போதிய அனுபவத்தைப் பெறாதவர்களாக இருந்தமை மற்றுமொரு காரணமாக அமைந்திருந்தது. விசேடமாக மீள்குடியமர்த்தும் குடும்பங்கள் தொடர்பாக உள்ள சிக்கல்களை இனங்கண்டு குடும்ப அங்கத்தவர்கள் யாவரையும் ஒரே இடத்தில் பதிவு செய்து அப்பெயர்களைச் சிபாரிசு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கிராம அலுவலர்களுக்கு மிகவும் சிரமமான காரியமாக அமைந்திருந்தது. இதனால் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான வாக்காளர் கணக்கெடுப்பு கடமைகளில் கவனஞ் செலுத்தி அவற்றை நிறைவேற்றுவதற்காக யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. 2013 ஆம் ஆண்டில் இவ்விரு மாவட்டங்களுக்கான தேர்தல் அலுவலகங்களை நிரந்தரமான கட்டிடத்தில் அமைத்துக் கொள்வதற்காகவும், இலங்கை நிருவாக சேவை தரம் 111 இன் அலுவலர்களை நியமித்து, அவர்களுக்கான பணிக்குழுவை நியமிப்பதற்காகவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் இப்பணிக்குழுவினரை நியமிப்பதற்கான அங்கீகாரத்தையும் பெற வேண்டியிருந்தது.

377. வட மாகாண சபைத் தேர்தல்களுக்காகத் தயார்படுத்தும் நடவடிக்கைகளின் போது, வட மாகாண மக்களுக்கு தமது வாக்கினைப் பிரயோகிக்கும் முறை பற்றி தெளிவு படுத்தும் வகையிலான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல் வேண்டுமென தேர்தலில் போட்டியிடும் அரசியற் கட்சி அபேட்சகர்கள் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அத்துடன் மத்திய மாகாணத்தில் மலையகத் தோட்டப்பகுதிகளில் வாழும் தோட்ட மக்களுக்கும் மேற்குறிப்பிட்டவாறு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட வேண்டுமென அரசியற் கட்சிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஏற்கெனவே தேர்தல் ஆணையாளரால் புதினப் பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் பொது மக்களுக்கான தெளிவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் மேற்குறிப்பிட்டவாறான தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. விசேடமாக வாக்காளர்கள் தவறான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளாதவாறும், அவர்களுக்கு எதுவித தாக்கங்களை ஏற்படாதவாறும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன், தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்களாலும், உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களாலும் மேற்குறிப்பிட்டவாறு

நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது.

378. மேற்குறிப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக வட மாகாண மக்களின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன், மாவட்டத் தேர்தல் அலுவலகங்கள் மூலம் பொதுமக்கள் இலகுவாகத் தமது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அத்துடன் தேர்தல்கள் ஆணையாளருக்கு மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு கடமைகளை நிறைவேற்றுவதற்கும் இலகுவாக அமைந்திருந்தன. மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் காரணமாக, வட மாகாணத்திற்குரிய தேர்தல்

திணைக்கள நடவடிக்கைகளை மேலும் சிறப்பாகவும், துரிதமாகவும் நிறைவேற்ற முடியும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

IX ஆம் பகுதி

வாக்கெடுப்பு

379. இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் அமைக்கப்பட்ட மேற்கு, மத்திய, தெற்கு, வடக்கு, கிழக்கு, வட மத்திய, வடமேல், சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களுக்கான தேர்தல்கள் இம்முறை நான்கு கட்டங்களாக நடாத்தப்பட்டன. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ஒவ்வொரு கட்டத்திலும் முறையே மூன்று, இரண்டு, அல்லது ஒன்று என்னும் அடிப்படையில் தேர்தல்கள் நடாத்தப்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டில் இறுதியாக நடாத்தப்பட்ட தேர்தல் ஊவா மாகாணத்திற்கான மாகாண சபைத் தேர்தலாகும்.

380. தேர்தலுக்குப் பின்னர் நியமிக்கப்படும் மாகாண சபையின் பதவிக் காலம், குறித்த மாகாண சபையின் முதலாவது கூட்டத்தொடருக்காக நியமிக்கப்படும் திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை நடைமுறையிலிருக்கும். அத்துடன் அரசியமைப்பின் 154 (ஆ) (8) ஆ பிரிவின் பிரகாரம், ஆளுநரின் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்பாக தமது மாகாண சபையின் தவணை இறுதியை முடிவு செய்ய முடிவதுடன், 154 ஊ (2) இன் பிரகாரம், ஆளுநரால் தனது விருப்பத்தின் பேரில் செயற்படுத்தக்கூடிய விடயமாக அரசியலமைப்பின் கீழ் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையுமெனவும் கூறப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட மாகாண சபைகளுள் வட மாகாண சபைக்கான தேர்தல் அம்மாகாண சபை கலைக்கப்பட்டதன் விளைவாக அல்லாது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு, பின்னர் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நீதிமன்றச் செயற்பாடுகள் காரணமாகவே அம்மாகாண சபையில் தேர்தல் நடாத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதாகும். இம்மாகாணத்திற்கான தேர்தலை நடாத்துவதற்கு குறித்த வழக்குத் தீர்ப்பின் பின்னர் 2013.07.05 ஆம் திகதி கௌரவ ஜனாதிபதி அவர்களால் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

381. முதலில் கிழக்கு, வட மத்திய, சப்ரகமுவ மாகாணங்களுக்கான தேர்தல் 2012.09.08 ஆம் திகதியும், மத்திய, வடமேல். வடக்கு மாகாணங்களுக்கான தேர்தல் 2013.09.21 ஆம் திகதியும், மேல், தென் மாகாணங்களுக்கான தேர்தல் 2014.03.29 ஆம் திகதியும் நடாத்தப்பட்டன. இறுதியாக 2014.09.20 ஆம் திகதி ஊவா மாகாண சபைத் தேர்தலும் நடாத்தப்பட்டது. குறித்த மாகாண சபைத் தேர்தல்கள் மு.ப. 7.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை அவ்வவ் மாவட்டங்களின் வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெற்றதுடன், தேர்தல் நடவடிக்கைகள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டன.

382. மத்திய, வடமேல், வட மாகாண சபைகளுக்கான தேர்தல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 2013.09.13 ஆம் திகதி 04 விடயங்கள் தொடர்பாகக் குறிப்பிட்டு கடிதம் ஒன்று தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. தேர்தல்களில் மக்களது அடிப்படை உரிமையாகிய வாக்களிக்கும் உரிமை, மற்றும் ஏனைய மனித உரிமைகள் போன்றவற்றை கண்காணித்து தமது ஆணைக்குழு அலுவலர்கள் அவற்றிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் எனவும், அந்நடவடிக்கைகள் பற்றி குறித்த மாவட்டங்களின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவிக்குமாறும் மேலும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அக்கடிதத்தில் 2013.09.21 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தில் காங்கேசன்துறைக்கு அண்மித்த தீவுப்பகுதிகளில் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காகச் செல்வதற்கு இலங்கைக் கடற்படையினரின் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை வழங்குமாறும் குறிப்பிடப்பட்டிருந்தது. குறித்த வேண்டுகோள் தொடர்பாக தேர்தல் ஆணையாளரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வாக்கெடுப்புத் திகதிக்கு அண்மித்த தினங்களில் மாவட்டங்களில் ஆற்றப்பட்ட பணிகள்.

383. தேர்தல்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அரச நிறுவனங்கள் அதிகமாக உள்ள கொழும்பு, கோட்டே, கடுவெல ஆகிய மாநகர சபைப் பிரதேசங்களில் உள்ள அரச அலுவலர்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்குரிய வாகனங்கள் என்பவற்றைத்

தெரிவு செய்து அது பற்றிய தகவல்களை அனுப்பி வைக்குமாறு தேர்தல்கள் திணைக்களத்தினால் கோரப்பட்டது. அத்தகவல்களின் அடிப்படையில் தேர்தல்களுக்கான வாக்கெண்ணல் மற்றும் வாக்களிப்பு கடமைகளுக்கான அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் நடவடிக்கைகளும், தேவைப்படும் வாகனங்களைத் தேர்ந்தெடுக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் ஏனைய மாவட்டங்களுக்குத் தேவைப்படும் அலுவலர்கள், வாகனங்கள் தொடர்பான விபரங்களையும், அதற்கான அறிவுறுத்தல்களையும் குறித்த மாவட்டங்களின் தாபனத் தலைவர்களுக்குத் தேர்தல்கள் ஆணையாளரால் அனுப்பி வைக்கப்பட்டன. அத்துடன் தேர்தல் தினத்திற்கு இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கு முன்னர் குறித்த மாவட்டங்களுக்கு அலுவலர்களையும், வாகனங்களையும் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை தேர்தல்கள் செயலகத்தின் பணிக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டன. விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதற்காக தமிழ்மொழியில் கடமையாற்றக்கூடிய அலுவலர்களை கொழும்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்து அனுப்புவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

384. அனைத்துத் தேர்தல்களின் போதும், வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான அலுவலர்கள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் போன்ற நியமனங்களுக்கான அலுவலர்களைத் தெரிவு செய்து அவ்அலுவலர்களுக்கு அவசியமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு குறித்த மாவட்டங்களில் கடமை புரிவதற்காக தேர்தல் தினத்தை அண்மித்த தினங்களில் தேர்தல்கள் செயலகத்தினால் குறித்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

385. தேர்தல் தினத்திற்கு சில தினங்களுக்கு முன்பாக நடாத்தப்படவிருக்கும் தேர்தல் கடமைகள், வாக்கெண்ணல்கள் தொடர்பான அறிவுறுத்தல்கள், படிவங்கள். அச்சிடப்பட்ட கடித உறைகள், ஆவணங்கள் மற்றும் அவசியப்படும் பொருட்கள் என்பன யாவும் குறைபாடுகளின்றி அனைத்து மாவட்டங்களுக்கும் கிடைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். மாவட்டத் தேர்தல் அலுவலகங்களினால் இது பற்றி ஆராயப்பட்டு குறைபாடுகள் இருப்பின் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்து அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

386. தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ள பணிக் குழுவினரை தேர்தல் தினத்திற்கு முன்னைய தினம் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தேர்தல் பணிக் குழுவினருக்கும், களக்கடமைகளில் ஈடுபடும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய அறிவுறுத்தல்கள் பற்றிய பயிற்சி வகுப்புக்கள் யாவும் தேர்தலுக்கு மூன்று தினங்கள் முன்பாக நடாத்தப்பட்டு முடிவுறுத்தப்படல் வேண்டும். வாக்களிப்பு நிலையக் கடமைகள், வாக்கெண்ணல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடல் கடமைகள் போன்ற சகல பணிகள் தொடர்பாகவும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், ஏனைய பணியாட்குழுவினர் ஆகிய அனைத்து அலுவலர்களுக்குமான அறிவுறுத்தல் பயிற்சி வகுப்புக்கள் தேர்தல் ஆணையாளராலும், திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலர்களாலும் நடாத்தப்படும்.

387. இம்முறை மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இடைக்கிடை நடாத்தப்பட்டதனால், தேர்தல் இடம்பெறும் மாவட்டங்களுக்கு அவசியமான பணியாட் குழுவினர் மற்றும் வாகனங்கள் என்பவற்றைத் தேர்தல் இடம்பெறாத மாவட்டங்களிலிருந்து அம்மாவட்ட அரசாங்க அதிபர் அல்லது மாவட்டச் செயலாளர்கள் மூலமாகப் பெற்றுக் கொள்வதற்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பிட்ட இந்த முறைகள் தேர்தல் நடைபெறும் மாவட்டங்களுக்கு வசதியாக அமைந்தன.

388. வட மாகாண சபைத் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக தேர்தல் ஆணையாளரின் அழைப்பின் பேரில் இங்கு வருகை தந்த தெற்காசிய தேர்தல் நிருவாக நிறுவன ஒன்றியத்தின் அங்கத்தவர்களுக்கான தங்குமிட வசதிகள், பாதுகாப்பு, போக்குவரத்து வசதிகள் மற்றும் உதவிச் சேவைகள் போன்ற வசதிகளை வழங்குவது தொடர்பாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும். மாவட்ட தேர்தல் அலுவலக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு அது பற்றி கண்காணிப்புக் குழுவினருக்கும், பாதுகாப்புப் பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்டது. அக்குழுவினர் கொழும்பிலிருந்து வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்

போன்ற மாவட்டங்களில் இடம் பெற்ற தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக தேர்தல் தினத்திற்கு சில தினங்களுக்கு முன்னர் அப்பிரதேசங்களுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து அவற்றைத் தேர்தல் ஆணையாளரால் மேற்பார்வை செய்யப்பட்டது. பொலிஸ் மா அதிபரால் கண்காணிப்புப் குழுவினருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அது குறித்துப் பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

389. தேர்தல் இடம் பெறும் காலப்பகுதியில், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களால் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், பிரதி மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கும் சமர்ப்பித்திருந்த பாதுகாப்பு தொடர்பான விடயங்களையும், அதற்கான அறிவுறுத்தல்களையும் பொலிஸ் மா அதிபருக்கு தேர்தல் ஆணையாளரால் அனுப்பி வைக்கப்பட்டன. ஏதேனுமொரு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பு நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்பட்டால், அவ்வாறான சந்தர்ப்பத்தில் அதற்கான தீர்வுகள் தொடர்பாக தம்மிடம் வினவுமாறு தேர்தல்கள் ஆணையாளரால் சகல மாவட்டங்களது தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

390. தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் தேர்தல் தினத்திற்கு முந்திய இரண்டு அல்லது மூன்று நாட்களில் கொழும்பிலும், ஏனைய மாவட்டங்களிலிருந்தும் தமது மாவட்டத்திற்கு வருகை தரும் அலுவலர்களுக்கான தங்குமிட வசதிகள் மற்றும் அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் தயாரித்து வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது.

391. இந்த மாகாண சபைகளுக்கான தேர்தல் 25 மாவட்டங்கள் உட்பட்ட 9 மாகாணங்களில் இடம்பெறுவதுடன், 14,540,766 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் 12,006 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க உள்ளார்கள். அதற்கான வசதிளை மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மேற்கொள்வர். இவை தவிர, வட மாகாணத்தில் உள்ள 13,273 இடம் பெயர்ந்த வாக்காளர்களுக்கு வேறு மாவட்டங்களில் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தும் நோக்குடன் புத்தளம், அநுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இதற்கென 22 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்கள் எண்ணிக்கையின் பிரகாரம் தெரிவத்தாட்சி அலுவலர்களால் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை (இடம் பெயர்ந்தவர்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் தவிர்ந்த) பின்வரும் பட்டியலில் காணப்படுகின்றது. மாகாணம் நிருவாக மாவட்டம் தேர்தலில் பயன் படுத்தப்பட்ட வாக்காளர் இடாப்பின் வருடம் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை வாக்கெடுப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.

மாகாணம்	நிருவாக மாவட்டம்	தேர்தலின் போது பயன்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பின் வருடம்	பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை	வாக்கெடுப்பு பிரிவுகளின் எண்ணிக்கை	தாபிக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை
மேல்	கொழும்பு	2013	1,552,733	1,049	1,062
	கம்பஹா		1,590,076	968	1,014
	களுத்துறை		881,814	540	613
மத்திய	கண்டி	2012	1,015,315	825	825
	மாத்தளை		366,549	322	323
	நுவரெலியா		507,693	423	423
தென்	காலி	2013	809,822	703	703
	மாத்தறை		608,524	444	450
	அம்பாந்தோட்டை		455,398	410	411
வட	யாழ்ப்பாணம்	2012	426,813	526	526
	கிளிநொச்சி		68,600	95	95
	வவுனியா		94,644	89	89
	மன்னார்		75,737	70	70
	முல்லைத்தீவு		53,683	50	52
கிழக்கு	மட்டக்களப்பு	2011	347,099	362	414
	திருகோணமலை		245,363	285	285
	அம்பாறை		441,287	464	464
வடமேல்	குருநாகல்	2012	1,227,810	920	920
	புத்தளம்		526,408	387	389
வடமத்திய	அநுராதபுரம்	2011	606,508	608	608
	பொலன்னறுவை		294,365	286	287
ஊவா	பதுளை	2013	609,966	516	516
	மொணராகலை		332,764	318	318
சப்பிரகமுவ	இரத்தினபுரி	2011	769,814	623	623
	கேகாலை		631,981	565	526
மொத்தம்			14,540,766	11,848	12,006

392. அத்துடன் புத்தளம், யாழ்ப்பாணம், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு பிறிதொரு

வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தி அவ்வாக்களிப்பு நிலையங்களுக்கான முகவர்களை நியமிப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினப் பணிகள் வாக்கெடுப்பு நிலையங்களை ஒழுங்குபடுத்தல்.

393. மாகாண சபை அதிகாரப் பிரதேசங்களினுள் உள்ள நிருவாக மாவட்டங்களில் வாக்களிப்பு நிலையங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கட்டிடங்களில் ஏற்கெனவே தயார்ப்படுத்தி இருப்பினும், அவசியமான சகல ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என மீண்டும் சரிபார்த்துக் கொள்வதற்காக தேர்தல் தினத்திற்கு இரு தினங்களுக்கு முன்னர் கிராம அலுவலர்களும், பிரதேச செயலாளர்களும் அந்நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

394. வாக்களிப்பு நிலையங்களாகப் பெரும்பாலும் அரசாங்கப் பாடசாலைகளே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. குறித்த கிராம அலுவலர் பிரிவுக்குள் அமைந்திருக்கும் வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பான அறிக்கைகளை கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு அவ்வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் உள் நுழைவதற்கான கியூ வரிசை எண்ணிக்கையின் அடிப்படையில் இடவசதிகளைத் தீர்மானித்து அதற்கேற்றவாறு கட்டிடத்தினைத் தேர்ந்தெடுத்தல் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தின் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளரால் தீர்மானிக்கப்படும். வாக்களிப்பு நிலையமாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைக் கட்டிடங்களுக்கு அவசியமான மரத்தளபாடங்கள் பாடசாலை அதிபர்களின் உதவியுடனும், ஏனைய கட்டிடங்களுக்கான மரத்தளபாடங்களை உரிய இடங்களிலிருந்தும் பெற்றுக் கொள்வதற்கு கிராம அலுவலரால் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன் வாக்களிப்புத் தினத்திற்கு முந்திய தினத்தன்று அங்கு தங்கியிருப்பவர்களுக்கான தங்குமிட வசதிகள் மற்றும் அவர்களுக்கான உணவு வகைகள் நியாயமான விலையில் பெற்றுக் கொடுப்பதற்கும் கிராம அலுவலரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கான ஆலோசனைகளை தெரிவத்தாட்சி அலுவலரும், பிரதேச செயலாளர்களும் வழங்குவர்.

395. இவ்வாறு கிராம அலுவலரால் ஆயத்தம் செய்து வைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்களிப்பு தினத்திற்கு முந்திய தினத்தன்று சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் தமது கடமைகளுக்காகச் சமுகமளிப்பதுடன் அவர்களுடைய ஆலோசனையின் பிரகாரம் மேலும் தேவைப்படும் மாற்றங்களைச் செய்வதற்கும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

396. சில கிராம அலுவலர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் இவ்வாறான வாக்களிப்பு நிலையங்கள் தயார்படுத்தும் பொறுப்புக்கள் உள்ளன. இவ்வாறு தயார்படுத்தும் வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பாகவும். அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகவும் கிராம அலுவலர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. வாக்களிப்பு நிலையங்களைத் தயார்படுத்துவதற்காக கிராம அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் பொறுப்பு வாய்ந்த இந்தக் கடமைகளும், சேவைகளும் மிகவும் பாராட்டுதற்குரியது.

சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வாக்குச் சீட்டுக்கள், வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட வாக்கெடுப்புக்குத் தேவையான பொருட்களை விநியோகித்தல்.

397. வாக்களிப்புத் தினத்திற்கு முந்திய தினம் காலை 7.00 மணிக்கு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் ஆலோசனையின் பிரகாரம், கடமைகளுக்காக வருகை தரும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களை குறித்த வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படும். அவர்களுடன் உடன்செல்வதற்கும், பாதுகாப்பு வழங்குவதற்குமான பொலிஸ் அலுவலர்கள், அத்துடன் உதவிக்குச் சிற்றூழியர் ஒருவர் ஆகியோர் சகிதம் வாக்களிப்பு நிலையத்திற்கு உரிய வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆகியவையும் விநியோகிக்கப்படும். இவற்றைக் குறிப்பிட்ட கருமபீடத்தில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் அவற்றைப் பரிசீலித்துப் பெற்றுக் கொள்வதற்கும் அறிவுறுத்தப்படுவர்.

398. சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்குரிய ஆவணங்கள், பொருட்கள் யாவும், வாக்கெண்ணல் இடம்பெறவுள்ள நிலையங்களில் அல்லது அதன் அண்மையிலுள்ள இடத்தில் விநியோகிக்கப்படுகின்றன. இதற்கெனத் தயார்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு நிலையத்திலும்

சுமாராக 10 அல்லது அதற்கும் குறைவான வாக்களிப்பு நிலையங்களுக்கு உரிய வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டு, ஏனைய ஆவணங்கள் என்பன அதற்கென நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களால் விநியோகிக்கப்படும்.

வாக்கெடுப்பு நிலையப் பணியாகுழுவினரை வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல்.

399. சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் உட்பட வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டுகள், ஏனைய பொருட்கள் ஆகியவற்றையும், அவற்றின் பாதுகாப்பிற்காக அனுப்பப்படும் பொலிஸ் அலுவலர்கள், சிற்றூழியர் ஆகியோரையும் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல் மற்றும் ஏனைய பணியாட்குழுவினரை வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல் போன்ற நடவடிக்கைகளை மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும்.

400. கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையப் பணியாட்குழுவினரை வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் ஏற்கெனவே திட்டமிடப்பட்டு இருந்த போதும், குறித்த நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த வாகன எண்ணிக்கைகளில் சில வாகனங்கள் கடமைக்குச் சமுகமளிக்கத் தவறியமை காரணமாக ஒரு சில மாவட்டங்களில் போக்குவரத்து நடவடிக்கைகளை சிக்கல்களுக்கு மத்தியில் நிறைவேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

401. தற்காலத்தில் இடம்பெறும் தேர்தல்களின் போது சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களை குறித்த விநியோகிக்கும் நிலையங்களுக்கு அழைத்து அவர்களுக்குரிய ஆவணங்கள், பொருட்கள் ஆகியவற்றுடன் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்குரிய போக்குவரத்து வசதிகள் போக்குவரத்து கேந்திர நிலையமொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும். ஆயினும் வாக்களிப்பு நிலையங்களுக்குரிய ஏனைய பணியாட்குழுவினர் குறித்த வாக்களிப்பு நிலையம் அமைந்துள்ள இடத்திற்குச் செல்லக்கூடிய தூரத்தில் அதே மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதனால் அவர்களுக்குரிய வாக்களிப்பு நிலையத்தை நேரகாலத்துடன் அவர்களுக்கு அறிவிக்கப்படுவதுடன், அவர்கள் தத்தமது சொந்தப் போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்தி வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்ல வேண்டுமென தெரிவத்தாட்சி அலுவலரால் அறிவுறுத்தப்படும். அவ்வாறு பயணிக்க முடியாத கஸ்டப் பிரதேசங்களுக்குச் செல்லவிருக்கும் பணியாட் குழுவினருக்கும், வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தரும் பணியாட் குழுவினருக்கும் போக்குவரத்து வசதிகள் தெரிவத்தாட்சி அலுவலரால் ஒழுங்குபடுத்தப்படும்.

402. வாக்களிப்பு நிலையங்களுக்குக் கடமையாற்றச் செல்லவிருக்கும் தேர்தற் பணியாட்குழுவினர் தேர்தலுக்கு முன்னைய தினத்தில் குறித்த வாக்களிப்பு நிலையத்தின் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் கடமைக்கான தமது வரவைப் பதிவு செய்தல் வேண்டும். அங்கு அனைத்துப் பணியாட் குழுவினருக்கும் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான தெளிவான அறிவை வழங்கும் நோக்குடன் ஒத்திகை நடாத்தப்படும். அதேவேளை வாக்களிப்பு நிலையத்தில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருடன் ஆண் உத்தியோகத்தர்கள் அன்றைய இரவு தங்கியிருத்தல் வேண்டுமெனவும், பெண் உத்தியோகத்தர்கள் தமது தங்குமிடங்களுக்குச் சென்று மறுநாள் தேர்தல் தினத்தன்று கடமை ஆரம்பிப்பதற்கு முன்னர் சமுகமளித்தல் வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படும்.

403. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தீவுப் பகுதிகளில் அமைந்துள்ள 9 வாக்களிப்பு நிலையங்களுக்கு சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களையும், பணியாட்குழுவினரையும் அத்துடன் அவர்களுக்குரிய ஆவணங்கள், பொருட்கள் ஆகியவற்றையும் எடுத்துச் செல்வதற்காக கடற்படையினரின் மின்சார வள்ளங்கள் மற்றும் தரைப்படையினரின் ஹெலிகொப்டர்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்காக யாழ்ப்பாண மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் வேண்டுகோளுக்கிணங்க பாதுகாப்பு அமைச்சினால் தேர்தல்கள் ஆணையாளர் ஊடாக இவற்றுக்கான அனுமதியைப் பெற்று போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள்.

404. வாக்களிப்புத் தினத்திற்கு முந்திய தினத்தில் வாக்களிப்பு நிலையங்களின் ஆயத்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா எனவும், தேர்தல் பணிக்குழுவினர்கள் வாக்களிப்பு நிலையத்திற்குத் தமது வரவைப் பதிவு செய்துள்ளார்களா எனவும், தேர்தலுக்கான அனைத்து அம்சங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என ஆராய்வதற்கும்,

வாக்களிப்புத் தினத்தில் வாக்களிப்புகள் சுமுகமாக இடம்பெறுகின்றதா என ஆராய்வதற்கும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பிரதேசங்களிலும் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பாக மேற்குறிப்பிட்ட தகவல்களைப் பெற்று தெரிவத்தாட்சி அலுவலருக்கு வழங்குதல் வலயங்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் பொறுப்பாகும். குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக பரிசீலனைகள் மேற்கொள்ளப்படும் முறைகள் மற்றும் அவ்வறிக்கைகளைத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு சமர்ப்பிக்கும் முறைகள் பற்றியும் ஏற்கெனவே வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. பொதுவாக குறிப்பிட்ட வலயங்களிலுள்ள வாக்களிப்பு நிலையங்களின் தரையமைப்பு, சூழல் மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான தகவல்களுடன் 5 அல்லது 6 வாக்களிப்பு நிலையங்களின் பொறுப்புக்கள் அவ்வுதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும். வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் இக்கடமைகள் வாக்களிப்புத் தினத்திற்கு முந்திய தினத்தில் ஆரம்பிக்கப்பட்டு, வாக்களிப்புத் தினத்திற்கு அடுத்த நாள் வரை நீடிப்பதுடன் இறுதியில் தமது கண்காணிப்புகள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு தெரிவத்தாட்சி அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

405. தேர்தல் சட்டங்கள், தேர்தல் செயற்பாடுகள், வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்களின் கடமைகள் மற்றும் மாவட்டத்தினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள தேர்தல் நடவடிக்கை ஒழுங்குகள் போன்ற விடயங்கள் தொடர்பாக போதிய அறிவைப் பெற்றுள்ள ஒருவராகவும், மாவட்டத்தில் குறித்த பிரதேசங்கள் தொடர்பாக பரிச்சயமுள்ள ஒருவராகவும் உள்ள அலுவலர்களை வலயங்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாகத் தேர்ந்தெடுப்பதற்கு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. வாக்களிப்புத் தினத்திற்கு முந்திய தினத்திலும், வாக்களிப்புத் தினத்திலும் தேர்தல் பணிக்குழுவினர் மற்றும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் ஆகியோருக்கு ஆலோசனைகள் வழங்கக்கூடிய மிக முக்கியமான அலுவலராகவும் அவர் கடமையாற்றுவார்.

பாதுகாப்பு அலுவல்கள்

406. வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் பொலிஸ் அலுவலர் ஆகியோரால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையின் பிரகாரம், தேர்தல் தினத்தன்று குறித்த நேரத்திற்கு முன்னர் சகல ஒழுங்குகளும் வாக்களிப்பு நிலையங்களில் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், பாதுகாப்பு நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்தும் வகையில் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரால் தேர்தல்கள் ஆணையாளருக்கு தேர்தல் தினத்திற்கு முன்னர் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

வாக்கெடுப்புத் தினம்.

407. தேர்தல் நடைபெறும் மாவட்டங்களின் சகல மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களும் குறித்த மாவட்டத்தில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் மு.ப. 7.00 மணிக்கு தேர்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதை வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களால் உறுதிப்படுத்தி அறிக்கை சமர்ப்பித்த பின்னர் அது பற்றி தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்படும். தமது பணிக்குழுவினரின் கடமைகளை கீழே குறிப்பிட்டுள்ள விதத்தில் நடாத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒழுங்கு செய்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலரால் கவனம் செலுத்தப்படும்.

I. வாக்கெண்ணல் நிலையங்கள் மற்றும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் பொருட்களைக் கையேற்கும் நிலையங்களை ஒழுங்கு செய்தல்.
II. அதுவரை வாக்கெண்ணல் நிலையங்களுக்குள் உள் நுழைவதற்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தாமதித்த பெயர் குறிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினதும், சுயேச்சைக் குழுக்களினதும் முகவர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்தல்.
III. வாக்கெண்ணல் கடமைகளில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கு இறுதி நேரத்தில் ஆலோசனைகள் வழங்குதல்.
IV. வாக்கெண்ணலுக்கு முன்னர் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் வாக்குப் பெட்டி, ஏனைய பொருட்கள் ஆகியவற்றைக் கையளிக்கும் நடவடிக்கைகளைக்

கண்காணிப்பதற்கென பெயர் குறிக்கப்பட்ட முகவர்கள் வருகை தந்த பின்னர் அது தொடர்பான நடைமுறைகளைக் கவனித்தல்.

V. வாக்கெண்ணல் நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் மண்டபங்களைத் தயார்படுத்துதல், வாக்கெண்ணல் அலுவலர்களின் இரவு உணவை விலை கொடுத்துப் பெற்றுக் கொள்வதற்காகத் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளைக் கவனித்தல்.

VI. பெறுபேறுகளை வெளியிடும் நிலையங்களின் நடவடிக்கைகளை தயார்படுத்துதல்.

VII. இணைப்பு அலுவலக நடவடிக்கைகளைக் கவனித்தல்.

VIII. வாக்கு எண்ணல் நிலையங்களுக்கு போட்டியிடும் அரசியற் கட்சிகளின் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் முகவர்கள் தவிர ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி முகவர்கள், சுயேச்சைக் குழுத் தலைவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் தொடர்பாக கவனித்தல்.

IX. பெறுபேறுகள் தயாரிக்கும் நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்காக வரும் ஊடக நிறுவனங்களின் முகவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் தொடர்பாக கவனித்தல்.

X. வாக்கெண்ணல் நிலையங்கள் மற்றும் பெறுபேறுகள் வெளியிடும் நிலையங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இறுதியாக ஆராய்ந்து பார்த்தல்.

வாக்கெடுப்பை கண்காணிப்புச் செய்தல்.

408. இலங்கைத் தேர்தற் சட்டங்களின் பிரகாரம், தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக ஏதேனுமொரு அமைப்பிற்கு அங்கீகாரம் வழங்குவதற்கான சட்டரீதியான விதிமுறைகள் எதுவும் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. எனினும் 1980 ஆம் ஆண்டு இறுதியில் இந்நாட்டில் இடம் பெற்ற தேசிய மட்டத் தேர்தல்களைக் கண்காணிப்பதற்கு தேர்தலில் போட்டியிட்ட அரசியற் கட்சிகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் அதன் பின்னர் இடம் பெற்ற தேர்தல்களில் கண்காணிப்புக் குழுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன் முதன் முறையாக சர்வதேச கண்காணிப்புக் குழுக்களுக்கும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு தேர்தல் ஆணையாளரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆணையாளரின் அழைப்பின் பேரில் இங்கு வருகை தந்த சர்வதேச கண்காணிப்புக் குழுக்களுக்கு வாக்களிப்பு நிலையங்களிலும், வாக்கெண்ணல் நிலையங்களிலும் கண்காணிப்புக்களை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

409. மேற்குறிப்பிட்ட வகையில் வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுக்கள் வருகை தந்தமையைத் தொடர்ந்து பல உள்நாட்டு அமைப்புக்களும் தேர்தலின் போது கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வேண்டுகோள்களைத் தேர்தல் ஆணையாளருக்குச் சமர்ப்பித்து அதற்கான அனுமதிகளைப் பெற்றுக் கொண்டனர். இவ்வாறான உள்நாட்டு, வெளிநாட்டு கண்காணிப்புக் குழுக்களுக்கு தேர்தலில் போட்டியிடும் அரசியற் கட்சிகளின் இணக்கப்பாட்டுடனேயே கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டன. இம்முறை மாகாண சபைத் தேர்தல்கள் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2014 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற சந்தர்ப்பங்களில் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக கீழ்க் காணும் அமைப்புக்கள் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

1. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு. றொபட் டெரஸ், றொபட் குணவர்த்தன மாவத்தை, கொழும்பு 06
2. தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு அமைப்பு 24/2, 28 ஆம் ஒழுங்கை, மலர் வீதி அருகாமையில், இராஜகிரிய.
3. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான இயக்கம் 100/19 ஏ, வெலிகடவத்த வீதி, இராஜகிரிய
4. தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு மத்திய நிலையம் 195, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.
5. தேர்தல் கண்காணிப்பு அமைப்பு 327/2 டி, விஜயபா இடம், கஜபா மாவத்தை, மாகொல வடக்கு.
6. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான அமைப்பு. 24/13, விஜபா மாவத்தை, நாவல வீதி, நுகேகொடை.
7. இலங்கையின் அன்னையர்கள் புதல்வியர்கள் அமைப்பு 52/61, பீரிஸ் மாவத்தை, ஜாஎல.
8. இலங்கை தேர்தல் விவரணம் 17/3, பிரிவென வீதி, பொரலஸ்கமுவ.

410. இம்முறை நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் கண்காணிப்புக்களை மேற்கொள்வதற்காக மேற்குறிப்பிட்ட கண்காணிப்பு நிறுவனங்களால் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருக்கவில்லை. வேண்டுகோள் விடுக்கப்பட்ட நிறுவனங்களுக்கான அனுமதியை வழங்குவதற்கு முன்பாக அந்நிறுவனங்கள் தொடர்பான மேலதிக தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அந்நிறுவனங்களின் பணியாட்குழுவினர், ஏற்கெனவே அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள், கண்காணிப்பு நடவடிக்கைத் திட்டங்கள் மற்றும் அதற்கான நிதி பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் போன்ற விடயங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

411. எந்தவொரு கண்காணிப்பு அமைப்பிற்கும் வாக்கு எண்ணல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கோ அல்லது வாக்கெண்ணல் நிலையங்களுக்கான அனுமதியோ வழங்கப்படவில்லை. தேர்தல் ஆணையாளரால் பல்வேறு விதங்களிலும் உரிய அமைப்புக்களுக்கு தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கண்காணிப்பு நிறுவனங்கள் அனைத்தின் தலைவர்களுக்கு எந்தவொரு வாக்களிப்பு நிலையங்களுக்கும் உட்பிரவேசித்து கண்காணிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (பெவரல்) மற்றும் தேர்தல் வன்செயல்கள் கண்காணிப்பு நிலையம் (சீ.எம்.ஈ.வீ) ஆகிய இரு நிறுவனங்களுக்கும் தமது முகவர்களை வாக்களிப்பு நிலையங்களில் தங்க வைத்து கண்காணிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன், ஏனைய நிறுவனங்களுக்கு வாக்களிப்பு நிலையங்களுக்கு வெளியேயிருந்து கண்காணிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட மேற்குறித்த அனைத்து கண்காணிப்பு நிறுவனங்களுக்கும் தேர்தல் ஆணையாளரால் தயாரிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான ஒழுக்க நெறிக்கோவை வழங்கப்பட்டிருந்தது. அவ் ஒழுக்க நெறிக்கோவை 27 ஆம் உப அட்டவணையாக இவ்வறிக்கையில் உட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், அந்நிறுவனங்களின் பணிக்குழுவினரின் உறுதியுரைகள் 28 ஆம் உப அட்டவணையில் உட்சேர்க்கப்பட்டுள்ளது.

வட மாகாண சபைத் தேர்தலுக்காக வெளிநாட்டு கண்காணிப்பு குழுக்களை ஈடுபடுத்தல்.

412. வடக்கு, வடமேல், மத்திய மாகாணங்களுக்கான தேர்தல்கள் தொடர்பாக அரசியற் கட்சிச் செயலாளர்களுடன் தேர்தல் ஆணையாளரால் நடாத்தப்பட்ட கலந்தாலோசனையின் போது, முன்னைய தேர்தல்களில் செயற்பட்டவாறு வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுக்களை ஈடுபடுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

413. இதன் பிரகாரம், வடக்கு, மத்திய, வடமேல் மாகாணங்களின் தேர்தல் பற்றி அறிவிக்கப்பட்டதும், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கும், தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ ஒன்றியத்தின் (Forum Of Election Management Bodies Of South Asia) தலைவராகிய இந்திய தேர்தல்கள் ஆணையத்தின் தேர்தல் ஆணையாளருக்கும் 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அறிவிக்கப்பட்டதையடுத்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவர்கள் தமது சம்மதத்தைத் தெரிவித்திருந்தனர். அத்துடன் தேர்தல் ஆணையாளரால் கண்காணிப்புக் குழுக்கான பணியாட்களின் பெயர்களைத் தெரிவிக்குமாறு இந்திய தேர்தல்கள் ஆணையத்திற்கும், தெற்காசிய நாடுகளின் தேர்தல் நிருவாகங்களுக்கும் அறிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்திய தேர்தல் ஆணையத்தின் முன்னாள் ஆணையாளராகிய என். கோபாலசுவாமி அவர்களது தலைமையில் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் தேர்தல் ஆணையங்களில் கடமை புரியும் 17 அலுவலர்களும், பாகிஸ்தான் தேர்தல் ஆணையத்தில் கடமையாற்றியவரும், நீதிபதியாகவும் இருந்த அங்கத்தவர் ஒருவரும் இக்கண்காணிப்புக்குழுவில் இடம் பெற்றனர். இவர்கள் 2013.09.12 ஆந் திகதி தொடக்கம் 2013.09.16 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதுடன், அவர்களுக்கு மாகாண சபைத் தேர்தல் சட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக அறிவுறுத்தல்களும் பயிற்சியும் வழங்கப்பட்டு, தேவைப்படும் ஆவணங்களும் கையளிக்கப்பட்டன.

414. தேர்தல் ஆணையாளரும், பொலிஸ் மாஅதிபரும், பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலர்களும் தேர்தல் இடம் பெறும் மாவட்டத்துத் தெரிவத்தாட்சி அலுவலர்களும், தேர்தலில் போட்டியிடும் அரசியற் கட்சி மற்றும் சுயேச்சைக்

குழு ஆகியவற்றின் முகவர்களும், உள்நாட்டுக் கண்காணிப்புக் குழுக்களும் மேற்குறித்த வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுக்களைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் பொலிஸ் மா அதிபரால் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான செயற்றிட்டங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டன.

415. வட மாகாண நிருவாக மாவட்டங்களுக்காக மாத்திரம் இக் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதற்கு தேர்தல் ஆணையாளரால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. சுமார் 30 வருட காலமாக இடம் பெற்ற பயங்கரவாதச் செயல்கள் மற்றும் ஜனநாயக விரோதச் செயல்கள் காரணமாக சிவில் நிர்வாகம் சீர்குலைந்து மக்கள் இடம் பெயர்ந்த பின்னர், மீண்டும் அம்மக்கள் மீள்குடியமர்ப்பட்டதன் காரணமாக அப்பிரதேசங்களில் அரசியற் கட்சியினர் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன் வந்தனர். இதன் காரணமாகவே மேற்குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. நீண்ட காலம் பயங்கரவாதச் சூழ்நிலையில் சிக்கியிருந்த மக்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் உற்சாகம் காட்டியமை மற்றும் போட்டியிட்ட அரசியற் கட்சிகளால் வெளிப்படுத்திய அதிகூடிய உற்சாகம் காரணமாக நாட்டின் சிவில் அமைப்புக்கள் அனைவரும் இத் தேர்தல் மீது கவனத்தைச் செலுத்தியிருந்தனர். வடமாகாணத்திற்காக போட்டியிட்ட அரசியற் கட்சிகளால் கண்காணிப்புக் குழுக்களை ஈடுபடுத்துமாறு தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

416. தேர்தல் கண்காணிப்புக் குழுக்களுக்களின் சகல அங்கத்தவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் அவர்களது இருப்பிடங்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. குறித்த மாவட்டங்களில் உள்ள சகல கண்காணிப்பாளர்களுக்கும் கொழும்பு நகருடன் தொடர்பு கொள்வதற்காக இணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்தந்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

417. அனைத்து கண்காணிப்பாளர்களுக்கும் கண்காணிப்பு நடவடிக்கை தொடர்பான சட்டதிட்டங்கள் தேர்தல் ஆணையாளரால் வெளியிடப்பட்டிருந்தது. கண்காணிப்புக் குழுக்களின் நடவடிக்கைகள் பற்றி தொடர்பாடல்களை மேற்கொள்வதற்காக கொழும்பு கலதாரி ஹோட்டலில் ஒரு அலுவலகம் நிறுவப்பட்டு பணிக்குழுவும் நியமிக்கப்பட்டிருந்ததுடன், கண்காணிப்புக் குழுவினருக்கான தங்குமிட வசதிகளும் அதே கலதாரி ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. வெளிநாட்டு கண்காணிப்புக் குழுவினர் இங்கு வருகை தருவதற்கும், மீண்டும் தமது நாட்டிற்குத் திரும்பிச் செல்வதற்கான பயணச் செலவுகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் போன்றவற்றிற்கான செலவுகள் தேர்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

418. பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்புக் குழுவில் 04 பிரதிநிதிகள் அடங்கியிருந்ததுடன், அவர்கள் 2013.09.13 ஆந் திகதி இலங்கைக்கு வருகை தந்தனர். அதற்கு முன்பாக அக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த கென்யா குடியரசின் முன்னாள் ஜனாதிபதி திரு. ஸ்டெபன் கலொன்சு முஸ்யொகா அவர்கள் வருகை தந்திருந்தார். அவர்கள் தேர்தல் ஆணையாளர், அரசியற் கட்சிகள், வட மாகாணத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஆகியோரைச் சந்தித்தனர். இக்கண்காணிப்புக் குழுவினருக்காக தேர்தல் திணைக்களத்தினால் எதுவித செலவுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான விபரங்களையும் பெற்றுக் கொண்டனர்.

X ஆம் பகுதி

வாக்குகள் மற்றும் விருப்பு வாக்கெண்ணல்

419. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் IV ஆம் பிரிவுக்குரிய 47 தொடக்கம் 61 வரையான பிரிவுகளில் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் உள்ள அஞ்சல் வாக்காளர்கள் தொடர்பான கட்டளைக் கோவையில் 18 தொடக்கம் 28 வரையான கட்டளைகள் வாக்குகள் மற்றும் விருப்பு வாக்குகள் தொடர்பான முதன்மை சட்ட ஏற்பாடுகளாகக் குறிப்பிட முடியும்.

420. இச்சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையங்களிலிருந்து கையேற்றுக் கொள்ள வேண்டிய வாக்குச் சீட்டுக்களடங்கிய வாக்குப் பெட்டிகள், பொறியிடப்பட்ட பக்கற்றுக்கள், அறிக்கைகள், வெளியீடுகள் என்பவற்றைக் கையேற்றுக் கொண்டு, வாக்கெண்ணல் மேற்கொள்ளப்பட்ட பின்னர், 51(7) ஆம் பிரிவுக்கமைய வாக்கெண்ணல் அலுவலர்களினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் தனது மாவட்டம் சார்பாகவும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுதல் வேண்டும். மாவட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை, குறித்த கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகளின் விகிதாசாரத்திற்கு பிரித்து ஒவ்வொரு கட்சிக்கு மற்றும் சுயேச்சைக் குழுவுக்கு உரித்துடைய உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டும். அதன் பின்னர் அக்கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய வேட்பாளர்கள் பெற்றுக் கொண்டுள்ள விருப்பு வாக்குகளை எண்ணி, வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான அலுவலர்களினால் ஒவ்வொரு வாக்கெண்ணல் மண்டபங்களுக்கமைய வேட்பாளர்கள் பெற்றுக் கொண்டுள்ள விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டும். இவ்வாறு அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்களும் அடங்கலாக அனைத்து வாக்கெண்ணல் மண்டபங்களுக்கும் பொறுப்பான அலுவலர்களினால் அறிக்கையிடப்படுகின்ற ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்டுள்ள விருப்பு வாக்குகளை கூட்டி அவ்வெண்ணிக்கை இறங்குவரிசை ஒழுங்கில் தயாரிக்கப்படும். கட்சிகள்/ குழுக்களிலிருந்து தேர்ந்தெக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு ஒவ்வொரு கட்சியின் மற்றும் குழுவின், ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ள வேட்பாளரில் தொடங்கி தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் பெயர், அவர்கள் பெற்றுக் கொண்டுள்ள விருப்புகளின் எண்ணிக்கையின் தொடரொழுங்கில் பிரகடனப்படுத்துவது தெரிவத்தாட்சி அலுவலரின் பொறுப்பாகும். வட மாகாண தேர்தல் சந்தர்ப்பத்தின் போது தேர்தல்கள் சட்டத்தின் 125(அ) பிரிவின் கீழ் வேறு வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்த வாக்காளர்களின் வாக்குகளையும் எண்ணி அம்முடிவினை குறித்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது.

வாக்கெண்ணல் தொடர்பான அறிவித்தல்

421. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 48 ஆம் பிரிவுக்கமைய தெரிவத்தாட்சி அலுவலரினால் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோருக்கு, வாக்கெண்ணல் தொடர்பான அறிவித்தல், அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அது அனுப்பி வைக்கப்பட வேண்டிய காலப்பகுதி சட்டத்தில் குறிப்பிடப்படவில்லையெனினும், வாக்கெண்ணல் முகவர்களை நியமனம் செய்வதற்கு முன்கூட்டியே அவ்வறிவித்தலை உரிய தரப்புக்களுக்கு அனுப்பி வைப்பது முக்கியமாகும். இவ்வறிவித்தல் மூலம் வாக்கெண்ணல் மண்டபங்களின் அமைவிடம் வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்படும் திகதி மற்றும் நேரம், ஒவ்வொரு வாக்கெண்ணல் மண்டபத்திற்கும் வாக்கு எண்ணுவதற்காக இணைக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையங்களின் அட்டவணை என்பன அறிவிக்கப்படும். வாக்கெண்ணல் மண்டபம் ஒன்றிற்கு நியமனம் செய்யக்கூடிய முகவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கான நியமனக் கடிதங்களை விநியோகிக்கும் முறை, குறித்த

முகவர்களுக்கு வாக்கெண்ணல் மண்டபங்களுக்குள் உட்பிரவேசிப்பதற்கான தெரிவத்தாட்சி அலுவலரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய முறை எனபனவும் இவ்வறிவித்தல் ஊடாக கட்சிகளுக்கும் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கும் அறிவித்து அனுப்பப்படும்.

வாக்கெண்ணல் முகவர்கள்

422. வாக்கெண்ணல் மண்டபங்களுக்கு 5 முகவர்கள் வீதமும், அஞ்சல் வாக்கெண்ணல் மண்டபங்களுக்கு 2 முகவர்கள் வீதமும் நியமனம் செய்வதற்கு போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கும் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கும் சட்டத்தினூடாக வசதி செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கான நியமனக் கடிதங்களை விநியோகிக்கும் அதிகாரம் அரசியல் கட்சிகளின் செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

423. இத்தேர்தலின் போது நிருவாக மாவட்டங்கள் சார்பாக கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் நியமனம் செய்ய உரித்தாக வேண்டியிருந்த முகவர்களின் எண்ணிக்கையையும், வாக்கெண்ணும் நிலையத்திற்கு பணிக்காக நியமனம் செய்யப்பட்ட எண்ணிக்கையையும் ஒப்பிடுகையில் அலுவலர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க நான்கு அல்லது ஐந்து மடங்கு முகவர்களின் எண்ணிக்கை வாக்கெடுப்பு நிலையமொன்றுக்கு நியமனம் செய்ய சந்தர்ப்பம் காணப்பட்டமை ஒரு தெளிவான விடயமாகும். இடம்பெயர்ந்த வடமாகாண வாக்காளர்கள் சார்பாக வாக்களிப்பு நிலையங்களை நிறுவி தேர்தல் நடவடிக்கைகளை ஆற்றிய புத்தளம், அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் அத்தகைய வாக்கெண்ணும் நிலையங்களுக்கு வடமாகாணத்தின் உரிய மாவட்டத்திலிருந்து முகவர்கள் கலந்து கொள்ள சந்தர்ப்பமளிக்கப்பட்டது.

424. இவ்வாறான அலுவலர் எண்ணிக்கையொன்று வாக்கெண்ணல் மண்டபமொன்றினுள் அமரும் போது வாக்கெண்ணலுக்காக தயார் செய்யப்படுகின்ற மேசையின் ஒரு புறத்தில், 18/20 அலுவலர்களுக்கு இடவசதிகளை செய்தல் வேண்டும். இவ்வாறான அலுவலர்களினால் செய்யப்படுகின்ற வாக்கு எண்ணல் பணியை பெரும் எண்ணிக்கையான முகவர்கள் கலந்து கொண்டு கண்காணிப்பதற்காக மண்டபமொன்றினுள் இடவசதிகளை செய்வது மிகவும் சிரமமான ஒரு விடயமாகும்.

வாக்கெடுப்பின் பின்னர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களிடமிருந்து வாக்குப் பெட்டிகள், பொருட்கள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றை மீளக் கையேற்றல்.

425. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 45 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு வாக்கெடுப்பு முடிவுறுத்தப்பட்டவுடன் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் தமது இலச்சினைகளையும், தமது இலச்சனைகளை வைப்பதற்கு விருப்பமான முகவர்களின் இலச்சினைகளையும் பொறித்து வாக்கெண்ணல் அலுவல்களுக்கு கையளிக்க வேண்டிய வாக்குப் பெட்டி மற்றும் ஏனைய பொருட்கள் ஆகியவற்றை கையேற்பதற்கு விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட பணியாட் குழுவினர் ஈடுபடுத்தப்படுவார்கள் இப்பொருட்களாதியவை கையேற்கப்படும் இடம் குறித்த வாக்குச் சீட்டுக்கள் எண்ணப்படுவதற்காக ஒழுங்க செய்யப்பட்டுள்ள வாக்கெண்ணல் மண்டபங்களினுள் அல்லது அதற்கு அண்மித்ததாக வைக்கப்பட்டிருந்தன. அப்பொருட்களை கையேற்கும் அலுவல்கள் வாக்கெடுப்புத் தினம் பிற்பகல் 4.00 மணிக்கு இடம்பெறுகின்றமையினால் அவ்வலுவல்களை கண்காணிப்பதற்குத் தேவையான ஒரு வாக்கெண்ணல் முகவருக்கு ஒரு கட்சி அல்லது ஒரு குழு சார்பாக அந்நேரத்தில் அவ்வாறான இடமொன்றுக்கு வருகை தருவதற்கு அவகாசம் வழங்கப்பட்டது. வாக்குப் பெட்டிகளை பொதுவாக பொறியிடுவதற்கு மேலதிகமாக வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழுவின் அலுவலர்கள் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்பாளர்கள் ஆகியோர் தமது கையொப்பமிடப்பட்ட படிவம் ஒன்றை வாக்குப் பெட்டியின் மீது ஒட்டுவதற்கும், அப் படிவத்தின் பிரதியொன்றை வாக்கெடுப்பு நிலைய முகவர்களுக்கு மற்றும் வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான அலுவலருக்கும் கையளிப்பதற்கு உத்தரவிடப்பட்டிருந்தது. வாக்கெண்ணல் அலுவல்களுக்காக வருகை தருகின்ற முகவர்களுக்கு அவ்வாக்குப் பெட்டியில் பொறிக்கப்பட்டுள்ள இலச்சினைகளைப் பரீட்சித்துப் பார்த்து அது தொடர்பில் திருப்தி கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

426. பொறியிடப்பட்ட வாக்குப் பெட்டிகள், அவற்றின் சாவிகள், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களினால் தயாரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக் கணக்கு, வாக்குச் சீட்டு விநியோகிக்கும் போது வாக்கெடுப்பு நிலையத்தில் பயன்படுத்தப்பட்ட முத்திரைகளின் மாதிரி போன்றே வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட பொலிஸ் அலுவலர், கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்கள் ஆகியோரால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரதிகள் மற்றும் வாக்கெடுப்புக்கு ஏதேனும் தடங்கலொன்று ஏற்பட்டிருப்பின் அது தொடர்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையும் வாக்கெண்ணல் அலுவல்களுக்குப் பொறுப்பான அலுவலருக்கு, பொருட்களை கையேற்கின்ற நிலையத்தின் தலைமை அலுவலரினால் கையளிப்பதற்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

வாக்கெண்ணலுக்கு பொறுப்பான அலுவலர்கள் மற்றும் உதவி பணியாட் குழுவினர்

427. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 47(1) ஆம் பிரிவுக்கமைய ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையத்திலும் வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான ஓர் அலுவலரும் அவருக்கு உதவுவதற்காக ஏனைய பணியாட் குழுவினரும் தேர்தல்கள் ஆணையாளரின் வழமையான அல்லது விஷேட உத்தரவுக்குட்பட்டு தெரிவத்தாட்சி அலுவலரினால் நியமனம் செய்யப்படல் வேண்டும். கீழே காட்டப்பட்டுள்ள அடிப்படையில் வாக்கெண்ணல் மண்டபங்களுக்கு அலுவலர்களை நியமனம் செய்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

அலுவலரின் வகை	சாதாரண வாக்கெண்ணல் மண்டபமொன்றுக்காக	அஞ்சல் வாக்கெண்ணல் மண்டபமொன்றுக்காக
வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான பிரதான வாக்கெண்ணல் அலுவலர்	01	01
உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்	08	02
சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்	10	04
கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்/ எழுதுநர்	20	06
அலுவலக கனிட்ட ஊழியர்	02	02
மொத்தம்	41	15

428. வாக்கெண்ணலுக்குப் பொறுப்பாக செயற்படுவதற்காக நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் தேர்தல்கள் ஆணையாளரின் தலைமையில் கொழும்பிலும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலும் பயிற்றுவிக்கப்பட்டனர். வாக்கெடுப்பு நிறைவடைந்ததன் பின்னர் குறிப்பாக இரவு வேளையிலும் தொடர்ச்சியாக 20, 24 மணித்தியாலங்கள் வரையான காலமொன்று மிகுந்த களைப்போடு கடமைகளில் ஈடுபடுகின்ற இவ்வலுவலர்கள் தேர்தல் செயற்பாடுகளின் போது மிக முக்கியமான பணிகளில் ஒரு பகுதியை ஆற்றுகின்ற தரப்பினராகக் குறிப்பிட முடியும். நாட்டின் 25 நிருவாக மாவட்டங்களில் அஞ்சல் வாக்கெண்ணல் மண்டபங்கள் அடங்கலாக மொத்த வாக்கெண்ணல் மண்டபங்களின் எண்ணிக்கை 1604 ஆகக் காணப்பட்டதோடு, அவற்றில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தொடர்பான விபரங்கள் 15 ஆம் இலக்க குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

429. வாக்கெண்ணல் பணியாட் குழுவினர் கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் வாக்கெடுப்புத் தினம் இராப்போசனத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வாக்கெண்ணல் மண்டபம் அமையப் பெற்றுள்ள வளவினுள் தேவையான வசதிகள் செய்யப்பட்டிருந்ததோடு, வாக்கெண்ணல் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் பானங்கள் அவர்கள் பணியாற்றிய மண்டபத்தினுள்ளேயே விநியோகிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி போன்ற வசதி குறைந்த மாவட்டங்களில் வாக்கெண்ணல் பணியாட் குழுவினருக்கு தெரிவத்தாட்சி அலுவலர்கள் உணவு சமைத்து வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

வாக்கெண்ணும் மண்டபங்களை தாபித்தல்.

430. நிருவாக மாவட்டமொன்றில் ஒரு வாக்கெடுப்புப் பிரிவுக்குரிய வாக்கெடுப்பு நிலையங்கள் எண்ணிக்கைக்குரிய வாக்குச் சீட்டுக்கள் எண்ணிக்கை ஒன்றை மாத்திரம் எண்ணுவதற்காக ஒரு வாக்கெண்ணல் மண்டபத்திற்குக் கையளிக்கப்பட்டது. பொதுவாக இவ்வெண்ணிக்கை பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் 8000-12000 என்றவாறு அமையும்

விதத்தில் பிரிக்கப்பட்டன. முன்னைய வாக்கெடுப்பு சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொண்ட அனுபவங்களுக்கமைய 16 ஆம் இலக்க குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் வாக்கெண்ணல் மண்டபங்கள் தாபிக்கப்பட்டன. இதற்கமைய 1397 சாதாரண வாக்கெண்ணல் மண்டபங்களும், 207 அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்களும் தாபிக்கப்பட்டன.

431. வாக்கெண்ணல் மண்டபங்களைத் தாபிக்கும் போது அவற்றுக்கு தேவையான கட்டிடங்கள் அனைத்தையும் முடிந்த வரையில் ஒரே வளவினுள் பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்த போதிலும் சில சந்தர்ப்பங்களில் மாவட்டங்களிலுள்ள வசதிகளுக்கமைய பல தொகுதிகளில் அமையப் பெற்றுள்ள கட்டிடங்களை இதற்காக பயன்படுத்திக் கொள்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு நேரிட்டது. குறிப்பாக இம்மண்டபங்களைத் தாபிக்கும் போது அவற்றுக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பை குறைவின்றி வழங்குவதற்குள்ள சாத்தியப்பாடு போன்றே அவற்றில் பணியாற்றுவதற்காக வருகைதருகின்ற பணியாட் குழுவினர் மற்றும் முகவர்களுக்கு இக்காணிகளிலுள்ள வசதிகளை கவனத்திற் கொள்ளல் வேண்டும். இதற்கமைய ஒரு சில சந்தர்ப்பங்களில் மாத்திரமே அனைத்து வாக்கெண்ணல் மண்டபங்களையும் ஒரே தொகுதியினுள் தாபிப்பதற்கு சந்தர்ப்பம் கிட்டியது.

வாக்குகள் மற்றும் விருப்பு வாக்குகள் எண்ணப்படும் விதம்

432. மாகாண சபைத் தேர்தலும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடாத்தப்படுகின்றமையினால் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை என்பவற்றை எண்ணுதல் மூன்று கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

I ஆம் கட்டம்

433. வாக்கு எண்ணலுக்காக நியமனம் செய்யப்பட்டுள்ள அனைத்து அலுவலர்களதும் நியமனக் கடிதங்கள் மற்றும் அவர்களின் ஆளடையாளம் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு, வாக்கு எண்ணல் மண்டபங்களின் கடமைக்காக அறிக்கையிடுவதற்கு அலுவலர்களுக்கு இடமளிக்கப்படுவதோடு, அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி நியமனக் கடிதங்களோடு வருகைதருகின்ற முகவர்களின் கடிதங்கள் மற்றும் ஆளடையாளம் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு அவர்களுக்கும் அவர்களின் வரவை குறிப்பதற்கு இடமளிக்கப்படும். அதன் பின்னர் அனைவரும் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கமைய வாக்கெண்ணல் தொடர்பான இரகசியம் பேணல் உறுதியுரையை வழங்குதல் வேண்டும்.

434. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களிடமிருந்து வாக்குப் பெட்டிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய அனைத்து பொருட்களும் வாக்கெடுப்பு மண்டபங்களில் கையேற்கப்பட்ட பின்னர் அவை வாக்கெடுப்பு மாவட்ட இலக்க தொடரொழுங்கில் வாக்கெண்ணல் மண்டபங்களினுள் வைக்கப்பட்டு வாக்குப் பெட்டிகள் உள்ளடங்கலாக ஏனைய பக்கெற்றுக்களின் பொறிகளை பரீட்சிப்பதற்கு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்திருக்கின்ற முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும். வாக்கெண்ணல் முகவர்களுக்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் கையளித்துள்ள வாக்குச் சீட்டு கணக்கின் தகவல்களைக் குறித்துக் கொள்ள இடமளித்து வாக்கெண்ணலின் கட்டங்கள் தொடர்பாக சுருக்கமாக முகவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டதன் பின்னர் இக்கட்டத்தின் போது வாக்கெண்ணல் பணியாட் குழுவினரால் ஆற்றப்பட வேண்டிய கடமைகளும் தெளிவுபடுத்தப்படும். பின்னர், கடமைகளுக்காக அலுவலர்கள் உரிய இடங்களில் அமர்த்தப்படுவார்கள்.

435. வாக்கெண்ணல் அலுவலர்கள் தமது மண்டபத்திற்குரிய அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலிருந்தும் வாக்குப் பெட்டிகள் மற்றும் உரிய ஆவணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளமையை உறுதி செய்து கொண்டு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து வாக்கு எண்ணலை ஆரம்பிப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இந்த அனுமதியும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களும் நிறைவடைந்த பின்னர் இக்கடடத்திற்காக வாக்கெண்ணல் பணியாட் குழுவினர் அமர்ந்திருக்கின்ற மேசையை சமமான ஐந்து பகுதிகளாக வேறு பிரித்து ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தினதும்

வாக்குப் பெட்டிகளிலுள்ள வாக்குச் சீட்டுக்களை எண்ண ஆரம்பித்தல் வேண்டும். இதற்காக ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தினதும் வாக்குப் பெட்டிகளை மேசையின் உரிய பகுதியில் வைத்து குறித்த வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர், வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம், வாக்குப் பெட்டியில் பொறிக்கப்பட்டுள்ள இலக்கம் என்பவற்றை அலுவலரொருவர் சத்தமிட்டு வெளிப்படுத்திய பின்னர், மீண்டும் தேவையான முகவர்களுக்கு வாக்குப் பெட்டியின் பொறிகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு இடமளித்தல் வேண்டும். அதன் பின்னர் வாக்கெண்ணல் அலுவலர்களின் அனுமதியோடு வாக்குப் பெட்டியின் பொறிக்கப்பட்டுள்ள முத்திரைகளை அகற்றி, அவற்றை திறந்து வாக்குச் சீட்டுக்களை வாக்கெண்ணல் மேசையின் மீது வைத்து பணியாட் குழுவினருக்கு அங்குள்ள வாக்குச் சீட்டுக்களை எண்ணுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்படும். இச்சந்தர்ப்பத்தின் போது அதில் உள்ளடக்கப்பட்டுள்ள கேட்டுப் பெரும் வாக்குச் சீட்டுக்கள் காணப்படின் அவற்றை வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான அலுவலருக்குக் கையளித்தல் வேண்டுமென்பதோடு, ஏனைய வாக்குச் சீட்டுக்களை அவற்றின் பின்பக்கத்தில் காணப்படும் அச்சிடப்பட்டுள்ள இலக்கம் தெரியவராதவாறு எண்ணுதல் வேண்டும். அவ்வாறு கணக்கிட்டு ஒவ்வொரு வாக்குப் பெட்டியிலுமுள்ள வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையை வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான அலுவலருக்கு அறிவிக்க வேண்டுமென்பதோடு, அவரால் அவ்வெண்ணிக்கை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் வாக்குச் சீட்டு கணக்கு விபரத்திற்கமைய வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை சமமாகவுள்ளதாவென பரீட்சித்துப் பார்க்கப்படும். இத்தகவல்கள் ஒத்ததாக காணப்படுமாயின், அவ்வெண்ணிக்கையை குறித்த அறிக்கைகளில் குறித்துக் கொண்டு வாக்குச் சீட்டுக்களை வாக்கெண்ணல் தட்டில் கொட்டுவதற்கு அனுமதி வழங்கப்படும். அவ்வாறு இல்லாத போது வாக்கெண்ணல் அலுவலரினால் வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையை மீள் எண்ணுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்படுவதோடு, இறுதியில் கிடைக்கப்பெறுகின்ற தகவல்களுக்கமைய வாக்குப் பெட்டியிலுள்ள வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். இவ்வாறு அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களுக்குமுரிய வாக்கு பெட்டிகளில் காணப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் எண்ணப்பட்ட பின்னர் அவை வாக்கெண்ணல் தட்டுகளில் வைக்கப்பட்டதும் அந்த கட்டத்திற்குரிய பணிகள் நிறைவடையும். அதன் பின்னர், அடுத்த கட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பணியாட் குழுவினருக்கு குறுகிய ஒரு நேரம் ஓய்வு வழங்கப்படும்.

II ஆம் கட்டம்

436. வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அச்சந்தர்ப்பத்தின் போது மேற்கொள்ளப்படவுள்ள வாக்கெண்ணல் பணிகள் தொடர்பாக சிறிய விளக்கமொன்று முகவர்களுக்காக மேற்கொண்டு வாக்கெண்ணலை ஆரம்பித்தல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தின் போது போட்டியிட்ட ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழு சார்பாக அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக்களை வேறு பிரித்து வாக்கெண்ணல் பிரதானமாக மேற்கொள்ளப்படும். இதற்காக வாக்கெண்ணல் அலுவலர்கள் அமந்திருக்கின்ற மேசை குறித்த பணிகளுக்காக பல பகுதிகளாகப் பிரிக்கப்படும். இச்சந்தர்ப்பத்தின் போது வாக்கெண்ணல் பொறுப்பு அலுவலருக்கு எதிரில் மேசையின் இருபுறங்களிலும் அலுவலர்கள் அமர்ந்திருக்க வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு மூலையிலும் வைக்கப்பட்டுள்ள தட்டுக்களில் வாக்குச் சீட்டுக்கள் வைக்கப்பட்டிருக்கும். அம்மூலையிலிருந்து மேசையின் இருபுறங்களிலும் அமர்ந்திருக்கின்ற அலுவலர்கள், கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றிற்கமைய வாக்குச் சீட்டுக்களை தெரிதல், வாக்குச் சீட்டுக்களைப் பரீட்சித்தல், கட்சிகள், குழுக்களுக்குரிய வாக்குச் சீட்டுக்களை வேறு பிரித்து கணக்கிட்டு 50 கொண்ட கட்டுக்களாகக் கட்டுதல் அவற்றை பரீட்சித்தல், மீளப் பரீட்சித்தல் மற்றும் எழுமாற்றாக பரீட்சித்தல் ஆகிய பணிகளில் பகுதிகளாகப் பிரிந்து அலுவல்களை மேற்கொள்வார்கள் முதல் சந்தர்ப்பத்தின் போது ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவு குழுக்கள் ஈடுபடுத்தப்படுவதோடு, அவர்கள் தங்களுக்கு முன்னாலுள்ள ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றுக்குரித்தான சின்னத்தினால் காட்டப்பட்டுள்ள பெட்டிகளில், அவற்றுக்காக வாக்களிக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக்கள் போடப்படும். இச்சந்தர்ப்பத்தின் போது ஒரு கட்சி அல்லது ஒரு குழு சார்பாக கணக்கிட முடியாத வாக்குச் சீட்டுக்கள் பொருத்தமான தீர்மானமொன்றை எடுப்பதற்காக வாக்கெண்ணல் அலுவலர்களினால் வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான அலுவலருக்குக் கையளிக்கப்படும். அந்த வாக்குச் சீட்டு ஒரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு அடையாளமிடப்பட்டதொன்றென

அவ்வலுவலர் தீர்மானிப்பராயின், அதற்கமைய குறித்த வாக்குச் சீட்டு அக்கட்சி அல்லது குழுவுக்காக கணக்கிடப்பட்டு அவை உரிய பெட்டிகளில் வைக்கப்படும். அவ்வலுவலரினால் நிராகரிக்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்படுகின்ற வாக்குச் சீட்டுக்கள் வருகை தந்திருக்கின்ற வாக்கெண்ணல் முகவர்களுக்கும் அவதானிக்கத்தக்க விதத்தில் அவற்றை நிராகரித்து உரிய இலச்சினை அதில் பொறிக்கப்படும். இவ்வாறு நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் வாக்கெண்ணல் மேசைக்கு மீளக் கையளிக்கப்பட மாட்டாதென்பதோடு, அவை வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான அலுவலர் வசம் வைத்துக் கொள்ளப்படும்.

437. வாக்கெண்ணல் மேசையின் ஆரம்ப அலுவலர் குழு அல்லது குழுக்கள் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களுக்கமைய வேறு பிரித்த வாக்குச் சீட்டுக்கள் அடுத்த அலுவலர் குழுவினால் மீள் பரீட்சிக்கப்பட்டு ஒவ்வொரு கட்சி மற்றும் குழு சார்பான வாக்குச் சீட்டுக்கள் 50 கொண்ட கட்டுக்களாகக் கட்டப்படும். வாக்கெண்ணல் மேசையின் அடுத்த குழு அல்லது குழுக்கள் இரண்டும் இவ்வாறான 50 கொண்ட வாக்குச் சீட்டுக் கட்டுக்களை மீளப் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். இப்பரிசீலனையின் போது அந்த ஒவ்வொரு கட்டிலும் உள்ளடக்கப்பட்டிருப்பது ஒரே கட்சியின் அல்லது ஒரே குழுவின் சார்பாக அடையாளமிடப்பட்ட செல்லுபடியான 50 கொண்ட வாக்குச் சீட்டுக்களாவென ஆராய்ந்து பரீட்சித்துப் பார்க்கின்ற அலுவலர்கள் அது தொடர்பாக திருப்தியடைதல் வேண்டும். இவ்வாறான கட்டுக்கள் மீளப் பரீட்சிக்கப்பட்டு ஒரே கட்சிக்குரிய அல்லது ஒரே குழுவுக்குரிய 50 கொண்ட வாக்குச் சீட்டுக் கட்டுக்களை 10 கட்டுக்கள் வீதம் ஒன்று சேர்த்து 500 வாக்குச் சீட்டுக்கள் கொண்ட கட்டுக்களாக அவை இறுதி கட்டத்தின் போது ஒன்று சேர்க்கப்படும். இக்கட்டத்தின் போது குறித்த வாக்கெண்ணல் அலுவலரின் அறிவுறுத்தலுக்கமைய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் வாக்குச் சீட்டுக்கள் தொடர்பான இறுதி பரிசீலனையை மேற்கொள்வார். இவ்வாறு வாக்கெண்ணல் நிறைவடைந்த பின்னர், வாக்கெண்ணல் அலுவலரின் மேசையின் மீது ஒவ்வொரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு வேறுபிரிக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக்களின், நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை என்பவற்றைக் கருத்தில் கொண்டு அவ்வலுவலர் ஒவ்வொரு கட்சி மற்றும் குழு பெற்றுக் கொண்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை தொடர்பான அறிக்கையைத் தயாரிப்பார். இவ்வறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்னர் அங்கிருக்கின்ற வாக்கெண்ணல் முகவர்களுக்கு உயர்ந்தபட்சமாக இரண்டு சந்தர்ப்பங்கள் வரை மீள் வாக்கெண்ணலுக்காக கோரிக்கை முன்வைக்க முடியும். அவ்வாறு கோரிக்கை சமர்ப்பிக்கப்படின் அதற்கமைய மீள் வாக்கெண்ணலை மேற்கொள்ளல் வேண்டும். வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான அலுவலருக்கு குறித்த முடிவு தொடர்பாக திருப்தியடைவதற்காக தேவையான அளவு மீள் வாக்கெண்ணலை மேற்கொள்ள முடியும்.

438. இவ்வாக்கெண்ணலின் பின்னர் தன்னால் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை தொடர்பான அறிக்கையை அவ்விடத்திலிருக்கின்ற உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களைக் கொண்டு பரீட்சித்துப் பார்த்த பின்னர் அவர்களின் கையொப்பம் மற்றும் தனது கையொப்பத்தையிட்டு முகவர்களுக்கும் கையொப்பமிடுவதற்காக அதனை வழங்குதல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தின் போது வாக்கெண்ணல் முகவர்களுக்கும் குறித்த முடிவுகளை குறித்துக் கொள்வதற்கு வாக்கெண்ணல் அலுவலரினால் அவகாசம் வழங்குதல் வேண்டும். இறுதியில் தேர்தல் ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கமைய அதன் பிரதிகளை முகவர்களுக்கும் கையளித்து மூலப்பிரதியை பெறுபேறுகள் தயாரிக்கப்படும் நிலையத்திற்கு பொறியிடப்பட்ட உறையொன்றினுள்ளிட்டு அனுப்பி வைக்க நடவடிக்கையெடுத்தல் வேண்டும். அதன் பின்னர் வாக்கெண்ணல் பணியாட் குழுவினருக்கு சிறிய ஓய்வொன்றை வழங்கிய பின்னர் அடுத்த கட்டமான ஒவ்வொரு கட்சியின் மற்றும் குழுவின் வேட்பாளர்கள் பெற்றுக் கொண்டுள்ள விருப்பு வாக்குகளை எண்ண ஆரம்பிக்க வேண்டும். இக்கட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்காகவும் எண்ணப்பட்ட வாக்குச் சீட்டுக்களை கட்டுக்களாக தனித்தனியாக பாதுகாப்போடு வைத்திருத்தல் வேண்டும்.

III ஆம் கட்டம்

439. இக்கட்டத்தின் போது ஒவ்வொரு வாக்கெண்ணல் மண்டபத்தினதும் வாக்கெண்ணல் முடிவுகளுக்கமைய ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ள கட்சி அல்லது குழுவிலிருந்து

ஆரம்பித்து ஒவ்வொரு கட்சியின் மற்றும் குழுவின் வேட்பாளர்கள் பெற்றுக் கொண்டுள்ள விருப்புகளின் எண்ணிக்கையை கணக்கிடுதல் வேண்டும். இவ்வலுவல்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் குறித்த கட்சியின் அல்லது குழுவின் வாக்குச் சீட்டு கட்டினுள் உள்ள விருப்பெண்ணலுக்குச் செல்லுபடியாகாத வாக்குச் சீட்டுக்களை வாக்கெண்ணல் அலுவலரின் அறிவுறுத்தலுக்கமைய விருப்பெண்ணல் செயற்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தின் போது விருப்பெண்ணுவதற்காக செல்லுபடியான வாக்குச் சீட்டுக்களை மூன்று வகுதிகளாகவும் அப்பணிகளுக்கு செல்லுபடியாகாத வாக்குச் சீட்டுக்களை மூன்று வகுதிகளாகவும் வாக்குச் சீட்டுக்களை 06 வகுதிகளாக வகைப்படுத்தல் வேண்டும். இதில் மூன்று வகுதிகள் விருப்பெண்ணல் பகுதிகளுக்கு செல்லுபடியாகாதவைகளாகும். விருப்பு வாக்குகள் அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக்கள் மற்றும் வேட்பாளரொருவருக்கு விருப்பு அடையாளமிடப்பட்டுள்ளதாவென்பதை உறுதியாக தீர்மானிக்க முடியாத சந்தேகத்திற்குரிய வாக்குச் சீட்டுக்கள் அந்த மூன்று வகுதிக்குரியதாகும். இந்த மூன்று வகுதிக்குரிய வாக்குச் சீட்டுக்கள் இக்காரணங்களால் நிராகரிக்க வேண்டியேற்படுவதால், அது தொடர்பான இறுதித் தீர்மானம் வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான அலுவலரினால் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறான வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்படுவதாக அவ்வலுவலரினால் அவற்றில் குறிப்புக்கள் இடப்பட வேண்டுமென்பதோடு, அத்தீர்மானங்களை மேற்கொள்ளும் போது குறித்த கட்சியின்/ குழுவின் முகவர்கள் அவ்விடத்தில் இருப்பின் அது தொடர்பாக அவர்களை அறிவுறுத்துவதற்கும் அவர் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். இவ்வாறு வாக்குச் சீட்டுக்கள் வகைப்படுத்தப்பட்ட பின்னர், விருப்பு வாக்கெண்ணலுக்குச் செல்லுபடியான வாக்குச் சீட்டுக்கள் 50 கொண்ட கட்டுக்களாக மீள கட்டப்படல் வேண்டும். இக்கட்டுக்களில் உள்ளடக்க வேண்டியது ஒரு விருப்பு வாக்கை கொண்ட வாக்குச் சீட்டுக்கள் மாத்திரமாகும். அதாவது ஒரு விருப்புடன் கூடிய வாக்குச் சீட்டுக்கள் செல்லுபடியான இரு விருப்பு வாக்குடன் கூடிய வாக்குச் சீட்டுக்கள் செல்லுபடியான மூன்று விருப்பு வாக்குகளுடன் கூடிய வாக்குச் சீட்டுக்கள் என தனித்தனியாக கட்டுதல் வேண்டும். குறித்த கட்சி சார்பாக முதலாம் கட்டத்தின் போது எண்ணப்பட்ட வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் 6 வகுதிகளாக வேறு பிரிக்கப்பட்ட விதம் இரண்டாம் பொழிப்புப் பத்திரத்தில் குறித்த இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அப்போது அந்த 6 வகுதிக்களுக்குமுரிய மொத்த வாக்குகளின் எண்ணிக்கை இரண்டாம் கட்டத்தின் போது ஒவ்வொரு கட்சி குழு சார்பாக எண்ணப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கைக்கு சமமாகவுள்ளதாவெனவும் வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான அலுவலர் திருப்தியடைய முடியும்.

440. விருப்பெண்ணலுக்கு செல்லுபடியான அனைத்து வாக்குச் சீட்டு கட்டுக்களையும், வழங்கப்பட்டுள்ள கடதாசியைக் கொண்டு சுற்றி அதன் மீது கட்டு இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். இவ்விலக்கம் இடும் போது முதலாவதாக ஒரு விருப்பு வாக்குடன் கூடிய வாக்குச் சீட்டு கட்டுக்களை இலக்கமிட்டு இறுதியாக எஞ்சுகின்ற வாக்குச் சீட்டுக்கள் ஐம்பதுக்குக் குறைந்த கட்டையும் நாடாவொன்றைப் பயன்படுத்தி வேறுபடுத்தி அதற்கும் இலக்கமிடுதல் வேண்டும். அடுத்து தொடர் இலக்கத்திலிருந்து இரண்டு விருப்பு வாக்குகளுடன் கூடிய ஐம்பது கொண்ட வாக்குச் சீட்டு கட்டுக்களை மேலே குறிப்பிட்டவாறு இலக்கமிடல் வேண்டும். இறுதியில் மூன்று விருப்பு வாக்குகளுடன் கூடிய வாக்குச் சீட்டு கட்டுக்களுக்கும் மேற்கூறியவாறே இலக்கங்களை குறிப்பிடுதல் வேண்டும். இவ்வாறு இலக்கமிடப்பட்ட கட்டுக்களை தொடரொழுங்கில் இலக்கமிடப்பட்ட ஒப்புநோக்கல் படிவங்களை ஒவ்வொரு கட்டிலும் ஒன்று வீதம் இணைத்து ஒவ்வொரு கட்டிலுமுள்ள வாக்குச் சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பு வாக்குகள் குறித்த வேட்பாளர்களுக்கு அடையாளமிடப்பட்டுள்ள இடத்தை பரீட்சித்துப் பார்த்து அத்தகவல்களை வாக்கெண்ணல் அலுவலரின் அறிவுறுத்தலுக்கமைய ஒப்புநோக்கல் படிவங்களில் அலுவலர்கள் உட்சேர்த்தல் வேண்டும். அவ்வாறு உட்சேர்த்து ஒவ்வொரு ஒப்புநோக்கல் படிவங்களிலும் வேட்பாளர்கள் பெற்றுக் கொண்டுள்ள விருப்பு வாக்குகளின் கூட்டுத்தொகையை உரிய நிரல்களில் வாக்கெண்ணல் அலுவலர் உட்சேர்த்தல் வேண்டும். ஒப்புநோக்கல் படிவங்களை பூரணப்படுத்துகின்ற அலுவலர் அதனை தயாரித்தமையை

உறுதிப்படுத்தி இறுதியில் அவரது ஒப்பத்தை இடுதல் வேண்டும். குறித்த ஒப்புநோக்கல் படிவம் மற்றும் அதற்குரிய வாக்குச் சீட்டு கட்டு அதன் வாக்குச் சீட்டுக்களின் தொடரொழுங்கில் மாற்றம் செய்யாது வாக்குச் சீட்டுக் கட்டையும் குறித்த ஒப்புநோக்கல் படிவத்தையும் மீள பரீட்சித்துப் பார்க்கும் அலுவலருக்குக் கையளித்தல் வேண்டும். அவ்வலுவலர் மீண்டும் ஒவ்வொரு வாக்குச் சீட்டிலும் உள்ளடக்கப்பட்டுள்ள வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகள் அடையாமிடப்பட்டுள்ள முறையைப் பார்த்து ஒப்புநோக்கல் படிவங்களில் அத்தகவல்கள் சரியாகக் குறிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்து கொள்ளல் வேண்டும். அங்கு ஏதேனும் சிக்கலொன்று ஏற்படுமாயின், அது தொடர்பாக வாக்கெண்ணலுக்கு பொறுப்பான அலுவலருக்கு அறிக்கையிட்டு குறித்த கட்டுக்காக சரியான ஒப்புநோக்கல் படிவமொன்றை மீள தயாரிப்பதற்கு அறிவுறுத்தல் பெற்றுக் கொண்டு அதற்கேற்றவாறு குறித்த அலுவலர் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

441. இவ்வாறு வாக்கெண்ணலுக்காக செல்லுபடியான அனைத்து வாக்குச் சீட்டு கட்டுக்களுக்காகவும் ஒப்புநோக்கல் படிவமொன்று தயாரிக்கப்பட்டு நிறைவடைந்த பின்னர் வாக்கெண்ணல் அலுவலரினால் தனது வாக்கெண்ணல் மண்டபத்தில் எண்ணப்பட்ட வாக்குச் சீட்டுக்களில் ஒவ்வொரு வேட்பாளருக்காகவும் விருப்பு அடையாளமிடப்பட்ட மொத்த விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை கணக்கிட்டு அவற்றை தனக்கு கையளிக்கப்பட்டுள்ள பொழிப்பு படிவங்களில் உட்சேர்த்தல் வேண்டும். இதற்காக அவ்வலுவலர் அனுபவம் கொண்ட சிரேட்ட அலுவலர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல் வேண்டும். வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை, கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கமைய தனித்தனியாக அறிக்கையிட வேண்டுமென்பதோடு, அதற்குத் தேவையான படிவங்கள் அவர்களுக்கு வழங்கப்படும். இவ்வறிக்கையை தயாரிப்பதற்கு முன்னர் வாக்கெண்ணல் முகவர்களுக்கும் குறித்த பொழிப்பு படிவத்தை பரீட்சிப்பதற்கான சந்தர்ப்பமொன்றும் வாக்கெண்ணல் அலுவலரினால் வழங்கப்படும். பொழிப்பு படிவத்தில் தயாரித்த அலுவலர் மற்றும் அதனை பரீட்சித்துப் பார்த்த அலுவலர், முகவர்கள் அவர்களின் கையொப்பத்தை அதிலிட்ட பின்னர், ஒவ்வொரு கட்சியின், குழுவின் வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகளுக்குரிய பெறுபேற்று அறிக்கை தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்ட தனித்தனியான உறைகளிலிடப்பட்டு தெரிவத்தாட்சி அலுவலர் வழங்கியுள்ள அறிவுறுத்தலுக்கமைய பெறுபேறுகளை தயாரிக்கும் நிலையத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

442. விருப்பு வாக்கெண்ணல் தொடர்பான விஷேட அறிவுறுத்தலொன்று இத்தேர்தல் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரினால் வாக்கு எண்ணல் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. வாக்கு எண்ணல் அலுவலர்களால் விருப்பு வாக்கு எண்ணல் மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியினுள் அம்மாவட்டத்தின் ஒவ்வொரு கட்சி மற்றும் குழுக்கள் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அவற்றிற்குரித்துடைய உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தீர்மானிக்கப்பட்டு அது வாக்கெண்ணல் அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் அதற்கமைய எந்தவொரு உறுப்பினர் பதவிக்கும் தகைமைபெறாத கட்சிகள் அல்லது குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வாக்கு எண்ணல் மண்டபங்களில் தரித்திருக்கின்ற முகவர்களை அம் மண்டபங்களிலிருந்து வெளியேற்றுமாறு தேர்தல்கள் ஆணையாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தமையால், அதற்கமைய நடவடிக்கையெடுப்பதற்கு வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான அலுவலர்களுக்கு நேரிட்டது. வாக்கெண்ணல் மண்டபங்களினுள் அதிக எண்ணிக்கையான முகவர்கள் தரித்திருக்கின்றமை காரணமாக வாக்கெண்ணல் அலுவல்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை ஓரளவுக்கேனும் குறைத்துக் கொள்வதற்கு இதனூடாக எதிர்பார்க்கப்பட்டது.

XI ஆம் பகுதி

பெறுபேறுகளை வெளியிடுதல்

443. மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 55 ஆம் பிரிவிலிருந்து 61 ஆம் பிரிவு வரையான சட்ட ஏற்பாடுகள், தேர்தலின் பின்னர், பெறுபேறுகளை தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் மிகை ஆசனங்களுக்காக உறுப்பினர்களை நியமனம் செய்தல் ஆகிய பணிகளோடு தொடர்புடைதென்பதோடு, அப்பணிகள் தொடர்பாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு மற்றும் தேர்தல்கள் ஆணையாளருக்கு கையளிக்கப்படுகின்ற பணிப்பொறுப்புக்களும் அப்பிரிவுகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பெறுபேறுகளை வெளியிடுதல் மற்றும் தொடர்புடைய அறிவித்தல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடப்படுகின்ற இடத்தில் பிரதிநிதித்துவம் செய்தல்.

444. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 55 ஆம் பிரிவுக்கமைய பெறுபேறுகளை வெளியிடுவதற்கு முன்னர் பெறுபேறுகள் வெளியிடப்படுகின்ற நேரம் மற்றும் இடம் தொடர்பாக தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கு, சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு கடிதமொன்றின் மூலம் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவித்தல் வேண்டும். பெறுபேறுகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகின்ற இடத்திற்கு தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சியொன்றின் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் இரண்டு முகவர்கள் வீதம் நியமனம் செய்ய முடியும்.

445. குறித்த நியமனங்கள் கடிதமொன்றின் மூலம் தனது முகவரின் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை விபரம் என்பவற்றை தெரிவத்தாட்சி அலுவலருக்கு வழங்குவதற்கு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பட்டுள்ளன.

பெறுபேறுகளைத் தயாரிக்கும் இடங்களை ஒழுங்கமைத்தலும் அதற்கான பணியாட் குழுவினரை நியமனம் செய்தலும்.

446. பெறுபேறுகளைத் தயாரிக்கும் நிலையத்தை ஒழுங்கு செய்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி மிக நுணுக்கமாக மேற்கொள்ள வேண்டிய ஒரு பணியாகும்.

(அ) பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 8000 - 10000 வரை ஒரு வாக்கெண்ணல் மண்டபமும் அதற்கு மேலதிகமாக 1500 அஞ்சல் வாக்குகளுக்காக ஒரு வாக்கெண்ணல் மண்டபமும் என்ற விதத்தில் தாபிக்கப்படுவதால் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒரே தொகுதியினுள் அனைத்து வாக்கெண்ணல் மண்டபங்களையும் தாபிப்பது சிரமமானதாகும். ஆதலால், அதிக வாக்கெண்ணல் மண்டபங்கள் அமையப் பெற்றுள்ள இடத்திற்கு அண்மித்த பாதுகாப்பான ஓர் இடத்தை இதற்காக தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். இதற்கு காரணம் பெறுபேறுகளை தயாரிக்கும் இடத்திற்கு ஒவ்வொரு வாக்கெண்ணல் மண்டபங்களிலிருந்தும் எடுத்து வரவேண்டிய பிரதான பெறுபேற்று ஆவணங்கள் இரண்டு வகைகள் காணப்படுவதும் பெறுபேறு தயாரிக்குமிடத்தில் அன்றைய இரவு இருக்கின்ற தெரிவத்தாட்சி அலுவலருக்கு மிகவும் இலகுவான விதத்தில் வாக்கெண்ணல் மண்டபங்களோடு பேணி கொள்ள வேண்டும் என்பதுமாகும்.

(ஆ) கட்சிகள் மற்றும் குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை தொடர்பாக வாக்கெண்ணல் மண்டபங்களில் இருந்து கிடைக்கப்பெறுகின்ற பெறுபேறுகள் மாவட்டம் மற்றும் வாக்கெடுப்புப் பிரிவு என்பவற்றிற்கமையவும், வேட்பாளர்களின் விருப்பு வாக்கு பெறுபேறுகள் நிருவாக மாவட்டத்திற்கமையவும் அஞ்சல் வாக்குப் பெறுபேறு மாவட்ட மட்டத்திலும் தயாரிக்கப்படல் வேண்டும். வாக்கெண்ணல் மண்டபங்கள் மற்றும் வாக்கெடுப்புப் பிரிவு அடிப்படையில் கிடைக்கப் பெறுகின்ற இப் பெறுபேற்று அறிக்கைகள் குறித்த பொழிப்பு படிவங்களில் ஒவ்வொரு கட்சி/ குழு சார்பாக தனித்தனியாக தயாரிக்க கூடிய விதத்தில் பெறுபேறுகளைத் தயாரிக்குமிடத்தில் பணியாட் குழுவினரை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(இ) பணியாட் குழுவின் அலுவலர்கள் சேவை மூப்பு மற்றும் அனுபவம் என்பவற்றுக்கமைய பெறுபேற்று ஆவணங்களை தயாரிப்பதற்கு,

பரீட்சிப்பதற்கு மற்றும் அப்பணிகளை மேற்பார்வை செய்வதற்கு ஈடுபடுத்தல் வேண்டும்.

(ஈ) பணியாட் குழுவின் அனைவருக்கும் குறித்து உரைக்கப்பட்ட பணிகளை கையளித்திருப்பதும் அவ்வனைவருக்கும் குறித்த கடமைகள் தொடர்பான எழுத்து மூல அறிவுரைகளை வழங்குவதற்கும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். குறிப்பாக பெறுபேறுகளை தயாரிக்கும் நிலையத்திற்குக் கையளிக்கப்படுகின்ற ஆவணங்களின் பாதுகாப்புத் தொடர்பாக புரிந்துணர்வுடன் இவ் அலுவல்களை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(உ) இந்நிலையங்களிலிருந்து தெரிவத்தாட்சி அலுவலருக்கு அடிக்கடி தேர்தல்கள் ஆணையாளரோடு தொடர்பு கொள்ள வேண்டுமென்பதால், அதற்கான தொலைபேசி மற்றும் தொலைநகல் செய்திகளைப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் ஆரம்ப பெறுபேற்று ஆவணங்களை தேர்தல்கள் ஆணையாளருக்கு தொலைநகல் செய்தியூடாக அனுப்பி வைப்பதற்கும் வாக்கெடுப்புத் தினம் இரவில் வசதிகள் காணப்படுதல் வேண்டும்.

பெறுபேற்று ஆவணங்களை கையேற்றல்.

447. பெறுபேற்று ஆவணங்களை பெறுபேறுகளை வெளியிடும் நிலையத்தில் கையளிப்பதற்காக வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான அலுவலருக்கு நேரடியாக வருகை தருவது சிரமமானதென்பதால் அதற்காக விஷேட அலுவலர்களை நியமனம் செய்வதற்கும் ஆவணங்களை எடுத்துக் கொண்டு பயணிக்கும் போது பாதுகாப்போடு பயணம் செய்வதற்கும் தேவையான நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

448. பெறுபேற்று ஆவணங்களை வாக்கெண்ணல் மண்டங்களிலிருந்து பெறுபேறுகளை தயாரிக்கும் நிலையத்திற்கு எடுத்து செல்லும் போது அவை பொறியிடப்பட்டிருக்க வேண்டுமென்பதோடு, அப்பொறியிடப்பட்ட பக்கெற்றுக்களை கையேற்கும் அலுவலர் பெறுபேறுகளை தயாரிக்கும் நிலையத்திலிருக்கின்ற கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முகவர்களுக்கும் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் பரீட்சித்துப் பார்க்க இடமளிக்க வேண்டுமென சட்டத்தின் 58 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெறுபேறுகளைத் தயாரித்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடும் சந்தர்ப்பங்கள்

(அ) ஒவ்வொரு கட்சி மற்றும் குழு வாக்கெடுப்புப் பிரிவில் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் மாவட்டத்தில் பெற்றுக் கொண்ட அஞ்சல் வாக்குகளின் எண்ணிக்கை என்பவற்றை எண்ணுதல் மற்றும் வெளியிடுதல்.

(ஆ) ஒவ்வொரு கட்சி மற்றும் குழு மாவட்டத்தில் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கைக்கு அமைய உரித்தாக்கிக் கொண்டுள்ள உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கையை வெளியிடுதல்.

(இ) வேட்பாளர்கள் பெற்றுக் கொண்டுள்ள விருப்பு வாக்குகளின் எண்ணிக்கைக்கமைய மாகாண சபைக்காக மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் தொடர்பான கூற்று.

449. வாக்கெடுப்புப் பிரிவுகளுக்கு உரிய பெறுபேறுகளின் கூற்று தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படவில்லை எனினும், பழைய தேர்தல் மாவட்டமான அவ்வாக்கெடுப்புப் பிரிவின் கீழ் பெறுபேறுகளை அறிந்து கொள்வதற்கு அனைத்து தரப்பினருக்குமுள்ள ஆர்வம் காரணமாக இந்த அடிப்படையின் கீழும் பெறுபேறுகளை வெளியிடுதல் இவ்வாறான தேர்தலொன்றின் போது மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்து தேர்தல்கள் ஆணையாளர் பெற்றுக் கொண்ட பெறுபேறுகளின் பிழையற்ற தன்மை உறுதிசெய்து கொள்ளப்பட்டதன் பின்னர் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதோடு, தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்கள் ஊடாகவும் அவற்றை ஒலிபரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் பெறுபேற்று அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மிகை ஆசனங்களுக்காக குறித்த கட்சிகளிடமிருந்து வேட்புமனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களின் பெயர்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

XII ஆம் பகுதி

தேர்தலுக்கான செலவுகள்

450. இம்முறை 09 மாகாண சபைகளுக்கான மாகாண சபைத் தேர்தல் நான்கு கட்டங்களின் கீழ் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நான்கு தினங்களில் நடாத்தப்பட்டன.

451. முதலாவதாக கிழக்கு, வடமத்திய மற்றும் சப்பிரகமுவ ஆகிய மாகாண சபைகளுக்காக 2012.09.08 ஆம் திகதி தேர்தல் நடாத்தப்பட்டதோடு, அது அம்மூன்று மாகாணங்களிலும் அமையப் பெற்றுள்ள மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, அநுராதபுரம், பொலன்னறுவை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு உரியதாகும். இம்மாவட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த 3,236,417 வாக்காளர்களுக்காக 3,247 வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்காக வாக்களிப்பு நிலையங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு தேர்தல் நடாத்தப்பட்டது. அதன் பின்னர், 329 வாக்கெண்ணல் நிலையங்களில் வாக்கெண்ணல் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக 672,432,229.61 ரூபா செலவிடப்பட்டதோடு, அதற்கமைய பதிவு செய்யப்பட்ட ஒரு வாக்காளருக்காக 201.54 ரூபா செலவிடப்பட்டது.

452. மத்திய, வடமேல் மற்றும் வட மாகாணங்களுக்கான தேர்தல் 2013.09.21 ஆம் திகதி நடாத்தப்பட்டது. அதற்காக கண்டி, மாத்தளை, நுவரெலியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த 4,363,252 வாக்காளர்களுக்காக 3,712 வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டு தேர்தல் நடாத்தப்பட்டது. அதில் இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்காக தாபிக்கப்பட்ட 24 வாக்கெடுப்பு நிலையங்களும் உள்ளடங்கும். இம்மாவட்டங்களின் வாக்கெண்ணல் பணிகள் 499 வாக்கெண்ணல் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டன. இம் மாவட்டங்களின் வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் என்பவற்றை நிறைவு செய்து பெறுபேறுகளை வெளியிடுதல் வரையான பணிகளுக்காக 874,232,151.12 செலவிடப்பட்டது. அதற்கமைய இம்மாகாண சபைத் தேர்தலின் போது பதிவு செய்யப்பட்ட ஒரு வாக்காளருக்காக செலவிடப்பட்டுள்ள சாதாரண தொகை 200.36 ரூபாவாகும்.

453. மேல் மற்றும் தென் மாகாணங்களுக்குரிய கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் தேர்தல் 2014.03.29 ஆம் திகதி நடாத்தப்பட்டதோடு, அதற்காக 5,898,428 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றிருந்தனர். அவர்களுக்காக 4,753 வாக்கெடுப்பு நிலையங்கள் தாபிக்கப்பட்டு தேர்தல் நடாத்தப்பட்ட பின்னர், 608 வாக்கெண்ணல் நிலையங்களில் வாக்குகள் எண்ணப்பட்டன. இத்தேர்தலுக்காக 986,843,326.40 ரூபா செலவிடப்பட்டதோடு, அதற்கமைய ஒரு வாக்காளருக்காக செலவிடப்பட்ட தொகை 167.31 ரூபாவாகும்.

454. இறுதியாக 2014.09.20 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஊவா மாகாண சபைத் தேர்தலுக்காக மொணராகலை, பதுளை ஆகிய மாவட்டங்களில் இருந்து 942,730 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததோடு, 854 வாக்கெடுப்பு நிலையங்கள் தாபிக்கப்பட்டு அவர்களுக்கு வாக்களிப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இத் தேர்தலுக்காக 293,827,380.97 ரூபா செலவிடப்பட்டதுடன் அதற்கமைய ஒரு வாக்காளருக்காக செலவிடப்பட்ட தொகை 311.71 ரூபாவாகும்.

455. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் மாகாண சபைகளுக்காக நடாத்தப்பட்ட தேர்தல்களுக்காக செலவிடப்பட்ட தொகை 3,127,386,338.20 ரூபாவாகும். அதற்கமைய பதிவு செய்யப்பட்ட ஒரு வாக்காளருக்காக செலவிடப்பட்ட சாதாரண தொகை 215.07 ரூபாவாகும்.

456. தேர்தல் சந்தர்ப்பமொன்றின் போது தேர்தல்கள் திணைக்களம் முக்கியமான மற்றும் முதன்மையான கடமைகளை ஆற்றுகின்ற பொறுப்பு கையளிக்கப்படுகின்ற திணைக்களங்களில் பொலிஸ் திணைக்களம், அஞ்சல் திணைக்களம் மற்றும் அரசாங்க அச்சகத் திணைக்களம் என்பன மிக முக்கிய இடங்களை வகிக்கின்றன. வேட்பு

மனு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தேர்தல் அலுவல்கள் நிறைவடைந்து சில காலம் செல்லும் வரை நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் பேணி செல்வதற்காக தேர்தல் காலப்பகுதியின் போது வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சார அலுவல்களுக்கு பாதுகாப்பு வழங்குதல், வாக்கெடுப்பு நிலையங்களின் வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் பணிகளுக்கு பணிகளுக்குப் பாதுகாப்பு வழங்குதல் மற்றும் தேர்தல் காலப்பகுதியின் போது தேர்தல் சட்டங்களை மீறுதல் தொடர்பான சட்ட நடவடிக்கைகளையெடுத்தல் போன்ற பணிகள் பொலிஸாருக்குக் கையளிக்கப்படுகின்ற பிரதானமான கடமைகளாகும். இக் கடமைகளை ஆற்றுவதற்காக மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல் சந்தர்ப்பங்களின் போது பொலிஸ் மா அதிபருக்கு 429,670,247.94 ரூபா குறித்தொதுக்கி வழங்கப்பட்டது. பொலிஸ் திணைக்களத்தினால் செய்யப்பட்ட செலவுகளில் அதிகமான செலவுகள் பணியாட் குழுவினரின் சம்பளம் மேலதிக வேலை நேரம் போக்குவரத்து செலவுகள் மற்றும் படிகள் என்பவற்றுக்காக செய்யப்பட்டுள்ளது. வாகனங்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகத்திற்கும் அத்திணைக்களத்தினால் அதற்கடுத்த அதிகமான தொகையொன்று செலவிடப்பட்டுள்ளது. தேர்தல் காலப்பகுதியினுள் சட்டவிரோத தேர்தல் பிரச்சார அறிவித்தல்களை அகற்றுவதற்காக அமைய ஊழியர்களை ஈடுபடுத்தி விஷேட பணிப்பொறுப்பொன்றை ஆற்றுவதற்கும் பொலிஸ் திணைக்களத்திற்கு நேரிட்டது. இம்முறை நடாத்தப்பட்ட அனைத்து மாகாண சபை தேர்தல் சந்தர்ப்பங்களின் போது பொலிஸ் திணைக்களம் சட்டவிரோதமாக காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல்களை அகற்றுவதற்கு 29,444,195.33 ரூபா தொகையொன்றை செலவிட்டுள்ளது.

457. தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தல் ஒழுங்குகளை மேற்கொள்ளல் தொடர்பில் பெருந்தொகையான கடித ஆவணங்கள் அரச பிரிவுகளின் அலுவலகங்கள் தெரிவத்தாட்சி அலுவலர்கள், தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோருக்கிடையில் பரிமாறப்பட்டமையினால் அக்கடிதங்களை முதன்மை சேவை அடிப்படையில் விநியோகிப்பதற்கு அஞ்சல் திணைக்களத்தினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக உரிய காலப்பகுதியினுள் வீட்டுத் தலைவர்களுக்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை மற்றும் வேட்பாளர்களின் பெயர் பட்டியல் உள்ளடக்கப்பட்ட வீடுகளுக்கான அறிவித்தல்களை விநியோகித்தல் மற்றும் அஞ்சல் வாக்கு செயற்பாடுகளுக்குரிய காப்புறுதி அஞ்சலில் அனுப்பி வைக்க வேண்டிய எழுத்தாவணங்கள் என்பனவும் அஞ்சல் திணைக்களத்தினூடாக விநியோகிக்கப்பட்டன. இத்தேர்தலின் போது அஞ்சல் திணைக்களத்திற்கு வீட்டு தலைவர்களுக்கு விநியோகிப்பதற்காக கையளிக்கப்பட்ட மொத்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் எண்ணிக்கை 14,540,871 ஆகும். அதேபோன்று அஞ்சல் வாக்காளர்களுக்குரிய வாக்குச் சீட்டுக்கள் உள்ளடக்கப்பட்ட 355,675 காப்புறுதி பக்கெற்றுக்கள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அனுப்பி வைப்பதற்காக அஞ்சல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டது. குறிப்பாக தேர்தலுக்கு முன்னர் மற்றும் தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையங்களில் மேற்பார்வை செய்கின்ற உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தொலைபேசி மற்றும் தொலைநகல் செய்திகளை அனுப்பி வைப்பதற்கு தேவையான வசதிகளைச் செய்தல் தேர்தல் காலப்பகுதியின் போது அஞ்சல் திணைக்களத்தினால் ஆற்றப்படுகின்ற மற்றுமொரு விஷேட பணியாகும். தேர்தல்கள் திணைக்களத்தினால் அஞ்சல் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட தொகையை அதிகமான தொகையொன்று பணியாட் குழுவினரின் சம்பளம் மேலதிக வேலை நேர பணி மற்றும் போக்குவரத்து செலவு என்பவற்றுக்காக செலவிடப்பட்டுள்ளது. இத்தேர்தலின் போது அஞ்சல் திணைக்களத்திற்காக செலவிடப்பட்ட மொத்த தொகை 277,306,790.64 ரூபாவாகும். அது மொத்த செலவில் 8.8% ஆகும்.

458. தேர்தல் திணைக்களம் வாக்குச் சீட்டுக்களை அச்சிட்டு கொள்ளல் மற்றும் வேறு அறிவுறுத்தல் பத்திரங்கள், படிவங்கள், எழுத்தாவணங்கள், அஞ்சல் வாக்கு அலுவல்களுக்குத் தேவையான கடித உறைகள், அறிவித்தல்கள் என்பவற்றை அரசாங்க அச்சகத் திணைக்களத்தைக் கொண்டு அச்சிட்டு கொள்கின்றது. அத்திணைக்களத்திற்கு தேர்தல்கள் அலுவல்களுக்காக 162,712,892.58 ரூபா தொகையொன்றை செலவிட நேரிட்டதோடு, அத்தொகை தேர்தலுக்கான மொத்தச் செலவில் 5.20% ஆகும். இத்தேர்தல் சந்தர்ப்பத்தின் போது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை தனியார் பிரிவைக் கொண்டும் தேர்தல்கள் திணைக்களம் அச்சிட்டுக் கொண்டது.

459. இம்முறை மாகாண சபைத் தேர்தலுக்காக

பொலிஸ் திணைக்களம், அஞ்சல் திணைக்களம் மற்றும் அச்சகத் திணைக்களம் என்பவற்றினால் செலவிடப்பட்ட தொகைகள் தொடர்பாக 22 ஆம் இலக்க குறிப்பில் காட்டப்பட்டுள்ளது. இத் திணைக்களங்களால் செலவிடப்பட்ட தொகை மொத்த தேர்தல் செலவுகளில் 28% வரையாகுமென்பது அக்குறிப்பிலிருந்து தெளிவாகின்றது.

460. மாகாண சபைத் தேர்தலொன்றின் போது செய்யப்பட்ட மொத்த செலவுகள் செலவுகளின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தப்பட்டு அத்தொடரொழுங்கு 23 ஆம் இலக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான செலவு விபரம் 11 இன் கீழ் காட்டப்பட்டுள்ளதோடு, ஏனைய தேர்தல்களுக்குரிய அவ்விபரங்கள் 10 ஆம் விடயத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

461. இம்மாகாண சபைத் தேர்தல்களுக்காக நான்கு சந்தர்ப்பங்களின் போது செய்யப்பட்ட மொத்த செலவுகள் 23 ஆம் இலக்க குறிப்பில் காட்டப்பட்டுள்ளதோடு, ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் போதும் தேர்தலுக்குரியதாக பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை மற்றும் தேர்தலுக்காகச் செய்யப்பட்ட செலவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு பதிவு செய்யப்பட்ட ஒரு வாக்காளருக்காக தேர்தலின் போது செய்யப்பட்ட செலவுகள் தனித்தனியாகக் காட்டப்பட்டுள்ளன. அதற்கமைய தேர்தல்களின் போது பதிவு செய்யப்பட்ட ஒரு வாக்காளர் சார்பாக 167.31 ரூபா தொடக்கம் 311.71 ரூபா வரையான தொகையொன்று செலவிடப்பட்டுள்ளது.

XIII ஆம் பகுதி

அவதானிப்புக்கள்

தேர்தலுக்கான திகதியைக் குறித்தல்.

462. இம்முறை மாகாண சபைத் தேர்தல் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நான்கு கட்டங்களின் கீழ் நடாத்தப்பட்டது. ஆரம்பமாக 2012.09.08 ஆம் திகதி கிழக்கு வடமத்திய மற்றும் சப்பிரகமுவ ஆகிய மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்டதோடு, மத்திய, வடக்கு மற்றும் வடமேல் ஆகிய மாகாண சபைகளுக்காக 2013.09.04 ஆம் திகதி தேர்தல் நடாத்தப்பட்டது. 2014.03.29 ஆம் திகதி மேல், தெற்கு மாகாண சபைகளுக்கான தேர்தலும் மற்றும் இறுதியாக 2014.09.20 ஆம் திகதி ஊவா மாகாண சபைகளுக்கான தேர்தலும் நடாத்தப்பட்டன.

463. மாகாண சபையொன்றின் பதவிக்காலம் 5 வருடங்கள் ஆகும். மாகாண சபையின் முதலாவது கூட்ட தினத்தில் ஆரம்பமாகி அக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் மாகாண சபையொன்றை ஆளுநரின் தற்றுணிபின் பிரகாரம் கலைப்பதற்கான சாத்தியப்பாடு காணப்படுவதோடு, அவ்வாறு தற்றுணிபின் பிரகாரம் ஆளுநரொருவருக்கு செய்ய முடியுமென அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணியொன்று தொடர்பில் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாதெனவும், அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஆளுநரின் தற்றுணிபின் பிரகாரம் ஆற்றப்படுகின்ற செயல்கள் சனாதிபதியின் இணக்கப்பாட்டோடு இடம்பெறல் வேண்டுமெனவும், அரசியலமைப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்முறை வட மாகாண சபைக்கான தேர்தல் தவிர ஏனைய மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் அம்மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் அவை கலைக்கப்பட்டதன் பேராக நடாத்தப்பட்டன. அவ்வாறான கலைத்தல் மாகாண சபையொன்றுக்குரியதாக மேற்கொள்ளப்படுமிடத்து, அத்தினத்திலிருந்து ஒரு வார காலத்தினுள் மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் தேர்தல்கள் ஆணையாளர் வேட்பு மனு அறிவித்தலை வெளியிடுதல் வேண்டும். அவ்வறிவித்தலின் பின்னர், வருகின்ற மூன்றாம் வாரத்தினுள் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வேட்புமனுக்கள் கையேற்கப்படல் வேண்டும். காலம் நிறைவடைந்த பின்னர், கூடிய விரைவில் போட்டி காணப்படுகின்ற நிருவாக மாவட்டமொன்றிற்காக தேர்தலுக்கான திகதியை குறித்து சட்டத்தின் 22 ஆம் பிரிவுக்கமைய தெரிவத்தாட்சி அலுவலர் தேர்தல் அறிவித்தலை வெளியிடுதல் வேண்டும். அவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 5 வாரங்களுக்கும் 8 வாரங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியினுள் சனிக்கிழமை தினமொன்றில் தேர்தலை நடாத்துதல் வேண்டும்.

464. இம்முறை 2012.09.08 ஆம் திகதி தேர்தல் நடாத்தப்பட்ட கிழக்கு மாகாணத்தின், இதற்கு முன்னர் தேர்தல் 2008.05.10 ஆம் திகதி நடாத்தப்பட்டிருந்தது. 2012.09.08 ஆம் திகதி தேர்தல் நடாத்தப்பட்ட வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கான தேர்தல் இதற்கு முன்னர் 2008.08.23 ஆம் திகதி நடாத்தப்பட்டிருந்தது. அத்தேர்தலின் பின்னர் 2008.06.04 ஆம் திகதி கிழக்கு மாகாண சபையினதும் 2008.09.18 ஆம் திகதி வடமத்திய மாகாண சயினதும், 2008.09.01 ஆம் திகதி சப்பிரகமுவ மாகாண சபையினதும் முதலாவது சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அதற்கமைய இம்மூன்று மாகாண சபைகளினதும் ஆளுநர்களால் இவற்றின் பதவிக் காலங்கள் மேலும் ஒருவருடத்திற்கு மேற்பட்ட காலமொன்று எஞ்சியிருக்கையில் கலைக்கப்பட்டன. இதன் காரணமாக இம்மாகாண சபைகளுக்கான தேர்தலை நடாத்துவதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தில் செல்லுபடியாகக் காணப்பட்ட 2011 ஆம் ஆண்டுக்குரிய தேருநர் இடாப்பை அதற்காக பயன்படுத்த நேரிட்டது. இம்மூன்று மாகாண சபைகளையும் கலைக்காது வழமையான அடிப்படையில் அவற்றின் பதவிக் காலங்கள் நிறைவடைந்த பின்னர் தேர்தல் நடாத்தப்பட்டிருப்பின் அதற்காக 2012 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை பயன்படுத்துவதற்கு இடமிருந்தது. 2011 ஆம் ஆண்டைவிட 57,000 வாக்காளர்கள் வரையில் 2012 ஆம் ஆண்டில் இம்மூன்று மாகாண சபைகளதும் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, அவற்றில் அதிக எண்ணிக்கையானோர் 18 வயது பூர்த்தியடைந்த முதல் தடவையாக தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டவர்களாகும். இவர்களுக்கு தமது மாகாண சபைக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் மீண்டும் அடுத்த

மாகாண சபைத் தேர்தல் சந்தர்ப்பத்தின் போதே கிடைக்கப்பெறும்.

465. தற்காலத்தில் தேருநர் இடாப்பை தயாரிப்பதற்கு செலவாகும் காலம் முன்னரை விட குறைவடைந்துள்ளது. வருடத்தின் யூன் மாதம் 01 ஆம் திகதியில் ஆரம்பமாகும் தேருநர் கணக்கெடுப்பின் பின்னர், தேருநர் இடாப்பை தயாரிப்பதற்கு அடுத்த வருடம் மே மாதம் இறுதி வரையான காலம் 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் கழிந்தமையால், அவ்வாறான தேருநர் இடாப்பொன்று தேர்தலுக்காக ஒன்றரை வருடங்கள் வரை செல்லுபடியானதாக காணப்பட்டது. அடுத்த வருடம் ஆரம்பமாகியதை தொடர்ந்து 12 மாதங்கள் வரை தேருநர் இடாப்பு செல்லுபடியானதாகக் காணப்பட்டது. இதன் காரணமாக தற்போது தேருநர் இடாப்பு செல்லுபடியாகக் காணப்படும் காலம் ஒரு வருடம் வரை வரையறுக்கப்பட்டுள்ளது. ஆதலால், தேர்தலுக்காக நிகழ்நிலைப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பொன்றை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நிகழ்நிலைப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பொன்றை தேர்தலொன்றின் போது பயன்படுத்துவது தேர்தலொன்றின் தரம் உயர்வடைவதற்கு ஏதுவான ஒரு காரணமாகும். தேர்தல்களுக்கான காலப்பகுதிகளை தீர்மானிக்கின்ற தரப்புக்களும் இவ்விடயத்தைக் கருத்தில் கொள்வது உசிதமாகும்.

466. இவ்வாறு முன்கூட்டியே தேர்தல்களை நடாத்துவதற்காக மாகாண சபைகளை கலைப்பதால் ஏற்படக்கூடிய மேலுமொரு பெறுபேறு யாதெனில், எதிர்வரும் ஒரு வருடம் வரையான காலமொன்றுக்காக மாகாண சபையினால் ஆற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மற்றும் திட்டமிடப்பட்ட அலுவல்களை எதிர்பார்க்காத விதத்தில் இடைநிறுத்துவதற்கு மாகாண சபைகளுக்கு நேரிடுவதாகும். இம்முறை முதலில் தேர்தல் நடாத்தப்பட்ட மூன்று மாகாண சபைகளுக்காக இல்லாமல் போன பதவிக் காலம் ஒரு வருடம் வரையாகும். மாகாண சபையொன்றுக்காக அதிகளவு நிதி மற்றும் வேறு வளங்களை குறித்தொதுக்கல், அனுமதிக்கப்பட்ட விடயங்களுக்கமைய வருடம் முழுவதும் வரவு செலவுத் திட்ட ஆவணத்தினூடாக மேற்கொள்ளப்படுவதால், இவ்வாறு திடீரென கலைத்து விடுவதால், அரச வளங்களின் முறையான முகாமைத்துவத்திற்கு இடையூறுகள் ஏற்படுகின்றன.

467. இம்முறை மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்ட காலம் 2012 தொடக்கம் 2014 வரை என்பதோடு, அவை நான்கு சந்தர்ப்பங்களில் நடாத்தப்பட்டன. அந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் போதும் அவற்றுக்காக இரண்டு மாதங்கள் வீதம் வரையான காலமொன்றை குறித்தொதுக்குவதற்கு அதனோடு தொடர்புடைய அனைத்து பிரிவுகளுக்கும் நேரிட்டது. இக்காலப் பகுதியினுள் அரசின் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மேற்கொள்ளப்படுகின்ற சில நிகழ்ச்சித் திட்டங்கள் அரசியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அரச அதிகாரம் கொண்டுள்ள அரசியல் கட்சிகளினால் தேர்தல் பிரச்சார செயற்பாடுகளாக மேற்கொண்டதாக தேர்தல்கள் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அந்நிகழ்ச்சித் திட்டங்களை தேர்தல் காலப்பகுதியின் பின்னர், ஆற்றுவதற்குள்ள சாத்தியப்பாடு தொடர்பாக சில அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களிடம் வினவிய போது இந்நிகழ்ச்சித் திட்டங்கள் கிராம மட்டத்தில் வறிய மக்களை அல்லது விஷேட மக்கள் குழுக்களை மையமாகக் கொண்டு வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் எனவும் அவ்வாறான அலுவல்களை தேர்தல் காலப்பகுதியென்ற காரணத்திற்காக இரண்டு மாதங்கள் வரையில் தாமதப்படுத்துவது குறித்த அரச நிறுவனங்களின் அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்கு தடையாகுமென தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு இடையே இடையே நடாத்தப்படுகின்ற தேர்தல் காரணமாக அரச அதிகாரம் கொண்டுள்ள அரசியல் கட்சியின் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பொது மக்கள் பிரதிநிதிகள், வேறு பொதுமக்கள் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமது அரசியல் கட்சிக்காக மாகாண சபை தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வெற்றிக்காக மிக நீண்ட காலம் தேர்தல் பிரச்சார அலுவல்களை மேற்கொள்வதற்கு நேரிடும்.

468. நாடு பூராகவும் வாக்கெடுப்பை ஒரே தினத்தில் நடாத்துவதற்கெனில் மாகாண சபைகளை கலைத்து விடல் மற்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபைகளின் முதலாவது சபை கூட்டத்தை நடாத்துதல் என்பன ஓரளவிற்கு அண்மித்த தினங்களில் இடம்பெறல் வேண்டும். ஒரே தினத்தில் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடாத்தாமை மூலம்

தேர்தலுக்காக தயாராகின்ற அரசியல் கட்சிகளுக்கு எதிர்பார்ப்போடு முறையாக தேர்தல்களுக்கு தயாராவதற்குள்ள சந்தர்ப்பங்களை பறித்து, அரச அதிகாரம் கொண்டுள்ள அரசியல் கட்சிகளுக்கு மட்டும் விசேட இலாபம் கிட்டும்.

469. ஒரு தேர்தலை நாடு பூராகவும் இரண்டு வருட காலமொன்று நடாத்துகின்றமை காரணமாக அரச ஆதனங்களை அரசியல் கட்சிகள் தேர்தல் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தும் வாய்ப்பு அதிகரிக்கும் தேர்தல் சந்தர்ப்பங்களின் போது அரச சொத்துக்கள் கட்சிகளின் அல்லது வேட்பாளர்களின் வெற்றிக்காக பயன்படுத்தல் தேர்தல்கள் ஆணையாளரினால் தடைசெய்யப்பட்டுள்ளதாக அரச நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படும். இருப்பினும், இவ்வாறு இடையிடையே தேர்தல்களை நடாத்தப்படுகின்றமை காரணமாக அரச ஆட்சி அதிகாரம் கொண்டுள்ள அரசியல் கட்சிகளுக்கு தமது தேர்தல் செயற்பாடுகளை அரச சிறப்புரிமைகளின் கீழ் ஆற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றமை காரணமாக இந்நிலைமை தேர்தல்களை நியாயமாக நடாத்துவதில் பாரிய தடைகளை ஏற்படுத்துகின்றது. அதேபோன்று மேற்படி விடயங்கள் காரணமாக சனநாயக ஆட்சி முறையின் கீழ் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கும் சில அநியாயங்கள் இடம்பெறுகின்றன.

வேட்புமனுப் படிவத்தில் வேட்பாளர்களின் பெயர்களை உட்சேர்த்தல்.

470. 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் "அ" படிவத்திற்கமைய மாகாண சபைத் தேர்தலுக்காக அச்சிடப்பட வேண்டிய வேட்புமனுப் படிவங்களின் முன் நிரலில் வேட்பாளரின் பெயரை உட்சேர்ப்பதற்கு இடம் விடப்பட்டுள்ளது. குறித்த பெயரை முதலெழுத்துக்களுடன் அல்லது முழுப்பெயர் என்ற அடிப்படையில் காணப்பட முடியும். அப்பெயர்கள் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 22 (ஆ) பிரிவுக்கமைய சிங்கள அகர வரிசை ஒழுங்கில் தயாரிக்கப்பட்டு அந்த ஒழுங்கில ஒவ்வொரு வேட்பாளர்களுக்கும் தொடர் இலக்கங்களை வழங்குதல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு வேட்புமனுக்கள் கையேற்கப்பட்ட பின்னர் கையளிக்கப்படுகின்ற ஒரு கடமையாகும்.

471. வேட்பாளர்களை வேறு பிரித்து அறிவதற்காக வழங்கப்படுகின்ற இலக்கங்களில் முதலிலுள்ள தொடர் இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கம் கொண்ட வேட்பாளர்களால் வேட்புமனுப் படிவங்களின் தமது பெயருக்கு முன்னால் பெயருடன் தொடர்பற்ற விதத்தில் சிங்கள அகர எழுத்துக்களில் முதலில் காணப்படுகின்ற அ, ஆ போன்ற எழுத்துக்களைப் பயன்படுத்தி வேட்புமனுப் படிவங்கள் தயாரிக்கப்பட்டிருந்த முறை இவ்வறிக்கையில் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. அச்சந்தர்ப்பங்களின் போது சில வேட்பாளர்கள் இதற்காக தமது பிறப்புச் சான்றிதழ் போன்றே தேசிய அடையாள அட்டைகளையும் இவ்வாறு மாற்றம் செய்து தயாரித்துக் கொண்டுள்ளமை தெரியவந்தது. நாடு பூராகவும் தேர்தலை நடாத்துகின்ற போது போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வேட்புமனுப் படிவங்களில் வேட்பாளர்களின் பெயர்களுக்குப் பதிலாக தொடர் இலக்கங்களை வழங்குதல் காலதாமதமடையும். வேட்புமனுப் படிவங்களில் முதலெழுத்துக்களுடன் பெயர்கள் உட்சேர்க்கப்பட்டிருக்குமிடத்து, சாதாரண பெயர்களும் உள்ளமையால் அவற்றை அகர வரிசை தொடரொழுங்கில ஒழுங்குபடுத்தும் போது ஒன்றுக்கு அருகில் ஒன்றை வைத்து தொடர் இலக்கங்களை வழங்க வேண்டி நேரிடுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன.

472. இந்த நாட்டில் விகிதாசார தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்ட ஆரம்ப காலத்தில் காணப்பட்ட தேர்தல் சட்டங்களுக்கமைய வேட்பாளர்களை வேறு பிரித்து அறிவதற்காக இலக்கங்கள் வழங்குவது கட்சி அல்லது குழுவினால் வேட்புமனுப் படிவத்தில் தமது வேட்பாளர்களின் பெயர்களை உட்சேர்த்திருந்த தொடரொழுங்கில் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும், அம்முறை பின்னர் சட்டத்தின் மூலம் மாற்றம் செய்யப்பட்டது. இருப்பினும், தற்போது இது தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பாக சிந்திக்கும் போது வேட்பாளர்களின் பெயர்கள் அவர்களின் குடும்பப் பெயர்கள் சகிதம் முழுப் பெயரை பிறப்புச் சான்றிதழில் அல்லது தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வேட்புமனுப் படிவத்தில் உட்சேர்ப்பதற்கும் கட்சி அல்லது குழுவினால் வேட்புமனுப் படிவத்தின் பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள ஒழுங்கில் வேட்பாளர்களுக்கு இலக்கங்களை வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை

ஏற்படுத்தி சட்டத்தை திருத்தம் செய்ய வேண்டியுள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்ற உள்ளூர் அதிகார சபைகளின் பிரதிநிதிகள்

473. மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்திற்கமைய உள்ளூர் அதிகார சபையொன்றின் மக்கள் பிரதிநிதியொருவருக்கு அப்பதவியை வகித்துக் கொண்டே மாகாண சபைத் தேர்தலொன்றின் போது வேட்பாளர்களாகப் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

474. இம்முறை மாகாண சபைத் தேர்தலின் போது மேற்குறித்தவாறான வேட்பாளர்கள் அதிக எண்ணிக்கையானோர் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டதோடு, அவர்கள் தமது உள்ளூர் அதிகார சபை அமையப் பெற்றுள்ள நிருவாக மாவட்டத்திற்காகப் போட்டியிட்டனர். இதில் சிலர் பிரதேச சபைகளின் தலைவர்களாகவும் காணப்பட்டனர். இம்முறை தேர்தலின் போது அரசியல் கட்சிகளுடன் தேர்தல்கள் ஆணையாளர் நடாத்திய கலந்துரையாடல்களின் போது கட்சிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற இணக்கப்பாட்டிற்கு அமைய மேற்குறித்த விதத்தில் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு தமது உள்ளூர் அதிகார சபைகளிலிருந்து விடுமுறை பெற்றுக் கொண்டு தேர்தல் இறுதிப் பணிகளில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் அது அவ்வளவு தூரம் பயனுள்ளதாகக் காணப்படவில்லை. இவ்வாறான வேட்பாளர்கள் அவர்களின் உள்ளூர் அதிகார சபைகளின் வாகனங்கள் மற்றும் வேறு வளங்களை பயன்படுத்தி தமது வேட்பாண்மையை ஊக்குவித்துக் கொள்வதற்கு அரச சொத்துக்களைப் பயன்படுத்தியுள்ளமை தெரியவந்தது. இத்தகையை அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையை நன்கு வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பமொன்றாக மாத்தறை மாவட்டத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்வு தொடர்பாக கவனம் செலுத்துவது பொருத்தமானதாகும். மாத்தறை மாவட்டத்தின் ஓர் உள்ளூராட்சி நிறுவன தவிசாளரொருவர் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு அவ்வுள்ளூராட்சி சபையின் வளங்களையும் பணியாட்குழுவினரையும் தமது வேட்பாண்மை ஊக்குவிப்புக்காக பயன்படுத்துவதை தடுக்க தேர்தல் அதிகாரிகள் நடவடிக்கையெடுத்ததோடு தேர்தல் அலுவலர்களின் நடவடிக்கைகளுக்கெதிராக உள்ளூராட்சி சபையின் பணியாட்களை பயன்படுத்தி கோஷம் எழுப்புவதற்கு அவ் வேட்பாளர் நடவடிக்கையெடுத்தார். பின்னர் உரிய கட்சியின் அதிகாரிகள் அறிவூட்டப்பட்டு பொலிசாரினதும் ஒத்துழைப்போடு இவ் உள்ளூர் அதிகார சபையின் அரச ஆதனங்களின் முறையற்ற பாவனையை தடுக்க முடிந்தது. உள்ளூர் அதிகார சபையின் தவிசாளர்கள் வேட்பாளர்களாக போட்டியிட்டு கொண்டு தமது நிறுவனத்தின் வழங்கலையும் அதிகாரிகளையும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதை பல்வேறு மாவட்டங்களிலும் காணக்கிடைத்ததோடு மாத்தறை மாவட்டத்திற்கு மேலதிகமாக இரத்தினபுரி, கேகாலை மற்றும் களுத்துறை மாவட்டங்களின் உள்ளூர் அதிகார சபைகளின் தவிசாளர்கள் மூவர் அடுத்தவர்களோடு ஒப்பிடுகையில் வளத்துஷ்பிரயோகத்தில் கூடுதலாக மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அத்தகைய சந்தர்ப்பங்களில் தேர்தல் அலுவலர்களோடு பொலிஸ் அலுவலர்களும் இணைந்து இத் துஷ்பிரயோக நடவடிக்கைகளை மிகுந்த சிரமத்துடன் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

475. இந்நிலைமை அரச சொத்துக்களை தேர்தல் அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு வேட்பாளர்களுக்குள்ள வாய்ப்பு மேலும் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளமையினால் மாகாண சபைகளில் பதவிகளை வகித்துக் கொண்டு மாகாண சபைகளில் போட்டியிடுவதற்குள்ள அவகாசத்தை சட்டத்தின் மூலம் இல்லாதொழிப்பது பொருத்தமாகும். மேலும் இவ்வுள்ளூர் அதிகார சபை உறுப்பினர்கள் அந்நிறுவனங்களிலிருந்து கேட்டு விலகி போட்டியிடுவதாயின் அவ்வாறான உள்ளூர் அதிகார சபைகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக குறித்த உறுப்பினர் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சியின் வேட்புமனுப் படிவத்தில் பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ளவர்களை நியமனம் செய்வதற்கான குறித்த உறுப்பினர் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சியின் வேட்புமனுப் படிவத்தில் பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ளவர்களை நியமனம் செய்வதற்கான சட்ட ஏற்பாடுகளும் காணப்படுகின்றன. அவ்வாறு எஞ்சியிருப்பின் வேட்புமனுப் படிவமொன்றில் இல்லாத சந்தர்ப்பமொன்றில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு செயற்பட வேண்டிய முறையையும் சட்டத்தினால் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

வேட்பாளர்களின் பாதுகாப்பு

476. தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களுக்கும் கடமை பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற்கொள்ளும் முறையொன்று தற்போது காணப்படுவதில்லையென்பதோடு, அவர்களுக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பு தொடர்பாக தீர்மானிப்பது பொலிஸ் மா அதிபராகும். சில சந்தர்ப்பங்களின் போது ஒரு சில வேட்பாளர்கள் விஷேட காரணங்களின் அடிப்படையில் பொலிஸ் பாதுகாப்பை கோருகின்ற போதிலும் அவ்வாறானவர்களின் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அவர்களுக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பின் அளவு தொடர்பாக பொலிஸாரினால் தீர்மானிக்கப்படும். பெரும்பாலும் மாகாண சபைத் தேர்தலொன்றின் போது குறித்த மாகாண சபையை கலைப்பதற்கு முன்னர் வேட்பாளர்கள் வகித்துள்ள அமைச்சரவை பொறுப்புக்களை கருத்தில் கொண்டு பொலிஸாரினால் உத்தியோகபூர்வ பாதுகாவலர்கள் வழங்கப்படுகின்றமை தெரிகின்றது.

477. மேற்குறிப்பிட்டவாறு பாதுகாப்பு வழங்கும் போது சில வேட்பாளர்களிடம் இருக்கின்ற உத்தியோகபூர்வ பாதுகாவலர்கள் கட்டாயமாக தேர்தல் காலம் முழுவதும் வேட்பாளர்களோடு இருப்பதோடு, அவர்களின் பிரச்சார அலுவல்களிலும் அவ்வாறானவர்கள் தொடர்புபட்டுள்ளதாக தெரியவந்த சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இவ்வாறு உத்தியோகபூர்வ பாதுகாவலர்கள் இல்லாத வேட்பாளர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களின் போது தமது பாதுகாப்புக்காக ஆதரவாளர்களை அல்லது தனிப்பட்ட பாதுகாவலர்களை ஈடுபடுத்துகின்றமை தெரியவருகின்ற ஒரு விடயமாகும். தேர்தல் பிரச்சார அலுவல்கள் உக்கிரமடைகின்ற சந்தர்ப்பங்களின் போது ஏற்படுகின்ற மோதல்களில் இப்பாதுகாப்பு குழுவினரும் தொடர்புபட்ட சந்தர்ப்பங்கள் பற்றி தேர்தல் சந்தர்ப்பங்களின் போது ஊடகங்களில் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறான பெருமளவு பாதுகாவலர்களுடன் தேர்தல் பிரச்சார அலுவல்களை மேற்கொள்வதற்கு வேட்பாளர்கள் முயற்சிக்கின்றமையின் காரணமாக சில சமூகங்களில் பெயர் போன குற்றவாளிகள் கூட பாதுகாவலர்களாக சேவையிலீடுபடுத்தப்படுவதாக தகவல்கள் தேர்தல் சந்தர்ப்பங்களின் போது ஒரு சில செய்திகளின் மூலம் அறிய முடிகின்றது. இந்நிலைமை அமைதியான தேர்தலொன்றை நடாத்துவதற்கு ஒருபுறம் தடையாகும். இவ்வாறானவர்கள் தமது வேட்பாளரின் பாதுகாப்புக்காக மாத்திரமன்றி சட்டவிரோத தேர்தல் பிரச்சார சுவரொட்டிகளை காட்சிப்படுத்தல் போன்ற அலுவல்களிலும் ஈடுபடுகின்றமையினால் இவர்களின் அலுவல்கள் காரணமாக வன்முறை சம்பவங்களும் ஏற்படுகின்றன.

478. பாதுகாப்பு கோருகின்ற வேட்பாளர்களுக்கு பொலிஸாரினால் பாதுகாப்பு வழங்குகின்ற நியாயமான நிகழ்ச்சித் திட்டமொன்றை தேர்தல் காலப்பகுதியினுள் பேணிச் செல்ல முடியுமெனில், அது ஓரளவுக்கு பிரச்சார அலுவல்களின் போது வன்முறை செயல்கள் குறைவடைவதற்கு காரணமாக அமைய முடியும்.

அஞ்சல் வாக்களிப்பு

479. இலங்கையில் நடாத்தப்படுகின்ற அனைத்துத் தேர்தல்களின் போதும் குறித்த தேர்தல் சட்டத்திற்கமைய ஒரு பகுதியினர் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான தகைமையினைப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வகுதிக்குள் பிரதானமாக தேர்தல் அலுவல்களுக்காக தேர்ந்தெடுக்கப்படவுள்ள பணியாட் குழுவினரும் மற்றும் இலங்கை பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவுகளின் அலுவலர்களும் உள்ளடங்குகின்றனர். இதற்கு மேலதிகமாக பொதுப் போக்குவரத்து சேவை, அஞ்சல் மற்றும் அரச சேவையின் தொலைதொடர்பாடல் சேவைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கும் அவ்வசதிகள் வழங்கப்படுகின்றன.

480. தேர்தலுக்கான வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர் வாக்கெண்ணல் அலுவல்கள் நிறைவடையும் வரை அஞ்சல் வாக்காளர்களின் வசதிக்காக பாரியளவு பணிப்பொறுப்புக்களை ஆற்றுவதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு நேரிடுகின்றது. அஞ்சல் வாக்கு செயற்பாடுகளின் போது அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு பாரிய பொறுப்பொன்று கையளிக்கப்படுகின்றது. அவ்வாறே வேட்புமனுக் காலம் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்குத் தேவையான வாக்காளர்களுக்கு, வாக்காளர் இடாப்பின் தனது பதிவு தொடர்பான தகவல்களை தேடிக் கொள்வதற்குத் தேவையான வசதிகள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

481. அஞ்சல் வாக்கு வசதி கோருகின்ற ஒருவரின் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. அதில் உள்ளடக்கப்படுகின்ற வாக்காளரின் பதிவு விபரங்களின் குறைபாடுகள் விண்ணப்பம் அத்தாட்சிப்படுத்தல் குறைபாடுகள் போன்றே விண்ணப்பத்தில் விண்ணப்பதாரி கையொப்பமிடாமை போன்ற விடயங்கள் அவற்றில் பிரதானமானவைகளாகும். அதேபோன்று அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை அடையாளமிட்ட பின்னர் அவரின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் ஊடாக தெரிவத்தாட்சி அலுவலருக்கு அவற்றை சமர்ப்பிக்கும் போது ஏற்படக் கூடிய குறைபாடுகளும் அஞ்சல் வாக்கு சீட்டொன்று நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும். இதன் காரணமாக சாதாரண வாக்குச் சீட்டொன்று நிராகரிக்கப்படுவதற்குள்ள வாய்ப்புக்களை விட அதிக வாய்ப்புக்கள் அஞ்சல் வாக்காளர்களின் கோரிக்கை மற்றும் அவர்களின் வாக்குச் சீட்டு என்பன நிராகரிக்கப்படுவதற்கு உள்ளதென குறிப்பிட முடியும். 10 ஆம் இலக்க குறிப்பில் இம்முறை மாகாண சபைத் தேர்தலின் போது கிடைக்கப்பெற்ற அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களின் எண்ணிக்கை, நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் அவை நிராகரிக்கப்படுவதற்கான காரணங்கள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை கிடைக்கப்பெற்ற மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் 20.63% ஆகும். நிராகரிக்கப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 87,409 என்பதோடு அவற்றின் அதிக எண்ணிக்கையானவை அவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த தகவல்கள் பிழையாக இருந்தமையினாலும் மற்றும் விண்ணப்பங்கள் உரிய காலப்பகுதியினுள் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கப்பெறாமையினாலும் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவ்விரு காரணங்களின் கீழ் மொத்தமாக நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் 81.28% நிராகரிக்கப்பட்டுள்ளது.

482. தேர்தலொன்றின் போது அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக தகைமை பெறுகின்ற வாக்காளர்கள் அரச பிரிவுகளில் தொழில்களிலீடுபட்டுள்ளவர்கள் என்பதால் பொதுவாக ஏனைய வாக்காளர்களை விட அவர்களின் அறிவு உயர்மட்டத்தில் உள்ளதென ஏற்றுக் கொள்ள வேண்டும். இருப்பினும். அஞ்சல் வாக்கு கோரும் போது அவர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்களின் குறைபாடுகள் மற்றும் உரிய உறையில் வாக்களித்து குறித்த வாக்குச் சீட்டை அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆளடையாள படிவத்தோடு உரிய காலப்பகுதியினுள் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு சமர்ப்பிக்காமை காரணமாக அவை நிராகரிக்கப்படும் சதவீதம் தொடர்ந்தும் உயர் மட்டத்தில் காணப்படுகின்றது. இந்நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு அஞ்சல் வாக்குரிமை பெறுகின்ற தரப்பினர் போன்றே அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்துகின்ற அலுவலர்களையும் அறிவுறுத்தி குறித்த செயற்பாடுகளை மீண்டும் மீளாய்வு செய்து அதன் குறைபாடுகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கையெடுப்பது கட்டாயமாகும்.

483. அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படும் போது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் கடமை நிலையங்களில் பிரசன்னமாகியிருப்பதற்கு, தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கு மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு இரண்டு முகவர்கள் வீதம் நியமனம் செய்வதற்கு 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேர்தல்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. இந்த சட்ட ஏற்பாடுகளை பயனுள்ள விதத்தில் நடைமுறைப்படுத்துவதை அசௌகரியமான ஒரு விடயமாக மாறியுள்ளது. அதற்குக் காரணம் அஞ்சல் வாக்காளர்களின் கடமை நிலையம் அவர் வாக்காளராக பதிவு செய்யப்பட்டுள்ள மாவட்டத்துக்கு வெளியில் அமையப் பெற்றுள்ள போது குறித்த மாவட்டத்திற்காகப் போட்டியிடுகின்ற கட்சிகளுக்கு அல்லது சுயேச்சைக் குழுக்களுக்கு குறித்த மாவட்டத்திற்கு வெளியில், தூர இடமொன்றில் அமையப் பெற்றுள்ள கடமை நிலையங்களுக்கு தமது முகவர்களை நியமனம் செய்து அனுப்பி வைப்பது சிரமமானதாகும். இருப்பினும், அவ்வாறான கடமை நிலையங்கள் அமையப் பெற்றுள்ள மாவட்டத்திற்காகப் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஏதேனும் கட்சியொன்றின் சுயேச்சைக் குழுவொன்றின் முகவர்கள் வருகைதருவதற்கு இடமிருக்கின்ற காரணத்தினால் குறித்த அஞ்சல் வாக்கு அடையாளமிடும் இடங்களின் அலுவல்கள் எவரேனும் முகவர் குழுவொன்றின் கண்காணிப்புக்குட்படுகின்றமை தொடர்பில் திருப்தியடைய முடியும். இருப்பினும் பொதுவாக வடக்கு, கிழக்கு

மாகாணங்களில் பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் பெரும்பாலும் வேறு மாகாணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்கள் பணியாற்றுகின்றமையினால் அப்பணி நிலையங்கள் அமையப் பெற்றுள்ள பிரதேசங்களில் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சி அல்லது சுயேச்சைக் குழுக்களின் முகவர்கள் கடமை நிலையங்களுக்கு குறித்த தினங்களில் வருகைதராமல் இருப்பதற்கு பெரும்பாலும் இடமுண்டு. மேலும் பாதுகாப்புப் பிரிவுகளில் நிலவுகின்ற விஷேட தொழில் நிலைமையொன்றின் அடிப்படையில் தேர்தல்கள் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ள இரு தினங்களில் அப்பிரதேசங்களின் பாதுகாப்பு பிரிவுகளின் அஞ்சல் வாக்காளர்களுக்கு தமது அஞ்சல் வாக்குகளை அடையாளமிட்டு நிறைவு செய்து கொள்ள முடியாத நிலைமையொன்றும் காணப்படுகின்றது. இதன் காரணமாக பெரும்பாலும் முகவர்கள் இன்றி அஞ்சல் வாக்கு அடையாளமிடுதல் அவ்வாறான கடமை நிலையங்களில் இடம்பெறுவதற்கு வாய்ப்புண்டு.

484. அஞ்சல் வாக்கு முறைமையில் காணப்படும் இவ்வாறான நிலைமைகளுக்குத் தீர்வாக தேர்தல்கள் ஆணையாளரினால் விதிக்கப்படுகின்ற இரண்டு தினங்களில் மாத்திரம் வாக்குச் சீட்டுக்களை அடையாளமிட்டு மீதமடைகின்ற அஞ்சல் வாக்குகள் உள்ளடக்கப்பட்ட பக்கெற்றுக்களை விரைவாக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்குக் கையளிப்பதற்கு கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது தேவையான அறிவுறுத்தல்கள் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு கையேற்கப்படும் அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் தேர்தல்கள் அலுவலகங்களில் வாக்கெடுப்புக்கு முந்திய தினம் குறித்த கடமை நிலையங்களின் அஞ்சல் வாக்காளர்களைக் கொண்டு அடையாளமிடுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டதோடு, அவை தாமதமின்றி காப்புறுதி அஞ்சலில் குறித்த தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கும் பொறுப்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

485. மேற்குறித்தவாறு குறித்த இரு தினங்களிலும் அடையாளமிடப்படாத அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் அந்த அஞ்சல் வாக்காளர்களுக்கு அடையாளமிடுவதற்காக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் சந்தர்ப்பங்களை வழங்குவதற்கும் குறிப்பாக நாட்டில் ஒரு நாளில் நடாத்தப்படுகின்ற தேர்தலொன்றின் போது நடைமுறைப்படுத்துவது சிரமமாக அமையும்.

தேர்தல் பிரச்சார அலுவல்கள்

486. மாகாண சபைகள் தேர்தல் சட்டத்திற்கமைய வேட்பாளர்களின் வெற்றிக்காக பகிரங்கக் கூட்டங்களை நடாத்துதல், ஊர்வலங்களை நடாத்துதல், தேர்தலுக்குரிய பிரச்சார பத்திரங்களை அச்சிடல் மற்றும் விநியோகித்தல், அறிவித்தல்களை காட்சிப்படுத்தல் மற்றும் பிரச்சார அலுவல்களுக்காக தேர்தல்கள் அலுவலகங்களைப் பேணிச் செல்லல் போன்ற விடயங்கள் தொடர்பில் சிற்சில வரையறைகளின் கீழ் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கு மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே தற்காலத்தில் நவீன அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக முறைகளைப் பயன்படுத்தி தேர்தல் சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்படுகின்ற சில விதமான பிரச்சார செயல்கள் தற்கால தேர்தல் சட்ட ஏற்பாடுகள் மூலம் உள்ளடக்கப்படவில்லையென்பது தெரியவருகின்ற ஒரு விடயமாகும்.

487. தேர்தல் பிரச்சார அலுவல்கள் மற்றும் தேர்தல்களின் போது தேர்தல் வன்முறை செயல்கள் தொடர்பில் பொலிஸ் அலுவலர்களால் செயற்பட வேண்டிய முறை தொடர்பாக ஒவ்வொரு தேர்தல் சந்தர்ப்பத்தின் போதும் பொலிஸ் மா அதிபரினால் பொலிஸ் அலுவலர்களுக்கு எழுத்து மூல அறிவுறுத்தல் வெளியிடப்படும். தேர்தல்கள் ஆணையாளர், தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது போடடியிடுகின்ற தரப்பொன்றினால் தேர்தல் பிரச்சாரத்திற்குரிய முறைப்பாடொன்றைப் பொலிஸாருக்கு அனுப்பி வைக்குமிடத்து அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து துரிதமாக உரிய நடவடிக்கைகளையெடுத்தல் பொலிஸாரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

488. தேர்தல் காலப்பகுதியினுள் பொலிசாருக்குக் கையளிக்கப்பட்டுள்ள வழமையான கடமை அலுவல்கள் போன்றே சட்டம் மற்றும் அமைதியை பாதுகாத்தல், தேர்தல்

பிரச்சார அலுவல்களிலீடுபடுகின்ற தரப்புக்களுக்குப் பாதுகாப்பு வழங்கல் என்பன மேற்கொள்ளப்படும். அதேபோன்று தேர்தல் பிரச்சார அலுவல்களுக்காக இரண்டு மாதங்கள் வரையான காலப்பகுதியினுள் பல்வேறு கூட்டங்கள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றில் கலந்து கொள்கின்ற பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கும் மற்றும் வேட்பாளர்களுக்கும் பாதுகாப்பு வழங்குதல் பொலிஸாரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். பாராளுமன்றத்தைப் பிரதிநித்துவம் செய்கின்ற அமைச்சர்கள் போன்றே மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கும் பொலிசாரினால் விஷேட பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு வழங்கப்படும். இவ்வாறான நிலைமையொன்றினுள் தேர்தல் காலப்பகுதியின் போது அது தொடர்பான சட்டங்களை மீறுகின்ற போது சந்தர்ப்பங்கள் தொடர்பில் முக்கியத்துவம் வழங்கி துரிதமாக செயற்படுதல் தொடர்பில் சிற்சில இடையூறுகள் ஏற்படுவதாக தெரிகின்றது.

அரச ஆதனங்களை அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துதல்.

489. தேர்தல் காலப்பகுதியினுள் அரசுக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையாத சொத்துக்களை கட்சியொன்றின், சுயேச்சைக் குழுவொன்றின் அல்லது வேட்பாளரொருவரின் தெரிவை ஊக்குவிப்பதற்கு அல்லது தடுப்பதற்கு காரணமான விதத்தில் பயன்படுத்துவதை தடைசெய்யும் அதிகாரம் அரசியலமைப்பின் 104 ஆ (4) (அ) உறுப்புரையின் கீழ் தேர்தல் திணைக்களத்திற்கு / தேர்தல்கள் ஆணையாளருக்கு உள்ளது.

490. இம்முறை மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தின் போது இவ்வாறு அரச சொத்துக்களை பயன்படுத்தல் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் அது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வேறு அத்தியாயமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்முறைப்பாடுகளில் உண்மையானவையென தேர்தல்கள் திணைக்களத்திற்குத் தெரியவந்த முக்கிய முறைப்பாடுகள் இவ்வறிக்கையில் குறித்த மாவட்டங்களுக்கமைய குறிப்பிடப்பட்டுள்ளது. அரச வாகனங்கள் மற்றும் கட்டிடங்கள் முறையற்ற அடிப்படையில் தேர்தல் அலுவல்களுக்காக பயன்படுத்தல் அரச ஊழியர்கள் சில கட்சிகளினால் அவர்களின் கடமை நேரத்தினுள் தேர்தல் பிரச்சார அலுவல்களில் ஈடுபடுத்தல், அரச வைபவங்களை வேட்பாளர்களின் வெற்றிக்காக ஏற்பாடு செய்தல், அலுவலர்களைக் கொண்டு வாக்காளர்களுக்குப் பல்வேறுபட்ட அழுத்தங்களை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதோடு, அவை தொடர்பாக குறித்த தரப்புக்களுக்கு அறிவித்து பொருத்தமான வழிகாட்டல்களை மேற்கொண்டு அவ்வாறான அலுவல்களை தடுப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

491. மேற்குறிப்பிட்டவாறு அரச சொத்துக்கள் அரசியல் கட்சிகளினால் தமது தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளல் மிக சூட்சகமாக அரசியல் அதிகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளல், சில அரசியல் அலுவலர்களின் அனுசரணையின் அடிப்படையில் அவ்வாறானவைகள் இடம்பெறல் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற சில பொலிஸ் அலுவலர்களின் அறிந்த நிலையில் மற்றும் பாதுகாப்பினுள் அவ்வாறானவைகள் இடம்பெறுகின்றமை காரணமாக அவ்வாறான செயல்களை தடுப்பதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்கள் மேற்கொண்ட முயற்சிகள் முழுமையாக வெற்றியடைந்ததாக குறிப்பிட முடியாது. இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பங்களில் அவை தொடர்பாக தகவல்களை வழங்குமாறு அல்லது அவ்வாறான செயல்களை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிசார் மற்றும் குறித்த ஏனைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கிய போதிலும் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல் திருப்திகரமான மட்டத்தில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டமை தெரியவரவில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது பொலிஸ் அலுவலர்களோடு பணிகளை மேற்கொண்ட வேறு திணைக்களங்களின் அலுவலர்கள் போன்றே தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது சில பொலிஸ் அலுவலர்களின் ஒத்துழைப்பு எமது திணைக்களத்தின் அலுவலர்களுக்குக் கிடைக்கவில்லையென்பது மாத்திரமன்றி சில

அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் தேர்தல் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு எதிராக இவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் முயற்சித்தனர்.

492. இத்தகையை பல்வேறு சந்தர்ப்பங்களில் தேர்தல் அதிகாரிகளுக்கெதிரான முறைப்பாடுகள் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க பொலிசார் நடவடிக்கையெடுத்துள்ளதோடு அத்தகைய சந்தர்ப்பங்களில் தேர்தல் அலுவலர்களுக்கு அரசாங்க சட்டத்தரணிகளின் ஒத்துழைப்பு கிடைக்காமையினால் தனிப்பட்ட செலவில் சட்டத்தரணிகளின் உதவியினை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தமை கவலைக்குரிய விடயமாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் நலன்புரி சங்கங்கள், சகோதர அலுவலர்களின் ஒத்துழைப்பு கிடைக்காதவிடத்து அத்தகைய அலுவலர்களுக்கு உள அழுத்தங்களுக்கு மேலதிகமாக பொருளாதார அழுத்தங்களையும் சந்திக்க வேண்டிவரும். இத்தகைய சந்தர்ப்பங்களில் தேர்தல் அலுவலகங்களுக்கு முறையாக பாதுகாப்பு மற்றும் சட்டத்தரணி ஒத்துழைப்பு தொடர்பான நடைமுறைகளை தயாரித்து மேற்கொள்ளல் இன்றியமையாததாகும். இது தொடர்பாக உரிய செயன்முறைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டவண்ணமுள்ளன.

493. இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக தேர்தல் காலப்பகுதியினுள் முறைப்பாடுகளை கையேற்பதற்காக விஷேட நிலையங்கள் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு அண்மையிலும் மற்றும் பிரதேச செயலகங்கள் போன்ற இடங்களிலும் தாபிக்கப்பட்டிருந்ததோடு, அந்நிலையங்களுக்குக் கீழே காட்டப்பட்டுள்ளவாறான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

494. தேர்தல் சந்தர்ப்பங்களின் போது அரச சொத்துக்களுக்குப் பொறுப்பாளர்களான அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், அரச கூட்டுத்தாபன தலைவர்கள், பொலிஸார், பாதுகாப்புப் பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் தலைவர்கள் தமது பொறுப்பிலுள்ள அரச சொத்துக்களை மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறையற்ற விதத்திலும் மற்றும் சட்டவிரோதமான அடிப்படையிலும் பயன்படுத்துவதைத் தடைசெய்து தேர்தல்கள் ஆணையாளரால் அறிவித்தல் கொடுக்கப்படும். இவ்வாறான அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் தொடர்பாக தேர்தல் சந்தர்ப்பங்களின போது தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக தேவையான அறிவுறுத்தல்கள் சகிதம் பொலிஸ் மா அதிபருக்கு அல்லது சொத்துக்களின் பொறுப்பாண்மை வகிக்கின்றவர்களுக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளோடு அறிவித்தல் அனுப்பி வைக்கப்படும்.

495. மேற் குறித்தவாறான அறிவித்தல் வழங்குவதன் மூலம் தேர்தல்கள் திணைக்களத்திற்கு எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்வது அசௌகரியமாயுள்ளது என்பது தெளிவாக தெரிகின்றது. அதற்கு பிரதானமாக பின்வரும் காரணங்கள் செல்வாக்கு செலுத்தியுள்ளதெனக் குறிப்பிட முடியும்.

அ. அரச சொத்துக்களுக்குப் பொறுப்பாக இருக்கின்ற பெரும்பாலான அரச அலுவலர்கள், தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களை கருத்தில் கொள்ளாது அரசின் ஆட்சி அதிகாரம் கொண்டுள்ள அரசியல் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு சட்டத்தின் ஊடாக சென்று அரச சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கின்ற விதத்தில் மௌன போக்கொன்றை பின்பற்றுதல்.

ஆ. பிரதேச மட்டத்தில் பொலிஸ் அலுவலர்கள் பெரும்பாலும் ஆளும் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களின் தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பாக சட்டத்திற்கமைய செயற்படாமை.

இ. பெரும்பாலான அரச அலுவலர்கள் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் இவ்வாறு அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்களை தடுப்பதற்கு அச்சம் தெரிவித்தல் மற்றும் அது தொடர்பில் கடமைகளை ஆற்றுவதிலிருந்து தவிர்ந்திருத்தல்.

496. அரச சொத்துக்கள் இவ்வாறு தேர்தல் சந்தர்ப்பங்களின் போது அரசியல் கட்சிகளுக்கும் அவற்றின் வேட்பாளர்களுக்கும் பயன்படுத்தக்கூடிய விதத்திலான வாய்ப்புக்கள் தற்காலத்தில் ஏற்பட்டு உள்ளமை கண்காணிக்கப்பட்டுள்ளது. இந்நாட்டின் சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றப் பொதுத்

தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் என்பன நடாத்தப்பட்டு முகவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதில் ஒரு தேர்தல் நடாத்தப்படுகின்ற போது ஏனைய பொதுமக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களில் ஏதேனுமொரு அரசியல் கட்சியொன்று அதிகாரத்தை கொண்டிருக்கும். அவர்கள் தேர்தலொன்றில் தமது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடுகின்ற வேட்பாளரின் வெற்றிக்காக தான் பதவி வகிக்கின்ற பொதுமக்கள் பிரதிநிதித்துவ நிறுவனத்தின் சொத்துக்களை தனக்குள்ள சிறப்புரிமைகளைப் பயன்படுத்திக் கொண்டு தேர்தல் பிரச்சார அலுவல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும். இதன் காரணமாக அரச ஆட்சி அதிகாரம் கொண்டுள்ள அரசியல் கட்சிக்கும் அதன் வேட்பாளர்களுக்கும் வேறு கட்சிகளின் வேட்பாளர்களுக்கு இல்லாத முறையற்ற அதிகாரமும் பாதுகாப்பும் தேர்தல் சந்தர்ப்பங்களின் போது கிடைக்கப்பெறும். இதன் காரணமாக தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் தேர்தலில் சமமாக போட்டியிடுகின்ற சந்தர்ப்பமொன்று கிடைப்பதில்லையென்பது தெளிவான ஒரு விடயமாகும். இவ்விடயம் தற்காலத்தில் அரசியல் கட்சிகளதும் மற்றும் வேறு தரப்புக்களதும் விமர்சனத்திற்குட்பட்டுள்ள ஒரு விடயமாகும். அதேபோன்று மக்களது செலவில் தமது அரசியல் அலுவல்களை மேற்கொள்கின்ற அரசியல் கட்சிகள் இது தொடர்பில் அவதானம் செலுத்தவில்லையென்பது தெரிகின்றது. இதன் காரணமாக விட்டுவிட்டு தேர்தல் நடாத்துதல் வாக்காளர்களுக்கு நிருவாக அலுவல்களில் பங்குக் கொள்வதற்காக கிடைக்கப்பெறுகின்ற சந்தர்ப்பத்தை விட அதிகாரத்திலுள்ள அரசியல் கட்சிகளின் அதிகாரம் பல்வேறு அரசியல் மட்டங்களின் போது மேலும் விருத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற அரசியல் மூலோபாயமாகத் தெரிகின்றது.

தேர்தல் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்தல்.

497. மாகாண சபைத் தேர்தலுக்குரிய சட்ட ஏற்பாடுகள் இலங்கை அரசியல் யாப்பினாலும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்திலும், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 126 ஆம் பிரிவுக்கமைய அச்சட்டத்தின் கீழ் தேர்தல் நடாத்துவதை நிறுவகித்தல், சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை நடைமுறைப்படுத்தல் என்பன தேர்தல்கள் ஆணையாளரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

498. பதினேழாம் மற்றும் பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தங்களுக்கமைய தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்படும் வரை, இச்சபைக்குரிய தத்துவங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தேர்தல்கள் ஆணையாளருக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு 103(2) ஆம் உறுப்புரைக்கமைய நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் மற்றும் மக்கள் தீர்ப்பு என்பவற்றை நடாத்துவது தேர்தல் ஆணைக்குழுவின் நோக்கமாகவிருத்தல் வேண்டும். அரசியலமைப்பில் 104ஆ உறுப்புரையில் தேர்தல் ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தலொன்று அல்லது மக்கள் தீர்ப்பொன்று நடாத்துவதற்குரிய அனைத்து சட்டங்களையும் நடைமுறைப்படுத்தல், பாதுகாத்தல் ஆணைக்குழுவின் பணிப்பொறுப்பாகவிருக்க வேண்டுமென்பதோடு, அவ்வாறு சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்வதற்காக ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவது அச்சட்டங்களை செயல்வலுப் பெறச் செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அரச அலுவலர்களின் பணியொன்றென அரசியலமைப்பின் 104ஆ(2) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

499. தேர்தல் ஆணைக்குழுவுக்கு தேர்தல் சந்தர்ப்பமொன்றின் போது பொலிஸாரை ஈடுபடுத்திக் கொள்வதற்குள்ள தத்துவம், ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படுகின்றவாறு கோருகின்ற விதத்தில் பொலிஸ் மா அதிபரினால் வழங்குகின்ற பொலிஸ் அலுவலர்கள் நீதியாகவும் மற்றும் சுதந்திரமாகவும் தேர்தலொன்றை நடாத்துவதற்கு திட்டமிட்ட அடிப்படையில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமெனவும் அரசியலமைப்பின் 104 இ உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஈடுபடுத்திக் கொள்ளப்படுகின்ற அனைத்து பொலிஸ் அலுவலர்களும் கையளிக்கப்பட்டுள்ள கடமைகளை ஆற்றும் போது தேர்தல் ஆணைக்குழுவுக்கு பொறுப்புக் கூற கடமைபட்டுள்ளனர் என்பதோடு, அவர்கள் அதன் கட்டளைகளுக்கும் நிருவாகத்திற்கும் கட்டுப்பட்டுள்ளனர்.

500. மேலே குறிப்பிட்ட சட்ட ஏற்பாடுகளுக்கமைய இந்த நாட்டில் சட்டமாக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்புக் கையளிக்கப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணையாளர், பொலிஸ் மா அதிபர் மற்றும் அரச அலுவலர்கள் ஆகியோர் நீதியாகவும் சுதந்திரமாகவும் தேர்தல்களை நடாத்துவதற்கு அர்ப்பணிப்போடு பணிகளை மேற்கொள்ளல் வேண்டும்.

501. தேர்தல் காலப்பகுதியொன்று பொதுவாக 06 வாரங்கள் அல்லது 8 வாரங்கள் வரையான காலப்பகுதியொன்றுக்கு வரையறுக்கப்படும். தேர்தல் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்வதற்கான பொறுப்புக் கையளிக்கப்பட்டுள்ள பிரிவுகள் அக்காலப்பகுதியினுள் குறித்த சட்டங்களை நடைமுறைப்படுத்தி வாக்காளருக்கும் மற்றும் ஏனைய உரிய தரப்புக்களுக்கும் நீதியை நிலைநாட்டவில்லையெனில், அவர்கள் நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக அவர்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பு ஆற்றப்பட மாட்டாது. தேர்தல்கள் ஆணையாளர், அரச அதிகாரிகள், பொலிஸார் இச்சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்ய வேண்டியது நாட்டில் காணப்படும் பொதுவான நிருவாக பொறிமுறையின் ஊடாகவே மாத்திரமாகும். தேர்தல் காலப்பகுதியின் போது அவ்வாறு காணப்படும். பொதுவான நிருவாக முறைக்கு இணங்கியதாக தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு செல்லும் போது ஏற்படுகின்ற தாமதம் காரணமாக ஒரு சில தரப்பினர் அநீதிகளுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றமையை தவிர்க்க முடியாது. தேர்தல் சந்தர்ப்பங்களின் போது சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் தாமதங்கள் காரணமாக மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தும் போது அதிகாரிகள் பொறுப்புக்களை கைவிடுவதன் காரணமாக சில அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் ஏற்படக்கூடிய சிரமங்கள் மற்றும் அநீதிகள் தொடர்பாக தேர்தல்கள் திணைக்களத்திற்கு இம்முறை தேர்தலின் போது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

502. தேர்தல் சந்தர்ப்பமொன்றின் போது உடனடியாக தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய அதிகாரிகள் உரிய நேரத்தில் சரியான முறையில் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வராத நிலைமையொன்றின் போது தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்துத் தரப்புக்களுக்கும் சட்டத்தினூடாக வழங்கப்பட்டுள்ள சமமான மற்றும் நீதியான சந்தர்ப்பம் கிடைக்கப்பெறுகின்றதாவென்பது சந்தேகத்திற்குரியதாகும்.

503. அரசியல் யாப்பின் 104 இ உறுப்புரைக்கு அமைய தேர்தல்கள் காலத்தினுள் அனைத்து பொலிஸ் அலுவலர்களும் கையளிக்கப்பட்ட கடமைகளை ஆற்றும் போது, தேர்தல் ஆணைக்குழுவிற்கு பொறுப்புக் கூற அவர்கள் கடப்பாடுடையவர்கள் என்பதாலும் மற்றும் அதன் கட்டளைகளுக்கும் நிருவாகத்திற்கும் கட்டுப்படுகின்றமையாலும் தேர்தல்கள் ஆணையாளர் போன்றே தெரிவத்தாட்சி அலுவலர்களும் தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக, குறிப்பாக தேர்தல் சட்டங்கள் மீறப்படுகின்ற போது பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு இம்முறை தேர்தலின் போது பொலிஸ் அலுவலர்களுக்கும் மற்றும் பல மட்டங்களின் அரச அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கினர். அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் போன்றே தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புக்களாலும் சில வேட்பாளர்கள் தேர்தல் சட்டங்களை மீறி செயற்படுகின்ற விதம் தொடர்பாக தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் தேர்தல்கள் ஆணையாளருக்கும் முறைப்பாடுகளைச் சமர்ப்பித்திருந்தனர். பொலிஸ் அலுவலர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சட்டவிரோத பிரச்சார அறிவித்தல்களை அகற்றுமாறு தேர்தல் ஆணையாளரால் செய்யப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படவில்லையென தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்கள் ஊடாக பெற்றுக் கொண்டு அந்த பொலிஸ் அலுவலர்கள் கடமைகளை சரிவர மேற்கொள்ளாமை தொடர்பான விடயங்கள் தேர்தல்கள் ஆணையாளரால் உறுதிசெய்து கொள்ளப்பட்டது. நேரடியாக தேர்தல்கள் ஆணையாளர் நிதியான தேர்தலொன்றை நடாத்தும் நோக்கத்தோடு நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கிய சில அறிவுறுத்தல்கள் சில பொலிஸ் அலுவலர்கள் ஏற்றுக் கொண்டு நடவடிக்கையெடுக்கவில்லையென்பது இதிலிருந்து தெரிகின்றது.

504. இலங்கை அரசியல் அமைப்பின் 18 ஆம் திருத்தத்தின் மூலம் உட்சேர்க்கப்பட்ட 155 ஊஊ உறுப்புரைக்கமைய, பொலிஸ் அலுவலர்

ஒருவருக்கு அல்லது படையணிக்கு எதிராக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளை கையேற்றல் மற்றும் அது தொடர்பாக விசாரிப்பதற்கு பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்க வேண்டுமென்பதோடு, அவ்வாறு முறைப்பாடுகளைக் கையேற்றல் மற்றும் விசாரிப்பதற்கு தேவையான செயலொழுங்குகளை வகுப்பதற்குரிய சட்டவிதிகளை வகுக்க முடியும். இவ்வாறு வகுக்கின்ற சட்டவிதிகளை வர்த்தமானியில் வெளியிட வேண்டும். இவ்வாறு செயற்படுவது தேர்தல் காலப்பகுதியினுள் பொலிஸ் அலுவலர்களால் ஆற்றப்பட வேண்டிய கடமைகளை உரிய அடிப்படையில் ஆற்றிக்கொள்வதற்கு உதவியாக அமையும்.

505. இம்முறை மாகாண சபைத் தேர்தலின் போது பொலிஸ் மா அதிபர் தேர்தலுக்குரிய கடமைகளை ஆற்றுவதற்கான அறிவுறுத்தல்கள் அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருந்ததோடு, அதற்கு மேலதிகமாக தேர்தல்கள் ஆணையாளர் அவர்களாலும் அவ் அலுவலர்களுக்கு விநியோகிப்பதற்காக அறிவுறுத்தல்கள் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்டது. இவ்வாறான நிலைமையொன்றின் கீழ் தேர்தல் அலுவல்கள் மற்றும் தொடர்புடையதான பொலிஸ் அலுவலர்களுக்கு கையளிக்கப்பட்ட கடமைகள் மற்றும் அவர்களின் பொறுப்புக்கள் தொடர்பாக இந்நாட்டின் பிரதான சட்டங்கள் மற்றும் அரசியல் யாப்பு உள்ளிட்ட ஏனைய ஆவணங்களில் தெளிவாகக் குறிப்பிடப்படடுள்ள போதும் மற்றும் அது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் பொலிஸ் அலுவலர்களை அறிவுறுத்தி உள்ள போதும் தொடர்ச்சியாக தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக அவர்கள் செயற்படாது இருப்பதன் மூலம் இந்நாட்டின் சனநாயக தேர்தல்கள் முறைமைக்கு பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் செயற்பட வேண்டிய துறைகள் மௌனமாக இருப்பது எமது நாட்டின் தேர்தல் செயற்பாடுகள் பின்னடைவதற்குக் காரணமாக உள்ளது. தேர்தல் கடமை அரச அலுவலர் ஒருவருக்கு கையளிக்கப்படுகின்ற விசேட கடமையொன்றென்பதோடு, அவர்கள் அதனை முறையாக ஆற்றுவது நாட்டில் தேர்தலொன்றை சுதந்திரமாகவும் மற்றும் நீதியாகவும் நடாத்துவதற்கு வாக்காளர்களின் உரிமைகளை முறையாக பாதுகாப்பதற்கும் காரணமாகும் என்பதால், அவர்களின் பொறுப்புக்கள் முறையாக ஆற்றப்படாமை நாட்டில் சனநாயக ஆட்சி முறை வீழ்ச்சியடைவதற்கு காரணமாக அமையும். அவ்வாறு கடமைகளை புறக்கணிப்பதன் காரணமாக மக்களிடத்தில் தேர்தல் தொடர்பாகவுள்ள நம்பிக்கை குறைவடையமுடியும். ஆதலால் தேர்தல் காலங்களின் போது பொலிஸ் அலுவலர்கள் மற்றும் பொலிஸ் படையணிக்கு கையளிக்கப்படுகின்ற கடமைகள் ஆற்றப்படாமை தொடர்பாக செயற்படுவதற்காக பொலிஸ் ஆணைக்குழுவிற்கு உள்ள தத்துவங்களின் அடிப்படையில் விசேட சட்ட ஒழுங்குகள் உரிய அலுவலர்களைக் கொண்டு தயாரிப்பதற்கு நடவடிக்கையெடுப்பது பொருத்தமாகும். அதற்கு தேர்தல்கள் ஆணையாளரின் கருத்துக்களையும் பெற்றுக் கொள்வது உசிதமாகும். அதே போன்று தேர்தல் கடமைகளை உரியவாறு மேற்கொள்ளாத மற்றும் தேர்தலுக்குரிய பணிகளை தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களை கருத்திற் கொள்ளாது அரசியல் கட்சிகளுக்கு நன்மையான வித்தில் பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கு உரியதாக அரச அலுவலர்களின் ஒழுக்காற்று அலுவல்களுக்கு பொறுப்பான பிரிவுகள் செயற்படுவதற்கான சந்தர்ப்பங்களை மிகவும் வலுப்பெறச் செய்தல் வேண்டும்.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகப் பாவனை

506. இலங்கை அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்ட பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அரசுக்கு சொந்தமான ஊடகங்கள் மூலம் தேர்தல் காலப்பகுதியின் போது ஒரு கட்சிக்கு அல்லது வேட்பாளருக்கு சார்பாக அல்லது பாதிப்பான விதத்தில் நிகழ்ச்சிகளை நடாத்துவது அல்லது பிரச்சாரம் செய்வது மேற்கொள்ளப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களை தடுப்பதற்கு ஊடக வழிகாட்டு நெறிகளை விதிப்பதற்கும் அவை மீறப்படுகின்ற போது உரிய அதிகாரம் பெற்ற அலுவலர் ஊடாக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அத்தத்துவங்கள் பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு அமைய அனைத்து ஊடக நிறுவனங்களுக்காகவும் தேர்தல் காலத்தின் போது வழிகாட்டு நெறிகளை வெளியிடுவதற்கு மாத்திரம் இடமளிக்கப்பட்டுள்ளது.

அவற்றை பின்பற்றும் பொறுப்பு குறித்த ஊடக நிறுவனங்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

507. இந்நிலைமையின் ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்படுதல் தொடர்பாக அரசியல் கட்சிகள் அல்லது வேறு பிரிவுகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டால் அது தொடர்பாக கவனம் செலுத்துமாறு குறித்த நிறுவனங்களை நினைவூட்டுதல் மாத்திரம் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.

508. தற்காலத்தில் உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஊடக சுதந்திரத்திற்குரிய விடயங்கள், காணப்படுகின்ற பல்வேறு விதமான ஊடக பயன்பாடுகள் என்பவற்றை கருத்திற் கொள்ளும் போது தேர்தல் காலப்பகுதியொன்றின் போது அதனோடு தொடர்புடையதாக வெளியிடப்படுகின்ற செய்திகள் மற்றும் அறிக்கைகள் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை அவதானித்து அது தொடர்பான அவதானிப்புக்களைப் பெற்றுக் கொண்டு ஊடக நிறுவனங்களுக்கு வழிகாட்டுவது கூட பாரிய கடமை அலுவலொன்றாக அமையும். இவ்வாறான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான பொறிமுறையொன்று மற்றும் மனித வளங்களும் தேர்தல்கள் திணைக்களம் வசம் காணப்படாத நிலைமையொன்றின் கீழ் ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தொடர்பாக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளை ஆராய்ந்து அது தொடர்பாக குறித்த நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க மாத்திரம் தேர்தல்கள் ஆணையாளருக்கு முடியும். இதன் காரணமாக ஊடக நிறுவனங்களின் பணிகளினால் சிரமங்களுக்குட்படுகின்ற அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள் சார்பாக தேர்தல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ள முடிந்த தலையீடுகள் மிக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பங்கேற்பு

509. 1978 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்நாட்டில் காணப்பட்ட தேர்தல் முறைமையின் கீழ் பாராளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராதிகார சபைத் தேர்தல் ஊடாகவும் அப்போதைய வாக்கெடுப்பு மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு அதிகூடிய வாக்குகளைப் பெற்றுக் கொண்ட வேட்பாளர்களை தெரிவு செய்யும் அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவ எதிர்பார்ப்போடு பாராளுமன்றத் தேர்தல் மாவட்டங்களுக்கிடையில் பல் அங்கத்தவர் மாவட்டங்கள் சிறு எண்ணிக்கையொன்று காணப்பட்டது. அப்போது காணப்பட்ட 160 பாராளுமன்றத் தேர்தல் மாவட்டங்கள், தற்போதைய மாவட்டங்களோடு ஒப்பிடும் போது பழைய மாவட்டங்கள் மிகச் சிறியதாகக் காணப்பட்டன. ஆதலால், சுயேச்சையான வேட்பாளர்களுக்கும் தமது தேர்தல் பிரச்சார அலுவல்களை இலகுவாக மேற்கொண்டு பாராளுமன்றம் அல்லது உள்ளூராதிகார சபை என்பவற்றுக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றது. 1978 ஆம் ஆண்டின் புதிய அரசியலமைப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட புதிய தேர்தல் சட்டத்திற்கமைய தாபிக்கப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் மாவட்டம் பரப்பளவில் பெரியதாகக் காணப்பட்டதோடு, அவற்றுக்காக வேட்பாளர்கள் குழுவொன்றாக போட்டியிடுதல் வேண்டும். அதன் பின்னர் தாபிக்கப்பட்ட மாகாண சபைகளின் வாக்கெடுப்பு அதிகார பிரதேசம் நிருவாக மாவட்டமொன்றின் அளவிற்கு பெரியதாகக் காணப்பட்டதோடு, உள்ளூராதிகார சபைத் தேர்தலின் போது மொத்த உள்ளூராதிகார சபை அதிகார பிரதேசமும் ஒரு வாக்கெடுப்பு அதிகார பிரதேசமாக மாற்றமடைந்தது. அது தவிர மேலும் பல புதிய விடயங்கள் புதிய தேர்தல் முறைமையில் உள்ளடங்கியிருந்தது. குறித்த வேட்பாளர் குழுவுக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது அவ்வாறின்றி சுயேச்சைக் குழுவொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. 1987 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட மாகாண சபைகள் மூலம் பன்முகப்படுத்தப்பட்ட நிருவாக அதிகார சபையொன்றுக்கு மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கான சந்தர்ப்பம் வாக்காளர்களுக்குக் கிடைக்கப்பெற்றதோடு, அவற்றில் அதிகார பகிர்வு அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டது.

510. மாகாண சபைகள் மாகாண மட்டத்தில் கணிசமானளவு பன்முகப்படுத்தப்பட்ட அதிகாரம் கொண்ட, மாகாண கொள்கைகளைக் கூட வகுக்கக்கூடிய புதிய நிருவாக முறையொன்றைக் கொண்டதோடு அவற்றின் நிருவாக அதிகாரத்திற்காக முன்வருகின்ற தரப்பினர் தமது அரசியல் கட்சிகளின் கொள்கைகளையும்

நிகழ்ச்சித் திட்டங்களையும் சமர்ப்பித்து அதற்காக தேர்தல்களின் போது வாக்காளர்களிடம் நிருவாக அதிகாரத்தை கோருகின்றனர். இவ்வாறான பிரதிநிதிகள் நிறுவனமொன்றின் நிருவாகத்திற்காக தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனு படிவமொன்றைச் சமர்ப்பிக்கின்ற சுயாதீன நபர்களைக் கொண்ட குழுவொன்றுக்கு பொறுப்புக்களைக் கையளிப்பது எவ்வளவு தூரம் பொருத்தமானதென சிந்திப்பது உசிதமாகும். சிறியளவான தேர்தல் மாவட்டமொன்றில் போட்டியிடுகின்ற சுயேச்சை வேட்பாளர் வெற்றியின் பின்னர் தனது பிரிவின் வாக்காளர்களுக்கு பொறுப்பு கூற வேண்டிய ஒருவரென்ற முறையில் நிருவாக அதிகாரம் கொண்ட கட்சியுடன் அல்லது பிரதான எதிர்க்கட்சியுடன் இணைந்து பாராளுமன்றத்தில் செயற்பட முடியும். தற்காலத்தில் தேர்தல் மாவட்டமொன்றுக்காக பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றமையினால் அவர்கள் அரசியல் கட்சியொன்றைப் பிரதிநிதித்துவம் செய்கின்றவர்களாயினும் வாக்கெடுப்புப் பிரிவின் வாக்காளர்களுக்கு கூடுதலான கடப்பாடொன்று இல்லை. இது சமகால விகிதாசார முறையின் குறைபாடொன்றென அதிகமானோர் காணுகின்றனர். இவ்வாறான நிலைமையொன்றின் கீழ் சுயேச்சைக் குழுவொன்றில் கீழ் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் மாகாண சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் தற்போதைய தேர்தல் முறைமையின் கீழ் வட்டாரத்தின் வாக்காளர்களுடனுள்ள தொடர்பு குறைவானதென்பதால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிருவாக மாவட்டத்திற்காக விஷேட சேவையொன்றை அவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாதென்பதோடு, பெரும்பாலும் அவ்வாறான ஒருவர் ஆட்சி அதிகாரம் உரித்துடைய கட்சியோடு இணங்கி செயற்படுவாரென நம்ப முடியும்.

511. இம்முறை மாகாண சபைத் தேர்தலின் போது 9 மாகாணங்களின் 25 மாவட்டங்களில் போட்டியிட்ட சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை 214 ஆகும். இவற்றில் 55 குழுக்கள் கிழக்கு மாகாணத்திற்குரியன. அதில் 21 குழுக்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் 18 குழுக்கள் அம்பாறை மாவட்டத்திலும் மேலும் 16 குழுக்கள் திருகோணமலை மாவட்டத்திலும் போட்டியிட்டன. அதற்கு மேலதிகமாக கேகாலை, புத்தளம் மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களிலும் 10 இற்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் வீதம் போட்டியிட்டன. இம்முறை போட்டியிட்ட அனைத்து சுயேச்சைக் குழுக்களும் (214) பெற்றுக் கொண்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 54,062 ஆகும். அது 9 மாகாணங்களிலும் செல்லுபடியான 9,158,279 வாக்குகளில் 100 இற்கு 0.59 வீதமாகும். எந்தவொரு குழுவிலிருந்தும் ஒரு வேட்பாளர் கூட தேர்ந்தெடுக்கப்படாமையினால் அனைத்து குழுக்களதும் கட்டுப்பணம் அரசுடமையாக்கப்பட்டுள்ளது. சில மாவட்டங்களில் போட்டியிட்ட சுயேச்சைக் குழுக்களுக்கு அவர்களில் குழுக்களிலுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கைக்குச் சமமான வாக்குகளைக்கூட பெற முடியாது போயுள்ளது. அக்குழுக்களில் மட்டக்களப்பு மாவட்டத்தின் 04 சுயேச்சைக் குழுக்களும், அம்பாறை மாவட்டத்தில் 08 குழுக்களும், திருகோணமலை மாவட்டத்தில் 04 குழுக்களும் மன்னார் மாவட்டத்தில் 06 குழுக்களும், வவுனியா மாவட்டத்தில் 01 குழுவும் அடங்கும்.

512. 09 மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடாத்தும் சந்தர்ப்பத்தின் போது 64 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் காணப்பட்டதோடு, அவற்றில் 35 கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டன. ஒரு மாவட்டத்திற்காக போட்டியிட்ட ஆகக் குறைந்த அரசியல் கட்சிகளின் எண்ணிக்கையான 9 கட்சிகள் வீதம் அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய நிருவாக மாவட்டங்களுக்காக போட்டியிட்டதோடு, ஆகக் கூடுதலான அரசியல் கட்சிகளின் எண்ணிக்கையான 18 அரசியல் கட்சிகள் கொழும்பு நிருவாக மாவட்டத்திற்காக போட்டியிட்டன. 22 ஆம் இலக்க குறிப்பில் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழ் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்வரசியல் கட்சிகள் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கைக்கமைய, 500 வாக்குகள் அல்லது அது மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுக் கொண்ட கட்சிகளின் எண்ணிக்கை வகையீடு செய்யப்பட்டு காட்டப்பட்டுள்ளது. 16 மாவட்டங்களின் கீழ் போட்டியிட்ட அரசியல் கட்சிகளில் அரைவாசிக்கு மேற்பட்ட கட்சிகளுக்கு 500 இற்கு மேற்பட்ட வாக்குகளை பெற்றுக் கொள்ள முடியவில்லை. 19 ஆம் இலக்க அட்டவணையில் 9 மாகாண சபைகளில் 437 உறுப்பினர் பதவிகளை உரித்தாக்கிக் கொண்டுள்ள அரசியல் கட்சிகளின் பெயர்ப்பட்டியல்களும் அக்கட்சிகள் போட்டியிட்ட மாவட்டங்களில் செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையும் அவ்வெண்ணிக்கையில் குறித்த கட்சி பெற்றுக் கொண்ட வாக்குகளின் சதவீதமும் காட்டப்பட்டுள்ளது. மேலும் கட்சிகள் போட்டியிட்ட

மாகாண சபைகளின் எண்ணிக்கை, நிருவாக மாவட்டங்களின் எண்ணிக்கை என்பனவும் அவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய மூன்று அரசியல் கட்சிகள் அனைத்து மாவட்டங்களுக்காகவும் போட்டியிட்டு ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட கட்சிகளாகும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் நாட்டின் நிருவாக மாவட்டங்களில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் 80% இற்கு மேற்பட்ட வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சில அரசியல் கட்சிகள் மாவட்டத்தின் கீழ் போட்டியிட்ட தமது கட்சியின் வேட்பாளர் எண்ணிக்கைக்கு சமமான வாக்குகள் எண்ணிக்கையைக் கூட பெற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறான மூன்று அரசியல் கட்சிகள் அம்பாறை மாவட்டத்திலும் ஒரு அரசியல் கட்சி திருகோணமலை மாவட்டத்திலும் 05 அரசியல் கட்சிகள் கிளிநொச்சி மாவட்டத்திலும், நான்கு அரசியல் கட்சிகள் வீதம் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும், 5 அரசியல் கட்சிகள் முல்லைத்தீவு மாவட்டத்திலும், 02 அரசியல் கட்சிகள் மொணராகலை மாவட்டத்திலும் காணக் கூடியதாகவிருந்தது. இம்முறை போட்டியிட்ட 35 அரசியல் கட்சிகளில் 24 அரசியல் கட்சிகள் 7000 ஐ விட குறைவான வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளன.

513. மேலே குறிப்பிட்டவாறு மாகாண சபைகளுக்காக போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் அனைத்தும் மாகாண சபையின் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உண்மையாக போட்டியிடுகின்றன என்பதை ஏற்றுக்கொள்ள முடியாத பல காரணங்கள் காணப்படுகின்றன. அரசியல் கட்சிகளுக்கு அல்லது சுயேச்சைக் குழுக்களுக்கு தேர்தல் செயன்முறைகளின் பல்வேறு சந்தர்ப்பங்களைக் கண்காணிப்பதற்கான முகவர்களை நியமனம் செய்வதற்கு சமமான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அஞ்சல் வாக்கு விநியோகம், அஞ்சல் வாக்கு அடையாளமிடல், வாக்கெடுப்பு தினத்தில் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளர்கள் வாக்களித்தல், வாக்கு மற்றும் விருப்புக்களை எண்ணல் மற்றும் முடிவுகளைத் தயாரித்தல் ஆகிய சந்தர்ப்பங்களில் பிரதிநிதித்துவம் செய்வதற்கு கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு முகவர்களை நியமனம் செய்வதற்கு இடமளிக்கப்படும். வாக்கெண்ணல் பணிகளுக்காக ஒரு கட்சி அல்லது குழுவுக்கு ஐந்து முகவர்கள் வீதமும் ஏனைய மேலே குறிப்பிடப்பட்ட எல்லா சந்தர்ப்பங்களிலும் இரண்டு முகவர்கள் வீதமும் நியமனம் செய்வதற்கு இடமளிக்கப்படும். பிரதான அரசியல் கட்சிகள் குறித்த இடங்களுக்கு நியமனம் செய்வதற்கு சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ள முகவர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக கலந்து கொள்ளச் செய்வதற்காக வேறு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதித்துவம் செய்வதற்குரிய சந்தர்ப்பங்களை பயன்படுத்துகின்றமை தெரிய வருகின்றது. இதற்காக சில பிரதான அரசியல் கட்சிகள் வேறு கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் போட்டியிடச் செய்கின்றமை தெரியவருகின்றது. அவ்வாறான கட்சிகள் அல்லது குழுக்கள் தேர்தல் காலப்பகுதியினுள் அவர்களின் கட்சி அல்லது குழுவை தேர்தலில் வெற்றிப் பெறச் செய்வதற்கு எவ்விதமான ஆர்வமொன்றையும் காட்டுவதில்லை. அவ்வாறு பெயரளவில் போட்டியிட்ட சில கட்சிகள் மற்றும் குழுக்கள் வேறு கட்சியொன்றின் வேட்பாளர்களின் வெற்றிக்காக பிரச்சார அலுவல்களை பேணி வந்த சந்தர்ப்பங்களும் தெரியவந்தன. இவ்வாறான பெயரளவிலான பிரச்சாரங்களை மையங்களை நடாத்துதலை கட்டுப்படுத்துதல் தொடர்பாக தேர்தல் அலுவலர்கள் மற்றும் பொலிசாருக்கு மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும்.

514. இவ்வாறு கட்சிகள் மற்றும் குழுக்கள் அதிகளவான எண்ணிக்கையில் போட்டியிட்டமை காரணமாக பெரும்பாலான மாவட்டங்களின் வாக்குச் சீட்டுக்கள் சிக்கல் அடைவதற்கும் அளவில் பெரிதடைவதற்கும் காரணமாகியுள்ளன. சில வாக்காளர்கள் சுயேச்சைக் குழுக்களின் வேறு பிரித்து அறிவதற்காக வாக்குச் சீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள இலக்கத்தை வேட்பாளர் இலக்கமென தவறாக புரிந்து அவற்றுக்கு விருப்பு வாக்களித்தமை காரணமாக வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்படுகின்றமை தெரியவருகின்றது. வாக்கெண்ணல் மண்டபங்கள், கட்சிகள் மற்றும் குழுக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற அதிக எண்ணிக்கையான முகவர்களுக்கு வசதி வழங்க நேரிடுகின்றமை காரணமாக வாக்கெண்ணல் ஒழுங்கமைப்பின் போது பாரிய இடையூறுகள் ஏற்படுகின்றன. இந்நிலைமை காரணமாக அதிகமான வாக்கெண்ணல் மண்டபங்களில் அலுவலர்களை விட அதிக எண்ணிக்கையான முகவர்களை காண முடியும். குறிப்பாக வாக்கெண்ணல்

பணிகளுக்காக வாக்கெண்ணல் முகவர்களை அதிக எண்ணிக்கையில் ஈடுபடுத்தி அவ்வலுவல்களை மிக நல்ல முறையில் கண்காணிப்புச் செய்வதற்கு அரசியல் கட்சிகள் எதிர்பார்க்கின்றன. போட்டியிடுகின்ற கட்சியொன்றை பிரதிநிதித்துவம் செய்கின்ற வேட்பாளர்கள் ஒரே கட்சியை சேர்ந்தவர்களாயினும் விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் அவர்களிடையே பலத்த போட்டி நிலவுவதால் உறுப்பினர் பதவி கிடைக்கப்பெற்ற கட்சிகளின் வேட்பாளர்கள் அனைவரும் விருப்பெண்ணல் சந்தர்ப்பம் தொடர்பில் கூடிய ஆர்வம் காட்டுகின்றனர். இது வாக்கெண்ணல் முகவர்களை அதிக எண்ணிக்கையில் நியமனம் செய்வதற்கு பிரதான அரசியல் கட்சிகள் ஆர்வம் காட்டுவதற்கு காரணமாகும். இம்முறை மாகாண சபைத் தேர்தல் சந்தர்ப்பத்தின் போது தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களோடு நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பயனாக இப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்காக உறுப்பினர் பதவி கிடைக்கப்பெற்ற கட்சிகளுக்கு தமது கட்சி வேட்பாளர்களின் விருப்புக்களை எண்ணுகின்ற சந்தர்ப்பத்தில் வாக்கெண்ணல் மண்டபங்களுக்குள் வேட்பாளர்கள் பிரவேசிப்பதற்கு விஷேட அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

515. சனநாயக ஆட்சி முறையொன்றின் கீழ் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றின் எண்ணிக்கையை நியாயமற்ற முறையில் மட்டுப்படுத்துவதற்கு சட்டங்களை விதிப்பது சிரமமானதெனினும் இதற்கு தீர்வொன்றாக சுயேச்சைக் குழுக்கள் சார்பாக வைப்புச் செய்ய வேண்டிய வைப்புப் பணத்தின் தொகையை அதிகரிப்பதற்கு சிலர் முன்மொழிந்துள்ளனர். அதற்கமைய அதிக தொகை கட்டுப்பணத்தை வைப்புச் செய்வதற்கு சிரமமான சுயேச்சைக் குழுக்கள் போட்டியிட மாட்டாதென நம்பப்படுகின்றது. ஒரு தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சியொன்று அப்போட்டி நடுவில் பகிரங்கமாக வேறு கட்சியொன்றுக்கு அல்லது கட்சியின் வேட்பாளரொருவருக்கு ஒத்துழைப்பு வழங்கி செயற்படுதல் மேலே குறிப்பிடப்பட்ட பெயரளவில் போட்டியிடுகின்ற சில கட்சிகளின் செயற்பாடாகக் காணப்படுகின்றது. இச்செயற்பாடு தொடர்பாக தேர்தல் காலப்பகுதியினுள் விசாரிப்பது அல்லது இடைநிறுத்துவதற்கு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது சிரமமான காரணமொன்றென்ற போதிலும் இந்நிலைமை காரணமாக மாகாண சபைத் தேர்தலின் போது ஒரு மாகாண சபைக்கு அல்லது ஒரு வாக்காளருக்கு எவ்வித பயனுமற்ற தீங்கு விளைவிக்க கூடிய இவ்வாறான பணிகளை தவிர்ப்பதற்கு எடுக்க வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் தொடர்பாக உரிய தரப்புக்கள் அவதானத்தோடு இருப்பது முக்கியமாகும்.

தேர்தல் கடமைகள், அரச அலுவலர்களின் அரசியல் உரிமைகள்

516. தேர்தலை நடாத்துவதற்கான திகதி குறிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல்களை நடாத்தி பெறுபேறுகளை வெளியிடுதல் வரையான செயற்பாடுகளுக்குரிய தேர்தல்கள் திணைக்களம் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்களின் கடமை பொறுப்புக்களை ஆற்றுவதற்கு அரச அலுவலர்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றனர். அதற்காக அரச சேவையின் கனிட்ட ஊழியர் தொடக்கம் அமைச்சு செயலாளர் வரையான அனைத்து அலுவலர்களுக்கும் பல்வேறுபட்ட கடமைகள் கையளிக்கப்படுகின்றன. தேர்தல் சட்டங்களுக்கமைய அனைத்து கடமை அலுவல்களையும் இவ்வலுவலர்களை கொண்டு நிறைவு செய்து கொள்வதற்கு அக்கடமைகள் மற்றும் தேர்தல் சட்டங்கள் தொடர்பாக அவர்களை அறிவுறுத்தி தேவையான பயிற்சிகளை வழங்கி செயற்படுவதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் முதன்மை சட்டமான அரசியலமைப்பின் சட்ட ஏற்பாடுகள் மூலமும் இவ்வனைத்து அலுவலர்களும் பக்கச்சார்பின்றி நியாயமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கமைய தமது கடமைகளை ஆற்றி பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

517. அரச சேவையின் அலுவலர்களுக்கு ஒரு வரம்புக்குள் உரிமைகளை அனுபவிப்பதற்கு சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், நீதிமன்ற அலுவலர்களுக்கு ஆயுதப் படை சேவையின் அலுவலர்களுக்கு, பொலிஸ் அலுவலர்களுக்கு, சமாதான அலுவலர்களுக்கு அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்கான உரிமையில்லை. அவ்வாறானவர்களுக்கு தேர்தலொன்றின் போது வாக்களிப்பதற்கு மாத்திரம் முடியும். தேர்தல் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு அத் திணைக்களத்தில் பணியாற்றும் காலம் வரை அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்கு முடியாது

என்பதோடு, தேர்தலொன்றின் போது அவர்களுக்கு வாக்களிப்பதற்கு மாத்திரம் சாத்தியமுண்டு. அரச சேவையின் பதவிநிலை அலுவலரொருவருக்கு மேற்குறித்தவாறு தேர்தலொன்றின் போது வாக்களிப்பதற்கு மாத்திரம் ஏற்புடைய விதத்தில் அரசியல் உரிமைகள் உரித்தாகும். ஏனைய அரச அலுவலர்களுக்கு உரித்தாகின்ற அரசியல் உரிமைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையில் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அரசியல் உரிமை உரித்துடைய அரச அலுவலர்கள் போன்றே இவ்வுரிமை உரித்தற்ற அலுவலர்களையும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களத்திற்கு நேரிட்டுள்ளது. இவ்வனைத்து அலுவலர்களும் தேர்தல் சட்டங்களுக்கமைய பக்கச்சார்ப்பின்றி தமது கடமைகளை ஆற்றி தேர்தலில் போட்டியிடுகின்ற தரப்புக்கள் மற்றும் வாக்காளர்களின் நம்பிக்கை உறுதியாகும் விதத்தில் கடமைகளுக்காக ஈடுபடுத்தல் மிக கடுமையான பணியொன்றாக மாறியுள்ளது.

518. மாகாண சபைத் தேர்தல் சந்தர்ப்பத்தின் போது மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள போதிலும் அரச அதிகாரம் கொண்டுள்ள அரசியல் கட்சிகளால் பேணப்பட்டு வருகின்ற பாராளுமன்ற அதிகாரம் மற்றும் சிறப்புரிமைகளை அனுபவிக்கின்ற மக்கள் பிரதிநிதிகள் தமது கட்சி சார்பாக மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வெற்றிக்காக பணியாற்றுகின்றனர். இதன் காரணமாக மத்திய அரசினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், சமூக நலனோம்பல் நிகழ்ச்சித் திட்டங்கள், அனர்த்தங்களுக்குட்பட்டவர்களுக்கு உதவி வழங்குதல் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற அரச வைபவங்களை ஏற்பாடு செய்து தேர்தல் நடாத்தப்படுகின்ற மாவட்டங்களில் தேர்தல் காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தும் போது அவற்றுக்கு அரச அலுவலர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக மத்திய அரசாங்கத்தின் அமைச்சுக்களினால் அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றமையை காண முடிவதோடு, அவ்வாறான சந்தர்ப்பங்களில் அது தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், சிவில் அமைப்புக்கள் ஊடாக தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. இம்முறை மாகாண சபைத் தேர்தலின் போது ஊவா மாகாணத்தை மையமாகக் கொண்டு இரண்டு அமைச்சுக்களுக்குரிய வெளிக்கள அலுவலர்களின் தலையீடு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களான அரசாங்க அதிபர்கள் வேறு பிரதேச செயலாளர்களை கலந்து கொள்ளச் செய்து அம்மாவட்ட மக்களுக்கு உதவி அடிப்படையில் நிதி பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கு மேலதிகமாக அரசியல் உரிமையுடைய அவ்விரு அமைச்சுக்களின் கீழுள்ள வெளிக்கள அலுவலர்கள் அவர்களது தொழிற்சங்க மட்டத்தில் அவர்களுக்கு விருப்பமான கட்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரச்சார அலுவல்களுக்காக அரச அலுவலக நேரத்திற்கு பின்னர் மற்றும் அவர்களின் விடுமுறை தினங்களில் ஈடுபடுத்தப்பட்டமையை காண முடிந்தது. அரசு குறித்த உதவிகளை வழங்குவதை கடமை அடிப்படையில் இவ் வெளிக்கள ஊழியர்களுக்குக் கையளிக்கப்பட்ட ஒரு கடமையாகக் காணப்பட்டது. இதற்கமைய இவ்வலுவலர்கள் இக்கடமை அலுவல்களை தமது தொழிற்சங்கம் மற்றும் அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்கு ஊவா மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்படவுள்ள தினத்திற்கு சில தினங்களுக்கு முன்னர் ஆற்றப்படுதல் பல தரப்புக்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளரின் ஆட்சேபணைக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பான ஆட்சேபணையொன்று நீதிமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வுதவி வரட்சியால் பாதிக்கப்பட்டிருந்த ஊவா மாகாண மக்களுக்காக அரசாங்க அதிபர் அல்லது பிரதேச செயலாளர்களின் பங்களிப்போடு ஏனைய அரச அலுவலர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டு ஆற்றுவதற்கு நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

519. மத்திய அரசின் அமைச்சின் கீழ் அமைச்சின் செயலாளரொருவர் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட மேற்குறிப்பிட்டவாறான நிகழ்ச்சித் திட்டமொன்று தேர்தல் காலப்பகுதியின் போது நடைமுறைப்படுத்தப்படுவதை இடை நிறுத்துவதற்கு சாத்தியமொன்றில்லை என மேற்குறிப்பிட்ட சம்பவத்திற்கு அமைய தெரிய வருகின்றது. மேற்குறித்த உதவிகளை பகிர்ந்தளிப்பதற்கு அடிப்படையான அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட இன்னும் இரு அமைச்சுக்களின் செயலாளர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் அமைச்சரொருவரின் தலைமையில் ஊவா மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கொழும்பில் தாபிக்கப்பட்டிருந்த வழிநடாத்தல் அலுவலகத்தின் பணிகளில் ஈடுபட்டதாக குறித்த செயலாளர்களின் பெயர்கள் சகிதம் 2014.09.28

ஆம் திகதி "கரலியே கத்தாபஹ" என்ற தலைப்பில் லங்காதீப பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த ஆக்கமொன்றில் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது. சட்ட ஏற்பாடுகளின் பாதுகாப்போடு தேர்தல் அதிகார பிரதேசமொன்றின் வாக்காளர்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்த கூடிய நிகழ்ச்சித் திட்டமொன்றை வாக்கெடுப்புக்கு மிக அண்மித்த தினமொன்றில் நடைமுறைப்படுத்துவது ஒழுக்கமற்றதென தெளிவாக குறிப்பிட முடியும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு அரச சேவையின் அலுவலர்கள் தூண்டப்படக் கூடிய பிரதான பாதகம் யாதெனில், பக்கச் சார்பற்ற மற்றும் நீதியான தேர்தலொன்றை நடாத்துவதற்கான பொறுப்புக் கையளிக்கப்படுகின்ற அரச சேவையின் அலுவலர்கள் தேர்தல் சந்தர்ப்பமொன்றின் போது ஆற்றுகின்ற தேர்தல் கடமை தொடர்பில் வாக்காளர்களின் மற்றும் போட்டியிடுகின்ற தரப்புக்களின் நம்பிக்கை பழுதடைவதால் சனநாயக செயற்பாடுகள் தொடர்பில் சந்தேகங்கள் மக்களிடத்தில் ஏற்படுவதாகும்.

520. இதற்கு மேலதிகமாக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட இருவரின் பிரச்சார வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் அவர்களின் மத்திய அலுவலகத்தை திறப்பதற்கும் அமைச்சொன்றின் செயலாளரின் தலைமையில் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக ஊடகங்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததோடு அது தொடர்பாக எதிர்க்கட்சிகள், அரசியற் கட்சிகள் மற்றும் கண்காணிப்பு அமைப்புக்கள் முறைப்பாடுகளை சமர்ப்பித்திருந்தன. இதன்போது அதனோடு தொடர்புடைய அரசியல்வாதி அமைச்சுக்களின் செயலாளர்கள் சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்ற அலுவலராததால் அவர்களுக்கு அரசியல் உரிமைகள் உரித்தென கூறியிருந்தார். அக்கூற்றுடன் எவ்விதத்திலும் இணங்கமுடியாதென உரிய அரசாங்க கட்சி செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததோடு இது தொடர்பாக சனாதிபதியின் செயலாளர் மற்றும் பணியாட்குழு பிரதானி ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களை அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அமைச்சர்களின் செயலாளர்களினதும், பொது மக்களின் ஊழியர்களென்பதோடு அவர்கள் அவ் அமைச்சுக்களின் பிரதானிகள் என்ற விதத்தில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களுமாவர். அதாவது பாராளுமன்றத்தினூடாக செயற்படுத்தப்படுகின்ற மக்களுக்குரித்தான பொதுநிதியின் கட்டுப்பாடு தொடர்பாக அதிகாரம் நடைமுறைப்படுத்தப்படுவது அமைச்சின் செயலாளர்களினாலாகும். அவர்கள் அரசியற் செயற்பாடுகளில் ஈடுபட்டால் அது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைமுறைக்கு பாரதூரமான விளைவை ஏற்படுத்தும். இதனால் அமைச்சின் செயலாளர்கள் அரசியற் செயற்பாடுகளில் தவிர்ந்து செயலாற்றல் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு ஏதுவாக அமையும்.

வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்படுதல் மற்றும் விருப்பு வாக்குகள் செல்லுபடியற்றதாகுதல்.

521. இம்முறை மாகாண சபைத் தேர்தலின் போது கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளை எண்ணும் சந்தர்ப்பத்தில், அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 492,322 (5.37%) நிராகரிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான விபரம் 23 ஆம் இலக்க குறிப்பில் காட்டப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக கட்சிகள் மற்றும் குழுக்களின் வேட்பாளர்கள் சார்பாக அடையாளமிடப்பட்டிருந்த விருப்பு வாக்குகளை எண்ணும் சந்தர்ப்பத்திலும் கணிசமான வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இத்தேர்தலின் போது குறித்த கட்சி/ குழு பெற்றுக் கொண்ட வாக்குகளுக்கமைய உறுப்பினர் பதவிகள் கிடைக்கப்பெற்றிருந்தால் மாத்திரமே அவ்விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டன. அச்சந்தர்ப்பத்தின் போது நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை சில கட்சிகளுக்கு மாத்திரம் உரித்துடையதென்பதால் அது தொடர்பான விபரங்கள் இவ்வறிக்கையில் சமர்ப்பிக்ப்படவில்லை.

522. கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையைக் கணக்கிடும் போது வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமான விடயங்கள் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 51 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளது. வாக்குச் சீட்டில் உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்படாதிருத்தல், ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளுக்கு அல்லது குழுக்களுக்கு வாக்களிக்கப்பட்டிருத்தல் போன்றே கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு கலந்த அடிப்படையில் வாக்கு அடையாளமிடப்பட்டிருத்தல் வாக்காளரை இனங்கண்டு கொள்ளதக்க விதத்தில் வாக்களிப்பட்டிருத்தல் வாக்களிக்கப்பட்ட கட்சி அல்லது குழுவை உறுதி செய்து கொள்ள முடியாதவிடத்து, அவ்வாறான வாக்குச் சீட்டுக்களும் நிராகரிக்கப்படும். போட்டியிட்ட கட்சிகள் மற்றும்

சுயேச்சைக் குழுக்கள் சார்பாக அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களை எண்ணும் போது கிளிநொச்சி (9.43%) நுவரெலியா (7.80%) மட்டக்களப்பு (7.72%) யாழ்ப்பாணம் (7.41%), கேகாலை (7.32%), முல்லைத்தீவு (7.27%) என்றவாறு மாவட்டங்களில் வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்பட்ட சதவீதம் உயர் மட்டத்தில் காணப்பட்டது.

523. தேர்தலொன்றின் போது வாக்காளர்களால் அளிக்கப்பட்ட அனைத்து வாக்குச் சீட்டுக்களும் செல்லுபடியான வாக்குச் சீட்டுக்களாக கணிக்கப்படுவதற்கு சாத்தியம் ஒன்று கிடைக்குமாயின் அப்பெறுபேறு வாக்காளர்களின் எதிர்பார்ப்புக்களை பிரதிபலிப்பதில் உயர்ந்த மட்டமொன்றில் காணப்படுமென்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும். எமது நாட்டின் சனத்தொகையில் மிக உயர்ந்த சதவீதம் வாசிப்பறிவு கொண்டுள்ள நபர்களென்பதால் மேலே பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை உயர் சதவீதமொன்றை கொண்டுள்ளமை தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். பாராளுமன்றத் தேர்தலொன்றின் போது மற்றும் மாகாண சபைத் தேர்தலொன்றின் போது வாக்காளர்களுக்கு ஒரு கட்சி அல்லது குழு சார்பாக ஒரு வாக்கையும் மூன்றுக்கு மேற்படாத வேட்பாளர்களுக்காக தேவையான வேட்பாளர் இலக்கங்களை புள்ளடியிட்டு விருப்பு வாக்கை தெரிவிப்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் போது ஒவ்வொரு வேட்பாளரின் இலக்கத்துக்கு எதிரில் மூன்று விருப்பு வாக்குகளை அடையாளமிடுவதற்காக தனித்தனியாகவுள்ள மூன்று வெற்றுக் கூடுகளை கொண்ட வாக்குச் சீட்டின் வேட்பாளருக்கான விருப்பு வாக்குகளை அடையாளமிடுதல் வேண்டும். சனாதிபதித் தேர்தலின் போது வேட்பாளருக்காக வாக்கினை 1 ஆம் இலக்கத்தை இடுவதன் மூலமும் ஏனைய வேட்பாளர்களுக்காக 2,3 என்ற விதத்திலும் வாக்குச் சீட்டு வேட்பாளர் பெயருக்கு எதிரிலுள்ள வெற்றுக் கூடுகளில் இலக்கங்களை இட்டும் விருப்பு வாக்குகளை அடையாளமிடுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான வெவ்வேறு விதமான வாக்குச் சீட்டுக்கள் அந்தந்த தேர்தல்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதனால் தேர்தலுக்குரிய வாக்குச் சீட்டு தொடர்பாகவும் அதனை சரியாக அடையாளமிடுவது தொடர்பாகவும் வாக்காளர்களை அறிவுறுத்துவது மிகவும் அவசியமான விடயமாகும். சில தேர்தல் சந்தர்ப்பங்களின் போது வேட்பாளர்கள் தனது கட்சி மற்றும் தனக்காக வாக்கு அடையாளமிடப்பட்டுள்ள விதத்தை காட்டுகின்ற மாதிரி வாக்குச் சீட்டொன்றை அச்சிட்டு வாக்காளர்களுக்கு பகிர்ந்தளிப்பதாக தேர்தல்கள் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதிலிருந்து அரசியல் கட்சிகளும் குறித்த அறிவுறுத்தல்களை மேற்கொள்வதற்கு ஆர்வம் காட்டுகின்றனவென்பது தெளிவான ஒரு விடயமாகும்.

524. இம்முறை மாகாண சபைத் தேர்தல் சந்தர்ப்பத்தின் போது நீண்ட காலம் பயங்கரவாத செயல்கள் மற்றும் சிவில் நிருவாகம் வீழ்ச்சியடைந்திருந்தமை காரணமாக தேர்தல்களில் கலந்து கொள்ளும் அனுபவம் மற்றும் அறிவற்ற வட மாகாணத்தின் வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் முறை தொடர்பாக தெளிவுபடுத்துவது பொருத்தமானதென அரசியல் கட்சிகளினால் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதனோடு இணைந்ததாக மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களிலும் தோட்ட விவசாய பிரதேசங்களில் வதிந்துள்ள மக்களுக்கு அவ்வாறே அறிவுறுத்துவது பொருத்தமென கருத்து தெரிவிக்கப்பட்டன. இதன் காரணமாக அம்மாகாணங்களில் அமையப் பெற்றுள்ள மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் மற்றும் தொடர்புடைய அலுவலர்களை ஈடுபடுத்தி தேர்தல்கள் ஆணையாளரின் வழிகாட்டலுக்கமைய குறித்த அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு கிராமிய பிரதேசங்களின் மக்களை ஒன்றுகூட்டி குறித்த அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. பொதுவாக தேர்தல்கள் திணைக்களத்தினால் மாதிரி வாக்குச் சீட்டொன்று மற்றும் தேர்தல் சட்டத்தின் வாக்களிக்கும் முறை தொடர்பில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்குட்பட்டு அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக வாக்காளர்கள் அறிவுறுத்தப்பட்டதோடு, அதற்கு மேலதிகமாக இம்முறை மேலே குறிப்பிடப்பட்ட விதத்தில் வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கான விஷேட நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. வாக்கெடுப்பு நடாத்தப்படுகின்ற காலப்பகுதியினுள் எவ்வித பிரச்சினைகளும் ஏற்படாதவாறு வாக்களிக்கின்ற முறை தொடர்பாக வாக்காளர்களை அறிவுறுத்தல் தேர்தல்கள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதால் நாடு பூராகவும் ஒரு தினத்தில் நடாத்தப்படுகின்ற தேர்தலுக்குரியதாக மேலே குறிப்பிட்டவாறு வாக்காளர்களை அறிவுறுத்துவது சிரமமானதாகும். இருப்பினும், இவ்வாறான

அலுவலொன்றின் தேவைப்பாட்டை ஏற்றுக் கொண்டு தேர்தல் சந்தர்ப்பமொன்றின் போது வாக்களிக்கும் முறை தொடர்பாக வாக்காளர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்றின் மூலம் நிராகரிக்கப்படுகின்ற வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையை குறைத்து கொள்ள முடியுமென நம்ப முடியும்.

தேர்தல் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரின் அறிக்கையை பரீட்சித்தல் மற்றும் அதனோடு தொடர்புடையதாக பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளல்.

525. தேர்தலொன்று நடாத்தப்பட்ட பின்னர் அது தொடர்பான அறிக்கையொன்று தேர்தல்கள் ஆணையாளரால் தயாரிக்கப்படுகின்ற போதிலும் அதனை தயாரித்தல் அல்லது அவற்றை யாரிடம் சமர்ப்பிக்க வேண்டுமென்பது அல்லது நிறுவனமொன்று தொடர்பில் எந்தவொரு தேர்தல் சட்டத்திலும் குறிப்பிடப்படவில்லை. பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கமைய அரசியலமைப்பின் 104 ஆ (3) உறுப்புரைக்கு அமைய தேர்தல் ஆணைக்குழு பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும். மற்றும் பதிலளித்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்திலும் மேற்கொண்ட சுய அலுவல்கள் தொடர்பான அறிக்கையொன்றை ஒவ்வொரு வருடத்திற்காகவும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வறிக்கை குறித்த வருடத்தினுள் ஏதேனும் ஒரு தேர்தல் நடாத்தப்பட்டதாயின், அது தொடர்பான மிகச் சுருக்கமான அறிக்கையொன்றை உட்சேர்ப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.

526. தேர்தலொன்றின் முடிவில் தேர்தல்கள் ஆணையாளரால் தயாரிக்கப்படுகின்ற அறிக்கை பல வழிகளில் முக்கியமானதாகும். அது தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ ஒரு அறிக்கையாக அமைவதோடு, எவரேனும் நபருக்கு அல்லது நிறுவனத்திற்கு தேர்தல்கள் தொடர்பாக முக்கியமாக இவ்வறிக்கை ஊடாக ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். தேர்தலொன்று நடாத்துவதற்கு அடிப்படையான பின்னணி விபரத்தோடு, ஆரம்பிக்கப்படுகின்ற அவ்வாறான அறிக்கையொன்றில் இறுதியாக அதன் முடிவுகளை உட்சேர்த்து வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட முறை தொடர்பாகவும் அவதானிப்புக்கள் தொடர்பாகவும் அறிவித்து தேர்தல் சட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்கு பொருத்தமான வழிகாட்டல்கள் சுட்டிக்காட்டப்படுகின்றது. அதற்கமைய இவ்வாறான அறிக்கையொன்று நாட்டின் சனநாயக செயன்முறையை பொருள் மிக்கதாக்குவதற்கும் வலுப்பெறுவதற்கும் பயன்படுத்திக் கொள்ள முடியும். சமூகத்திற்கு விளைதிறன்மிக்கதொன்றாக இதனை சுட்டிக்காட்ட முடியும். தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கும் நாட்டின் சிவில் அமைப்புக்களுக்கும் மற்றும் பிரசைகளுக்கும் தேர்தலின் வேறு தரப்புக்களுக்கும் பல்வேறுபட்ட விதத்தில் இவ்வாறான அறிக்கைகள் பயன்பட முடியும். அவை அனைத்திற்கும் மேலதிகமாக தேர்தல் சட்டங்களை திருத்துவதற்கும் தற்போதுள்ள சட்டத்தின் குறைபாடுகள், அச்சட்டங்கள் சமூகத்தில் செயற்படுத்தப்படுகின்ற முறை வெளிக்காட்டப்படுகின்ற அந்த உத்தியோகபூர்வ அறிக்கை தொடர்பில் குறிப்பாக நாட்டின் சட்டவாக்க சபையின் கவனத்தை செலுத்துவது கட்டாயமான ஒரு விடயமாகும். இவ்வாறான அறிக்கைகள் குறைந்தபட்சம் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகளின் அவதானத்திற்கு கொண்டு செல்வதற்கும் அது தொடர்பான சட்ட முறையான கலந்துரையாடலொன்றை சட்டவாக்க சபையினுள் ஏற்படுத்துவதற்காக சந்தர்ப்பமொன்றை ஏற்படுத்துதல் வேண்டும்.

527. தற்காலத்தில் தேர்தல் சட்டங்களை திருத்துவதற்காக தேர்தல் சட்டங்களைத் திருத்தம் செய்தல் தொடர்பான தெரிவுக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அதற்குரிய அறிக்கைகள் வெளியிடப்படுகின்றது. பாராளுமன்றத்தில் ஆளும் அரசியல் கட்சி மற்றும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஏனைய அரசியல் கட்சிகளின் இணக்கப்பாடு கருத்து மேலே பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு தேர்தல் நிறைவிலும் குறித்த காலப்பகுதியொன்றினுள் தேர்தல்கள் தொடர்பான ஒவ்வொரு தேர்தலின் நிறைவிலும் ஏதேனும் காலப்பகுதியொன்றினுள் தேர்தல் தொடர்பான தேர்தல்கள் ஆணையாளரின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு அவகாசம் வழங்கப்பட்டு அதனை பொதுமக்கள் பிரதிநிதிகளின் கலந்துரையாடலுக்கு பயன்படுத்துவதற்கு இடமளிக்கக் கூடிய சட்ட ஏற்பாடுகளை ஏற்படுத்தல். இந்நாட்டின் சனநாயக செயற்பாடுகளை பலம் பொருந்தியதாக மாற்றுவதற்கு மற்றும் அது தொடர்பில் அரசியல் கட்சிகளின் மற்றும் வாக்காளர்களின் நம்பிக்கையை உறுதி செய்வதற்கும் பயனுள்ளதாக அமையும் எனக் குறிப்பிடலாம்.

XIV ஆம் பகுதி

மதிப்பீடு

528. இம்முறை மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்காக வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல் ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக தேர்தல்கள் திணைக்களம் மற்றும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் மேலும் பெரும்தொகையினர் அலுவல்களை மேற்கொண்டனர். அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் தொடக்கம் அரச சேவையின் கீழ் மட்டம் வரை அனைத்து பணியாட் குழுவினரும் தேர்தல்கள் திணைக்களம் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய தேர்தலோடு தொடர்புடைய பொறுப்புக்களை ஆற்றுவதற்காக வழங்கிய ஒத்துழைப்புக்கு அவ்வனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

529. எந்தவொரு தேர்தலிலும் மாவட்ட மட்டத்தில் அதாவது பிரதேச ரீதியாக தேர்தலை நடாத்தும் பணியின் பெரும்பாலான பணிகளின் பொறுப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களான அரசாங்க அதிபர்களுக்கும்/ மாவட்ட செயலாளர்களுக்கும், அவர்களின் பணியாட் குழுவினருக்கும் கையளிக்கப்பட்டுள்ளது. அப்பொறுப்புக்களை வழமையாக முறையாக ஆற்றுவது தொடர்பாக அவர்களுக்கு பெரிதும் நன்றி உடையுடையவனாவேன். அதேபோன்று பிரதேச செயலாளருக்கும் அவர்களின் பணியாட்குழுவினருக்கும் வாக்களிப்பு நிலைய கடமைகளை ஆற்றும் பொறுப்பினை முறையாக ஆற்றிய கிராம அலுவலர்களுக்கும் எமது புகழுரை உரித்தாகட்டும்.

530. தேர்தல் காலப்பகுதிக்குள் சுமார் இரண்டு மாதகாலத்திற்கு தமது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் திணைக்களமும், பொலிஸ் விசேட அதிர தேர்தல் தொடர்பில் விஷேட பணிப்பொறுப்புக்களை ஆற்றியது. அதற்காக சிரேட்ட பொலிஸ் மா அதிபர் (தேர்தல் மற்றும் நிருவாகம்) உள்ளிட்ட பொலிஸ் திணைக்களத்தின் அனைத்து பணியாட் குழுவினர் சட்டவிரோத செயல்களை தடுப்பதற்கும் வாக்கெடுப்பு நிலைய அலுவல்களை அமைதியான விதத்தில் பேணி செல்வதற்கும் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட விதம் பாராட்டப்படுதல் வேண்டும். அதேபோன்று எந்தவொரு அவசர மற்றும் இடுக்கணுக்குள்ளான சந்தர்ப்பங்களில் தேர்தல் செயன்முறைக்கான தேவைப்படுமிடத்து தேர்தல் ஆணையாளருக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்கான இராணுவ, கடற்படை மற்றும் வான்படையினர் ஆயத்தமாக இருந்ததோடு இது தொடர்பாக இராணுவத்தின் படைத்தளபதிகளுக்கும், முப்படைகளின் படையினருக்கும் / அங்கத்தவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று தேவைப்படுகின்ற ஒவ்வோரு சந்தர்ப்பத்திலும் தேர்தல் செயன்முறைக்கு ஒத்துழைப்பு வழங்கிய சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அப்பணியாட்குழுவினருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

531. தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து அச்சிடல் பணிகளும் அரச அச்சகத் திணைக்களத்தின் ஊடாக ஆற்றிக் கொள்ளப்பட்டது. அரச அச்சக அழுத்தகர் உள்ளிட்ட அத்திணைக்களத்தின் பணியாட்குழுவினர் வேட்புமனு கோரல் அறிவித்தல் வெளியிடுவதற்கு முன்பிருந்தே தமது பணிப்பொறுப்புக்களில் ஈடுபட்டிருந்தனர். பாதுகாப்போடு வாக்குச் சீட்டுக்களை அச்சிடல் அத்திணைக்களத்தினால் ஆற்றப்படுகின்ற விஷேட பணியொன்றாகும். அவையடங்கலாக தேர்தலோடு தொடர்புடைய அனைத்து அச்சிடல் அலுவல்களும் தேர்தல்கள் திணைக்களத்தின் கோரிக்கையின் அடிப்படையில் ஆற்றுதல் மற்றும் தேர்தல் திணைக்களத்தோடு மிக நெருக்கமாக அலுவல்களை மேற்கொள்ளல் தொடர்பில் அரச அழுத்தகர் உள்ளிட்ட அத்திணைக்களத்தின் அனைத்து பணியாட்குழுவினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

532. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள், தேர்தல்கள் திணைக்களம், அரச நிறுவனங்கள், வேறு நிறுவனங்கள் மற்றும் வாக்காளர்களுக்கிடையில் தேர்தல் காலப்பகுதியினுள் பரிமாறப்படுகின்ற மிக முக்கியமான பல எழுத்தாவணங்களை குறித்த பிரிவுகளுக்கு பாதுகாப்பாக கையளித்தல்

அனைத்து தேர்தல் சந்தர்ப்பங்களிலும் அஞ்சல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இக் கடித ஆவணங்களில் அஞ்சல் வாக்காளர்களுக்கான காப்புறுதி உரை மற்றும் வாக்காளர்களுக்கு அனுப்பப்படுகின்ற உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை என்பன மிக முக்கியமானவையாகும். தேர்தலோடு தொடர்புடைய பெரும்பாலான எழுத்தாவணங்களை விநியோகிக்கும் போது முதன்மை சேவை வசதிகளை வழங்கி எழுத்தாவணங்களை பகிர்ந்தளிப்பதற்கு அஞ்சல் திணைக்களத்தினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது. அஞ்சல் மா அதிபர் உள்ளிட்ட அத்திணைக்களத்தின் பணியாட் குழுவினர் ஆற்றிய சேவையை மெச்சுகின்றேன்.

533. இலங்கை ரெலிகொம் நிறுவனம், இலங்கை போக்குவரத்து சபை மற்றும் இலங்கை மின்சார சபை என்பன கடந்த தேர்தல்களை போன்றே இந்த தேர்தலின் போதும் தேவையான தொலைபேசி தொடர்புகளை வழங்குதல், போக்குவரத்து வசதிகளை வழங்குதல் மற்றும் வாக்கெண்ணல் மண்டபங்களுக்கு விஷேட மின்னிணைப்புக்களை வழங்குதல் என்பவற்றுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டன. அதேபோன்று தனியார் பஸ் வண்டி நிறுவனங்களும் வாக்காளர்களின் போக்குவரத்துக்காக விஷேட கட்டணத்தில் பஸ் வண்டி சேவைகளை மேற்கொண்டன. அந்நிறுவனங்கள் தேர்தல் சந்தர்ப்பத்தின் போது இப்பணிகளை தேசிய தேவைப்பாடொன்றாகக் கருதி தேர்தல்கள் திணைக்களத்தின் தேவைப்பாட்டிற்கமைய குறித்த சேவைகளை வழங்கிய விதம் பாராட்டப்பட வேண்டியதாகும். அதேபோன்று நீர்வள மற்றும் நீர்வழங்கல் சபைக்கும் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கும் தேர்தல் செயன்முறைக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அரச நிறுவனங்களுக்கும் நன்றி தெரிவிக்கப்படுகிறது.

534. வாக்காளர்களையும் ஏனைய தரப்புக்களையும் அறிவுறுத்துவதற்காக தேர்தல்கள் ஆணையாளரால் வெளியிடப்பட்ட ஊடக அறிவித்தல்கள் மற்றும் ஏனைய அறிவித்தல்கள், ஊடக நிறுவனங்களோடு தேர்தல்கள் ஆணையாளரால் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களையும் அடிப்படையாகக் கொண்டு தேர்தல் சந்தர்ப்பத்தின் போது பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஆற்றிய சேவையை நன்றியுடன் நினைவு கூருகின்றேன். அதேபோன்று இறுதி முடிவுகளை ஊடக நிறுவனங்களுக்கு வெளியிடுவதற்காக நடவடிக்கையெடுத்த அரசாங்க தகவல் பணிப்பாளர் உள்ளிட்ட பணியாட் குழுவினர் வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

535. இம்மாகாண சபைத் தேர்தல்களை முறையாக நடாத்துவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தவிசாளர் உள்ளிட்ட ஆணையாளர்கள், அதன் செயலாளர்கள், சட்ட செயலாளர் உள்ளிட்ட செயலாளர்கள் வழங்கிய விலைமதிக்க முடியாத பெரிதும் நன்றி கூறப்பட வேண்டியவர்கள். பொலிசாருக்கு, அலுவலர்களுக்கு, வாக்காளர்களுக்கு, ஊடகங்களுக்கு தேவையான அறிவூட்டல், வழிகாட்டல் நெறிகளை வழங்கி மனித உரிமைகள் ஆணைக்குழு காட்டிய ஒத்துழைப்பு எதிர்காலத்திலும் குறைவின்றி கிடைக்குமென எதிர்பார்க்கின்றேன்.

536. தேர்தலை கண்காணிப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்ட அனைத்து உள்நாட்டு கண்காணிப்பு நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அவற்றின் பணியாட் குழுவினருக்கும் களக் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்ட அனைவருக்கும் தேர்தலுக்காக வேட்புமனுக் கையேற்கப்பட்ட சந்தர்ப்பம் தொடக்கம் தேர்தல் அலுவல்கள் நிறைவடையும் வரை வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக தேர்தல் சட்டங்கள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேர்தல்கள் திணைக்களம், தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு தகவல்களைச் சமர்ப்பித்து நீதியான தேர்தலொன்றை நடாத்தும் எதிர்பார்ப்பில் செயற்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் மற்றும் நபர்களுக்கும் பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

537. வட மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அத்தேர்தலை கண்காணிப்பதற்காக பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பு குழுவொன்றை அனுப்பி வைக்க நடவடிக்கையெடுத்த பொதுநலவாய நாடுகளின் செயலாளருக்கும் மற்றும் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கும், கண்காணிப்புக் குழுவின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தேர்தல்கள் திணைக்களத்தின் அழைப்பை ஏற்று தெற்காசிய

தேர்தல்கள் முகாமையாளர்களின் சங்கத்தின் தலைமைத்துவத்தை வகிக்கின்ற தற்போதைய இந்திய தேர்தல்கள் ஆணையகத்தின் பிரதான ஆணையாளருக்கும் தெற்காசிய நாடுகளின் தேர்தல் முகாமைத்துவ நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி கண்காணிப்புக் குழு ஒன்றை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். அக்கண்காணிப்பு குழுவின் அனைத்து கண்காணிப்பாளர்களுக்கும் குறிப்பாக அதன் தலைவராக செயற்பட்ட இந்தியாவின் முன்னாள் தலைமை தேர்தல்கள் ஆணையாளரான திரு. என். கோபாலசுவாமி அவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

538. இத்தேர்தலை வெற்றிகரமாக நிறைவு செய்து கொள்வதற்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், கட்சிகளின் செயலாளர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் வழங்கிய ஒத்துழைப்பு போன்றே இந்த சனநாயக செயற்பாட்டினூடாக தமது மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு பங்களிப்பு வழங்கிய அனைத்து வாக்காளர்களையும் நன்றியோடு நினைவு கூருகின்றேன். ஜனநாயக ஆட்சியின் மகோற்சவம் என கருதப்படுகின்ற தேர்தல் செயன்முறையை முறையாக ஆற்றிக் கொள்வதற்கு அரசியல் தலைவர்கள்/ கட்சிச் செயலாளர்கள்/ நிரந்தர முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுத் தலைவர்களும் அனைத்து அரசியற் கட்சிகளின் செயற்பாட்டாளர்களும் அனைவரிலும் பார்க்க வாக்காளர்கள் உள்ளிட்ட அனைவரும் வழங்கிய ஒத்துழைப்பையும் பெரிதும் மெச்சுகின்றேன்.

539. தேர்தல்களின் போது வாக்களிப்பு நிலையங்களில் கடமையில் ஈடுபட்ட அனைத்து சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் அவர்களின் பணியாட்குழுவினரின் எந்தவொரு பாரதூரமான பிரச்சனையுமின்றி வாக்களிப்பு நிலைய கடமைகளை ஆற்றியமை, இத்தேர்தலை சுதந்திரமாகவும், நீதியாகவும் நடாத்துவதற்காக ஒரு முன்னணிக் காரணியாக விளங்கியது. அதேபோல் வாக்குச்சீட்டு, வாக்குப்பெட்டி விநியோகம், கையேற்பு என்பனவற்றை மேற்கொண்ட அலுவலர்களும் மிக களைப்பிற்குரிய ஒரு நிகழ்வாக வாக்குகளையும் விருப்புக்களையும் எண்ணும் பணியில் ஈடுபட்ட பிரதான வாக்கெண்ணும் அலுவலர்கள் உள்ளிட்ட பணியாட்குழுவினர்கள் தமது பணிகளை முறையாக ஆற்றாதவிடத்து தேர்தல்கள் திணைக்களத்திற்கும், தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் மிக பாரதூரமான பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிவந்திருக்கும். அவ் அனைத்து அலுவலர்களுக்கும் தேர்தல்கள் திணைக்களத்தின் சார்பில் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றேன்.

540. இம் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துவதில் தொடர்புடைய ஆரம்ப ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளில் சட்டவலுவாக்கப் பணிகளிலும் அதன் கடமைகளிலும் தேர்தல்கள் கண்காணிப்பு பணிகளிலும் ஈடுபட்டிருந்த போது திடீர் விபத்து காரணமாக அரசாங்க அலுவலர் இருவரும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பெண் அலுவலரொருவரும் இறப்பெய்த வேண்டிவந்ததோடு மற்றுமொரு அமைய ஊழியர் மரமொன்றிலிருந்து கீழே விழுந்து கடும் காயத்திற்குள்ளானார். அதேபோன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மற்றுமொரு பெண் மிக கடுமையான காயத்திற்குள்ளாகி அங்கவீன நிலைக்குள்ளானார். பொலன்னறுவை மாவட்டத்தில் தேர்தல்கள் அலுவலகத்தில் இணைக்கப்பட்டு தேர்தலின் பூர்வாங்க ஒழுங்கமைப்பு பணிகளில் ஈடுபட்டு இரவு நேரத்தில் தனது வீட்டுக்கு சென்று கொண்டிருந்த தமண்கடுவ பிரதேச செயலகத்தின் திரு. ஆர். ஜீ. ஆனந்த நவரட்ண அவர்கள் மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் 2012.07.26 ஆம் திகதி மரணித்ததோடு வவுனியா மாவட்டத்தில் புதுக்குளம் மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பு கடமைக்காக தேர்தல் தினத்தன்று முந்திய தினமாகிய 2013.09.20 ஆம் திகதி தமது வாக்குச்சாவடிக்கு அறிக்கையிட்ட டீ. கிறிஸ்துராஜா அவர்கள் வாக்களிப்பு நிலையத்தில் வைத்து குளவி தாக்குதலுக்கு இலக்காகியமையினால் மரணத்தை தழுவ வேண்டிவந்தது. பதுளை மாவட்டத்தில் தேர்தல் பணிகளை கண்காணிக்கின்ற கடமைகளில் ஈடுபட்டிருந்த பணிப்பாளரொருவரான திருமதி. எஸ். துசிதா ருவன் குமாரி சமரசேகர அவர்கள் வாகன விபத்தொன்றில் இறப்பெய்தியதோடு அவருடன் பயணம் செய்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அலுவலர் திருமதி. ஏ. ஏ. அயந்தி சிரோமினி அவர்கள் கடும் காயத்திற்கு இலக்கானார். பதுளை மாவட்டத்தில் ஊவாபரணகம பிரதேசத்தில் அனுமதி பெறப்படாத பிரச்சார கொடிகள், பதாதைகள் என்பனவற்றை அகற்றுவதற்காக அமைய ஊழியரொருவராக பொலிசாரால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த தொழில்

ரீதியாக மரம் ஏறுபராகிய மொஹமட் நிசாம் என்பவர் உயர்ந்த மரம் ஒன்றிலிருந்த பதாகையொன்றை அகற்றுகின்ற போது மரத்திலிருந்து வீழ்ந்து கடுமையான காயத்திற்குள்ளாகியுள்ளார். தேர்தல்களை நடாத்துவதற்கென கடமைகளில் ஈடுபட்டிருந்த போது மரணத்தை தழுவிக் கொண்ட மேற்குறித்தோரின் அகால மரணங்கள் தொடர்பாக பெரிதும் கவலையடைகின்றேன். அவர்களின் குடும்பத்தினரின் அங்கத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று கடும் காயத்திற்கிலக்காகிய அலுவலர்களுக்கும், உதவியாளர்களுக்கும் நோயற்ற வாழ்வு கிடைக்கவேண்டுமென பிராத்தனை செய்கின்றேன்.

541. 2012, 2013, 2014 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் நான்கு கட்டங்களாக நடாத்தப்பட்ட தேர்தலோடு தொடர்புடைய அனைத்து பணிகளையும் திட்டமிடல், ஒழுங்கமைத்தல் மற்றும் வழிநடத்தல் மேற்கொள்ளும் பொறுப்பு தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்ட போதிலும் அப்பணிகள் கூட்டுச் செயன்முறையேயன்றி தனிநபர் பணிகளல்ல. தேர்தல்கள் திணைக்களத்தின் அனைத்து நிருவாக நடவடிக்கைகளுக்கும் மேலதிகமாக வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வேலைத்திட்டங்களை எவ்வித விசனமும் இன்றி மகிழ்ச்சியோடு ஆற்றி அதற்கு இசைவாக தேர்தலை நடாத்துவதோடு தொடர்புடைய பணிகளுக்கு மேலதிகமாக சட்ட வலுவாக்கப்பணிகளை இணைப்பு செய்ய முடிந்தது தேர்தல்கள் செயலகத்தில் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட பணியாட் குழுவினர், மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் பிரதி/ சிரேட்ட உதவி/ உதவி ஆணையாளர்கள் மற்றும் அவர்களின் பணியாட்குழுவினர்களிடையே அங்கத்தினர்களிடையே சில சந்தர்ப்பங்களில் அரசியல்வாதிகளின் வாக்குகளையும் எதிர் கொண்டு இரவு பகல் பாராது தமது சேவை நிலையத்திலிருந்து தொலை தூரங்களிலுள்ள இடங்களில் சேவையாற்ற அனுப்பப்பட்ட போது தயக்கமின்றி அதற்காக முன்வந்து இவ் வலுவலர்கள் காட்டிய விலை மதிக்க முடியாத அர்ப்பணிப்பு இல்லாவிட்டால் இத் தேர்தல்களை முறையாக நடாத்த முடியாமல் போயிருக்கும். அதனால் தேர்தல்கள் திணைக்களத்தின் பணியாட்குழுவினர் அனைவருக்கும் எமது புகழாரமும் நன்றியறிதலும் உரித்தாக வேண்டும்.

XV ஆம் பகுதி

முடிவுரை

542. இலங்கை அரசியலமைப்பு மற்றும் தேர்தல் சட்டங்களின் மூலம் இந்நாட்டில் சனநாயக நிருவாக சட்டகமொன்றினுள் காணப்படுகின்ற பொதுமக்கள் பிரதிநிதிகள் நிறுவனங்களுக்கு தமது நிருவாகிகளை தெரிவு செய்து கொள்வது தொடர்பான வழிமுறை பிரசைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காலத்துக்கு காலம் நடாத்தப்படுகின்ற தேர்தல்களின் ஊடாக தனது இறைமையை நடைமுறைப்படுத்துகின்ற வாக்காளர் எதிர்பார்க்கின்ற சட்ட ரீதியான அமைதிமிக்க சூழலொன்றை தேர்தலொன்றுக்காக ஏற்படுத்திக் கொள்வது குறித்த அனைத்து தரப்புக்களதும் பொறுப்பாகும்.

543. மக்கள் பிரதிநிதிகள் நிறுவனமொன்றுக்கு சட்ட ரீதியாக தேர்தலொன்றின் மூலம் தமது மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்துக் கொண்டு சனநாயக ஆட்சி முறையில் பொதுமக்கள் நிருவாக அலுவல்களில் பங்குக் கொள்கின்றனர். அதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் அரசியலமைப்பு மற்றும் தேர்தலோடு தொடர்புடைய சட்டங்கள் ஊடாக செய்யப்பட்டுள்ளன.

544. வாக்காளருக்கு தேர்தலொன்றின் போது அழுத்தங்களின்றி இரகசியமாக மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்குள்ள தடைகளாகக் கருதப்படுகின்ற சட்டவிரோத செயற்பாடுகள் தேர்தல் தவறுகள் மற்றும் தேர்தல் ஊழல் செயற்பாடுகள் போன்ற தண்டனைக்குரிய குற்றங்களாக தேர்தல் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவ்வாறான தவறுகளின்றி தேர்தலொன்றை நீதியாகவும் சுதந்திரமாகவும் நடாத்துதல் வேண்டும். அந்த விதத்தில் தேர்தல் சட்டங்களை வலுவாக்கம் செய்யும் பிரதான பொறுப்பு தேர்தல்கள் ஆணையாளருக்கும் இலங்கை பொலிஸாருக்கும் மற்றும் அரச அலுவலர்களுக்கும் கையளிக்கப்பட்டுள்ளது.

545. தேர்தல் சட்டங்கள் அனைவருக்கும் நியாயமான அடிப்படையில் செயற்படுத்தப்படல் வேண்டும். தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து

அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோருக்கு பக்கசார்பின்றியும் நீதியாகவும் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறின்றேல், சனநாயக ஆட்சிமுறை தொடர்பில் மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துவிடும். தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் தமது எதிர்தரப்பு கட்சிகள், குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோருக்கு தேர்தலொன்றின் போது கிடைக்கப்பெறுகின்ற சட்ட ரீதியான உரிமைகளையும் அதிகாரங்களையும் மதித்தல் வேண்டும். வாக்காளர்களுக்கு நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை வழங்கும் பொறுப்பினை வகித்து செயற்படுகின்ற அனைத்துத் தரப்புக்களுக்கும் அதற்காக செயற்படுவதற்குத் தேவையான சூழல் மற்றும் வசதிகள் செய்யப்பட்டிருத்தல் கட்டாயமான ஓர் அம்சமாகும்.

546. தேர்தலொன்று தொடர்பில் வேட்புமனு கோரல் சந்தர்ப்பத்திலிருந்து 6 அல்லது 8 வாரங்கள் வரையான காலமொன்றினுள் இப்பணிகளை நிறைவு செய்தல் வேண்டும். தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது அக்காலப்பகுதியினுள் தாமதமடையுமாயின் அல்லது அவ்வலுவல்கள் குறித்த பிரிவுகளால் ஆற்றப்படவில்லையாயின், அது தேர்தல் சட்டங்களை தகர்ப்பதற்கு காட்டுகின்ற ஒத்துழைப்பாக அமையும்.

547. இத்தேர்தலின் போது தேர்தல் சட்டங்கள் மீறப்படுதல் தொடர்பாக சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற பிரிவுகளைக் கொண்டு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தேர்தல்கள் ஆணையாளரோடு, இணைந்து மேற்கொண்ட முயற்சிகள் சில சந்தர்ப்பங்களின் போது குறித்த அலுவலர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறாமை காரணமாக அடைந்து கொள்ள முடியவில்லை. அதன் காரணமாக குறித்த அலுவலர்கள் போட்டியிட்ட அரசியல் கட்சிகளதும் வேட்பாளர்களதும் விமர்சனங்களுக்குட்பட்டனர்.

548. எந்தவொரு தேர்தல் கடமையும் கையளிப்படுகின்ற அலுவலரொருவர் குறித்த கடமையை விதிக்கும் பொறுப்பு தேர்தல்கள் ஆணையாளருக்கு அல்லது தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கையளிப்பட்டுள்ளது. அதேபோன்று குறித்த கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு கடமைகளை மேற்கொள்வதற்கு அக்கட்டளை பிறப்பிக்கப்படுகின்ற தரப்பினர் சட்டத்தினூடாக கடப்பாடுடையவர்கள் ஆவர். இதன் காரணமாக தேர்தல் காலப்பகுதியினுள் அக்கடமை பணிகள் கையளிப்படுகின்ற அலுவலர்கள், தேர்தல் அலுவலர்களின் நிபந்தனைகளுக்கு இணங்கி செயற்படுவது சட்ட ரீதியானதாகும். இவ்வாறு தேர்தல் கடமைகளை ஆற்றுகின்ற அலுவலர்களுக்கு சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் அக்கடமைகளை ஆற்றுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்த அனைத்து தரப்புக்களதும் பொறுப்பாகும்.

உப அட்டவணை

உப அட்டவணை - 01

அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை - ஆம் இலக்கம் 1764/06 - 2012.06.27

பகுதி IV (அ) - மாகாண சபைகள்
ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும்
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(ஆ) ஆம் உறுப்புரை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(ஆ) ஆம் உறுப்புரையின் 8 ஆம் பந்தியினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் வண்ணம், கிழக்கு மாகாண ஆளுநர் தொன் சரத் மொஹான் விஜேவிக்ரம ஆகிய நான், 2012, ஆனி 27 ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருமாறு கிழக்கு மாகாண சபையை இத்தால் கலைக்கின்றேன்.

டி. எஸ். மொஹான் விஜேவிக்ரம,
கிழக்கு மாகாண ஆளுநர்.

கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம்,
2012, ஆனி 27

உப அட்டவணை - 02

அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை - ஆம் இலக்கம் 1764/07 - 2012.06.27

பகுதி IV (அ) - மாகாண சபைகள்
ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும்
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (ஆ) ஆம் உறுப்புரை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (ஆ) ஆம் உறுப்புரையின் 8 ஆம் பந்தியினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் வண்ணம், வட மத்திய மாகாண ஆளுநர் ஹேரத் முதியன்சேலாகே கருணாரத்ன திவுல்கனே ஆகிய நான், 2012, ஆனி 27 நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருமாறு வடமத்திய மாகாண சபையை இத்தால் கலைக்கின்றேன்.

கருணாரத்ன திவுல்கனே,
வட மத்திய மாகாண ஆளுநர்.

வட மத்திய மாகாண ஆளுநர் அலுவலகம்,
2012, ஆனி 27 ஆம் திகதி.

உப அட்டவணை - 03

அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை - ஆம் இலக்கம் 1764/08 - 2012.06.27

பகுதி IV (அ) - மாகாண சபைகள்
ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும்
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (ஆ) ஆம் உறுப்புரை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (ஆ) ஆம் உறுப்புரையின் 8 ஆம் பந்தியினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் வண்ணம், சப்பிரகமுவ மாகாண ஆளுநர் விஜேசிங்க ஜயவீர முதியன்செலாகே லொக்குபண்டார ஆகிய நான், 2012, ஆனி 27 நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருமாறு சப்பிரகமுவ மாகாண சபையை இத்தால் கலைக்கின்றேன்.

வி.ஜ.மு. லொக்குபண்டார,
சப்பிரகமுவ மாகாண ஆளுநர்.

சப்பிரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகம்,
2012, ஆனி 27 ஆம் திகதி.

உப அட்டவணை - 04

அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை - ஆம் இலக்கம் 1817/38 - 2013.07.05

பகுதி IV (அ) - மாகாண சபைகள்
ஆளுநர்களினால் செய்யப்படும் பிரகடனங்களும் பிறவும்
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (ஆ) ஆம் உறுப்புரை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (ஆ) ஆம் உறுப்புரையின் (8) ஆம் பந்தியினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் வண்ணம், மத்திய மாகாண ஆளுநர் ரிக்கிரி பண்டா கொப்பேகடுவ ஆகிய நான், இரண்டாயிரத்துப் பதின்மூன்றாம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருமாறு மத்திய மாகாண சபையை இத்தால் கலைக்கின்றேன்.

ரிக்கிரி பண்டா கொப்பேகடுவ,
மத்திய மாகாண ஆளுநர்.

மத்திய மாகாண ஆளுநர் அலுவலகம்,
2013, யூலை 05.

உப அட்டவணை - 05

அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை - ஆம் இலக்கம் 1817/39 - 2013.07.05

பகுதி IV (அ) - மாகாண சபைகள்
ஆளுநர்களினால் செய்யப்படும் பிரகடனங்களும் பிறவும்
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(ஆ) ஆம் உறுப்புரை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(ஆ) ஆம் உறுப்புரையின் (8) ஆம் பந்தியினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் வண்ணம், வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ ரெஜினோல்ட் பலல்ல ஆகிய நான், இரண்டாயிரத்துப்பதின்மூன்றாம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருமாறு வடமேல் மாகாண சபையை இத்தால் கலைக்கின்றேன்.

திஸ்ஸ ரெஜினோல்ட் பலல்ல,
வடமேல் மாகாண ஆளுநர்.

வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகம்,
2013, யூலை 05.

உப அட்டவணை - 06

அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை - ஆம் இலக்கம் 1844/75 - 2014.01.12

பகுதி IV (அ) - மாகாண சபைகள்
ஆளுநர்களினால் செய்யப்படும் பிரகடனங்களும் பிறவும்
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(ஆ) ஆம் உறுப்புரை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (ஆ) ஆம் உறுப்புரையின் (8) ஆம் பந்தியினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் வண்ணம், மேல் மாகாண ஆளுநர் செய்யத் அஹமட் செய்யத் அலவி மௌலானா ஆகிய நான், 2014, சனவரி மாதம் 12 ஆந் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருமாறு மேல் மாகாண சபையை இத்தால் கலைக்கின்றேன்.

செய்யத் அஹமட் செய்யத் அலவி மௌலானா,
மேல் மாகாண ஆளுநர்.

மேல் மாகாண ஆளுநர் அலுவலகம்,
2014, சனவரி 12.

உப அட்டவணை - 07

அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை - ஆம் இலக்கம் 1844/75 - 2014.01.12

பகுதி IV (அ) - மாகாண சபைகள்
ஆளுநர்களினால் செய்யப்படும் பிரகடனங்களும் பிறவும்
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (ஆ) ஆம் உறுப்புரை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (ஆ) ஆம் உறுப்புரையின் (8) ஆம் பந்தியினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் வண்ணம், தென் மாகாண ஆளுநர் நெரஞ்ஜலா புஸ்பகுமாரி பாலசூரிய ஆகிய நான், 2014, சனவரி மாதம் 12 ஆந் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருமாறு தென் மாகாண சபையை இத்தால் கலைக்கின்றேன்.

நெரஞ்ஜலா புஸ்பகுமாரி பாலசூரிய,
தென் மாகாண ஆளுநர்.

தென் மாகாண ஆளுநர் அலுவலகம்,
2014, சனவரி 12.

உப அட்டவணை - 08

அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை - ஆம் இலக்கம் 1870/64 - 2014.07.11

பகுதி IV (அ) - மாகாண சபைகள்
ஆளுநர்களினால் செய்யப்படும் பிரகடனங்களும் பிறவும்
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (ஆ) ஆம் உறுப்புரை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(ஆ) ஆம் உறுப்புரையின் (8) ஆம் பந்தியினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் வண்ணம், ஊவா மாகாண ஆளுநர் களுவாதேவகே நந்த மத்தியூ ஆகிய நான், இரண்டாயிரத்துப் பதினான்காம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருமாறு ஊவா மாகாண சபையை இத்தால் கலைக்கின்றேன்.

களுவாதேவகே நந்த மத்தியூ,
ஊவா மாகாண ஆளுநர்.

ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம்,
2014, யூலை 11.

உப அட்டவணை - 09

அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை - ஆம் இலக்கம் 1764/15 - 2012.06.28

பகுதி I : தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்

கிழக்கு மாகாணத்தின் மாகாண சபை
1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்
10 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

மேற்கூறப்பட்ட மாகாண சபைக்கு அந்த மாவட்டத்தினுள் அமைந்துள்ளதும் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டதுமான நிர்வாக மாவட்டங்களிலிருந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்கான தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளன என (இதனகத்துப்பின்னர் சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

2. இத்தேர்தலில் இங்கு I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை இதற்கான அட்டவணையின் **II** ஆம் நிரலில் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

3. பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் 2012.07.12 ஆந் திகதி ஆரம்பித்து 2012.07.19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முடிவடையும். நியமனக் காலப்பகுதியின் போது, அலுவலக நேரங்களில் எந்நேரத்திலும் இதற்கான அட்டவணையின் III ஆம் நிரலில் நேரொத்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புகின்ற எவரேனும் ஆட்களைக் கொண்ட ஒரு குழு இருப்பின், சட்டத்தின் 14 ஆம் பிரிவின்பால் அவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. அப்பிரிவிற்கமைய, ஒவ்வொரு சுயேச்சைக் குழுத் தலைவரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஒருவரும் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்ற ஒவ்வொரு வேட்பாளர் தொடர்பாகவும் இரண்டாயிரம் (2,000) ரூபா வீதம் கணக்கெடுக்கப்பட்ட பணத்தை இவ்வறிவித்தல் பகிரங்கப்படுத்தப்படுகின்ற திகதி மற்றும் மேற்குறித்த நியமனப்பத்திர கால எல்லைக்கு நேர்முந்திய நாள் (அதாவது 2012.07.18) நண்பகல் 12.00 மணி வரையிலான காலம் ஆகிய காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் வைப்புச் செய்தல் வேண்டும்.

5. விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான நியமனப்பத்திரங்களை நியமனக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து கட்டணமேதுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

6. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும் சுயேச்சைக் குழுக்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும் வேறுபடுத்திக் காட்டும் இலக்கங்களும் 2012.07.19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணியின் பின் உடனடியாகத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மாவட்டச் செயலகம் (கச்சேரி) ஒவ்வொன்றிலும் பிரித்தொதுக்கப்படும்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2012, யூன் 28.

அட்டவணை

நிரல் I நிர்வாக மாவட்டத்தின் பெயர்	நிரல் II ஒவ்வொரு பெயர்குறித்த நியமனப்பத்திரத்திலும் தரப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை	நிரல் III பெயர்குறித்த நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் அலுவலரும் நியமனத்தின் இடமும்
மட்டக்களப்பு	14	தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்ட செயலகம் (கச்சேரி), மட்டக்களப்பு.
அம்பாறை	17	தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்ட செயலகம் (கச்சேரி), அம்பாறை.
திருகோணமலை	13	தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்ட செயலகம் (கச்சேரி), திருகோணமலை.

வடமத்திய மாகாணத்தின் மாகாண சபை

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்

10 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

மேற்கூறப்பட்ட மாகாண சபைக்கு அந்த மாவட்டத்தினுள் அமைந்துள்ளதும், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டதுமான நிர்வாக மாவட்டங்களிலிருந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்கான தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளன என (இதனகத்துப்பின்னர் சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

2. இத்தேர்தலில் இங்கு I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை இதற்கான அட்டவணையின் II ஆம் நிரலில் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

3. பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் 2012.07.12 ஆந் திகதி ஆரம்பித்து 2012.07.19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முடிவடையும். நியமனக் காலப்பகுதியின் போது, அலுவலக நேரங்களில் எந்நேரத்திலும் இதற்கான அட்டவணையின் III ஆம் நிரலில் நேரொத்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புகின்ற எவரேனும் ஆட்களைக் கொண்ட ஒரு குழு இருப்பின், சட்டத்தின் 14 ஆம் பிரிவின்பால் அவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. அப்பிரிவிற்கமைய, ஒவ்வொரு சுயேச்சைக் குழுத் தலைவரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஒருவரும் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்ற ஒவ்வொரு வேட்பாளர் தொடர்பாகவும் இரண்டாயிரம் (2,000) ரூபா வீதம் கணக்கெடுக்கப்பட்ட பணத்தை இவ்வறிவித்தல் பகிரங்கப்படுத்தப்படுகின்ற திகதி மற்றும் மேற்குறித்த நியமனப்பத்திர கால எல்லைக்கு நேர்முந்திய நாள் (அதாவது 2012.07.18) நண்பகல் 12.00 மணி வரையிலான காலம் ஆகிய காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் வைப்புச் செய்தல் வேண்டும்.

5. விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான நியமனப்பத்திரங்களை நியமனக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து கட்டணமேதுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

6. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும் சுயேச்சைக் குழுக்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும் வேறுபடுத்திக் காட்டும் இலக்கங்களும் 2012.07.19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணியின் பின் உடனடியாகத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மாவட்டச் செயலகம் (கச்சேரி) ஒவ்வொன்றிலும் பிரித்தொதுக்கப்படும்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2012, யூன் 28.

அட்டவணை

நிரல் I நிர்வாக மாவட்டத்தின் பெயர்	நிரல் II ஒவ்வொரு பெயர்குறித்த நியமனப்பத்திரத்திலும் தரப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை	நிரல் III பெயர்குறித்த நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் அலுவலரும் நியமனத்தின் இடமும்
அநுராதபுரம்	24	தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்ட செயலகம் (கச்சேரி), அநுராதபுரம்.
பொலன்னறுவை	13	தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்ட செயலகம் (கச்சேரி), பொலன்னறுவை.

சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை
1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்
10 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

மேற்கூறப்பட்ட மாகாண சபைக்கு அந்த மாவட்டத்தினுள் அமைந்துள்ளதும், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டதுமான நிர்வாக மாவட்டங்களிலிருந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்கான தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளன என (இதனகத்துப்பின்னர் சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

02. இத்தேர்தலில் இங்கு I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை இதற்கான அட்டவணையின் **II** ஆம் நிரலில் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

03. பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் 2012.07.12 ஆந் திகதி ஆரம்பித்து 2012.07.19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முடிவடையும். நியமனக் காலப்பகுதியின் போது, அலுவலக நேரங்களில் எந்நேரத்திலும் இதற்கான அட்டவணையின் III ஆம் நிரலில் நேரொத்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

04. சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புகின்ற எவரேனும் ஆட்களைக் கொண்ட ஒரு குழு இருப்பின், சட்டத்தின் 14 ஆம் பிரிவின்பால் அவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. அப்பிரிவிற்கமைய ஒவ்வொரு சுயேச்சைக் குழுத் தலைவரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஒருவரும் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்ற ஒவ்வொரு வேட்பாளர் தொடர்பாகவும் இரண்டாயிரம் (2,000) ரூபா வீதம் கணக்கெடுக்கப்பட்ட பணத்தை இவ்வறிவித்தல் பகிரங்கப்படுத்தப்படுகின்ற திகதி மற்றும் மேற்குறித்த நியமனப்பத்திர கால எல்லைக்கு நேர்முந்திய நாள் (அதாவது 2012.07.18) நண்பகல் 12.00 மணி வரையிலான காலம் ஆகிய காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் வைப்புச் செய்தல் வேண்டும்.

05. விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான நியமனப்பத்திரங்களை நியமனக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து கட்டணமேதுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

06. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும் சுயேச்சைக் குழுக்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும் வேறுபடுத்திக் காட்டும் இலங்கங்களும் 2012.07.19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணியின் பின் உடனடியாகத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மாவட்டச் செயலகம் (கச்சேரி) ஒவ்வொன்றிலும் பிரித்தொதுக்கப்படும்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2012, யூன் 28.

அட்டவணை

நிரல் I நிர்வாக மாவட்டத்தின் பெயர்	நிரல் II ஒவ்வொரு பெயர்குறித்த நியமனப்பத்திரத்திலும் தரப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை	நிரல் III பெயர்குறித்த நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் அலுவலரும் நியமனத்தின் இடமும்
இரத்தினபுரி	27	தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்ட செயலகம் (கச்சேரி), இரத்தினபுரி
கேகாலை	21	தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்ட செயலகம் (கச்சேரி), கேகாலை.

உப அட்டவணை - 10

அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை - ஆம் இலக்கம் 1818/21 - 2013.07.11

பகுதி I : தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்

மத்திய மாகாணத்தின் மாகாண சபை
1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்
10 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

மேற்கூறப்பட்ட மாகாண சபைக்கு அந்த மாவட்டத்தினுள் அமைந்துள்ளதும், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டதுமான நிர்வாக மாவட்டங்களிலிருந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்கான தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளன என (இதனகத்துப் பின்னர் சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

02. இத்தேர்தலில் இங்கு I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை இதற்கான அட்டவணையின் II ஆம் நிரலில் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

03. பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் 2013, யூலை 25 ஆந் திகதி ஆரம்பித்து 2013, ஆகஸ்ட் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முடிவடைகின்ற நியமனக் காலப்பகுதியின் போது, அலுவலக நேரங்களில் எந்நேரத்திலும் இதற்கான அட்டவணையின் III ஆம் நிரலில் நேரொத்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

04. சுயேட்சை வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புகின்ற எவரேனும் ஆட்களைக் கொண்ட ஒரு குழுவிருப்பின், சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பால் அவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. அப்பிரிவிற்கமைய, ஒவ்வொரு சுயேச்சை குழுத் தலைவரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் பெயர் குறித்து நியமிக்கப்படுகின்ற ஒவ்வொரு வேட்பாளர் தொடர்பாகவும் இரண்டாயிரம் ரூபா (2,000) வீதம் கணக்கெடுக்கப்பட்ட பணத்தை இவ்வறிவித்தல் பகிரங்கப்படுத்தப்படுகின்ற திகதி மற்றும் மேற்குறித்த நியமனப்பத்திர கால எல்லைக்கு நேர்முந்திய நாள் (அதாவது 2013, யூலை 31) நண்பகல் 12.00 மணி வரையிலான காலம் ஆகிய காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் வைப்புச் செய்தல் வேண்டும்.

05. விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான நியமனப்பத்திரங்களை நியமனக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து கட்டணமேதுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

06. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும் சுயேச்சைக் குழுக்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும் வேறுபடுத்திக் காட்டும் இலக்கங்களும் 2013, ஆகஸ்ட் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணியின் பின் உடனடியாகத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மாவட்டச் செயலகம் (கச்சேரி) ஒவ்வொன்றிலும் பிரித்தொதுக்கப்படும்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2013, யூலை மாதம் 11 ஆம் திகதி.

அட்டவணை

நிரல் I நிர்வாக மாவட்டத்தின் பெயர்	நிரல் II ஒவ்வொரு பெயர்குறித்த நியமனப்பத்திரத்திலும் தரப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை	நிரல் III பெயர்குறித்த நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் அலுவலரும் நியமனத்தின் இடமும்
கண்டி	32	தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்டச் செயலகம் (கச்சேரி), கண்டி.
மாத்தளை	14	தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்டச் செயலகம் (கச்சேரி), மாத்தளை.
நுவரெலியா	19	தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்டச் செயலகம் (கச்சேரி), நுவரெலியா.

வட மாகாணத்தின் மாகாண சபை
1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்
10 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

மேற்கூறப்பட்ட மாகாண சபைக்கு அந்த மாவட்டத்தினுள் அமைந்துள்ளதும், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டதுமான நிர்வாக மாவட்டங்களிலிருந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்கான தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளன என (இதனகத்துப் பின்னர் சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

02. இத்தேர்தலில் இங்கு I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை இதற்கான அட்டவணையின் II ஆம் நிரலில் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

03. பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் 2013, யூலை 25 ஆந் திகதி ஆரம்பித்து 2013, ஆகஸ்ட் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முடிவடையும். நியமனக் காலப்பகுதியின் போது, அலுவலக நேரங்களில் எந்நேரத்திலும் இதற்கான அட்டவணையின் III ஆம் நிரலில் நேரொத்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

04. சுயேட்சை வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புகின்ற எவரேனும் ஆட்களைக் கொண்ட ஒரு குழுவிருப்பின், சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பால் அவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. அப்பிரிவிற்கமைய, ஒவ்வொரு சுயேச்சைக் குழுத் தலைவரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஒருவரும் பெயர் குறித்து நியமிக்கப்படுகின்ற ஒவ்வொரு வேட்பாளர் தொடர்பாகவும் இரண்டாயிரம் ரூபா (2,000) வீதம் கணக்கெடுக்கப்பட்ட பணத்தை இவ்வறிவித்தல் பகிரங்கப்படுத்தப்படுகின்ற திகதி மற்றும் மேற்குறித்த நியமனப்பத்திர கால எல்லைக்கு நேர்முந்திய நாள் (அதாவது 2013, யூலை 31) நண்பகல் 12.00 வரையிலான காலம் ஆகிய காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் வைப்புச் செய்தல் வேண்டும்.

05. விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான நியமனப்பத்திரங்களை நியமனக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து கட்டண மேதுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

06. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும் சுயேச்சைக் குழுக்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும் வேறுபடுத்திக் காட்டும் இலக்கங்களும் 2013, ஆகஸ்ட்

01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணியின் பின் உடனடியாகத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மாவட்டச் செயலகம் (கச்சேரி) ஒவ்வொன்றிலும் பிரித்தொதுக்கப்படும்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2013, யூலை மாதம் 11 ஆம் திகதி.

அட்டவணை

நிரல் I நிர்வாக மாவட்டத்தின் பெயர்	நிரல் II ஒவ்வொரு பெயர்குறித்த நியமனப்பத்திரத்திலும் தரப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை	நிரல் III பெயர்குறித்த நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் அலுவலரும் நியமனத்தின் இடமும்
லிபரல் கட்சி	லந்தகே சுனில்	அங்கீகாரம் பெற்ற முகவர்	2014.08.05	பி.ப. 2.10	சிங்களம்	ஏற்றுக்கொள்ளப்பட்டது.
சுயேச்சைக் குழு	அரங்கலகே தொன் சுனில்	குழுத் தலைவர்	2014.08.05	பி.ப. 2.14	சிங்களம்	ஏற்றுக்கொள்ளப்பட்டது.
சுயேச்சைக் குழு	ரத்நாயக்க முதியன்சேலாகே புஞ்சிபண்டா	இரண்டாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்டவர்	2014.08.06	மு.ப. 9.06	சிங்களம்	ஏற்றுக்கொள்ளப்பட்டது.
ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி	டப்.எம்.ரீ.டப். குணசேகர	அங்கீகாரம் பெற்ற முகவர்	2014.08.06	மு.ப 9.09	சிங்களம்	ஏற்றுக்கொள்ளப்பட்டது.
சுயேச்சைக் குழு	நிக்கவத்தே நந்தசிறி	குழுத் தலைவர்	2014.08.06	மு.ப.10.20	சிங்களம்	ஏற்றுக்கொள்ளப்பட்டது.
மவ்பிம ஜனதா பக்ஷய	சேனரத் அதுல குமாரசிறி	அங்கீகாரம் பெற்ற முகவர்	2014.08.06	மு.ப.10.25	சிங்களம்	ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அரசியற் கட்சி/ சுயேச்சைக் குழு	வேட்புமனு கையளித்த நபர்	பெயர்/பதவி	திகதி	வேட்புமனு கையளித்த நேரம்	வேட்புமனு-விலுள்ள மொழி	ஏற்றுக் கொள்ளப்பட்டதா இல்லையா என்பது
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி	சசீந்திர ராஜபக்ஸ	அங்கீகாரம் பெற்ற முகவர்	2014.08.06	மு.ப.10.29	சிங்களம்	ஏற்றுக்கொள்ளப்பட்டது.
எக்சத் லங்கா மகாசபாக் கட்சி	பொல்வத்த கால்லகே தயானந்த	அங்கீகாரம் பெற்ற முகவர்	2014.08.06	மு.ப.10.35	சிங்களம்	ஏற்றுக்கொள்ளப்பட்டது.
ஐக்கிய தேசியக் கட்சி	ஜயசுந்தர முதியன்சேலாகே ஆனந்த குமாரசிறி	அங்கீகாரம் பெற்ற முகவர்	2014.08.06	மு.ப11.02	சிங்களம்	ஏற்றுக்கொள்ளப்பட்டது.
சுயேச்சைக் குழு	சால்ஸ் பீட்டர் சந்திரபால	குழுத் தலைவர்	2014.08.06	மு.ப.11.10	சிங்களம்	ஏற்றுக்கொள்ளப்பட்டது.
சுயேச்சைக் குழு	மஹமேதர பட்டபெந்திகே பேமசிறி	குழுத் தலைவர்	2014.08.06	மு.ப11.50	சிங்களம்	ஏற்றுக்கொள்ளப்பட்டது.
எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய	ருவன்திலக பேதுருஆரச்சி	செயலாளர்	2014.08.06	மு.ப.11.51	சிங்களம்	ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உப அட்டவணை - 19

ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல் - 2014
அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தல்

ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல் 2014 ஆகஸ்ட் 06 ஆம் திகதி நிறைவடையும்.

02. இம்முறை தேர்தலுக்கான தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற ஊவா மாகாணத்தின் அனைத்து அரச அலுவலர்கள்/ அதிபர்கள்/ ஆசிரியர்கள் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான தமது விண்ணப்பங்களை 2014 ஆகஸ்ட் மாதம் 06 ஆந் திகதி முடிவடைவதற்கு முன்னர் உரிய தேர்தல் அலுவலகத்திற்குக் கிடைக்கத்தக்கவாறு சமர்ப்பித்தல் அத்தியாவசியமென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. வாக்கெடுப்பு நிலையக் கடமையிலீடுபட்டுள்ள எந்தவோர் அலுவலரொருவருக்கும் எக்காரணம் கொண்டும் வாக்கெடுப்பு நிலையக் கடமையிலீடுபட்டுள்ள சந்தர்ப்பத்தில், முக்கியமாக வாக்கினைப் பிரயோகிப்பதற்காக வேறொரு வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதற்காக சேவையிலீடுபட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்தை விட்டு வெளியே செல்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. அவ்வாறே அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்காமை அல்லது அஞ்சல் மூல விண்ணப்பப் பத்திரம் நிராகரிக்கப்பட்டமை தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுவதற்குக் காரணமாகாதென்பதும் தயவன்புடன் அறியத் தரப்படுகின்றது. எனவே ஊவா மாகாண சபைத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அம்மாவட்டங்களில் வதியும் அனைத்து அலுவலர்களும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக தத்தம் விண்ணப்பங்களைத் தாமதியாது சமர்ப்பிக்க வேண்டுமெனத் தயவன்புடன் வலியுறுத்துகின்றேன்.

03. அவ்வாறே ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு உரிமையுடைய பாதுகாப்புப் படை அங்கத்தவர்கள், பொலிஸ் அலுவலர்கள் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையில், தபாற் திணைக்களத்தில், இலங்கை புகையிரத சேவையில் பணிபுரிகின்றவர்கள் ஆகியோர் தமது அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் உரிய மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென மேலும் தயவன்புடன் அறிவிக்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய.
தேர்தல்கள் ஆணையாளர்,

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2014.08.03

உப அட்டவணை - 20

ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல் - 2014.09.20
வலிமையிழப்பொன்றிற்கு இலக்காகிய வாக்காளரொருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிட்டுக் கொள்வதற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்குத் தேவையான சட்ட விதிகளை ஏற்பாடு செய்தல்.

2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 38(2) ஆம் பிரிவிற்கமைய எதிர்வரும் தேர்தல்களின் போது முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பார்வைப் பாதிப்பொன்றிற்கு அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமையிழப்பொன்றிற்கு இலக்கான வாக்காளர் ஒருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வைத்து வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக் கொள்வதற்காக உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்லத்தக்கவாறான புதிய சட்ட விதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

02. ஆயினும், அவ்வாறு உடனழைத்துச் செல்லும் அவ்வுதவியாளர் 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவராக இருக்க வேண்டுமென்பதோடு அத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் அல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். அதே போன்று அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவராகவோ அல்லது வாக்களிப்பு நிலையத்தின் முகவரொருவராகவோ செயற்படுகின்றவரல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் ஏதேனும் வலிமையிழப்பொன்றிற்கு உட்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

03. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்காக உரிய சட்டத்தின் நான்காம் அட்டவணையினூடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தகுதிச் சான்றிதழொன்றை உரிய வாக்களிப்பு நிலையத்தின் அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இத்தகுதிச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை தேர்தல்கள் நடாத்தப்படவுள்ள மாகாண சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். உரிய தகுதிச் சான்றிதழின் படிவத்தைத் தேர்தல்கள் திணைக்களத்தின் இணையத் தளத்திலிருந்தும் (www.slelections.gov.lk) பெற்றுக் கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பார்வைக் குறைபாடுள்ள அல்லது வேறேதேனும் உடல்ரீதியான வலிமையிழப்பிற்குள்ளாகிய ஆள், கிராம அலுவலரிடமிருந்து விண்ணப்பப் படிவமொன்றைப் பெற்று அதனை நிரப்பிக் கொடுத்து கிராம அலுவலரின் அத்தாட்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டுமென்பதோடு அதன் பின்னர் அச் சான்றிதழை அரசாங்க வைத்திய அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். வைத்திய அலுவலரினால் வாக்காளர் பரீட்சிக்கப்பட்டு அப் படிவத்தில் வாக்காளரின் தகைமை குறிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும்.

05. வலிமையிழப்பிற்கு ஆளாகிய வாக்காளர் தனது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏதேனுமோர் அடையாள அட்டை மற்றும் இத் தகுதிச் சான்றிதழ் என்பவற்றை எடுத்துக்கொண்டு உதவியாளரையும் உடனழைத்துக் கொண்டு வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லுதல் வேண்டும். வாக்களிப்பு நிலைய பணியாட் குழுவினால் வாக்காளரின் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து வாக்களிப்பு நிலையத்தின் வழமையான நடைமுறையைப் பின்பற்றி வாக்குச் சீட்டொன்று விநியோகிக்கப்படும் என்பதோடு, அவ் வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளரோடு வாக்காளர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் ஆற்றுப்படுத்தப்படுவார். உதவியாளரும் தம்மோடு தேசிய அடையாள அட்டையை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏதேனும் அடையாள அட்டையொன்றை எடுத்துச் செல்லல் இன்றியமையாததாகும்.

06. வாக்களிப்பு நிலையத்தில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வாக்காளரின் தகுதிச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படும் என்பதோடு அழைத்து வருகின்ற ஆளிடமிருந்து தகுதிச் சான்றிதழ் II ஆம் பகுதியில் காட்டப்பட்ட உரிய வெளிப்படுத்துகை பெறப்படும். அதைத் தொடர்ந்து வாக்களிப்பு பணியாட் குழுவினர் ஒருவரோடு வாக்காளரும் உதவியாளரும் வாக்களிப்புச் சிற்றறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் பணியாட் குழுவின் மற்றோர் அங்கத்தினர் ஆகியோர் முன்னிலையில் வாக்குச்சீட்டு அடையாளமிடப்பட்டு வாக்குப்பெட்டிக்குள் இடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்

07. மேற்குறித்த தகுதிச் சான்றிதழொன்று இல்லாமல் வாக்களிப்பு நிலையத்திற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்ல முடியாது என்பது கவனத்திற் கொள்ளப்படுகிறது. வாக்கு அடையாளமிட்டதன் பின்னர் உரிய தகுதிச் சான்றிதழ் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

08. எவ்வாறாயினும் உதவியாளர் ஒருவரோடு வருவதற்கு இயலாத வாக்காளரொருவருக்குத் தேவைப்படின், அதற்கு முந்திய வாக்கெடுப்புக்களில் போன்றே வாக்கெடுப்பு நிலைய அலுவலர் ஒருவரின் முன்னிலையில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரூடாக தனது வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக் கொள்ள அவகாசமுள்ளதென்பது அறிவிக்கப்படுகின்றது.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2014.08.28

மஹிந்த தேசப்பிரிய.
தேர்தல்கள் ஆணையாளர்,

உப அட்டவணை - 21

ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல் - 2014
உடற்றகுதியீனம் உள்ளவர்கள் விசேட போக்குவரத்து வசதிகளுக்காக விண்ணப்பித்தல்

மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 84(4)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் உடற்றகுதியீனம் காரணமாக ஏவரேனுமொருவர் நடந்தோ அன்றி இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் அல்லது பிரதேச போக்குவரத்துச் சபையினால் அல்லது இலங்கை அரசாங்க புகையிரத திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் பொது போக்குவரத்து சேவையிலோ வாக்கெடுப்பு நிலையத்திற்கு போய் வர முடியாதவராகவிருந்தால், தான் வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய்வரும் நோக்கத்திற்காக தனது தேர்தல் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தானோ அல்லது அவ்வாறு முடியாதிருப்பின் தனக்குப் பதிலாக வேட்பாளரொருவரல்லாத வேரொருவரோ விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

02. இவ்வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தினை வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு 7 நாட்களுக்கு முன்னதாக அதாவது 2014 செப்தெம்பர் 12 ஆந் தேதி அல்லது அதற்கு முன்னதாக உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தெரிவிக்குமாறு சமர்ப்பித்தல் சட்டமுறையான தேவையொன்றாகுமென்பதோடு, தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடைந்தால் இந்நோக்கத்திற்கென அந்நபருக்கு விசேட போக்குவரத்து வசதியினைப் பெற்றுக்கொள்ளவதற்கு உத்தரவுப்பத்திரத்தை விநியோக்கிக்கலாம்.

03. விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் நபர் நடந்து அல்லது பொது வாகனங்களில் போக முடியாதவாறு உடற்றகுதியீனமுற்றிருப்பதன் தன்மையை விபரித்து (மேல்நாட்டு அல்லது சுதேச வைத்தியர்) பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட வைத்திய அத்தாட்சிப்பத்திரமொன்றின் மூலம் தமது விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவாரெனில் அதற்கான முடிவை மேற்கொள்ள தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு உதவியாகவிருக்கும். தன்னைப் பரிசோதித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் ஒருவர் அரசாங்க வைத்தியரிடம் / பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியரொருவரிடம் அல்லது ஆயுர்வேத வைத்தியரிடம் விண்ணப்பிக்குமிடத்து அவர் அவ்வைத்திய அறிக்கையினைக் கட்டணமேதுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம். தனியார் (மேல்நாட்டு அல்லது சுதேச) வைத்தியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளில் அவ்வைத்தியரின் பெயரையும் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

04. 2 ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்குமாறு இதற்கென இத்துடனுள்ள மாதிரிப்படிவத்திற்கிணங்கத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை உரிய மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு (மாவட்டச் செயலாளர்) அல்லது உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2014.08.13

மஹிந்த தேசப்பிரிய.
தேர்தல்கள் ஆணையாளர்,

உப அட்டவணை - 22

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம்
ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல் - 2014

84(4)(ஈ) ஆம் பிரிவின் கீழ் வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்கான உத்தரவுப் பத்திரமொன்றிற்கென உடற்றகுதியீனமுற்றுள்ள ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்.

..... நிருவாக மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு

(1) உடற்றகுதியீனம் உள்ளவரின் விபரங்கள்:
(அ) முழுப் பெயர்: .....
(ஆ) அஞ்சல் முகவரி: .....
(இ) தேருநர் இடாப்பிலுள்ளவாறு வாக்கெடுப்புப் பிரிவு வாக்கெடுப்பு மாவட்டம் தொடர் இலக்கம் (தெரியுமாயின்) .....

(2) உடற்றகுதியீனம் பற்றிய சுருக்கமான ஒரு விபரம்: .....
.....

(3) உடற்றகுதியீனம் உற்றவருக்காக வேறெவராலும் விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுமாயின் அவரது பெயரும்முகவரியும்:.....
.....

(4) இவ்விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க வைத்தியர் ஒருவரின்/ பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியத் தொழில் புரியும் ஒருவரின்/ ஆயர்வேத வைத்தியரொருவரின்/ தனியார் வைத்தியரொருவரின் அறிக்கை ஒன்றை இத்துடன் அனுப்புகின்றேன்.

வைத்தியரின் பெயர்: .....
பதிவிலக்கம்: .....

(5) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு உடற்றகுதியீனம் காரணமாக எனக்கு/ உடற்றகுதியீனமுற்றுள்ள மேலே பெயர் காணப்படுபவருக்கு நடந்து அல்லது இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவை எதனிலும் ஏற்பாடு செய்யப்பட்ட போக்குவரத்து வசதி மூலம் வாக்களிக்கப் போக முடியாதென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

(6) மேற்கூறப்பட்ட வாக்கெடுப்பின்போது வாக்கினைப் பிரயோகிக்கும் பொருட்டு வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய் வருவதற்கென நான்/ உடற்றகுதியீனம் உற்ற மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ளவர் ஏதேனுமொரு வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு எழுத்து மூலமான உத்தரவினை வழங்குமாறு இத்தால் கேட்டுக்கொள்கின்றேன்.

.....
ஊடற்றகுதியீனமானவரின்/அவருக்காக
விண்ணப்பிக்கும் வேறொருவரின்
ஒப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.

திகதி.....

உப அட்டவணை - 23

ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல் - 2014.09.20
வாக்கெடுப்புத் தினத்தில் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

2014.09.20 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலின் போது வாக்கெடுப்பு நிலையத்திற்குள் உட்பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பது கீழ்க் காட்டப்பட்டவர்களுக்கு மாத்திரமேயாகும்.

1. வாக்காளர்கள்
2. வாக்கெடுப்பு நிலையப் பணியாட் குழுவினர்
3. போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் செயலாளர்கள்
4. வேட்பாளர்கள்
5. வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள்
6. வாக்கெடுப்பு நிலையக் கடமைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அலுவலர்கள்
7. தெரிவத்தாட்சி அலுவலரின் அனுமதியைப் பெற்றுள்ள ஏனைய நபர்கள்

வாக்கெடுப்பு நிலைய வளவினுள் கீழ்க் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் தடைசெய்யப்பட்டுள்ளதென வலியுறுத்துகின்றேன்.

1. கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தல்
2. புகைப்படங்களை எடுத்தல்
3. காணொளிக் காட்சி (வீடியோ) எடுத்தல்
4. சுடுகலன்களைத் தம்வசம் வைத்திருத்தல்
5. புகைப்பிடித்தல், மதுபானம் மற்றும் வேறு போதைப் பொருட்கள் பாவனை
6. வேட்பாளர்களின் பாதுகாவலர்கள் ஆயுதம் தாங்கியோ தாங்காமலோ வாக்கெடுப்பு நிலையங்களினுள் வருதல்.

வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள முழுக் கட்டடத்தொகுதியும் வாக்கெடுப்பு நிலையமாகக் கருதப்படும்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2014.09.13

மஹிந்த தேசப்பிரிய.
தேர்தல்கள் ஆணையாளர்,

உப அட்டவணை - 24

ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல் - 2014.09.20
வாக்களித்தலும் விருப்புத் தெரிவித்தலும் பற்றிய சுருக்கமான விளக்கம்
வாக்குச்சீட்டின் மாதிரிப் படிவம்

அடியிதழ் இலக்கம்

.அ, கட்சி *									
.ஆ, கட்சி *									
.இ, கட்சி *									
.ஈ, கட்சி *									
.உ, கட்சி *									
சுயேச்சைக் குழு 1 *									
சுயேச்சைக் குழு 2 *									
சுயேச்சைக் குழு 3 *									
சுயேச்சைக் குழு 4 *									
சுயேச்சைக் குழு 5 *									
1	2	3	4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17	18	19	20
21	22	23	24	25					

* ஒவ்வொரு கட்சியின் அல்லது குழுவின் சின்னம்

1. இது வாக்குச்சீட்டின் மாதிரியொன்று மட்டுமே.

2. அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள், அவற்றின் சின்னங்களுடன் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு சின்னத்திற்கும் எதிரே வெற்றுக்கூடொன்று உள்ளது. இதில் ஏதேனுமொரு கூடொன்றில் உங்கள் வாக்கை அடையாளமிடலாம். வாக்களிக்கும்போது நீங்கள் விரும்பும் சின்னத்திற்கு எதிரேயுள்ள வெற்றுக்கூட்டில் புள்ளடி (X), அடையாளமிடல் வேண்டும்.

3. ஒவ்வொரு வேட்பாளருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கம் ஒரு வரிசையில் 10 என்றவாறு வாக்குச்சீட்டின் கீழ்ப்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. விருப்பு வாக்கொன்றை அடையாளமிடும்போது, நீங்கள் விரும்பும் வேட்பாளரின் இலக்கத்திற்கு மேலே புள்ளடி (X) இடலாம். மூன்று வேட்பாளர்களுக்கு மேற்படாதவாறு அதாவது அவ்விலக்கங்கள் மூன்றுக்கு மேற்படாதவாறு உங்கள் விருப்புக்களை அடையாளமிடலாம்

4. வாக்கொன்று அடையாளமிடப்படாத வாக்குச்சீட்டு செல்லுபடியற்றதாகும். அது எவ்வித பெறுமதியுமற்றது. அது நிராகரிக்கப்படும். ஆகையினால் முதலில் வாக்கை அடையாளமிட்டு, அதன் பின் விருப்பமாயின் விருப்புக்களை அடையாளமிடுவதும் பொருத்தமாகும் என்பதை தயவுகூர்ந்து கவனத்திற் கொள்ளவும்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2014.08.17

மஹிந்த தேசப்பிரிய.
தேர்தல்கள் ஆணையாளர்,

உப அட்டவணை - 24

ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல்கள் னி 2014.09.20
ஊவா மாகாண சபை அதிகார எல்லைக்குட்பட்ட
தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல்

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கையளிப்பதற்காக விடுமுறை வழங்குவது தொடர்பான 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொழிலாளர்களினதும், தொழில்தருநர்களினதும் தகவலுக்காக இங்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

> "123 (1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் தேர்தலில் வாக்களிப்பதற்கு உரித்துடைய ஆளொருவரை வேலைக்கமர்த்தியவராகவிருக்கின்ற எவ் ஆளும், அத்தகைய ஆளினால் அதற்காக எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், அத்தகைய ஆள் அத்தேர்தலில் வாக்களிப்பதை இயலச் செய்வதற்காக வேலைக்கமர்த்திய அவ் ஆள் போதியதெனக் கருதக்கூடிய தொடர்ச்சியான காலத்திற்கு (அக்காலம் நான்கு மணித்தியாலங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்.) சம்பள இழப்பை ஏற்படுத்தாத லீவை அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.
> (2)(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவ் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினாற் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்திற்கு மேற்படாத காலத்திற்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்."

02. மேற்கூறப்பட்ட பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தனது வாக்கையளிப்பதற்காக விடுமுறை கோரி எழுத்துமூலம் விண்ணப்பம் செய்கின்ற எல்லா ஊழியர்களுக்கும், விடுமுறை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கும் விடுமுறை காலம், அமைய ஊழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறையொன்றாக கருதப்பட வேண்டியதுடன், அது ஊழியர்களின் சாதாரண லீவுகளிலிருந்து புறம்பானதாகவிருக்க வேண்டும்.

03. இவ்விடயம் தொடர்பாக ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுமுறை காலத்தை, அந்த ஊழியர் தொழில் புரியும் இடத்திற்கும் அவரது வாக்கெடுப்பு நிலையத்திற்கும் இடையிலுள்ள தூரத்தைக் கருத்திற்கொண்டு, தொழில்தருநரால் தீர்மானம் செய்ய வேண்டும். சட்டத்தின்படி லீவு பெற்றுக்கொள்வது தொடர்பாக இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களின்போதும் ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதனால், இவ்வாக்கெடுப்பின்போது வாக்களிக்க உரித்துள்ள தனது ஊழியர்களுக்கு, சட்டத்தின் கீழ் உரிமையுள்ள இவ்விடுமுறையை தனியார், அரசாங்க துறைகளிலுள்ள தொழில்தருநர்கள் தமது தாபனத்தில் தொழில்புரியும் ஊழியர்களுக்கு வழங்குமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

04. மேற்கூறப்பட்ட மாகாண சபையின் தேர்தல் 2014 செப்தெம்பர் மாதம் 20ஆந் திகதி சனிக்கிழமை மு.ப. 7.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை நடாத்தப்படும்.

05. இது தொடர்பாக சகல தொழில்தருநர்களிடமிருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பை மிகவும் மெச்சுகின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய.
தேர்தல்கள் ஆணையாளர்,

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2014.08.25

உப அட்டவணை - 25

ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல் - 2014.09.20
அஞ்சல் வாக்கு அடையாளமிடும் தினங்களில் பின்பற்றப்பட வேண்டிய விடயங்களும், அஞ்சல் வாக்கு அடையாளமிடும் நிலையம் மற்றும் அதனைச் சூழ தடைசெய்யப்பட்டுள்ள செயற்பாடுகளும்.

அஞ்சல் வாக்கு அடையாளமிடும் பணிகள் செப்தெம்பர் மாதம் 04 மற்றும் 05 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்படவுள்ளதோடு, அஞ்சல் வாக்கு அடையாளமிடும் நடவடிக்கைகளை அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு முன்னர் ஆரம்பித்தல் கூடாது. அதே போன்று முற்பகல் 08.30 மணிக்கு முன்னர் வாக்களிக்கும் பணிகளை ஆரம்பித்தல் கூடாது.

02. அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படும் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக அரசியற் கட்சிகளின் அல்லது சுயேச்சைக் குழுக்களின் முகவர்களாகச் செயற்படுவதற்கு குறித்த நிறுவனத்தில் பணிபுரிகின்ற எவரொருவருக்கும் அனுமதியளிக்கப்பட மாட்டாது.

03. அஞ்சல் வாக்களிக்கும் நிலையம் சாதாரணமான வாக்களிப்பு நிலையமொன்றைப் போன்று காணப்படல் வேண்டுமென்பதோடு, வாக்காளர்கள் தமது வாக்கினை எந்தவொரு வற்புறுத்தலின்றியும் மற்றும் அச்சமின்றியும் இரகசியமாக அடையாளமிடுவதற்கு வசதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

04. அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள், பணியாட் குழுவினர், அஞ்சல் வாக்காளர்கள் மற்றும் அஞ்சல் வாக்கு அடையாளமிடும் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களால் ஈடுபடுத்தப்படும் உத்தியோகபூர்வ கண்காணிப்பாளர்களுக்கு மேலதிகமாக போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்களின் முகவர்கள் மற்றும் அதற்காக அனுமதியளிக்கப்பட்ட கண்காணிப்பு அமைப்புக்களின் கண்காணிப்பாளர்கள் தவிர்ந்த வேறு எவரொருவரும் அஞ்சல் வாக்களிப்பு நிலையத்தினுள் தரித்திருத்தல் கூடாது. முறையாக முகவரொருவராக நியமனம் செய்யப்படவில்லையெனில் வேட்பாளர்களுக்கு அல்லது வேறு அரசியல்வாதிகளுக்கு அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படுவதை கண்காணிப்பதற்காகக் கலந்து கொள்ள முடியாது.

05. அஞ்சல் வாக்காளர்கள் அறிந்து கொள்வதற்காக வெளியிடப்பட்டுள்ள அனைத்து அறிவித்தல்களும் அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படும் நிலையத்தினுள் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

06. அஞ்சல் வாக்கு அடையாளமிடும் நிலையத்தினுள் புகைப்படம் எடுத்தல், காணொளிக் காட்சிகளை எடுத்தல் (வீடியோ) மற்றும் கையடக்க தொலைபேசிப் பாவனை என்பன முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளன. ஏதேனுமொரு விதத்தில் சட்டவிரோதமாக ஏதேனும் புகைப்படமொன்று அல்லது காட்சியொன்று எடுக்கப்பட்டிருப்பின் அவற்றை ஊடகங்களில் வெளியிடுதல் அல்லது ஒளிப்பரப்புதல் என்பவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு அனைத்து ஊடக நிறுவனங்களிடமும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

07. அஞ்சல் வாக்களிப்பு நிலையம் அமையப் பெற்றுள்ள வளவினுள் மற்றும் அதன் சூழ 500 மீற்றர் தூரம் வரை வாக்கை இரந்து கேட்டல் உள்ளிட்ட எந்தவொரு பிரச்சார அலுவல்களையும் மேற்கொள்வது சட்டவிரோதமானதென்பதால் அவ்வாறான சட்டவிரோதமான அலுவல்களைத் தவிர்ப்பதற்கு பொலிஸ் திணைக்களம் செயற்படும்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2014.08.21

மஹிந்த தேசப்பிரிய.
தேர்தல்கள் ஆணையாளர்,

உப அட்டவணை - 26

தேர்தலொன்றின் போது தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோரினால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்க நெறிக்கோவை

2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8 (8)ஆம் பிரிவுக்கு அமைய இவ்வொழுக்க நெறிக்கோவை வெளியிடப்படுகின்றது. இவ்வொழுக்க நெறிக்கோவை தேர்தலொன்றிற்கான பெயர் குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்படுகின்ற தினத்திலிருந்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் வரையிலான காலத்திற்கு செல்லுபடியாகும்.

இலங்கையில் தேர்தல்கள் சட்டத்திற்கமைய அரசியல் கட்சிகள் அங்கீகரிக்கப்பட முன்னரும் கூட இந்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் காணப்பட்டனவென்பதோடு, இவை தொடர்பான வரலாறு 1931 ஆம் ஆண்டு வரை நீண்டு செல்கிறது. அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல் தொடர்பான சட்டம் 1959 ஆம் ஆண்டிலிருந்து பல சந்தர்ப்பங்களிலும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. சமகால சமூகத்தின் இயக்கத்திற்கு அரசியல் கட்சிகளினால் ஆற்றப்படுகின்ற சேவைகளை அர்த்தமுள்ளவையாகவும் விளைபயன் மிக்கவையாகவும் மாற்றுவதற்று சட்ட விதிகளினூடாக மேற்கொள்ளப்பட முடிந்த செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் இங்கு அரசியற் கட்சிகளுக்கே பாரிய பொறுப்பு சுமத்தப்படுகின்றது.

அப்பொறுப்பையும் கருத்திலெடுத்து 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலை நோக்காகக் கொண்டு இவ்வொழுக்க நெறிக்கோவை முதல் முதலாக தேர்தல்கள் திணைக்களத்தினால் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்காகவெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் தேர்தல்களில் அரசியல் கட்சிகளுக்குப் புறம்பாக பிரதிநிதித்துவப்படுத்துபவை வேட்பாளர்களை சுயேச்சைக் குழுக்களேயாகும். இவ்வொழுக்க நெறிக்கோவை அக்குழுக்களின் வேட்பாளர்களுக்கும் பொருந்தும்.

அ. சட்டவலு

01. இலங்கை அரசியல் அமைப்பினாலும் ஏனைய நியதிச் சட்டங்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பிரசைகளின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் என்பவற்றைப் பாதுகாத்து, தேர்தல் சட்டங்களுக்கமைய மக்கள் பிரதிநிதிகளுக்கான வாக்கெடுப்போடும் மக்கள் கருத்துக் கோடலோடும் தொடர்புடைய தேர்தல்களில் வாக்காளருக்கு சுதந்திரமாகவும் எவ்வித வலுக்காட்டாயமின்றியும் தமது வாக்கினை அளிப்பதற்கு அவகாசமளித்தலும் அதற்குத் தேவையான உதவிகளையும் வலுவூக்கங்களையும் அளித்தலும்.
02. தேர்தலொன்றில் போட்டியிட முன்வருகின்ற அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கும் தேர்தல் செயன்முறையில் உரித்தாக்கப்பட்டுள்ள சமத்துவத்தை அனைத்து கட்டங்களிலும் பாதுகாத்தல்.
03. அனைத்து அரசியற் கட்சிகள், வேட்பாளர்களுக்கு உரித்தான உரிமைகளுக்கும் வாக்காளர்களை அறிவூட்டுவதற்கெனவுள்ள உரிமைக்கும் மதிப்பளிப்பதோடு, எதிர்த் தரப்பினரின் உரிமைகளையும் பாதுகாத்தல்.
04. இலங்கையின் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள அரச, அரச சார்பான, தனியார் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு சட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டுள்ளவாறான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எவ்விதத்திலும் தடங்கல்களையோ அழுத்தங்களையோ ஏற்படுத்தாமை.
05. நாட்டின் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்கின்ற நியதிச் சட்டப் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கும் அவை பொறுப்புவிக்கப்பட்டுள்ளவர்களுக்குமுரிய கடமைகளை ஆற்றுகையில் தடங்கல்கள் அல்லது அழுத்தங்களை ஏற்படுத்தாமை.
06. பொதுமக்களின் இயல்பான வாழ்விற்கு இடையூறு ஏற்படுத்தாமலும் நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்கள் மீறப்படாமலும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்.
07. அனைத்து தேர்தல்கள் தொடர்பாகவும் சட்டங்களில் காட்டப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் (பிரிவுகள்) தொடர்பாகவும் அனைத்து வேட்பாளர்களுக்கும் தெளிவைப் பெற்றுக் கொடுத்தலும் அச்சட்டங்களில் காட்டப்பட்டுள்ளவாறு தவறுகள், ஊழல் செயற்பாடுகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறும் அறிவுரை வழங்குதல்.

ஆ. பொது நடத்தைகள்

01. இலங்கையர்கள் அனுஷ்டிக்கின்ற சமயங்கள், பேசும் மொழிகள், அவர்களின் இனங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் குலகோத்திரங்கள் போன்ற வேறுபாடுகள் தொடர்பாக ஆட்களிடையே பகைமையுணர்ச்சி மற்றும் பொறுமையின்மை என்பவற்றை ஏற்படுத்தவல்ல அல்லது தூண்டவல்ல விதத்திலான நடத்தைகளைத் தவிர்த்தல்.
02. அரசியல் கட்சிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் விமர்சனங்களை, அந்தந்த கட்சிகளின் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் கடந்து போன நிகழ்வுகள் என்பவற்றிற்கு மட்டுப்படுத்த வேண்டுமென்பதோடு, எதிர்க் கட்சியினரின் அல்லது வேட்பாளர்களின் பொது நடவடிக்கைகளோடு தொடர்புபடாத, அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையின் அந்தரங்கங்களை விமர்சிப்பதைத் தவிர்ந்துக் கொள்ளலும், நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்கள், திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களினடிப்படையில் விமர்சனங்களை மேற்கொள்ளாதிருத்தலும்.
03. தேர்ந்தெடுத்தலின் மூலம் நிறுவப்பட எதிர்பார்க்கப்படுகின்ற நியதிச் சட்ட நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதனூடாக இலங்கையர்களின் எதிர்கால அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக அர்ப்பணம் செய்யக் கூடிய வேட்பாளர்களைப் போட்டியிடச் செய்து அவர்களை ஒழுக்க சீலத்துடனும் வினயமாகவும் போட்டியிட வழிகாட்டல்.
04. அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுத் தலைவர்கள் வேட்பாளர்களைப் போட்டியிடுவதற்காகத் தேர்ந்தெடுக்கின்ற போது, அவர்களின் முந்திய செயற்பாடுகளின் நேரிய தன்மை, சட்டத்தை மதித்து செயலாற்றியமை, சட்டத்தின் முன்னால் குற்றச்சாட்டுக்களுக்காளாகாமை, பொது மக்கள் சேவைக்கான அர்ப்பணங்களை மேற்கொண்டுள்ளமை, பணபலம் மற்றும் சமூக பலம் என்பவற்றைப் பயன்படுத்தி மக்கள் சமூகத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்தாமை போன்ற குணநலன்களின் பால் கவனத்தை ஈர்க்க நடவடிக்கைகளை எடுத்தல்.
05. வேட்புமனுக்களைக் கையளிக்கின்ற போது அல்லது அதன் பின்னரான 30 நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் அனைத்து வேட்பாளர்களும் அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்துகைகளைத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளித்தல்.
06. வாக்களிப்பு நிலைய வளவிற்குள் அல்லது வாக்கெண்ணல் நிலைய வளவிற்குள் புகைபிடித்தல் அல்லது மது அருந்திவிட்டு வருவதல் என்பவற்றை தவிர்ந்து கொள்ளல் வேண்டுமென வேட்பாளர்கள்/ முகவர்கள் ஆகியோரை அறிவூட்டுதல்.
07. வேட்புமனு கையேற்கும் நிலையம் அல்லது வாக்கெடுப்பு நிலையம் அதன் சுற்றுச் சூழல் மற்றும் வாக்கெண்ணல் நிலையம் மற்றும் முடிவுகளை வெளியிடும் நிலையம் என்பவற்றினுள் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள நபர்கள் மாத்திரமே உட்பிரவேசித்தல்.
08. தேர்தலுடன் தொடர்புடைய தடுக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுதல் அல்லது தமது ஆதரவாளர்களை அப்பணிகளில் ஈடுபட தூண்டுதல், ஆதரவு தெரிவித்தல் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல்.

இ. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள்.

01. தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்வந்துள்ள அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என்பன தேர்தல் சட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை சட்டரீதியாகவும் சட்டம், அமைதி என்பன பேணப்பட்ட நிலையிலும் மேற்கொள்ளல், எதிர்த்தரப்பினர்களின் சட்ட ரீதியான தேர்தல் நடவடிக்கைகளுக்கும் இடையூறு விளைவிக்காமை மற்றும் சட்டத்திற்குட்பட்டவாறு தேர்தல் பிரச்சார அலுவலகங்களைப் பேணுதல்.
02. அச்சிடப்பட்ட ஆவணங்களூடாக வாக்காளர்களை அறிவூட்டத்தக்க ஆவணங்களை அச்சிடல் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பாக தேர்தல் சட்டத்துக்கு அமைய நடந்துகொள்ளல்.
03. தமது கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அல்லது வேட்பாளர்களின் வெற்றியை இலக்காகக் கொண்டு அல்லது வேறொரு தரப்பினரின் தோல்வியை எதிர்பார்த்து எந்தவொரு தேர்தல் பிரச்சார அறிவித்தலையோ அல்லது அதனோடு தொடர்புடைய புகைப்படத்தையோ அரசாங்க அல்லது தனியார் துறைக்குச் சொந்தமான கட்டிடமொன்றில், காணியொன்றில் அல்லது பொதுமக்கள் பிரவேசிப்பதற்கென அனுமதிக்கப்பட்டுள்ள பாதைகளில் அல்லது பொது இடங்களில் காட்சிப்படுத்துவதைத் தவிர்த்தல்.
04. தேர்தல் பிரச்சார நடவடிக்கைளுக்காக அரசாங்க அல்லது அரச சார்பான நிறுவனங்களுக்குரித்தான காணிகள், கட்டிடங்கள் மற்றும் ஆதனமொன்றை அல்லது சேவையொன்றைப் பயன்படுத்தப்படுவதிலிருந்து தவிர்ந்திருத்தல்.
05. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக எந்தவொரு சமயத்தலத்தையோ, சமயத்தலமொன்றுக்குரித்தான காணியொன்றையோ, ஆதனமொன்றையோ பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளல்.
06. வேட்பாளர் பிரயாணம் செய்கின்ற வாகனத்தில் மாத்திரம் தேர்தலோடு தொடர்புடைய கொடிகள், அறிவித்தல்கள் மற்றும் வேட்பாளரின் இலக்கத்தைக் காட்சிப்படுத்தல்.

07. தேர்தல் பிரச்சாரத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற சோடனைகள் அனுமதியளிக்கப்பட்டுள்ள தேர்தல் பிரச்சாரக் கூட்டம் இடம்பெறுகின்ற காணியில் அக்காலப்பகுதிக்குள் மாத்திரம் சூழலை மாசுப்படுத்தாதவாறு மேற்கொள்ளலும் அத்தகைய கூட்ட நடவடிக்கைகளின் பின்னர் தாமதமின்றி அச்சோடனைகளை அகற்ற நடவடிக்கையெடுத்தலும்.
08. தேர்தல் காலக்கெடுவினுள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்குரிய ஊர்வலங்களை, மக்கள் ஊர்வலங்களை மற்றும் வாகன ஊர்வலங்களை நடாத்துதல் தேர்தல் சட்டங்களை மீறும் செயல்களென்பதால் அவ்வாறான ஊர்வலங்கள் எவற்றையும் தேர்தல் காலக்கெடுவினுள் நடத்தாதிருத்தல்.
09. கூட்டத்திற்காக அனுமதி பெறப்பட்ட ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவது கூட்டக் காலத்திற்கும் அக்காணிக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்படல், வாகனம் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது ஒலிபெருக்கியூடாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்த்தல்.
10. தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு ஆரம்பிப்பதற்கு 48 மணித்தியாலத்துக்கு முன்னர் உரிய தேர்தல் சட்டத்திற்கு அமைய தேர்தல் பிரச்சாரங்களை நிறுத்த நடவடிக்கையெடுத்தல் மற்றும் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாண்மையை ஊக்குவிக்கக் கூடியதாக இசை நிகழ்ச்சிகளை நடாத்துதல், அச்சு / இலத்திரனியல் ஊடகங்களூடாகப் பிரச்சாரம் செய்தல் போன்ற பணிகளை இடை நிறுத்தல்.
11. எந்தவொரு கட்சியையும் அல்லது சுயேச்சைக் குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்தில், மாகாண சபையொன்றில் அல்லது உள்ளூர் அதிகார சபையொன்றின் பொதுமக்கள் பிரதிநிதியொருவராகப் பதவிவகிக்கின்றவர், ஏதேனுமொரு கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை அல்லது அவற்றின் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதற்காக தனக்கு பிரதிநிதியொருவர் என்ற வகையில் கிடைக்கப்பெற்றுள்ள வரப்பிரசாதங்களையும், தத்துவங்களையும், வாகனங்களையும் மற்றும் ஏனைய அரசாங்க வளங்களையும் பயன்படுத்தாமை.
12. பொதுமக்கள் பிரதிநிதியொருவரின் பாதுகாப்புக்காக சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புத்துறை உத்தியோகத்தர்கள் அல்லது அவர்களின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ள சுடுகலன்கள் ஏனைய பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பவற்றை குறித்த மக்கள் பிரதிநிதியின் பாதுகாப்புக்காகவன்றி வேறெந்தவொரு சட்டரீதியற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்துவதைத் தவிர்த்தல்.
13. ஏதேனுமொரு தேர்தல் சட்டத்துக்கமைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினூடாகப் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் தேர்தல் சட்டத்தின் கீழ் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகின்ற வானலைக் கால எல்லை, உரிய கூட்டுத்தாபனத் தலைவர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரால் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைக்களுக்கமையப் பயன்படுத்தப்படல். (மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்குப் பொருந்தாது.)
14. ஏதேனுமொரு தேர்தல் சட்டத்துக்கமைய தேர்தலொன்றின்போது வாக்காளர் பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் செய்தியொன்றை அனுப்புவதற்குள்ள உரிமையை, உரிய சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அஞ்சல் மா அதிபரினால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் என்பவற்றுக்கமையப் பயன்படுத்துதல். (இவ்வாய்ப்பு மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்குப் பொருந்தாது.)
15. க.பொ.த சாதாரண தரம் அல்லது உயர்தரப் பரீட்சைகள் மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை உட்பட முக்கியமான பரீட்சைகள் இடம்பெறும் பாடசாலைகள் மற்றும் அப் பரீட்சைகளின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படும் பாடசாலைகள், பரீட்சை நிலையங்கள் என்பவற்றின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் அப்பாடசாலைகளின்/ நிலையங்களின் சுற்றுப்புறத்தில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்ந்து கொள்ளல்.

ஈ. வாக்கெடுப்புத் தினம்

01. தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திற்குள் வாக்குகளை இரந்து கேட்டல், வாக்காளர்களை வாக்களிக்க அல்லது வாக்களக்காதிருக்கத் தூண்டல், தேர்தல் துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றைப் பகிர்ந்தளித்தல் போன்ற எந்தவொரு நடவடிக்கையையோ அல்லது தேர்தல்கள் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களையோ இழைக்காமை.
02. வாக்களிப்புக்காக வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தருகின்ற வாக்காளர்களுக்கு மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கினைப் பிரயோகிப்பதற்காக வருகின்ற வாக்காளர்களுக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படுத்தாமையும், வாக்கினைப் பிரயோகிப்பதற்கான அழுத்தங்களை

ஏற்படுத்தாமையும் வாக்காளர்களுக்கு தமது வாக்கினை சுதந்திரமாகவும், அந்தரங்கமாகவும், பிரயோகிப்பதற்குள்ள உரிமைக்குப் பங்கம் ஏற்படுத்தாமையும்.

03. தேர்தல் தினத்தன்று வாக்காளர்கள், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வேட்பாளர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்கள் ஆகியோர் எந்தவோர் அச்சுறுத்தலுக்கும் ஆளாக்கப்படுதல், உடல் ரீதியான சித்திரவதைகளுக்கு இலக்காக்கப்படுதல். அல்லது அவர்களின் ஆதனங்களுக்கு சேதம் விளைவித்தல் என்பவற்றைத் தவிர்ந்து கொள்ளல் மற்றும் வாக்கெடுப்பு நிலைய முகவர்களை வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து விரட்டுவதைத் தவிர்த்தல்.
04. வாக்கெடுப்புத் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையத்திற்குள் உட்பிரவேசிப்பதற்காக அனுமதியுள்ளவர்கள் மாத்திரம் (போட்டியிடுகின்ற அரசியல் கட்சியொன்றின் செயலாளர், வேட்பாளர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்) தத்தம் ஆளடையாளத்தை நிரூபித்து உட்பிரவேசிக்க வேண்டியுள்ளமையால் அது தொடர்பாக ஒத்துழைப்பு வழங்கல்.
05. தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எத்தகைய குற்றத்தையும், தேர்தல் ஊழல் நடவடிக்கைகளையும் ஆற்றுவதையும் ஒத்துழைப்பு வழங்குவதையும் தவிர்த்தல். (வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குப் பெட்டிகளை வலுகட்டாயமாக நிரப்புதல், வாக்கெடுப்பு நிலையத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்தல், ஆள்மாறாட்ட வாக்குகளைப் அடையாளமிடல் போன்ற தவறான ஊழல் நடவடிக்கைகள்.)
06. சட்ட ரீதியற்ற முறையில் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வாக்காளர்களைப் போக்குவரத்துச் செய்யாமலிருக்க வழிவகை செய்தல்.
07. வாக்கெடுப்பை நடாத்துவதற்காக அந்நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள பணியாட்குழுவுக்கு எதிர்பார்க்கப்பட்டவாறு ஒத்துழைத்தலும், அவர்களின் பணிகளுக்கு முகவர்கள் இடையூறு ஏற்படுத்தாமைக்கு வழிவகை செய்தலும்.
08. தேர்தல்கள் ஆணையாளரின் அங்கீகாரத்தோடு, வாக்கெடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்ற முகவர்களுக்கு கண்காணிப்பு நிறுவனங்களின் முகவர்களுக்கு தடங்கலேற்படுத்தாமையும் அவர்களின் பணிகளை ஆற்றுவதில் ஒத்துழைப்பு வழங்கலும்.

மேற்குறித்த விடயங்கள் ஏற்புடைத்தாகின்றவிடத்து அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படும் தினத்திற்கும் செல்லுபடியாகுமெனக் கருதுதல் பொருத்தமாகும்.

உ. வாக்குகள் மற்றும் விருப்புக்கள் எண்ணல் (அஞ்சல் வாக்குகள் உள்ளிட்ட) மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல்.

01. வாக்குகள் மற்றும் விருப்புக்களை எண்ணல் (அஞ்சல் வாக்கெண்ணல் உள்ளிட்ட) நடைமுறை தொடர்பாக தமது வாக்கெண்ணல் முகவர்களை அறிவூட்டலும் முறைப்பாடுகளை சமர்ப்பிக்கும் உரிய முறைமை தொடர்பாக தமது முகவர்களை அறிவூட்டலும்.
02. தெரிவத்தாட்சி அலுவலர் வாக்கெண்ணல் நிலையத்திற்குள்ளேயும் மற்றும் பெறுபேறுகள் தயாரிக்கப்படும் நிலையத்திற்குள்ளேயும் அந்நடவடிக்கைகளை நிருவகித்தல் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கையெடுத்தல் இன்றியமையாததென தத்தம் முகவர்களை அறிவூட்டல்.
03. வாக்கெண்ணல் முகவர்களாக முறையாக நியமனஞ் செய்யப்படாவிடின் அதாவது முறையான அனுமதியில்லாது அரசாங்கத்தின் அல்லது மாகாண சபைகளின் அமைச்சர்கள், பாராளுமன்ற மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் அதிகார சபை உறுப்பினர்கள் அல்லது ஏனைய அரசியல் அதிகாரிகள் வாக்கெண்ணல் நிலையக் கட்டிடத் தொகுதிக்குள் / நிலையத்திற்குள் உட்பிரவேசிக்காதிருக்க வழிவகை செய்தல்.

ஊ. ஏனைய முக்கிய விடயங்கள்

01. தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தத்தம் கட்சிகளின் கோட்பாட்டையும் ஒரு குறித்த காலப்பகுதிக்குள் தமது கட்சியால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டமொன்றையும் வாக்காளருக்கு முன்வைத்தல்.
02. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் அரசாங்க ஆதனங்கள், உத்தியோகபூர்வ வாகனங்கள் அல்லது அலுவலர்களை ஈடுபடுத்தாமை.
03. மக்கள் பிரதிநிதிகள் தமது உத்தியோகபூர்வ கடமை நடவடிக்கைகளூடாக தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வதைத் தவிர்ந்து கொள்ளல்.
04. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காகக் கட்டணமின்றி அரசாங்க உலங்கு வானூர்திகளையோ அல்லது வேறு வாகனங்களையோ பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளல்.
05. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காகப் பொதுக்கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள்,

அரசாங்க சுற்றுலா விடுதிகள் என்பன பயன்படுத்தப்படுமாயின் உரிய கொடுப்பனவுகளை வழங்கி அவற்றைப் பயன்படுத்தலும் மற்றும் அத்தகைய வளங்களை அதே முறையில் அனைத்து தேவையான தரப்பினராலும் பெற்றுக் கொள்ளத்தக்கவாறு நடவடிக்கையெடுத்தலும்.

06. தேர்தல் காலத்தில் அரசியல் செய்திகளையும் கடிதங்களையும் மற்றும் அனுபந்தங்களையும் அரசின் அல்லது அரச நிறுவனங்களின் செலவில் பிரசுரிக்காமை.
07. தேர்தல் காலக்கெடுவிற்குள் வாக்காளர்களை அல்லது அரச அலுவலர்களைத் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தமது தனிப்பட்ட அல்லது உத்தியோகபூர்வ இல்லங்களுக்குத் அழைத்து உபசரிப்பதைத் தவிர்ந்து கொள்ளல்.
08. ஏதேனுமொரு விதத்தில் நிதி ஏற்பாடுகளை வழங்கல் அல்லது வாக்குறுதிகளையளித்தல், கருத்திட்டங்கள் அல்லது திட்டங்கள் என்பவற்றிற்காக அடிக்கல் நாட்டல், பாதைகள், நீர், மின்சாரம் ஆகிய வசதிகளை வழங்கல் தொடர்பான வாக்குறுதிகளையளித்தல் மற்றும் தமது கட்சிக்கு அனுகூலம் ஏற்படுத்தத்தக்கவாறு வளைத்துப் பிடித்துக் கொள்ள முடிந்த வாக்காளர்களுக்காக முறையற்ற விதத்தில் மிகத் துரிதகதியில் அரசாங்கத் துறையின் பதவிகள் மற்றும் நியமனங்கள் என்பவற்றை வழங்குவதைத் தவிர்த்தல்.
09. தேர்தல் சட்ட மீறல்கள், நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல், தேர்தல் மோசடிகள் மற்றும் குற்றங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துகின்ற துறைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளில் தலையிடாமையும் அத்துறைகளுக்கு சுயாதீனமாக நடந்து கொள்ளத் தேவையான பின்னணியை உருவாக்கலும்.
10. தேர்தல் காலப்பகுதிக்குள் எதிர்தரப்பினர்களுக்கும் மற்றும் ஆதரவாளர்களுக்கும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களினூடாகத் தவறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கப்பட்டு உரிய தரப்பினருக்கு அவற்றிற்கு பதிலளிப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கூட வழங்காமல் நிகழ்ச்சித் திட்டங்களை பிரச்சாரம் செய்வதற்காக ஊடகங்களைப் பயன்படுத்தாமை.
11. அரசியல் கட்சியொன்று அல்லது அரசியல்வாதிகள் தொடர்பாக செய்யப்படுகின்ற விமர்சனங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிப்பதற்கு வன்முறைத் தன்மையற்ற சட்டரீதியான செயற்பாடுகளை மாத்திரம் பின்பற்றல்.
12. மக்கள் பிரதிநிதிகளின் சட்டரீதியான மெய்ப்பாதுகாவலர்களாகக் கடமையாற்றுகின்ற பொலிசார் மற்றும் ஏனைய பாதுகாப்புத்துறை அதிகாரிகள் உத்தியோகப்பற்றற்ற விதத்தில் அரசியல், தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதையும் எதிர்க்கட்சியினரின் தேர்தல் செயன்முறைகளைச் செயலிழக்கச் செய்வதையும் தவிர்ந்து கொள்ளல்.
13. எந்தவோர் அரசியல் கட்சியோ அல்லது அரசியல் அமைப்போ தமது தேர்தல் நடவடிக்கைகளில் சட்டரீதியற்ற விதத்தில் ஆயுதந்தாங்கிய நபர்களை ஈடுபடுத்த நடவடிக்கைகள் எடுக்குமாயின் அத்தகைய செயற்பாடுகளைப் பகிரங்கமாகக் கண்டிப்பதும் மற்றும் அவற்றைத் தடுப்பதற்காக உரிய தரப்பினருக்கு அறிவித்தல்.
14. தேர்தல் நடாத்தப்படுகின்ற ஒரு பிரதேசத்தில் அரசாங்கத்தின் ஆதரவில் களியாட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் பொருட்காட்சிகள் என்பன நடாத்தப்படுமாயின் அச்சந்தர்ப்பங்களை தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களினதும் கட்சிகளினதும் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கோ அல்லது தேர்தல் பிரச்சாரங்களோடு தொடர்புபடுத்துவதற்கோ நடவடிக்கையெடுக்காமை.

தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் தமது வேட்பாளர்களை இவ்விடயங்கள் தொடர்பாக அறிவூட்டுவரென எதிர்பார்க்கப்படுவதோடு, இவ்வொழுக்க நெறிக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் அவர்களால் செயலுருப்படுத்தப்படுகின்றமை தொடர்பாக கட்சித் தலைவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுத்தலைவர்கள் திருப்தியடையக் கூடிய வேலைத்திட்டமொன்று அமுல் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இவை 2014 செப்தெம்பர் மாதம் நடாத்தப்படவுள்ள மாகாண சபைத் தேர்தலின் போது போட்டியிடுகின்ற அனைத்து அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் தேர்தலில் போட்டியிடாத அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கும் வெளியிடப்படுகின்றன.

மஹிந்த தேசப்பிரிய.
தேர்தல்கள் ஆணையாளர்,

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2014 யூலை மாதம் 28 ஆம் திகதி.

உப அட்டவணை - 27

ஊவா மாகாண சபைத் தேர்தல் - 2014.09.20
தேர்தல் கண்காணிப்புக்காக அனுமதிக்கப்பட்ட கண்காணிப்பு நிறுவனங்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கான ஒழுக்கநெறிக் கோவை

01. தேர்தல் கண்காணிப்பு நிறுவனமொன்றின் பணிப்பாளர் சபை அங்கத்தினர், நடமாடும் கண்காணிப்பாளர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நபர்கள் ஆகியோர் கடந்த 05 ஆண்டுகளுக்குள் தொழிற்பாட்டு அரசியலில் ஈடுபடாத, தேர்தல்களில் வேட்பாளர்களாக போட்டியிடாத வாக்காளரொருவராக தகைமைபெற்றுள்ளவர் நடுநிலையாளர்களாகயிருத்தல் வேண்டும். அனைத்து அலுவலர்களும் கண்காணிப்பாளர்களும் சத்தியக் கடதாசியொன்றின்/ உறுதியுரையொன்றின் மூலம் அதனை உறுதிப்படுத்த வேண்டுமென்பதோடு, தேவைப்படுமிடத்து பரிசீலிக்கத்தக்க விதத்தில் அச்சத்திய வெளிப்படுத்துகைகள்/ உறுதியுரைகள் கண்காணிப்பு நிறுவனத்தின் பொறுப்பில் பாதுகாப்பாக வைக்கப்படல் வேண்டும். (சத்தியத்தின்/ உறுதியுரையின் மாதிரியின் பிரதியொன்று இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.)

02. தேர்தல் கண்காணிப்பு நிறுவனமொன்றின் எவரேனுமோர் அலுவலர் அல்லது கண்காணிப்பாளர் அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் அரசாங்கம் அல்லது வேறேதேனும் நிறுவனமொன்றின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் பதவியை வகிப்பவராகவோ அல்லது கடந்த 05 ஆண்டு காலப்பகுதிக்குள் அத்தகைய பதவியை வகித்த ஒருவராகவோ காணப்படாமை.

03. கண்காணிப்பு நிறுவனங்களினால் அரசியல் கட்சியொன்றிற்கு அல்லது சுயேச்சைக் குழுவொன்றிற்கு உரித்தான கட்டிடங்கள், வாகனங்கள், தொலைபேசிகள் முதலிய வசதிகள் முதலியவற்றை தமது கண்காணிப்பு நிறுவனத்தின் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாமை.

04. தேர்தல்கள் கண்காணிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தினர்கள் அல்லது அலுவலர் குழாத்தின் அங்கத்தினர்கள் எந்தவோர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் நோக்கங்களுக்கமைய நடவடிக்கைகளில் ஈடுபடாமை.

05. தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களினூடாக தேர்தலோடு தொடர்புடைய ஊடக அறிவித்தல்கள் மற்றும் அறிக்கைகள் வெளியிடப்படுகின்ற போது ஏதேனுமொரு கட்சியை அல்லது குழுவை இன்றேல் வேட்பாளரொருவரை ஊக்குவிக்கத்தக்கவாறோ அல்லது பாதிப்புக்களை ஏற்படுத்தத்தக்கவாறோ வெளிப்படுத்துகைகளை வெளியிடாமையும் நடுநிலைத் தன்மையைப் பேணலும்.

06. தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களினால் தேர்தல் திணைக்களத்தின் பணிகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரை அறிவூட்டாது ஊடக அறிவித்தல்களையோ அல்லது ஊடக வெளிப்படுத்துகைகளையோ வெளியிடாமை.

07. கண்காணிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் குழு, அலுவலர்கள் மற்றும் அனைத்து கண்காணிப்பாளர்கள் ஆகிய அனைவரும் கண்காணிப்புப் பணிகள் தொடர்பாக ஆற்றுகின்ற அனைத்து அலுவல்களிலும் பக்கச்சார்பற்ற தன்மை முழுமையாக அனுஷ்டிக்க வேண்டுமென்பதோடு, நடத்தையிலும் பேச்சிலும் பக்கச்சார்பற்ற தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். அதேபோன்று பக்கச்சார்பற்ற முறையில் நடந்துகொள்வதை அடுத்தவர்களுக்கும் உணரச் செய்தல் வேண்டும்.

08. எவரேனும் ஒரு கண்காணிப்பாளர் பக்கச்சார்பாக நடந்துகொள்வதாக ஏதேனும் முறைப்பாடு கிடைக்கப்பெற்றவுடன் அவரை அக்கண்காணிப்புப் பணியிலிருந்து அகற்றி துரிதமாக உரிய முறைப்பாட்டை விசாரித்தல்.

09. வாக்கெடுப்பு நிலையத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள கண்காணிப்பாளர் வாக்கெடுப்பு நிலையப் பணியாட் குழுவினர், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வாக்காளர்களோடு தேவையற்ற அளவளாவலில் ஈடுபடக்கூடாது, தேர்தலின் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாகவும் இரகசியத்தைப் பேணலும், வாக்கெடுப்பு நிலையத்தில் அது தொடர்பான வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலருக்குக் கையளித்தலும் அவசியமாகும்.

10. நடமாடும் மற்றும் வாக்கெடுப்பு நிலையக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள கண்காணிப்பாளர்களை எளிதில் அடையாளம் கண்டுகொள்ள முடியுமான விதத்தில் சீருடையொன்றையோ அல்லது பொருத்தமான விஷேட ஆடையொன்றையோ அணிந்திருத்தலும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுகின்ற போது மது அருந்தல் மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தில் புகைபிடித்தல், போதைபொருள் பாவித்துவிட்டு வாக்கெடுப்பு நிலையத்திற்குள் வருகைதருவது தடைசெய்யப்பட்டுள்ளது.

11. வாக்கெடுப்பு நிலையத்தில் தரித்திருக்கும் கண்காணிப்பாளர்கள் அனுமதிக்கப்பட்ட கண்காணிப்பாளர்கள் சிரேட்ட வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்பாளர்களிடமுள்ள **ZLOB** படிவத்தின் அறிக்கையை பெற்றுக்கொண்டு குறித்த விதத்தில் பூரணப்படுத்தி தங்களது கண்காணிப்பில் குறித்துக்கொண்டு தேர்தலின் முடிவில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.

12. கண்காணிப்பு குழுவினால் செய்யப்பட்ட முறைப்பாடு அனைத்தையும் உறுதிப்படுத்தக்கூடிய சாட்சிகளுக்கும் விடயங்களுக்கும் மாத்திரம் அடங்கும்.

மஹிந்த தேசப்பிரிய.
தேர்தல்கள் ஆணையாளர்,

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2014.08.09

உப அட்டவணை - 28

இதனைப்பூர்த்தி செய்து உரியவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பின்னர் உரிய கண்காணிப்பு நிறுவனத்தில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளப்பட வேண்டிய உறுதியுரையாகும். தேவைப்படுமிடத்து அவற்றைப் பரிசீலிப்பதற்காக தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் - 2014

தேர்தல்கள் கண்காணிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் குழுவின் அங்கத்தினர்கள், அலுவலர்கள் மற்றும் அனைத்து கண்காணிப்பாளர்கள் ஆகியோரினால் வழங்கப்பட வேண்டிய உறுதியுரை

கண்காணிப்பு நிறுவனம்.....

இத்தேர்தலோடு தொடர்புடைய மேற்குறித்த கண்காணிப்பு நிறுவனத்தில்.....
ஆக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள.....என்ற
முகவரியில் வசிக்கின்ற.....என்ற தேசிய அடையாள அட்டை
இலக்கமுடைய.....ஆகிய நான்,

I. இலங்கைக்குள் வாக்காளர் ஒருவராகப் பதிவு செய்யப்படுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும்,
II. கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் தொழிற்படு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லையெனவும், அரசாங்கத்தினூடகவோ அல்லது வேறேதேனும் அரசியல் அமைப்பொன்றூடாகவோ அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட எந்தவொரு பதவியையும் வகிக்கவில்லை எனவும், தற்போதைக்கு அத்தகைய பதவியொன்றை வகிப்பவனாக இல்லை எனவும்,
III. நான் உள்ளிட்ட எனது வீட்டில் வதிகின்ற எவரும் தொழிற்படு அரசியலில் ஈடுபடவில்லை எனவும்,
IV. தனிப்பட்ட கருத்துக்களிலிருந்து விடுபட்ட நிலையில் பக்கச்சார்பற்ற தன்மையோடும் மனச்சாட்சிக்கு விரோதமில்லாத விதத்திலும் இத்தேர்தலோடு தொடர்புடையதாக எனக்குப் பொறுப்புவிக்கப்பட்டுள்ள பணிகளை ஆற்றுவேன் எனவும்,
V. வாக்கெடுப்பு நிலையத்தில் ஏதேனுமொரு சட்டமுறையான அல்லது ஊழல் நடவடிக்கைகள் இடம்பெறுமாயின் அது தொடர்பாகத் தவறாது அறிக்கையிடல் வேண்டும் எனவும்,
VI. ஏதேனுமொரு கட்சியை, சுயேச்சைக் குழுவை அல்லது வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதற்காக அல்லது பாதிப்புறச் செய்வதற்காக சொற்களாலோ அல்லது செயலாலோ ஏதேனுமொன்றை வெளிப்படுத்தாதிருக்க கண்காணிப்பு நிறுவனமொன்றின் அங்கத்தவரென்ற வகையில் நான் பிணிக்கப்பட்டுள்ளேனென நன்கு புரிந்து கொண்டுள்ளேனெனவும் கண்ணியத்துடன் வெளிப்படுத்தி உறுதியளிக்கின்றேன்.

கையொப்பம் .....
பெயர் .....

மேற்குறித்த உறுதியுரை
.....ஆம் திகதி.....ல்
எனது முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

.....
சமாதான நீதவானின் கையொப்பம் பதவி முத்திரை

உப அட்டவணை - 29

அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளுக்கு உரித்தான ஆதனங்களைத் தேர்தல் காலக்கெடுவுக்குள் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுத்தல் மற்றும் தேர்தல் நடாத்தப்படவுள்ள மாகாணத்துக்குரிய அலுவலர்கள், ஊழியர்களின் ஆட்சேர்ப்பு/ பதவியுயர்வு/ இடமாற்றம் என்பவற்றை மட்டுப்படுத்தல்

ஊவா மாகாணத்தின் மாகாண சபைக்கான தேர்தல்கள் எதிர் காலத்தில் நடாத்தப்படவிருப்பதோடு, அதற்கான நியமனப்பத்திரங்கள் கோரப்படுகின்ற அறிவித்தல் 2014.07.16 ஆந் தேதி பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. அன்றைய தினம் முதல் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டு முடிவடையும் வரையிலான காலக்கெடு தேர்தல் காலக்கெடு, என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதினேழாம் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலக்கெடுவிற்குள் அரசியல் கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்கள் ஆகியோரை ஊக்குவிப்பதற்கு காரணமாகக் கூடிய அல்லது ஏனைய கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர் ஒருவர் ஆகியோருக்கு பாதிப்பேற்படுத்தத் தக்க விதத்திலான நடவடிக்கைகளுக்காக அரசாங்க ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ந்திருத்தல் வேண்டுமென தேர்தல் நடாத்தப்படவுள்ள மாவட்டங்களின் அரசாங்க அலுவலர்கள்/ ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் போன்ற விடயங்களை மட்டுப்படுத்துமாறும் அரசாங்க ஆதனங்கள் மற்றும் நிகழ்கால நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரவைச் செயலாளர்கள் உள்ளிட்ட பிரதான அலுவலர்கள் அனைவரினதும் கவனத்தை ஈர்ப்பதற்காக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

02. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதினேழாம் திருத்தத்தின் 104(ஆ)(04)(அ) உறுப்புரைக்கமைய, தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற கால எல்லைக்குள் அரசாங்கத்திற்கோ அல்லது ஏதேனும் ஓர் அரச கூட்டுத்தாபனத்திற்கோ உரித்தான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனம் ஏதேனும் ஓர் அரசியல் கட்சியையோ அல்லது ஏதேனுமொரு சுயேச்சைக் குழுவையோ ஊக்குவிக்கக்கூடிய அல்லது தடுக்கக் கூடிய பணிகளுக்காக ஏதேனும் ஓர் அரசியல் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பயன்படுத்தப்படுவதை தடை செய்கின்ற அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அல்லது தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு உண்டு. தேர்தல்கள் ஆணைக்குழு இதுவரை நிறுவப்படாமையினால் இவ்வதிகாரம் தற்போதைய தேர்தல்கள் ஆணையாளரினால் செயற்படுத்தப்பட முடியும். அவ்வுறுப்புரையின் (ஆ) உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற கட்டளைகளைச் செயற்படுத்துதற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கடப்பாடுடையவர்களாக விளங்குகின்றனர்.

03. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசுக்குச் சொந்தமான அனைத்து மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள் போன்ற அனைத்து வாகனங்களையும் ஹெலிகொப்டர், வானூர்திகளையும் பயன்படுத்துவதாக கடந்த தேர்தல் காலங்களிலும் இத் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. ஆதலால் அரசாங்க வாகனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் இவ்வாகனங்களை எந்தவோர் அரசியல் கட்சியினதும், சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர் ஒருவரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைக்காகப் பயன்படுத்தாத விதத்தில் தேர்தல்கள் கால கெடுவினுள் வாகன குழாத்தைப் பேணுவதில் முனைப்பான கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். அலுவலர்களுக்கெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ள (**Assigned vehicle**) அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் வாடகைக்கு பெறப்பட்டு கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்கள் என்பனவும் இவற்றில் உள்ளடங்குகின்றனவென்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். இக்காலக் கெடுவிற்குள் அலுவலர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள **(Assigned vehicle)** வாகனங்கள் தவிர்ந்த முக்கியமாக குழாத்துக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் என்பவற்றிற்கான ஓட்டக் குறிப்புக்களை முறையாகப் பேணி வரவேண்டுமென்பதோடு, இவ்வோட்டக் குறிப்புக்கள் பதவிநிலை அலுவலர் ஒருவரினால் அன்றாடம் பரிசீலிக்கப்பட்டு அவ்வாகனங்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தபடுவதில்லையென்பது தொடர்பாக திருப்தி காணுதல் வேண்டும். கடமை அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டதென போலியான குறிப்புக்களையிட்டு அரச வாகனங்கள் அரசியல் ஊக்குவிப்பு அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக கடந்த தேர்தல்களின் போது அறிக்கையிடப்பட்டுள்ளதால் அவ்வாறான போலியான விடயங்களுக்காக அரச வாகனங்களை ஈடுபடுத்தாதிருப்பதற்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

அதிமேதகு சனாதிபதி அவர்களின் பாதுகாப்புப் பிரிவிற்கென குறித்தொதுக்கப்பட்டுள்ள இரண்டு வாகனங்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு வாகனத்தை மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் குறித்தொதுக்கப்பட்ட உரிய பதிவிலக்கமின்றி செலுத்த முடியாதாதலால் எந்தவோர் அமைச்சருக்கோ, பிரதி அமைச்சருக்கோ அல்லது அவர்களின் பணியாட் குழுவின் அங்கத்தினர்களுக்கோ அல்லது வேறு எவருக்குமோ உரிய பதிவிலக்கமின்றி அரசாங்கத்தின் அல்லது அரச சார்பான நிறுவனங்களின் வாகனங்களைப் பயன்படுத்த முடியாது. ஆதலால் அனைத்து வாகனங்களையும் திணைக்களங்கள், அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் என்பன வாகனத் திருத்தகங்களுக்குரிய இலக்கங்களில் (போலி இலக்கங்களில்) சவையிலீடுபடுத்தப்படவில்லையென்பதை அமைச்சுக்களின் செயலாளர்கள்/ திணைக்களத் தலைவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

04. அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசாங்கத்திற்குரித்தான ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பனவும் அரசாங்கத்தின் வளங்களாகும். ஆதலால் அக்கட்டிடங்களையும் அரசியல் கூட்டங்கள், கலந்தாய்வுகள் என்பவற்றிற்குப் பயன்படுத்தக் கூடாது. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசாங்கத்திற்குரித்தான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை பங்களாக்கள் என்பவற்றைக் கட்டணமின்றி வழங்குவது முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளதென்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். மேலும் உரிய மாகாணத்தில் அமையப் பெற்றுள்ள அரசிற்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு சொந்தமான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை விடுதிகள் போன்றவற்றை எந்தவொரு அரசியல் வாதிக்கு, அலுவலருக்கு, வேறொரு நபருக்கு வாக்கெடுப்புக் காலக்கெடு முழுவதற்குமென குறித்தொதுதிக்கிக் கொடுப்பதை தவிர்ந்துகொள்ளல் வேண்டும். அதேபோன்று அத்தகைய விடுதிகளில் தங்குமிட வசதிகளைப் பெறுகின்ற நபர்களுக்கு அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் பணிகளில் ஈடுபட இடமளிக்கக்கூடாது. அரசாங்கத்திற்குரித்தான கட்டிடங்கள் மற்றும் அமையப்பெற்றுள்ள காணிகள் என்பவற்றை அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பாரியளவிலான புகைப்படங்கள் என்பவற்றை காட்சிக்காக வைப்பதற்குப் பயன்படுத்த இடமளிக்கக் கூடாது.

05. (I) தேர்தல்கள் காலக்கெடுவுக்குள் அரச நிதியைச் செலவிட்டு நடாத்தப்படுகின்ற பல்வேறு விதத்திலான நடமாடும் சேவைகள், கண்காட்சிகள், திறப்பு விழாக்கள் போன்ற வைபவங்கள் அரசியல்வாதிகளோடு தொடர்புடைய ஆட்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுவதோடு, அச்சந்தர்ப்பங்களில் தேர்தலோடு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களும் அவர்களினால் வெளிப்படுத்தப்படும் சாத்தியம் காணப்படுகின்றது. அத்தகைய வெளிப்படுத்துகையொன்று தேர்தலுக்காகப் போட்டியிட முன்வந்துள்ள வேட்பாளர் ஒருவரின் வேட்பாண்மைக்கு முறையற்ற விதத்தில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். இத்தகைய வைபவங்களை நிகழ்த்துவதன் மூலம் ஏதேனும் ஒரு கட்சியை/ சுயேச்சைக் குழுவை அல்லது வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதாகவோ அல்லது வேறொரு கட்சிக்கு/ குழுவுக்கு அல்லது வேட்பாளருக்கு பாதிப்பொன்றை ஏற்படுத்துவதாகவோ முறைப்பாடுகள் கிடைக்க முடியுமாதலால், இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய வைபவங்களை நிகழ்த்துவதை தவிர்ந்து கொள்ளல் பொருத்தமென சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். பொதுமக்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அத்தியாவசிய நடமாடும் சேவைகளை இத்தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்துவதற்கு, தேர்தலோடு தொடர்புடைய வேட்புமனுக் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட முன்னர் தீர்மானிக்கப்பட்டிருப்பின் அத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பாக உடனடியாக எனக்கு அறிவித்தல் வேண்டும். அப்போது அது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். ஆயினும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினாலோ அல்லது பதிவாளர் நாயகத் திணைக்களத்தினாலோ நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவைகளுக்கு இம்மட்டுப்பாடுகள் செல்லுபடியாகாது. இத்தகைய நடமாடும் சேவைகளை அலுவலர்களின் பங்களிப்போடு மாத்திரம் நடாத்த நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

(II) இக்கால எல்லைக்குள் உரிய வாக்கெடுப்புப் பிரதேசத்திற்குள் உள்ள வதிவாளர்களுக்கு அரசாங்கக் காணிகளைப் பகிர்ந்தளித்தல், அரசாங்கக் காணி உறுதிகளின் அல்லது வீடுகளின் உரிமைக் கைமாற்றல் உறுதிகளின் பகிர்ந்தளிப்புக்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் நடவடிக்கைகள் அல்லது பயிர்ச் செய்கைக்கான மானிய உதவிகள், உரவகைகள் விவசாய உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், சுயதொழில்களுக்கான கருவிகள், மிதி வண்டிகள், சூரிய ஒளி மின் விளக்குகள், வீடுகளை நிர்மாணிப்பதற்கான பொருட்கள் போன்றவற்றைப் பகிர்ந்தளிப்பதற்கான கருத்திட்டங்கள் மற்றும்

வீட்டுக்கடன்களின் விநியோகம்/ நட்ட ஈட்டுத்தொகைகளைப் பகிர்ந்தளித்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களும் இடை நிறுத்தப்படல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படுவதாக அரசாங்க அலுவலர்களினால் அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டு அவற்றிற்கான பட்டியல்களைத் தயாரித்தலும் இக்காலக்கெடுவிற்குள் மேற்கொள்ளக்கூடாது. ஏனெனில் அத்தகைய பணிகளூடாக வாக்காளர்களுக்கு உபசரணை வழங்கும் குற்றங்கள் நிகழ்த்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றமையாலும் இத்தகைய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவித்தல் மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றமையாலுமேயாகும். மேலும் வீட்டுக் கடன் உதவிகளை வழங்குவதற்கான படிவங்களைப் பகிர்ந்தளித்தல் கட்டிடப் பொருட்களை வழங்குவதற்கான படிவங்களைப் பகிர்ந்தளித்தல் போன்ற நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படல் வேண்டும். எனினும் ஒத்திவைக்கப்பட முடியாத அவசர கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு ஏற்கனவே நாள் குறிக்கப்பட்டிருப்பின் அல்லது அவசர விசேட தேவைப்பாடொன்று ஏற்பட்டிருப்பின் அது தொடர்பாக எனக்கு அறிவித்தல் வேண்டும். அப்போது அது தொடர்பான பொருத்தமான அறிவுறுத்தல்கள் வெளியிடப்படும். அத்தகைய கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன கூட எந்தவோர் அரசியல் கட்சியினதும்/ சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர் ஒருவருக்கு விசேட அனுகூலத்தையோ (அல்லது பிரதிகூலத்தையோ) ஏற்படுத்தாத விதத்தில் அமுல் செய்யப்பட வேண்டுமெனவும் அதற்காக அலுவலர்கள் மாத்திரம் கலந்துக்கொள்ளச் செய்யப்பட வேண்டுமெனவும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

06. (I) மேலும் இத்தேர்தலோடு தொடர்புடையதாக அரச அல்லது அரச கூட்டுத்தாபன நிறுவனங்களின் அலுவலர் எவரொருவருக்கும் அலுவலக நேரத்திகுள் அல்லது அலுவலக தினங்களில் கடமை விடுமுறை பெற்றுக் கொண்டு ஏதேனும் ஒரு கட்சியை/ குழுவை அல்லது வேட்பாளர் ஒருவரை ஊக்குவிப்பதற்காகவோ அல்லது ஏதேனும் ஒரு கட்சி/ ஒரு குழு அல்லது வேட்பாளர் ஒருவருக்கு எதிராக செயற்படுவதற்கான அவகாசம் வழங்கப்படக் கூடாதென்பதோடு, அவ்வாறு செயற்படுகின்ற அலுவலர்கள்/ ஊழியர்கள் தொடர்பாக ஒழுக்காற்று ரீதியாக நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும்.

(II) அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரசியல் உரிமைகள் அற்ற அரச பதவி நிலை அலுவலர்கள், கூட்டுத்தாபன நியதிச்சட்ட சபைகளின் பதவிநிலை அலுவலர்கள், கிராம அலுவலர்கள் போன்ற சமாதான அலுவலர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளின் அங்கத்தினர்கள் எவருக்கும் தனது அலுவலக நேரத்தினுள் மாத்திரமின்றி அலுவலக நேரத்திற்குப் புறம்பாகவோ அல்லது விடுமுறை தினங்களிலோ கூட நேரடியாக அல்லது மறைமுகமாக அரசியல் கட்சியொன்று அல்லது சுயேச்சைக் குழுவொன்று அல்லது வேட்பாளரொருவரை ஊக்குவிக்கும் விதத்திலான அல்லது பாதிக்கும் விதத்திலான செயற்பாடுகளில் ஈடுபடுதல் மற்றும் அதற்கு ஆதரவு வழங்கல் என்பனவற்றிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும். அதாவது அரசியல் உரிமையற்ற அரச அலுவலர்கள் அரசியல் ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி கிடையாதென்ற விதியை மிகக் கடுமையாக அமுல்படுத்துதல் வேண்டும்.

(III) மேலும் கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர்கள் இத்தேர்தல் காலக்கெடுவினுள் எந்தவோர் அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு அல்லது வேட்பாளரொருவருக்கு ஊக்குவித்தல் அல்லது பாதிப்பேற்படுத்தும் விதத்திலான செயற்பாடுகளில் ஈடுபடுவதிலிருந்து தவிர்ந்திருப்பார்களென்பது தயவன்புடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

07. (I) பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினதும் நீதிச் சேவை ஆணைக்குழுவினதும் நிருவாகத் தத்துவத்தின் கீழ் வருகின்ற விடயங்களுக்கு பதினேழாம் திருத்தத்தின் மட்டுப்பாடுகள் பாதிப்பை ஏற்படுத்தமாட்டா. ஆதலால், அவ்வாணைக்குழுக்களின் தத்துவத்தின் கீழ் முறையாக மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தவிர்ந்த தேர்தலுக்காக வேட்புமனுக்கள் கோரப்பட்டுள்ள மேற்குறித்த மாகாணத்தின் அரசாங்க நிறுவனங்களுக்கு எவ்விதத்திலும் ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்படுவதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(II) தேர்தல்கள் நடாத்தப்படவுள்ள மாகாண சபையின் அதிகாரப் பிரதேசங்களில் வாக்கெடுப்புக் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்ற அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க அலுவலர்களினதும் சாதாரண இடமாற்றங்களை 2014.07.16 ஆந் தேதியிலிருந்து வாக்கெடுப்பு முடிவடைந்து இரண்டு வாரங்கள் கழியும் வரை இடை நிறுத்தி வைக்க வேண்டுமென்பதோடு, தேர்தல் கடமைக்காக ஈடுபடுத்தப்படாத அரசாங்கத்தின் அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களை வாக்கெடுப்புக் காலஎல்லைக்குள் இடமாற்றம் செய்கின்றபோது அரசியல் காரணங்களின் அடிப்படையில் இத்தகைய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டனவென்ற முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாதவாறு உரிய இடமாற்றங்களை மேற்கொள்ள அனைத்து அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(III) தேர்தல் காலக்கெடுவினுள் வாக்கெடுப்பு அதிகாரப் பிரிவினுள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அலுவலர்கள் அத்தியாவசிய காரணங்களுக்காக உதாரணமாக புலமைப் பரிசில், உயர்கல்வி, மருத்துவச் சிகிச்சை, வணக்க வழிபாடுகளில் ஈடுபடுதல் போன்ற வெளிநாட்டுப் பிரயாணங்களை மட்டுப்படுத்த எதிர்பார்க்கவில்லையாகையால் அத்தகைய தேவைகளுக்காக வெளிநாடு செல்வதற்காகத் தேர்தல்கள் ஆணையாளரின் முன் அனுமதியைப் பெறத் தேவையில்லை. இருப்பினும் தேர்தல் நடாத்தப்படவுள்ள மாவட்டங்களின் அலுவலர்கள் கூட்டாக இக்காலத்தினுள் வெளிநாடு செல்வதாயின் அதற்கான முன் அனுமதியைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாகும். மேலும், தேர்தல் நடாத்தப்படவுள்ள ஊவா மாகாண சபையின் நிதி ஒதுக்கீடுகளைச் செலவு செய்து அலுவலர்கள் வெளிநாடு செல்வதைத் தேர்தல் காலக் கெடுவின் பின்னர் மேற்கொள்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். இருப்பினும் மிகவும் அவசரமான மற்றும் காலந்தாழ்த்த முடியாத காரணங்களுக்காக வெளிநாடு செல்லத் தேவையாயின் அது தொடர்பாக அங்கீகாரமளித்தல் தொடர்பாகக் கவனித்துப் பார்ப்பதற்காக முன்கூட்டியே கோரிக்கை விடுப்பது பொருத்தமாகும்.

(IV) இம்மாகாண சபையைக் கலைப்பதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த அலுவலர்கள் நியமனம்/ பதவி உயர்வு வழங்கல் போன்ற நாடு தழுவிய நிகழ்ச்சித் திட்டமொன்றை காலம் தாழ்த்தாது மேற்கொள்ள வேண்டுமென அமைச்சின் செயலாளர் எதிர்பார்க்கும்போது அல்லது முழுத் தீவுக்கும் தாக்கம் செலுத்தும் விதத்தில் அரச சேவைக்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு ஏற்புடைய முறையான, அரசியல் தலையீடுகளற்றவாறு மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்பு/ பதவியுயர்வுகள் தொடர்பாக இச்சுற்றறிக்கை ஏற்புடையதாக மாட்டாது.

(V) மேலும் அரச மற்றும் மாகாண சபைகளின் வழமையான நிருவாக அலுவல்களுக்குரியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள 2014 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றங்களை/ மேன்முறையீடுகளை வலுவாக்கம் செய்தல் என்பவற்றிற்கு இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாக மாட்டாதென்பதை கருத்தில் கொள்ளல் வேண்டும்.

(VI) ஏதேனும் விசேட அத்தியாவசிய விடயமொன்றின் காரணமாக (அதாவது ஒழுக்காற்று நடவடிக்கை, அலுவலரின் கோரிக்கை என்பவற்றின் அடிப்படையில் அனுதாபத்துடன் செயற்படவேண்டி வரல் ஏதேனுமொரு பாடசாலைக்கு இன்றியமையாத ஆசிரியர்களைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற விடயங்கள் காரணமாக) தேர்தல் நடாத்தப்படவுள்ள ஊவா மாகாண சபையின் அதிகார எல்லைப் பிரதேசங்களின் அலுவலர்கள்/ ஆசிரியர்கள்/ அதிபர்கள் ஆகியோரை இடமாற்றம் செய்ய வேண்டி வருகின்ற போது அவ்விடமாற்றங்கள் அரசியல் ரீதியான நிகழ்வுகள் காரணமாக மேற்கொள்ளப்படுகின்ற இடமாற்றங்களல்லவென நிரூபிக்க முடியுமானவிடத்து, இன்றேல் அது தொடர்பான முறைப்பாடுகள்/ குற்றச்சாட்டுக்கள் எவையும் கிடைக்கப்பெறாவிடின் அத்தகைய இடமாற்றல்கள் தொடர்பாக தேர்தல்கள் அலுவலகத்தை அறிவூட்டியதன் பின்னர் அதற்கான அனுமதியை வழங்க முடியும்.

08. தேர்தல் நடாத்தப்படவுள்ள மாகாணத்தில் மாத்திரமின்றி தேர்தல் நடாத்தப்படாத ஏனைய மாகாணங்களிலும் அரச ஆதனங்கள் விசேடமாக அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள் தேர்தலுக்குரிய கட்சிகள்/ குழக்கள் அல்லது வேட்பாளர் ஊக்குவிப்பிற்காக ஈடுபடுத்தும் போக்கொன்று உள்ளதென கடந்த தேர்தல்களின் போது முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதால் அவ்வாறான முறையற்ற செயற்பாடுகளுக்கு எந்தவொரு சந்தர்ப்பத்தையும் வழங்குதல் கூடாது. கடந்த மாகாண சபைத்

தேர்தல்களின் போது கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு தேர்தல் நடாத்தப்படவுள்ள பிரிவுகளில் அவசர கடமை அலுவல்கள் அல்லது விசேட அபிவிருத்தி கருத்திட்டங்களை மேற்கொள்ளல் போன்ற விடயங்களை முன்வைத்து கட்சி/ வேட்பாண்மை ஊக்குவிப்பதற்காக (அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதற்காக) வாக்கெடுப்புப் பிரிவுக்கு வெளியில் அரச/ அரச நிறுவனங்களின் அலுவலர்கள் அரச/ அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான அல்லது வாடகைக்குப் பெறப்பட்ட வாகனங்களை தேர்தல் நடாத்தப்படவுள்ள பிரிவுகளின் அலுவலகங்களுக்கு இணைப்புச் செய்தல் போன்ற முறையற்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எந்துவொர் அலுவலருக்கும் இடமளித்தல் கூடாதென்பதைத் தயவன்புடன் அறியத் தருகின்றேன். அதே போன்று தேர்தல் காலக்கெடுவினுள் ஊவா மாகாணத்தினுள் விசேட கருத்திட்டங்களை மேற்கொள்வதையும் பிற்போடல் வேண்டும்.

09 இத்தேர்தலின் போது மாகாண சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை ஊக்குவிக்கின்ற அல்லது தடுக்கின்ற பணிகள் சார்பாக அரசாங்க ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் விதத்திலான இத்தடை எவ்வித தடங்கலுக்கும் உட்படாதவாறு கடுமையாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். மேலும் ஒவ்வோர் அமைச்சின் கீழுள்ள அனைத்துத் திணைக்களங்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு சகல அமைச்சுக்களின் செயலாளர்களிடமும் தயவன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. அதேபோன்று அவ்வனைத்து நிறுவனங்களினதும் அலுவலர்கள் இவ்வறிவுறுத்தல் மற்றும் கட்டளைகளுக்கமைய நடந்து கொள்கின்றார்களாவென்பதை அமைச்சுக்களின் செயலாளர்களும் திணைக்களத் தலைவர்களும் சந்தேகத்திற்கிடமின்றி தெரிந்து கொள்ளலும் இன்றியமையாததாகும்.

10. தேர்தலோடு தொடர்புடைய அனைத்து சட்டங்களையும் வலுவாக்கம் செய்வதற்கு, பாதுகாப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு/ தேர்தல்கள் ஆணையாளருக்கு ஒத்துழைப்பு வழங்குதல் உரிய சட்டத்தை வலுவாக்கம் செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அரசாங்க அதிகாரிகளினதும் பணியாக இருத்தல் வேண்டுமென அரசியலமைப்பின் 104 ஆ (2) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக உங்களது மேலான கவனம் ஈர்க்கப்படல் இன்றியமையாததென்பதையும் தயவு செய்து அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

11. இச்சுற்றறிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் பணியாட் குழுவினர்கள் ஆகியோரை அறிவூட்டும் பொறுப்பு அமைச்சின் செயலாளருக்குக் கையளிக்கப்படுகின்றதென்பதை மாகாண சபைகளின் முதலமைச்சர்கள், ஏனைய அமைச்சர்களை அறிவூட்டுதல், பிரதம செயலாளர் மற்றும் உரிய மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்களின் பொறுப்பென்பதையும் கருத்தில் கொள்வது பொருத்தமாகும்.

12. அதேபோன்று பொருத்தமானவிடத்து ஆணைக்குழுக்களின் செயலாளர்கள் அவ்வாணைக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் அங்கத்தினர்களை இச்சுற்றறிக்கை தொடர்பாக அறிவுறுத்த நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

13. அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக உங்களது அமைச்சின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு இன்றேல் கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதை தடுப்பதும் உரிய அலுவலர்களின் பொறுப்பொன்றென்பதைக் குறித்துக்காட்ட விரும்புகின்றேன்.

14. இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக வழக்கமாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், தேர்தல்கள் கண்காணிப்புக் குழுக்கள் என்பன அறிவூட்டப்படவுள்ளதோடு, தேர்தல் திணைக்களத்தின் அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்கள், அரசியல் கட்சிகளின் முகவர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்கள் என்போரை உள்ளடக்கிய தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகள் பற்றிய செயற்பாட்டு நிலையத்தினால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களோடு தொடர்புடைய முறைப்பாடுகள் பற்றி விசாரணை செய்யப்படுமெனவும் தேர்தல்கள் மனுக்களில் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரால், எடுக்கப்படும் வேறு நீதிமன்றச் செயன்முறைகளிலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்காத விதத்திலான செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிக்க அவகாசமுள்ளதெனவும் தயவன்புடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

உப அட்டவணை - 30

மாகாண சபைத் தேர்தல் - 2012ஃ2014
1988 இன் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 61அ(2) ஆம் பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

மாகாண சபையின் பெயர்	உறுப்பினர் எந்த அரசியற் கட்சியைச் சேர்ந்தவரென	தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள்
கிழக்கு	ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	தென்னகோன் முதியன்சேலாகே ஜயசேன
		துரையப்பா நவரத்னராஜா
வடமத்திய	ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	குணரத்ன சுசில்
		ஜயந்த மாரசிங்க
சப்ரகமுவ	ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	அநுரபிரிய நமிந்த எம். எல்.
		ஆனந்த மில்லன்கொட
மத்திய	ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	தல்கஸ்வத்தே தொன் ஜயதிஸ்ஸ
		அபநாயக நிமல் பியதிஸ்ஸ
வட	இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி	ஐயூப் அஸ்மின்
		மேரிகமலா குணசீலன்
வடமேல்	ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	அசுரமான பேஜ்ஜலாகே கீர்த்திரத்ன
		என். ரீ. எம். எம். தாஹிர்
மேல்	ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	பௌசி மொஹமட் நவுசர்
		ஹமுத்ர தம்மிக லலந்த குணசேக்கர
தென்	ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	காரியவசம் ஹபுதந்திரி கமகே துல்ஷான் பத்மசிறி
		ஆனந்த செனரத்விதான பத்திரணகே
ஊவா	ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	ஆறுமுகம் சிவலிங்கம்
		தயாரத்ன பண்டார வெதிவல முதியன்சேலாகே

மாகாண சபைத் தேர்தல்கள் 2012-2014
மாகாண சபைத் தேர்தல் தொடர்பான நீதிமன்றச் செயற்பாடுகள்

நீதிமன்றம் மற்றும் வழக்கு இலக்கம்	மாகாண சபை	குறித்த மாவட்டம்	மனுதாரர் அல்லது மனுதாரர்கள்	விடயம்	பிரதிவாதிகள்	தீர்ப்பு
உயர் நீதிமன்றம் SCFR/514/2012	கிழக்கு	அம்பாறை	எம்.ரீ.ஹசீன் அலி மௌலவி எஸ்.எல். எம். ஹனீபா ஏ.எல். தவம்	2012 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் உறுப்பினர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு	தேர்தல்கள் ஆணையாளர் (6ஆம் பிரதிவாதி) உட்பட ஆறு பேர்.	மனுதாரர் ஆஜராகாமையால் மனு நிராகரிக்கப்பட்டது. 2013.03.25
மேல் முறையீட்டு நீதின்றம் CA(writ)306/2012	கிழக்கு	திருகோண-மலை	ஜே.எம். லஹார்	விருப்பு வாக்குகளை மீள எண்ணுமாறு கேட்டுக்கொள்ளல். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்.	தேர்தல்கள் ஆணையாளர் (1ஆம் பிரதிவாதி) தெரிவத்தாட்சி அலுவலர் (2ஆம் பிரதிவாதி) உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (3ஆம் பிரதிவாதி) உட்பட 14 பேர்.	விருப்பு வாக்குகள் மீண்டும் எண்ணுவதற்கான காரணங்களைச் சமர்ப்பிக்காமையால் மனு நிராகரிக்கப்பட்டது. 2014.02.20
மேல் முறையீட்டு நீதின்றம் CA/178/2012	கிழக்கு	மட்டக்களப்பு	ஆர். துரைரத்னம்	கிழக்கு மாகாண சபைத் தேர்தலை இடைநிறுத்துமாறு கோருதல்.	தேர்தல்கள் ஆணையாளர் (8ஆம் பிரதிவாதி) உட்பட ஏழு பேர்.	நிராகரிக்கப்பட்டது 2012.09.14

நீதிமன்றம் மற்றும் வழக்கு இலக்கம்	மாகாண சபை	குறித்த மாவட்டம்	மனுதாரர் அல்லது மனுதாரர்கள்	விடயம்	பிரதிவாதிகள்	தீர்ப்பு
மேல் முறையீட்டு நீதின்றம் CA(writ)/298/2012	கிழக்கு	மட்டக்களப்பு	ராஜநாதன் பிரபாகரன் கண்ணகி உட்பட மூன்று பேர்.	2012 கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் விருப்பு வாக்குகள் மீள எண்ணப்படுதல்	”தேர்தல்கள் ஆணையாளர் (1ஆம் பிரதிவாதி) தெரிவத்தாட்சி அலுவலர் (2ஆம் பிரதிவாதி) உதவித் தேர்தல் ஆணையாளர் (3ஆம் பிரதிவாதி) உட்பட 16 பேர்.	விசாரணை செய்யப்படுகின்றது.
உயர் நீதிமன்றம் SC/SPL/01/2013	வடக்கு		பெத்தகமுவே நாலக்க தேரர்	வட மாகாண சபைத் தேர்தலை இடைநிறுத்துமாறு கோருதல்	தேர்தல்கள் ஆணையாளர் (4ஆம் பிரதிவாதி) சட்டமா அதிபர் (5ஆம் பிரதிவாதி) உட்பட மூன்று பேர்.	பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்கப்படாமையால் நிராகரிக்கப்பட்டது.
உயர் நீதிமன்றம் SC/SPL/02/2013	வடக்கு		வைத்திய குணதாச சூரியஆரச்சி அமரசேகர	வட மாகாண சபைத் தேர்தலை இடைநிறுத்துமாறு கோருதல்	தேர்தல்கள் ஆணையாளர் (4ஆம் பிரதிவாதி) சட்டமா அதிபர் (5ஆம் பிரதிவாதி) உட்பட மூன்று பேர்.	பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்கப்படாமையால் நிராகரிக்கப்பட்டது.
உயர் நீதிமன்றம் SC/SPL/03/2013	வடக்கு		ஜீ.டீ. புண்ணியவரதன அல்விஸ்	வட மாகாண சபைத் தேர்தலை இடைநிறுத்துமாறு கோருதல்	தேர்தல்கள் ஆணையாளர் (4ஆம் பிரதிவாதி) சட்டமா அதிபர் (5ஆம் பிரதிவாதி) உட்பட மூன்று பேர்.	பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்கப்படாமையால் நிராகரிக்கப்பட்டது.
உயர் நீதிமன்றம் SC/SPL/04/2013	வடக்கு		யூ.ஏ. அபேகோன் சதிஸ்சந்திர தர்மசிறி	வட மாகாண சபைத் தேர்தலை இடைநிறுத்துமாறு கோருதல்	தேர்தல்கள் ஆணையாளர் (4ஆம் பிரதிவாதி) சட்டமா அதிபர் (5ஆம் பிரதிவாதி) உட்பட மூன்று பேர்.	பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்கப்படாமையால் நிராகரிக்கப்பட்டது.

நீதிமன்றம் மற்றும் வழக்கு இலக்கம்	மாகாண சபை	குறித்த மாவட்டம்	மனுதாரர் அல்லது மனுதாரர்கள்	விடயம்	பிரதிவாதிகள்	தீர்ப்பு
உயர் நீதிமன்றம் SC/SPL/05/2013	வடக்கு		ஏ. ரவிகுமார்	வட மாகாண சபைத் தேர்தலை இடைநிறுத்துமாறு கோருதல்	தேர்தல்கள் ஆணையாளர் (4ஆம் பிரதிவாதி) சட்டமா அதிபர் (5ஆம் பிரதிவாதி) உட்பட மூன்று பேர்.	பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்கப்படாமையால் நிராகரிக்கப்பட்டது.
உயர் நீதிமன்றம் SC/FR/360/2013	மத்திய	கண்டி	ஏ.கே. அல்விஸ் கலபிட்டகே உள்ளிட்ட மேலும் 12 பேர்கள்	ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களது விருப்பு வாக்குகளை மீள எண்ணுமாறு கோருதல் - மத்திய மாகாண சபை	கண்டி மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் (1ஆம் பிரதிவாதி) பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் (3ஆம் பிரதிவாதி) தேர்தல்கள் ஆணையாளர் (4ஆம் பிரதிவாதி) சட்டமா அதிபர் (26ஆம் பிரதிவாதி)	நிராகரிக்கப்பட்டது.
மேன்முறையீட்டு நீதிமன்றம் CA(Writ)187/2013	வடக்கு		ஜயந்த லியனகே	வட மாகாண சபைத் தேர்தல் நடாத்துவதைத் தடுப்பதற்கான தீர்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காக	தேர்தல்கள் ஆணையாளர் (1ஆம் பிரதிவாதி) சட்டமா அதிபர் (2ஆம் பிரதிவாதி)	வாபஸ் பெறப்பட்டமையால் நிராகரிக்கப்பட்டது.
உயர் நீதிமன்றம் SC/FR/328/2013	மேல்	குருநாகல்	அகில இலங்கை சமுரத்தி அபிவிருத்தி மற்றும் கமநல ஆராய்ச்சி உதவி அலுவலர்கள் சங்கம்	தேர்தல் ஆணையாளரின் **PCE/2013/4B** ஆம் இலக்க மற்றும் 2013.09.12 ஆம் திகதிய கடிதம் மூலம் சமுரத்தி அலுவலர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு உள்ளதாக.	மத்திய, வடமேல், வட மாகாண சபைகளின் மாவட்டச் செயலாளர்கள் (3 தொடக்கம் 12 வரையான பிரதிவாதிகள்) தேர்தல்கள் ஆணையாளர் (15ஆம் பிரதிவாதி) சட்டமா அதிபர் (16ஆம் பிரதிவாதி) ஆகியோருடன் மேலும் 04 பேர்.	வாபஸ் பெறப்பட்டமையால் நிராகரிக்கப்பட்டது.

நீதிமன்றம் மற்றும் வழக்கு இலக்கம்	மாகாண சபை	குறித்த மாவட்டம்	மனுதாரர் அல்லது மனுதாரர்கள்	விடயம்	பிரதிவாதிகள்	தீர்ப்பு
மேல் முறையீட்டு நீதின்றம் CA(Writ)278/2013	வடக்கு		ஜயந்த லியனகே	வட மாகாண சபைத் தேர்தலை இடைநிறுத்துமாறு கோருதல்	”தேர்தல்கள் ஆணையாளர் (1ஆம் பிரதிவாதி) யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலர் (2ஆம் பிரதிவாதி) கிளிநொச்சி தெரிவத்தாட்சி அலுவலர் (3ஆம் பிரதிவாதி) மன்னார் தெரிவத்தாட்சி அலுவலர் (4ஆம் பிரதிவாதி) வவுனியா தெரிவத்தாட்சி அலுவலர் (5ஆம் பிரதிவாதி) முல்லைத்தீவு தெரிவத்தாட்சி அலுவலர் (6ஆம் பிரதிவாதி) உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் (7ஆம் பிரதிவாதி) மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் (8ஆம் பிரதிவாதி) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் (9ஆம் பிரதிவாதி) சட்டமா அதிபர் (10ஆம் பிரதிவாதி)	பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்கப்படாமையால் நிராகரிக்கப்பட்டது.
மேல் முறையீட்டு நீதின்றம் CA(Writ)296/2013	மேல்	புத்தளம்	பத்தரமுல்லே சீலரதன தேரர்	புத்தளம் புனித அன்ட்ரூ வித்தியாலய வாக்குச் சீட்டுகள் கண்டெடுக்கப்பட்டமையால் வடமேல் மாகாண சபைத் தேர்தல் மீண்டும் நடாத்தப்பட வேண்டுமெனக் கோருதல்.	தேர்தல்கள் ஆணையாளர் (1ஆம் பிரதிவாதி) மேலதிகத் தேர்தல் ஆணையாளர் (2ஆம் பிரதிவாதி) புத்தளம் தெரிவத்தாட்சி அலுவலர் (3ஆம் பிரதிவாதி) புத்தளம் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (4ஆம் பிரதிவாதி)	நிராகரிக்கப்பட்டது.

நீதிமன்றம் மற்றும் வழக்கு இலக்கம்	மாகாண சபை	குறித்த மாவட்டம்	மனுதாரர் அல்லது மனுதாரர்கள்	விடயம்	பிரதிவாதிகள்	தீர்ப்பு
மாவட்ட நீதிமன்றம் புத்தளம் B/R/1221/13/P	மேல்	புத்தளம்	குற்றப் புலனாய்வுத் திணைக்களம்	புத்தளம் புனித அன்ட்ரூ வித்தியாலய வாக்குச் சீட்டுகள் கண்டெடுக்கப்பட்டமை		வாக்கெண்ணல் நிலையத்தினுள் பெறப்பட்டதாகக் கருதப்படும் வாக்குச் சீட்டுகள் குற்றமாகவோ அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்ட குற்றமாகவோ காணப்படாமையால் பெறப்பட்ட வாக்குச்சீட்டுகள் தேர்தல் ஆணையாளருக்கு கையளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.
மேல் முறையீட்டு நீதின்றம் CA(Writ)316/2013	மத்திய	கண்டி	அளுத் கெதர ஹேரத் பண்டா	விருப்பு வாக்குகளை மீள எண்ணுமாறு கேட்டுக்கொள்ளல்.		விசாரணை செய்யப்படுகின்றது.
உயர் நீதிமன்றம் SC/FR/219/2014	ஊவா	பதுளை	ஹரீன் பிரனாந்து எம். டப்ளியூ.ரீ. மிஹிமல் முணசிங்ஹ	ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான உறுப்பினர் ஆசன எண்ணிக்கை தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளல்	தேர்தல்கள் ஆணையாளர்	அடிப்படை உரிமைகள் மீறப்படாமையால் மனு நிராகரிக்கப்பட்டது.

உப அட்டவணை - 32

மத்திய மற்றும் வடக்கு மாகாண சபைகளுக்காக 2013 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக அனைத்து இரத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களால் பின்பற்றப்பட்ட வேண்டிய வழிகாட்டு நெறிகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதினெட்டாம் திருத்தத்தினால் திருத்தியமைக்கப்பட்ட பதினேழாம் அரசியலமைப்பின் திருத்தத்தின் 104ஆ(5) ஆம் உறுப்புரை மற்றும் தேர்தலை நடாத்தலோடு தொடர்புடைய வேறு சட்டதிட்டங்கள் என்பனவற்றின் கீழ் தேர்தல்கள் ஆணையாளர், மஹிந்த தேசப்பிரிய ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள், பொறுப்புக்கள், கடமைகள் என்பனவற்றிக்கிணங்க நீதியானதும் நேர்மையானதுமான தேர்தலொன்று நடாத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களால் பின்பற்றப்பட வேண்டிய கீழ்வரும் வழிகாட்டு நெறிகளை இத்தால் வெளியிடுகின்றேன்.

1. செய்திப் பத்திரிகைகளில் இடங்களைக் குறித்தொதுக்குகையிலோ அல்லது வானலைக் காலத்தை வழங்குகையிலோ எந்தவோர் அரசியல் கட்சிக்கும், சுயேச்சைக் குழுவுக்கும், வேட்பாளரொருவருக்கும் அல்லது கட்சித் தலைவருக்கும் வேறுபாடு காட்டப்படக் கூடாதென்பதோடு, தேர்தல் தொடர்பாக அறிக்கையிடுகையில் அனைத்து அச்சு, தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடக நிறுவனங்கள் சமநிலைத் தன்மையையும் கட்சி சார்பற்ற போக்கையும் கடைப்பிடித்தல் வேண்டும்.
2. செய்திகளையும் மற்றும் நிகழ்கால விடயங்களை பிரசுரிக்கின்றபோதோ அல்லது ஒலி/ ஒளிபரப்புகின்ற போதோ அனைத்து ஊடக நிறுவனங்களும் சரியானதாகவும் சமநிலை பேணுபவையாகவும் பக்கசார்பற்றவையாகவும் நடந்துகொள்ளல் வேண்டும்.
3. ஆசிரியர் கருத்தொன்று குழப்ப நிலையைக் கொண்டதாகவோ சமநிலைத் தன்மையற்றவொன்றாகவோ காணப்படுகின்ற போது வேறுபாட்டுத் தன்மை நிலவ முடியுமாதலால் ஆசிரியர் கருத்தொன்றை இலத்திரனியல் ஊடகம் ஊடாக ஒளிபரப்பக் கூடாது. ஆயினும் ஏதேனும் ஒரு காரணத்தினால் ஆசிரியர் கருத்தினை ஒளிபரப்பினால் அதற்கு எதிரான கருத்துக்களையும் தெரிவிக்க அனுமதி கோரினால் அக்கருத்துக்களை ஒலி/ ஒளிபரப்பும் கடப்பாடு அந் நிறுவனத்திற்குண்டு.
4. தேர்தல் காலப்பகுதியில் சமநிலையற்ற நிகழ்ச்சிகள் ஒலி/ ஒளிபரப்புச் செய்யாமலிருப்பது அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் செய்திப்பிரிவுகள் மற்றும் நடப்புச் செய்திகளுக்குப் பொறுப்பான பிரிவுகளின் பொறுப்பாகும்.
5. ஏதேனும் ஒரு சம்பவவோ அல்லது நிகழ்ச்சியோ பற்றிய விடயங்களை ஒலி/ ஒளிபரப்புச் செய்கைகளில் ஏதேனும் ஒரு கட்சியின் அல்லது வேட்பாளரின் கருத்துக்களை சமர்ப்பிக்கின்ற போது அவ்விடயங்கள் தொடர்பான அக்கறையொன்றையோ அல்லது ஆர்வமொன்றையோ காட்டுகின்ற அல்லது அவ்விடயத்தினால் பாதிப்பொன்று ஏற்படக்கூடிய ஏனைய கட்சிகளுக்கும் அச் செய்திகளின் ஒலி/ ஒளிபரப்பப்படுகின்றபோதோ அல்லது நிகழ்ச்சியின் போதோ விடயங்களை முன்வைக்க சந்தர்ப்பமொன்று அளிக்கப்படல் வேண்டும். அத்தினத்தன்றே அச்சந்தர்ப்பத்தை வழங்க முடியாதெனில் அதற்கடுத்த தினம் அதற்கான வாய்ப்பை வழங்குதல் வேண்டும்.
6. எந்தவொரு விவரண நிகழ்ச்சியோ அல்லது விஷேட நிகழ்ச்சியோ தேர்தல் சமயத்தில் ஒலி/ ஒளிபரப்புகின்றபோது பிரதியாக்குநர், அறிவிப்பாளர் மற்றும் தயாரிப்பாளரின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.
7. முன்னைய சந்தர்ப்பங்களில் ஒலி/ ஒளிபரப்பப்பட்ட கலந்துரையாடல்கள், விவாதங்கள் மற்றும் அத்தகைய நிகழ்ச்சிகள் முதலியவற்றை தேர்தல் தினத்திற்கு முன்னரான 48 மணித்தியாலங்களுக்குள் மீள் ஒலி/ ஒளிபரப்பு செய்வதோ வெளியிடுவதோ கூடாது.
8. வாக்கெடுப்பு முடிவடையும் வரை வேட்பாளருக்கோ அல்லது அரசியற் கட்சிகளுக்கோ சுயேச்சைக் குழுத்தலைவர்களுக்கோ எதிராக நிரூபிக்க முடியாத குற்றச்சாட்டுக்களை செய்தி ஒலி/ ஒளிபரப்புக்களிலோ அல்லது நிகழ்ச்சிகளிலோ வெளியிடப்படக்கூடாது.
9. கடமை ரீதியிலான வைபவங்கள் மற்றும் குற்றங்கள் போன்ற வாக்கெடுப்போடு தொடர்பற்ற செய்திகளைப் பரப்புகின்றபோது கட்சியொன்றுக்கு/ குழுவொன்றுக்கு/ வேட்பாளரொருவருக்கு

இலாபமொன்று அல்லது பாதிப்பொன்று ஏற்படாதவாறு அனைத்து ஊடக நிறுவனங்களும் நுணுக்கமாகவும் சாதுரியமாகவும் நடந்துகொள்ளல் வேண்டும்.

10. சனாதிபதியவர்களோ அல்லது பிரதம மந்திரி அவர்களோ அல்லது அரசாங்கத்தின் அமைச்சர்களோ தொடர்புபடுகின்ற அரசியல் கருத்துக்களை / கொள்கைகளை வெளிப்படுத்துகின்ற தொலைக்காட்சி/ வானொலி நிகழ்ச்சிகள் அவர் சார்ந்த கட்சியின் நிகழ்ச்சியொன்றாக கருதப்பட வேண்டுமென்பதோடு, அதன் காரணமாக அதற்கெதிரான கருத்துடைய அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் அதற்குச் சமனான நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குதல் வேண்டும். அச்சு ஊடகங்களும் அதேவிதத்தில் அனைத்து அரசியற் கட்சிகள் / குழுக்கள் என்பனவற்றிக்கு விஷேட கலந்துரையாடல்களையும் வழங்குகின்ற போது/ பிரச்சாரக் கட்சிக் கூட்டங்கள் பற்றிக் அறிக்கை தயாரிக்கின்ற போது சம அந்தஸ்தையும் சம உரிமையையும் வழங்குதல் வேண்டும். போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெருந்தொகையில் காணப்படுவதனால் அனைத்து கட்சிகள் / சுயேச்சைக் குழுக்கள் என்பனவற்றிக்கு சம அளவிலான வானலைக் காலமொன்றையோ அல்லது செய்திப் பத்திரிகைகளில் இடவசதியையோ பெற்றுக் கொடுக்க முடியாத போதிலும் ஏதேனுமொரு கட்சிக்கு, குழுவுக்கு அல்லது செய்திப் பத்திரிகைகளில் இடவசதியையோ பெற்றுக் கொடுக்க முடியாத போதிலும் ஏதேனுமொரு கட்சிக்கு, குழுவுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு விஷேட அக்கறை செலுத்தி ஊக்குவிக்க கூடிய வித்திலோ வேறு கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்களுக்கு பாதிப்பொன்று நேரிடும் விதத்திலோ வானலைக் காலத்தை இன்றேல் செய்திப் பத்திரிகையின் இடவசதிகளைக் குறித்தொதுக்குதல் மேற்கொள்ளலாகாது.

11. போட்டியிடுகின்ற கட்சியொன்று/ குழுவொன்று வேட்பாளரொருவரின் வெற்றியை ஊக்குவிக்கக் கூடியதான அரச அலுவலர்களால் நடாத்தப்படும் உரைகள், நேர்காணல்கள் போன்ற நிகழ்ச்சிகளை பிரச்சாரம் செய்வதிலிருந்து அனைத்து ஊடகங்களும் பிரபல்யப்படுத்தக் கூடாது.

12. குழுக் கலந்துரையாடல்களில் பங்கேற்பவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற போது அனைத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்களும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டியதோடு கலந்துரையாடலின் உள்ளடக்கமும் சமநிலை கொண்டதாக இருத்தல் வேண்டும். ஏதேனும் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்ளும் முகவரொருவருக்கு உரிய மொழியில் பாண்டித்தியம் இல்லாமையினால் அவருக்கு பாதிப்பு ஏற்படக் கூடியவாறு நிகழ்ச்சியை நடாத்தக் கூடாது. அச்சு ஊடகங்களில் நேர்கண்டு வெளியிடும் போது மொழிப்புலமை இன்மை காரணமாக கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளும் அரசியல்வாதிக்கு பாதிப்பு ஏற்படக்கூடியவாறு செயற்படக் கூடாது. தெளிவற்ற, புரிந்து கொள்ள முடியாத வினாக்களுக்கூடாக பெறப்பட்ட தகவல்களை வெளியிடக் கூடாது.

13. தொலைபேசி மூலம் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளின் போது அனைத்து தொடர்பாளர்களுக்கும் அவர்களின் வினாக்களிலோ அல்லது முன்மொழிவுகளிலோ உள்ளடக்கப்பட்டடுள்ள விடயங்கள் எவையாயினும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படல் வேண்டும். அந்நிகழ்ச்சிகளின் சமநிலைத்தன்மைக்கு அந்நிகழ்ச்சிகளை நடாத்தும் அனைத்து அலுவலர்களும் வகை கூறுதல் வேண்டும்.

14. எந்தவோர் இலத்திரனியல் அல்லது அச்சு ஊடாக நிறுவனமொன்றின் தவிசாளரொருவர், பணிப்பாளர் சபை அங்கத்தினரொருவர் அல்லது ஊழியரொருவர் அரசியல் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபாடு கொண்ட ஒருவராக இருப்பின், அத்தகைய ஈடுபாடு சமநிலையான ஒலி/ ஒளிபரப்பை பாதிக்கச் செய்யவல்ல சிக்கல்களை தோற்றுவிக்க ஏதுவாக அமையலாம். ஆதலால் கீழ்வரும் விடயங்கள் முகாமைத்துவத்தின் கவனத்திற்கு உரிய அலுவலர்கள் / ஊழியர்களால் கொண்டுவரப்படல் வேண்டும்.

    (அ) அத்தகையவரின் ஈடுபாட்டின் அளவு

    (ஆ) அத்தகையவர்களின் தொழிலின் இயல்பும் மட்டமும்

    (இ) நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்ற போது அத்தகையவரின் ஈடுபாட்டின் பரப்பெல்லை.

15. எவரெனும் ஒரு (ஏதேனும் வானொலி அல்லது தொலைக்காட்சி அல்லது ஏதேனுமோர் அச்சு ஊடக நிறுவனமொன்றின் ஊழியர், பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்) அரசியல் கட்சியொன்றில் ஏதேனும் ஒரு பதவியை வகிப்பவரென பிரபல்யமடைந்திருப்பின் தேர்தல் முடிவடையும் வரை அத்தகைய ஒருவர் ஊடகவியலாளராக ஆற்றுகின்ற அலுவல்களிலிருந்து நீங்கிக் கொள்ள வேண்டுமென்பதோடு எந்தவொரு வானொலி அல்லது தொலைக்காட்சி நிறுவனமொன்றிலும் அரசியல் நிகழ்ச்சிகளை

நடாத்த அனுமதி வழங்கப்படக் கூடாது. மேலும் அந்நபர் தேர்தலில் போட்டியிடுபவராயின் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும்.

16. ஏதேனுமோர் ஊடக நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கலந்துரையாடலில் அல்லது செவ்வியில் பங்குபற்ற எவரெனுமோரு நபர் மறுக்கின்ற சந்தர்ப்பமொன்றில் மற்றும் அவ்வாறு மறுப்பதற்கான காரணங்களை முன்வைக்காத சந்தர்ப்பத்தில் ஊடக நிறுவனத்தினால் அத்தகைய நிலைமைகளுக்கு அத்தகைய சந்தர்ப்பங்களில் வெற்றுக் கதிரையொன்றைக் காட்டுவது போன்ற நாடகப் பாணியிலான உத்திகளுக்குப் பதிலாக நேரடியான மற்றும் எளிய அறிவித்தலொன்றின் மூலம் அதனை வெளிப்படுத்துமாறு தூண்டப்படுகின்றது.
17. கருத்துக் கணிப்பொன்றின் முடிவுகளை இலத்திரனியல் ஊடகமொன்றின் ஊடக ஒளிபரப்புகையில் அல்லது அச்சக ஊடகமொன்றில் பிரசுரிக்கின்ற போது அக்கருத்துக் கணிப்பை நடாத்திய அமைப்பை அறிமுகப்படுத்தல், அப்பணி பொறுப்புவிக்கப்பட்ட மற்றும் அதற்காக நிதி ஒதுக்கீடு வழங்கிய நிறுவனம் அல்லது நபர் பயன்படுத்தப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை, தவறுகளின் எல்லை மற்றும் களத்தில் பணியாற்றிய நாட்கள் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். கருத்துக் கணிப்பு நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய மக்கள் கருத்து மாத்திரம் இதன் மூலம் வெளிகொணரப்பட்டுள்ளதென ஒளி/ ஒலிபரப்பாளர் குறிப்பிடுதல் வேண்டும்.
18. போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் அல்லது கட்சியொன்று/ குழுவொன்றினால் வேறு கட்சியொன்றின் /குழுவொன்றின் வேட்பாளரொருவரின் வெற்றியை ஊக்குவிக்ககூடியதாக வெளியிடப்படுகின்ற கருத்துக்களை பிரச்சாரம் செய்யக் கூடாது.
19. கட்சியொன்றின் அல்லது குழுவொன்றின் தேர்தல்களோடு தொடர்புடைய பிரச்சார நடவடிக்கைகளில் அரசியற் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களினால் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வாக்குறுதிகள் தொடர்பாக வாக்காளர் நடுநிலையிலிருந்து கருத்திலெடுக்க முடிந்தவாறு அமைதியான சூழ்நிலையொன்றை வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னர் ஏற்படுத்துவது முக்கியமாதலால் வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னரான 48 மணித்தியாலத்திற்குள் தேர்தலோடு தொடர்புடைய கலந்துரையாடல், வாதவிவாதங்கள், வர்த்தக அறிவித்தல்கள் என்பவற்றைப் பிரச்சாரம் செய்வதிலிருந்து தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். அச்சு ஊடகங்களுக்கும் இது பொருந்தும்.

2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவிருக்கின்ற மாகாண சபைத் தேர்தலின் முடிவுகளின் வெளியிடப்படும் வரை இவ்வழிகாட்டு நெறிகளைப் பின்பற்றுமாறு அனைத்து அச்சு இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் நிருவாகிகளையும் தயவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2014.02.03

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

குறிப்பு

குறிப்பு 1

மாகாண சபைத் தேர்தல்கள் - 2012-2014
மாகாண சபைகள் கலைக்கப்பட்ட திகதி, தேர்தல் வேட்புமனுக்கள் கோரப்பட்ட திகதி மற்றும் தேர்தல் நடைபெற்ற திகதி

மாகாண சபை (1)	கலைக்கப்பட்ட திகதி (2)	கலைக்கப்பட்டதன் வர்த்தமானி அறிவித்தல் திகதி/ இலக்கம் (3)	வேட்புமனு அறிவித்தல் திகதி (4)	வேட்புமனு வர்த்தமானி அறிவித்தல் திகதி/ இலக்கம் (5)	வேட்பு மனுக் காலம் தொடக்கம் – முடிவு வரை (6)	தேர்தலுக்கான திகதி அறிவித்தல் (7)	தேர்தல் வர்த்தமானி அறிவித்தல் திகதி/ இலக்கம் (8)	தேர்தல் திகதி (9)
கிழக்கு	2012.06.27	2012.06.27 1764/06	2012.06.28	2012.06.28 1764/15	2012.07.12 2012.07.19	2012.07.25	2012.07.25 1768/21	2012.09.08
வட மத்திய	2012.06.27	2012.06.27 1764/07	2012.06.28	2012.06.28 1764/15	2012.07.12 2012.07.19	2012.07.25	2012.07.25 1768/21	2012.09.08
சப்ரகமுவ	2012.06.27	2012.06.27 1764/08	2012.06.28	2012.06.28 1764/15	2012.07.12 2012.07.19	2012.07.25	2012.07.25 1768/21	2012.09.08
மத்திய	2013.07.05	2013.07.05 1817/38	2013.07.11	2013.07.11 1818/21	2013.07.25 2013.08.01	2013.08.06	2013.08.06 1822/5	2013.09.21
வட	2013.07.05*	-	2013.07.11	2013.07.11 1818/21	2013.07.25 2013.08.01	2013.08.06	2013.08.06 1822/5	2013.09.21
வட மேல்	2013.07.05	2013.07.09 1817/39	2013.07.11	2013.07.11 1818/21	2013.07.25 2013.08.01	2013.08.06	2013.08.06 1822/5	2013.09.21
மேல்மேல்	2014.01.12	2014.01.12 1844/75	2014.01.16	2014.01.16 1845/18	2014.01.30 2014.02.06	2014.02.10	2014.02.10 1849/1	2014.03.29
தென்	2014.01.12	2014.01.12 1844/76	2014.01.16	2014.01.16 1845/18	2014.01.30 2014.02.06	2014.02.10	2014.02.10 1849/1	2014.03.29
ஊவா	2014.07.11	2014.07.11 1870/64	2014.07.16	2014.07.16 1871/32	2014.07.30 2014.08.06	2014.08.13	2014.08.13 1875/23	2014.09.20

*ஜனாதிபதியால் அரசியல் யாப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக வட மாகாண சபைக்கான தேர்தல் நடாத்துமாறு பணிப்புரை வழங்கப்பட்ட திகதி

குறிப்பு 2

மாகாண சபைத் தேர்தல் - 2012/2014
ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை

மாகாண சபை (1)	தேர்தல் நடைபெற்ற திகதி (2)	நிருவாக மாவட்டம் (3)	தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை (4)
கிழக்கு	2012.09.08	மட்டக்களப்பு	11
		அம்பாறை	14
		திருகோணமலை	10
வட மத்திய	2012.09.08	அநுராதபுரம்	21
		பொலொன்னறுவை	10
சப்ரகமுவ	2012.09.08	இரத்தினபுரி	24
		கேகாலை	18
மத்திய	2013.09.21	கண்டி	29
		மாத்தளை	11
		நுவரெலியா	16
வட	2013.09.21	யாழ்ப்பாணம்	16
		கிளிநொச்சி	04
		மன்னார்	05
		வவுனியா	06
		முல்லைத்தீவு	05
வட மேல்	2013.09.21	குருநாகல்	34
		புத்தளம்	16
மேல்	2014.03.29	கொழும்பு	40
		கம்பஹா	40
		களுத்துறை	22
தென்	2014.03.29	காலி	22
		மாத்தறை	17
		அம்பாந்தோட்டை	14
ஊவா	2014.09.20	பதுளை	18
		மொணராகலை	14
		மொத்தம்	**437**

குறிப்பு 3

மாகாண சபைத் தேர்தல் - 2012/2014
நிருவாக மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள தேருநர்கள் எண்ணிக்கை, வாக்கெடுப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை

மாகாண சபை (1)	நிருவாக மாவட்டம் (2)	தேர்தல் நடைபெற்ற திகதி (3)	தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பின் வருடம் (4)	தேருநர் எண்ணிக்கை (5)	வாக்கெடுப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை (6)	வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை (7)
கிழக்கு	மட்டக்களப்பு	2012.09.08	2011	347,099	414	466
	அம்பாறை			441,287	464	464
	திருகோணமலை			245,363	285	285
வட மத்திய	அநுராதபுரம்	2012.09.08	2011	606,508	608	608
	பொலொன்னறுவை			294,365	287	288
சப்ரகமுவ	இரத்தினபுரி	2012.09.08	2011	769,813	623	623
	கேகாலை			631,981	566	567
மத்திய	கண்டி	2013.09.21	2012	1,015,315	825	825
	மாத்தளை			366,594	322	323
	நுவரெலியா			507,693	423	423
வட	யாழ்ப்பாணம்	2013.09.21	2012	426,813	526	526
	கிளிநொச்சி			68,600	95	95
	மன்னார்			75,737	70	70
	வவுனியா			94,644	89	89
	முல்லைத்தீவு			53,683	50	52
வட மேல்	குருநாகல்	2013.09.21	2012	1,227,810	920	920
	புத்தளம்			526,408	387	389
மேல்	கொழும்பு	2014.03.29	2013	1,552,734	1,049	1,062
	கம்பஹா			1,590,076	968	1013
	களுத்துறை			881,814	540	612
தென்	காலி	2014.03.29	2013	809,882	703	703
	மாத்தறை			608,524	444	450
	அம்பாந்தோட்டை			455,398	410	411
ஊவா	பதுளை	2014.09.20	2013	609,966	515	516
	மொணராகலை			332,764	318	318
			மொத்தம்	**14,540,871**	**11,901**	**12,098**

குறிப்பு 4

மாகாண சபைத் தேர்தல் - 2012/2014
நிருவாக மாவட்டங்களில் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் எண்ணிக்கை, சுயேச்சைக்குழுக்களின் எண்ணிக்கை மற்றும் வேட்பாளர்களின் எண்ணிக்கை

மாகாண சபை (1)	நிருவாக மாவட்டம் (2)	வேட்புமனுவில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர் எண்ணிக்கை (3)	வேட்புமனுக்கள் கையளித்துள்ள (4)		நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களுக்குரிய (5)		அரசியற் கட்சிகளின் வேட்பாளர் எண்ணிக்கை (6)	சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் எண்ணிக்கை (7)	மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை (8)
			அரசியற் கட்சிகள்	சுயேச்சை-குழுக்கள்	அரசியற் கட்சிகள்	சுயேச்சை-குழுக்கள்			
கிழக்கு	மட்டக்களப்பு	14	13	21	-	-	182	294	476
	அம்பாறை	17	16	19	-	01	272	306	578
	திருகோணமலை	13	17	16	01	-	208	208	416
வட மத்திய	அநுராதபுரம்	24	09	05	-	-	216	120	336
	பொலொன்னறுவை	13	09	07	-	-	117	91	208
சப்ரகமுவ	இரத்தினபுரி	27	14	06	01	-	351	162	513
	கேகாலை	21	13	14	-	01	273	273	546
மத்திய	கண்டி	32	17	08	-	-	544	256	800
	மாத்தளை	14	13	07	-	-	182	98	280
	நுவரெலியா	19	14	10	-	01	266	171	437
வட	யாழ்ப்பாணம்	19	13	11	02	01	209	171	380
	கிளிநொச்சி	07	11	03	-	01	77	14	91
	மன்னார்	08	12	08	-	-	96	64	160
	வவுனியா	09	12	08	-	01	108	63	171
	முல்லைத்தீவு	08	11	02	-	-	88	16	104
வட மேல்	குருநாகல்	37	15	12	02	-	481	444	925
	புத்தளம்	19	13	11	01	-	228	209	437
மேல்	கொழும்பு	43	18	15	-	04	774	473	1247
	கம்பஹா	43	13	09	-	-	559	387	946
	களுத்துறை	25	14	10	01	01	325	225	550
தென்	காலி	25	14	04	-	-	350	100	450
	மாத்தறை	20	14	05	-	-	280	100	380
	அம்பாந்தோட்டை	17	09	09	-	-	153	68	221
ஊவா	பதுளை	21	10	04	-	-	210	84	294
	மொணராகலை	17	12	07	-	-	204	119	323
மொத்தம்		**512**	**326**	**231**	**8**	**11**	**6,753**	**4,516**	**11,269**

குறிப்பு 5

கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் - 2012
ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் போட்டியிட்ட அரசியற் கட்சிகள்

தொடரிலக்கம்	அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்கள்	கிழக்கு மாகாண சபை			வட மேல் மாகாண சபை		சப்ரகமுவ மாகாண சபை	
		மட்டக்களப்பு	அம்பாறை	திருகோணமலை	அநுராதபுரம்	பொலொன்னறுவை	இரத்தினபுரி	கேகாலை
1	அகில இலங்கை தமிழர் கூட்டணி	-	-	√	-	-	-	-
2	எமது தேசிய முன்னணி	√	-	-	-	-	-	-
3	இலங்கைத் தமிழரசுக் கட்சி	√	√	√	-	-	-	-
4	ஈழவர் ஜனநாயக முன்னணி	√	√	√	-	-	-	
5	ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	√	√	√	√	√	√	√
6	ஐக்கிய தேசியக் கட்சி	√	√	√	√	√	√	√
7	எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய	√	√	-	√	-	√	-
8	எக்சத் லங்கா மகா சபா	√	√	√	√	√	√	√
9	ஐக்கிய சோசலிசக் கட்சி	√	√	√	-	√	-	-
10	ஒக்கொம வெஸியோ ஒக்கொம ரஜவரு அமைப்பு	-	-	-	-	-	√	√
11	மக்கள் விடுதலை முன்னணி	√	√	√	√	√	√	√
12	ஜனசெத பெரமுன	√	√	√	√	√	-	√
13	தேசிய சுதந்திர முன்னணி	-	-	√	-	-	-	-
14	ஜாதிக சங்வர்தன பெரமுன	-	-	-	-	-	-	√
15	தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி	-	√	√	√	√	√	√
16	நவ சமசமாஜக் கட்சி	-	-	-	-	-	√	√
17	நவ சிஹல உறுமய	-	-	-	-	-	√	-
18	முஸ்லிம் விடுதலை முன்னணி	-	√	√	-	-	-	-
19	ருஹுணு ஜனதா பக்ஷய	-	√	√	√	√	√	√
20	இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (அரசியற் கிளை)	-	-	-	-	-	√	√
21	லிபரல் கட்சி	-	-	-	-	-	√	-
22	ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி	√	√	√	√	√	√	√
23	ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்	√	√	√	-	-	-	-
24	சோசலிச மக்கள் முன்னணி	√	√	√	-	-	-	-
25	சோசலிச சமத்துவக் கட்சி	-	-	-	-	-	-	√

*போட்டியிட்ட நிருவாக மாவட்டத்தைக் குறிக்கும் (✓) அடையாளம் இடப்பட்டுள்ளது.

குறிப்பு 6

மத்திய, வட, வட மேல் மாகாண சபைத் தேர்தல் - 2013.09.21
ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் போட்டியிட்ட அரசியற் கட்சிகள்

தொடரிலக்கம்	அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்கள்	மத்திய மாகாண சபை			வட மாகாண சபை					வட மேல் மாகாண சபை	
		கண்டி	மாத்தளை	நுவரெலியா	யாழ்ப்பாணம்	கிளிநொச்சி	மன்னார்	வவுனியா	முல்லைத்தீவு	குருநாகல்	புத்தளம்
1	எமது தேசிய முன்னணி	√	√	-	-	-	√	-	-	√	√
2	இலங்கைத் தமிழரசுக் கட்சி	-	-	-	√	√	√	√	√	-	-
3	ஈழவர் ஜனநாயக முன்னணி			√	-	√	-	-	-	-	-
4	ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	√	√	√	√	√	√	√	√	√	√
5	ஐக்கிய தேசியக் கட்சி	√	√	√	√	√	√	√	√	√	√
6	ஜனநாயக ஐக்கிய முன்னணி	-	-	-	√	√	√	√	-	-	-
7	எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய	-	√	√	-	-	-	√	√	√	-
8	எக்சத் லங்கா மகா சபா	√	√	√	-	√	√	√	√	√	√
9	ஐக்கிய சோசலிசக் கட்சி	-	-	√	√	-	-	√	-	-	-
10	மலையக மக்கள் முன்னணி	√	-	√		-	-	-	-	-	-
11	மக்கள் விடுதலை முன்னணி	√	√	√	√	√	√	√	√	√	√
12	ஜனசெத பெரமுன	√	√	√	√	√	√	√	√	√	√
13	தேசிய இனங்களின் ஐக்கியத்துக்கான அமைப்பு	-	-	-	-	√	-	-	√	√	√
14	தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி	√	√	√	-	-	-	-	-	√	√
15	புதிய ஜனநாயக முன்னணி	√	-	-	-	-	-	-	-	-	-
16	நவ சிஹல உறுமய	√	-	-	-	-	-	-	-	-	-
17	ஜனநாயகக் கட்சி	√	√	√	√	√	√	√	√	√	√
18	முஸ்லிம் விடுதலை முன்னணி	√	-	-	-	-	√	-	-	-	-
19	ருஹுணு ஜனதா பக்ஷய	√	√	√	-	-	-	-	-	√	√
20	இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (அரசியற் கிளை)	√	√	-	-	-	-	-	-	-	-
21	ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி	√	√	√	√	√	√	√	√	√	√
22	ஸ்ரீலங்கா மகாஜன பக்ஷய	√	-	-	√	-	-	-	-	-	-
23	ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்	√	√	-	-	-	√	√	√	√	√
24	சோசலிச மக்கள் முன்னணி	-	-	√	-	-	-	-	-	-	-
25	சோசலிச சமத்துவக் கட்சி	-	-	-	√	-	-	-	-	-	-

*போட்டியிட்ட நிருவாக மாவட்டத்தைக் குறிக்கும் (√) அடையாளம் இடப்பட்டுள்ளது.

குறிப்பு 7

மேல், தென் மாகாண சபைத் தேர்தல் - 2014.03.29
ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் போட்டியிட்ட அரசியற் கட்சிகள்

தொடரிலக்கம்	அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்கள்	மேல் மாகாண சபை			தென் மாகாண சபை		
		கொழும்பு	கம்பஹா	களுத்துறை	காலி	மாத்தறை	அம்பாந் தோட்டை
1	எமது தேசிய முன்னணி	√	-	-	-	√	-
2	அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்	√	-	-	-	-	-
3	ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	√	√	√	√	√	√
4	ஐக்கிய தேசியக் கட்சி	√	√	√	√	√	√
5	எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய	√	√	√	√	√	√
6	எக்சத் லங்கா மகா சபா	√	√	√	√	√	√
7	ஐக்கிய சோசலிசக் கட்சி	-	-	√	√	-	-
8	ஐக்கிய சமாதான முன்னணி	√	-	-	-	-	-
9	ஒக்கொம வெஸியோ ஒக்கொம ரஜவரு அமைப்பு	-	-	√	-	-	-
10	மக்கள் விடுதலை முன்னணி	√	√	√	√	√	√
11	ஜனசெத பெரமுன	√	√	√	√	√	√
12	தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி	√	√	√	√	√	√
13	புதிய ஜனநாயக முன்னணி	√	-	-	√	√	-
14	நவ சமசமாஜக் கட்சி	√	√	-	-	√	-
15	நவ சிஹல உறுமய	-	√	-	-	-	-
16	ஜனநாயக மக்கள் முன்னணி	√	√	-	-	-	-
17	ஜனநாயகக் கட்சி	√	√	√	√	√	√
18	மௌபிம ஜனதா பக்ஷய	-	-	-	√	-	-
19	இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (அரசியற் கிளை)	√	-	√	-	-	-
20	லிபரல் கட்சி	-	-	-	√	√	-
21	ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி	√	√	√	√	√	√
22	ஸ்ரீலங்கா மகாஜன பக்ஷய	-	-	-	√	-	-
23	ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்	√	√	√	-	√	-
24	சோசலிச சமத்துவக் கட்சி	√	-	-	-	-	-

*போட்டியிட்ட நிருவாக மாவட்டத்தைக் குறிக்கும் (√) அடையாளம் இடப்பட்டுள்ளது.

குறிப்பு 8

ஊவா மாகாண சபைத் தேர்தல் - 2014.09.20
ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் போட்டியிட்ட அரசியற் கட்சிகள்

தொடரிலக்கம்	ஸ்தாபிக்கப்பட்ட அரசியற் கட்சி-களின் பெயர்கள்	ஊவா மாகாணம்	
		பதுளை	மொணராகலை
1	எமது தேசிய முன்னணி	-	√
2	ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	√	√
3	ஐக்கிய தேசியக் கட்சி	√	√
4	ஜனநாயக ஐக்கிய முன்னணி	√	-
5	எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய	-	√
6	எக்சத் லங்கா மகா சபா	√	√
7	ஐக்கிய சோசலிசக் கட்சி	-	√
8	மக்கள் விடுதலை முன்னணி	√	√
9	ஜனசெத பெரமுன	√	√
10	தேசிய சுதந்திர முன்னணி	√	-
11	ஜனநாயகக் கட்சி	√	√
12	மௌபிம ஜனதா பக்ஷய	√	√
13	லிபரல் கட்சி	-	√
14	ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி	√	√

*போட்டியிட்ட நிருவாக மாவட்டத்தைக் குறிக்கும் (√) அடையாளம் இடப்பட்டுள்ளது.

குறிப்பு 9

மாகாண சபைத் தேர்தல் - 2012/2014
தேர்தலில் போட்டியிட்ட அரசியற் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் பற்றி வாக்காளரை அறிவுறுத்தும் வகையில் குடியிருப்பாளர்களுக்குத் தபாலில் அனுப்பப்படும் அறிவித்தல்களின் எண்ணிக்கை

மாகாண சபை	நிருவாக மாவட்டம்	போட்டியிட்ட		மொத்த வேட்பாளர் எண்ணிக்கை	குடியிருப்பாளர் அறிவித்தல்களின் எண்ணிக்கை
		கட்சிகளின் எண்ணிக்கை	சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை		
கிழக்கு	மட்டக்களப்பு	13	21	476	159,188
	அம்பாறை	16	19	578	197,000
	திருகோணமலை	16	16	416	131,186
வட மத்திய	அநுராதபுரம்	09	05	336	241,798
	பொலொன்னறுவை	09	07	208	114,182
சப்ரகமுவ	இரத்தினபுரி	13	06	513	301,000
	கேகாலை	13	13	546	228,733
மத்திய	கண்டி	17	08	800	366,375
	மாத்தளை	13	07	280	144,445
	நுவரெலியா	13	10	437	177,155
வட	யாழ்ப்பாணம்	11	09	380	164,369
	கிளிநொச்சி	11	02	91	27,127
	மன்னார்	12	08	160	25,027
	வவுனியா	12	07	171	37,500
	முல்லைத்தீவு	11	02	104	31,461
வட மேல்	குருநாகல்	13	12	925	476,527
	புத்தளம்	12	11	437	203,717
மேல்	கொழும்பு	18	11	1,247	502,326
	கம்பஹா	13	09	946	558,872
	களுத்துறை	13	09	550	321,837
தென்	காலி	14	04	450	294,912
	மாத்தறை	14	05	380	251,000
	அம்பாந்தோட்டை	09	04	221	178,249
ஊவா	பதுளை	18	04	294	234,630
	மொணராகலை	12	07	323	134,498
மொத்தம்		**325**	**216**	**11,269**	**5,503,114**

குறிப்பு 10

மாகாண சபைத் தேர்தல் - 2012/2014
அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் நிராகரிக்கப்பட்ட அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களின் எண்ணிக்கை

மாகாண சபை (1)	நிருவாக மாவட்டம் (2)	கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை (3)	ஏற்றுக்கொள்ளப்பட்டவை (4)	நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் (காரணங்களின் பிரகாரம்)(5)			
				நிராகரிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை	தவறான தகவல்கள் வழங்கப்பட்டதனால் நிராகரிக்கப்பட்டவை	தாமதமாகியதனால் நிராகரிக்கப்பட்டவை	தேர்தற்கடமைகளில் ஈடுபடுத்தமுடியாமை, தகைமையின்மை, விண்ணப்பதாரியின் கையொப்பமின்மை விண்ணப்பத்தை உறுதிப்படுத்தல் குறைபாடுகள் காரணமாக நிராகரிக்கப்பட்டவை
கிழக்கு	மட்டக்களப்பு	6,811	5,629	1,182	823	110	249
	அம்பாறை	16,380	12,912	3,468	2,180	584	704
	திருகோணமலை	11,155	10,612	543	304	112	127
வட மத்திய	அநுராதபுரம்	39,666	35,222	4,444	1,662	845	1,937
	பொலொன்னறுவை	14,025	8,392	5,633	4,699	290	644
சப்ரகமுவ	இரத்தினபுரி	14,069	11,606	2,463	1,958	229	276
	கேகாலை	18,334	16,945	1,389	334	541	514
மத்திய	கண்டி	31,944	23,805	8,139	5,334	1,929	876
	மாத்தளை	14,504	12,130	2,374	1,061	943	370
	நுவரெலியா	11,637	8,371	3,266	2080	697	489
வட	யாழ்ப்பாணம்	9,975	9,301	674	320	191	163
	கிளிநொச்சி	2,668	970	1,698	32	14	1,652
	மன்னார்	2,014	1,917	97	67	27	03
	வவுனியா	2,024	1,402	622	191	174	257
	முல்லைத்தீவு	1,050	831	219	196	-	23
வட மேல்	குருநாகல்	53,543	46,374	7,169	1900	4,073	1,196
	புத்தளம்	8,661	6,282	2,379	1914	341	124
மேல்	கொழும்பு	17,009	14,374	2,635	607	1,069	959
	கம்பஹா	28,667	26,022	2,645	834	1,332	479
	களுத்துறை	22,277	18,866	3,411	1121	1,429	861
தென்	காலி	30,043	24,040	6,003	3415	1,290	1,298
	மாத்தறை	20,086	16,571	3,515	2266	793	456
	அம்பாந்தோட்டை	15,836	12,449	3,387	2242	672	473
ஊவா	பதுளை	30,038	19,981	10,057	5,272	4,165	620
	மொணராகலை	19,268	10,671	8,597	4,653	3,104	840
மொத்தம்		**423,675**	**355,675**	**87,409**	**46,065**	**24,954**	**16,393**

குறிப்பு 11

மாகாண சபைத் தேர்தல் - 2012/2014
ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் வாக்கெடுப்பு நிலையங்கள் அமையப் பெற்றுள்ள கட்டிடங்கள் பற்றிய விபரம்

மாகாண சபை	நிருவாக மாவட்டம்	வாக்கெடுப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை	வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை	பாடசாலைகள்		மதத் தலங்கள்		ஏனைய கட்டிடங்கள்			
				அரச	தனியார்	பௌத்த	ஏனைய	அரச	பொது	தனியார்	ஏனைய
கிழக்கு	மட்டக்களப்பு	362	414	372	-	-	03	11	-	28	-
	திருகோணமலை	285	285	257	-	18	-	09	17	01	-
	அம்பாறை	464	464	419	04	09	-	05	10	-	-
வட மத்திய	அநுராதபுரம்	608	608	419	-	99	-	56	-	34	-
	பொலொன்னறுவை	287	288	216	-	34	04	-	-	32	-
சப்ரகமுவ	இரத்தினபுரி	623	623	457	-	112	-	13	41	-	-
	கேகாலை	565	565	415	-	82	01	09	59	-	-
மத்திய	கண்டி	825	825	596	02	107	07	71	17	06	19
	மாத்தளை	322	323	282	-	21	-	9	11	-	-
	நுவரெலியா	423	423	385	-	14	-	10	13	01	-
வட	யாழ்ப்பாணம்	526	526	520	-	-	-	01	05	-	-
	கிளிநொச்சி	95	95	75	-	-	-	-	20	-	-
	மன்னார்	70	70	69	-	-	-	-	01	-	-
	வவுனியா	89	91	81	-	-	-	05	05	-	-
	முல்லைத்தீவு	50	52	50	-	-	-	02	-	-	-
வட மேல்	குருநாகல்	920	920	685	-	145	01	46	43	-	-
	புத்தளம்	387	389	321	-	24	-	10	25	01	08
மேல்	கொழும்பு	1049	1064	589	03	245	21	53	76	05	72
	கம்பஹா	968	1014	728	-	162	18	44	27	06	29
	களுத்துறை	540	613	390	01	145	06	55	05	03	08
தென்	காலி	703	703	393	-	191	02	102	-	-	15
	மாத்தறை	444	450	340	-	75	-	-	28	-	07
	அம்பாந்தோட்டை	410	411	277	-	55	01	-	78	-	-
ஊவா	பதுளை	515	516	445	01	32	-	29	09	-	-
	மொணறாகலை	318	318	257	-	21	02	12	26	-	-

குறிப்பு 12

மாகாண சபைத் தேர்தல் - 2012

பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர் எண்ணிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் அமையப் பெற்றுள்ள வாக்கெடுப்பு நிலையங்களின் பகுப்பு

மாகாண சபை	நிருவாக மாவட்டம்	வா.மா. எண்ணிக்கை	வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை	வாக்காளர் ஒரு வரிசையிலான வாக்கெடுப்பு நிலையங்கள் (1200க்கு குறைந்த)	வாக்காளர் இரண்டு வரிசையிலான வாக்கெடுப்பு நிலையங்கள் (1200க்கு கூடிய)	பெண்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள்	500க்குக் குறைவான வாக்காளருக்கான	501-900 வாக்காளர்கள்	901-1200 வாக்காளர்கள்	1201-3000 வாக்காளர்கள்
கிழக்கு	மட்டக்களப்பு	362	414	353	61	52	62	187	104	61
	திருகோணமலை	285	285	236	49	-	44	114	78	49
	அம்பாறை	464	464	370	94	-	13	198	159	94
வட மத்திய	அநுராதபுரம்	608	608	444	164	-	28	196	220	164
	பொலொன்னறுவை	287	288	208	80	01	09	91	110	78
சப்ரகமுவ	இரத்தினபுரி	623	623	293	330	-	18	104	171	330
	கேகாலை	565	566	339	227	01	20	145	174	227

குறிப்பு 12-I

மாகாண சபைத் தேர்தல் - 2013/ 2014

பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர் எண்ணிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் அமையப் பெற்றுள்ள வாக்கெடுப்பு நிலையங்களின் பகுப்பு

மாகாண சபை	நிருவாக மாவட்டம்	வா.மா. எண்ணிக்கை	வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை	800 க்குக் குறைவான வாக்காளருக்கான	801-1200 எண்ணிக்கையிலான வாக்காளருக்கான	1201-1600 எண்ணிக்கையிலான வாக்காளருக்கான	1601-2000 எண்ணிக்கையிலான வாக்காளருக்கான	2000 க்குக் கூடிய வாக்காளர்கள்
மத்திய	கண்டி	825	825	111	275	296	140	03
	மாத்தளை	322	323	71	106	109	37	-
	நுவரெலியா	423	423	72	138	126	77	10
வட	யாழ்ப்பாணம்	526	526	278	177	54	17	-
	கிளிநொச்சி	95	95	65	15	13	01	01
	மன்னார்	70	70	26	21	10	09	04
	வவுனியா	89	91	33	21	20	10	05
	முல்லைத்தீவு	50	52	23	8	11	6	4
வட மேல்	குருநாகல்	920	920	86	269	323	206	36
	புத்தளம்	387	389	39	119	114	88	29
மேல்	கொழும்பு	1049	1064	53	220	397	265	129
	கம்பஹா	968	1014	22	164	378	265	185
	களுத்துறை	540	613	61	123	228	125	76
தென்	காலி	703	703	90	319	228	59	07
	மாத்தறை	444	450	44	137	139	96	34
	அம்பாந்தோட்டை	410	411	89	166	112	40	04
ஊவா	பதுளை	515	516	94	169	179	62	12
	மொணராகலை	318	318	79	130	91	16	02

குறிப்பு 13

மாகாண சபைத் தேர்தல் - 2012/2014
தேர்தல் கடமைகளுக்காக மாவட்டங்களில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை

மாகாண சபை	நிருவாக மாவட்டம்	கொழும்பு மாவட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்கள்	ஏனைய மாவட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்கள்	தேர்தல் நடைபெறும் மாவட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்கள்		மொத்தம்
				அரச வாகனங்கள்	கூலி/கொடுப்பனவு முறையில் பெற்ற வாகனங்கள் (இ.போ.ச.பஸ் உட்பட)	
கிழக்கு	மட்டக்களப்பு	29	63	78	94	264
	அம்பாறை	15	59	156	241	471
	திருகோணமலை	75	-	150	39	264
வட மத்திய	அநுராதபுரம்	06	171	201	344	722
	பொலொன்னறுவை	-	36	179	158	373
சப்ரகமுவ	இரத்தினபுரி	92	-	179	211	482
	கேகாலை	49	75	86	266	476
மத்திய	கண்டி	22	139	133	118	412
	மாத்தளை	174	5	462	154	795
	நுவரெலியா	-	104	67	311	482
வட	யாழ்ப்பாணம்	25	-	130	163	318
	கிளிநொச்சி	-	44	49	34	127
	மன்னார்	-	65	27	25	117
	முல்லைத்தீவு	-	-	-	-	-
	வவுனியா	-	13	38	15	66
வட மேல்	குருநாகல்	-	-	343	70	413
	புத்தளம்	விபரங்கள் வழங்கப்படவில்லை				
மேல்	கொழும்பு	-			202	591
	களுத்துறை	172	36	83	205	496
	கம்பஹா	06	140	254	382	782
